WINMEEN.COM
LEARNING LEADS TO RULING



2022 ஜனவரி ○○○ 2022 பிப்ரவரி ○○○ 2022 மார்ச்

ஜனவரி 2022


WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. சமீப செய்திகளில் இடம்பெற்ற கார்பன் நிறைந்த, வைர வடிவிலான, பூமிக்கு அருகில் உள்ள சிறுகோளின் பெயர் என்ன?

அ) அப்பல்லோ



ஆ) ரியுகு (Ryugu) ☑

இ) ஈரோஸ்

ஈ) பென்னு

✓ '1999 JU3' என்றும் அழைக்கப்படுகிற ரியுகு, ஒரு கார்பன் நிறைந்த, வைர வடிவிலான, பூமிக்கு அருகில் உள்ள சிறு கோள் ஆகும். ரியுகுவிலிருந்து பூமிக்குத் திரும்பிய JAXA இன் ஹயபுசா–2ஆல் கொண்டு வரப்பட்ட மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு, அந்தப் பொருள் மிகவும் கருமையாக இருப்பதைக் காட்டுகிறது. அது 2% ஒளியை மட்டுமே பிரதிபலிக்கிறது.

---

2. சிறுமிகளின் பாதுகாப்பிற்காக எந்த மாநிலம் / UT'இன் காவல்துறை 'அபயா' என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது?

அ) பஞ்சாப்

ஆ) புது தில்லி ☑

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

✓ தில்லி காவல்துறை ஆணையர் இராகேஷ் அஸ்தானா, பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக தில்லி காவல் படை மற்றும் NGO ஆகியவற்றின் கூட்டு முயற்சியான 'அபயா' என்ற திட்டத்தை தொடங்கினார்.

✓ தில்லி காவல்துறையும் தன்னார்வ தொண்டு நிறுவனமா –ன சக்தி அறக்கட்டளையும் இணைந்து குழந்தைகளி –டையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற கனிமீடு எந்தக்கோளின் நிலவாகும்?

அ) சனி



ஆ) வியாழன் ☑

இ) வெள்ளி

ஈ) நெப்டியூன்

✓ NASA சமீபத்தில் வியாழனின் நிலவான கனிமீடு அருகே சேகரிக்கப்பட்ட ஒலிகளை வெளியிட்டது. நமது சூரிய குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய நிலவு கனிமீடு ஆகும்.

✓ கனிமீடு, சூரிய குடும்பத்தில் உள்ள பிற நிலவுகளைப் போலல்லாமல் தனக்கென சொந்த காந்தப்புலத்தையும் கொண்டுள்ளது. வியாழன் கோளின் சுற்றுப்புறத்தை கண்காணிக்க NASA ஜூனோ விண்கலத்தை ஏவியது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஜூனோ கனிமீடுவின் மின்காந்த அலைகளை சேகரித்தது.

---

4. சமீபத்தில் திறக்கப்பட்ட T–சேது, எந்த மாநிலத்தின் மிக நீளமான பாலமாகும்?

அ) கர்நாடகா



ஆ) ஒடிஸா ☑

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் சமீபத்தில் கட்டாக் மாவட்டத்தில் பாயும் மகாநதி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள அம்மாநிலத்தின் மிக நீளமான பாலமான T–சேது பாலத்தை திறந்து வைத்தார். 3.4 கிமீ நீளமுள்ள இப்பாலம், ஆங்கில எழுத்தான 'T' வடிவத்தில் கட்டப்பட்டு உள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு ₹111 கோடி ஆகும்.

---

5. பங்கஜ் அத்வானி & துருவ் சித்வாலா ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) மட்டைப்பந்து



ஆ) டென்னிஸ்

இ) பூப்பந்து

ஈ) பில்லியர்ட்ஸ் ☑

✓ இந்திய பில்லியர்ட்ஸ் வீரர் பங்கஜ் அத்வானி இறுதி ஆட்டத்தில் துருவ் சித்வாலாவை வீழ்த்தி 11ஆவது தேசிய பில்லியர்ட்ஸ் பட்டத்தை வென்றார். பங்கஜ் அத்வானி ஸ்னூக்கர் போட்டியில் 23 முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவராவார். IBSF உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷி –ப்பை 15 முறை வென்றுள்ளார்.

✓ 2018ஆம் ஆண்டில், அவருக்கு இந்திய அரசாங்கத்தால் 'பத்ம பூஷன்' விருது வழங்கப்பட்டது. துருவ் சித்வால, 3 முறை உலக இறுதிப்போட்டியை எட்டியுள்ளார். மேலும் 2 முறை ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியனாகியுள்ளார்.

---

6. "டிராகன் விண்கலம்" சார்ந்த விண்வெளி நிறுவனம் எது?

அ) NASA



ஆ) வர்ஜின் அட்லாண்டிக்

இ) ஸ்பேஸ் X ☑

ஈ) புளூ ஆர்ஜின்

✓ ஸ்பேஸ் X'இன் 'டிராகன் விண்கலம்' 2021 டிச.21 அன்று சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சரக்கு விநியோகம் செய்வதற்காக ஏவப்பட்டது. அது NASA'இன் சார்பாக சென்றது. புளோரிடாவில் உள்ள NASA'இன் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது.

---

7. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை கவச பொறியாளர் உளவு வாகனம், எந்த ஆயுதப்படையில் சேர்க்கப்பட்டது?

அ) இந்திய இராணுவம் ☑



ஆ) இந்திய கடற்படை

இ) இந்திய விமானப்படை

ஈ) இந்திய கடலோர காவல்படை

✓ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை கவச பொறியாளர் உளவு வாகனத்தின் முதல் தொகுப்பு இந்திய இராணுவத்தின் பொறியாளர்கள் குழுமத்தில் சேர்க்கப்பட்டது. இந்த அமைப்பு பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) வடிவமைக்கப்பட்டது.

✓ மேலும், மேதக்கில் உள்ள ஆர்ட்னன்ஸ் ஃபேக்டரி மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட், புனே ஆகியவற்றால் இது தயாரிக்கப்பட்டது.

---

8. காவல்துறையில் அனைத்து பதவிகளிலும் திருநங்கை –களுக்கு 1% இடஒதுக்கீட்டை அறிவித்துள்ள மாநில அரசு எது?

அ) தமிழ்நாடு



ஆ) கர்நாடகா ☑

இ) ஒடிஸா

ஈ) மத்திய பிரதேசம்

✓ கர்நாடகா மாநில அரசு தனது காவல்துறையில் உள்ள அனைத்து பதவிகளிலும் திருநங்கைகளுக்கு 1 சதவீத இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கை திருநங்கைகளை அரசிற்குள் கொண்டு வரவும், சமூகத்தில் அவர்களுக்கு எதிரான கருத்துகளை அகற்றவும் உதவும். இது தொடர்பான ஆட்சேர்ப்பு செயல்முறையையும் அந்தத் துறை அறிவித்துள்ளது.

---

9. அண்மையில், "Inmarsat–6 F1" செயற்கைக்கோளை விண்ணில் ஏவிய நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) ஜப்பான் ☑

இ) இஸ்ரேல்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ ஜப்பான் சமீபத்தில் H–2A ஏவுகலத்தின்மூலம் 'Inmarsat–6 F1' என்ற நவீன வணிகத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளை ஏவியது. 5,470 கிலோகிராம் எடை கொண்ட இச்செயற்கைக்கோள், இதுவரை ஏவப்பட்ட மிகப்பெரிய மற்றும் அதிநவீன வணிக தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களுள் ஒன்றாகும்.

10.நடுவண் அமைச்சர் நிதின் கட்கரி, அண்மையில் எந்த இடத்தில், அறிவார்ந்த போக்குவரத்து (Intelligent Transport) அமைப்பைத் தொடங்கி வைத்தார்?

அ) தில்லி விரைவுச்சாலை ☑



ஆ) அகமதாபாத் விரைவுச்சாலை

இ) பெங்களூரு விரைவுச்சாலை

ஈ) லக்னோ விரைவுச்சாலை

✓ நடுவண் அமைச்சர் நிதின் கட்கரி சமீபத்தில் தில்லியில் உள்ள கிழக்கு புற விரைவுச் சாலையில் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்பைத் தொடங்கி வைத்தார். இது போக்குவரத்து தொடர்பான பிரச்சனைகளை குறைத்து பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ அதிநவீன போக்குவரத்து உட்கட்டமைப்பைக் கொண்ட இவ்வமைப்பு, ஓட்டுநரின் வசதியை மேம்படுத்தவும், ஏதேனும் விபத்தைக் கண்டறியவும், அவசர ஊர்தி அந்த இடத்திற்குச் சென்றடைவதை உறுதிசெய்யவும் எச்சரிக்கைகளை அனுப்பும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்கி வைக்கிறார்: பிரதமர் மோடி ஜன.12–ல் மதுரை வருகை

ஜனவரி 12–ம் தேதி தமிழகம் வரும் பிரதமர் நரேந்திர மோடி, மதுரையில் பாஜக நடத்தும் பொங்கல் விழாவில் பங்கேற்க இருப்பதாக தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி பாஜக சார்பில் ஜனவரி 12–ம் தேதி 'மோடி பொங்கல்' விழா மதுரையில்நடைபெறவுள்ளது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார். இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்துவதற்கு மாநிலப் பொதுச்செயலாளர் கரு.நாகராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில துணைத் தலைவர் ஏ.ஆர்.மகாலட்சுமி, தேசிய பொதுக்குழு உறுப்பினர் சசிகலா புஷ்பா,மாநிலச் செயலாளர் உமாரதி, மகளிரணி மாநிலத் தலைவர் மீனாட்சி, எஸ்.சி. அணி மாநிலத் தலைவர் பொன்.பாலகணபதி,தேசிய பொதுக்குழு உறுப்பினர் நீலமுரளி யாதவ், மாவட்டத் தலைவர்கள் மகா சுசீந்திரன், டாக்டர் சரவணன், மேப்பல் சக்திவேல், பாண்டியன், ராமநாதபுரம் மாவட்டப் பார்வையாளர் நாகேந்திரன், மகளிரணி மாநிலச் செயலாளர் கவிதா · காந்த் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். இதுதவிர 6 பேர் கொண்ட வரவேற்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது. அதன்படி, தமிழகத்தில் திருவள்ளூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்தது. அதனைத் தொடர்ந்து நிதி ஒதுக்கப்பட்டு, கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம்தமிழகத்துக்கு கூடுதலாக 1,450இடங்கள் கிடைக்கவுள்ளன.

ஜனவரி 12–ம் தேதி விருதுநகரில் நடைபெறும் விழாவில் 11 மருத்துவக் கல்லூரிகளையும் பிரதமர்நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சி அமைந்த பிறகு நடைபெறும்

அரசு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

11 மருத்துவக் கல்லூரிகள் திறப்பு விழாவில் பங்கேற்க தமிழகம் வரும் பிரதமர் மோடி, மதுரையில் பாஜக சார்பில் நடைபெறும் பொங்கல் விழாவில் பங்கேற்கிறார். இதற்கான ஏற்பாடுகளை தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை, மாநில அமைப்புப் பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் உள்ளிட்டோர் செய்து வருகின்றனர்.

இதில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள் பொங்கல் வைப்பதற்கும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் பாஜகவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

மதுரை பொங்கல் விழாவில் வேட்டி, சட்டை, துண்டு அணிந்துமோடி பங்கேற்க இருப்பதாக பாஜகவினர் தெரிவிக்கின்றனர்.

மதுரை பொங்கல் விழாவில் பங்கேற்கும் மோடி, தமிழில் சில நிமிடங்கள் பேச இருப்பதாகவும், அதற்காக அவர் பயிற்சி எடுத்து வருவதாகவும் பாஜகவினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2021-ம் ஆண்டு ஜனவரி14-ம் தேதி மதுரையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திபங்கேற்றார். மதுரை அவனியாபுரத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியையும் ராகுல் காந்தி பார்வையிட்டார்.

இந்நிலையில் இந்த ஆண்டு மதுரையில் நடைபெறும் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.இந்த விழாவில் பாஜக தேசியப் பொதுச்செயலாளர் சி.டி.ரவி, தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

---

2. திருச்செந்தூர் உள்ளிட்ட 7 கோயில்களில் மருத்துவ மையங்கள்: முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

திருச்செந்தூர், திருவண்ணாமலை, மேல்மலையனூர், சோளிங்கர், மருதமலை, திருத்தணி, பழனி ஆகிய இடங்களிலுள்ள திருக்கோயில்களில் அமைக்கப்பட்ட மருத்துவ மையங்களை இன்று முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:

"முதல்வர் ஸ்டாலின் இன்று (31.12.2021) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயில், மேல் மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில், சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில் (மேம்படுத்தப்பட்ட மருத்துவ மையம்) ஆகிய 7 கோயில்களில் மருத்துவ மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் அதிகளவில் பக்தர்கள் வருகை புரியும் 10 கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு அக்கோயில்களில், தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டால் உடனுக்குடன் உயிர் காக்கும் மருத்துவ முதலுதவி அளித்திடும் வகையில் இரண்டு மருத்துவர்கள், இரண்டு செவிலியர்கள், இரண்டு பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களை கொண்டு மருத்துவ மையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் 2021-22ம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில், பக்தர்கள் அதிகளவில் வருகை புரியும் 10 திருக்கோயில்களில் தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுகளுடன் கூடிய மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கோயில் மருத்துவ மையங்களில் பணியாற்றிட தகுதியான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு கோயில்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். முதற்கட்டமாக, திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயில், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில், சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில் என 7 கோயில்களில் அமைக்கப்பட்ட மருத்துவ மையங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த மருத்துவ மையங்களில் முதலுதவி மற்றும் அடிப்படை சிகிச்சை மேற்கொள்வதற்கு தேவையான ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், ரத்த அழுத்த மாணி, படுக்கைகள், உயிர்காக்கும் மருந்துகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. இதனால் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நேரத்தில் பேருதவியாக செயல்படும். இப்பணிக்காக ஓர் மருத்துவ மையத்திற்கு ஓராண்டிற்கு சுமார் ரூ.30 லட்சம், வீதம் 10 கோயில் மருத்துவ மையங்களுக்கு மொத்தம் ரூ.3 கோடி கோயில் நிதியிலிருந்து செலவு செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் சந்தர மோகன் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

3. கட்டுமான பணி தரத்தை உறுதி செய்ய சென்னை ஐஐடி உள்ளிட்ட தொழில்நுட்ப கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்: தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தகவல்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னையில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் நகரமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான

மையம் மற்றும் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி திண்டுக்கல் ஆகிய நிறுவனங்களுடன் வாரியத்தினால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளின் தரத்தை உறுதி செய்ய வாரிய மேலாண்மை இயக்குனர் கோவிந்த ராவ் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளின் தரத்தை பல்வேறு நிலைகளில் உறுதி செய்ய சம்பந்தப்பட்ட மண்டலங்களில் உள்ள புகழ்பெற்ற தொழில்நுட்ப கல்லூரிகளான சென்னை ஐஐடி, தேசிய தொழில்நுட்பக் கழகம், திருச்சி அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இதர அரசு பொறியியல் நிறுவனங்களை மூன்றாம் தரக்கட்டுப்பாடு குழுவாக நியமனம் செய்திட வாரியத்தால் முடிவு செய்யப்பட்டது.அதன் அடிப்படையில் மூன்றாம் தரப்பு தரக்கட்டுப்பாடு முகமையாக, சென்னை ஐஐடி மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் உருவான நகரமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம், பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி திண்டுக்கல் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் வாரிய நிர்வாக பொறியாளர்கள் ரவிச்சந்திரன், பாண்டியன், கியூப் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் பத்மநாபன் மற்றும் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி திண்டுக்கல் உதவி பேராசியர் திவ்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

4. 19-வது சர்வதேச திரைப்பட விழா தொடக்கம்: 53 நாடுகளின் 100 படங்கள் திரையிடப்படுகின்றன

சென்னையில் 19-வது சர்வதேச திரைப்பட விழா தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவை 19 ஆண்டுகளாக ஒருங்கிணைத்து வரும் இந்தோ சினி அப்ரிசியேஷன் பவுண்டேஷன் (Indo Cine Appreciation Foundation) திரைப்படச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் திரைப்பட விழா இயக்குநருமான இ.தங்கராஜ் கூறியதாவது:

கடந்த சில ஆண்டுகளில் 53 உலக நாடுகளிலிருந்து வெளியான 100 படங்கள் 19-வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்படுகின்றன. இவற்றில் சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான ஆஸ்கர் போட்டிப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட ஈரான் நாட்டின் 'ஹீரோ' (A Hero), ஆஸ்திரேலியாவின் 'வென் பொமேகிரேனட்ஸ் ஹவுல்' (When Pomegranates Howl), இந்தோனேசியாவின் 'யுனி' (Yuni), தென் கொரியாவின் 'டேக்ஸி டிரைவர்' உள்ளிட்ட படங்கள் சிறப்பு கவனம் பெறுகின்றன.

திரையிடப்படும் இந்தியப் படங்களில், தமிழ்ப் படங்கள்: உடன்பிறப்பே, கர்ணன், தேன், கட்டில், சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும், இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும், ஐந்து உணர்வுகள், மாறா, பூமிகா, சேத்துமான், கயமை கடக்க.

மலையாளப் படங்கள்: காக்கத்துருத்து, நாயாட்டு, நிறைய தத்தகளுள்ள மரம், சன்னி.

பிறமொழி இந்தியப் படங்கள்: 21-ஸ்ட் டி.ஃபன் - குஜராத்தி, டொல்லு - கன்னடம், ஃபனரல் - மராத்தி, கல்கொக்கோ - பெங்காலி, நாட்யம் - தெலுங்கு, நிவாஸ் - மராத்தி, கிலியு பஞ்சரதொலில்லா - கன்னடம், செம்கோர் - திமாசா, அன்ஹெர்ட் - தெலுங்கு, வர்துல் - மராத்தி.

சென்னை பிவிஆர் மல்டிபிளெக்ஸ், சத்யம் சினிமாஸ், சாந்தம், சீசன்ஸ், சிக்ஸ் டிகிரீஸ் திரையரங்குகளில் இவை திரையிடப்படுகின்றன. இவ்வாறு இ.தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

---

5. 2021இல் மருத்துவம்: தொடரும் கரோனாவும் துளிர்க்கும் நம்பிக்கையும்

கரோனா இரண்டாம் அலை

தேர்தல் பரப்புரைகள், லட்சக்கணக்கில் மக்கள் கூடிய மத நிகழ்வுகள், அரசின் மெத்தனம், கரோனா தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதில் மக்களின் ஒழுங்கின்மை, தடுப்பூசி வதந்திகள் போன்றவை கரோனா இரண்டாம் அலைக்கு வித்திட்டன. மருத்துவ மனையில் இடம் கிடைப்பது சிக்கலானது. இடம் கிடைத்தாலும் ஆக்சிஜன் படுக்கைக்கு வழியில்லை. உயிர் காக்கும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இடுகாட்டில் நீண்ட வரிசையில் சடலங்கள் காத்திருந்தன. புனித ஆறான கங்கையில் சடலங்கள் பெருமளவில் வீசப்படன. வரலாற்றின் கறுப்புப் பக்கங்கள் அவை.

மருத்துவ ஆக்சிஜன் பற்றாக்குறை

இரண்டாம் அலையின் உச்சத்தில், 'இன்னும் சில மணி நேரத்திற்குத் தேவை யான ஆக்சிஜன் இருப்பு மட்டுமே எங்க ளிடம் இருக்கிறது. நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து' என்று டெல்லியிலிருக்கும் ஒரு மருத்துவமனை சமூக ஊடகத்தில் பகிர்ந்த பதிவு நாட்டை உலுக்கியது. விரைவில், அந்த நிலை நாடெங்கும் இருக்கும் மருத்துவமனைகளுக்கும் ஏற்பட்டது. நீதிமன்றங்கள் தலையிட்டு உத்தரவு பிறப்பித்த பின்னரும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஒன்றிய அரசு இருந்தது. ஆரம்பத்தில் சற்று தடுமாறிய தமிழக அரசு, பின்னர் இந்தப் பிரச்சினையைத் திறம்படக் கையாண்டது.

பூஞ்சை நோய்கள்

கரோனா இரண்டாம் அலையின் முடிவில், கறுப்புப் பூஞ்சை நோய்த் தொற்று (மியூகோமைகோசிஸ்) அதிகரிக்கத் தொடங்கி பேசுபொருளானது. இந்தியாவில் இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30,000க்கு மேல் சென்றது. சில வட மாநிலங்களில் 'கறுப்புப் பூஞ்சை' யைப் போலவே 'வெள்ளைப் பூஞ்சை' (Candidiasis) நோயும் பரவத் தொடங்கியது. மத்தியப் பிரதேசத்தில் கரோனாவிலிருந்து மீண்டவருக்குப் பச்சை பூஞ்சை நோய்ப் பாதிப்பு ஏற்பட்டது. கரோனாவைவிட ஆபத்தான இந்த நோய்கள் இந்தியாவில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பதே ஓர் ஆறுதல்.

நீடிக்கும் கோவிட்

பொதுவாக, நோயின் தீவிரத்தைப் பொறுத்து இரண்டு முதல் மூன்று வாரங்களுக்குள் கரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டு விட்டனர். நோய்த் தொற்றின் கடுமையான கட்டத்துக்குப் பிறகும் சிலருக்கு மட்டும் கரோனா பாதிப்புகள் தொடர்ந்தன. இது 'நீடிக்கும் கோவிட்' என அழைக்கப்பட்டது. கரோனாவின் தீவிர பாதிப்பிலி ருந்து மீண்ட பலரும், இதன் பாதிப்புக்கு ஆளாகினர். 'நீடிக்கும் கோவிட்' டை மருத்துவ உலகம் கூடுதல் கவனத்துடன் கையாண்டது. தமிழக அரசும் சென்னை கிண்டி அரசு கரோனா மருத்துவமனையில் 'கோவிட்டுக்குப் பிந்தைய சிகிச்சை மைய' த்தை நிறுவியது.

இந்தியாவில் தடுப்பூசி

இந்தியாவில் 'கோவிஷீல்டு' , 'கோவேக்ஸின்' ஆகிய இரண்டு தடுப்பூசிகளுக்கு முதலில் அனுமதி அளிக்கப்பட்டது. தடுப்பூசி போடும் பணிகள் ஜனவரி 16இல் தொடங்கப்பட்டன. ஆரம்பத்தில் தடுப்பூசி குறித்துப் பரவிய சந்தேகங்களும் வதந்திகளும் தடுப்பூசித் திட்டத்துக்குப் பெரும் சவாலாக இருந்தன. இருப்பினும் கரோனா உயிரிழப்புகளால் மக்களிடையே ஏற்பட்ட அச்சம், அரசின் முன்னெடுப்புகள் போன்றவை தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் வகையில் நிலைமையை மாற்றியமைத்தன. தற்போது இந்தியாவில் 84 கோடி பேருக்கு ஒரு டோஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது, 60 கோடி பேருக்கு இரண்டு டோஸ் போடப்பட்டுள்ளது.

கரோனா வைரஸுக்கு மாத்திரைகள்

கரோனாவுக்கான சிகிச்சையில் புதிதாக இரண்டு மாத்திரைகள் வெளியாகியுள்ளன. அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்ட 'மோல்னுபிரவிர்' (Molnupiravir). மெர்க் நிறுவனம், ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்த இந்த மாத்திரைக்கு பிரிட்டன் அரசு அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதி அளித்தது. இரண்டாவது, பைசர் நிறுவனம் தயாரித்த 'பேக்ஸ்லோவிட்' (Paxlovid). இவை கரோனா தொற்றை ஆரம்பநிலையிலேயே தடுத்து, தொற்றாளருக்கு இறப்பு ஏற்படுவதைப் பெருமளவு தவிர்த்துவிடும் ஆற்றல் கொண்டவை.

ஒமைக்ரான் கரோனா

இந்தியாவில் கண்டறியப்பட்ட, இரண்டாம் அலைக் குக் காரணமான டெல்டா அல்லது பி.1.617.2 வேற்றுரு வில் ஏற்பட்ட மாறுபாடு காரணமாக உருவான புதிய டெல்டா பிளஸ் வேற்றுரு கண்டறியப்பட்டது. இதனால் அக்டோபரில் மூன்றாம் அலை ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், டெல்டா பிளஸ் வேற்றுருவின் பரவல் இந்தியாவில் குறைவாகவே இருந்தது. இந்த நிலையில், நவம்பர் மாத இறுதியில் தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட 'ஒமைக்ரான்' (Omicron) எனும் புதிய கரோனா வேற்றுருவம் (Variant) மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

மருத்துவ நோபல் 2021

வெப்பநிலை, தொடுதல் ஆகியவற்றினால் உடலில் நடக்கும் மாற்றங்களுக்குக் காரணமாக இருக்கும் உணரிகளைக் கண்டறிந்த தற்காக அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆர்டெம் பாட்டபூட்டியான், டேவிட் ஜூலியஸ் ஆகிய இருவரும் இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெற்றார்கள். வெப்பம், குளிர், இயந்திர சக்தி போன்றவை, நம் உடலின் நரம்பு மண்டலத்தில் உணர்ச்சித் தூண்டலை எவ்வாறு ஏற்படுத்துகின்றன என்பது குறித்த இவர்களின் ஆராய்ச்சி, வலி நிவாரணி மருந்துகள் உருவாக்கத்தில் புதிய பாதையைக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்சுலின், பி.சி.ஜி. தடுப்பூசிக்கு 100 வயது

நீரிழிவு நோயை எதிர்கொள் வதில் இன்சுலினின் பங்களிப்பு அளப்பரியது. முதலாம் வகை நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின்தான் ஒரே மருந்து. ஆயுள் முழுவதும் இன்சுலின் போட்டுக் கொண்டவர்கள் 90 வயது வரை வாழ்ந்துள்ளனர். பி.சி.ஜி. தடுப்பூசி குழந்தைகளுக்கு ஏற்படும் காசநோயை மட்டுமல்லாமல் பலதரப்பட்ட வைரஸ் நோய்கள், சுவாசக் கோளாறுகள், வயிற்றுக் கோளாறுகள் போன்றவற்றையும் தடுக்கும். நெஞ்சகக் காசநோயைத் தடுப்பதைவிட மூளைக் காசநோய் போன்ற மோசமான காசநோய் வகைகளைப் பெரிதும் தடுக்கும். இது ஏற்கெனவே செலுத்தப்பட்ட நாடுகளில் கரோனா சார்ந்த இறப்பும் குறைவாக உள்ளது.

நோரோ, ஜிகா, பறவைக் காய்ச்சல்

2021இன் தொடக்கத்தில், வட இந்திய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் பறவைக் காய்ச்சல் திடீரென வீரியத்துடன் பரவியது. பெரும் எண்ணிக்கையிலான பண்ணைக் கோழிகள் கொல்லப்பட்டன. ஏடிஸ் எஜிப்தி கொசுக்கள் கடிப்பதால் பரவும் ஜிகா வைரஸால், கேரளத்தில் 20-க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். வயநாடு மாவட்டத்தில் பூக்கோடு கிராமத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களில் 13 பேருக்குத் திடீரென்று வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி ஆகியவை ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு நோரோ வைரஸ் பாதிப்பு உறுதியானது. கரோனா வைரஸ் ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த நேரத்தில் இந்த வைரஸ்களும் பரவியது அச்சத்தை அதிகரித்தது.

---

6. வடகிழக்குப் பருவமழை காலம் நிறைவு: தமிழகத்தில் இயல்பைவிட 59 சதவீதம் மழை அதிகம்

வடகிழக்குப் பருவமழை காலம் வெள்ளிக்கிழமையுடன் (டிச.31) நிறைவடைந்துள்ளநிலையில், தமிழகத்தில் இயல்பை விட 59 சதவீதம் அதிக மழை பதிவாகியுள்ளது. 22 மாவட்டங்களில் மிக அதிக மழையும், 14 மாவட்டங்களில் அதிக மழையும் பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக, விழுப்புரத்தில் இயல்பை விட 119 சதவீதமும், திருப்பத்தூரில் 115 சதவீதமும் அதிக மழை பெய்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை:

தமிழகத்துக்கு அதிக மழை பொழிவைத் தரும் வடகிழக்குப் பருவமழை அக்டோபர் முதல் டிசம்பர் வரையும் நீடிக்கும்.

நிகழாண்டில் (2021) வடகிழக்குப் பருவமழை தாமதமாக அக்டோபர் 25-ஆம் தேதி தொடங்கியது. வங்கக்கடலில் அடுத்தடுத்து உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதிகள், தமிழக கடலோரத்தில் நிலைகொண்ட வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகள் ஆகியவை காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்து வந்தது. ஒரு சில இடங்களில் பலத்த மழையும், ஓரிரு இடங்களில் அதி பலத்த மழையும் கொட்டித்தீர்த்தது. குறிப்பாக, நவம்பர் மாதத்தில், பல மாவட்டங்களில் சராசரியை விட அதிக மழை பெய்தது. இதன்பிறகு, டிசம்பர் 1-ஆம் தேதியில் இருந்து மழை குறையத்தொடங்கியது. டிசம்பர் மாத இறுதியில் சில மாவட்டங்களில் மழை பெய்துவந்தது. அதிலும், , சென்னையில் பல இடங்களில் டிசம்பர் 30-ஆம் தேதி பலத்தமழை பெய்தது. தற்போது, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, சில மாவட்டங்களில் மிதமானதுமுதல் பலத்தமழை மழை பெய்கிறது.

பருவமழை காலம் நிறைவு:

இந்நிலையில், 2021-ஆம் ஆண்டுக்கான வடகிழக்குப் பருவமழை காலம் வெள்ளிக்கிழமையுடன்(டிச.31) நிறைவுபெற்றது. இந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தில் இயல்பைவிட 59 சதவீதம் அதிக மழை கிடைத்துள்ளது. வடகிழக்குப் பருவமழையின் இயல்பான அளவு 448.0 மி.மீ. தற்போது வரை 711.6 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மிக அதிகமழை:

அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், நாமக்கல், பெரம்பலூர், ராணிப்பேட்டை, தென்காசி, தேனி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, வேலூர், விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் மிக அதிக மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, விழுப்பரத்தில் இயல்பைவிட 119 சதவீதமும், திருப்பத்தூரில் 115 சதவீதமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 106 சதவீதமும் அதிக மழை பெய்துள்ளது.

அதிகமழை:

தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நீலகிரி, புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், சிவகங்கை, திருப்பூர், திருவாரூர், தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய 14 மாவட்டங்களில் இயல்பை விட அதி மழை பெய்துள்ளது.

இயல்பு மழை:

மதுரை, ராமநாதபுரத்தில் இயல்பான மழையே பதிவாகியுள்ளது.

47 சதவீதம் அதிகம்

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியது: தமிழகத்தில் கடந்த 2015-ஆம் ஆண்டு மொத்த மழை அளவு பொருத்தவரை சராசரியாக 922 மி.மீ. மழை பெய்யவேண்டும். ஆனால், 1,214 மி.மீ. மழை பதிவாகியது. இது, 32 சதவீதம் அதிகம்.

2021-ஆம் ஆண்டில் மொத்த (ஆண்டு) மழை அளவு பொருத்தவரை, இயல்பை விட 47 சதவீதம் அதிகம் பதிவாகியுள்ளது. ஆண்டின் இயல்பான மழை அளவு 922 மி.மீ. ஆனால், 1,379 மி.மீ. மழை கிடைத்துள்ளது. ஆகவே, 2015-ஆம் ஆண்டை காட்டிலும் 2021-இல் அதிக மழை கிடைத்துள்ளது என்றார் அவர்.

சென்னையில்... :

வடகிழக்கு பருவமழை காலத்தில் சென்னையில் வழக்கமான மழை அளவு 784 மி.மீ. தற்போதுவரை 1,360 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது, இயல்பை விட 74 சதவீதம் அதிகம். இருப்பினும் 2015 -ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையுடன் ஒப்பிடும்போது, இந்த மழை அளவு குறைவாகும்.

---

7. 'உலக மக்கள்தொகையில் 7.4 கோடி அதிகரிப்பு'

கடந்த 2021-ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 7.4 கோடி அதிகரித்துள்ளதாக அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2022-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தின்போது உலக மக்கள்தொகை 780 கோடியாக இருக்கும். இது, 2012-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தைவிட 0.9 சதவீதம் அதிகமாகும். அதன்படி, கடந்த ஓராண்டில் மட்டும் உலக மக்கள்தொகையில் 7.4 கோடி அதிகரித்துள்ளது.

இந்தப் புத்தாண்டு தினத்திலிருந்து உலகம் முழுவதும் ஒவ்வொரு 10 விநாடிக்கு 43 குழந்தைகள் பிறக்கும்; 20 போர் இறப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் சுமார் 7.07 லட்சம் போர் அதிகரித்து, 2022-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தன்று நாட்டின் மக்கள் தொகை 33.24 கோடியாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

8. ரூ.500 கோடி மதிப்புள்ள பச்சை மரகதலிங்கம் மீட்பு: சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு விசாரணை

தஞ்சாவூரில் ரூ.500 கோடி மதிப்புள்ள பச்சை மரகத லிங்கத்தை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் பறிமுதல் செய்து, விசாரணை செய்து வருகின்றனர்.

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:

தஞ்சாவூர் அருளானந்த நகர் 7ஆவது குறுக்குத் தெருவில் என்.ஏ.சாமியப்பன் என்பவர் வீட்டில் தொன்மையான சிலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு கடந்த வியாழக்கிழமை ரகசியத் தகவல் கிடைத்தது.

அந்த தகவலின் அடிப்படையில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் இரா.ராஜாராம், ப.அசோக் நடராஜன் தலைமையில் அப்பிரிவு போலீஸார் அந்த வீட்டில் திடீர் சோதனை செய்தனர். அப்போது அங்கு எந்த சிலைகளும்

கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து அங்கிருந்த சாமியப்பனின் மகன் அருண் பாஸ்கா் என்பவரிடம் விசாரணை செய்தனா்.

ரூ.500 கோடி மதிப்பு:

விசாரணையில், தனது தந்தை சாமியப்பனிடம் தொன்மையான பச்சை மரகதலிங்கம் ஒன்று இருப்பதாகவும், அது தற்போது அந்த பகுதியில் உள்ள ஒரு வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தாா். இதையடுத்து அருண் பாஸ்கா் உதவியுடன் வங்கிப் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த அந்த பச்சை மரகத லிங்கத்தை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவினா் மீட்டனா்.

அந்த சிலை, சாமியப்பனிடம் எப்படி கிடைத்தது என அருண் பாஸ்கரிடம் விசாரணை மேற்கொண்டபோது, அது தொடா்பாக எந்தவித ஆவணங்களும் தங்களிடம் இல்லை என்று அவா் தெரிவித்தாா். இதைத் தொடா்ந்து மீட்கப்பட்ட மரகத லிங்கத்தின் மதிப்பு குறித்து அங்கீகாரம் பெற்ற மரகதக்கல் மதிப்பீட்டாளா்களிடம் சிலை கடத்தல் தடுப்பு பிரிவினா் கொடுத்து ஆய்வு செய்தனா். அப்போது அந்த சிலையின் சா்வதேச மதிப்பு ரூ.500 கோடி இருக்கும் என மதிப்பீட்டாளா்கள் தெரிவித்தனா்.

தருமபுரம் ஆதீன மடம்:

இந்த பச்சை மரகத லிங்கம் மீட்பு தொடா்பாக சென்னையில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஏடிஜிபி ஜெயந்த் முரளி செய்தியாளா்களுக்கு வெள்ளிக்கிழமை அளித்த பேட்டி:

மீட்கப்பட்ட பச்சை மரகதலிங்கம் சிலை குறித்து விசாரணை நடத்தப்பட்டதில், அந்த சிலை நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில் உள்ள தருமபுரம் ஆதீன மடத்துக்கு சொந்தமான தியாகராஜா் கோயிலில் இருந்து கடந்த 2016ஆம் ஆண்டு அக்டோபா் மாதம் 9-ஆம் தேதி திருடப்பட்டது என்பது தெரியவந்துள்ளது.

இது தொடா்பாக தருமபுர ஆதீன மடத்தின் கண்காணிப்பாளா் சௌரிராஜன், அப்போது திருக்குவளை காவல் நிலையத்தில் புகாா் செய்துள்ளாா். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, துப்பு துலங்காமல் இருந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக துப்பு துலங்காமல் இருந்த இந்த வழக்கில், இப்போது துப்பு துலங்கப்பட்டு, சிலை மீட்கப்பட்டுள்ளது.

இந்த சிலையை வைத்திருந்த சாமியப்பன், தற்போது மருத்துவமனையில் இருக்கிறாா். அவா் குணம் அடைந்தவுடன் வழக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்படும். அவரிடம் விசாரணை நடத்திய பின்னா், சிலை திருட்டு குறித்த முழு விவரமும் காவல்துறைக்கு கிடைக்கும் என்றாா் அவா்.

பேட்டியின்போது அவருடன் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு எஸ்.பி. பொன்னி உடன் இருந்தாா். இந்த வழக்கில் சிறப்பாக செயல்பட்ட சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு ஏடிஜிபி ஜெய்ந்த் முரளி, வெகுமதி அளித்தாா்.

இந்த வழக்குத் தொடா்பாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு நடத்திய முதல் கட்ட விசாரணையில், பச்சை மரகதலிங்கம் சோழா் காலத்தில் கம்போடியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு தருமபுரம் ஆதீன மடத்துக்கு வழங்கப்பட்டது என்பது தெரியவந்துள்ளது. மேலும் சோழ மன்னா்கள், போரில் தங்களுக்கு கிடைத்த வெற்றியின் அடையாளமாக அந்த மடத்துக்கு வழங்கியிருப்பதாகவும் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனா்.

---

9. யு-19 ஆசிய கோப்பையை தக்கவைத்தது இந்தியா: 8-ஆவது முறையாக சாம்பியன் ஆகி சாதனை

பத்தொன்பது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு-19) ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8-ஆவது முறையாக சாம்பியன் ஆகி சாதனை படைத்துள்ளது.

துபையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி கோப்பையை வென்றது. யு-19 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, வரும் ஜனவரி 14-ஆம் தேதி மேற்கிந்தியத் தீவுகளில் தொடங்க இருக்கும் நிலையில், இந்தப் பட்டம் இந்திய அணிக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கும்.

50 ஓவா்கள் கொண்ட இந்த ஆசிய போட்டியில், இறுதி ஆட்டத்தின்போது கனமழை பெய்ததை அடுத்து முதலில் ஆடிய இலங்கைக்கான ஓவா்கள் 38-ஆக குறைக்கப்பட்டது. அதில் அந்த அணி 9 விக்கெட் இழப்புக்கு 106 ரன்கள் அடித்தது. பின்னா் 'டக்வொா்த் லீவிஸ்' முறையில் இந்திய அணிக்கு 32 ஓவா்களில் 102 ரன்கள் இலக்காக நிா்ணயிக்கப்பட்டது. இந்தியா 21.3 ஓவா்களில் 1 விக்கெட் இழப்புக்கு 104 ரன்கள் அடித்து வென்றது.

முன்னதாக டாஸ் வென்ற இலங்கை பேட்டிங்கை தோ்வு செய்தது. அணியின் தொடக்க வீரா் சமிந்து விக்கிரமசிங்கே 2 ரன்களுக்கு வெளியேற, உடன் வந்த ஷெவோன் டேனியல் 6 ரன்களுக்கு நடையைக் கட்டினாா். 3-ஆவது வீரராக வந்த அஞ்சலா பண்டாரா 1 பவுண்டரியுடன் 9 ரன்கள் சோ்க்க, மிடில் ஆா்டரில் சதீஷா ராஜபட்ச 1 பவுண்டரியுடன் 14, பவன் பதிராஜா 4, ரனுதா சோமரத்னே 1 பவுண்டரியுடன் 7 ரன்களுக்கு ஆட்டமிழந்தனா்.

இவ்வாறாக இலங்கை 33 ஓவா்களில் 7 விக்கெட் இழப்புக்கு 74 ரன்கள் எடுத்திருந்த நிலையில் கனமழை காரணமாக ஆட்டம் சுமாா் 2 மணி நேரங்களுக்கு தடைப்பட்டது.

பின்னா் ஆட்டம் தொடங்கியபோது அந்த அணிக்கான ஓவா்கள் 38-ஆக குறைக்கப்பட்டது. பின்னா் தொடங்கிய ஆட்டத்தில் கேப்டன் துனித் வெலாலகே 1 பவுண்டரியுடன் 9, ரவீன் டி சில்வா 1 பவுண்டரியுடன் 15, மதீஷா பதிரானா 1 பவுண்டரியுடன் 14 ரன்களுக்கு வீழ்ந்தனா். இறுதியில் யாசிரு ரோட்ரிகோ 2 பவுண்டரிகளுடன் 19 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தாா்.

இந்திய பௌலிங்கில் விக்கி ஆஸ்த்வல் 3, கௌஷல் தாம்பே 2, ராஜ்வா்தன், ரவிகுமாா், ராஜ் பாவா ஆகியோா் தலா 1 விக்கெட் எடுத்தனா்.

பின்னா் 102 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய இந்திய அணியில், தொடக்க வீரா்களில் ஒருவரான ஹா்னூா் சிங் 5 ரன்களுக்கு வெளியேறினாா். உடன் வந்த அங்க்ரிஷ் ரகுவன்ஷி 7 பவுண்டரிகளுடன் 56,

ஷேக் ரஷீது 2 பவுண்டரிகளுடன் 31 ரன்கள் சோ்த்து ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு வழி நடத்தினாா். இலங்கை தரப்பில் யாசிரு ரோட்ரிகோ 1 விக்கெட் எடுத்திருந்தாா்.

சுருக்கமான ஸ்கோா்

இலங்கை – 106/9

யாசிரு ரோட்ரிகோ 19*

ரவீன் டி சில்வா 15

மதிஷா பதிரானா 14

பந்துவீச்சு

விக்கி ஆஸ்த்வல் 3/11

கௌஷல் தாம்பே 2/23

ரவி குமாா் 1/17

இந்தியா- 104/1 (இலக்கு 102)

அங்க்ரிஷ் ரகுவன்ஷி 56*

ஷேக் ரஷீது 31*

ஹா்னூா் சிங் 5

பந்துவீச்சு

யாசிரு ரோட்ரிகோ 1/12

டிரெவீன் மேத்யூ 0/2

சமிந்து விக்ரமசிங்கே 0/14

ஆதிக்கம் செலுத்தும் இந்தியா...

யு-19 ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியாவே ஆதிக்கம் செலுத்துகிறது. இத்துடன் 9 முறை நடைபெற்றுள்ள இப்போட்டியில் இந்தியா 8-ஆவது முறையாக சாம்பியன் ஆகியிருக்கிறது. ஆப்கானிஸ்தான் சாம்பியன் ஆன 2017-இல் இந்தியா நாக் அவுட் சுற்றுக்கு தகுதிபெறவில்லை.

முன்னதாக, கடந்த 2012-ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் மோதிய இறுதி ஆட்டம் டை ஆனதை அடுத்து, கோப்பை இரு அணிகளுக்கும் பகிா்ந்தளிக்கப்பட்டது.

ஆண்டு இடம் சாம்பியன் ரன்னா்-அப்

1989 வங்கதேசம் இந்தியா இலங்கை

2003 பாகிஸ்தான் இந்தியா இலங்கை

2012 மலேசியா இந்தியா - பாகிஸ்தான்

2013/14 ஐக்கிய அரபு அமீரகம் இந்தியா பாகிஸ்தான்

2016 இலங்கை இந்தியா இலங்கை

2017 மலேசியா ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான்

2018 வங்கதேசம் இந்தியா இலங்கை

2019 இலங்கை இந்தியா வங்கதேசம்

2021 ஐக்கிய அரபு அமீரகம் இந்தியா இலங்கை

---

10. உலக பிளிட்ஸ் செஸ்: கோனெரு ஹம்பிக்கு 5-ஆம் இடம்

உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் மகளிா் பிரிவில் இந்தியாவின் கோனெரு ஹம்பி 5-ஆம் இடமும், ஆா். வைஷாலி, 14-ஆவது இடமும் பிடித்து போட்டியை நிறைவு செய்தனா்.

போலந்தின் வாா்சா நகரில் நடைபெற்ற இப்போட்டியில் மொத்தம் விளையாடப்பட்ட 17 சுற்றுகளின் முடிவில் ஹம்பி 11.5 புள்ளிகளும், வைஷாலி 10.5 புள்ளிகளும் பெற்றனா். மொத்த சுற்றுகளில் ஹம்பி 10 வெற்றிகள், 3 டிராக்கள், 4 தோல்விகளை பதிவு செய்துள்ளாா். வைஷாலி 10 வெற்றிகள், ஒரு டிரா, 6 தோல்விகளை பதிவு செய்திருக்கிறாா்.

இதர இந்திய வீராங்கனைகளில் வந்திகா அகா்வால் 9.5 புள்ளிகளுடன் 30-ஆவது இடமும், பத்மினி ரௌத் 8.5 புள்ளிகளுடன் 55-ஆவது இடமும் பிடித்தனா்.

ஓபன் பிரிவு: பிளிட்ஸ் சாம்பியன்ஷிப்பின் ஓபன் பிரிவில் மொத்தம் நடைபெற்ற 21 சுற்றுகளின் முடிவில் இந்தியாவின் விதித் குஜராத்தி 13 புள்ளிகள் பெற்று 18-ஆவது இடத்துடன் நிறைவு செய்தாா். 10 சுற்றுகளில் வெற்றி பெற்ற அவா், 6 சுற்றுகளை டிரா செய்து, 5 சுற்றுகளில் தோல்வி கண்டாா்.

மற்றொரு இந்தியரான நிஹல் சரினும் 13 புள்ளிகள் பெற்று 19-ஆவது இடம் பிடித்தாா். அவா் 9 சுற்றுகளில் வென்று, 8 சுற்றுகளை டிரா செய்து, 4 சுற்றுகளில் தோல்வியை சந்தித்தாா். இதர இந்தியா்களில் அா்ஜுன் எரிகாய்சி, குகேஷ் ஆகியோா் தலா 12.5 புள்ளிகளுடன் முறையே 24 மற்றும் 32-ஆம் இடம் பிடித்தனா். ஹா்ஷா பாரதகோடி 11 புள்ளிகளுடன் 68-ஆவது இடம் பிடித்தாா்.

ஹரிகிருஷ்ணா, ரௌனக் சத்வானி, மித்ரபா குஹா ஆகியோா் தலா 10.5 புள்ளிகளுடன் முறையே 84, 86, 89-ஆவது இடங்களை எட்டினா். சுனில்தத் நாராயணன் 10 புள்ளிகளுடன் 112-ஆவது இடம் பிடிக்க, அபிமன்யு புரானிக், ஆதித்யா மிட்டல் ஆகியோா் தலா 9 புள்ளிகளுடன் முறையே 131 மற்றும் 141-ஆவது இடங்களைப் பிடித்தனா். சங்கல்ப் குப்தா 8.5 புள்ளிகளுடன் 150-ஆவது இடம் பிடித்தாா்.

சாம்பியன்கள்: மகளிா் பிரிவில் கஜகஸ்தானின் பிபிசரா அசௌபயேவா 14 புள்ளிகளுடன் சாம்பியன் ஆக, ரஷியாவின் அலெக்ஸாண்ட்ரா கொஸ்டெனியுக் 12.5 புள்ளிகளுடன் 2-ஆம் இடமும், அதே நாட்டைச் சோ்ந்த வாலென்டினா குனினா 12 புள்ளிகளுடன் 3-ஆம் இடமும் பிடித்தனா்.

ஓபன் பிரிவில் பிரான்ஸின் மேக்ஸிம் வச்சியா் 15 புள்ளிகளுடன் சாம்பியன் ஆக, போலந்தின் ஜேன் கிறிஸ்டோஃப் டுடா, பிரான்ஸின் அலிரிஸா ஃபிரௌஸ்ஜா ஆகியோரும் அதே புள்ளிகளுடன் முறையே 2 மற்றும் 3-ஆம் இடங்களைப் பிடித்தனா்.

---

11. 2021-ஆம் ஆண்டில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 1.67% சரிவு

2021-ஆம் ஆண்டில் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 1.67 சதவீதம் குறைந்துள்ளது.

இதுகுறித்து வா்த்தகா்கள் கூறியது:

கச்சா எண்ணெய் விலை உயா்வு, அமெரிக்க கடன்பத்திரங்களுக்கான வட்டி விகிதம் உயா்த்தப்படும்

என்ற எதிர்பார்ப்பு போன்ற நிகழ்வுகள் கடந்த ஆண்டில் ரூபாய் மதிப்பு சரிவுக்கு முக்கிய காரணங்களாக பார்க்கப்பட்டன. கடந்த ஆண்டில் மட்டும் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 122 காசுகள் அதாவது 1.67 சதவீதம் இழப்பை சந்தித்துள்ளது.

அந்நியச் செலாவணி சந்தையில் 2021-ஆம் ஆண்டின் கடைசி வர்த்தக நாளான வெள்ளிக்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 13 காசுகள் உயர்ந்து 74.29-இல் நிலைபெற்றது. வார அடிப்படையில் ரூபாய் மதிப்பு 74 காசுகள் ஆதாயத்தை ஈட்டியுள்ளது என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

---

12. விவசாயிகள் உதவித் தொகை திட்டம்: தமிழ்நாட்டுக்கு ரூ. 738 கோடி

இந்தியாவின் முன்னேற்றத்தை கரோனா நோய்த்தொற்றால் தடுக்க முடியாது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் மூன்று தவணைகளாக ரூ.2,000 வீதம் மொத்தம் ரூ.6,000 உதவித்தொகையை விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கி வருகிறது. இந்த உதவித்தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், பத்தாவது தவணையாக 10.09 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ.20,946 கோடி உதவித்தொகையை விடுவிக்கும் நிகழ்ச்சி காணொலி வழியாக சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்துகொண்டு விவசாயிகள் உதவித்தொகை, 1.24 லட்சம் விவசாயிகள் பலனடையும் வகையில் சுமார் 351 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ரூ.14 கோடிக்கும் அதிகமான மானியம் ஆகியவற்றை விடுவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இவ்வாண்டின் முதல் உரையாக பிரதமர் மோடி பேசியதாவது:

விவசாயிகள் உதவித்தொகை திட்டம் உழவர்களுக்கு மிகப் பெரிய அளவில் உறுதுணையாக உள்ளது. இந்த உதவித்தொகைத் தவணைகளை, எந்தவொரு இடைத்தரகரின் இடையூறும் இல்லாமல் உரிய நேரத்தில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் மத்திய அரசு செலுத்தியுள்ளது. இந்தத் திட்டம் தரமான விதைகளையும் உரங்களையும் வாங்க விவசாயிகளுக்கு உதவுகிறது.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் கூட்டு வலிமையின் சக்தியை சிறு விவசாயிகள் உணர்கின்றனர். அந்த அமைப்புகள் மூலம் பேரம் பேசும் திறன், வேளாண் விளைபொருள்கள் அளவு, புதிய கண்டுபிடிப்புகள், இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவது, சந்தை நிலைமைக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வது அதிகரித்துள்ளது. அந்த அமைப்புகள் மூலம் இடுபொருள்களை மொத்தமாக வாங்கவும், தங்கள் விளைபொருளை சில்லறை விற்பனை செய்யவும் விவசாயிகளால் முடிகிறது.

தற்போது 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' போன்ற திட்டங்களால் விவசாயிகளால் பலனடைய முடிகிறது. அவர்களுக்கு தேசிய மற்றும் உலக அளவிலான சந்தைகளின் கதவுகள் திறக்கின்றன.

நுண்ணீர் பாசனத்தின் கீழ் 60 லட்சம் ஹெக்டோ் நிலம்: கரோனா நோய்த்தொற்று பாதிப்பைத் தாண்டியும் உணவு தானிய உற்பத்தி 30 கோடியை எட்டியுள்ளது. கடந்த 6-7 ஆண்டுகளில் பால் உற்பத்தி சுமார் 45 சதவீதம் அதிகரித்துள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்கள் சாதனை அளவை எட்டியுள்ளது. சுமார் 60 லட்சம் ஹெக்டோ் விளைநிலம் நுண்ணீர் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தவணைக் கட்டணமாக (ப்ரீமியம்) ரூ.21,000 கோடி மட்டுமே கிடைத்தபோதிலும் ரூ.1 லட்சம் கோடிக்கும் அதிகமாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

பால் பண்ணைத் துறை உள்கட்டமைப்பை வலுப்படுத்த காமதேனு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

இயற்கை விவசாயத்தில் மிகப் பெரிய அளவில் உழவர்கள் ஈடுபட வேண்டும். ரசாயனம் இல்லாத விவசாயம்தான் மண் வளத்தைக் காப்பதற்கு பிரதான வழி. ரசாயனம் இல்லாத விளைபொருள்களுக்கும் மிகப் பெரிய தேவை நிலவுகிறது.

விவசாயத்தில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் பணியில் உழவர்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

2021-ஆம் ஆண்டு நினைவுகூரப்படும்: கரோனா நோய்த்தொற்றுக்கு எதிராக இந்தியா வலுவுடன் போராடியதற்காகவும், பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதற்காகவும் 2021-ஆம் ஆண்டு நினைவுகூரப்படும். அந்த ஆண்டில் பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்களின் வேகத்தை இந்திய அதிகமாக்கியதுடன் நவீன உள்கட்டமைப்பையும் உருவாக்கியது.

2021-ஆம் ஆண்டு இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை வலுப்படுத்தும் ஆண்டாகவும் இருந்தது. அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் தொடக்கம், காசி விஸ்வநாதர் கோயிலை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் இந்தியாவின் கலாசாரத்தை வலுப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு பெண்களின் சட்டபூர்வ திருமண வயதை 21-ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அகாதெமியில் பயிற்சி பெறுவதற்கு பெண்களுக்கு கதவு திறக்கப்பட்டது.

இந்தியாவில் 50,000-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 10,000 நிறுவனங்கள் கடந்த 6 மாதங்களில் தொடங்கப்பட்டவை.

புத்தாண்டில் இந்தியா காலடி எடுத்துவைக்கும் தருணத்தில், கடந்த காலங்களில் செய்த சாதனைகளை தூண்டுகோலாக எடுத்துகொண்டு புதிய பயணத்தை நாடு தொடங்க வேண்டியது அவசியம்.

'அனைவருடனான, அனைவருக்குமான வளர்ச்சி, அனைவரின் முயற்சி' என்ற மந்திரத்துடன் நாடு முன்னோக்கிச் செல்கிறது.

சரியான தருணம்: இந்த ஆண்டுடன் நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. நாட்டின் தீர்மானங்களை நிறைவேற்ற துடிப்பான புதிய பயணத்தைத் தொடங்கவும், புத்துயிர் பெற்ற வீர்யத்துடன் முன்னோக்கிச் செல்லவும் இது சரியான தருணமாகும்.

பல்வேறு அம்சங்களில் கரோனா பரவலுக்கு முந்தைய நாள்களைவிட தற்போது இந்தியாவின் பொருளாதாரம் மேலானதாக உள்ளது.

நாட்டின் பொருளாதாரம் 8 சதவீதத்துக்கும் அதிகமாக வளர்ச்சி கண்டு வருகிறது. அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் இந்தியா சாதனை அளவை எட்டியுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு புதிய உச்சத்தை எட்டியுள்ள நிலையில், சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வசூலும் அதிகரித்துள்ளது.

இந்த நிதியாண்டில் 400 பில்லியன் டாலர்களுக்கு (சுமார் ரூ.29.80 லட்சம் கோடி) ஏற்றுமதி செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது.

நாடு வளர்ச்சியடைவதற்கான வேகத்தை நாம் மேலும் அதிகப்படுத்த வேண்டும். அதற்குக் கரோனா தொற்று சவால்களை விடுத்து வருகிறது. எனினும் இந்தியாவின் முன்னேற்றத்தை கரோனாவால் தடுக்க முடியாது.

கரோனா தொற்றுக்கு எதிராக முழுமையான எச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வுடன் இந்தியா தொடர்ந்து போராடும். அதேவேளையில் தேச நலனும் கவனத்தில் கொள்ளப்படும் என்றார் அவர்.

தமிழ்நாட்டுக்கு ரூ.738 கோடி:

பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டைச் சேர்ந்த 36,68,729 விவசாயிகளுக்கு ரூ.738.99 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

உதவித்தொகையை விடுவிக்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு, உத்தர பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் உத்தரகண்ட் மாநிலங்களைச் சேர்ந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்பு சார்பில் பேசிய பிரதிநிதி, அந்த அமைப்பு பெண்களுக்குச் சொந்தமானதாக இருப்பதாகவும், அதனை பெண்களே முழுமையாக நிர்வகித்து வருவதாகவும் தெரிவித்தார்.

---

13. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த 25,000 கி.மீ. சைக்கிளில் பயணித்த பசுமை மனிதர்

ராஜஸ்தானைச் சேர்ந்த வியாபாரி நர்பாத் சிங் புரோஹித் சைக்கிளில் 25,000 கி.மீ. தொலைவு பயணம் செய்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரைச் சேர்ந்த நர்பாத் சிங் புரோஹித் (34), இனிப்பு, கார வகைகளை விற்பனை செய்யும் கடையை நடத்தி வருகிறார். அவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். சுற்றுச்சூழல் மீதான ஆர்வம் காரணமாக ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டுள்ளார். தனது சொந்த செலவில் 21 குளங்களை வெட்டியுள்ளார். ராஜஸ்தான் மாநில மக்கள், அவரை 'பசுமை மனிதர்' என்று அழைக்கின்றனர்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பது தொடர்பாக நாடு முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிட்ட நர்பாத் சிங் புரோஹித், கடந்த 2019 ஜனவரியில் காஷ்மீரின் ஜம்மு பகுதியில் இருந்து சைக்கிள் பயணத்தை தொடங்கினார். இதுவரை 23 மாநிலங்களில் 25,000 கி.மீ. தொலைவை சைக்கிளில் கடந்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார்.

தற்போது தெலங்கானாவில் முகாமிட்டுள்ள அவர் இன்னும் 5,000 கி.மீ. தொலைவு சைக்கிளில் பயணம் செய்து தனது சொந்த ஊரான ஜெய்ப்பூருக்கு செல்ல திட்டமிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "நான் 10% மாற்றுத் திறனாளி. எனது காலில் 38 தையல்கள் போடப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக நாடு முழுவதும்சைக்கிளில் பயணம் செய்து மரக்கன்றுகளை நட்டு வருகிறேன். வரும் வழியெல்லாம் கிராமங்கள், நகரங்களுக்கு சென்று சுற்றுச்சூழல் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறேன்.

எதிர்கால சந்ததியினர் வளமாக வாழ வேண்டும்.இதற்கு ஒவ்வொரு நபரும் தன்னுடைய வாழ்நாளில் 2 மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். என்னுடைய மாத வருவாயில் 70 சதவீதத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக செலவிடுகிறேன். சுற்றுச்சூழலை பாதுகாத்தால் மட்டுமே இயற்கை பேரழிவுகளில் இருந்து தப்பிக்க முடியும்" என்றார்.

---

14. நம்பகத்தன்மையில் மருத்துவர்கள் முதலிடம்; நம்பகமான நாடுகளில் இந்தியாவுக்கு 2-ம் இடம்: சர்வதேச கருத்துக் கணிப்பில் தகவல்

நம்பகத்தன்மை குறித்து சர்வதேச அளவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் மருத்துவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர். அரசியல்வாதிகள் கடைசி இடத்தில் உள்ளனர். உலகின் நம்பகமான நாடுகள் பட்டியலில் மலேசியா முதலிடத்தையும் இந்தியா 2-வது இடத்தையும் பெற்றுள்ளன.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இப்சாஸ் என்ற நிறுவனம் சர்வதேச அளவில் முக்கிய விவகாரங்கள் தொடர்பாக கருத்து கணிப்பு நடத்தி வருகிறது. இந்த வரிசையில் சர்வதேச அளவில் நம்பகத்தன்மை குறித்துஅந்த நிறுவனம் கருத்து கணிப்பு நடத்தி முடிவுகளை வெளியிட்டுள்ளது.

இதில் நம்பகத்தன்மைமிக்க பணியாளர்களில் மருத்துவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர். மருத்துவர்களுக்கு ஆதரவாக 64% பேர் வாக்களித்துள்ளனர். அதற்கு அடுத்து விஞ்ஞானிகளுக்கு 61%, ஆசிரியர்களுக்கு 55%, ராணுவ வீரர்களுக்கு 42 %,

போலீஸாருக்கு 37%, நீதிபதிகளுக்கு 34%, வழக்கறிஞர்களுக்கு 29%, தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்களுக்கு 27%,மத போதகர்களுக்கு 25%, அரசுஊழியர்களுக்கு 24%, செய்தியாளர்களுக்கு 23%, வங்கி ஊழியர்களுக்கு 23%, தொழிலதிபர்களுக்கு 23%, அமைச்சர்களுக்கு 14% பேரும்ஆதரவு அளித்துள்ளனர்.

அரசியல்வாதிக்கு கடைசி இடம்

இப்சாஸின் நம்பகத்தன்மைபட்டியலில் அரசியல்வாதிகள் கடைசி இடத்தில் உள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக 10% மக்கள் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

சர்வதேச நாடுகளில் மருத்துவர்கள் மீது அந்த நாட்டு மக்கள் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பது குறித்து இப்சாஸ் கருத்து கணிப்பு நடத்தியுள்ளது. இதில் பிரிட்டிஷ் மருத்துவர்களுக்கு 72% மக்கள் ஆதரவுஅளித்துள்ளனர். நெதர்லாந்து மருத்துவர்களுக்கு 71% பேரும், கனடாமருத்துவர்களுக்கு 70% பேரும்ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தியாவில் மருத்துவர்கள் மீது 64% மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

உலகின் நம்பகமான நாடு குறித்து இப்சாஸ் நடத்திய கருத்துக் கணிப்பில் மலேசியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவுக்கு 2–ம் இடம் கிடைத்துள்ளது. சுவீடன், நெதர்லாந்து, கனடா, அமெரிக்கா, துருக்கி, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

---

15. பெண்களுக்கு எதிரான குற்றங்கள்; கடந்த ஆண்டு 31,000 புகார்கள் பதிவு: தேசிய பெண்கள் ஆணையம் தகவல்

நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக கடந்த ஒரே ஆண்டில் சுமார் 31 ஆயிரம் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய பெண்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 30,864 புகார்கள் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. இது, கடந்த 2020–ம் ஆண்டை காட்டிலும் 30 சதவீதம் அதிகமாகும்.

மொத்த புகார்களில் 11,013 புகார்கள், பெண்களை உணர்வுபூர்வமாக துன்புறுத்தும் சம்பவங்கள் தொடர்பானவை. பெண்களுக்கு எதிரான வன் முறை தொடர்பாக 6.633 புகார் களும், வரதட்சணை கொடுமை தொடர்பாக 4,589 புகார்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட புகார்களில் பாதிக்கும் மேற்பட்டவை உத்தரபிரதேசத்தில் இருந்து பெறப்பட்டவை. அம்மாநிலத்தில் இருந்து 15,828 புகார்கள் பெறப்பட்டுள்ளன. அடுத்தபடி யாக டெல்லியில் இருந்து 3,336, மகாராஷ்டிராவில் இருந்து 1,504 புகார்களும், ஹரியாணாவில் இருந்து 1,460 புகார்களும், பிகாரில் இருந்து 1,456 புகார்களும் பதிவாகியுள்ளன.

இதுகுறித்து தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா கூறும்போது, "பெண்களுக்கு எதிரான குற்றங் கள் தொடர்பான புகார்கள் தற்போது அதிக அளவில் பெறப் படுகின்றன. தேசிய பெண்கள் ஆணையத்தின் பணிகள் குறித்து மக்கள் மத்தியில் அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது" என்றார்.–பிடிஐ

---

16. ரூ.700 கோடி செலவில் உத்தர பிரதேச மாநிலம் மீரட் நகரில் தயான்சந்த் விளையாட்டு பல்கலை. : பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

ரூ.700 கோடி செலவில் மேஜர் தயான்சந்த் விளையாட்டுப் பல்கலைக்கழகம் அமைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

ஹாக்கி விளையாட்டில் புகழ்பெற்ற மேஜர் தயான்சந்த் நினைவாக உத்தரபிரதேச மாநிலம் மீரட் நகரில் இந்தப் பல்கலைக்கழகம் அமையவுள்ளது. விளையாட்டு பல்கலைக்கழகத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டி பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

மீரட் நகரம் நமது பலம் மற்றும்கலாச்சாரத்தின் மையமாக அமைந்துள்ளது. சமண தீர்த்தங்கரர்களின் தேசமாகவும், சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்தே இந்தியாவின் வலிமையையும் பறைசாற்றும்நகரமாக மீரட் இருந்து வந்துள்ளது.

நாட்டில் உயர்ந்த விளையாட்டு விருதுக்கு மேஜர் தயான்சந்த் பெயர் சூட்டப்பட்டது. தற்போது மீரட்டில் அமையும் விளையாட்டு பல்கலைக்கழகம் அவருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. ரூ.700 கோடி செலவில் அமையும் இந்த பல்கலைக்கழகம், இளைஞர்களுக்கு சர்வதேச அளவிலான விளையாட்டு வசதிகளை அளிக்கும். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஆடவர் மற்றும் மகளிர் இங்கு பட்டம் பெறவுள்ளனர்.

விளையாட்டு சாதனங்கள் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற வேண்டும். புதிய கல்விக்கொள்கையில் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அறிவியல், கணிதம் உள்ளிட்ட பாடங்களுக்கு இணையாக விளையாட்டும் கற்று தரப்படும்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

முன்னதாக மீரட் நகருக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியை உ.பி. ஆளுநர் ஆனந்தி பென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் 1,080 விளையாட்டு வீரர்களுக்கு (540 ஆடவர், 540 மகளிர்) பயிற்சி அளிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. உலகத் தரத்தில் நவீன வசதிகள் இங்கு அமைக்கப்படவுள்ளன. இந்த பல்கலைக்கழக வளாகத்தில் நவீன சிந்தெடிக் ஹாக்கி மைதானம், கால்பந்து மைதானம், கூடைப்பந்து, வாலிபால், ஹேண்ட்பால் மைதானங்கள், கபடி ஆடுகளம் ஆகியவையும் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இங்கு டென்னிஸ் மைதானம், நவீன உடற்பயிற்சி மையம், சிந்தெடிக் ஓடுபாதை, நீச்சல்குளம், பல்நோக்கு வளாகம், சைக்கிள் பயிற்சி மைதானம் அமைக்கப்படும். அதுமட்டுமல்லாமல், துப்பாக்கிச் சுடுதல், ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக், பளு தூக்குதல், வில் வித்தை,கனோயிங் மற்றும் கயாகிங் படகுப் பயிற்சி வசதிகள் உள்ளிட்டவையும் அமையவுள்ளன. –பிடிஐ

---

17. டெஸ்லாவில் ஆட்டோபைலட் குழுவில் முதல் ஊழியராக இந்தியர் நியமனம்

'டெஸ்லா' நிறுவனத்தின் 'ஆட்டோபைலட்' குழுவில் இந்திய வம்சாவளியை சேர்ந்த அசோக் எல்லுசுவாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை தலைமையிடமாக வைத்து இயங்கும் டெஸ்லா நிறுவனம், மின்சார வாகனங்களை தயாரித்து வருகிறது. இதன் நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க், சமூக வலைதளம் வாயிலாக தன் நிறுவனத்திற்கு ஆள்சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் இந்த நிறுவனத்திற்கு அசோக் எல்லுசுவாமி என்ற இந்திய வம்சாவளியை எலான் மஸ்க் தேர்வு செய்துள்ளார். டெஸ்லா நிறுவனத்தின் ஆட்டோபைலட் எனப்படும், தானாக வாகனங்கள் இயங்கும் தொழில்நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்யும் குழுவில் அசோக் நியமிக்கப்பட்டுள்ளார். ஆட்டோபைலட் குழுவில் தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் ஊழியர் அசோக் எல்லுசுவாமி என்பது குறிப்பிடத்தக்கது.

---

18. குறித்த நேரத்தில் விமானங்களை இயக்கியதில் சென்னை விமான நிலையம் 8–வது இடத்தை பிடித்தது

சா'வதேச அளவில் விமான போக்குவரத்து, விமான நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து லண்டனில் உள்ள ஒரு நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டு வருகிறது.

அதன்படி 2021–ம் ஆண்டு விமான நிறுவனங்கள் மற்றும் விமான நிலையங்களின் செயல்பாடுகள், விமானங்கள் குறித்த நேரத்தில் புறப்பாடு, வருகை பற்றி விரிவான ஆய்வை அந்த நிறுவனம் நடத்தியது. அந்த ஆய்வு பற்றிய அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

8–வது இடம்

அதில், 2021–ம் ஆண்டில் பெரிய சர்வதேச விமான நிலையங்களில் இருந்து குறித்த நேரத்தில் விமானங்கள் புறப்பட்டதில் சென்னை விமான நிலையம் 89.32 சதவீதத்துடன் 8–வது இடத்தை பிடித்துள்ளது.

மொத்தம் 49 ஆயிரத்து 923 விமானங்கள் சேவை வழங்கி உள்ளன. இதில் 70 வழித் தடங்களில் 81.90 சதவீதம் விமானங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன. 28 கோடி இருக்கைகள் என்ற அடிப்படையில் பெரிய விமான நிலையங்களை கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டு உள்ளது.

சென்னை விமான நிலையம்

ஜப்பான் நாட்டில் உள்ள ஒசாகா விமான நிலையம், விமானங்கள் குறித்த நேரத்தில் புறப் படுவதில் 96.51 சதவீதம் பெற்று முதல் இடத்தில் உள்ளது. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் 89.32 சதவீதம் பெற்று 8–வது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் சென்னை விமான நிலையம் மட்டுமே குறித்த நேரத்தில் விமானப் புறப்பாட்டை உறுதி செய்ததில் சர்வதேச அளவில் உள்ள பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

அந்த பட்டியலில் முதல் 20 இடங்களில் இந்திய விமான நிலையங்களில் சென்னையை தவிர வேறு எந்த விமான நிலையமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

19. தமிழகத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத காற்றாலை, சூரியசக்தி மின்உற்பத்தி நிறுவுதிறன் அதிகரிப்பு: நிறுவனங்கள், வீடுகளில் அமைக்க ஆர்வம்

தமிழகத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையிலான காற்றாலை, சூரிய சக்தி மின்உற்பத்தி நிறுவுதிறன் ொடர்ந்து அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் வீடுகளுக்கான மின்இணைப்பு 2.20 கோடி. இதேபோல், வணிகம் 35 லட்சம், தொழிற்சாலைகள் 7 லட்சம், விவசாயம் 21 லட்சம், குடிசைகள் 9 லட்சம், இதர இனம் 14 லட்சம் என மொத்தம் 3.16 கோடிக்கும் அதிகமான தாழ்வழுத்த மின்இணைப்புகள் உள்ளன. இதுதவிர 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களும் உள்ளனர். தற்போதைய நிலவரப்படி தமிழகத்தின் ஒட்டுமொத்த மின் தேவை 12,700 மெகாவாட். இது கோடைக்காலங்களில் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே, பொதுமக்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களின் மின்தேவையை பூர்த்தி செய்ய தமிழக மின்வாரியம் பெரும்பாலும் அனல் மின்நிலையத்தையே நம்பி உள்ளது. இதன் மூலம் 4,300 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. இது ஒன்றை வைத்து தமிழகத்தின் அனைத்து மின்தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது. காரணம், அனல் மின்நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு கூடுதல் செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. மேலும் நிலக்கரியால் அனல் மின்சாரத்தால் காற்று மாசும் முக்கிய அம்சமாக பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, தற்போது நீர் மின்நிலையங்கள் 2,300 மெகாவாட், காற்றாலை 9,600 மெகாவாட், சோலார் 4,700 மெகாவாட் என்ற அளவில் மின் உற்பத்தி நிறுவு திறன்களை பல்வேறு இடங்களில் அரசு மற்றும் தனியார் அமைத்துள்ளனர். இதுதவிர மத்திய தொகுப்பில் இருந்தும், தனியாரிடம் இருந்தும் தேவைக்கு ஏற்ப மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதனால், ஒன்றிய மாநில அரசுகள் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு சலுகைகள், மானியங்களை வாரி வழங்கி வருகிறது. மேலும் இத்தகைய முறையிலான திட்டங்களையும் அரசு மற்றும் தனியார் மற்றும் இரண்டு தரப்பு பங்களிப்புடன் புதிதாக பல்வேறு இடங்களில் மின்திட்டங்களை செயல்படுத்தியும் வருகிறது. இதேபோல்

தனியார் நிறுவனங்கள், சில வீடுகளிலும் தங்களுக்கு அன்றாட தேவைப்படும் மின்சாரத்தை சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் தயாரித்து பயன்படுத்தி வருகின்றன. இதனால், தமிழகத்தில் ஆண்டுதோறும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவுதிறன் உயர்ந்து வருகிறது. அந்தவகையில், 2016ம் ஆண்டு தமிழகத்தில் ஒட்டுமொத்த காற்றாலை மின்உற்பத்தி நிறுவுதிறன் 7613.89 மெகாவாட்டாக இருந்தது. இதுவே கடந்த 2021ம் ஆண்டில் ஒட்டுமொத்த காற்றாலை மின்உற்பத்தி நிறுவு திறன் 9,608.04 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. இதேபோல் தமிழகத்தில் வீடுகளின் மேற்கூரையில் சூரியசக்தி மின்உற்பத்தி கட்டமைப்புகளையும் ஏற்படுத்துவதும் அதிகரித்துள்ளது.

அதாவது கடந்த 2016ம் ஆண்டு மாநிலத்தின் ஒட்டுமொத்த சூரியசக்தி மின்உற்பத்தி நிறுவு திறன் 1061.82 மெகாவாட்டாக இருந்தது. இதுவே கடந்த 2021ம் ஆண்டில் தமிழகத்தின் ஒட்டுமொத்த சூரிசக்தி மின்உற்பத்தி நிறுவு திறன் 4,475.21 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு சலுகைகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க வேண்டும் என்ற மக்களின் நிலைபாடு போன்றவற்றின் காரணமாக தமிழகத்தில் வரும் காலங்களில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மின்உற்பத்தி மேலும் அதிகரிக்கும்.

மின்உற்பத்தி நிறுவுதிறன் (மெகாவாட்டில்)

ஆண்டு	சூரியசக்தி	காற்றாலை
2016	1061.82	7613.89
2017	1691.83	7861.46
2018	1908.57	8197.09
2019	2575.22	8968.91
2020	3915.88	9304.34
2021	4475.21	9608.04

---

20. காகித பயன்பாடே கிடையாது 3 ஸ்மார்ட் நீதிமன்றம் கேரளாவில் சாதனை: இந்தியாவிலேயே முதன் முறை

நாட்டிலேயே முதல்முறையாக கேரளாவில் உயர்நீதிமன்றம் உள்பட 3 நீதிமன்றங்கள் ஸ்மார்ட் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் பெரும்பாலான அரசுத் துறைகள் தற்போது கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. கேரளாவில் நீதிமன்ற நடவடிக்கைகளும் முழுக்க முழுக்க கணினிமயமாக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கேரளாவில் உயர் நீதிமன்றம், கோலஞ்சேரி குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம், திருவனந்தபுரம் கூடுதல் தலைமை குற்றவியல் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஆகியவை முழுக்க முழுக்க கணினி மயமாக்கப்பட்டு காகிதம் இல்லாத நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இதன் தொடக்க விழா கொச்சியில் நடந்தது. உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திரசூட், கேரள முதல்வர் பினராய் விஜயன் ஆகியோர் காணொலி மூலமாக இவற்றை தொடங்கி வைத்தனர். கேரள உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி நீதிமன்றம் உள்பட 6 நீதிமன்றங்கள் முழுக்க முழுக்க கணினிமயமாக்கப் பட்டுள்ளன. விரைவில், இதில் உள்ள 27 நீதிமன்றங்களும் கணினி மயமாக்கப்பட உள்ளது. இந்தியாவிலேயே கேரளாவில் தான் முதல்முறையாக 2 மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் ஸ்மார்ட் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதன்படி, போலீஸ் பதிவு செய்யும் முதல் தகவல் அறிக்கை உள்பட அனைத்து ஆவணங்களையும் டிஜிட்டல் முறையில் நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம். குற்றப் பத்திரிகை, சாட்சிகளின் வாக்குமூலம் உள்பட அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் முறையில் கிடைக்கும். சம்மன்களையும் டிஜிட்டல் முறையில் அனுப்பும் வசதி உண்டு.

---

1. சமீபத்தில் கால்நடை பாதுகாப்புச் சட்டம், 1950'இல் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) உத்தரப்பிரதேசம்

ஈ) அஸ்ஸாம் ☑

✓ அஸ்ஸாம் மாநில சட்டமன்றம் அண்மையில் ஒரு திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது. அது கால்நடை பாதுகாப்புச் சட்டம், 1950'ஐ மாற்றியமைத்து அச்சட்டத்தை வலுப்படுத்துகிறது. வேளாண் நோக்கங்களுக்காக கால்நடைகளை எளிதாக கொண்டு செல்வதற்கும், அவற்றை கடத்துவோர்க்கு கடுமையான தண்டனையை உறுதி செய்வதற்கும் இம்மசோதா வகை செய்யும்.

2.நீர் மறுபயன்பாடு தொடர்பான NMCG–TERI'இன் சிறப்பு மையம் அமைக்கப்படவுள்ள இடம் எது?

அ) குருகிராம் ☑



ஆ) புது தில்லி

இ) மும்பை

ஈ) கொல்கத்தா

✓ தேசிய தூய்மை கங்கை திட்டம் (NMCG) மற்றும் எரிசக்தி மற்றும் வள நிறுவனம் (TERI) ஆகியவை இணைந்து நீர் மறுபயன்பாடு தொடர்பான NMCG–TERI'இன் சிறப்பு மையத்தை குருகிராம் – ஹரியானாவில் உள்ள TERI வளாகத்தில் தொடங்கியுள்ளன.

✓ ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை வளர்ப்பதற்கும், ஆராய்ச்சி –க்கான இடைவெளிகளைக் கண்டறிவதற்கும், நீர் மறுப –யன்பாட்டில் அனைத்து வகையான ஆராய்ச்சிகளுக்கும் ஆதரவளிப்பதற்குமாக இம்மையம் நிறுவப்படுகிறது.

---

3. துணிப்பைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகை –யில் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) தெலுங்கானா

✓ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின், பொதுமக்கள் துணிப்பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், நெகிழிப் பைகளை பயன்படுத்துவதை தடுக்கவுமாக 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதால், இதுவரை 130க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

✓ மஞ்சள் நிற துணிப்பைகள் தமிழ்நாட்டில் பெரும்பாலும் சுபநிகழ்ச்சிகளின்போது அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

---

4. ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தைச் (SPMRM) செயல்படுத்துவதில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

அ) கர்நாடகா

ஆ) தெலுங்கானா ☑



இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தைச் (SPMRM) செயல்படுத்துவதில் தெலுங்கானா முதலிடத்தில் உள்ளது.

✓ உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், அடிப்படை சேவைகளை மேம்படுத்தவும், நன்கு திட்டமிடப்பட்ட தொகுதிகளை உருவாக்கவும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நாடு முழுவதும் உள்ள 300 தொகுதிகளில் சங்கரெட்டி மற்றும் காமரெட்டி மாவட்டங்கள் முதல் இரண்டு இடங்களைப் பிடித்தன.

---

5. சமீபத்தில் மகளிர் ITF ஒற்றையர் பட்டத்தை வென்ற மொயுகா உச்சிஜிமா சார்ந்த நாடு எது?

அ) சீனா

ஆ) ஜப்பான் ☑



இ) தென் கொரியா

ஈ) வட கொரியா

✓ ஜப்பானிய டென்னிஸ் வீராங்கனை மொயுகா உச்சிஜிமா தனது முதல் $25,000 பரிசுத் தொகையுடைய மகளிர் ITF ஒற்றையர் பட்டத்தை வென்றார். NECC டெக்கான் மகளிர் ITF சாம்பியன்ஷிப்பின் இருபதாவது பதிப்பின் ஒற்றையர் இறுதிப்போட்டியில் லாட்வியாவின் டயானா மார்சின்கெ –விகாவை அவர் தோற்கடித்தார். இரட்டையர் பிரிவில் ஜப்பானின் மற்றொரு ஜோடியான ஃபுனா கோசாகி மற்றும் மிசாகி மட்சுடா இரண்டாமிடம் பிடித்தனர்.

---

6. 'கிராம் உஜாலா திட்டத்தைச்' செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல் & வன அமைச்சகம்

✓ 'கிராம் உஜாலா திட்டம்' என்பது எரிசக்தி அமைச்சகத்தின் முதன்மையான திட்டமாகும். தற்போது பயன்பாட்டில் உள்ள குழல்விளக்குகளுக்கு மாற்றாக ஒவ்வொன்றும் ₹10 விலையில் மூன்றாண்டு உத்தரவாதத்துடன் அதிக தரமுள்ள LED பல்புகளை CESL வழங்குகிறது.

✓ சமீபத்தில், CESL ஆனது கிராம் உஜாலா திட்டத்தின்கீழ் 50 இலட்சம் LED பல்புகளை விநியோகித்து சாதனை படைத்துள்ளது.

---

7. அண்மையில் அதன் தேசிய பாதுகாப்பு கொள்கையை வெளியிட்ட ஆசிய நாடு எது?

அ) இலங்கை

ஆ) பாகிஸ்தான் ☑



இ) ஆப்கானிஸ்தான்

ஈ) வங்காளதேசம்

✓ பாகிஸ்தானின் அமைச்சரவை நாட்டின் முதல் தேசிய பாதுகாப்புக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது. இது, பொருளாதார முன்னேற்றம் தேசிய பாதுகாப்பின் கருவாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. உயர் அதிகாரம் கொண்ட தேசிய பாதுகாப்புக் குழுவால் (NSC) அங்கீகரிக்கப்பட்ட ஆவணத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. இது 2022–26 காலகட்டத்தை உள்ளடக்கிய ஐந்தாண்டு கொள்கை ஆவணமாகும்.

---

8. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் அண்மைய பதிப்பு, கீழ்காணும் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது?

அ) 2010

ஆ) 2015



இ) 2019 ☑

ஈ) 2021

✓ நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி, நுகர்வோர் பாதுகாப்பு (நேரடி விற்பனை) விதிமுறைகள், 2021'ஐ மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்புதிய விதிமுறைகள் நேரடிவிற்பனை நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகள் பிரமிட் திட்டங்கள், பண சுழற்சி திட்டங்களில் ஈடுபட தடை விதிக்கிறது.

---

9. அரசு நடத்தும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி அமைச்சருக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கான மசோதாவை பின்வரும் எந்த மாநிலத்தின் சட்டமன்றக் குழு நிறைவேற்றியுள்ளது?

அ) தமிழ்நாடு

ஆ) ஆந்திர பிரதேசம்



இ) மகாராஷ்டிரா ☑

ஈ) தெலுங்கானா

✓ மகாராஷ்டிர மாநில பொது பல்கலைக்கழக சட்டம், 2016 (3ஆவது திருத்தம்) மசோதாவை மகாராட்டிர சட்டமன்றக் குழு நிறைவேற்றியது. அரசு நடத்தும் பல்கலைக்கழகங்க –ளில் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சருக்கு அதிக அதிகாரங்களை வழங்க இது முயற்சி செய்கிறது.

✓ பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருக்கும் ஆளுநரிடம் அமைச்சர் பரிந்துரைகளை வழங்கவும் இந்த மசோதா அனுமதிக்கிறது. பல்கலைக்கழகங்களின் துணை வேந்தராக அமைச்சரை நியமிக்கவும் இந்தச் சட்டம் முன்மொழிகிறது.

---

10. மதிப்பீட்டு நிறுவனமான ICRA'இன் கூற்றுப்படி, 2022 நிதியாண்டில் இந்தியாவின் மெய்யான GDP வளர்ச்சி விகிதம் எவ்வளவு என மதிப்பிடப்பட்டுள்ளது?

அ) 12.5%

ஆ) 11%



இ) 10%

ஈ) 9% ☑

✓ 2021–22ஆம் நிதியாண்டில் இந்தியாவிற்கான GDP 9.0% விரிவாகும் என்ற தனது முன்னறிவிப்பை ICRA ரேட்டிங் தக்கவைத்துள்ளது. பொருளாதாரத்தின் முறையான மற்றும் முறைசாரா துறைகளில் K–வடிவ வேறுபாடு காணப்படும் என்று அது உறுதிபட கூறியுள்ளது. அடுத்த நிதியாண்டில் (2022–23) பொருளாதாரம் இதேபோன்ற 9.0% வளர்ச்சியைப் பராமரிக்கும் என ICRA நிறுவனம் எதிர்பார்க்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகம்; முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்: 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது

பொங்கல் பண்டிகைக்கு தமிழகத்தில் உள்ள 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைகள் மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை முதல்வர் மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் தமிழகத்தில் உள்ள 2 கோடியே 15 லட்சத்து 29,114 அரிசி குடும்பஅட்டைதாரர்கள், 18,946 இலங்கை தமிழர் குடும்பங்கள் என 2 கோடியே 15 லட்சத்து 48 ஆயிரத்து 60 குடும்பங்களுக்கு, பயனாளி ஒருவருக்கு ரூ.505 மதிப்புள்ள 21 பொருட்கள் வழங்க ₹1,088 கோடியே 17 லட்சத்து 70 ஆயிரத்து 300 ஒதுக்கப்பட்டுள்ளது.

21 பொருட்கள்

இதில், தலா ஒரு கிலோ பச்சரிசி, வெல்லம், கோதுமை மாவு, ரவை, தலா 50 கிராம் முந்திரி, திராட்சை,10 கிராம் ஏலக்காய், தலா 500 கிராம்உளுந்து, பாசிப்பருப்பு, உப்பு, தலா 100 கிராம் நெய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம், 50 கிராம் மிளகு, 200 கிராம் புளி, 250 கிராம் கடலைப் பருப்பு, துணிப்பை ஒன்று என 20 பொருட்களும், ஒரு கரும்பும் என 21 பொருட்கள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக கூட்டுறவுத் துறை மூலம் ஏலம், முந்திரி, திராட்சைமற்றும் கரும்பு ஆகியவை கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள் மூலம் 21 பொருட்களை யும் வழங்குவதற்கான, டோக்கன் வழங்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இத்திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் இன்று காலை 10.30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைக்கிறார்.

இதைத்தொடர்ந்து, மாவட்டவாரியாக அமைச்சர்கள் தொடங்கிவைக்கின்றனர். விடுதல் இல்லாமல் அனைவருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

---

2. சென்னை வெள்ள இடர் தணிப்பு, மேலாண்மை இடைக்கால அறிக்கை: முதல்வரிடம் சமர்ப்பித்தார் அறிவுரைக் குழுத் தலைவர்

சென்னை வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான இடைக்கால அறிக்கையை, முதல்வர் மு க ஸ்டாலினிடம், அறிவுரைக் குழுவின் தலைவர் வெ திருப்புகழ் சமர்ப்பித்தார்.

சட்டப்பேரவையில் ஆளுநர்உரையாற்றும்போது, "சென்னையில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில், வெள்ளக்கட்டுப்பாடு நடவடிக்கைகள், மழைநீர் கால்வாய்களை வடிவமைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் வகையில், சுற்றுச்சூழல், நகர்ப்புறத் திட்டமிடல், பேரிடர் மேலாண்மை வல்லுநர்கள் அடங்கிய சென்னை பெருநகர வெள்ள மேலாண்மை குழு அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.

இதையடுத்து, சென்னை மாநகராட்சி ஆணையரின் பரிந்துரை அடிப்படையில், சென்னை பெருநகர வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுரைக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ திருப்புகழ் தலைமையிலான அக்குழுவில், டெல்லி நகர் மற்றும்ஊரமைப்பு நிறுவன தலைமை திட்ட அலுவலர், காலநிலை பின்னடைவு பயிற்சி உலக வள நிறுவன இயக்குநர் நம்பி அப்பாதுரை, சென்னை வளர்ச்சி கல்வி நிறுவனப் பேராசிரியர் ஜானகிராமன், மும்பைஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை போராசிரியர் கபில் குப்தா உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னையில் வடகிழக்குப் பருவமழை பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தப் பாதிப்புகளையும், தண்ணீரை வெளியேற்றுவதற்கான வழிமுறைகளையும் இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

இதையடுத்து, சென்னையில் வெள்ளப் பாதிப்பை தடுப்பது தொடர்பான இடைக்கால அறிக்கையை, தமிழக முதல்வர் மு க ஸ்டாலினிடம், அறிவுரைக் குழுத் தலைவர் வெ திருப்புகழ் நேற்று சமர்ப்பித்தார். 90 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில், சென்னையில் மழைப் பாதிப்புகளை தடுப்பதற்கான சில ஆலோசனைகளை குழு வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, சென்னையில் மழையால் பாதிக்கப்படும் 561 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், மழை பாதிப்புகளைத் தடுக்க, நீர்நிலைகள், நீர்வழித்தடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற வேண்டும். அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் பல்வேறு வடிகால்களின் உண்மையான கொள்ளளவை மீட்க வேண்டும். சென்னையில் உள்ள மழைநீர்க் கால்வாய்களை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். கட்டுமானங்களை தரமானதாக மாற்றவேண்டும் என்பன உள்ளிட்ட பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

---

3. மின்சார வாகனம் தொடர்பான புதிய முதுநிலைப் படிப்பு சென்னை ஐஐடி'இல் அறிமுகம்

மின்சார வாகனம் தொடர்பான புதிய முதுநிலைப் பட்டப் படிப்பை சென்னை ஐஐடி அறிமுகப்படுத்துகிறது.

இது தொடர்பாக சென்னை ஐஐடி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்த ஆண்டு ஐஐடி–ல் மின் வாகனம் தொடர்பான புதிய முதுநிலைப் பட்டப் படிப்பு கொண்டுவரப்படுகிறது. இரு துறைசார்ந்த இரட்டைப்படிப்பாக இது அறிமுகப்படுத்தப்படும். இந்தப் படிப்பில் பி.டெக். 3–ம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் சேரலாம். மொத்தம் 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மின்சார வாகனவடிவமைப்பு, தகவல் தொடர்புஉள்ளிட்ட அம்சங்கள் அடங்கியதாகவும், மின்சார வாகன தயாரிப்புமேம்பாட்டுத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் இந்தப் படிப்பு அமைந்திருக்கும்.

ஐஐடி–ல் பி.டெக். 3–ம் ஆண்டு பயிலும் மாணவர்கள் இந்தப் படிப்பில் சேர்ந்து 5 ஆண்டுகள் படித்தால், அவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.டெக். பட்டம் வழங்கப்படும். இந்தப் படிப்புக்கான சேர்க்கை ஜனவரியில் தொடங்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய படிப்பின் முக்கிய அம்சங்கள் குறித்து இன்ஜினீயரிங் டிசைன் துறைத் தலைவர் டி.அசோகன் கூறும்போது, "மின்சார வாகனப் பொறியாளர்களுக்குத் தேவைப்படும் அனைத்து திறமைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், 8 துறைகளின் கூட்டுமுயற்சியால் இந்தப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மின் வாகனங்களுக்கான அடிப்படை விஷயங்கள், பேட்டரிகள், மோட்டார்கள் என அனைத்துத் துறைகளிலும் ஆழ்ந்த அறிவுபெறும் வகையில், மிகுந்த கவனத்துடன் இதற்கான பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

---

4. இந்தியத் தடுப்பூசிகள்: ஒரு மீள் பார்வை

கரோனா வைரஸ் ஒமைக்ரான் வேடமிட்டு மூன்றாம் ஆண்டில் தடம்பதிக்கிறது. உலகளவில் இதை எதிர்கொள்ளத் தடுப்பூசிதான் ஒரே வழி என்று ஆரம்பம் முதலே பேசப்பட்டது. கரோனாவுக்கு எதிராக பைசர்–பயோஎன்டெக் நிறுவனத்தின் எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசி முதன்முதலில் 2020 டிசம்பர் 8–ல் பிரிட்டனில் மக்கள் பயன்பாட்டுக்கு வந்தது. பாரத் பயோடெக் நிறுவனம் கோவேக்சின் தடுப்பூசியைத் தயாரித்து இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தது. இதுவரை 10 நிறுவனங்களின் தடுப்பூசிகளுக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி அளித்துள்ளது. கரோனா தொற்றாளருக்கு உயிரிழப்பைத் தவிர்ப்பதில் தடுப்பூசியின் பங்கு மகத்தானது.

இந்தியாவில் இலவச கரோனா தடுப்பூசித் திட்டம் 2021 ஜனவரி 16-ல் தொடங்கப்பட்டது. கோவிஷீல்டு, கோவேக்சின் முன்களப் பணியாளர்களுக்கு முதலில் செலுத்தப்பட்டது. மார்ச்-1 தொடங்கி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 45 வயதுக்கு மேல் இணைநோயுள்ளவர்களுக்கும் செலுத்தப்பட்டது. மே-1 தொடங்கி 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அனுமதியளிக்கப்பட்டது. மே-14ல் ஸ்புட்னிக்-வி இணைந்துகொண்டது. இவற்றில் கோவிஷீல்டு 88.89%, கோவேக்சின் 10.79% பயன்படுத்தப்பட்டது. ஸ்புட்னிக்-வி 1%-க்கும் குறைவு.

நவம்பர் 3-ம் தேதி 'வீடு தேடித் தடுப்பூசி'த் திட்டம் தொடங்கப்பட்டது. தடுப்பூசிக்கு எதிரான பரப்புரைகளால் பொதுச் சமூகத்துக்கு ஏற்பட்ட தயக்கத்தாலும், நாட்டில் தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு உண்டானதாலும் இத்திட்டம் ஆரம்பத்தில் சுணக்கம் கண்டது. பின்னர், வேகமெடுத்தது. இதுவரை 145 கோடித் தவணைகள் இந்தியாவில் செலுத்தப்பட்டுள்ளன. முழுமையாகச் செலுத்திக்கொண்டவர்கள் 64.2% பேர். 3 மாநிலங்களில் 100% இரண்டு தவணைகளும் போடப்பட்டுள்ளன. இதன் மூலம், இந்திய மருத்துவத் துறையில், குழந்தைகளுக்கு மட்டுமே தடுப்பூசித் திட்டம் என்றிருந்த வரலாறு மாறிப்போனது. இதுவரை செய்யாத சாதனையாக ஒன்றிய அரசு இத்திட்டத்தை முன்வைத்தது. ஆனாலும், 2021 டிசம்பருக்குள் தகுதியானவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்திட வேண்டும் என்ற இலக்கை எட்ட முடியவில்லை. எனவே, இந்தியா செல்ல வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது.

முன்னெச்சரிக்கைத் தடுப்பூசி

இத்திட்டத்தின் தொடக்கத்தில் மூன்று வகைத் தடுப்பூசிகளுக்குமே இரண்டு தவணைகள் போதும் என்றது அரசு. ஆனால், களநிலவரத்தில், இரண்டு தவணை செலுத்திக்கொண்டவர்களுக்குத் தடுப்பாற்றல் 6-9 மாதங்களே தாக்குப்பிடிப்பதாலும், டெல்டா மற்றும் ஒமைக்ரான் வேற்றுருவங்கள் இந்தத் தடுப்பூசிகளையும் தாண்டி மறுதொற்றை ஏற்படுத்துவதாலும், மூன்றாம் தவணையும் தேவை என்ற எதிர்பார்ப்பு உலகளவில் அதிகரித்தது. அதைத் தொடர்ந்து 60-க்கும் மேற்பட்ட உலக நாடுகள் மூன்றாம் தவணையைச் செலுத்தத் தொடங்கின. இஸ்ரேல் நான்காவது தவணையைச் செலுத்தத் தொடங்கிவிட்டது. இந்தியாவிலும் 'முன்னெச்சரிக்கைத் தடுப்பூசி' எனும் பெயரில் ஜனவரி 10-ம் தேதி தொடங்கி, மூன்றாவது தவணையைச் செலுத்த உள்ளனர். ஆரம்பத்தில் முன்களப் பணியாளர்களுக்கும் இணைநோயுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகளில் மூன்றாம் தவணைக்கு, முதல் இரண்டு தவணைகள் செலுத்திக்கொண்ட தடுப்பூசிகளுக்குப் பதிலாக மாற்றுத் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வது மிகுந்த பாதுகாப்பைத் தருவதாகக் கருதுகின்றனர். குறிப்பாக, எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசியை அவர்கள் பரிந்துரை செய்கின்றனர். இந்தியாவில் மூன்றாம் தவணை தொடர்பான ஆராய்ச்சி வேலூரில் கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வின் முடிவு வெளிவந்ததும் இந்தியாவில் எதை முன்னெச்சரிக்கைத் தடுப்பூசியாகச் செலுத்திக்கொள்வது என்பது தெளிவாகிவிடும். அண்மையில், கோவோவேக்ஸ், கோர்பிவேக்ஸ் ஆகிய புரத வகைத் தடுப்பூசிகளும் அரசின் அனுமதி பெற்றுள்ளன. எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசி, ஸ்புட்னிக் லைட், ஜைக்கோவ்-டி, ஜான்சன் அண்ட் ஜான்சன் ஆகிய தடுப்பூசிகள் ஏற்கெனவே அனுமதி பெற்றிருந்தும் இன்னும் செயலுக்கு வரவில்லை.

தமிழ்நாட்டின் நிலவரம்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தடுப்பூசித் திட்டம் வெற்றியடைய பல அடுக்கு நடவடிக்கைகளைத் தற்போதைய அரசு தொடர்ந்து முன்னெடுத்துவருகிறது. அவற்றில் மெகா தடுப்பூசி முகாம்கள் முக்கியமானவை. சென்ற வாரம் வரை 17 மெகா முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனாலும், சிம்லா மற்றும் இமாசலப் பிரதேசத்தைப் போல 100% இலக்கை உடனடியாக அதனால் எட்ட முடியவில்லை. புள்ளிவிவரப்படி பார்த்தால், தடுப்பூசிக்குத் தகுதியான 5.78 கோடிப் பேரில் 86% பேர் முதல் தவணைத் தடுப்பூசியையும் 59% பேர் இரண்டாவது தவணையையும் செலுத்திக்கொண்டுள்ளனர். 80 லட்சம் பேர் முதல் தவணையையும், 96 லட்சம் பேர் இரண்டாம் தவணையையும் இன்னமும் செலுத்திக்கொள்ளவில்லை. இவர்களில் மூத்த குடிமக்கள்தான் அதிகம். அரசின் கணக்குப்படி, தடுப்பூசி செலுத்தப்பட வேண்டிய மூத்த குடிமக்களில் இதுவரை 61% பேர் ஒரு தவணை மட்டும் செலுத்திக்கொண்டுள்ளனர். 44% பேர் இரண்டு தவணைகளைச் செலுத்திக்கொண்டு முழுப் பாதுகாப்பு பெற்றுள்ளனர்.

தயக்கம் வேண்டாம்!

இந்தச் சூழலில், ஒன்றிய அரசு இணைநோயுள்ள மூத்த குடிமக்களுக்கு மூன்றாம் தவணையாக முன்னெச்சரிக்கைத் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள அனுமதித்துள்ளது. இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயம், ஒமைக்ரான் தீவிரமாகப் பரவும் என்பதால், அதன் தாக்குதலுக்கு உள்ளாகிற அதிக வாய்ப்பு மூத்த குடிமக்களுக்கே இருக்கிறது. இவர்கள்தான் முன்னெச்சரிக்கைத் தடுப்பூசிக்கு முன்நிற்க வேண்டும்.

இவர்களோ இணைநோய்களின் அச்சம் காரணமாகத் தடுப்பூசிக்குத் தயங்குகின்றனர். இரண்டு தவணைகளையும் செலுத்திக்கொண்டால்தான் நாட்பட்ட பாதுகாப்பு உறுதிப்படும் என்பதையும், தடுப்பூசியால்தான் கரோனா மரணங்களை உலகளவில் குறைக்க முடிந்தது என்பதையும் உணர்ந்து, இவர்கள் இரண்டு தவணைத் தடுப்பூசிகளைக் கட்டாயம் செலுத்திக்கொள்ள வேண்டும். இணைநோயுள்ளவர்களும் மூன்றாம் தவணையைச் செலுத்திக்கொள்ளலாம். வீட்டில் பெரியவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்வதைப் பிள்ளைகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த வாரத்திலிருந்து 15 - 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கோவேக்சின் தடுப்பூசி செலுத்தப்பட இருக்கிறது. இது, இந்தியக் குழந்தைகளிடம் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் திருப்தியாக இருந்ததால்,

குழந்தைகள் பயன்பாட்டுக்கு அரசின் அனுமதி பெற்றுள்ளது. ஆகவே, பெற்றோர் எவ்விதத் தயக்கமுமின்றித் தங்கள் குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வர வேண்டும். கோவிஷீல்டு தடுப்பூசியை வடிவமைத்த ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் தடுப்பூசித் துறைப் பெண் பேராசிரியை சாரா கில்பர்ட் கூறியுள்ளதை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

கரோனா இன்னும் ஓய்ந்துவிடவில்லை. இந்தப் பெருந்தொற்றின் மூலம் நமக்குக் கிடைத்துள்ள தடுப்பூசி அறிவைத் தொலைத்துவிடக் கூடாது. தடுப்பூசித் தவணைகள் விஷயத்திலும் கரோனா பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதிலும் அலட்சியம் ஆகாது. மீறினால், அடுத்த பெருந்தொற்று இதைவிட மோசமானதாகக்கூட இருக்கும்".

டெல்டாவும் ஒமைக்ரானும் சேர்ந்து தமிழ்நாட்டில் மூன்றாம் அலையைத் தொடங்கிவிட்டது என்ற எச்சரிக்கை வந்திருக்கும் இன்றைய சூழலில் எல்லோருக்குமான அறிவுறுத்தல் இது.

---

5. வேளாண் விளைபொருள் பட்டியலிலிருந்து பருத்தி நீக்கம்

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் ஒழுங்குமுறைச் சட்டம்–1987–ல் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்கள் பட்டியல் தொகுப்பிலிருந்து பருத்தியைத் தமிழ்நாடு அரசு நீக்கம் செய்து சந்தைக் கட்டண விலக்கு அளித்துள்ளது. இது தொடக்கத்தில் விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் நன்மை தருவதுபோல் இருப்பினும் நாளடைவில் மத்திய, மாநில அரசின் நிதியை அரசுச் சந்தைகள் எதிர்நோக்கும் கட்டாயம் ஏற்படும்.

தனது சுயநிதி (சந்தைக் கட்டண நிதி) மூலம் விவசாயிகளுக்கு எவ்வித சந்தை மேம்பாட்டுப் பணியையும் செய்ய இயலாமல் நலிவடைந்துவிடும். மத்திய வேளாண் சட்டங்களால் வேளாண் சந்தை அமைப்புகள் அழிந்துவிடும் என்று விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. அது போலத்தான் வேளாண் விளைபொருள் பட்டியலிலிருந்து பருத்தியையும் அடுத்தடுத்த விளைபொருட்களையும் நீக்கினால், ஒழுங்குமுறை வேளாண் சந்தை அமைப்புகள் வலுவிழந்துபோய்விடும். அரசு சார்ந்த சந்தை அமைப்புகள் வலுவிழந்த நிலையில், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

வணிகர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் விவசாயிகள் வர வேண்டிய நிலை ஏற்படும். இடைத்தரகர்கள் மீண்டும் வருவார்கள். அரசு சார்ந்த சந்தை அமைப்புகள் வலுவிழந்த நிலையில், அனைத்து விளைபொருட்களையும் அரசே கொள்முதல் செய்வது சாத்தியமில்லா நிலை ஏற்படும். விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச விலைகூடக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போகக்கூடும். பருத்தி போன்ற விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும், இந்தியப் பருத்திக் கழகம் கொள்முதல் செய்ய இடைத்தரகர்களையும் வணிகர்களையும் நாட வேண்டிய நிலை வரும்.

என்னதான் வேளாண் சந்தைகளுக்கு அரசு நிதி வழங்கினாலும், அது சுயமாக நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ளும் நிலையில் இருந்தால்தான் அமைப்பு வலுப்பெறும். சந்தை அமைப்புகள் வலுவாக இருந்தால்தான், அதன் மூலம் வேளாண் கொள்முதல், விற்பனை ஆகியவற்றை அரசு கண்காணித்துக் கட்டுப்படுத்த இயலும். சந்தைக் கட்டண விலக்கு அளிப்பதால், விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் என்பதற்கோ, நுகர்வோருக்குக் குறைந்த விலை கிடைக்கும் என்பதற்கோ எந்தவித ஆராய்ச்சித் தரவுகளும் இல்லை.

ஆகவே, சந்தைக்குள் நடக்கும் பரிவர்த்தனைக்கு மட்டும் சந்தைக் கட்டணம் விலக்கு அளித்துவிட்டு, வெளிப் பரிவர்த்தனைக்குக் கட்டணம் வசூலிக்கும் நிலை இருந்தால் நிறைய வணிகர்கள் சந்தை அமைப்புக்குள் கொள்முதல் செய்யப் போட்டி போடும் நிலை வரும். விவசாயிகளுக்கும் போட்டி விலை கிடைக்கும். ஆகவே, பருத்தி போன்ற வேளாண் விளைபொருட்களைப் பட்டியலிலிருந்து நீக்குவதும், முழுமையாகச் சந்தைக் கட்டண விலக்கு அளிப்பதையும் அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.

மேலும், 100 ஏக்கர் பரப்பில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வேளாண் விற்பனைச் சந்தைகளை உருவாக்கினால், சந்தை அமைப்பு மேம்படும். நல்ல விலை கிடைக்கும்போது உற்பத்தி தானாகப் பெருகும்.

---

6. சேதி தெரியுமா?

டிச.25: தேசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியாவில் 2021ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகம் பதிவான மாநிலங்களில் உத்தர பிரதேசம் முதலிடம் பிடித்தது.

டிச.25: மத்திய உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டில் நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவில் தமிழகம் முதலிடம் பிடித்தது.

டிச.26: பிரபல பின்னணிப் பாடகரும் நடிகருமான மாணிக்க விநாயகம் (78) உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார்.

டிச.28: உலகின் மிக சக்திவாய்ந்த விண்வெளி தொலைநோக்கியான 'ஜேம்ஸ் வெப்' பை நாசா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

டிச.29: அம்பை எழுதிய 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதைத் தொகுப்புக்கு 2021ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப் பட்டது. அதேபோல, 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்கிற சிறார் கதை தொகுப்புக்காக எழுத்தாளர் மு.முருகேஷுக்கு பால சாகித்ய விருது அறிவிக்கப்பட்டது.

டிச.30: தேசிய அளவில் புதிய கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான 'அடல்' தரவரிசைப் பட்டியலில் சென்னை ஐஐடி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடம் பிடித்தது.

டிச. 31: ஓமைக்ரான் வகை கரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் தமிழகத்தில் மீண்டும் புதிய கட்டுப் பாடுகளைத் தமிழக அரசு அமல்படுத்தியது.

டிச.31: துபாயில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கையை வீழ்த்தி இந்தியா எட்டாவது முறையாக சாம்பியனாகி சாதனை படைத்தது.

ஜன.1: புளோரோனா என்கிற புதிய கரோனா வைரஸ் வேற்றுருவம் இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

---

7. வைர விழா காணும் சென்னையின் கணிதப் பெருமை

இந்தியாவின் அறிவு வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் தமிழ் மண் தொன்றுதொட்டு பங்களித்துவந்திருக்கிறது.. பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து விடுதலை பெற்ற பின், கல்வி உள்ளிட்ட வளர்ச்சி சார்ந்த குறியீடுகளில் முன்னேறிய நாடாக உருமாற்றும் கனவைச் சுமந்த தலைவர்களின் ஆட்சி இந்தியாவில் அமைந்தது. நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. நவீன கல்வி – ஆய்வுக்கான கட்டமைப்பை உருவாக்குவதில் அரசும் லட்சிய வேட்கை கொண்ட தனிநபர்களும் பங்களித்தனர்.

அந்த வகையில் புகழ்பெற்ற இந்திய இயற்பியலாளர் அல்லாடி ராமகிருஷ்ணன் 1962இல் சென்னையில் கணித அறிவியல் நிறுவனம் (Institute Of Mathematical Sciences) என்னும் சுயாதீன ஆய்வு மையத்தைத் தொடங்கினார். அதன் இயக்குநராகவும் அவர் செயல்பட்டார்.

சென்னை தரமணியில் அமைந்துள்ள கணித அறிவியல் நிறுவனம் கோட்பாடுசார் அறிவியல் பிரிவுகளுக்கான தேசிய ஆய்வு மையமாகச் செயல்பட்டுவருகிறது. 1984இலிருந்து இந்திய அணு ஆற்றல் துறையின் நிதியளிப்பில் இயங்கிவருகிறது. 2022 ஜனவரி 3 அன்று 60 ஆண்டுகளை நிறைவுசெய்திருக்கும் கணித அறிவியல் நிறுவனத்தைப் பற்றி அதில் நீண்ட காலம் பணிபுரிந்த பேராசிரியர் ஆர்.ராமானுஜத்துடன் பேசியதிலிருந்து சில பகுதிகள்:

"கோட்பாடுசார் இயற்பியல் ஆய்வுக்கான மையமாக இது தொடங்கப்பட்டது. இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற எஸ்.சந்திரசேகர் இதைத் தொடங்கிவைத்தார். 5–6 ஆய்வாளர்களை உள்ளடக்கிய மையமாகத் தொடங்கப்பட்டு வளர்ந்துவந்தது. அணு ஆற்றல் துறையின் வருகைக்குப் பிறகு மேலும் பல மடங்கு வளர்ந்தது. கணிதம் (Mathematics), கோட்பாடுசார் இயற்பியல் (Theoretical Physics), கோட்பாடுசார் கணினி அறிவியல் (Theoretical Computer Science), கணக்கீட்டு உயிரியல் (Computational Biology) ஆகிய நான்கு துறைகளில் இங்கே ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் முனைவர் பட்டம், ஒருங்கிணைந்த முனைவர் பட்டம் (Integrated Phd) ஆகியவை வழங்கப்படுகின்றன.

முக்கிய ஆய்வுகள்

கணிதத்தில் எண் கோட்பாடு, வடிவியல் உள்ளிட்ட பிரிவுகளில் பல முக்கியமான ஆய்வுத் திட்டங்கள் உள்ளன. கோட்பாடுசார் இயற்பியல் பிரிவில் நியூட்ரினோ இயற்பியல், துகள் இயற்பியல் உள்ளிட்டவை சார்ந்து ஆய்வுகள் நடைபெறுகின்றன. கணக்கீட்டு உயிரியலில் உயிரியல் துறையில் நிகழும் பல புதிய கண்டுபிடிப்புகளின் கணக்கீட்டு அம்சங்கள் குறித்த ஆய்வுகள் நடைபெறுகின்றன. கோட்பாடுசார் கணினி அறிவியலில் அல்காரிதம்கள், கணக்கீட்டுக் கோட்பாடு, பாதுகாப்பு கோட்பாடு, கேம் கோட்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

அறிவியலைப் பரப்பும் பணி

நிறுவனத்துக்கு வெளியில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்களிடையே கணிதம், அறிவியலைப் பரப்புவதற்கும் அவர்களின் அறிவியல் புரிதலை மேம்படுத்துவதற்குமான பல்வேறு திட்டங்கள் (Outreach Programmes) ஆண்டு முழுவதும் கணித அறிவியல் நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்களின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் – ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் – ஆசிரியர்கள், பாலிடெக்னிக் கல்லூரி ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்குத் தனித்தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்த வகுப்புகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்களும் ஆசிரியர்களும் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையின்படி பதிவுசெய்துகொள்ள வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் தேசிய அறிவியல் நாளன்று (பிப்ரவரி 28) 'சயின்ஸ் அட் தி சபா' (Science at the Sabha) என்னும் பெயரில் அறிவியல் ஆய்வு குறித்து பொதுமக்களுக்கு விளக்குவதற்கான நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இப்படியாக ஆய்வு மட்டுமல்லாமல் மக்களிடையே கணிதத்தையும் அறிவியலையும் கொண்டு சேர்ப்பதற்கும் கணித அறிவியல் நிறுவனம் தொடர்ந்து பங்களித்துவருகிறது.

60ஆம் ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

60 ஆண்டுகள் நிறைவை ஒட்டி இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. பெரும்பாலான நிகழ்ச்சிகள் கணிதத்தின் முக்கியத்துவம், எப்போதைக்குமான பொருத்தப்பாடு, சமகால பயன்பாடுகள் ஆகியவை குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை. பருவநிலை மாற்றத்தின் தீய விளைவுகளிலிருந்து உலகை மீட்பதற்கான திட்டங்கள் அத்தியாவசியம் ஆகியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், பருவநிலை மாதிரியாக்கம், புவியைப் பாதுகாப்பதற்கான கணிதம் குறித்த நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் இந்த ஆய்வு மையத்தில் முன்பு பணியாற்றிய ஒரு ஆராய்ச்சியாளர் இமாலயத்தில் பனிச்சிகரங்கள் உருகுவது எப்படி என்பதைக் கணித மாதிரியாக்கம் மூலம் ஆய்வு செய்துவந்தார். பெருந்தொற்றுக் காலத்தில் தொற்றுப் பரவல், நோய்ப் பரவல் மாதிரியாக்கம் ஆகியவற்றைக் கணிதவியல் அடிப்படையில் புரிந்துகொண்டு

திட்டங்களை வகுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. இவை குறித்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன.

சர்வதேச கவனம்

கணித அறிவியல் நிறுவனத்தில் சர்வதேச தரத்திலான ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இங்கே ஆய்வு செய்தவர்களின் ஆய்வேடுகள் சர்வதேச ஆய்விதழ்களில் வெளியாகியுள்ளன. கணித அறிவியல் நிறுவனத்தில் கோட்பாடுசார் கணினி அறிவியல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் சாகேத் சௌரப், கணித அறிவியலுக்கான 2021ஆம் ஆண்டின் மதிப்புமிக்க 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதைப்' பெற்றார். கணித அறிவியல் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ஆர்.பாலசுப்ரமணியன் பிரெஞ்சு அரசால் வழங்கப்படும் 'ஷெவாலியே' விருதைப் பெற்றுள்ளார்.

---

8. புளூ, கரோனா வைரஸ் கலவையான புளூரோனா காய்ச்சல் இஸ்ரேலில் கண்டுபிடிப்பு

இஸ்ரேல் நாட்டில் புளூ, கரோனா வைரஸ் கலவையான புளூரோனா காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த 2019 இறுதியில் கரோனா வைரஸ் பரவுவது கண்டறியப்பட்டது. அங்கிருந்து உலகம் முழுவதும் வைரஸ் வியாபித்து பரவியது. தற்போது கரோனா வைரஸ் மரபணு மாறி புதிய வைரஸ்கள் உருவாகி வருகின்றன.

இந்த வரிசையில் ஒமைக்ரான் என்ற புதிய வகை கரோனா வைரஸ் பல்வேறு நாடுகளில் அதிவேகமாகப் பரவி வருகிறது. கரோனா வைரஸின் டெல்டாவும் ஒமைக்ரானும் கலந்து டெல்மைக்ரான் என்ற புதிய வைரஸ் உருவாகியிருப்பதாக விஞ்ஞானிகள் அண்மையில் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த சூழலில் இஸ்ரேலின் பேட்டா டேக்வா நகரில் உள்ளமருத்துவமனையில் கர்ப்பிணி ஒருவர் அண்மையில் கரோனாஅறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டார். அவரது சளி மாதிரியை பரிசோதித்தபோது, ஒரே நேரத்தில் புளூ காய்ச்சல், கரோனாகாய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப் பது தெரியவந்தது. புதிய வகை காய்ச்சலுக்கு இஸ்ரேல் மருத்துவர்கள் புளூரோனா என்று பெயரிட்டுள்ளனர்.

இஸ்ரேலில் கர்ப்பிணிகளிடையே புளூ காய்ச்சல் பரவுவது அதிகரித்து வருகிறது. அவர்களில் பலர் புளூரோனா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். எனவே புளூ, கரோனா வைரஸ் பரவலை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலில் பெரும்பாலானோருக்கு 3-ம் தவணை கரோனாவைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தற்போது அந்தநாட்டில் 5-வது கரோனா அலைஏற்பட்டிருப்பதால் 4-ம் தவணைதடுப்பூசி செலுத்துவதில் தீவிரம் காட்டப்படுகிறது.

இஸ்ரேல் விஞ்ஞானிகள் கூறும்போது, "புளூரோனாகாய்ச்சலால் பாதிக்கப்படுவோருக்கு மூச்சுத் திணறல், உடல் உறுப்புகள் செயலிழப்பு, மாரடைப்பு, பக்கவாதம் உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே வழக்கமான கரோனா தடுப்பு நடைமுறைகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்" என்றனர்.

---

9. குழந்தைகளுக்கு எதிரான இணையதளவழி குற்றங்கள் 2020-ல் 261 சதவீதம் அதிகரிப்பு

நாடு முழுவதும் கடந்த 2020-ம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் 261 சதவீதம் அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் பதிவாகும் பல்வேறு குற்றங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை தேசிய குற்ற ஆவண அமைப்பு (என்சிஆர்பி) ஆண்டுதோறும் வெளியிடுகிறது. அந்த வகையில் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த 2020-ம் ஆண்டில் பதிவான குழந்தைகளுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் தொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி, நாடு முழுவதும் குழந்தைகளுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் 261 சதவீதம் அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக 116 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் ஒருவர் மட்டும்குற்றவாளி என அறிவிக்கப்பட் டுள்ளார்.

மகாராஷ்டிராவில் அதிகபட்சமாக 207 வழக்குகள் பதிவாகி உள்ளன. இந்த மாநிலத்தில் 2019-ம் ஆண்டில் பதிவான 70 வழக்குகளுடன் ஒப்பிடும்போது இது 196 சதவீதம் அதிகம் ஆகும். 2019-ல் முதலிடத்தில் இருந்த உத்தரபிரதேசம் 2020-ல் 197 வழக்குகளுடன் 2-ம் இடத்தில் உள்ளது. கர்நாடகா (144), கேரளா (126), ஒடிசா (71), ஆந்திரா (52) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இதுகுறித்து இத்துறை சார்ந்தநிபுணர்கள் கூறும்போது, "ஊரடங்கு காலத்தில் இணைய தளங்களை குழந்தைகள் பார்ப்பது அதிகரித்துள்ளது. அத்துடன், குழந்தைகள் தொடர்பான ஆபாச வீடியோக்களும் அதிக அளவில் உருவாகி உள்ளன.

இதில் பெரும்பாலான வீடியோக்கள் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு தெரிந்த நபர்களே பதிவு செய்துள்ளனர்" என்றனர்.

---

1. KSLV–II நூரி ஏவுகலமானது பின்வரும் எந்த நாட்டின் முதல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விண்வெளி ஏவுகலம் ஆகும்?

அ) தென் கொரியா ☑



ஆ) இஸ்ரேல்

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) வங்காளதேசம்

✓ தென் கொரியாவின் முதல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விண்வெளி ஏவுகலமான KSLV–II நூரி ஏவுகலம் தளர்வான ஹீலியம் தொட்டியின் காரணமாக தோல்வி அடைந்தது. இந்த ஏவுகலத்தின் மூன்று நிலைகளும் செயல்பட்டு, 700 கிலோமீ உயரம் சென்று, 1.5 டன் தாங்கு சுமையை வெற்றிகரமாக பிரித்தது.

✓ மூன்றாம் நிலை எந்திரம் திட்டமிடப்பட்டதை விட 46 விநாடிகள் முன்னதாக எரிவதை நிறுத்தியதால் இந்தத் திட்டம் தோல்வியடைந்தது.

---

2. 'சிறந்த சுகாதார புகையிலா' பிரச்சாரத்தைத்தொடங்கிய நாடு எது?

அ) ஆஸ்திரேலியா



ஆ) UK ☑

இ) இந்தியா

ஈ) பிரான்ஸ்

✓ UK அரசாங்கம் 'Better Health Smoke–Free' என்ற பெயரில் ஒரு புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. இது வயது வந்தோரிடையே புகைப்பிடிப்பதால் ஏற்படும் தாக்கத்தை எடுத்துக்கூறுகிறது. புகைப்பிடிப்பவர்களை புகைபிடிப்ப –தை விட்டுவிடுமாறு இப்பிரச்சாரம் வலியுறுத்திகிறது.

✓ இந்தப் பிரச்சாரத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, புகைபிடிக்கும் பெற்றோரை உடைய 4.9 சதவீத பதின்ம வயதினரும் அந்தப் பழக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். 2030ஆம் ஆண்டுக்குள் மக்கள் புகையிலிருந்து விடுபட நியூசிலாந்து இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

3. 'நிதி நிலைத்தன்மை அறிக்கை' என்பது எந்த நிறுவன –த்தால் வெளியிடப்பட்ட முதன்மை அறிக்கையாகும்?

அ) NITI ஆயோக்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ) உலக வங்கி

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ 'நிதி நிலைத்தன்மை அறிக்கை' என்பது 'இந்திய ரிசர்வ் வங்கி'யால் அரையாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படும் ஓர் அறிக்கையாகும். இந்த அறிக்கையின் அண்மைய பதிப்பை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, இந்தியாவில் சில்லறை வர்த்தகம் தலைமையிலான கடன் வளர்ச்சி மாதிரியானது நுகர் –வோர் நிதி இலாகாவில் இயல்புநிலை அதிகரிப்பு மற்றும் புதிய கடன் பிரிவில் மந்தநிலை ஆகிய 2 காரணிகளால் சிக்கல்களை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

---

4. சபா அல்–கலித் அல்–சபா, எந்த நாட்டின் பிரதமராவார்?

அ) பஹ்ரைன்



ஆ) குவைத் ☑

இ) ஓமன்

ஈ) சவூதி அரேபியா

✓ சபா அல்–கலித் அல்–சபா குவைத்தின் பிரதமராகவுள்ளார். குவைத் சமீபத்தில் ஒரு புதிய நிதியமைச்சர் மற்றும் மூன்று எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஒரு புதிய அமைச்சரவையை அமைத்துள்ளது. இந்தப் புதிய அமைச்சரவையில் 1 பெண் அமைச்சர் மட்டுமே உள்ளார். இதில் மூன்று எதிர்க்கட்சி எம் பி'க்களும், ஒரு அரசு சார்பு சட்டமியற்றுநரும் அடங்குவர்.

---

5. BRICS புதிய வளர்ச்சி வங்கியின் புதிய உறுப்பினராக இணையவுள்ள நாடு எது?

அ) இத்தாலி



ஆ) எகிப்து ☑

இ) இஸ்ரேல்

ஈ) வங்காளதேசம்

✓ BRICS புதிய வளர்ச்சி வங்கி (NDB) எகிப்தை தனது புதிய உறுப்பினராக சேர்க்கப்போவதாக அறிவித்தது. NDB ஆனது BRICS நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்க ஆகிய நாடுகளால் 2015ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. வங்காளதேசம், ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் உருகுவே ஆகிய நாடுகளுக்குப் பிறகு NDB'இல் இணைக்கப்பட்ட 4ஆவது புதிய உறுப்பினர் எகிப்து ஆகும். மார்கோஸ் டிராய்ஜோ, புதிய வளர்ச்சி வங்கியின் தலைவராக உள்ளார்.

---

6. சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தை (RDSS) செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) எரிசக்தி அமைச்சகம் ☑

Ministry of POWER GOVERNMENT OF INDIA

ஆ) அணுசக்தி அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) நிலக்கரி அமைச்சகம்

✓ நிதி உதவி வழங்குவதன்மூலம் DISCOM'களின் செயல் திறனை மேம்படுத்த இந்திய அரசாங்கம் சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டு பொதுத்துறை நிறுவனங்கள்–REC மற்றும் PFC ஆகியவை இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான மைய முகமைகளாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

✓ அஸ்ஸாம் மற்றும் மேகாலயா ஆகியவை அண்மையில் சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்திற்கு (RDSS) முன்னோடிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

---

7. "ஏர்கன் சரண்டர் அபியான்" செயல்படுத்தப்படுகிற மாநிலம் / யூடி எது?

அ) சத்தீஸ்கர் **ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) அஸ்ஸாம் ஈ) மேற்கு வங்காளம்



✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் "ஏர்கன் சரண்டர் அபியான்" செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், பறவைகளை கண்மூடித்தனமாக வேட்டையாடுவதைத் தடுக்க மக்கள் தங்கள் ஏர்கன்களை தானாக முன்வந்து கொடுக்கவேண்டும். "ஏர்கன் சரண்டர் அபியான்" குறித்து பிரதமர் மோடி சமீபத்தில் பேசினார்.

---

8. HDFC வங்கி பின்வரும் எந்த வங்கியுடன் இணைந்து தனது வங்கிச் சேவைகளை புறநகர் & ஊரகங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது?

அ) இந்திய அஞ்சல் கொடுப்பனவு வங்கி (IPPB) ☑

ஆ) கேரளா கிராமின் வங்கி

இ) தமிழ்நாடு கிராம வங்கி

ஈ) சௌத் இந்தியன் வங்கி

✓ HDFC வங்கி, இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கியுடன் (IPPB) இணைந்து தனது வங்கிச்சேவைகளை புறநகர் & ஊரகங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது. IPPB'இன் 4.7 கோடி வாடிக்கையாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதன்மூலம், HDFC & IPPB வங்கிக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. IPPB வாடிக்கையாளர்களில் 90% பேர் ஊரகங்களில் வசிக்கின்றனர்.

---

9. UNSC'இன் பயங்கரவாத எதிர்ப்புக்குழுவின் தலைமை –யாக இந்தியா செயல்படவுள்ள ஆண்டு எது?

அ) 2022 ☑

ஆ) 2023

இ) 2024

ஈ) 2025

✓ நடப்பு 2022ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவைக்கு (UNSC) இந்தியா தலைமைதாங்கவுள்ளது.

✓ இதற்கு முன்பு கடந்த 2012'இல் இந்தியா இந்தக் குழுவின் தலைவராக இருந்தது. இந்தப்பதவிக்காலத்தில், தலிபான் தடைகள் குழுவிற்கும் இந்தியா தலைமை வகிக்கிறது. 15 நாடுகளைக் கொண்ட இவ்வவைக்கு இந்தியா இரண்டு ஆண்டுகளுக்குத் தலைமை வகிக்கும்.

---

10. மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் அண்மைய வழிகாட்டுதல்களுடன் தொடர்புடைய 'FFV–SHEV'இன் விரிவாக்கம் என்ன?

அ) Flex Fibre Strong Hybrid Electric Vehicles

ஆ) Flex Fuel Strong Hybrid Electric Vehicles ☑

இ) Flex Fibre Substitute Hybrid Electric Vehicles

ஈ) Flex Fuel Strong Hybrid Electric Vehicles

✓ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் Flex Fuel Vehicles (FFV) மற்றும் Flex Fuel Strong Hybrid Electric Vehicles (FFV–SHEV) தொடர்பான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் BS–VI விதிமுறைகளுக்கு உட்பட்ட வாகனங்களை 6 மாத காலத்திற்குள் தயாரிக்க அறிவுறுத் –தப்படுகிறார்கள்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சிறுதானியங்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

நம் முன்னோர்களால் ஆதி காலத்திலிருந்தே உண்ணப்பட்டுவந்த ஆரோக்கியமான உணவில் முதல் இடத்தைப் பிடிப்பவை சிறுதானிய வகைகளான குதிரைவாலி, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, கம்பு, பனிவரகு, சோளம் போன்றவைதான். அதிக சத்துக்களுடன் நிறைய மருத்துவ குணங்களையும் உள்ளடக்கிய சிறுதானியங்கள் ஏழைகளின் உணவாக மட்டுமே பார்க்கப்பட்ட நிலை மாறி, சிறுதானிய உணவுப் பழக்கம் வீடுகளில் தொடங்கி உணவகங்கள் வரை பரவத் தொடங்கியுள்ளது.

எனவே, இந்தியாவின் பாரம்பரியமிக்க சிறுதானிய வகைகளை உலக மக்களிடையே பிரபலப்படுத்தும் விதமாக இந்தியாவுடன் வங்கதேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா, செனகல் ஆகிய நாடுகள் இணைந்து எடுத்த முன்னெடுப்பை 70 நாடுகள் வழிமொழிய 193 ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்ததால், வருகிற 2023–ம் ஆண்டை சிறுதானியங்களுக்கான சர்வதேச ஆண்டாக ஐ.நா. அறிவித்திருக்கிறது.

மருந்தாகும் சிறுதானிய உணவுகள்

உடலுக்கு நல்லது என்று பல உணவு வகைகளைப் பயன்படுத்தும் நாம், சிறுதானிய உணவுகளை உண்பதைக் காலப்போக்கில் மறந்துவிட்டோம். ஆரோக்கியத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் சிறுதானியங்களில் உள்ளன. சிறுதானியங்களில் நார்ச் சத்து, கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதால் நாம் உண்ணும்போது நம் உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானியங்களில் சத்துக்களுடன் பல மருத்துவக் குணம் கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பு வேதிப்பொருட்களும் ஆக்சிஜனேற்ற எதிர்ப்பொருட்களும் உள்ளன. சிறுதானியங்களில் உள்ள கிளைசிமிக் இன்டெக்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது.

இதிலுள்ள மாவுச்சத்து மெதுவாகச் செரிமானமாவதால் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்த உணவு ஆகும். சிறுதானியங்களில் உள்ள லிக்னின் என்ற பொருள் மருத்துவக் குணம் உடையது. இது குடல் சுத்தமாவதற்கு மிகவும் உதவுகிறது. மாதவிடாய் பிரச்சினை, இதய நோய், ரத்த அழுத்தம் போன்றவற்றைச் சீராக்கும் வல்லமை சிறுதானிய உணவுக்கு உண்டு. குழந்தைகளுக்கு ஆஸ்துமா, தும்மல் போன்ற பிரச்சினைகள் வராமல் சிறுதானியங்கள் தடுக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள பாஸ்பரஸ், மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்கள் உடல் செல்களை உறுதிப்படுத்தி எலும்புகளுக்கு உறுதி அளிக்கின்றன.

சாகுபடிக்கேற்ற சிறப்பியல்புகள்

சிறுதானிய சாகுபடியால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவை நம்முடைய சூழலுக்கு எவ்வாறு ஏற்றதாக

உள்ளன என்பது பற்றியும் பெரும் பகுதியினருக்குத் தெரிவதில்லை. சிறுதானியங்கள் எளிதாக அனைவரும் சாகுபடி செய்ய ஏதுவான பல சிறப்பியல்புகளைக் கொண்டவை. நெல் விளைவதற்கு 120–180 நாட்கள் மற்றும் அதிக அளவு தண்ணீர் (1,000 – 4,500 மி.மீ) தேவைப்படும். ஆனால், சிறுதானியங்களுக்கு குறைவான அளவு தண்ணீர் (250–400 மி.மீ) இருந்தாலே போதுமானது.

பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் அதாவது 65–90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். மிதமான தட்பவெப்ப நிலையிலும் நன்றாக வளரக்கூடியவை, மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம், மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்றவை, வறட்சியைத் தாங்கி வளரக்கூடியவை, சிறுதானியங்கள் சாகுபடியில் பூச்சி, நோய்த் தாக்குதல் மிகக் குறைவு. மற்ற பயிர்களுக்குக் கொடுப்பதைப் போல அதிகமான ஊட்டத்தை சிறுதானியப் பயிர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லை.

குறைவான அளவுக்குக் கொடுத்தாலே போதுமானது. நெல் மாதிரியான பகலில் 'பூக்கும்' பயிர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறும்போது, அதிகமான வெப்பம் இருந்தால் சரியான முறையில் விதைகள் உற்பத்தியாகாது. ஆனால், சிறுதானியப் பயிர்கள் அனைத்தும் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்குள் மகரந்தச் சேர்க்கையை முடித்துக்கொள்வதால், வெப்பநிலைப் பிரச்சினைகள் இல்லாமல் முழுமையான அளவில் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று அதிக மகசூல் கிடைக்கும். புவி வெப்பமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தில் மிகவும் குறைவு. சிறுதானியச் சாகுபடியில் குறைந்த அளவு வேலையில், குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் சாகுபடி பெரும் பங்கு வகிக்கிறது.

சிறுதானியப் பயிர்களில் ஒன்றான சாமையில் மல்லியச்சாமை, பெருஞ்சாமை, வெள்ளச்சாமை, கட்டவெட்டிச்சாமை, திருகுலாச்சாமை, சடஞ்சாமை, கருஞ்சாமை, செஞ்சாமை, சிட்டஞ்சாமை, பில்லுசாமை போன்ற நாட்டு ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தினையில் கெண்டித்தினை, செந்தினை, மரத்தினை, பாலாந்தினை, வெள்ளைதினை, பைந்தினை, சிறுதினை, நாட்டுத்தினை, மாப்புத்தினை போன்ற நாட்டு ரகங்களும். வரகுப் பயிரில் திரிவரகு, புறவரகு, பெருவரகு, உடும்புக்காலி வரகு, செங்காலி வரகு, சிட்டுக்கீச்சான் வரகு போன்ற நாட்டு ரகங்களும்... கேழ்வரகுப் பயிரில் சாட்டைக் கேழ்வரகு, காரக் கேழ்வரகு, கண்டாங்கிக் கேழ்வரகு, பெருங்கேழ்வரகு, பிச்சாகாடிக் கேழ்வரகு போன்ற ரகங்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

சோளத்தில் செஞ்சோளம், கருஞ்சோளம், உப்பஞ்சோளம், கருப்பு ரட்டு சோளம், சிகப்பு ரட்டு சோளம், கோவில்பட்டி மொட்ட வெள்ளைச் சோளம், அரியலூர் நெட்ட மஞ்ச சோளம் போன்ற நாட்டு ரகங்கள் காணப்படுகின்றன. சிறுதானியத்தில் நாட்டு ரகங்களுடன், மகசூல் அதிகம் தரக்கூடிய பல பல்கலைக்கழக ரகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. கேழ்வரகில் பையூர் 2, கோ 14, கோ 15 போன்ற ரகங்கள், தினையில் கோ 7 என்பவற்றில் அதிகக் கிளைப்பு வரும், கதிரும் நீளமாக இருக்கும். பனிவரகு என்பது அற்புதமான ஒரு சிறுதானியம், பனிக்காலத்தில் எந்தப் பாசனமும் இல்லாமலேயே பனிப்பொழிவினால் கிடைக்கும் நீரிலேயே வளர்ந்துவிடக் கூடியது.

சிறுதானியப் பயிர்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் பல புதிய ரகங்கள் வெளியிடவும் திருவண்ணாமலை மாவட்டம் அத்தியந்தலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2013 முதல் சிறுதானிய மகத்துவ மையத்தைத் தொடங்கி கேழ்வரகு, தினை, சாமை, பனிவரகு போன்ற சிறுதானியப் பயிர்களில் ATL 1 என்ற ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் பல ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கரோனா பெருந்தொற்று பரவத் தொடங்கியதிலிருந்து மக்களின் உணவு முறையில் ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் நிறைந்த உணவு வகைகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இந்நிலையில், இவ்வளவு சிறப்பு மிக்க நம் நிலத்தின் பயிர்களான சிறுதானியச் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, கவனம் செலுத்துவதன் மூலம் உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி, விவசாய நிலங்களின் சூழலியல் சமநிலையையும் பாதுகாத்து சிறுதானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

---

2. தவறும் வானிலை முன்கணிப்புகள்: தீர்வுதான் என்ன?

ஒரு பேருந்து நிறுத்தத்தில் அனைவரும் குடைபிடித்து நிற்கிறார்கள். ஒருவர் மட்டும் குடையில்லாமல் மழையில் நனைகிறார். பக்கத்தில் இருப்பவரிடம் குடை இல்லாதவர் எரிச்சலுடன் இப்படிக் கேட்கிறார், "நான் வானிலைத் துறையில் வேலை பார்க்கிறேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று. மழை பெய்யும் என்பதை ஊரே அறிந்திருக்கும்போது, வானிலைத் துறை முன்னறிவிப்புகள் மட்டும் ஏன் அதை கணிக்கத் தவறுகின்றன என்கிற கேள்வியை 2007–ல் ஆர்.கே.லக்ஷ்மண் வரைந்த ஒரு கேலிச்சித்திரம் நறுக்கென உணர்த்திவிடுகிறது. 14 ஆண்டுகள் கடந்தும் இந்திய வானிலை ஆய்வுத் துறை அதேபோன்ற விமர்சனங்களை எதிர்கொண்டுதான் வருகிறது.

2021 நவம்பர் 7, அதிகாலையில் பெய்த 21 செ.மீ. மழை, டிசம்பர் மாதம் 30–ல் ஒருசில மணி நேரத்தில் 15 செ.மீ–க்கு மேல் பெய்த மழையைப் பற்றி சென்னை வானிலை ஆய்வு மையம் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருக்கவில்லை. இந்தப் பெருமழையால் சென்னை வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கிவிட்ட பிறகு, மழை தீவிரமாக இருக்கும் என்று அந்த மையம் எச்சரிக்கை விடுத்தது மக்களிடையே ஏமாற்றத்தையும் அயர்ச்சியையும் ஏற்படுத்தியது. டிசம்பர் 30 திடீர் மழை குறித்து எச்சரிக்கத் தவறியதாகக் குற்றம்சாட்டி, சென்னை வானிலை ஆய்வு மைய முன்கணிப்பு வசதிகளை

மேம்படுத்தும்படி உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியிருக்கிறார்.

நவம்பர் 6 அன்று ஒரே இரவில் பெய்த 21 செ.மீ. மழை 2015-க்குப் பிறகு பெய்த மிகப் பெரிய மழை. அதே நேரம், மண்டல வானிலை ஆய்வு மையத்தின் 3 ரேடார்களில் சென்னை துறைமுகத்தில் உள்ள ரேடாரும் காரைக்காலில் உள்ள ரேடாரும் அதற்கு முன்னதாகவே பழுதுபட்டிருந்தன. வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன் இந்த ரேடார்களில் பழுது நீக்கப்பட்டிருக்கவில்லை. மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் இது குறித்துப் பிரச்சினையை எழுப்பிய பிறகுதான் அவை பழுதாகியிருந்த தகவலே பொது வெளிச்சத்துக்கு வந்தது. அந்தக் காலத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ரேடார் தரும் தகவல்களைக் கொண்டே சென்னை வானிலை ஆய்வு மையம் முன்கணிப்பை வெளியிட்டுவந்தது.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஒரு வானிலை பலூனில் ரேடியோசோண்டே எனப்படும் கருவி வைக்கப்பட்டு, சென்னை, காரைக்காலில் பறக்கவிட்டு, வானிலை ஆய்வுத் துறை ஆராயும். இந்தக் கருவியே வளிமண்டல மேலடுக்கு சுழற்சி குறித்த தகவலைத் தரும். இந்தப் பரிசோதனை பல மாதங்களாகச் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அது மட்டுமல்லாமல், குறிப்பிட்ட பகுதியில்–ஊரில் எவ்வளவு மழை பொழியும் என்பதையும் குறுகிய காலத்தில் கனமழை பெய்யும் Mesoscale நிகழ்வுகளையும் முன்கணிப்பது சிரமம் என்று வானிலை ஆய்வுத் துறை கூறுகிறது.

அறிவியல் அடிப்படை

முந்தைய தரவுகள், கணிப்புகள், கணினி மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே மழை, புயல், வெள்ளம் குறித்த எச்சரிக்கைகளை இந்திய வானிலை ஆய்வுத் துறை வெளியிட்டுவருகிறது. வானிலைக் கணிப்பில் குறுகிய கால முன்கணிப்பு – குறிப்பிட்ட நிமிடத்திலிருந்து அடுத்த ஆறு மணி நேரத்துக்கு வழங்கப்படும் இந்தக் கணிப்பில் காற்றின் வேகம், காற்று வீசும் திசை ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

டாப்ளர் வானிலை ரேடார் குறுகிய கால முன்கணிப்புக்குப் பயன்படுகிறது. அதேநேரம் நீண்ட கால முன்கணிப்பு என்பது அதிக காலத்துக்கானது. செயற்கைக்கோள் படங்கள் இரண்டு வகை முன்கணிப்புக்கும் பயன்பட்டாலும் புயல் போன்றவற்றின் நகர்வைத் தீர்மானிக்கவே பெரிதும் பயன்படுகின்றன. அதே நேரம், செயற்கைக்கோள் படங்கள் தரும் தகவல்களைக் கணினி மாதிரியில் உள்ளிட்டு, குறுகிய கால முன்கணிப்பைத் துல்லியமாகப் பெறுவது கடினம்.

வானிலை முன்கணிப்புக்கு 'குளோபல் ஃபோர்காஸ்ட் சிஸ்டம்ஸ்' (GFS) எனப்படும் ஒரே ஒரு மாதிரியை மட்டுமே இந்திய வானிலை ஆய்வுத் துறை பின்பற்றுகிறது. இப்படி ஒரு மாதிரியை மட்டும் பின்பற்றுவது தவறான முன்கணிப்புக்கு வழிவகுக்கும் என்று தனியார் வானிலை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். மண்டல அளவிலான வானிலை முன்கணிப்பு சார்ந்து ஜி.எஃப்.எஸ். மாதிரியில் பிரச்சினை இருப்பதாக, புவி அறிவியல் அமைச்சகச் செயலாளர் ராஜீவன் தெரிவிக்கிறார். 35 ஆண்டுகளாகத் தென்மேற்குப் பருவமழை குறித்து ஆராய்ந்துவருபவர் இவர்.

முன்னெச்சரிக்கைகளில் கவனம்

புத்தாயிரத்தின் தொடக்க ஆண்டுகளில் சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் பொறுப்புக்கு எஸ்.ஆர்.ரமணன் நியமிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் தொலைக்காட்சி செய்தி அலைவரிசைகளும் பெருகத் தொடங்கியிருந்தன. வானிலை முன்னெச்சரிக்கையைத் தமிழில் சுருக்கமாகவும் சுவாரசியமாகவும் அவர் கூறிய முறை சாதாரண மக்களையும் கவர்ந்தது. வானிலை முன்னெச்சரிக்கைகள் குறித்து மக்கள் பெரிதாகக் கவனம் கொள்ளாதிருந்த நிலையை அது சற்று மாற்றியது.

2015 சென்னை பெருவெள்ளத்துக்குப் பிறகு சென்னையில் தனியார் வானிலைப் பதிவர்கள் பெருகினார்கள். 'தமிழ்நாடு வெதர்மேன்' பிரதீப் ஜான், 'சென்னை ரெயின்ஸ்' ஸ்ரீகாந்த் உள்ளிட்ட பலரும் எந்த நேர இடைவெளியில் பெருமழை பெய்யும் – குறிப்பிட்ட எந்தப் பகுதியில் புயல் கரையைக் கடக்கும், எப்போது கூடுதல் முன்னெச்சரிக்கை தேவை என்கிற தகவல்களை வழங்கிவருகிறார்கள். சர்வதேச வானிலை மாதிரிகள் இணையத்தில் அளிக்கும் தரவுகளை ஆராய்ந்தே இந்த எச்சரிக்கைகளை அவர்களால் விடுக்க முடிகிறது.

அரசு நிறுவனத்தைப் போன்ற தீர்மானிக்கப்பட்ட பொறுப்புகள் அவர்களுக்கு இல்லையென்றாலும்கூட, சமூக ஊடகங்களில் தங்களைப் பின்தொடர்பவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் அவர்கள் தொடர்ச்சியாக இந்தத் தகவல்களைப் பதிவிட்டுவருகிறார்கள். இப்படித் தனியார் ஆய்வாளர்களே கூடுதல் தகவல்களைத் தர முடியும்போது, அரசு நிறுவனம் இன்னமும் பொத்தாம் பொதுவாக எச்சரிக்கை விடுத்துக்கொண்டிருப்பதால் என்ன பயன்?

வானிலை சார்ந்து ஒரு தனிநபர் அதிகபட்சமாக என்ன தெரிந்துகொள்ள விரும்புவார். குறிப்பிட்ட நிகழ்வு எப்போது தீவிரமாக இருக்கும்? அது தன்னை நேரடியாகப் பாதிக்குமா? பாதிப்பிலிருந்து எப்படித் தற்காத்துக்கொள்வது? –இவைதான் ஒருவருடைய எதிர்பார்ப்புகளாக இருக்கும். இது சார்ந்த தகவல்களை வானிலை ஆய்வு மையம் வெளியிடும்போதே மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.

வானிலை ஆய்வு மையத்தின் முன்னெச்சரிக்கை 100% சரியாக இருக்க வேண்டுமென யாரும் எதிர்பார்ப்பதில்லை. குறிப்பிட்ட நிகழ்வு சார்ந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையால், தனக்குப் பயன் கிடைத்ததா என்றே பார்க்கிறார்கள். ஒருவருடைய கைபேசியிலேயே ஒரு நாளின் குறிப்பிட்ட நேரத்தின் வெப்பநிலை, மழையளவு, காற்று வீசும் வேகம் உள்ளிட்டவற்றைத் தெரிந்துகொள்ளும் நவீனச் செயலிகள் உள்ள நிலையில், வானிலை ஆய்வுத் துறை இன்னமும் பழைய பாணியிலான முன்னெச்சரிக்கைகளை விடுத்துக்கொண்டிருப்பது எப்படிப் பெருமளவு மக்களின் கவனத்தைப் பெறும்?

பருவநிலை மாற்றம்

இந்திய வானிலை ஆய்வுத் துறை கணிதவழி வானிலைக் கணிப்பு மாதிரிகளையே இன்னும் பயன்படுத்திவருகிறது. பிரிட்டன் வானிலை ஆய்வுத் துறையோ முன்கணிப்புக்கு சூப்பர் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துகிறது. செயற்கைக்கோள் தரும் தரவுகளைக் காட்சிபூர்வமாகச் சித்தரிக்க சூப்பர் கம்ப்யூட்டர்கள் உதவுகின்றன. இந்தச் செயல்முறை மூலம் ஒருசில விநாடிகளில் திட்டவட்டமான வானிலை முன்கணிப்பைத் தர முடிகிறது.

பருவநிலை மாற்றம் குறித்து உலக வானிலை அமைப்பு, ஐபிசிசி உள்ளிட்டவை தொடர்ந்து எச்சரிக்கைகளை விடுத்துவருகின்றன. இந்திய வானிலை ஆய்வுத் துறை, பருவநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளை ஆராய்ச்சிக்கான தரவு சேகரிப்பு சார்ந்து மட்டுமே அணுகிவருவதுபோலத் தெரிகிறது. டிசம்பர் 30-ம் தேதி சென்னையில் சில மணி நேரத்தில் கொட்டித் தீர்த்த மழைக்கு பருவநிலை மாற்றத்தின் ஓர் அம்சமான 'லா நீன்யா விளைவு' காரணமாக இருக்கலாம் என மேரிலாண்ட் பல்கலைக்கழக வளிமண்டலக்-கடலியல் துறைப் பேராசிரியர் ரகு முருட்டுகுட்டே தெரிவிக்கிறார்.

எனவே, இயற்கைச் சீற்றங்கள் சார்ந்த நடைமுறை முன்னெச்சரிக்கைகளை விடுப்பதற்கு உரிய வகையில் பருவநிலை மாற்றம் குறித்த ஆராய்ச்சிகளை மாற்றியமைத்து வானிலை ஆய்வுத் துறை பயன்படுத்த வேண்டும். அப்படித் தொடர்பு ஏற்படுத்தப்படாவிட்டால், எதிர்காலத்தில் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கைகள் உரிய பலனைத் தராத சம்பிரதாய அறிவிப்புகளாகிவிடும் ஆபத்து இருக்கிறது.

---

3. ஓஎன்ஜிசியின் முதல் பெண் தலைவர் அல்கா மிட்டல்

ஓஎன்ஜிசி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக அல்கா மிட்டல் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். ஓ.என்.ஜி.சி நிறுவனத்தின் தலைமை பொறுப்பேற்கும் முதல் பெண்மணி ஆவார்.

ஓஎன்ஜிசியின் கடைசி முழுநேர இயக்குநரான சஷி ஷங்கர் மார்ச் 31, 2021 அன்று பதவியில் இருந்து ஓய்வு பெற்றார், அவருக்குப் பதிலாக யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதன் பிறகு இடைக்கால தலைவராக சுபாஷ் குமார் பதவி வகித்து வந்தார்.

இந்தநிலையில் நாட்டின் முன்னணி பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான ஓஎன்ஜிசி நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குனரான அல்கா மிட்டல், நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக கூடுதல் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் நடவடிக்கைக்கு அமைச்சரவையின் நியமனக் குழு வழங்கியுள்ளது.

ஜனவரி 1, 2022 முதல் ஆறு மாத காலத்திற்கு, அல்லது பதவிக்கு வழக்கமான பதவியில் இருப்பவரை நியமிக்கும் வரை, அல்லது மறு உத்தரவு வரும் வரை, எது விரைவில் முடியுமோ அதுவரை அவர் அந்த பதவியில் நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் தலைவராக பொறுப்பேற்கும் முதல் பெண்மணி எனும் சிறப்பை பெறுகிறார்.

அல்கா மிட்டல் யார்?

அல்கா மிட்டல் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் மனிதவளத் துறை இயக்குனராக 2018- ம் ஆண்டு டிசம்பரில் பொறுப்பேற்றார். இதன் மூலம், ஓஎன்ஜிசி நிறுவன இயக்குனர் குழுவில் முழு நேர இயக்குனராக பொறுப்பு வகிக்கும் முதல் பெண் எனும் சிறப்பையும் அவர் பெற்றார்.

பொருளாதார பாடத்தில் முதுகலை பட்டம் பெற்றவரான அல்கா மிட்டல் எம்பிஏ பெற்ற பிறகு 1985-ல் ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பட்டதாரி பயிற்சியாளராக சேர்ந்தார்.

தலைமை திறன் மேம்பாட்டு துறையின் தலைவராகவும் இருந்துள்ளார். அப்போது 5,000-க்கும் மேற்பட்ட பயிறசியாளர்களை பயன்படுத்தி, தேசிய பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தினையும் சிறப்பாக செயல்படுத்தியுள்ளார். இதுமட்டுமின்றி இந்தியா முழுவதும் பல திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார்.

---

4. பிரதான வங்கிகள் பட்டியலில் எஸ்பிஐ, ஐசிஐசிஐ, HDFC: ரிசர்வ் வங்கி

தோல்வியடையாத மிகப்பெரிய நிறுவனங்கள் பட்டியலில் பொதுத் துறையைச் சோ'ந்த பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ), ஐசிஐசிஐ வங்கி, ஹெச்டிஎஃப்சி வங்கி ஆகியவை இடம்பெற்றுள்ளதாக ரிசா'வ் வங்கி செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரிசா'வ் வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: உள்நாட்டில் அமைப்பு ரீதியில் பிரதானமாக உள்ள வங்கிகளின் பட்டியலில் (டி-எஸ்ஐபி) எஸ்பிஐ, ஐசிஐசிஐ, ஹெச்டிஎஃப்சி ஆகிய வங்கிகள் இடம்பெற்றிருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. கடந்த 2020-ஆம் ஆண்டின் பட்டியலிலும் இதே வங்கிகள்தான் பிரதான வங்கிகள் பட்டியலில் இடம்பெற்றிருந்தன என்று ரிசா'வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2015 மற்றும் 2016-ஆம் ஆண்டுகளில் டி-எஸ்ஐபி பட்டியலில் எஸ்பிஐ, ஐசிஐசிஐ வங்கிகள் உள்ளதாக ரிசா'வ் வங்கி அறிவித்தது.

மேலும், வங்கிகளிடம் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் எச்டிஎஃப்சி வங்கியும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக கடந்த 2017 மா'ச் 31-இல் ரிசா'வ் வங்கி அறிவித்தது.

---

5. கடந்த 2021-ம் ஆண்டில் ரூ.4.15 லட்சம் கோடி தங்கம் இறக்குமதி செய்தது இந்தியா

கடந்த ஆண்டில் இந்தியாவில் 5,570 கோடி டாலருக்கு (சுமார் ரூ.4.15 லட்சம் கோடி) வெளிநாடுகளிலிருந்து தங்கம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தங்கம் விலை சற்று சரிந்ததால் முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிக எடையிலான தங்கம் இந்தியாவுக்குள் வந்துள்ளது.

2020-ம் ஆண்டில் கரோனா பாதிப்பு தீவிரம் காரணமாக ஊரடங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் திருமணம் உள்ளிட்ட பல சுப நிகழ்ச்சிகள் தள்ளிப்போடப்பட்டன. இவை அனைத்தும் கடந்த

ஆண்டில் நடைபெற்றதால் தங்கம் அதிகஅளவில் உள்நாட்டில் வாங்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் அதிக அளவில் தங்கம் நுகரப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது.

2021–ம் ஆண்டு 2,200 கோடி டாலருக்கு தங்கம் இறக்குமதிசெய்யப்பட்டது. 2011–ல் தங்கஇறக்குமதிக்கு செலவிடப்பட்ட தொகை 5,390 கோடி டாலராகும். இதுதான் அதிகபட்ச அளவாக இருந்தது. ஆனால் அந்த அளவுகடந்த ஆண்டு முறியடிக்கப்பட்டுள்ளது.

2021–ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தின் அளவு 1,050 டன்னாகும். கடந்த பத்து ஆண்டுகளில் மிக அதிக அளவில் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2020–ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தின் அளவு 430 டன்னாகும்.

2020–ம் ஆண்டு இந்தியாவில் ஊரடங்கு கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் தங்கம் வாங்குவது பெரிதும் குறைந்தது. திருமண நிகழ்வு மற்றும் அட்சய திருதியை போன்ற காலங்களில்தங்கம் வாங்குவதும் பாதிக்கப்பட்டது. மணப்பெண்ணுக்கு வரதட்சினையாக தங்கம் அளிக்கும் பழக்கம் இந்தியாவில் பின்பற்றப்படுகிறது. மேலும் திருமண நிகழ்வில் தங்கம் பரிசளிப்பதும் அதிகமாக உள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் தங்கத்தின் விலை சற்று சரிந்திருந்ததால் அதிக அளவில் தங்கம் வாங்கப்பட்டுள்ளது.

அதேசமயம் 2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதிகபட்சமாக 10 கிராம் தங்கத்தின் விலை ரூ.56,191 ஆக உயர்ந்தது. ஆனால் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இது ரூ.43,320 ஆகக் குறைந்தது. இந்த கால கட்டத்தில் மட்டும் 177 டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

6. பிரான்ஸில் கண்டறியப்பட்ட அதிவேக கரோனாவின் குணங்கள்!

மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்ட ஒமைக்ரான் வகை கரோனாவால் உலக நாடுகள் தவித்து வரும் நிலையில், அதைவிட தீவிரமாகப் பரவும் புதிய கரோனா வகை கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸின் ஐஹெச்யு மெடிட்டரேன் தொற்றுநோய் ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், 12 கரோனா நோயாளிகளின் உடலில் முற்றிலும் புதிய வகை கரோனா தொற்று ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளனர்.

'பி.1.640.2' என வகைப்படுத்தப்பட்டுள்ள அந்த கரோனா வகைக்கு, அதனைக் கண்டறிந்த ஆய்வகமான 'ஐஹெச்யு' என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அண்மையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையில், ஐஹெச்யு வகை கரோனாவில் 46 குரோமோசோம் மாற்றங்கள் காணப்படுவதாகவும் 37 உட்கருத் துகள்கள் (நியூக்ளியோடைட்) குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், இது ஒமைக்ரான் வகை கரோனாவைவிட மனிதர்களின் உடலில் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

கரோனா போன்ற தீநுண்மிகளின் மேற்புறம் காணப்படும் 'கொக்கி' புரதங்கள்தான், மனித செல்களில் காணப்படும் புரதங்களோடு இணைந்து தொற்றுகின்றன. பல்வேறு வகை அமினோ அமிலங்கள் ஒன்றிணைந்து இந்தக் கொக்கிப் புரதங்களை உருவாக்குகின்றன.

தற்போது கரோனாவுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் அனைத்தும், கொக்கிப் புரதங்களை இலக்காகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐஹெச்யு வகை கரோனாக்களின் கொக்கிப் புரதங்களில் 14 வகை அமினோ அமிலங்கள் மாற்றியமைந்துள்ளன. அவற்றில் என்501ஒய் என்றழைக்கப்படும் அமினோ அமிலமும் ஒன்று.

ஐஹெச்யு வகை கரோனாவின் கொக்கிப் புரதங்களில் அந்த வகை அமிலம் காணப்படுவதால் அது தீவிரமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஏற்கெனவே அந்த வகை அமினோ அமிலம் ஆல்ஃபா வகை கரோனாவில் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து பீட்டா, காமா, ஒமைக்ரான் உள்ளிட்ட வேகமாகப் பரவும் தன்மை கொண்ட கரோனா வகைகளில் காணப்பட்டது.

இதுகுறித்து இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் கூறுகையில், கரோனா தீநுண்மி தன்னை எப்படி உருமாற்றம் செய்துகொள்ளும் என்பதை யாராலும் கணிக்க முடியாது என்பதை புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐஹெச்யு வகை கரோனா உணர்த்துகிறது என்றனர்.

கடந்த ஆண்டின் முற்பகுதியில் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் டெல்டா வகை கரோனா மிக வேகமாகப் பரவி ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. அந்த வகை கரோனாவைவிட பல மடங்கு வேகத்தில் பரவும் தன்மை கொண்ட ஒமைக்ரான் வகை கரோனா, தென் ஆப்பிரிக்கா மற்றும் அதன் அண்டை நாடான போட்ஸ்வானாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கண்டறியப்பட்டது.

இதனால் அச்சமடைந்த உலக நாடுகள், ஒமைக்ரான் வகை கரோனாவைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதையும் மீறி, 100–க்கும் மேற்பட்ட நாடுகளில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு ஒமைக்ரான் வகை கரோனா பரவியுள்ளது.

அந்த வகை கரோனா இதுவரை இல்லாத வேகத்தில் பரவும் தன்மை கொண்டதாக இருந்தாலும், அதனால் உயிரிழக்கும் அபாயம் மிகவும் குறைவாக உள்ளதாக பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழலில், ஒமைக்ரானைவிட அதிக வேகத்தில் பரவும் புதிய வகை கரோனா கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

7. இந்திய பெருங்கடலில் சீனாவின் நடமாட்டத்தை கண்காணிக்க 2 அதிநவீன போர் விமானங்கள்

இந்திய பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், வான் ரோந்துப் பணிகளில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன போர் விமானங்களை இந்தியா சோ்த்துள்ளது.

இதுதொடா்பாக இந்திய விமானப் படையின் செய்தித் தொடா்பாளா் விவேக் மத்வால் கூறுகையில், 'நீா்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியும் போர் விமானமும், கடல் பகுதியை வானிலிருந்து உளவு பாா்க்கும் 'பொஸைடன் 8ஐ' அதிநவீன கடல் ரோந்து விமானமும் அமெரிக்காவிடம் இருந்து கடந்த டிசம்பா் 30-ஆம் தேதி இந்தியா பெற்றது. இதில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப கருவிகள் பொருத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டது. தற்போது அவை இந்திய பெருங்கடல் பகுதியில் ரோந்துப் பணியில் சோ்க்கப்பட்டுள்ளன' என்றாா்.

'பொஸைடன் 8ஐ' ரகத்தைச் சோ்ந்த 8 விமானங்களை 2013-இல் முதல்முறையாக இந்தியா வாங்கியது. இவை அரங்கோணத்தில் உள்ள ஐஎன்எஸ் ராஜாளி விமானப் படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக வாங்கப்பட்ட 4 விமானங்கள் கோவாவில் உள்ள ஐஎன்எஸ் ஹான்சாலில் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

இவை இந்திய பெருங்கடலில் சீனாவின் கப்பல்கள், நீா்மூழ்கி கப்பல்கள் ஆகியவற்றை தொடா்ந்து கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

கடந்த 2020-இல் கிழக்கு லடாக் பகுதியில் சீன ராணுவ வீரா்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் இந்த வகை விமானங்களை இந்தியா பயன்படுத்தியது.

கடல் பகுதியில் கண்காணிப்பை பலப்படுத்த இரண்டு ட்ரோன்களை அமெரிக்காவிடம் இருந்து கடந்த ஆண்டு இந்தியா வாங்கியது. மேலும் 30 அதிநவீன ட்ரோன்களையும் அமெரிக்காவிடம் வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. இவை சுமாா் 35 மணி நேரம் தொடா்ந்து பறந்து கடல் மற்றும் நிலப் பரப்பில் உள்ள இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் திறன் படைத்தவையாகும்.

---

8. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாதத் தடுப்பு குழுத் தலைவராக டி.எஸ்.திருமூர்த்தி பொறுப்பேற்பு

இந்த ஆண்டுக்கான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாதத் தடுப்பு குழுத் தலைவராக ஐ.நா.வுக்கான இந்தியத் தூதா் டி.எஸ்.திருமூா்த்தி பொறுப்பேற்றுள்ளாா்.

கடந்த 2001-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டை கோபுரத் தாக்குதலைத் தொடா்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் துணை அமைப்பாக பயங்கரவாதத் தடுப்பு குழு (சிடிசி) உருவாக்கப்பட்டது. இந்தக் குழுவின் 2022-ஆம் ஆண்டு தலைவராக ஐ.நா.வுக்கான இந்தியத் தூதா் டி.எஸ்.திருமூா்த்தி பொறுப்பேற்றுள்ளாா்.

இதனைத்தொடா்ந்து பயங்கரவாதத் தடுப்புக்கு எதிரான பலதரப்பட்ட எதிா்வினையை வலுப்படுத்தவும், பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை திறம்பட இருப்பதிலும் சிடிசியின் பங்கை மேம்படுத்த குழுவின் தலைவராக உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா தற்காலிக உறுப்பினராக உள்ளது. இந்த உறுப்பினா் காலம் நிகழாண்டு டிச.31-ஆம் நிறைவடைகிறது.

---

9. ஏரியில் பாலம் கட்டும் சீனாவால் நமக்கு என்ன பிரச்சினை?

ஒரு பக்கம் தைவானை ஆக்கிரமிக்க சீனா முயற்சித்து வருகிறது. இன்னொரு பக்கம், இந்தியாவுடன் சீனாவுக்கு நீண்ட நெடுங்காலமாக எல்லைப்பிரச்சினை இருந்து வருகிற சூழலில் இந்திய பகுதிகளை ஆக்கிரமிக்கவும் முயற்சிக்கிறது.

கல்வான் தாக்குதல்

இதற்கிடையேதான் கிழக்கு லடாக்கில் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இந்திய படைகளுடன் கடந்த 2020-ம் ஆண்டு மே மாதம் முதல் மோதல்போக்கில் சீன துருப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

அதே ஆண்டின் ஜூன் மாதம் 15-ந்தேதி கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில், திடீரென சீன படையினர் பயங்கர ஆயுதங்களுடன் வந்து, இந்திய படை வீரர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தினர். இதில் இந்திய வீரர்கள் 20 பேர் வீர மரணம் அடைந்தனர்.

ஆனால் அந்த நிலையிலும், தாய் மண்ணை காக்க வேண்டும் என்ற தவிப்பில், சீன துருப்புகளை இந்திய ராணுவ வீரர்கள் துணிச்சலுடன் எதிர்த்து நின்று பதிலடி கொடுத்தனர். இதில் சீனப்படையினர் 45 பேர் கொன்று குவிக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன. முதலில் தன் தரப்பு உயிர்ச்சேதத்தை ஒப்புக்கொள்ளாத சீனா, கடைசியில் படைவீரர்கள் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டது.

இந்த மோதலுக்குப்பின்னர்தான் எல்லையில் பதற்றம் தணிக்கவும், அமைதியை பராமரிக்கவும் இரு தரப்பு பேச்சுவார்த்தை மறுபடியும் நடந்து வருகிறது.

பெயர் சூட்டி அடாவடி

இதற்கு மத்தியில்தான் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீரென அருணாசலபிரதேசத்தை தெற்கு திபெத் என்றுசொல்லி சொந்தம் கொண்டாடி வருவதை புதுப்பிப்பது போல சீனா நடந்து கொண்டது.

அந்த பகுதிகளுக்கு பெயர் சூட்டி அடாவடி செய்தது.

பாலம் கட்டும் சீனா

இப்போது சீனாவின் மற்றொரு அடாவடிச்செயல், செயற்கைக்கோள் படம் மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது. இந்த செயற்கைக்கோள் படத்தில் கிழக்கு லடாக்கில் பாங்காங் சோ ஏரியின் இரு கரைகளையும் இணைக்கும் கட்டுமானம் தெரிகிறது. இதுதான் பாலம்.

கிழக்கு லடாக்கில் பாங்காங் சோ ஏரியின் வடக்கு மற்றும் தெற்கு கரைகளை இணைக்கிற வகையில் சீனா இந்த பாலத்தை கட்டி வருகிறது. இது சரியாக கிழக்கு லடாக்கில் எல்.ஏ.சி. என்று சொல்லப்படுகிற அசல் கட்டுப்பாட்டு கோட்டுக்கு 25 கி.மீ. முன்பாக அமைவ தாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாலம் கட்டும் பணி சில காலமாகவே நடந்து வந்துள்ளதாம்.

சீனாவுக்கு என்ன ஆதாயம்?

வடக்கு கரை பகுதியில் குர்னாக் கோட்டையில் சீனப்படையின் பாதுகாப்பு அரண் உள்ளது. தெற்கு கரையில் மோல்டோ என்ற இடம் உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையே 200 கி.மீ. தொலைவு உள்ளது. சீனா கட்டுகிற பாலம் வடக்கு, தெற்கு கரைகளுக்கு இடையே 500 மீட்டர் தொலைவுக்கு அமைகிறது.

இந்தப்பாலத்தால் சீனாவுக்கு என்ன லாபம் என்ற கேள்வி எழும். ஆதாயம் இருக்கிறது.

இந்த பாலத்தால் பாங்காங் சோ ஏரியின் இரு பகுதிகளுக்கும் இடையேயான தொலைவை கடக்க ஆகிற நேரம் 12 மணி நேரத்தில் இருந்து 3 அல்லது 4 மணி நேரம்தான் ஆகும்.

தற்போது வரை சீனப்படையினர் ரூடோக் கவுண்டியை கடந்து ஒரு ரவுண்டானாவை சுற்றித்தான் வர முடியும். ஆனால் இனி சீனப்படை நேரடியாக வந்து விடலாம்.

இந்த பாலம் சீனப்படையினர் பயண நேரத்தை வெகுவாக குறைத்து விடும்.

இந்தியாவுக்கு என்ன பிரச்சினை?

இந்த பாலம் சீனப்பகுதியில்தான் கட்டப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதில் இந்தியாவுக்கு ஒரு சிக்கல். இதற்கு ஏற்ற வகையில் தனது செயல்பாட்டு திட்டங்களை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் இந்திய ராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

சீனாவுக்கு பதிலடி கொடுக்கிற விதத்தில் இந்தியாவும் அதிரடி வியூகம் அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

10. தனி ஆளாக தென்துருவத்தை அடைந்து இந்திய பெண் சாதனை!

இங்கிலாந்தில் ராணுவ அதிகாரியாக பணியாற்றி வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த சீக்கிய பெண் ஹர்பிரீத் சிங். 32 வயதான இவர் தனி ஒருவராக தென்துருவத்தை அடைந்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை படைத்த முதல் பெண் என்கிற பெருமையும் இவரை சேரும்.

மைனஸ் 50 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மற்றும் மணிக்கு 96 கி.மீ. வேகத்தில் வீசிய காற்றுக்கு மத்தியில் தொடர்ந்து 40 நாட்களாக 1,127 கி.மீ. பயணம் செய்து அவர் தென்துருவத்தை அடைந்தார்.

சவால் மிகுந்த இந்த பயணத்தின் அனுபவங்களை தொடர்ச்சியாக சமூகவலைத்தளத்தில் பதிவிட்டு வந்த ஹர்பிரீத் சிங், தென்துருவத்தை அடைந்த சாதனை நிகழ்வை நேரலையில் வீடியோவாக ஒளிபரப்பினார்.

அதன் பின்னர் இதுகுறித்து அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில் "பனிப்பொழிவு இருக்கும் தென்துருவத்துக்கு சென்றேன். இப்போது பல உணர்வுகளை உணர்கிறேன். 3 ஆண்டுகளுக்கு முன்பு துருவ உலகத்தைபற்றி எனக்கு எதுவும் தெரியாது, இறுதியாக இங்கே இருப்பதை யதார்த்தமாக உணர்கிறேன். இங்கு வருவது கடினமாக இருந்தது. எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

---

11. தமிழர் திருநாளை மக்கள் சிறப்பாக கொண்டாட ரூ.1,297 கோடியில் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் 21 வகையான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்

2.15 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர்

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி ரூ.1,297 கோடி மதிப்பில் 21 வகையான பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்தில் நேற்று தொடங்கி வைத்தார். இதன்மூலம் 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள். தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், 2022ம் ஆண்டு தைப் பொங்கலுக்கு அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 21 பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த நவம்பர் மாதம் அறிவித்தார்.

அதன்படி, பொங்கலுக்கு தேவையான பச்சரிசி 1 கிலோ, வெல்லம் 1 கிலோ, முந்திரி 50 கிராம், திராட்சை 50 கிராம், ஏலக்காய் 10 கிராம், பாசிப்பருப்பு 500 கிராம், நெய் 100 கிராம் போன்ற பொருட்களும், பண்டிகை கால சமையலுக்கு தேவையான மஞ்சள் தூள் 100 கிராம், மிளகாய் தூள் 100 கிராம், மல்லித்தூள் 100 கிராம், கடுகு 100 கிராம், சீரகம் 100 கிராம், மிளகு 50 கிராம், புளி 200 கிராம், கடலை பருப்பு 250 கிராம், உளுத்தம் பருப்பு 500 கிராம், ரவை 1 கிலோ, கோதுமை மாவு 1 கிலோ, உப்பு 500 கிராம் மற்றும் துணிப்பை ஒன்றும், ஒரு முழு கரும்பு என 21 பொருட்கள் அடங்கிய பரிசு தொகுப்பு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு 2,15,48,060 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.1,297 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் அரிசி பெறும் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரேஷன் கடைகளில் 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை

தொடங்கி வைப்பதன் அடையாளமாக, சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 10 மணிக்கு 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை 10 குடும்பங்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். அப்போது உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, தலைமை செயலாளர் இறையன்பு மற்றும் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை நேற்று காலை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் நேற்று காலை 10 மணி முதல் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணி தொடங்கியது.

தமிழகம் முழுவதும் பொங்கல் தொகுப்பு வழங்குவதை கண்காணிக்க அனைத்து மாவட்டங்களில் மாவட்ட கலெக்டர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமை செயலாளர் இறையன்பு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை கூடுதல் தலைமை செயலாளர் முகமது நசிமுத்தின், உணவு பொருள் வழங்கல் துறை ஆணையாளர் ராஜாராமன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் பிரபாகர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சண்முகசுந்தரம், மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

* ரேஷன் கடைகளில் 10ம் தேதி வரை கிடைக்கும்தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், கலெக்டர்கள் பொங்கல் பரிசுப் பை வழங்கும் பணியை தொடங்கி வைத்தனர். முன்னதாக கொரோனா பரவலை தடுக்கும் வகையில், குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் ரேஷன் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்க்கவும், கொரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற ஏதுவாக பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை முறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தெரு வாரியாக உள்ள குடும்ப அட்டையின் எண்ணிக்கையின் அடிப்படையில் தினமும் சுழற்சி முறையில் சுமார் 150 முதல் 200 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கும் நாள், நேரம் போன்ற விவரங்களை குறிப்பிட்டு வீடு வீடாக டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பொதுமக்கள் ரேஷன் கடைகளுக்கு வர அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பொங்கல் பரிசு தொகுப்பு வருகிற 10ம் தேதி வரை வழங்குவதற்கான டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதனால் டோக்கனில் உள்ள நாள், நேரத்தை பின்பற்றி பொதுமக்கள் ரேஷன் கடைகளுக்கு வந்து பொங்கல் பரிசு தொகுப்பை பெற கடைகளுக்கு வர வேண்டும் என்று உணவு வழங்கல் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று தொடங்கி வருகிற 10ம் தேதி வரை வழங்கப்படும் என்று அறிவித்தாலும், ஊருக்கு சென்றவர்கள் மற்றும் பொருட்கள் வாங்க முடியாதவர்களின் வசதிக்காக பொங்கல் பண்டிகைக்கு பிறகும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும்.

---

12. சிம்–ஸ்வாப் மூலம் 25 லட்சம் சுருட்டிய கும்பல்... தமிழகத்தில் இதுவே முதன்முறை... 4 பேர் கைது!

தமிழக மத்திய குற்றப்பிரிவு (சிசிபி) போலீசார் பல்வேறு மாநிலங்களில் கை வரிசை காட்டிவந்த சிம் பரிமாற்ற மோசடி நெட்வொர்க்கை கண்டுபிடித்துள்ளனர். சென்னையில் உள்ள கண் மருத்துவமனையில் பணம் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கை விசாரித்த போது இந்த கும்பல் சிக்கியுள்ளது. இந்த வழக்கில் 4 பேர் கைது செய்யப்பட்டு, 154 டெபிட் கார்டுகள், 105 சிம் கார்டுகள், 128 ஆதார் கார்டுகள், 22 போலி பான் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள பிரபல கண் மருத்துவமனையின் ஊழியர்கள் கடந்த நவம்பர் 22 அன்று சைபர் க்ரைம் பிரிவில் அளித்த புகார் போலீசாரை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது. அந்த புகாரில், மருத்துவமனை மற்றும் ஊழியர்களின் வங்கி கணக்கில் இருந்து அடுத்தடுத்து அவர்களுக்கு தெரியாமல் ரூ. 24 லட்சம் வரை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், பாதிக்கப்பட்டவர்களின் சிம் கார்டு வேலை செய்யவில்லை எனவும் கூறியிருந்தனர். விசாரணையை தொடங்கிய சைபர் க்ரைம், மர்ம நபர்கள் மருத்துவமனை கணக்கில் இருந்து 24 லட்ச ரூபாயை அவர்களுக்குத் தெரியாமல் 5 பரிவர்த்தனையில் எடுத்திருப்பதை உறுதி செய்தது.

மேலும், மருத்துவமனையின் அதிகாரப்பூர்வ மெயில் ஐடியை ஹேக் செய்து அதன்மூலம் ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கும் வங்கிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்ட சிம் எண்களை செயலிழக்க வைத்துள்ளனர். பின்னர், அதே எண்ணில் போலி சிம் கார்டுகளை தயார் செய்து அதன் மூலம் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கான OTPகளைப் பெற்று பணத்தை சுருட்டியது தெரிய வந்தது. மேலும், அந்த பணத்தை மேற்கு வங்கத்தில் உள்ள 16 வெவ்வேறு வங்கிக் கணக்குகளில் டெபாசிட் செய்யப்பட்டதை தமிழக சைபர் க்ரைம் கண்டுபிடித்தது.

அதனை தொடர்ந்து, வங்கி அறிக்கைகள் மற்றும் பரிவர்த்தனை செய்யப்பட்ட ஸ்னாப்ஷாட்களை எடுத்துக்கொண்டு தனிப்படை போலீசார் மேற்கு வங்கத்திற்கு புறப்பட்டனர். அங்கு, மேற்கு வங்க காவல்துறையின் உதவியுடன் ஏடிஎம் மோசடியில் ஈடுபட்டு வந்த பிகாரைச் சேர்ந்த ராகேஷ் குமார் சிங், ரோஹன் ஆகிய இரண்டு பேரை முதற்கட்டமாக பிடித்து விசாரித்தனர். விசாரணையில், சென்னை மருத்துவமனை வங்கி கணக்கை ஹேக் செய்ததில் இவர்களுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. தொடர்ந்து நடத்திய விசாரணையில், எஞ்சிய குற்றவாளிகளான சயந்தன் முகர்ஜி மற்றும் ராகுல் ராய் கைது செய்யப்பட்டனர். நான்கு பேரிடம் இருந்தும் 154 டெபிட் கார்டுகள், 105 சிம் கார்டுகள் மற்றும் 128 ஆதார்

கார்டுகள் மற்றும் 22 போலி பான் கார்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அவர்களை சென்னைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து சென்னை மாநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால் கூறியதாவது: மாநிலத்தில் சிம்–ஸ்வாப் மோசடி நடப்பது இதுவே முதல் முறை. இந்த மோசடிக்கு ஆளானவர்கள் யார் வேண்டுமானாலும் நேரில் வந்து புகார் அளிக்கலாம் என்றார்.

---

13. நாட்டின் மின்நுகர்வு 110.34 பில்லியன் யூனிட்: 2020 டிசம்பருடன் ஒப்பிடுகையில் 4.5% உயர்வு

உலக நாடுகளை தொடர்ந்து இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் அதிகமாக இருந்தது. குறிப்பாக முதல் அலையை விட இரண்டாவது அலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பலரும் உயிரிழப்புகளை சந்தித்தனர். பெரும்பாலான இடங்களில் உள்ள அரசு, தனியார் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் கிடைக்காமல் மக்கள் தவித்தனர். இதையடுத்து நாடு முழுவதும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, முழுமையான ஊரங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால் தொழில்கள் அனைத்தும் முடங்கின. மக்கள் தங்களது வீடுகளுக்குள்ளேயே இருந்தனர்.

குறிப்பாக நாட்டில் உள்ள பெரிய தொழிற்சாலைகளான துணி உற்பத்தி தொழிற்சாலைகள், இரும்பு உருக்கும் தொழிற்சாலைகள், சணல் தொழிற்சாலைகள், பருத்தி தொழிற்சாலைகள், வாகன உற்பத்தி தொழிற்சாலைகள் என பல்வேறு பிரிவுகளை சேர்ந்த தொழிற்சாலைகள் முழுவதும் இயங்கவில்லை. இதேபோல் ஐடி நிறுவனங்களும் முடங்கியது. இதுபோன்ற காரணங்களினால் சம்மந்தப்பட்ட இடங்களில் மின்சாரம் பயன்படுத்துவது பெருமளவில் குறைந்தது. பிறகு ஒன்றிய, மாநில அரசுகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

மேலும் பொதுமக்களும் அதிகப்படியாக தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் ஆர்வம் காட்டினர். இதன் காரணமாக கொரோனாவின் பாதிப்பு கொஞ்சம், கொஞ்சமாக குறைந்தது. நிலைமை கட்டுக்குள் வந்தது. இதனைத்தொடர்ந்து 50 சதவீத தொழிலாளர்களுடன் அனைத்து தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. பிறகு தொற்று மேலும் குறைந்தது. இதனால் தொழில் நிறுவனங்கள், அலுவலகங்கள் முழுமையாக செயல்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனால் அவை கொஞ்சம், கொஞ்சமாக முழுமையாக இயங்க தொடங்கியது.

குறிப்பிட்ட சில ஐடி நிறுவனங்களை தவிர மற்ற நிறுவனங்கள் அனைத்தும் முழுமையாக இயங்கி வருகிறது. இதன் காரணமாக சம்மந்தப்பட்ட இடங்களில் வழக்கம் போல் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் நாட்டில் மின்நுகர்வு தற்போது அதிகரித்துள்ளது. அதாவது அதிகபட்சமாக ஒருநாளினுடைய மின்தேவை கடந்த 2021ம் ஆண்டு டிசம்பரில் 183.38 ஜிகாவாட்டாக இருந்தது. இதுவே 2020ம் ஆண்டு 182.78 ஜிகாவாட்டாகவும், 2019ம் ஆண்டு 10.49 ஜிகாவாட்டாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதேபோல் கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் மின்நுகர்வு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதம் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

அதாவது 2021ம் ஆண்டு நவம்பரில் மின்நுகர்வு 99.37 பில்லியன் யூனிட்டாக இருந்தது. 2020ம் ஆண்டில் 96.88 பில்லியன் யூனிட்டாகவும், 2019ம் ஆண்டில் 93.94 பில்லியன் யூனிட்டாகவும் இருந்தது. இதனைத்தொடர்ந்து 2021ம் ஆண்டு டிசம்பரில் மின்நுகர்வு 110.34 பில்லியன் யூனிட் ஆகும். இது 2020ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் அதிகமாகும். அதாவது 2020ம் ஆண்டில் மின்நுகர்வு 105.62 பில்லியன் யூனிட்டாகவும், 2019ம் ஆண்டில் 101.08 பில்லியன் யூனிட்டாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

14. மேலும் 2 பி–8ஐ போர் விமானம் இந்திய கடற்படையில் இணைப்பு

நீர்மூழ்கிக்கப்பலைத் தாக்கி அழிக்க கூடிய 2 பி–8ஐ போர் விமானங்கள் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டன. அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து எட்டு பி–8ஐ போர் விமானங்களை கொள்முதல் செய்ய ஒன்றிய அரசு கடந்த 2009ம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்தப் போர் விமானங்கள் நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவையாகும். இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆக்கிரமிப்பு, ஊடுருவல் நடவடிக்கைகளை உளவு பார்ப்பதில் பி–8ஐ விமானங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

அதன்படி, முதல் எட்டு பி–8ஐ போர் விமானம் கடந்த 2013ம் ஆண்டில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டன. இவை தற்போது அரக்கோணத்தில் ஐஎன்எஸ் ராஜாளியில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தற்போது மேலும் 2 பி–8ஐ போர் விமானங்கள் கடந்த 30ம் தேதி கோவா வந்தடைந்தன. இது குறித்து கடற்படை செய்தி தொடர்பாளர் விவேக் மத்வால் கூறுகையில், 'உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகள் பொருத்தப்பட்டு, அனுமதி பெற்ற பிறகு இவை இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த போர் விமானங்களுக்கு மிக் 29கே படையினர் வரவேற்பு அளித்தனர். இரண்டாவது முறை கூடுதலாக வாங்கிய 4 பி–8ஐ போர் விமானங்கள் 316 விமானப்படை பிரிவில் ஐஎன்எஸ் ஹன்சாவில் இருந்து செயல்பட உள்ளன,' என்றார்.

---

1. மத்திய பிரதேசத்தின் பன்னா புலிகள் காப்பகத்தில் முதன்முறையாகக் காணப்பட்ட ஃபெலிஸ் சில்வெஸ்ட்ரிஸ் ஆர்னேட் என்பது எந்த விலங்கின் அறிவியல் பெயராகும்?

அ) இந்தியப் பாலைவனப் பூனை ☑



ஆ) மான்

இ) ஆப்பிரிக்க சிறுத்தை

ஈ) ஆசிய யானை

✓ மத்திய பிரதேசத்தின் பன்னா புலிகள் காப்பகத்தில் முதல் முறையாக இந்தியப் பாலைவனப் பூனை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "Felis silvestris ornate" என்பது இந்த இனத்தின் அறிவியல் பெயர். இந்தியப் பாலைவனப் பூனை பொதுவாக இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள தார் பாலைவனத்தில் காணப்படுகிறது.

✓ இந்தியாவில் அழிந்து வரும் விலங்குகளுள் ஒன்றான மீன்பிடி பூனை, முன்னர் இக்காப்பகத்தில் காணப்பட்டது.

---

2. எந்தப் பொருளின் மீதான ஜிஎஸ்டி விகித உயர்வை ஒத்திவைக்க ஜிஎஸ்டி கவுன்சில் முடிவு செய்துள்ளது?

அ) ஜவுளி ☑



ஆ) ஆட்டோமொபைல்

இ) கையடக்க தொலைபேசிகள்

ஈ) பருத்தி

✓ GST கவுன்சில் கூட்டத்தில் ஜவுளிக்கான GST விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தும் முடிவு ஒத்திவைக்கப்பட்டது. விகித உயர்வை மறுபரிசீலனை செய்ய, அமைச்சர்கள் குழுவுக்கு இது பரிந்துரைத்துள்ளது.

✓ பருத்தியில் தயாரிக்கப்படும் ஜவுளிகள் தவிர அனைத்து ஆயத்த ஜவுளிப் பொருட்களுக்கும் GST வரி 12 சதவீதமாக உயர்த்தப்பட்டது. ₹1,000'த்துக்கு குறைவான காலணிக –ளைத் தவிர மற்ற காலணிகளுக்கான GST விகிதம் 5 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. குஜராத், மேற்கு வங்கம், இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு மாநில பிரதிநிதிகள் இந்த GST விகித உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

---

3. ஏழைகள் வைத்திருக்கும் இருசக்கர வாகனங்களுக்கு பெட்ரோல் விலையில் லிட்டருக்கு ₹25/ஐ குறைத்த மாநில அரசு எது?

அ) தமிழ்நாடு



ஆ) ஒடிஸா

இ) ஜார்க்கண்ட் ☑

ஈ) கேரளா

✓ ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், ஏழைகள் வைத்திருக்கும் இருசக்கர வாகனங்களுக்கு பெட்ரோல் லிட்டருக்கு ₹25/–க்கு வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒவ்வொரு மாதமும் 10 லிட்டர் பெட்ரோலுக்கு இச்சலுகை வழங்கப்படும். ஏழை குடும்ப அட்டைதாரர் –களின் வங்கிக்கணக்கில் லிட்டருக்கு ₹25 செலுத்தப்படும்.

---

4. ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிவிப்பின்படி, வங்கிக் கணக்குகளுக்கான KYC புதுப்பிப்புக்கான காலக்கெடு என்ன?

அ) ஜனவரி 31, 2022



ஆ) மார்ச் 31, 2022 ☑

இ) ஜூன் 30, 2022

ஈ) செப்டம்பர் 30, 2022

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வங்கிக் கணக்குகளுக்கான KYC புதுப்பிப்புக்கான கடைசி தேதியை அடுத்த ஆண்டு மார்ச்.31 வரை மூன்று மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.

✓ COVID–19'இன் புதிய திரிபினால் நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக இக்காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. தொற்றுநோய் காரணமாக ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு மே முதல் விதிகளை தளர்த்தியது. KYC ஆவணங்கள் வாடிக்கையாளர்களால் புதுப்பிக்கப்படாமல் இருந்தால் வங்கிச் சேவைகளை தடைசெய்யக்கூடாது என்றும் RBI அறிவித்துள்ளது.

---

5. COVID'க்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரிசெப்டர் பைண்டிங் டொமைன் (RBD) புரத உப–அலகு தடுப்பூசி எது?

அ) CORBEVAXTM ☑



ஆ) NOVAVAX

இ) DIVIVAX

ஈ) SEROVAXTM

✓ COVID'க்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரிசெப்டர் பைண்டிங் டொமைன் (RBD) புரத உப–அலகு தடுப்பூசி 'CORBEVAXTM' ஆகும்.

✓ பயோலாஜிக்கல் இ லிட் உருவாக்கியுள்ள இந்தத் தடுப்பூசி, அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்திற்கான இந்தியாவி –ன் மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஜெனரல் அனுமதியை சமீபத்தில் பெற்றுள்ளது. பயோடெக்னாலஜி துறை மற்றும் அதன் PSU பயோடெக்னாலஜி இண்டஸ்ட்ரி ஆராய்ச்சி உதவி கவுன்சில் (BIRAC) ஆகியவை பயோலாஜிக்கல் இ'இன் COVID–19 தடுப்பூசிக்கு ஆதரவளித்துள்ளன.

---

6. அண்மையில் 25 சீன J–10C போர் விமானங்களை வாங்கிய நாடு எது?

அ) ஆப்கானிஸ்தான்



ஆ) பாகிஸ்தான் ☑

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ பாகிஸ்தான் வான்படைக்கு குறைந்தது 25 சீன ஜே–10சி போர் விமானங்களை வாங்குவதை பாகிஸ்தான் அரசு உறுதிசெய்துள்ளது. இந்தியா வைத்திருக்கும் பிரான்சின் ரபேல் போர் விமானங்களுக்கு மாற்றாக இந்த ஜெட் விமானங்கள் இருப்பதாக பாகிஸ்தான் கூறுகிறது. பாகிஸ்தானிலும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட F–16 ஜெட் விமானங்கள் உள்ளன.

---

7. சூர்யா பிராந்திய நீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்ப –டுகிற மாநிலம் எது?

அ) கர்நாடகா

ஆ) மகாராஷ்டிரா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) தெலுங்கானா



✓ சூர்யா பிராந்திய நீர் வழங்கல் திட்டம் மும்பையில் செயல்படுத்தப்படுகிறது. இது மும்பையின் மேற்கு துணை பிராந்தியத்தில் உள்ள இரண்டு மாநகராட்சிகளுக்கு ஒரு நாளைக்கு 403 மில்லியன் லிட்டர் நீர் விநியோகத்தை செய்கிறது. மும்பை பெருநகர பிராந்திய மேம்பாட்டு ஆணையம் திட்டத்தின் முதல் சுரங்கப்பணியை நிறைவு செய்துள்ளது. இந்தத் திட்டம் 2023 வரை கட்டம் கட்டமாக முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---


8. Trace Gas Orbiter எந்தக் கோளின் வளிமண்டலத்தை ஆய்வு செய்வதற்காக ஏவப்பட்டது?

அ) வெள்ளி

ஆ) செவ்வாய் ☑

இ) வியாழன்

ஈ) சனி



✓ "ExoMars TGO" என்றும் அழைக்கப்படுகிற Trace Gas Orbiter ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) மற்றும் இரஷ்ய ரோஸ்கோஸ்மோஸ் ஏஜென்சி ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாகும். Trace Gas Orbiter 2016இல் செவ்வாய்க்கோளை அடைந்து 2018இல் அதன் முழுப்பணியைத்தொடங்கியது.

✓ சமீபத்தில், அவ்விண்கலத்தால் எடுக்கப்பட்ட புதிய படம் வஸ்டிடாஸ் பொரியாலிஸ் பகுதியில் ஒரு சிறிய பள்ளம் இருப்பதைக் காட்டுகிறது. இப்பள்ளம் ஓரளவு நீர் பனியால் நிரம்பியுள்ளது.

---

9. 'தேஜாஸ்' என்பது பின்வரும் எந்நாட்டுடன் இணைந்து இந்தியாவால் தொடங்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும்?

அ) அமெரிக்கா

ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) பிரான்ஸ்

✓ "தேஜாஸ்" / அமீரக பணிகள் மற்றும் திறன்களுக்கான பயிற்சியின் புதிய திட்டத்தின்கீழ், வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பயிற்சி அளிப்பதற்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள முன்னணி பணியமர்த்துநர்களுடன் அரசாங்கம் கூட்டு சேர்ந்துள்ளது. இது ஒரு ஆண்டில் 10,000 இந்திய பணியாளர்களுக்கும், அடுத்த 5 ஆண்டுகளில் வளைகுடா கூட்டுறவு கவுன்சில் பிராந்தியத்தில் 100,000 தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளித்து, சான்றளித்து, பணியமர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

10. ஜியுவான்–1 02இ என்ற புதிய புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?

அ) ஜப்பான்

ஆ) சீனா ☑

இ) ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

ஈ) இஸ்ரேல்



✓ சீனா தனது Chang Zheng 4C ஏவுகலம்மூலம் 'Ziyuan–1 02E' என்ற புதிய புவி வள கண்காணிப்பு செயற்கைக் கோளை நிலைநிறுத்தியுள்ளது. ஒரு தொழிற்முறை சாரா வானொலியான 'CubeSat' உடன் இச்செயற்கைக்கோள் சமீபத்தில் ஏவப்பட்டது.

✓ 'வளம்' எனப்பொருள்படும் ஜியுவான் ரிமோட்–சென்சிங் செயற்கைக்கோள்களின் வரிசையிலுள்ளது. இது உயர் தெளிவுத்திறன் கொண்ட நிழற்படங்களை எடுப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

✓ புவியின் வளங்களை ஆய்வு செய்வதற்கும், பேரிடர் மேலாண்மைக்கும், நிலப்பயன்பாட்டு கண்காணிப்புக்கும் இப்படங்கள் பயன்படுத்தப்படலாம்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் புதிதாக 10.17 லட்சம் வாக்காளர்கள் சேர்ப்பு: தேர்தல் ஆணையம்

தமிழகத்தில் புதிதாக 10.17 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்து உள்ளது. சிறப்பு முகாமில் 10 லட்சம் பேர் விண்ணப்பித்த நிலையில் தற்போது இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, வாக்காளர் பட்டியலில் புதிதாக 10.17 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இரண்டு லட்சத்துக்கும் அதிகமான பெயர்கள் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 6 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் உள்ளனர். இதில் 3,12,26,750 பேர் ஆண்கள். 3,23,91,256 பேர் பெண்கள். 18 –19 வயதுள்ள 4,32,600 பேர் புதிதாக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மூன்றாம் பாலினத்தில் 7,804 பேருக்கு வாக்காளர் அடையாள அட்டை உள்ளது.

சோழிங்கநல்லூரில் (7,11,755) அதிக வாக்காளர்களும், கீழ்வேளூரில் (1,78,517) குறைவான வாக்காளர்களும் உள்ளனர். புதுச்சேரியில் 10.10 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

---

2. ₹1,000 கோடி செலவில் 1,150 ஏக்கர் பரப்பளவில் அமைகிறது: தூத்துக்குடியில் நாட்டின் முதலாவது "சர்வதேச பர்னிச்சர் பூங்கா"

இந்தியாவில் முதலாவதாக தூத்துக்குடியில் ₹1,000 கோடி மதிப்பீட்டில், 1,150 ஏக்கர் பரப்பளவில் 'சர்வதேச பர்னிச்சர் பூங்கா' அமைக்கப்படுகிறது. இந்தப்பூங்காமூலம் ₹4,500 கோடிக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இப்பணிகளுக்கு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் வரும் 11ஆம் தேதி அடிக்கல் நாட்டுகிறார்.

பர்னிச்சர் தொழிலுக்கு என நாட்டிலேயே முதல் சிறப்பு பொருளாதார மண்டலமாக இந்தப் பூங்கா அமைகிறது. மர அரவை ஆலை, பர்னிச்சர் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் உள்ளிட்ட சுமார் 100 நிறுவனங்கள் வரை இப்பூங்காவில் இடம்பெற வாய்ப்பிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

பர்னிச்சர் உற்பத்தி தொடங்கி பேக்கிங் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வரையிலான அனைத்து நிறுவனங்களும் இந்தப் பூங்காவில் இடம் பெறுகின்றன.

3.5 லட்சம் பேருக்கு வேலை

பர்னிச்சர் தொழில் தொடர்பாக ஆண்டுக்கு 5,000 பேருக்கு பயிற்சி அளிக்கும் கூடம், பர்னிச்சர்களின் தரத்தை பரிசோதிக்கும் ஆய்வுக்கூடம், கூட்ட அரங்கம், வீடியோ கான்பரன்சிங் வசதி, தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள் போன்ற அனைத்து வசதிகளும் இதில் இடம் பெறும். இந்தப் பூங்கா மூலம் சுமார் ₹4,500 கோடிக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளதாக சிப்காட் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரத்தடிகள் இறக்குமதியில் தூத்துக்குடி துறைமுகம் நாட்டில் 3–வது இடத்தில் உள்ளது.

இவற்றைக் கொண்டு இங்கேயே சர்வதேச தரத்தில் பர்னிச்சர்கள் தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்களில் கிடைக்கும் ரப்பர் மரத்தடிகள், நீலகிரி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள யூகலிப்டஸ் மரங்கள், திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் உள்ள மலை வேம்பு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள சில்வர் ஓக் மரங்கள் போன்ற மரங்களைப் பயன்படுத்தும் வகையிலும் இந்த பர்னிச்சர் பூங்கா அமைக்கப்படுகிறது.

---

3. பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு: 2 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு இன்று விசாரிக்கும்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு (EWS) மருத்துவ மேற்படிப்பில் 10% இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான வழக்கில் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு பதில் 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணை நடத்தவுள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு மருத்துவ மேற்படிப்பில் 10% இடங்களை ஒதுக்க மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், இதற்கு இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் இடம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது.

இந்நிலையில், மருத்துவக் கல்லூரி முதல் ஆண்டு வகுப்பில் 10% இடங்களை பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு முற்பட்டது. இதையடுத்து, அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதன் காரணமாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற இருந்த நீட் கவுன்சலிங் தள்ளிவைக்கப்பட்டது.

இதனிடையே, ஆண்டுக்கு ₹8 இலட்சம் வருமானம் உள்ளவர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பொதுப் பிரிவினராக கருதப்படுவர் என உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்தது.

இந்த வழக்கை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சந்திரசூட், ஏ எஸ் போபண்ணா, சூர்யகாந்த் ஆகிய 3 பேர் கொண்ட அமர்வு விசாரித்து வந்தது. இந்நிலையில், இந்த வழக்கை ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் விரைந்து விசாரிக்க வேண்டும் என மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். இதனிடையே, இந்த வழக்கு மேற்கண்ட 3 நீதிபதிகள் கொண்ட அமர்வால் நேற்று விசாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வை இரண்டாக குறைத்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என் வி இரமணா நேற்று புதிய உத்தரவு பிறப்பித்தார். அதன்படி இந்த வழக்கை நீதிபதிகள் சந்திரசூட், ஏ எஸ் போபண்ணா ஆகியோர் கொண்ட இரு நீதிபதிகள் அமர்வு இன்று விசாரணை நடத்தவுள்ளது. அதேபோல் மருத்துவ மேற்படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு குறித்த மனுவும் இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

---

4. சென்னை ஐஐடி.யில் 'சாரங் 2022' கலாசார விழா இன்று தொடக்கம்:

சென்னை ஐஐடி.யில் 'சாரங் 2022' கலை– கலாசார விழா வியாழக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது. அதில் 100'க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்ச்சியை மாணவர்களே முன்னின்று நடத்துவர். அந்த வகையில் 27ஆவது ஆண்டாக 'சாரங் 2022' கலை கலாசார விழா மெய்நிகர் முறையில் நடைபெற உள்ளது.

இந்த ஆண்டுக்கான கலாசார விழாவின் கருப்பொருள் 'செவிவழி அறிவு மற்றும் மரபுகள்' என்பதாக இருக்கும்.

---

5. தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக மாற்றுவோம்

தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை மாற்றுவோம் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையில் கூறியிருப்பது:

தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்றிட தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபின், கடந்த 7 மாதங்களில் 3 முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியது. இதன் பயனாக ₹56,230 கோடி முதலீட்டில் 1 லட்சத்து 74,999 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இதில், இதுவரை ₹21,508 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, தமிழ்நாடு நிதிநுட்பக்கொள்கை ஆகிய 2 புதிய கொள்கைகளை முதல்வர் வெளியிட்டுள்ளார். தமிழகத்தின் பொருளாதாரம், 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் என்ற இலக்கை அடைய இக்கொள்கைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கும்.

தரவு மையங்களின் முகவரி: தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கி, நிர்வாகத்திறனை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகு–ம். பல்வேறு துறைகளின் தரவுகளை, ஒருங்கிணைத்து ஆராய்வதன்மூலம், அரசுத் திட்டங்களின் பலன்களை உரிய பயனாளிகளுக்கு கொண்டு செல்வதே தரவுத் தூய்மைத் திட்டத்தின் நோக்கமாகும்.

வெளிப்படைத்தன்மையும், பொறுப்புணர்வையும் மேம்படு–த்தி, கோப்புகளின் மீது விரைவாக முடிவெடுக்கவும் மின் அலுவலக முறையை செயல்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் சொத்துகளைத் திறம்பட மேலாண்மை செய்வதற்குத் தகுந்த தொழில்நுட்ப–த்துடன் கணினிமயமாக்கப்பட்ட அமைப்பு ஒன்று செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

தரவு மையங்களில் ₹30,000 கோடி அளவிலான முதலீட்டை ஈர்த்து, தரவுமைய முதலீடுகளின் முகவரியாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. மேலும், அதிக முதலீட்டை ஈர்ப்பதற்கும் தரவுமையங்கள் அமைப்பதை எளிதாக்குவ–தற்கும் "தரவுமையக்கொள்கை–2021" என்ற புதிய கொள்கையை அரசு வெளியிட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

---

6. சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலா கொள்கை – ஆளுநர்

தமிழகத்தில் சுற்றுலா மூலம் பொருளாதாரம் பொலிவு பெறுவதற்கான திட்டம் வகுக்கப்படும் என்றும், சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலாக் கொள்கை வெளியிடப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில், இந்த ஆண்டில் ₹2,989 கோடி மதிப்பீட்டில் 894 கிமீ சாலை–களை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, ₹407 கோடி மதிப்பீட்டில் பரங்கிமலை – மேடவாக்கம் சாலை சந்திப்பில் கீழ்பாலம், பரங்கிமலை – பூந்தமல்லி – ஆவடி சாலையில் பல்வழி மேம்பாலம், மத்திய கைலாச சந்திப்பில் மேம்பாலம் என மூன்று முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முதல்வரால் அறிவிக்கப்பட்ட, மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தினால், கடந்த நான்கு மாதங்களில் மகளிர் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவீதத்திலிருந்து 61 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திட்டம், பெண்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தி–ற்கு வழிவகை செய்யும். ஒருங்கிணைந்தப் பன்முறை நகரப்போக்குவரத்து வசதிகளை உறுதி செய்வதற்கும், பயணிகளுக்குச் செல்லிடம் வரை போக்குவரத்து இணைப்பை வழங்கவும், சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு சிற்றுந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பார் போற்றும் வரலாறு, செழுமையான பண்பாடு, இயற்கை வளங்களின் அழகியல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன் வாயிலாக, மாநிலத்தில் சுற்றுலா மூலம் பொருளாதாரம் பொலிவு பெறுவதற்கான திட்டம் அரசால் வகுக்கப்படும்.

இந்த ஆண்டு, சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலாக் கொள்கை வெளியிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

7. புதுச்சேரியில் அட்சய பாத்திரம் மதிய உணவுத் திட்டம் தொடக்கம்

புதுச்சேரியில் தனியார் பங்களிப்புடன் அரசுப்பள்ளி மாணவர்களுக்கான அட்சய பாத்திரம் மதிய உணவுத் திட்டத்தை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை சௌந்தரராஜன், முதல்வர் என் ரங்கசாமி ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

---

1. 'சர்வதேச தொற்றுநோய்க்கான தயார்நிலை (Epidemic Preparedness) நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) டிசம்பர் 25

ஆ) டிசம்பர் 26

இ) டிசம்பர் 27 ☑

ஈ) டிசம்பர் 28



✓ டிசம்பர் 27 – சர்வதேச தொற்றுநோய் தயாரிப்பு நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பேரறிவிப்பின் அடிப்படையில் கடந்த 2020ஆம் ஆண்டில் தொற்றுநோய்க்கான தயார்நிலைக்கான முதல் சர்வதேச நாள் குறிக்கப்பட்டது.

✓ WHO'இன் கூற்றுப்படி, இந்த நாள் தொற்றுநோய்களைத் தடுப்பதன் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.

---

2. 'உலக சங்கீத தான்சென் விழா' நடைபெறுகிற மாநிலம் எது?

அ) மத்திய பிரதேசம் ☑

ஆ) மகாராஷ்டிரா

இ) சிக்கிம்

ஈ) அருணாச்சல பிரதேசம்



✓ 'உலக சங்கீத் தான்சென் திருவிழா' மத்திய பிரதேசத்தில் தொடங்கியது. இந்த விழா குவாலியரில் டிச.30ஆம் தேதி வரை நடைபெறும். இது 'உலக சங்கீத் தான்சென்' திரு விழாவின் 97ஆம் பதிப்பாகும். ஓம்காரேஷ்வரில் அமைந்து உள்ள சித்தநாத் கோவிலின் மாதிரியில் மேடை அமைக்க –ப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவில் "தேசிய காளிதாஸ் விருதுகள்" வழங்கப்படும்.

---

3. துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட் –டுள்ள இந்திய அதிகாரி யார்?

அ) விக்ரம் மிஸ்ரி ☑

ஆ) அருண் குமார் சிங்

இ) தினேஷ் பாட்டியா

ஈ) மன்பிரீத் வோஹ்ரா



✓ சீனாவுக்கான இந்தியாவின் முன்னாள் தூதர் விக்ரம் மிஸ்ரி, தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தில் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

✓ 1989 பேட்சில் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியாக இருந்த இவர், பல தூதரக பதவிகளை வகித்துள்ளார். விக்ரம் மிஸ்ரி, 2019'இல் சீனாவுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டார். வெளியுறவு அமைச்சகம் பிரதீப் குமார் இராவத்தை சீனாவுக்கான அடுத்த தூதராக நியமித்தது.

---

4. 6G தொழினுட்பத்தில் 6 பணிக்குழுக்களை அமைத்து உள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

ஆ) திறன் மேம்பாடு & தொழில் முனைவோர் அமைச்சகம்

இ) தகவல் தொடர்பு அமைச்சகம் ☑

ஈ) வர்த்தகம் & தொழில்துறை அமைச்சகம்

✓ தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழுள்ள தொலைத் தொடர்பு துறை, 6G தொழில்நுட்பத்தில் ஆறு பணிக் குழுக்களை அமைத்துள்ளது.

✓ இப்பணிக்குழுவுக்கு நாடு முழுவதும் உள்ள IIT–மெட்ராஸ், IIT–கான்பூர், ஐஐஎஸ்சி போன்றவற்றின் இயக்குநர்கள் தலைமை தாங்குகின்றனர். இந்தியா இந்த ஆண்டு 5G தொழில்நுட்பத்தை செயல்படுத்துகிறது. இக்குழு 6G'இல் உள்ள செயல்முறை & சவால்களை பகுப்பாய்வு செய்யும்.

---

5. 'SMILE' திட்டத்தைச் செயல்படுத்தவுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) கல்வி அமைச்சகம்

ஆ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

இ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ SMILE (Support for Marginalised Individuals for Livelihood and Enterprise) என்பது சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

✓ திருநங்கை/நம்பிகள் மற்றும் யாசகர்களின் நலனுக்கான இரண்டு துணைத் திட்டங்கள் இதில் அடங்கும். இந்தத் திட்டத்தில் மறுவாழ்வு, மருத்துவ வசதிகள், ஆலோசனை –கள், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் பொருளாதார இணைப்புகள் ஆகியவை அடங்கும்.

---

6. 2021 செப்.உடன் முடிவடைந்த 2ஆவது காலாண்டில் இந்தியாவின் நடப்புக் கணக்கு இருப்பு எவ்வளவு?

அ) $9.6 பில்லியன் உபரி

ஆ) $9.6 பில்லியன் பற்றாக்குறை ☑

இ) $0.6 பில்லியன் உபரி

ஈ) $0.6 பில்லியன் பற்றாக்குறை



✓ 2021 செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த இரண்டாவது காலாண்டில் (Q2Fy22) இந்தியாவின் நடப்புக் கணக்கு இருப்பு $9.6 பில்லியன் பற்றாக்குறையை பதிவுசெய்து உள்ளது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1.3 சதவீதமாக உள்ளது.

✓ 2021 ஜூனுடன் முடிவடைந்த முதல் காலாண்டில் நடப்புக் கணக்கு உபரி $6.6 பில்லியன் (GDP'இல் 0.9 சதவீதம்) இருந்தது. ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, நடப்புக்கணக்கு பற்றாக்குறை முக்கியமாக வர்த்தக இடைவெளியை விரிவுபடுத்தியது மற்றும் முதலீட்டு வருமானத்தின் அதிகரிப்பு இதற்கு காரணமாகும்.

---

7. 2022 ஜனவரி.1 நிலவரப்படி, அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியகத்தின்படி, உலகின் மதிப்பிடப்பட்ட மக்கள்தொகை எவ்வளவு?

அ) 3.8 பில்லியன்

ஆ) 5.8 பில்லியன்

இ) 7.8 பில்லியன் ☑

ஈ) 9.8 பில்லியன்



- ✓ அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலகத்தின் படி, 2022 புத்தாண்டு நாளின்படி, உலக மக்கள்தொகை 7.8 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது 74 மில்லியன் அதிகரிப்பு அல்லது 2021 புத்தாண்டு நாளிலிருந்து 0.9% வளர்ச்சி விகிதத்தைக் குறிக்கிறது.
- ✓ உலகளவில் ஒவ்வொரு நொடிக்கும் 4.3 பிறப்புகளும் இரு இறப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. சீனா, 1.4 பில்லிய –ன் மக்களுடன் உலகின் அதிக மக்கட்தொகைகொண்ட நாடாக உள்ளது. மேலும், 2025ஆம் ஆண்டில் இந்தியா சீனாவை முந்திவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

8. பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரை இனங் காண தற்போதுள்ள ஆண்டு வருமான வரம்பு என்ன?

அ) ₹6 இலட்சம்



ஆ) ₹8 இலட்சம் ☑

இ) ₹9 இலட்சம்

ஈ) ₹10 இலட்சம்

- ✓ மூவர்கொண்ட குழுவின் பரிந்துரைக்குப்பிறகு, பொருளா –தாரத்தில் பின்தங்கிய பிரிவினரை (EWS) அடையாளம் காண தற்போதுள்ள ஆண்டு வருமான வரம்பு ₹8 இலட்ச –த்தைத் தொடர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. NEET–PG சேர்க்கையைக் கையாளும்போது உச்சநீதிமன்றம் 10% இடஒதுக்கீடு குறித்த ஐயங்களை எழுப்பியது மற்றும் EWS ஒதுக்கீட்டின் வருமான வரம்பை மறுபரிசீலனை செய்ய மத்திய அரசு குழுவை அமைத்தது.
- ✓ இக்குழுவில் முன்னாள் மத்திய நிதித்துறை செயலாளர் அஜய்பூஷன் பாண்டே உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

---

9. 2020–21ஆம் ஆண்டில் இந்தியாவின் பிறப்பு பாலின விகிதம் என்ன?

அ) 918



ஆ) 920

இ) 937 ☑

ஈ) 951

- ✓ இந்தியாவின் பிறப்பு பாலின விகிதம் (Sex Ratio at Birth – SRB) தேசிய அளவில் 19 புள்ளிகள் உயர்ந்துள்ளது.
- ✓ 2014–15'இல் 918ஆக இருந்த இது, 2020–21இல் 937 ஆக உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் ஆண்டு இறுதி மதிப்பாய்வின்போது இது அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் 640 மாவட்டங்களை உள்ளடக்கிய "பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ திட்டம்" இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. போஷான் டிராக்கர் செயலி நிரப்பு ஊட்டச்சத்தின் நிகழ்நேர கண்கா –ணிப்பை உறுதி செய்கிறது. பிரதமர் மாத்ரு வந்தனா திட்டம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக் –காக செயல்படுத்தப்படுகிறது.

---

10. பெரிய மாநிலங்களுள் முதல் டோஸ் தடுப்பூசிகளை 100 சதவீதம் பதிவுசெய்த முதல் மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) தெலுங்கானா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா

- ✓ 100% முதல் டோஸ் தடுப்பூசிகளை பதிவு செய்த நாட்டின் முதல் பெரிய மாநிலமாக தெலுங்கானா ஆனது. மத்திய அரசின் மதிப்பிடப்பட்ட வயது வந்தோர் மக்கள்தொகை இலக்கின்படி, 2.77 கோடி குடிமக்களுக்கு முதல் டோஸ் தடுப்பூசியை தெலுங்கானா மாநிலம் செலுத்தியுள்ளது.
- ✓ முதல் டோஸின் அடிப்படையில் தேசிய சராசரியைவிட 9 சதவீதமும், இரண்டாவது டோஸில் தேசிய சராசரியை விட 3 சதவீதமும் அம்மாநிலம் முன்னிலையில் உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வேட்பாளர் செலவு உச்ச வரம்பு உயர்வு

உபி., உட்பட 5 மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்க உள்ள நிலையில் வேட்பாளரின் தேர்தல் செலவு உச்ச வரம்பு உயர்த்தப்பட்டு உள்ளது.

தலைமை தேர்தல் ஆணைய அறிவிப்பு:

பெரிய மாநிலங்களில் சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் செலவுத் தொகைக்கான உச்ச வரம்பு 28 லட்சம் ரூபாயில் இருந்து, 40 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது. சிறிய மாநிலங்களுக்கு 20 லட்சம் ரூபாயிலிருந்து, ₹28 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

லோக்சபாவுக்கு பெரிய மாநிலங்களின் வேட்பாளருக்கு 70 லட்சம் ரூபாயாக இருந்த செலவுத் தொகை உச்ச வரம்பு 90 லட்சம் ரூபாயாகவும், சிறிய மாநிலங்களில் 54 லட்சம் ரூபாயில் இருந்து 75 லட்சம் ரூபாயாகாவும் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

2.பிரதமர் பாதுகாப்பில் குறைபாடு? – மத்திய அரசு, பஞ்சாப் தனித்தனியாக விசாரணைக் குழு அமைப்பு

பிரதமர் பாதுகாப்பில் குறைபாடு ஏற்பட்டதாக எழுந்த சர்ச்சை தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம், மாநில அரசு தனித்தனியாக விசாரணைக் குழு அமைத்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக கடந்த புதன்கிழமை பிரதமர் மோடி விமானம் மூலம் பஞ்சாப் சென்றார். மோசமான வானிலை காரணமாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு காரில் செல்ல முடிவு செய்தார்.

ஆனால், விவசாயிகள் போராட்டம் காரணமாக அவரது வாகன அணி வகுப்பு மேம்பாலத்தில் 15 நிமிடத்துக்கும் மேலாக நின்றது. போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததால் தனது பயணத்தை பிரதமர் மோடி ரத்து செய்ததாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. இதனையடுத்து, மத்திய உள்துறை அமைச்சகம் இது தொடரபாக விசாரிக்க மூன்று பேர் கொண்ட

விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. இதற்கு சுதிர் குமார் சக்சேனா தலைமை வகிக்கிறார். குழுவில் உளவுத் துறை இணை இயக்குநர் பல்பீர் சிங் மற்றும் சிறப்பு பாதுகாப்புக் குழுவின் தலைவர் எஸ்.சுரேஷ் ஆயியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேபோல் பஞ்சாப் மாநில அரசு ஓய்வு பெற்ற நீதிபதி மெஹ்தாப் கில், உள்துறை முதன்மைச் செயலாளர் அனுராக் வர்மா தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவானது மூன்று நாட்களில் விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது பஞ்சாபில் நிகழ்ந்த பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து குடியரசுத் தலைவர் முழுமையாக கேட்டறிந்தார். பாதுகாப்பு குறைபாடு குறித்து அவர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

---

3. 2ம் கட்ட பசுமை மின்சக்தி வழித்தடம் – தமிழகம் உட்பட மாநிலங்களுக்கு இடையேயான பகிர்வு அமைப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

இரண்டாம் கட்ட பசுமை மின்சக்தி வழித்தடம் அமைப்பதில் தமிழகம் உட்பட மாநிலங்களுக்கு இடையேயான பகிர்வு அமைப்புக்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்தது.

இதன் மூலம் சுமார் 10,750 சுற்று கிமீ தூரத்துக்கு மின் பகிர்மான வழித்தடம் மற்றும் சுமார் 27,500 மெகாவோல்ட் – ஆம்பியர் அளவுக்கு மின்பரிமாற்ற திறன் கொண்ட துணை மின்நிலையங்கள் அமைக்கப்படும். இத்திட்டம் குஜராத், ஹிமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இடையே மின்தொகுப்பு ஒருங்கிணைப்புக்கு –ம் மற்றும் சுமார் 20 GW புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அனுப்பவும் உதவும்.

இத்திட்டம் மொத்தம் ₹12,031.33 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ளது மற்றும் இதில் மத்திய நிதி உதவி, திட்ட செலவில் 33 சதவீதமாக அதாவது ₹3970.34 கோடியாக இருக்கும். இந்த மின்பகிர்வு அமைப்பு 2021–22ம் ஆண்டு முதல் 2025–26ம் வரை 5 ஆண்டு காலத்தில் அமைக்கப்படும். மத்திய அரசின் நிதியுதவி, மாநிலங்களுக்கு இடையேயான மின்பகிர்வு கட்டணங்களை ஈடுசெய்யவும், மின்சாரத்தை குறைந்த விலையில் வைத்திருக்கவும் உதவும். மத்திய அரசின் உதவியால், நாட்டு மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கிடைக்கும். இத்திட்டம் 2030ம் ஆண்டுக்குள், 450 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் அமைக்கும் இலக்குக்கு உதவும்.

இத்திட்டம், நாட்டின் நீண்ட கால மின்சக்தி பாதுகாப்புக்கும் மற்றும் கார்பன் வெளியேற்றத்தை குறைப்பதன் மூலம் நிலையான சுற்றுச்சூழல் வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவும். மேலும், இத்திட்டம் மின்சாரம் மற்றும் இது தொடர்பான துறைகளில் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தும்.

முதல்கட்ட பசுமை மின்சக்தி வழித்தட திட்டம் ஆந்திரபிரதேசம், குஜராத், ஹிமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் தமிழகத்தில் ஏற்கனவே அமல்படுத்தப்பட்டு வருகிறது. 24 ஜிகாவாட் திறனுள்ள புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டம் 2022ம் ஆண்டுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

4. தேசிய புற்றுநோய் நிறுவன இரண்டாவது வளாகம் இன்று திறப்பு – காணொலி மூலம் பிரதமர் திறந்து வைக்கிறார்

மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவில் அமைந்துள்ள சித்தரஞ்சன் தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் இரண்டாவது வளாகம் கட்டப்பட்டுள்ளது. பிரதமரின் விருப்பத்திற்கு ஏற்ப நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுகாதார வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 530 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு 430 கோடி ரூபாய் நிதி உதவியும் மீதி தொகை மேற்கு வங்க அரசாலும் வழங்கப்பட்டுள்ளன.

---

5. மெட்ரோ சேவையை வண்டலூர் வரை நீட்டிக்கும் திட்டம்: பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பதில்

மெட்ரோ சேவையை வண்டலூர் வரை நீட்டிக்கும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்தார்.

நடப்பாண்டுக்கான சட்டப்பேரவை முதல் கூட்டம் கலைவாணர் அரங்கில் நேற்று தொடங்கியது. ஆளுநர் சிறப்புரையுடன் நேற்று தொடங்கப்பட்ட சட்டப்பேரவைக் கூட்டத்தில் அதிமுக, விசிக கட்சிகள் ஆளுநர் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். தமிழக வரலாற்றில் முதல் முறையாக சட்டப்பேரவை கேள்வி நேரம் மக்களுக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.

இதில், பல்லாவரம் சட்டப்பேரவை உறுப்பினர் கருணாநிதி சென்னை மெட்ரோ ரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிப்பது தொடர்பாக முதல்வரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

சென்னை மெட்ரோ ரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது? என்ற அவரது கேள்விக்கு, "வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தி –ல் சென்னை மாநகருக்கான புதிய பேருந்து முனையம் அமைக்கப்பட்டு வருவதன் காரணமாக, மெட்ரோ ரயில் இணைப்பை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து

கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதனைக்கருதி, இத்தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் பன்னாட்டு நிறுவனத்தின் மூலமாக முடிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் தற்போது இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், பணிகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

1. "Women and girls left behind: Glaring gaps in pandemic responses" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உலக பொருளாதார மன்றம்

ஆ) உலக வங்கி

இ) ஐநா பெண்கள் அமைப்பு ☑

ஈ) NITI ஆயோக்

✓ ஐநா அவையின் பெண்கள் அமைப்பானது சமீபத்தில் "Women and girls left behind: Glaring gaps in pandemic responses" என்ற ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, அரசாங்கத்திடமிருந்து பெண்கள் COVID-19 நிவாரணத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது.

✓ குழந்தைகளுடன் வாழும் வேலைசெய்யும் தாய்மார்களில் குறைந்தது 29 சதவீதம் பேரும் குழந்தைகளுடன் வாழும் வேலை செய்யும் ஆண்களில் 20% பேரும் தங்களின் வேலையை இழந்துள்ளனர். குழந்தைகளுடன் தனித்து வாழும் ஒற்றைப்பெண்களே அதிகம் பின்தங்கியிருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

---

2. அண்மையில் 200 டெஸ்ட் விக்கெட்டுகள் என்ற மைல் கல்லை எட்டிய இந்திய வேகப்பந்து வீச்சாளர் யார்?

அ) முகமது ஷமி ☑



ஆ) இரவிச்சந்திரன் அஸ்வின்

இ) இரவீந்திர ஜடேஜா

ஈ) ஜஸ்பிரித் பும்ரா

✓ முகமது ஷமி சமீபத்தில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் 200 டெஸ்ட் விக்கெட்டுகள் என்ற மைல் கல்லை எட்டினார். 31 வயதான அவர் தனது 55ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனையை எட்டியதால், இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுள் இந்தச் சாதனையை வேகமாக படைத்த மூன்றாவது நபராக அவர் ஆனார்.

✓ கபில்தேவ் (434), இஷாந்த் சர்மா (311), ஜாகீர் கான் (311), மற்றும் ஜவகல் ஸ்ரீநாத் (236) ஆகியோருக்கு பிறகு அவர் உள்ளார்.

---

3. 'பெண்களுக்கான புதிய கொள்கை – 2021' வரைவை வெளியிட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

✓ பள்ளி மற்றும் கல்லூரி பயிலும் பெண்களுக்கான கட்டாய தற்காப்புக் கலைப் பயிற்சி போன்ற அம்சங்களை உள்ளடக்கிய 'பெண்களுக்கான புதிய கொள்கை-2021'ஐ தமிழ்நாடு அரசு சமீபத்தில் வெளியிட்டது.

✓ இக்கொள்கை அனைத்து போக்குவரத்து முறைகளையும் பெண்களுக்கு ஏற்றதாக மாற்ற முயற்சி செய்கிறது.

---

4. இந்திய இராணுவத்தின் "குவாண்டம் கம்ப்யூட்டிங் ஆய்வகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் (AI)" அமைக்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) மகாராஷ்டிரா

இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) ஹரியானா

✓ இந்திய இராணுவம், மத்திய பிரதேசத்தில் உள்ள மோவ், இராணுவ தொலைத்தொடர்பு பொறியியல் கல்லூரியில் 'குவாண்டம் கம்ப்யூட்டிங் ஆய்வகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம்' ஆகியவற்றை அமைத்துள்ளது.

✓ இந்த மையங்கள் ஆயுதப்படைகளால் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ளும். இது தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தின் ஆதரவுடன் இந்திய இராணுவத்தால் நிறுவப்பட்டுள்ளது.

---

5. உலகில் 'அருமண் பொருள்' உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

அ) இந்தியா



ஆ) ஜப்பான்

இ) சீனா ☑

ஈ) அமெரிக்கா

✓ அருமண் பொருட்களை உற்பத்தி செய்யும் உலகின் முன்னணி நிறுவனமாக 'ஹினா' உள்ளது. சமீபத்தில், சீனாவில் மூன்று அரசுக்கு சொந்தமான அருமண் சுரங்க நிறுவனங்கள் 'சீனா ரேர் எர்த்ஸ்' குழுமம் என்ற புதிய நிறுவனத்தை உருவாக்குகின்றன. சீனா தனது அருமண் பொருட்களின் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தி வருகிறது. அருமண் என்பது பதினேழு கனிமங்களின் கலவையாகும். இது நுகர்வோர் மின்னணுவியல் மற்றும் இராணுவ உபகரணங்களின் உற்பத்தியில் முதன்மைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகிறது.

---

6. தேசிய 'விமான விளையாட்டுக் கொள்கை' வரைவை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகம்

ஆ) சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் ☑

இ) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் பொதுமக்களின் கருத்துக்காக தேசிய விமான விளையாட்டுக் கொள்கை வரைவை வெளியிட்டுள்ளது.

✓ இக்கொள்கையானது இந்தியாவின் விமான விளையாட்-டுக்கான திறனை ஊக்குவிக்க எண்ணுகிறது மற்றும் பாதுகாப்பில் சிறந்த நடைமுறைகளை உறுதிசெய்வதில் கவனஞ்செலுத்துகிறது. 2030'க்குள் இந்தியாவை சிறந்த விமான விளையாட்டு நாடுகளுள் ஒன்றாக மாற்றுவதுதான் இக்கொள்கையின் நோக்கம்.

---

7. பின்வரும் எந்தத்துறைக்கு 'பிரதமர் உயர்சிறப்பு விருது' வழங்கப்படுகிறது?

அ) விளையாட்டு

ஆ) பொது நிர்வாகம் ☑

இ) தொழில்முனைவு

ஈ) கல்வி

✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர் துறையானது கடந்த 2006ஆம் ஆண்டு முதல் "பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கான பிரதமர் உயர் சிறப்பு விருதுகளை" வழங்குகிறது. மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் சமீபத்தில் பிரதமரின் சிறப்பு விருதுக்கான இணையதளத்தைத் தொடங்கினார். விருதுக்கான பதிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன.

✓ இந்த ஆண்டு பரிசுத்தொகை ₹10 இலட்சத்திலிருந்து ₹20 இலட்சமாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் மாவட்ட ஆட்சியர்களின் செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில், கடந்த 2020'இல் இத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டது.

---

8. 2021–22ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வருடாந்திர ஏற்றுமதி இலக்கு என்ன?

அ) $100 பில்லியன்

ஆ) $200 பில்லியன்

இ) $400 பில்லியன் ☑

ஈ) $500 பில்லியன்



✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த 2021 டிசம்பரில் இந்தியா $37.29 பில்லியன் மதிப்பிலான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. ஏப்ரல் – டிசம்பரில் இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி கிட்டத்தட்ட $300 பில்லியனாக இருந்தது.

✓ இது ஆண்டுக்காண்டு 48.85 சதவீதம் மற்றும் 2019ஆம் ஆண்டின் இதே காலகட்டத்திற்கு எதிராக 26 சதவிகிதம் அதிகரித்துள்ளது. எனவே, இந்தியா தனது வருடாந்திர ஏற்றுமதி இலக்கில் மூன்றில் ஒரு பங்கை எட்டியுள்ளது.

✓ அதாவது 2021–22 நிதியாண்டின் முதல் 9 மாதங்களில் தனது வருடாந்திர இலக்கான $400 பில்லியனில் 1/3 பங்கு. பொறியியல் பொருட்கள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் இரத்தினங்கள் மற்றும் நகைகளுக்கான அதிக தேவையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

---

9. 2021 – DRDO நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) ஆத்மநிர்பார் பாரத்

ஆ) ஏற்றுமதி ☑

இ) முதன்மை பாதுகாப்பு தொழில்நுட்பங்கள்

ஈ) வலிமை மற்றும் அறிவியல்

✓ DRDO அதன் 63ஆவது நிறுவன நாளை 2021 ஜன.01 அன்று அனுசரித்தது. DRDO, கடந்த 1958ஆம் ஆண்டில் 10 ஆய்வகங்களுடன் பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டது.

✓ தற்போது, டிஆர்டிஓ, ஏரோநாட்டிக்ஸ், போர் வாகனங்கள், எலக்ட்ரானிக்ஸ், இன்ஸ்ட்ரூமென்டேஷன், அட்வான்ஸ்டு கம்ப்யூட்டிங், சிமுலேஷன் உள்ளிட்ட பல துறைகளுடன் இணைந்து செயல்படுகிறது. நடப்பு 2021ஆம் ஆண்டிற்கான DRDO நாளின் கருப்பொருளாக 'ஏற்றுமதி'யை DRDO தலைவர் அறிவித்தார்.

---

10. INSACOG என்பது மரபணு வரிசைமுறை மற்றும் COVID திரிபுகளின் மாறுபாட்டைக் கண்காணிப்பதற்காக எந்த நாட்டால் அமைக்கப்பட்ட மன்றமாகும்?

அ) அமெரிக்கா

ஆ) இரஷ்யா

இ) இந்தியா ☑

ஈ) UK

✓ மரபணு வரிசைமுறை மற்றும் COVID–19 திரிபுகளின் மாறுபாட்டைக் கண்காணிக்க, இந்திய மத்திய சுகாதார அமைச்சகம், கடந்த 2020'இல் இந்திய SARS–CoV–2 ஜெனோமிக்ஸ் கூட்டமைப்பை (INSACOG) அமைத்தது.

✓ INSACOG ஆனது இந்திய மத்திய சுகாதார அமைச்சகம், உயிரி–தொழில்நுட்பத் துறை, CSIR மற்றும் ICMR ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கப்பட்டது. INSACOG ஆய்வகம், COVID நேர்மறை மாதிரிகளை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்துமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கையில் ஓபிசிக்கு 27% இடஒதுக்கீடு வழங்கும் அரசாணை செல்லும்: உச்சநீதி மன்றம் உத்தரவு

தற்போதைய இடஒதுக்கீடு நடைமுறைகளின்படி 2021–22 கல்வி ஆண்டுக்கான இளநிலை, முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வை நடத்தலாம். மருத்துவப் படிப்பு சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான (ஓபிசி) 27 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவ இளநிலை படிப்புகளில் 15% இடங்களையும், மருத்துவ முதுநிலை படிப்புகளில் 50% இடங்களையும் அகில இந்திய தொகுப்புக்கு மாநில அரசுகள் அளித்து வருகின்றன.

அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (ஓபிசி) 27 சதவீத இடஒதுக்கீடும், பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினருக்கு (EWS) 10 சதவீத இடஒதுக்கீடும் வழங்கப்படுகிறது. இதை உறுதி செய்து கடந்த ஜூலையில் மத்திய அரசு, அரசாணையை வெளியிட்டது.

இந்த அரசாணையை எதிர்த்துஉச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு நிலுவையில் இருந்ததால் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வை நடத்த முடியவில்லை. இதன் காரணமாக அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. இதைக் கண்டித்து கடந்த டிசம்பரில் நாடு

முழுவதும் மருத்துவ மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதைத்தொடர்ந்து மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று வழக்கு விசாரணை விரைவுபடுத்தப்பட்டது.

இதனிடையே, உச்சநீதிமன்ற உத்தரவின்படி, பொருளா –தாரத்தில் நலிந்த பொதுப் பிரிவினருக்கு வருமான உச்ச வரம்பாக ரூ.8 லட்சம் நிர்ணயிக்கப்பட்டதுகுறித்து ஆய்வு செய்ய நிதித்துறை முன்னாள் செயலாளர் அஜய்பூஷண் பாண்டே தலைமையில் 3 பேர் கொண்ட குழு அமைக்கப் –பட்டது. இந்தக் குழு கடந்த டிசம்பர் 31–ம்தேதி தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.

அதில் பொருளாதாரத்தில் நலிந்த பொதுபிரிவினருக்கு ₹8 லட்சம் உச்சவரம்பு நியமிக்கப்பட்டது நியாயமானது என்று தெரிவிக்கப்பட்டது. இதை உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு பதிவு செய்தது.

இந்தச் சூழலில் இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் சந்திர சூட், போபண்ணா அமர்வு இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அதில் கூறியிருப்பதாவது:

பாண்டே கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கிறோம். தற்போதைய இடஒதுக்கீடு நடைமுறைகளின்படி 2021–22 ஆண்டு இளநிலை, முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வை நடத்தலாம். அதாவது, மருத்துவப்படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு, பொருளாதாரத்தில் நலிந்த பொது பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு நடைமுறையைப் பின்பற்றி கலந்தாய்வு நடத்தலாம்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கவகை செய்யும் அரசாணை செல்லும். இதுகுறித்து தொடர்ந்து விசாரிக்கத் தேவையில்லை. எனினும், பொருளாதாரத்தில் நலிந்தபொது பிரிவினருக்கான வருமான உச்சவரம்பு ரூ.8 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டது குறித்து மார்ச் 3–வது வாரத்தில் இறுதி விசாரணை நடத்தப்படும். இதுதொடர்பான பாண்டே கமிட்டியின் அறிக்கை ஆய்வு செய்யப்படும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

---

2. 'பொறியியல் புரட்சிகள்' என்ற தலைப்பில் விஞ்ஞானி டில்லிபாபு எழுதிய நூல் இன்று வெளியீட்டு விழா: இணைய வழியில் நடைபெறுகிறது

ராணுவ விஞ்ஞானி டில்லிபாபு எழுதிய 'பொறியியல் புரட்சிகள்' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 6 மணிக்கு இணைய வழியில் நடைபெறுகிறது.

தேசிய வடிவமைப்பு, ஆராய்ச்சி மன்றத்தின் (என்டிஆர்எஃப்) இயக்குநரான ராணுவ விஞ்ஞானி டாக்டர் வி.டில்லிபாபு, அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பாக பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். அந்த வரிசையில், தேசிய அளவில் வளர்ச்சியை கட்டமைத்த அறிவியல் தொழில்நுட்ப நிகழ்வுகள் தொடர்பாக 'பொறியியல் புரட்சிகள்' என்ற தலைப்பிலான நூலை டில்லிபாபு எழுதியுள்ளார். தொழில்நுட்ப முயற்சிகளில் இந்திய விஞ்ஞானிகள் சந்தித்த சவால்கள், சாதனைகள் குறித்த தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூல் வெளியீட்டு விழா இணைய வழியில் இன்று (ஜன.8) மாலை 6 மணிக்கு நடக்க உள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தலைமையில் நிகழும் நூல் வெளியீட்டு விழாவில், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, எழுத்தாளர் திலகவதி ஐபிஎஸ் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர். ராணுவ விஞ்ஞானி வி.டில்லிபாபு ஏற்புரை நிகழ்த்துகிறார்.

திசையெட்டு பதிப்பகம், ஆளுமைச் சிற்பி மாத இதழ் இணைந்து இந்த நிகழ்வை வழங்குகின்றன. எழுத்தாளர் பிரியசகி, ஆளுமைச் சிற்பி மாத இதழ் ஆசிரியர் மெ.ஞானசேகர் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்கின்றனர். விழா நேரலையை https://youtu.be/W9BoXP_xRWc என்ற வலைதளம் மூலமாக அனைவரும் காணலாம்.

---

3. கூட்டுறவு சங்க இயக்குநர்களின் பதவிக்காலம் 3 ஆண்டாக குறைப்பு; பேரவையில் மசோதா நிறைவேற்றம்:

கூட்டுறவு சங்க இயக்குநர்கள் குழுவின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாக குறைக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு பேரவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக, இந்த சட்ட முன்வடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள் குழுவின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாக குறைக்க வகை செய்யும் சட்டமுன்வடிவை சட்டப்பேரவையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று அறிமுகம் செய்தார். இந்தசட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்ப்பதாக கூறி அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அதன்பிறகு இந்த சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வு செய்யப்பட்டு, குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

முறைகேடு புகார்கள்

இந்த சட்ட முன்வடிவில் கூறப்பட்டிருப்பதாவது: கூட்டுறவு சங்கங்களில் நிதி முறைகேடுகள் மற்றும் மோசடிகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்தும், கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களிடம் இருந்தும் பல புகார்கள் வரப்பெற்றுள்ளன. கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டதில் அதிக அளவிலான நிதி முறைகேடுகளும், போலி நகைகள் மீதான கடன்கள் மற்றும் கோடிக்கணக்கில் போலிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது போன்றவை வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே, கூட்டுறவு சங்கங்களின் நலனை பாதுகாக்கும் நோக்கில், அவற்றின் நிர்வாகங்களை நெறிப்படுத்தவும் முறையான ஆளுகையை உறுதி செய்யவும், கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளின் திறனை அதிகரிக்கவும், சங்கங்களின் இயக்குநர்கள் குழுவின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாக குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

அத்துடன் ஒரு சட்டத்தை மேற்கொள்வதன் மூலம் இந்தியஅரசியலமைப்பின் 9–பி பகுதி யின் வகைமுறைகளுடன் இசைந்து செய்யப்பட்ட திருத்தங்களுக்கு முந்தைய 1983–ம் ஆண்டு கூறப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தில் இருக்கும் சில வகைமுறைகளை மீட்டெடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

4. சட்டப்பேரவையில் 13 மசோதாக்கள் நிறைவேறின

தமிழகத்தில் 6 மாநகராட்சிகள், 2 காவல் ஆணையரகங்களை புதிதாகத் தொடங்கியது உட்பட 13 சட்ட மசோதாக்கள் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டன.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் இடையில், தாம்பரம், காஞ்சிபுரம், சிவகாசி, கடலூர், கும்பகோணம், கரூர் ஆகிய 6 புதிய மாநகராட்சிகள் உருவாக்கம் தொடர்பான சட்ட மசோதாக்களை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

தொடர்ந்து, நகர ஊரமைப்பு சட்டத்தில் நிலம் அல்லது கட்டிட மேம்பாட்டுக்காக வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான காலஅளவை ஐந்திலிருந்து 8 ஆண்டுகளாக உயர்த்துவது தொடர்பான சட்ட முன்வடிவை அமைச்சர் சு.முத்துசாமி தாக்கல் செய்தார்.

பேரவைக் கூட்டத்தில் இறுதிநாளான நேற்று சென்னை மாநகர காவல் சட்டத்தை, புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள ஆவடி, தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கான சட்ட மசோதாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்விளை பொருள் சந்தைப்படுத்துதல் திருத்த சட்ட மசோதவை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதாவை அமைச்சர் எஸ்.ரகுபதி, நிதி ஒதுக்க சட்ட மசோதாவை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

இதுதவிர, தமிழக அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள், அரசுக் கழகங்கள், சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளஅதிகார அமைப்புகளின் பணியிடங்களுக்கான ஆள்சேர்க்கை தொடர்பான கூடுதல் பணிகளை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்கு வழி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல்செயற்பணிகள்) சட்ட மசோதவை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

இந்த சட்ட மசோதாக்கள் அனைத்தும் நேற்றே பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன.

---

5. ஒமைக்ரான் பாதிப்பு குறைவா? – கூடுதல் எச்சரிக்கை அவசியமில்லையா?

2021ஆம் ஆண்டுடன் கரோனா விடை பெற்றுவிடும் என்று நினைத் திருந்த நிலையில், கரோனாவின் தாக்கம் மீண்டும் உச்சமடைந்துவருகிறது. 2021 டிசம்பர் பிற்பகுதியில் ஒமைக்ரான் (Omicron) சென்னையில் நுழைந்ததால், புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குத் தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டது. பத்தாம் வகுப்புக்குக் கீழுள்ள மாணவர்களுக்குப் பள்ளிகள் மூடப்பட்டன. பல மாநிலங்களில் இரவு ஊரடங்கு அமலுக்கு வந்தது.

இரண்டாம் அலையின் உச்சத்தைச் சரியாகக் கணித்த கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பால் கட்டுமன், ஒமைக்ரான் பரவலின் வளர்ச்சிப் போக்கை 'அதிவேகம்' என்கிறார். தினசரி கரோனா பாதிப்பு பத்துநாட்களுக்குள் நான்கு மடங்காக, அதாவது நாற்பதாயிரமாக உயர்ந்திருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அபரிமிதமாக அதிகரித்தபோதும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ஒமைக்ரான் வேற்றுருவால் கடுமையான பாதிப்பு ஏற்படும் சாத்தியம் குறைவு என்பதை இது உணர்த்தினாலும், இதில் நிறைய ஆபத்துகள் மறைந்தும் இருக்கலாம். ஒமைக்ரானின் வீரியத்தை இந்த நேரத்தில் குறைத்து மதிப்பிடுவது பேராபத்தில் முடியக்கூடும்.

ஒமைக்ரான் பாதிப்பு

பொதுவாக, வைரஸ் எப்படிப்பட்ட தாக்கத்தை இனிமேல் ஏற்படுத்தும் என்பதை முழுமையாகக் கணிக்க முடியாது. இருப்பினும், ஆய்வக விலங்குகள் மீதும் மனித திசுக்களின் மீதும் நடத்தப்பட்ட புதிய ஆய்வுகள், மற்ற வேற்றுருக்களைப் போல் 'ஒமைக்ரான்' வேற்றுரு நுரையீரலுக்குள் தீவிரமாகப் பரவாது என்று கணித்துள்ளன. எலிகள், வெள்ளெலிகள் ஆகியவற்றின் மீதான ஆய்வுகளில், ஒமைக்ரான் தொற்று குறைவான பாதிப்புகளையே ஏற்படுத்தியது. அந்தப் பாதிப்பும் மேல் சுவாசக்குழாய், மூக்கு, தொண்டை, மூச்சுக்குமாய் ஆகியவற்றில் மட்டும் பெரும்பாலும் இருந்துள்ளது. நுரையீரலுக்குக் குறைவான தீங்கையே விளைவித்திருந்தது. சுவாச மண்டலத்தின் மேல்பகுதியையே ஒமைக்ரான் பாதிக்கும் என்கிற கருத்துக்கான தொடக்கப்புள்ளி இது.

கரோனா பாதிப்பைப் பொறுத்தவரை, அது மூக்கு, வாய், தொண்டை ஆகியவற்றில் ஏற்படுத்தும் பாதிப்பினால் பெரிய ஆபத்து ஏற்படுவதில்லை. நுரையீரலுக்குள் நுழையும்போதுதான் உயிருக்கு ஆபத்தானதாக மாறுகிறது. கடந்த புதன் அன்று, ஒமைக்ரான் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட எலிகள், வெள்ளெலிகள் குறித்து ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கை, ஒமைக்ரானால் அவற்றின் நுரையீரல் லேசாகப் பாதிக்கப்பட்டுள்ளது, அவற்றின் எடை குறையவில்லை, மரணத்துக்கான சாத்தியம் மிகவும் குறைவாக உள்ளது என்று தெரிவிக்கிறது.

ஒமைக்ரான் பாதிப்பு நுரையீரலில் ஏன் குறைவு?

நுரையீரல் செல்களின் மேற்பரப்பில் TMPRSS2 எனும் புரதம் இருக்கிறது. இந்தப் புரதமே நுரையீரலுக்குள்

கரோனா வைரஸ் நுழைவதற்கு வழிவகுக்கிறது. ஆனால், ஒமைக்ரான் வைரஸ் இந்தப் புரதத்தை இறுக்கமாகப் பற்றிக்கொள்ளவில்லை. இதன் விளைவாக, டெல்டா வேற்றுருவைப் போல், ஒமைக்ரான் வேற்றுருவால் நுரையீரலுக்குள் ஊடுருவிப் பாதிப்பை ஏற்படுத்த முடியவில்லை. நுரையீரலுக்குள் நுழைந்தால் வைரஸ் அழிக்கப்படும் என்பதாலோ என்னவோ, ஒமைக்ரான் இந்தப் புரதத்தைப் பற்றிக்கொள்ளும் இயல்பற்றதாகத் தன்னைத் தகவமைத்துக்கொண்டிருக்கலாம்.

TMPRSS2 புரதம் இல்லாத செல்களைக் கொண்டிருக்கும், சுவாசக் குழாய், மூக்கு, தொண்டை ஆகியவற்றில் மட்டும் ஒமைக்ரான் பாதிப்பு அதிகமாக இருப்பதால், அது எளிதாகவும் அதிவேகமாகவும் பரவுகிறது. ஆனால், இது ஆரம்பக்கட்ட சிந்தனையே, இந்தக் கருதுகோளை அங்கீகரிப்பதற்கு இன்னும் கூடுதல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கள உண்மை நிலவரம்

இரண்டாம் அலையின் உச்சத்தில் தினசரி பாதிப்பு நான்கு லட்சமாக இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது, தற்போதைய தினசரி பாதிப்பு குறைவாக இருப்பதைப் போலத் தோன்றலாம். குறைவான அரசுப் பதிவுகள், பெரிய நகரங்களில் அதிகமாகப் பரவும் முறை உள்ளிட்ட காரணங்களால், தினசரி பாதிப்பு எண்ணிக்கை உண்மையான களநிலவரத்தைப் பிரதிபலிக்காது.

பிசிஆர் பரிசோதனை விகிதமே உண்மையான ஆபத்தை உணர்த்தும். இரண்டாம் அலையின் உச்சத்தில் பிசிஆர் பரிசோதனையின் நேர்மறை முடிவுகளின் விகிதம் 25 சதவீதம் என்றிருந்தது. டிசம்பர் 27 அன்று 0.5 சதவீதத்துக்கும் கீழே சென்றிருந்த அது, தற்போது மும்பையில் 17 சதவீதத்தை நெருங்கிவிட்டது. மற்ற நகரங்களிலும் அதிவேகமாக உயர்ந்துவருகிறது. ஒமைக்ரான் எவ்வளவு வீரியத்துடன் பரவுகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

தடுப்பாற்றலும் தயார்நிலையும்

புதிய அலை அச்சுறுத்தலாக விளங்கினாலும், அதை எதிர்கொள்வதற்குத் தற்போது நாடு தயார் நிலையில் இருப்பது நம்பிக்கையளிக்கிறது. இந்தியாவில் 44 சதவீத மக்களுக்கு இரண்டு தவணைத் தடுப்பூசியும் போடப்பட்டிருக்கிறது. இத்துடன் கோடிக்கணக்கானோர் முந்தைய தொற்றினால் பெறப்பட்ட நோயெதிர்ப்பாற்றலையும் கொண்டிருக்கின்றனர். முக்கியமாக ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் நடத்தப்பட்ட தேசிய செரோ-சர்வேயில் 68 சதவீதத்தினர் ஏற்கெனவே கோவிட் ஆன்டிபாடிகளைக் கொண்டிருந்தனர். சமீபத்திய சர்வேயில், அது இன்னும் அதிகரித்திருக்கிறது.

ஒப்பீட்டளவில் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பும் தயார் நிலையில் உள்ளது. இரண்டாம் அலையில் கற்ற பாடங்கள், மருத்துவர்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் கூடுதல் திறன்மிக்கவையாக மாற்றியுள்ளன. தமிழ்நாடு அரசும் கோவிட் சிறப்பு மருத்துவமனைகளைத் தயார்நிலையில் வைத்திருக்கிறது.

எச்சரிக்கை தேவை

ஒமைக்ரான் தொற்றால் கடுமையான பாதிப்போ மரணமோ ஏற்படும் சாத்தியம் குறைவாக இருப்பது போல் தோன்றினாலும், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய அவசியத்தை மருத்துவர்கள் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்கள்.

ஒமைக்ரான் வேற்றுருவின் ஆரம்ப கட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் இளம்வயதினர், அவர்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படும் சாத்தியம் முந்தைய வேற்றுருக்களிலும் குறைவாக இருந்தது. மேலும், முந்தைய கரோனா தொற்றாலோ தடுப்பூசியாலோ நோயெதிர்ப்பாற்றல் பெற்றவர்களையே ஒமைக்ரான் பெருமளவில் பாதித்திருக்கிறது. எனவே, தடுப்பூசி போடப்படாத வயதானவர்களை ஒமைக்ரான் எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்த தெளிவு இல்லை. குறிப்பாக இந்திய மக்கள்தொகை, நெரிசலான வாழ்க்கை முறை, அதிக ஊட்டச்சத்துக் குறைபாடு, நீரிழிவு, காசநோய் போன்ற காரணிகள் மக்களை அதிக ஆபத்தில் தள்ளக்கூடும்.

சமூகப் பொறுப்புணர்வு அவசியம்

கரோனா இரண்டாம் அலை, அதிகார வர்க்கத்தின் போதாமையையும் அரசியல்வாதிகளின் இயலாமையையும் வெட்ட வெளிச்சமாக்கியது. தடுப்பூசி போதுமான அளவு கிடைக்காத நிலையிலும், அது இந்தியாவில் தயாரிக்கப்பட்டது என்கிற பெருமிதம் எஞ்சியிருந்தது. மிகப் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடிய மதநிகழ்வுகளும், தேர்தல் பரப்புரைகளும் ஊக்குவிக்கப்பட்டன.

புதிய ஆண்டில் உருவாகிவரும் புதிய அலையின் காலகட்டம் இரண்டாம் அலையின் காலகட்டத்துடன் ஒத்துப்போகிறது. தற்போதும், பல மாநிலங்கள் தேர்தலை எதிர்கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் நாம் அனைவரும் சமூகப் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும். தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை சோப்பால் கழுவுதல், கூட்டங்களைத் தவிர்த்தல், தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல் உள்ளிட்ட கரோனா தடுப்பு நடைமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

---

6. ஆண்டு தேசிய வருமானம் 2021-2022, முதல் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகள்

மத்திய புள்ளிவிவரம் & திட்ட நடைமுறைப்படுத்துதல் அமைச்சகத்தின் தேசிய புள்ளியியல் அலுவலகம் 2021-2022 நிதியாண்டிற்கான ஆண்டு வருமானத்தின் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.

2021-22-ம் ஆண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) அல்லது நிலையான விலை மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ. 147.54 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக 2020-2021-ம் ஆண்டின் தற்காலிக மதிப்பீட்டின்படி இது 135.13 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. 2021-2022-ம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி 9.2

சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021–ம் ஆண்டில் இது 7.3 சதவீதமாக இருந்தது.

தற்போதைய விலைமதிப்பின் அடிப்படையிலான 2021–2022–ம் ஆண்டுக்கான ஜிடிபி ரூ 232.15 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021–ம் ஆண்டில் தற்காலிக மதிப்பீடுகளின்படி இது 197.46 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. 2021–22–ம் ஆண்டில் 17.6 சதவீதம் என்னும் அளவில் வளர்ச்சி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனிநபர் வருமானம் மற்றும் இதர விவரங்கள் அறிக்கைகள் 1 முதல் 4 வரையில் வழங்கப்பட்டுள்ளன.

நிலையான விலைமதிப்புள்ள பொருள்களுக்கான வரியைப் பெறுவதில் வால்யூம் எக்ஸ்ட்ராபொலேஷன் என்ற முறைப்படி எண்ணிக்கையில் வளர்ச்சியைப் பொறுத்து வரி விதிக்கப்படும். பொருட்களுக்கும், சேவைகளுக்குமான வரி கணக்கிடப்பட்டு, மொத்த வரி அளவு கணக்கிடப்படுகிறது.

---

7. 3–வது தேசிய தண்ணீர் விருதுகளை அறிவித்தார் மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சர்.

சிறந்த மாநிலங்களுக்கான பிரிவில் தமிழ்நாட்டிற்கு மூன்றாம் பரிசு

3–வது தேசிய தண்ணீர் விருதுகளை, மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத், புதுதில்லியில் இன்று அறிவித்தார். 2020–ம் ஆண்டுக்கான இந்த விருதில், நீர்வளத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்கான சிறந்த மாநிலங்களுக்கான பிரிவில், தமிழ்நாட்டிற்கு மூன்றாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் உத்தரப்பிரதேசம் முதல்பரிசையும், ராஜஸ்தான் இரண்டாம் பரிசையும் பெறுகின்றன.

தென் மாநிலங்களில், இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய சிறந்த கிராமப் பஞ்சாயத்துக்கான பிரிவில், செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளப்புத்தூர் ஊராட்சி 2–ம் பரிசையும், சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பிரிவில், மதுரை மாநகராட்சி 3–வது பரிசையும், சிறந்த பள்ளிக்கூடங்களுக்கான பிரிவில், காவேரிப்பட்டிணம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி முதல் பரிசையும், புதுச்சேரி, அமலோற்பவம் லூர்து அகாடமி 2–ம் பரிசையும், புதுச்சேரி மனப்பட்டு அரசு நடுநிலைப் பள்ளி 3–ம் பரிசையும் பெற உள்ளன.

சிறந்த தொழிற்சாலைகளுக்கான பிரிவில், தமிழ்நாட்டில் உள்ள ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் (ஹுண்டாய் கார் தொழிற்சாலை)–க்கு இரண்டாம் பரிசும், சிறந்த தொண்டு நிறுவன பிரிவில் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா–வுக்கு 2–ம் பரிசும் வழங்கப்பட உள்ளது.

விருது அறிவிப்பு நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத், வாழ்க்கைக்கு தண்ணீர் மிகவும் அடிப்படையானது என்றார். இந்தியாவின் தற்போதைய தண்ணீர் தேவை, ஆண்டுக்கு சுமார் 1,100 பில்லியன் கன மீட்டர் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இது 2050–ம் ஆண்டு வாக்கில், 1,447 பில்லியன் கன மீட்டராக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதார நாடான இந்தியாவிற்கு, தண்ணீர் வளம் மிக முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார். உலகின் மொத்த மக்கள் தொகையில் 18% பேர் இந்தியாவில் வசிக்கும் நிலையில், உலகின் புதுப்பிக்கத்தக்க தண்ணீர் வளத்தில் 4% தான் இந்தியாவில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

தண்ணீர் சுழற்சியில், மேற்பரப்பில் கிடைக்கும் தண்ணீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்த அங்கம் என்பதால், ஒன்றுபட்ட தேசிய தண்ணீர் விருதை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தே இந்த விருதுகள் ஏற்படுத்தப்பட்டதாகவும் மத்திய அமைச்சர் திரு.ஷெகாவத் தெரிவித்தார்.

---

8. பந்துவீச தாமதமானால் 1 ஃபீல்டர் குறைப்பு: ஐசிசியின் புதிய விதிமுறை

சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு அணி பந்துவீச நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக நேரம் எடுத்துக் கொண்டால், 30 யார்டு வட்டத்துக்கு வெளியே 1 ஃபீல்டர் குறைக்கப்பட வேண்டும் என்ற புதிய விதியை ஐசிசி வெள்ளிக்கிழமை அறிவித்தது.

வழக்கமாக அந்த இடத்தில் 5 ஃபீல்டர்கள் (முதல் 6 ஓவர்க–ளுக்குப் பிறகு) அனுமதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்புதிய விதிமுறை இம்மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகிறது. பந்துவீச்சு தாமதத்துக்கு ஏற்கனவே, புள்ளிகள் குறைப்பு, அணியினருக்கான ஆட்ட ஊதியத்தில் அபராதம் ஆகிய விதிமுறைகள் அமலில் இருக்கும் நிலையில், தற்போது கூடுதலாக இந்த ஃபீல்டர் குறைப்பு விதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதியின்படி, பந்துவீச்சுக்கென நிர்ணயிக்கப்–பட்ட நேரத்தின் முடிவில் பௌலிங் செய்யும் அணி கடைசி ஓவரின் முதல் பந்தை வீசும் நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் போனால், நிர்ணயிக்கப்பட்ட நேரம் முடிவதிலிருந்து எஞ்சியிருக்கும் ஓவர்கள் நிறைவடையும் வரை 30 யார்டுக்கு வெளியே 5 ஃபீல்டர்களுக்கு பதிலாக, 4 ஃபீல்டர்களே நிறுத்தப்பட வேண்டும்.

இதுதொடர்பான அறிவுறுத்தலை ஃபீல்டிங் செய்யும் அணியின் கேப்டன், பேட்டர், லெக் நடுவர் ஆகியோருக்கு பௌலிங் சைடில் இருக்கும் நடுவர் வழங்குவார். அனைத்து ஃபார்மட்டுகளிலும் ஆட்டத்தின் வேகத்தை அதிகரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஐசிசி கிரிக்கெட் கமிட்டி வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் இந்த புதிய விதி சேர்க்கப்பட்டுள்ளது.

---

9. பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல்பெண் நீதிபதி நியமனம்

பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்திற்கு முதன்முறையாக ஒரு பெண் நீதிபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

லாகூர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியான ஆயிஷா மாலிக் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு

பெறுகிறார். இதற்கு பாகிஸ்தானின் சட்ட கமிஷன் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. ஹாவார்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற நீதிபதி ஆயிஷா மாலிக் முன்னணி கார்ப்பரேட் மற்றும் சட்ட ஆலோசனை மையம் நடத்தி வந்தார்.

பின்னர் லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்–டு 20 ஆண்டுகள் பணியாற்றி தற்போது பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாகியிருக்கிறா–ர். கரும்பு விவசாயிகளுக்கு கூலி வழங்குதல், தேர்தலில் சொத்து அறிவிப்பு வெளியிடுதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய வழக்குகளில் தீர்ப்பு அளித்துள்ளார்.

---

10. சீனா மீண்டும் ஒரு சாதனை 7 கோடி டிகிரி வெப்பத்தில் செயற்கை சூரியன் தகதக...ஒரிஜினலை விட 5 மடங்கு அதிக வெப்பம்

சீனா உருவாக்கி உள்ள செயற்கை சூரியன் ஏழு கோடி டிகிரி செல்சியசில் தொடர்ந்து 17 நிமிடங்கள் ஒளி வீசி சாதனை படைத்துள்ளது. இது சூரியனை விட 5 மடங்கு அதிக வெப்பமாகும். உலக நாடுகளில் அரசியல், எல்லை பிரச்னை, கடல் பகுதி ஆக்கிரமிப்பு, ஏவுகணை தயாரிப்பு மற்றும் சோதனை, விளையாட்டு, அறிவியல், ஆராய்ச்சிகள், ஆய்வுகள் என அனைத்து துறைகளிலும் தனக்கென்று ஒரு தனி முத்திரையை சீனா தொடர்ந்து பதித்து வருகிறது. இந்த சாதனைக்கு அணி சேர்க்கும் விதமாக சீனாவின் செயற்கை சூரியன் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தியானது அணுக்கரு இணைவு மூலம் உருவாகிறது.

சூரியனின் மையப் பகுதி ஹைட்ரஜன் கருக்களை ஹீலியமாக இணைப்பதன் மூலம் 1.5 கோடி டிகிரி செல்சியஸ் வெப்பத்தை ஏற்படுத்துகிறது. இது, பல வகைகளில் மனித இனத்துக்கு பலனை அளித்து வருகிறது. சீனா கடந்த 1999ம் ஆண்டிலிருந்தே 'ஈஸ்ட்' என்ற பெயரில் செயற்கை சூரியனை உருவாக்கும் திட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக, ரூ.70 லட்சம் கோடி வரை செலவிட்டுள்ளது. ஆரம்பத்தில், மிக குறைந்த நேரம் மட்டுமே குறைந்த அளவிலான வெப்பத்தை மட்டுமே இந்த செயற்கை சூரியன் உற்பத்தி செய்தது. இதை படிப்படியாக மேம்படுத்திய சீன விஞ்ஞானிகள், சில தினங்களுக்கு முன் 7 கோடி டிகிரி செல்சியசிஸ் வெப்பத்தை உருவாக்கினர்.

இது சூரியனை விட 5 மடங்கு அதிக வெப்பமாகும். 17 நிமிடங்கள் இந்த வெப்பநிலை நீடித்தது. மாசு ஏற்படாத வகையில் சுத்தமான எரிசக்தியை தயாரிப்பதற்கான சீனாவின் செயற்கை சூரியன் திட்டத்துக்கு உலகளவில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரம், சீனா இந்த திட்டத்தை தீய நோக்கங்களுக்கு பயன்படுத்தவும் வாய்ப்புகள் இருப்பதாக அச்சம் ஏற்பட்டுள்ளது. சீனாவில் செயற்கை சூரியனை உருவாக்கிய அதே விஞ்ஞானிகள் பிரான்ஸ் நாட்டிலும் இதே போன்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். இதற்கு, 'இட்டர்' என பிரான்ஸ் பெயரிட்டுள்ளது.

---

1. 'சீமா பவானி' என்பது எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) எந்தக் குழுவின் பெயர்?

அ) ஒட்டகக் குழு

ஆ) கிரீக் குரோகடைல்



இ) அனைத்து பெண்கள் பைக்கர் அணி ☑

ஈ) அனைத்து பெண்கள் கிரீக் குரோகடைல்

✓ 'சீமா பவானி' என்பது எல்லைப் பாதுகாப்புப் படையின் அனைத்து பெண்கள் பைக்கர் அணியாகும்.

✓ குடியரசு நாளன்று இந்த அணியினர் தங்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள். இதில் பல்வேறு நிலைகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பெண் இராணுவத்தினர் கலந்துகொள்கின்றனர். 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'சீமா பவானி' அணி, கடந்த 2018ம் ஆண்டு குடியரசு நாள் அணிவகுப்பில் முதன்முறையாக பங்கேற்றது.

---

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற அடல் சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் / யூடி எது?

அ) ஹிமாச்சல பிரதேசம் ☑



ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) சிக்கிம்

ஈ) உத்தரகாண்ட்

✓ அடல் சுரங்கப்பாதையானது மலைப்பாங்கான ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது. இது லே–மனாலி நெடுஞ்சாலையில் ரோஹ்தாங் கணவாய்க்கு அடியில் 9 கிமீ நீளத்தில் அமைந்துள்ள அனைத்து காலநிலைக்கும் ஏற்ற சாலையாகும். 2022ஆம் ஆண்டின் முதல் நாளில் இந்தச் சுரங்கப்பாதை அதிகபட்ச எண்ணிக்கையிலான வாகனங்களைச் சந்தித்தது.

✓ அதிகாரிகளின் கூற்றுப்படி, 2022 ஜன.1 அன்று மொத்தம் 7,515 வாகனங்கள் சுரங்கப்பாதையைக் கடந்தன. இது, 2020 அக்.3ஆம் அன்று திறக்கப்பட்டதிலிருந்து இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

---

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இந்திரா காந்தி இராஷ்ட்ரிய உரன் அகாதமி அமைந்துள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம் ☑



ஆ) உத்தரகாண்ட்

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ இந்திரா காந்தி இராஷ்ட்ரிய உரன் அகாதமி (IGRUA) இந்திய அரசாங்கத்தால் 1986ஆம் ஆண்டு பர்சத்கஞ்ச் விமான நிலையத்தில் நிறுவப்பட்டது. இது உத்தர பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது.

✓ ஒரு தன்னாட்சிமிக்க அமைப்பான IGRUA, சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் ஓர் ஆளுங்குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. கடந்த 2021ஆம் ஆண்டில் இந்திரா காந்தி தேசிய உரன் அகாடமி, 18 பயிற்சி விமானங்கள் மூலம் 19,000 மணிநேரம் விமானப்பயிற்சி அளித்துள்ளது. 2022ஆம் ஆண்டில் பயிற்சி விமானங்களின் எண்ணிக்கை–யை அதிகரித்து 121 பேருக்கு 25,000 மணி நேரம் பயிற்சியளிக்க இந்நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "புளூ புக்" என்பது எந்த ஆயுதப்படை / குழுவின் கையேடாகும்?

அ) மத்திய ரிசர்வ் போலீஸ் படை



ஆ) சிறப்பு பாதுகாப்புக் குழு ☑

இ) தேசிய பாதுகாப்புப் படை

ஈ) இந்திய கடலோர காவல்படை

✓ "Blue Book" என்பது சிறப்பு பாதுகாப்புக் குழுவின் (Special Protection Group) கையேட்டின் பெயராகும். இது இந்தியப் பிரதமரை சிறப்புற பாதுகாக்கிறது. இந்தியப் பிரதமர் மோடி, பஞ்சாப் போராட்டவாதிகளின் மறியல் காரணமாக ஒரு பா–லத்தில் சுமார் 20 நி காத்திருக்க வேண்டியதாகி விட்டது.

✓ வழக்கமாக,பிரதமரின் நிரல்கள் முதலமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட மாநிலத்தின் உயர்மட்டத் தலைமையுடன் பகிரப்படும். SPG, பாதுகாப்புத் திட்டத்திற்காக மாநிலக் காவல்துறை மற்றும் பிற அதிகாரிகளுடன் ஒருங்கிணையும்.

---

5. சீக்கியர்களின் 5வது தக்தாக தக்த் தம்தாமா சாகிப்பை அங்கீகரித்துள்ள மாநிலம் / யூடி எது?

அ) பஞ்சாப்



ஆ) தில்லி ☑

இ) பீகார்

ஈ) உத்தர பிரதேசம்


✓ தக்த் தம்தாமா சாகிப்பை சீக்கியர்களின் ஐந்தாவது தக்த் ஆக அங்கீகரிப்பதற்காக, தில்லி சீக்கிய குருத்வாரா சட்டம், 1971'இல் திருத்த மசோதாவை தில்லி சட்டமன்றம் நிறைவேற்றியது. 'தக்த்' அல்லது 'சிம்மாசனம்' என்பது சீக்கியர்களுக்கான தற்காலிக அதிகாரத்தின் இடமாகும்.

✓ பஞ்சாபில் மூன்று மற்றும் மகாராஷ்டிரா மற்றும் பீகாரில் தலா 1 என மொத்தம் ஐந்து சீக்கிய தக்த்துகள் உள்ளன.

---

6. 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த பால்கன் தடகள வீரராக அறிவிக்கப்பட்ட நோவக் ஜோகோவிச் சார்ந்த நாடு எது?

அ) பல்கேரியா



ஆ) சைபீரியா

இ) செர்பியா ☑

ஈ) கிரேக்கம்

✓ செர்பியாவைச் சார்ந்த முன்னணி டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச் 2021ஆம் ஆண்டின் சிறந்த பால்கன் தடகள வீரராக ஏழாவது முறையாக தேர்வு செய்யப்பட்டார்.

✓ உலகின் நெ.1 இடத்தைப் பிடித்துள்ள அவர் இந்த ஆண்டு நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மூன்றில் வெற்றி பெற்றார். இந்த வாக்கெடுப்பில் கிரேக்க கூடைப்பந்து வீரர் ஜியானிஸ் அன்டெட்டோகவுன்போ 2ஆவது இடத்தைப் பிடித்தார். அதைத் தொடர்ந்து மற்றொரு கிரேக்க நீளம் தாண்டுதல் வீரர் மில்டியாடிஸ் டென்டோக்லு உள்ளார்.

---

7. ஆராய்ச்சி சாதனங்களுடன் 'சிமோர்க்' செயற்கைக் கோள் தாங்கி ஏவுகலத்தை ஏவிய நாடு எது?

அ) வங்காளதேசம்

ஆ) ஈரான் ☑

இ) இஸ்ரேல்

ஈ) ஜக்கிய அரபு அமீரகம்



✓ ஈரான் 3 ஆராய்ச்சி சாதனங்களைக் கொண்ட 'சிமோர்க்' என்ற செயற்கைக்கோள் தாங்கி ஏவுகலத்தை ஏவியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

✓ 'சிமோர்க்' என்பது ஈரான் மொழியில் 'பீனிக்ஸ்' என பொருள்கொள்ளப்படுகிறது. அந்த நாடு 470 கிமீட்டர் (290 மைல்) உயரத்தில் அந்தச் சாதனங்களை ஏவியது. 2018 மே மாதத்தில் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகி ஈரானுக்கு எதிராக மீண்டும் பொருளாதாரத்தடைகளை விதித்தது.

---

8. கடந்த 2021ஆம் ஆண்டில் அதிக புலிகள் இறப்பைப் பதிவு செய்த மாநிலம் எது?

அ) கர்நாடகா

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) குஜராத்



✓ தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் இணைய தளத்தில் உள்ள தரவுகளின்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தம் 126 புலிகள் இறந்துள்ளன.

✓ 126 புலிகளுள், 60 புலிகள் வேட்டையாலும் விபத்தாலும் இறந்ததாக கூறப்படுகிறது. இதில் அதிகபட்சமாக மத்திய பிரதேசத்தில் (44), மகாராஷ்டிராவில் (26), கர்நாடகாவில் (14) புலிகள் இறந்துள்ளன.

---

9. உலகிலேயே மிகநீளமான மெட்ரோ ரயில் நெட்வொர்க் உள்ள நகரம் எது?

அ) சென்னை

ஆ) புது தில்லி

இ) ஷாங்காய் ☑

ஈ) டோக்கியோ

✓ அண்மையில் செயல்பாட்டுக்கு வந்த இரண்டு புதிய வழித் தடங்களுடன் சீனாவின் ஷாங்காய் உலகின் மிக நீளமான மெட்ரோ இரயில் நெட்வொர்க்கைக் கொண்ட தனது நிலையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது.

✓ இந்தப் புதிய பாதைகள் நகரின் மெட்ரோ நெட்வொர்க்கின் மொத்த நீளத்தை 831 கிமீஆக உயர்த்தியது. ஷாங்காய் மெட்ரோ ரயில் நெட்வொர்க்கிற்கு அடுத்தபடியாக பெய்ஜிங் உள்ளது. தில்லி மூன்றாவது இடத்தில் உள்ளது.

---

10. 'அட்டகாமா லார்ஜ் மில்லிமீட்டர் / சப்மில்லிமீட்டர் அரே (ALMA)' அமைந்துள்ள நாடு எது?

அ) அமெரிக்கா **ஆ) சிலி ☑**

இ) ஆஸ்திரேலியா ஈ) ரஷ்யா



✓ சிலியில் உள்ள 'Atacama Large Millimeter/submillimeter Array (ALMA)'ஐ அறிவியலாளர்கள் குழு WB89-789 பகுதியில் புதிதாக உதித்த விண்மீனை (புரோட்டோ ஸ்டார்) கண்காணிக்கப் பயன்படுத்தியது. இது தீவிர வெளிப்புற கேலக்ஸியில் அமைந்துள்ளது.

✓ அறிவியலாளர்கள் கரிமம்-, உயிர்வளி-, நைட்ரஜன்-, சல்பர்- மற்றும் சிலிக்கான்-தாங்கி மூலக்கூறுகளை அதில் கண்டறிந்துள்ளனர். புரோட்டோஸ்டாரின் வேதி செறிந்த வளி மற்றும் அதனுடன் தொடர்புடைய கூடு முதன்முறையாக நமது அண்டத்தின் விளிம்பில் கண்டறியப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பத்திரிகையாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் இன்று தொடக்கம்

ஊதிய உச்சவரம்பின்றி அனைத்து பத்திரிகையாளர்களையும் அரசின் காப்பீட்டில் சேர்ப்பதற்கான திட்டம் சென்னையில் திங்கள்கிழமை தொடங்கப்படுகிறது. ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள இமேஜ் அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் பத்திரிகையாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார்.

பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் இப்போது ₹72 ஆயிரமாக உள்ளது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவர் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான அரசு உத்தரவும் வெளியாகியுள்ளது.

---

2. ஒமைக்ரான் ஆழிப்பேரலை! | கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றின் ஒமைக்ரான் உருமாற்றம் குறித்த தலையங்கம்

உலகம் முழுவதும் அதிவேகமாகப் பரவிக்கொண்டிருக்கும் கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றின் ஒமைக்ரான் உருமாற்றம் ஏற்படுத்தும் அச்சுறுத்தல் அதிர்ச்சி அளிக்கிறது. ஆழிப்பேரலையாக மீண்டும் ஒருமுறை கொவைட் 19 தாக்கக் கூடும் என்கிற உலக சுகாதார நிறுவனத்தின் எச்சரிக்கையைப் புறந்தள்ளிவிட முடியாது.

சீனாவின் பல நகரங்களில் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டிருப்பதால் அத்தியாவசியப் பொருள்கள் கூட இல்லாமல் பொதுமக்கள் அவதிப்படுகிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இதுவரை இல்லாத அளவிலான பாதிப்புகள் பதிவாகி இருக்கின்றன.

ஒருபுறம் ஒமைக்ரான் உருமாற்றம் பரவுகிறது என்றால், இன்னொருபுறம் ஏறத்தாழ 40% அளவில் டெல்டா உருமாற்ற பாதிப்பும் காணப்படுகிறது.

பிரிட்டன், துருக்கி, கிரீஸ், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்வீடன், பின்லாந்து, ஆஸ்திரேலியா என தீநுண்மித் தொற்றின் பரவல் எல்லைகளும் கண்டங்களும் கடந்து காட்டுத்தீ போலப் பரவிக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் அதற்கு விதிவிலக்கல்ல.

உச்சநீதிமன்றத்தில் 4 நீதிபதிகள், 150 பணியாளர்களை தீநுண்மித் தொற்று பாதித்திருக்கிறது என்றால், மக்களவை – மாநிலங்களவை செயலகங்களில் பணியாற்றும் சுமார் 400 பேரையும் பாதித்திருக்கிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதத்தில் டெல்டா உருமாற்றம் ஏற்படுத்திய, நிலைகுலைய வைத்த பாதிப்புகளின் பின்னணியில் இப்போதைய ஒமைக்ரான் உருமாற்றப் பரவலை நாம் கவனக்குறைவாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தமிழகத்தில் நேற்றைய நிலவரப்படி 12,895 பாதிப்புகள் பதிவாகியிருக்கின்றன.

அவற்றில் ஏறத்தாழ பாதிக்குப் பாதி, அதாவது 6,156 பாதிப்புகள் சென்னையில் மட்டுமாகக் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவா்களில் 85% பேருக்கு ஒமைக்ரான் உருமாற்ற பாதிப்பு காணப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவிக்கிறார்.

சர்வதேச அளவில் அதிவிரைவாகப் பரவிக் கொண்டிருக்கும் ஒமைக்ரான் உருமாற்றத்தை எதிர்கொள்வதற்கு உடனடியாக எதிர்ப்பு சக்தியை உறுதிப்படுத்தும் மூன்றாவது தவணை (பூஸ்டர் டோஸ்) போடப்படுவது அவசியம் என்று மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களையும் ஒமைக்ரான் உருமாற்றம் பாதிக்கிறது என்றாலும்கூட, பாதிப்பு கடுமையாக இல்லை என்று கூறப்படுகிறது. அதனால் பூஸ்டர்டோஸ் எனப்படும் மூன்றாவது தவணை தடுப்பூசி அத்தியாவசியமாகிறது.

இந்தியாவில் ஏறத்தாழ 5 கோடி பேர் இரண்டு தவணை தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 2.7 கோடி பேர் முன்களப் பணியாளர்களும், இணைய நோய் உள்ளவர்களும், மூத்த குடிமக்களும். இரண்டாவது தவணை தடுப்பூசியும் போட்டுக்கொண்டு ஆறு முதல் 10 மாதங்கள் கழிந்துவிட்ட நிலையில் அவர்களது கொவைட் 19–க்கான எதிர்ப்பு சக்தி குறைந்திருக்கும். அதனால் உடனடியாக மூன்றாவது தவணை தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது.

தமிழகத்தில் மூன்றாவது தவணை தடுப்பூசி செலுத்தும் பணி முதல்வர் மு க ஸ்டாலினால் இன்று முதல் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. தமிழகத்தில் 5.65 லட்சம் மருத்துவப் பணியாளர்கள், 9.78 லட்சம் முன்களப் பணியாளர்கள், 20.83 லட்சம் மூத்த குடிமக்கள் என 36.26 லட்சம் பேர் மூன்றாவது தவணை தடுப்பூசிக்குத் தகுதி பெற்றவர்கள். தமிழகத்தில் ஏற்கெனவே 71 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் இருக்கும் நிலையில், கால தாமதமில்லாமல் 3ஆவது தவணை தடுப்பூசி செலுத்தும் பணியை தொடங்கி இருப்பது வரவேற்புக்குரியது.

அகில இந்திய அளவில் சுமார் 1.05 கோடி சுகாதாரப் பணியாளர்கள், 1.9 கோடி முன்களப் பணியாளர்கள், இணை நோய்களும் மூத்த குடிமக்களும் என்று 2.75 கோடி பேர் மூன்றாவது தவணை தடுப்பூசிக்குத் தகுதி பெற்றவர்கள். தமிழகத்தைப் போலவே எல்லா மாநிலங்களும் மூன்றாவது தவணை தடுப்பூசி போடும் திட்டத்தை விரைவுபடுத்தினால்தான் ஒமைக்ரான் பாதிப்பிலிருந்து அவா்களைப் பாதுகாக்க முடியும்.

மூன்றாவது தவணைக்கு எந்தத் தடுப்பூசி மருந்தை பயன்படுத்துவது என்கிற கேள்வியும் எழுந்திருக்கிறது. மூன்றாவது தவணையை செயல்படுத்தும் பல்வேறு நாடுகளில், பைசர் நிறுவனத்தின் எம்ஆர்என்ஏ பரவலாக பரிந்துரைக்கப்படுகிறது. இரண்டு தவணைக்கு மேல் கோவிஷீல்டு தடுப்பூசியால் முந்தைய அளவு பாதுகாப்பை வழங்க முடியுமா என்கிற கேள்வி சிலரால் எழுப்பப்படுகிறது. இந்தியாவில் மூன்றாவது தவணையும் போடுவதற்கான கோவிஷீல்டு தடுப்பூசி கையிருப்பு போதுமான அளவு இருக்கிறது.

90% பேர் கோவிஷீல்டு போட்டுக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால்தான் எழுப்பப்பட்டிருக்கும் ஐயப்பாடு, சற்று கவலை அளிக்கிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பல்வேறு தடுப்பூசிகள் பயன்பாட்டுக்குத் தயாராக இருக்கின்றன. அவற்றில் கோவாக்ஸினும், சைகோவ் டி 2 மட்டுமே அவசரகால பயன்பாட்டுக்கான அனுமதி பெற்றிருக்கின்றன.

இந்தியாவில் சீரம் இன்ஸ்டியூட்டால் தயாரிக்கப்படும் கோவாவேக்ஸ் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பயன்பாட்டில் இல்லை. இப்பின்னணியில் அனைவருக்கும் இன்னும் கூட முதல் 2 தவணை தடுப்பூசி போடாமல் இருக்கிறோம் என்பதும், மூன்றாவது தவணை தடுப்பூசிக்கு ஐந்து கோடிக்கும் அதிகமானோர் இருக்கிறார்கள் என்பதும் நாம் நினைவில் கொள்ளவேண்டிய எதார்த்தங்கள்.

போர்க்கால அடிப்படையில் தடுப்பூசி போடுவதன்மூலம் தான் கொவைட் 19–இன் அடுத்த ஆழிப்பேரலையை எதிர்கொள்ள முடியும்!

---

3. ஆழ்கடல் சோதனை ஓட்டத்தில் ஐஎன்எஸ் விக்ராந்த்

உள்நாட்டிலேயே கட்டப்பட்ட முதல் விமானம் தாங்கிப் போர்க் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் மீண்டும் ஆழ்கடல் சோதனைக்கு உள்படுத்தப்பட்டது.

ஐஎன்எஸ் விக்ராந்த் விமானம் தாங்கிக் கப்பலானது ரூ.23,000 கோடி செலவில் கொச்சி கப்பல்கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. இதன் மூலமாக விமானம் தாங்கிக் கப்பலை சொந்தமாகக் கட்டும் திறன் கொண்ட வெகுசில நாடுகளுடன் இந்தியாவும் இணைந்தது.

ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலின் முதலாவது சோதனை ஓட்டம் கடந்த ஆண்டு ஆகஸ்டில் 5 நாள்களுக்கு நடைபெற்றது. பின்னர் கடந்த ஆண்டு அக்டோபரில் 10 நாள்களுக்கு அக்கப்பல் சோதனை செய்யப்பட்டது. இந்நிலையில், அக்கப்பலின் சோதனை ஓட்டம் மீண்டும் நடைபெற்று வருகிறது.

---

4. சாகிப்சாதா ஸோராவர் சிங், சாகிப்சாதா பத்தே சிங் தியாகத்தைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 26-ம் தேதியை வீர் பால் தினமாக பிரதமர் அறிவித்தார்

ஸ்ரீ குரு கோவிந்த் சிங் அவர்களின் பர்காஷ் புரப் புனிதமான தினத்தையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி, சாகிப்சாதா ஸோராவர் சிங், சாகிப்சாதா பத்தே சிங் தியாகத்தைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 26-ம் தேதியை வீர் பால் தினமாக அறிவித்தார்.

---

5. சீனாவில் செயல்படும் ஆசிய உள்கட்டமைப்பு வங்கி துணை தலைவரானார் உர்ஜித்

ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் உர்ஜித் படேல், ஆசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின் (ஏஜஐபி) துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2016ம் ஆண்டு ரகுராம் ராஜன் ஓய்வு பெற்ற பிறகு, ரிசர்வ் வங்கி கவர்னராக பொறுப்பேற்றவர் உர்ஜித் படேல்.

இவர் தனது பதவிக்காலம் முடியும் முன்பாக கடந்த 2018ம் ஆண்டு. சொந்தகாரணங்களுக்காக பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், உர்ஜித் படேல் தற்போது ஆசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

துணைத் தலைவராக இருந்த டி.ஜே. பாண்டியனின் பதவிக்காலம் முடிந்ததைத் தொடர்ந்து, அந்த பதவியில் உர்ஜித் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக்காலம் 3 ஆண்டுகள். அடுத்த மாதம் அவர் பொறுப்பேற்க உள்ளார்.

ஏஜஐபி வங்கி சீனாவை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது. இது, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கடன் வழங்கி வருகிறது. இந்த வங்கியை உருவாக்கிய உறுப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்த வங்கியில் சீனா 26.06 சதவீத பங்குகளையும், இந்தியா, 7.5 சதவீத பங்குகளையும் வைத்துள்ளது.

---

6. அடிலெய்ட் டென்னிஸ்: போபண்ணா/ராம்குமார் ஜோடி சாம்பியன்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற அடிலெய்ட் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா/ராம்குமார் ராமநாதன் இணை சாம்பியன் ஆகி அசத்தியுள்ளது.

ஏடிபி டூர் போட்டிகளில் இருவரும் ஜோடி சேர்ந்த முதல் போட்டியிலேயே இவ்வாறு பட்டம் வென்றுள்ளனர். ஏடிபி இரட்டையர் போட்டியில் போபண்ணாவுக்கு இது 20-ஆவது பட்டமாக இருக்கும் நிலையில், ராம்குமாருக்கு இது முதல் பட்டமாகும்.

வெற்றிக் கோப்பையுடன் இருவரும், தலா 250 ஏடிபி புள்ளிகள் பெறுகின்றனர். அத்துடன், மொத்த ரொக்கப் பரிசான ரூ.13.88 லட்சத்தையும் அவர்கள் பகிர்ந்துகொள்கின்றனர். ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபனில் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்றில் களம் காண இருக்கும் நிலையில், ராம்குமாருக்கு இந்த சாம்பியன் பட்டம் நல்லதொரு உத்வேகத்தை அளிப்பதாக இருக்கும்.

முன்னதாக, இப்போட்டியின் இறுதிச் சுற்றில் போபண்ணா/ராம்குமார் ஜோடி 7-6 (8/6), 6-1 என்ற செட்களில் போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த குரோஷியாவின் இவான் டோடிக்/பிரேஸிலின் மார்செலோ மெலோ இணையை 1 மணி நேரம் 21 நிமிஷங்கள் போராடி வென்றது.

ஆட்டத்தில் இந்திய இணை தான் சந்தித்த 4 பிரேக் பாய்ண்ட்களையும் தக்க வைத்துக் கொண்டதுடன், எதிர் ஜோடியின் பிரேக் பாய்ண்ட்களை இரு முறை பிரேக் செய்தனர். இரு செட்களிலும் எதிர் தரப்பு வீரர்களின் சர்வ்களை போபண்ணா திறம்பட எதிர்கொண்டதும், ராம்குமார் ஆல்-ரவுண்ட் அசத்தல் காட்டியதும் ஆட்டத்தை அவர்களுக்கு சாதகமாக மாற்றியது.

வாகை சூடினார் மான்ஃபில்ஸ்

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், பிரான்ஸின் கேல் மான்ஃபில்ஸ் சாம்பியன் ஆனார். இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த மான்ஃபில்ஸ் 6-4, 6-4 என்ற நேர் செட்களில், போட்டித்தரவரிசையில் 2-ஆவது இடத்தில் இருந்த ரஷியாவின் காரென் கசானோவை தோற்கடித்தார். இது மான்ஃபில்ஸின் 11-ஆவது ஒற்றையர் பிரிவு பட்டமாகும்.

பார்ட்டிக்கு இரு கோப்பை

அடிலெய்ட் இன்டர்னேஷனல் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி கோப்பை வென்றார்.

உலகின் முதல்நிலை வீராங்கனையாக இருக்கும் பார்ட்டி தனது இறுதிச் சுற்றில் 6-3, 6-2 என்ற நேர் செட்களில், போட்டித்தரவரிசையில் 7-ஆவது இடத்திலிருந்த கஜகஸ்தானின் எலனா ரைபாகினாவை தோற்கடித்தார். ஒற்றையர் பிரிவில் பார்ட்டிக்கு இது 14-ஆவது பட்டமாகும். இந்த வெற்றியுடன் அவர் ஆஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு செல்வது குறிப்பிடத்தக்கது.

பார்ட்டி/சாண்டர்ஸ் வெற்றி: மகளிர் இரட்டையர் பிரிவிலும் ஆஷ்லி பார்ட்டி, சக நாட்டவரான ஸ்டோர்ம் சாண்டர்ஸுடன் இணைந்து சாம்பியன் பட்டம் வென்றார். பார்ட்டி/சாண்டர்ஸ் இணை இறுதிச் சுற்றில் 6-1, 6-4 என்ற நேர் செட்களில், போட்டித்தரவரிசையில் 3-ஆவது இடத்திலிருந்த ஸ்லோவேனியாவின் ஆண்ட்ரியா கிளெபாக்/குரோஷியாவின் டரியா ஜுராக் வ்ஸ்ரிபா ஜோடியை தோற்கடித்தது.

---

7. ஏடிபி கோப்பை வென்றது கனடா

ஏடிபி கோப்பை ஆடவர் அணிகள் டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் கனடா 2-0 என்ற கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி சாம்பியன் ஆனது. கனடா இப்போட்டியில் கோப்பை வென்றது இது முதல் முறையாகும்.

இறுதிச் சுற்றின் இரு ஆட்டங்களுமே ஒற்றையர் பிரிவில் நடைபெற்றது. இதில் கனடாவின் ஃபெலிக்ஸ் ஆகர் அலியாசிமே 7-6 (7/3), 6-3 என்ற செட்களில் ஸ்பெயினின் ராபர்டோ பௌதிஸ்டா அகட்டை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் கனடாவின் டெனிஸ் ஷபோவெலாவ் 6–4, 6–3 என்ற நோ் செட்களில் பாப்லோ கரீனோ பஸ்டாவை வீழ்த்தினாா்.

---

8. நிலவில் தண்ணீா் ஆதாரம்: சீன விண்கலம் கண்டுபிடிப்பு

நிலவின் தரைப்பரப்பில் தண்ணீா் இருப்பதற்கான ஆதாரங்களை சீனா விண்கலம் கண்டறிந்துள்ளது.

நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக சாங்கே–5 என்ற விண்கலத்தை 2020, நவம்பரில் சீனா அனுப்பியது. நிலவின் மத்திய உயா் அட்சரேகை பகுதியில் தரையிறங்கிய அந்த விண்கலத்தின் லேண்டரில் உள்ள ஒரு கருவி, தரைப்பரப்பில் உள்ள பாறையின் நிறமாலை பிரதிபலிப்பை அந்த இடத்திலேயே அளந்தது. பின்னா், 1,731 கிராம் எடையிலான பாறை மாதிரியுடன் விண்கலம் பூமிக்குத் திரும்பியது.

அந்தப் பாறை மாதிரியை சீன அறிவியல் அகாதெமியைச் சோ்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனா். அதன் முடிவுகள் 'சயின்ஸ் அட்வான்சஸ்' இதழில் வெளியாகியுள்ளது.

அதன்படி, நிலவின் தரைப்பரப்பில் உள்ள பாறைப் படிவங்களில் ஒரு டன்னுக்கு 120 கிராம் தண்ணீா் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. சந்திரனின் நிலப்பரப்பில் அதிக ஈரப்பதத்துக்கு காரணம் சூரிய காற்று ஆகும். அதுதான் தண்ணீரை உருவாக்கும் ஹைட்ரஜனை கொண்டு வந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனா்.

---

1. எந்த இந்திய நிறுவனத்தின் துணை நிறுவனம் திருகோணமலை எண்ணெய் சேமிப்புக் கிடங்கை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது?

அ) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ☑

ஆ) பாரத் பெட்ரோலியம்


இ) இந்துஸ்தான் பெட்ரோலியம்

ஈ) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

- ✓ இலங்கா IOC, இலங்கை பெட்ரோலியக் கார்ப்பரேஷன் மற்றும் இலங்கை அரசாங்கம் திருகோணமலை எண்ணெய் சேமிப்புக் கிடங்கை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான குத்தகை ஒப்பந்தங்களில் கைச் சாத்திட்டன. இதற்கேற்ப 14 கச்சா எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கும், 24 கச்சா எண்ணெய் சேமிப்பு தொட்டிகள் இலங்கை பெட்ரோலிய கார்ப்பரேஷனுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.
- ✓ எஞ்சிய 61 கச்சா எண்ணெய் சேமிப்புக்கிடங்குகள் இந்திய எண்ணெய் நிறுவனம் மற்றும் இலங்கை பெட்ரோலியக் கார்பரேஷன் ஆகிய கூட்டிணைந்த நிறுவனத்திற்கும் கூட்டாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இந்நிறுவனத்தின் 51% பங்குகள் இலங்கை பெட்ரோலிய நிறுவனத்திற்கும் 49 வீத பங்குகள் இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

2.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'குண்டக்கட்டி' சட்டம், எந்த இந்திய மாநிலம்/யூடியில் நடைமுறையில் உள்ளது?

அ) ஹிமாச்சல பிரதேசம்



ஆ) ஜார்கண்ட் ☑

இ) சிக்கிம்

ஈ) உத்தரகாண்ட்

- ✓ சட்டத்துக்குப் புறம்பாக மரங்களை வெட்டி விற்பனை செய்ததாகக் கூறி ஒருவரை கிராம மக்கள் சிலர் தாக்கி உள்ளனர். 'குண்டக்கட்டி' சட்டத்தை மீறியதற்காக அந்நபர் காவல்துறையின் முன்னிலையில் உயிருடன் எரிக்கப்பட்–டார். 'குண்டக்கட்டி' அமைப்பு என்பது பழங்குடியினரின் பரம்பரை அடிப்படையிலான நிலத்தை கூட்டாக வைத்திருக்கும் ஒரு முறையாகும்.
- ✓ இந்த முறையின்படி, முண்டா பழங்குடியினர் மரங்களை வெட்டி விவசாயத்திற்கு நிலத்தை தயார் செய்வார்கள், அது ஒரு தனி நபருக்கு பதிலாக முழு இனத்திற்கும் சொந்தமானதாக பார்க்கப்படும்.

---

3. ஜப்பான் சமீபத்தில் எந்த நாட்டுடன், 'பரஸ்பர அணுகல் ஒப்பந்தம்' கையெழுத்திட்டது?

அ) அமெரிக்கா



ஆ) ஆஸ்திரேலியா ☑

இ) பிரேசில்

ஈ) ரஷ்யா

- ✓ பாதுகாப்பான மற்றும் நிலையான இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதற்காக, ஜப்பான் சமீபத்தில் ஆஸ்திரேலியாவுடனான ஒரு வரலாற்று சிறப்பு வாய்ந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ✓ இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ மற்றும் பொருளாதார செல்வாக்கு விரிவாக்கத்தின் மத்தியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. "Reciprocal Access Agreement" என அழைக்கப்படும் இது, ஜப்பானின் இரண்டாவது இத்தகைய ஒப்பந்தமாகும். ஜப்பானின் மற்றொரு இராணுவ ரீதியிலான ஒப்பந்தம் அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

4. 'Integrated Approach in S&T for Sustainable Future' என்பது எந்த நாளுக்கானக் கருப்பொருளாகக் அறிவிக்கப்பட்டுள்ளது?

அ) உலக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நாள்

ஆ) தேசிய அறிவியல் நாள் ☑



இ) உலக ஆராய்ச்சி & வளர்ச்சி நாள்

ஈ) தேசிய புத்தாக்க நாள்

- ✓ இந்த ஆண்டு (2021) தேசிய அறிவியல் நாளுக்கான கருப் பொருள் "Integrated Approach in S&T for Sustainable Future" என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம் சமீபத்தில் இதனை அறிவித்தது.
- ✓ அறிவியல்சார் விஷயங்களைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதற்காக இக்கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய இயற்பியலாளர் சர் CV ராமன் 'இராமன் விளைவைக்' கண்டுபிடித்ததைக் குறிக்கும் வகையில் பிப்.28 அன்று இந்தியாவில் தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படுகிறது.

---

5. APEDA'இன் கூற்றுப்படி, 2020–21'இல் இந்தியாவில் ஏற்றுமதி செய்யப்பட்ட முதன்மைப் பொருள் எது?

அ) பாஸ்மதி அல்லாத அரிசி ☑



ஆ) தக்காளி

இ) பருத்தி

ஈ) பால்

- ✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டாணையத்தின் (APEDA) கூற்றுப்படி, 2020–21ஆம் ஆண்டில், பாஸ்மதி அல்லாத அரிசி, பாசுமதி அரிசி மற்றும் எருமை இறைச்சி ஆகியவை இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட முதல் 3 தயாரிப்புகளாகும்.
- ✓ APEDA'இன் கூற்றுப்படி, மொத்த ஏற்றுமதி மதிப்பு 2011–12'இலிருந்த ₹83,000 கோடியுடன் ஒப்பிடுகையில் 2020–21'இல் ₹15 லட்சம் கோடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

---

6. இரயில்வே வாரியத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) ஷோபித் திரிபாதி



ஆ) வினை குமார் திரிபாதி ☑

இ) இராஜேஷ் அரோரா

ஈ) குமார் வர்மா

✓ இரயில்வே வாரியத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக வினைகுமார் திரிபாதியை நியமிக்க மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது அவர் வடகிழக்கு இரயில்வே பொது மேலாளராக பணியாற்றி வருகிறார். அவர், 1983 பேட்ச் இந்திய இரயில்வே சர்வீஸ் ஆஃப் எலக்ட்ரிக்கல் இன்ஜினியர்ஸ் (IRSEE) ஆவார்.

---

7. கீழ்காணும் எவ்வமைச்சகத்தால் 'பதே பாரத் பிரச்சாரம்' தொடங்கப்பட்டது?

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஆ) கல்வி அமைச்சகம் ☑

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ மத்திய கல்வி அமைச்சகம் 2022 ஜனவரி.1 தொடர்ந்து 100 நாட்களுக்கு 'பதே பாரத் பிரச்சாரம்' என்ற பெயரில் வாசிப்பு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.

✓ இந்தப்பிரச்சாரம் பாலர் வகுப்பு மற்றும் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் வாசிப்புத்திறன், சொல்லகராதி மற்றும் சிந்தனை திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

8. 2021–22'இல் விஜய் ஹசாரே கோப்பையை வென்ற மாநில அணி எது?

அ) தமிழ்நாடு

ஆ) ஹிமாச்சல பிரதேசம் ☑



இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ ஜெய்ப்பூரில் நடைபெற்ற 2021–22 பதிப்பில், ஹிமாச்சலப் பிரதேசம் VJD முறையில் தமிழ்நாட்டு அணியை வீழ்த்தி, அதன் முதல் விஜய் ஹசாரே கோப்பையை வென்றது.

✓ தமிழ்நாடு அணி 5 முறை சாம்பியன் பட்டம் வென்ற அணி ஆகும். ரஞ்சி ஒருநாள் டிராபி என்று அழைக்கப்படும் விஜய் ஹசாரே கோப்பை 2002–03'இல் தொடங்கப்பட்டது. புகழ் பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் விஜய் ஹசாரேவின் நினைவாக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

---

9. சீனா சமீபத்தில் எந்த இந்திய மாநிலத்தில் உள்ள 15 இடங்களுக்கான 'பெயர்களின்' பட்டியலை வெளியிட்டது?

அ) மிசோரம்



ஆ) நாகாலாந்து

இ) திரிபுரா

ஈ) அருணாச்சல பிரதேசம் ☑

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள 15 இடங்களின் "தரப்படுத்தப்பட்ட" பெயர்களை சீன சிவில் விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது. அருணாச்சல பிரதேசத்தின் 90,000 சகிலோமீட்டர் பரப்பளவை சீனா தனது சொந்தப் பகுதி எனக்கூறிவருகிறது. அது 2017இல் அம்மாநிலத்தை "தெற்கு திபெத்" என்று அழைத்தது.

✓ மறுபெயரிடுவது இந்தியாவின் இறையாண்மையை அம் மாநிலத்திலிருந்து விலக்காது என்று இந்தியா, சீனாவுக்கு பதிலடி கொடுத்துள்ளது.

---

10. நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகம் எத்தயாரிப்புக்கு 'நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு – Extended Producer Responsibility' குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது?

அ) உயிரி மருத்துவக் கழிவுகள்



ஆ) கழிவு டயர்கள் ☑

இ) நெகிழிக்கழிவுகள்

ஈ) மின்னணு கழிவுகள்

✓ சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம், கழிவு டயர்களுக்கான "நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு" குறித்த விதிமுறைகளின் வரைவு அறிவிப்பை வெளியிட்டது. இறுதி செய்யப்பட்டால், புதிய நிதியாண்டு முதல் இந்த வரைவு அமலுக்கு வரும். இந்தியா ஒவ்வோர் ஆண்டும் சுமார் 275,000 டயர்களை நிராகரிக்கிறது; ஆனால் அதற்கான விரிவான திட்டம் நாட்டிடம் இல்லை.

✓ கழிவு டயர்கள் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பானதாக மேலாண்மை செய்யப்படுவதை உறுதிசெய்வது டயர் உற்பத்தியாளரின் பொறுப்பாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை ஐஐடி'க்கு புதிய இயக்குநர் நியமனம்

சென்னை ஐஐடி இயக்குநராக இருந்த பாஸ்கர் ராமமூர்த்தி ஓய்வு பெற்றதை தொடர்ந்து அந்த பணியிடம் காலியாக இருந்தது.

இதைத்தொடர்ந்து சென்னை ஐஐடி'இன் புதிய இயக்குநராக பேராசிரியர் காமகோடி நியமிக்கப்பட்டு உள்ளார். இதைப்போல தில்லி ஐஐடி இயக்குநராக மும்பை ஐஐடி பேராசிரியர் ரங்கன் பானர்ஜி, மாண்டி ஐஐடி இயக்குநராக கான்பூர் ஐஐடி பேராசிரியர் லட்சுமிதர் பெகேரா ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

மேலும் மும்பை ஐஐடி பேராசிரியர் சுகாஸ் ஜோஷி, இந்தூர் ஐஐடி இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

2. அஞ்சல்தலை கண்காட்சி

தமிழக அஞ்சல்துறை சார்பில், 'டிஎன் டிஜிபெக்ஸ்–2022' என்ற மாநில அளவிலான மெய்நிகர் அஞ்சல்தலை கண்காட்சி ஜன.7ஆம் தேதி தொடங்கி ஜனவரி.10 வரை நடைபெற்றது. 'அஞ்சல்தலை சொல்லும் கலை' என்ற பெயரில் நடைபெற்ற இதன் நிறைவு விழா சென்னையில் நடைபெற்றது.

---

3. மின் கட்டணத்தைக் கணக்கிட விரைவில் செயலி

மின் கட்டணத்தைக் கணக்கிட விரைவில் கைப்பேசி செயலி அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: சேவைகளை எண்ம வடிவில் வழங்கும் முயற்சியை

மின்வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாகவே தற்போது நுகர்வோரே மின் கட்டணத்தைக் கணக்கிடும் வகையில் கைப்பேசி செயலி ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து, கட்டணத்தை கணக்கீடு செய்யலாம். மேலும், அச்செயலியில் மீட்டர் நிழற்படத்தை பதிவேற்றம் செய்த ஒரு சில நிமிஷங்களில் மின் கட்டண ரசீது, குறுஞ்செய்தி வாயிலாக நுகர்வோருக்கு அனுப்பப்படும்.

---

4. சிக்கய்ய நாயக்கர் கல்லூரி அரசு கல்லூரியாக அறிவிப்பு

ஈரோடு மக்களின் இருபதாண்டு கால கோரிக்கையை ஏற்று சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசு கல்லூரியாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

5. தமிழ்ப்பல்கலையில் அரிய தாள் ஆவணங்கள் – மரபு சார் பாதுகாப்பு ஆய்வகம் தொடக்கம்

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் அரிய தாள் ஆவணங்கள் – மரபுசார் பாதுகாப்பு ஆய்வகம் திறக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித் துறையில் உள்ள கையெழுத்துச் சுவடிகளும், பல்கலைக் கழகப் பொது நூலகத்தில் உள்ள காலத்தால் பழமையான நூல்களும் இந்த ஆய்வகத்தின் வழியாகப் பாதுகாக்கப்படும். இந்த ஆய்வகப் பணியின் வழியாகத் தமிழ்மரபில் உள்ள மரபுசார்ந்த பாதுகாப்பு முறைகளுக்கா –ன காப்புரிமை பெறுவதற்கு ஆவன செய்யப்படும்.

---

1. 'நிர்பயா கதி' பிரச்சாரத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம்



ஆ) ஒடிஸா ☑

இ) கர்நாடகா

ஈ) குஜராத்

✓ ஒடிஸா மாநிலத்தின் கஞ்சம் மாவட்டம் முதல் குழந்தை திருமணம் இல்லாத மாவட்டமாக தனை அறிவித்துள்ளது. இது 'நிர்பயா கதி' (அச்சமற்ற மொட்டு) என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது. இந்தப்பிரச்சாரத்தின்மூலம், மாவட்ட நிர்வாகம் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட இளம் வயதினருக்கு ஆலோசனை வழங்கியது மற்றும் 450'க்கும் மேற்பட்ட சிறார் திருமணங்களை நிறுத்தியுள்ளது.

✓ குழந்தை திருமணங்கள் நடப்பதை அறிவித்தால் ஊக்கத் தொகை வழங்குதல், திருமணங்களுக்கு ஆதார் அட்டை –யை கட்டாயமாக்கல்போன்ற பல்வேறு நடவடிக்கைக –ளை அவர்கள் செயல்படுத்தியுள்ளனர்.

---

2. மாணாக்கர் துளிர் மற்றும் புத்தாக்க கொள்கை (SSIP) 2.0'ஐ அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

அ) தெலுங்கானா



ஆ) குஜராத் ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா

✓ குஜராத் மாநில முதலமைச்சர் பூபேந்திர படேல், சர்வதேச கல்வி நிறுவனங்களின் மாநாட்டில் (ICAI–2022) மாணாக்கர் துளிர் மற்றும் புத்தாக்க கொள்கை (SSIP) 2.0'ஐ அறிமுகப்படுத்தினார். இது பள்ளி மாணாக்கருக்கு புத்தாக் –கத்தில் நிதியுதவி செய்வதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. 2027 மார்ச் வரை அடுத்த 5 ஆண்டுகளுக்கு வரை செயல்படுத்தப்படும். நிதியுதவி முந்தைய பதிப்பின் ₹200லிருந்து ₹500 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

---

3. அண்மையில் எந்த நாட்டின் தலைவராக, 'ஓலாஃப் ஸ்கோல்ஸ்' நியமிக்கப்பட்டார்?

அ) அமெரிக்கா



ஆ) ஜெர்மனி ☑

இ) பிரேசில்

ஈ) ரஷ்யா

✓ ஓலாஃப் ஸ்கோல்ஸ் 2021 டிசம்பர் முதல் ஜெர்மனியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியப் பிரதமர் மோடி ஜெர்மன் அதிபருடன் கலந்துரையாடினார் மற்றும் அவர் அதிபராக நியமிக்கப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்தார்.

✓ முதலீடு & வர்த்தக இணைப்புகள் உட்பட, தற்போதுள்ள ஒத்துழைப்பு முன்னெடுப்புகளின் திறன்களை அவர்கள் மதிப்பாய்வு செய்தனர். புதிய பகுதிகளில் ஒத்துழைப்பைப் பன்முகப்படுத்துவது மற்றும் பரிமாற்றங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

---

4. 'உஜாலா' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?



அ) எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ) சுற்றுச்சூழல் அமைச்சகம்

இ) பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ உஜாலா திட்டத்தின் கீழ் LED விளக்குகள் விநியோகம் மற்றும் விற்பனையின் 7 ஆண்டுகளை மின்சாரத்துறை அமைச்சகம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

✓ குறைந்த செலவில் LED விளக்குகள் வழங்கும் உஜாலா திட்டம் கடந்த 2015 ஜன.5 அன்று தொடங்கப்பட்டது. தற்போது வரை, நாடு முழுவதும் 36.78 கோடி LED விளக்குககள் விநியோகிக்கப்பட்டுள்ளன. Unnat Jyoti by Affordable LEDs for All என்பதன் சுருக்கமே 'UJALA'.

---

5. பெகாசஸ் மால்வேர் சிக்கலைக் கண்டறிவதற்காக தொழில்நுட்பக் குழுவை நியமித்த அமைப்பு எது?

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்



ஆ) இந்திய உச்சநீதிமன்றம் ☑

இ) சென்னை உயர்நீதிமன்றம்

ஈ) NITI ஆயோக்

✓ பெகாசஸ் மால்வேர் சிக்கலைக் கண்டறிய இந்திய உச்ச நீதிமன்றம் தொழில்நுட்பக் குழுவை நியமித்தது. குடிமக்கள் தங்கள் மொபைல் சாதனங்கள் பெகாசஸ் தீம்பொருளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்பட்டால், குழுவைத் தொடர்புகொள்ளுமாறு அத்தொழில்நுட்பக்குழு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

✓ நியாயமானதாக இருந்தால், சாதனத்தை பரிசோதிக்க அனுமதிக்கும்படி அக்குழு அந்நபரைக் கோரும்.

---

6. மிகவும் இளவயது உலக ரேபிட் செஸ் சாம்பியனான நோடிர்பெக் அப்துசட்டோரோவ் சார்ந்த நாடு எது?

அ) சுவிட்சர்லாந்து



ஆ) ரஷ்யா

இ) உஸ்பெகிஸ்தான் ☑

ஈ) உக்ரைன்

✓ உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த நோடிர்பெக் அப்துசட்டோ ரோவ், 17 வயது மூன்று மாதங்களில், உலக ரேபிட் செஸ் சாம்பியன் ஆனார். மேக்னஸ் கார்ல்சன் தனது 18 வயதில் 2009ஆம் ஆண்டில் உலக பிளிட்ஸ் பட்டத்தை வென்றார்.

✓ போலந்தின் வார்சாவில் நடந்த உலக ரேபிட் சாம்பியன் –ஷிப் போட்டியில் முன்னணி வீரர் மேக்னஸ் கால்சனை நோடிர்பெக் தோற்கடித்தார். உலக பிளிட்ஸ் பட்டத்தை பிரான்சின் மாக்சிம் வச்சியர்–லாக்ரேவ் வென்றார்.

---

7. இந்தியாவின் மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டத்தை இராஜஸ்தானில் தொடக்கியுள்ள இந்திய நிறுவனம் எது?

அ) அதானி பவர்

ஆ) அஸூர் பவர் ☑

இ) டாடா பவர்

ஈ) ரினியூ பவர்

✓ இந்திய சூரிய மின்னுற்பத்தியாளரான அசூர் பவர் தனது மிகப்பெரிய திட்டமான 600 MW சோலார் பூங்காவை இராஜஸ்தான் மாநிலத்தில் முழுமையாக இயக்கியுள்ளது.

✓ இந்தச் சூரிய ஆற்றல் பூங்கா பிகானேரில் அமைந்துள்ளது. இது 25 ஆண்டுகளுக்கு சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுக்கு (SECI) அதன் மின்சாரத்தை வழங்கும்.

---

8. அண்மையில் அமைக்கப்பட்ட 'எரிசக்தி மாற்ற ஆலோச –னைக் குழுவின்' தலைவர் யார்?

அ) தருண் கபூர் ☑



ஆ) ரமேஷ் சந்த்

இ) V K பால்

ஈ) அமிதாப் காந்த்

✓ மத்திய பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம் முன்னாள் பெட்ரோலிய செயலாளர் தருண் கபூர் தலைமையில் எரிசக்தி மாற்ற ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இந்தக்குழுவில் அனைத்து பொதுத்துறை எண்ணெய் & எரிவாயு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளனர்.

✓ மேலும் இது எண்ணெய் மற்றும் எரிவாயு துறைக்கான ஆற்றல் மாற்றத்திற்கான செயல் திட்டத்தை உருவாக்கும். 2070ஆம் ஆண்டிற்குள் நிகர சுழிய உமிழ்வை இந்தியா உறுதிசெய்துள்ளது. இந்தக்குழு 2022இன் நடுப்பகுதியில் மாற்றத்திற்கான ஒரு செயல்திட்டத்தை பரிந்துரைக்கும்.

---

9. 'மாவட்ட அளவிலான நல்லாட்சிக் குறியீடு' கொண்ட முதல் மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) மிசோரம்

ஆ) புதுச்சேரி

இ) திரிபுரா

ஈ) ஜம்மு & காஷ்மீர் ☑

✓ ஜம்மு மற்றும் காஷ்மீர் 'மாவட்ட அளவிலான நல்லாட்சிக் குறியீட்டைக்'கொண்ட முதல் யூனியன் பிரதேசமாக மாற உள்ளது. நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்க்கும் துறையானது ஜம்மு & காஷ்மீர் அரசுடன் இணைந்து இந்தப் பணியை மேற்கொள்ளும்.

✓ உழவு, வணிகம் மற்றும் தொழிற்துறை, பொதுப்பாதுகாப்பு, பொது சுகாதாரம் போன்ற வளர்ச்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்களை மதிப்பிடுவதற்கான 58 குறிகாட்டிகள் இந்தக் கட்டமைப்பில் இருக்கும்.

---

10. சமூக சீர்திருத்தவாதியான சாவித்ரிபாய் பூலே, இந்தியாவின் முதல் பெண்கள் பள்ளியை எம்மாநிலத்தில் நிறுவினார்?

அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா ☑



இ) மத்திய பிரதேசம்

ஈ) கேரளா

✓ சமூக சீர்திருத்தவாதி சாவித்ரிபாய் பூலே 1831 ஜனவரி.3 அன்று மகாராஷ்டிராவில் பிறந்தார். இவரது பிறந்தநாள் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 1848ஆம் ஆண்டில் சாவித்ரிபாய் தனது கணவர் ஜோதிராவ் பூலேவுடன் இணைந்து மகாராஷ்டிராவின் புனேவில் இந்தியாவின் முதல் பெண்கள் பள்ளிகளுள் ஒன்றை நிறுவினார்.

✓ ஆசிரியையான முதல் இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். அவர் கைம்பெண்களுக்கான தங்குமிடம் மற்றும் சிசுக்கொலை தடுப்பு இல்லத்தையும் திறந்து வைத்தார். சிறார் திருமணம் மற்றும் சதி முறையை அவர் கடுமையாக எதிர்த்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 12–01–2021 – அயலகத் தமிழர் நாள்

---

2. தமிழகத்தில் புதிதாக 11 மருத்துவக் கல்லூரிகள்: பிரதமர் மோடி காணொலியில் இன்று திறந்து வைக்கிறார்

தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை பிரதமர் மோடி இன்று காணொலி மூலம் திறந்துவைக்கிறார். இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்ட்வியா, தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

தமிழகத்தில் திருவள்ளூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 11 மாவட்டங்களில் ரூ.4 ஆயிரம் கோடியில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றை இன்று (ஜன.12) பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக தமிழகத்துக்கு வந்து திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கரோனா தொற்று பரவல் அதிகரித்ததால் பிரதமர் வருகை ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் பிரதமர் மோடி இன்று(ஜன.12) மாலை 4 மணிக்கு தமிழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 11 மருத்துவக் கல்லூரிகளை டெல்லியில் இருந்தபடி காணொலி மூலம்திறந்து வைக்கவுள்ளதாக கூறப்பட்டிருந்தது.

இதன்படி இன்று நடக்கும் இந்தநிகழ்வில், முதல்வர் ஸ்டாலின், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்ட்வியா, மாநில சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள் காணொலிக்

காட்சி மூலம் பங்கேற்கின்றனர். மேலும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூர் அமைச்சர்கள், எம்பி, எம்எல்ஏக்கள், ஆட்சியர்கள் உட்பட உயர் அதிகாரிகளும் விழாவில் கலந்துகொள்கின்றனர். இந்த 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் மூலம் தமிழகத்துக்குக் கூடுதலாக 1,450 மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

தமிழாய்வு நிறுவனம்

இதேபோல் சென்னை பெரும்பாக்கத்தில் ரூ.24.65 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டிடத்தையும் பிரதமர் மோடி காணொலி காட்சி மூலமாக இன்று திறக்கவுள்ளார்.

---

3. தேசிய இளையோர் விழா; பிரதமர் நரேந்திர மோடி காணொலியில் இன்று தொடங்கி வைக்கிறார்:

புதுச்சேரியில் நடப்பதாக இருந்த தேசிய இளையோர் விழாவை, கரோனா பரவலால் காணொலியில் இன்று பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். அத்துடன் ₹23 கோடியில் புதுச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள காமராஜர் மணிமண்டபத்தையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தின ஆண்டு மற்றும் சுவாமி விவேகானந்தர் பிறந்தநாளையொட்டி 25ஆவது தேசிய இளையோர் விழா, அரவிந்தரின் 150ஆவது பிறந்தநாள் விழா புதுவையில் கொண்டாடப்படுகிறது.

---

4. மனிதருக்கு பொருத்தப்பட்ட பன்றியின் இதயம்: மருத்துவ உலகில் புதிய சாதனை

மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை மாற்று அறுவை சிகிச்சையின்மூலம் மனிதருக்கு பொருத்தப்பட்ட புதிய மருத்துவ சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் பென்னட் என்பவருக்கு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை பொருத்தி மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவர்கள் இந்தச் சாதனை புரிந்துள்ளனர்.

---

5. இனி சீனாவின் விவோ இல்லை: ஐபிஎல் ஸ்பான்ஸராக டாடா குழுமத்துடன் பிசிசிஐ ஒப்பந்தம்

ஐபிஎல் டி20 தொடரின் டைட்டில் ஸ்பான்ஸராக சீனாவின் விவோ நிறுவனத்துக்குப் பதிலாக டாடா குழுமம் அடுத்த இரு ஆண்டுகளுக்கு உரிமத்தைப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடப்பு 2022 சீசன் மற்றும் 2023ஆம் ஆண்டு சீசனுக்கும் டைட்டில் ஸ்பான்ஸராக டாடா குழுமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக IPL நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாடா குழுமத்துக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில், இந்த ஒப்பந்தத்தை பிசிசிஐ மற்றும் ஐபிஎல் நிர்வாகக் குழு நேற்று வழங்கியுள்ளது.

---

6. சரிவிலிருந்து மீளும் இந்திய பொருளாதாரம்: ஏற்றுமதி, வேலை வாய்ப்பு, டிஜிட்டல் பரிவர்த்தனை அதிகரிப்பு

கரோனா தொற்றினால் ஏற்பட்டபாதிப்பிலிருந்து பொருளாதாரத்தை காக்கும் வகையில் நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் (2021–22) முதல் 9 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் 30 ஆயிரம் கோடி டாலரை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டு இதே காலத்தில் எட்டியதைவிட 22 சதவீதம் அதிகமாகும். நவம்பர் மாதத்தில் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்தபோதிலும் ஒட்டுமொத்தமாக ஏற்றுமதி அதிகரித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 40,000 கோடி டாலர் என ஏற்றுமதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை எளிதில் எட்டிவிட முடியும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

2020–21ஆம் நிதிஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் $35,400 கோடியாகும். முந்தைய நிதியாண்டைவிட 5,700 கோடி டாலர் கூடுதலாக வர்த்தகமானது. இறக்குமதி 51,300 கோடி டாலராக இருந்தது.

நடப்பாண்டில் அமெரிக்காவுக்கான வர்த்தகம் அதிகரித்து உள்ளது. 5,870 கோடி டாலர் அளவுக்கு ஏற்றுமதியாகி உள்ளது. இதற்கு அடுத்தபடியாக சீனாவுக்கான ஏற்றுமதி வர்த்தகம் 42% அதிகரித்துள்ளது. இந்தியா அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதல் ஐந்து நாடுகளின் பட்டியலில் வங்கதேசமும் இடம்பெற்றுள்ளது. வங்கதேசத்துக்கான இந்திய ஏற்றுமதி 67% அதிகரித்து உள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதற்கு பல நாடுகளுடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் (எப்டிஏ) போடப்பட்டதும் முக்கிய காரணமாகும். இந்தியா முதலில் தாராள வர்த்தக ஒப்பந்தம் ஐக்கிய அரபு அமீரகத்துடன்தான் போட்டது. ஆனால் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி குறைந்ததைத் தொடர்ந்து அமீரகத்துடனான வர்த்தக அளவு கடந்த சில ஆண்டுகளாக குறைந்துவிட்டது. இங்கிலாந்துடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பிலிருந்து இங்கிலாந்து வெளியேறியதால் ஏற்பட்டுள்ள வர்த்தக பாதிப்பைஈடுகட்டுவதற்காக இங்கிலாந்துடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுகிறது. ஐரோப்பிய யூனியன், ஆஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

டிசம்பர் மாதத்தில் மட்டும் 3,700 கோடி அளவுக்கு ஏற்றுமதி வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்துள்ளார். முந்தைய ஆண்டு இதே காலத்தில் எட்டப்பட்ட ஏற்றுமதி அளவைக் காட்டிலும் 37 சதவீதம் அதிகமாகும்.

நடப்பு நிதி ஆண்டு முடிவடைய 3 மாதங்கள் உள்ள நிலையில் இத்தகைய ஏற்றுமதி வருமானத்தை இந்தியா இதுவரை எட்டியது இல்லை.

மின்னுற்பத்தி

2015–ம் ஆண்டில் பாரீஸில் நடைபெற்ற மாநாட்டில் மரபு சாரா எரிசக்தி இலக்கை எட்ட இந்தியா கையெழுத்திட்டது. இதன்படி 2030–ம் ஆண்டு எட்ட வேண்டிய இலக்கு 8 ஆண்டுகளுக்கு முன்ன தாகவே 2021–ம் ஆண்டிலேயே இந்தியா எட்டிவிட்டது குறிப்பிடத் தக்க சாதனையாகும். 40 சதவீதமின்னுற்பத்தியை மரபுசாரா மின்னுற்பத்தி மூலம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. காற்றாலை, சூரிய மின்னுற்பத்தி மற்றும் அணு மின்னுற்பத்தி மூலம் இதை எட்ட முடிவு செய்யப்பட்டது.

இந்தியாவின் மொத்த மின்னுற் பத்தி 392 கிகாவாட் ஆகும். மரபுசாரா உற்பத்தி மூலமாக உற்பத்தி செய்ய வேண்டிய மின்னுற்பத்தி 157 கிகாவாட்டாகும். அரசு தனியார் பங்கேற்பு மூலம் இந்த இலக்கை எட்டப்பட்டுள்ளது. மரபு சாரா எரிசக்தித் துறையில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய முதலீடு (2014–19) 6,400 கோடி டாலராகும்.

வேலைவாய்ப்பு

ஐஐடி உள்ளிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களில் அதிக அளவில் அதிக சம்பளத்துக்கு இந்திய மாணவர்கள் முன்னணி நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மும்பை ஐஐடி–யில் மட்டும் 1,400 மாணவர் களுக்கு வளாகத் தேர்வில் வேலை கிடைத்துள்ளது. ஐஐடி–டெல்லி கல்வி மையத்தில் 1,250 மாணவர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

இதேபோல சென்னை ஐஐடி–யில் கடந்த ஆண்டை விட 73 சதவீதம் கூடுதலான எண்ணிக்கையில் மாணவர்களுக்கு வேலை கிடைத் துள்ளது. அத்துடன் ஊதியமும் கடந்த ஆண்டை விட 20 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை அதிகமாகும்.

கரோனா காலகட்டத்தில் வேலையிழந்தவர்களில் 60 சதவீதம் பேருக்கு மீண்டும் வேலை கிடைத்துள்ளது. தொழில்நுட்பப் பொறியாளர்களுக்கான தேவையும் அதிகரித்துள்ளது.

டிஜிட்டல் பரிவர்த்தனை

இந்தியாவின் டிஜிட்டல் மூலமான வர்த்தக பரிவர்த்தனை கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. 30,000 கோடி டாலர் அளவுக்கு வர்த்தக பரிவர்த்தனை நடைபெற் றுள்ளது. இது சீனாவை விட 60 சதவீதம் அதிகமாகும்.

---

1. சிறார் திருமணத் தடை (திருத்தம்) மசோதாவை ஆராய அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவில் எத்தனை பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்?

அ) 01 ☑



ஆ) 02

இ) 03

ஈ) 04

✓ சிறார் திருமணத் தடை (திருத்தம்) மசோதாவை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட 31 பேர்கொண்ட நாடாளுமன்றக் குழுவில் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி சுஷ்மிதா தேவ் மட்டுமே பெண்மணியாவார்.

✓ பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை 21ஆக உயர்த்த இம்மசோதா எண்ணுகிறது. தற்போது, ஆண்க –ளுக்கான குறைந்தபட்ச திருமண வயது 21ஆகவும், பெண்களுக்கு குறைந்தபட்ச திருமண வயது 18ஆகவும் உள்ளது. பெண்களின் திருமண வயதை உயர்த்தும் திட்டம் ஜெயா ஜெட்லி தலைமையிலான NITI ஆயோக் பணிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டது.

---

2. எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், '5ஆம் தலை முறை நுண்ணலை ஈர்ப்பிகளை' உருவாக்கியுள்ளனர்?

அ) ஐஐடி மெட்ராஸ்

ஆ) ஐஐடி பாம்பே

இ) கேரள பல்கலைக்கழகம் ☑

ஈ) IISc, பெங்களூரு

✓ கேரள பல்கலையின் இயற்பியல் துறை பேராசிரியர்களு –ம் ஆராய்ச்சி அறிஞர்களும் ஐந்தாம் தலைமுறை நுண் அலை ஈர்ப்பிகளை உருவாக்கியுள்ளனர். இது மின்காந்த கதிர்வீச்சுக்கு எதிராக ஒரு பயனுள்ள கவசமாக பயன்படுகிறது. மின்காந்த குறுக்கீடு உயிரினங்களின் நலத்திற்கு தீங்கானது என அறியப்படுகிறது.

✓ இது உயர்தர மின்னணு சாதனங்களையும் பாதிக்கிறது. அதிக அதிர்வெண் உள்ள இடத்தில் நுண்ணலையை ஈர்க்க அவர்கள் 'மேயனைட் எலெக்ட்ரைடு' என்ற புதிய கவசப்பொருளைப் பயன்படுத்தினர்.

---

3. சிறப்புப் பாதுகாப்புக் குழுச் சட்டம், 1988 ஆனது எதற்கு/யாருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இயற்றப்பட்டது?

அ) அணுமின் நிலையங்கள்

ஆ) பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர்கள் ☑

இ) இந்தியாவின் நில எல்லைகள்

ஈ) இந்தியாவின் நீர் எல்லைகள்

✓ முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு சிறப்புப் பாதுகாப்புக் குழு சட்டம், 1988 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது இந்தியப் பிரதமர் மற்றும் இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக் –கு பாதுகாப்பை வழங்குவதற்காக ஒன்றியத்தின் ஆயுதப் படையை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

✓ முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர், அனைத்து முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்பத்தினருக்கும் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

---

4. 'அபிலிம்பிக்ஸ்' என்பது எந்தத் துறைசார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்படும் போட்டிகளாகும்?

அ) விளையாட்டு

ஆ) குறியீட்டு முறை

இ) திறன் செயல் விளக்கம் ☑

ஈ) வியாபார நிர்வாகம்

✓ தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (NSDC) மூலம் இந்தியத் திறன்கள்–2021'க்கான தேசிய போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகத்தின்கீழ் பணிபுரியும் திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கான மைய முகமை NSDC ஆகும்.

✓ இதில் மாற்றுத்திறனாளிகளின் திறன் செயல்விளக்கமான 'அபிலிம்பிக்ஸ்' இடம்பெற்றது. இந்தியத் திறன்கள் – 2021 ஆனது யோகா, ஷூ தயாரித்தல் (தோல்) மற்றும் ஆடை தயாரித்தல் (தோல் ஆகிய மூன்று புதிய திறன்களை அறிமுகப்படுத்தியது.

---

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஹைதராபாத் அறிவிப்பு'டன் தொடர்புடையது எது?

அ) பருவநிலை மாற்றம்



ஆ) மின்னாளுகை ☑

இ) பெண்கள் அதிகாரமளித்தல்

ஈ) COVID–19 நெறிமுறை

✓ நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைகள் துறை, பணியாளர், பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் மற்றும் மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியவை தெலுங்கானா அரசாங்கத்துடன் இணைந்து ஹைதராபாத்தில் 24ஆவது தேசிய மின் – ஆளுகை மாநாட்டை ஏற்பாடு செய்தன.

✓ "India's Techade: Digital Governance in a Post Pandemic World" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

---

6. சஞ்சை ஏரி என்பது எம்மாநிலம்/யூடியில் அமைந்துள்ள ஓர் ஈரநிலமாகும்?

அ) கர்நாடகா



ஆ) புது தில்லி ☑

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) ஆந்திரப் பிரதேசம்

✓ ஹஸ்தினாபூர் வனவுயிரி சரணாலயம், கிரேட்டர் நொய்டாவில் உள்ள தனௌரி மற்றும் சூரஜ்பூர் சதுப்பு நிலங்கள், தில்லி உயிரியல் பூங்கா மற்றும் சஞ்சை ஏரி, ஓக்லா பறவைகள் சரணாலயம், நஜப்கர் ஜீல் மற்றும் யமுனா ஆறு ஆகிய ஏழு ஈரநிலங்களில் ஆசிய நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

✓ இந்தக் கணக்கெடுப்பில் சஞ்சை ஏரியில் 13 இனங்கள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளன. கடந்த 2019 – 2021 வரையிலும் மொத்தம் 17 இனங்கள் இருந்தன.

---

7. 'சீ டிராகன் 22' ராணுவப் பயிற்சியில் எந்த நாடுகளின் குழுமம் பங்கேற்கிறது?

அ) இந்தோ–பசிபிக் நாடுகள் ☑



ஆ) QUAD குழுமம்

இ) இந்தியப் பெருங்கடல் நாடுகள்

ஈ) பால்கன் நாடுகள்

✓ இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான் மற்றும் தென் கொரிய கடற்படைகளுடன் இணைந்து 'சீ டிராகன் 22' பயிற்சி தொடங்கியதாக அமெரிக்க கடற்படை அறிவித்து உள்ளது. இது ஆறு இந்தோ–பசிபிக் நாடுகள் பங்கேற்கும் பசிபிக் பெருங்கடலில் நடக்கும் ஒரு பலதரப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்பு போர்ப்பயிற்சியாகும்.

✓ இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 'QUAD' குழுவில் அங்கம் வகிக்கின்றன. அவை மலபார் பயிற்சியில் பங்கேற்கின்றன.

---

8. எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் பௌத்த சமூகம் லோசர் பண்டிகையை பாரம்பரிய புத்தாண்டு நாளாகக் கொண்டாடுகிறது?

அ) லடாக் ☑



ஆ) சிக்கிம்

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ லடாக், பாரம்பரிய புத்தாண்டான லோசரைக் கொண்டாடுகிறது. லோசர் பண்டிகையை இப்பகுதியில் உள்ள பௌத்த சமூகத்தினர் கொண்டாடி வருகின்றனர்.

✓ ஜே சோங்காபாவின் பிறப்பு மற்றும் முக்தி ஆண்டுவிழா ஆகியவற்றுடன் இந்தத்திருவிழா தொடங்கியது. மடங்கள், தூபிகள் மற்றும் பிற இடங்களில் மக்கள் திருவிழாவைக் கொண்டாடினர். திபெத்திய பௌத்தத்தில் பிப்ரவரி / மார்ச் மாதத்தில் திருவிழா கொண்டாடப்படுகிறது.

9.வரலாற்றுரீதியாக இந்தியாவின் ஒருபகுதியாக இருந்த குர்னாக் கோட்டை, தற்போது எந்நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது?

அ) பாகிஸ்தான்

ஆ) சீனா ☑



இ) பங்களாதேஷ்

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ வரலாற்று ரீதியாக இந்தியாவின் ஒருபகுதியாக இருந்த குர்னாக் கோட்டை, 1958 முதல் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோட்டைக்கு அருகில், சீனா புதிய பாலத்தை கட்டிவருகிறது. கிழக்கு லடாக்கில் உள்ள மெய்யான கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே பாங்கோங் டிசோவில் இப்பாலம் கட்டப்பட்டு வருகிறது.

---

10. அணுவாயுதப் போரைத் தவிர்க்கும் நோக்கில் சமீபத்தில் அறிக்கையொன்றை வெளியிட்ட உலகளாவிய சங்கம் / அமைப்பு எது?

அ) UNSC ☑



ஆ) BRICS

இ) G20

ஈ) G7

✓ ஐநா பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்புநாடுகளான ரஷ்யா, பிரிட்டன், சீனா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் சமீபத்தில் ஓரறிக்கையை வெளியிட்டன.

✓ அணுவாயுதங்கள் மேலும் பரவுவதையும், அணுவாயுதப் போரையும் தவிர்க்க வேண்டும் என நாடுகள் கருதுகின்–றன. அணுசக்தி நாடுகளுக்கு இடையிலான போரைத் தவிர்க்கவும் உத்திசார் இடர்களைக் குறைக்கவும் இந்த அறிக்கை எண்ணுகிறது. அணுவாயுதங்களை "முதலில் பயன்படுத்தக்கூடாது" என்ற கொள்கையை சீன நாடு கொண்டுள்ளது.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இஸ்ரோவின் புதிய தலைவராக சோமநாத் நியமனம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவின் புதிய தலைவராக சோமநாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரோவின் தற்போதைய தலைவராக இருக்கும் K சிவனின் பதவிக்காலம் முடிவடைவதைத் தொடர்ந்து புதிய தலைவருக்கான ஆலோசனை நடைபெற்று வந்த நிலையில் சோமநாத் தேர்ந்தெடுக்கப்படுவதாகவும் அடுத்த 3 ஆண்டுகள் இப்பதவியில் நீடிப்பார் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

கேரளத்தைச் சேர்ந்த சோமநாத் விக்ரம் சாராபாய் விண்வெளி மைய இயக்குநராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

2. தமிழக மருத்துவக் கட்டமைப்புக்கு ₹3,000 கோடி

தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்த அடுத்த ஐந்து ஆண்டுகளில் ₹3,000 கோடி நிதியுதவி வழங்க உள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

விருதுநகர், கள்ளக்குறிச்சி, நீலகிரி, ரமநாதபுரம், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 11 மாவட்டங்களில் ₹4,080 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளை தில்லியிலிருந்து காணொலி முறையில் பிரதமர் மோடி தொடக்கிவைத்தார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்துக்கு ரூ.3 ஆயிரம் கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்கவிருக்கிறது. நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்பு, மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள் போன்றவற்றை அமைப்பதற்கு இது பேருதவியாக அமையும் என பிரதமர் அப்போது தெரிவித்தார்.

3. ககன்யான் திட்டம்: மகேந்திரகிரியில் கிரையோஜெனிக் எஞ்சின் பரிசோதனை வெற்றி

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கான கிரையோஜெனிக் எஞ்சினை இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (இஸ்ரோ) வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ வளாகத்தில் ககன்யான் திட்டத்துக்கான கிரையோஜெனிக் எஞ்சின் பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையில் அனைத்து அம்சங்களையும் எஞ்சினின் செயல்திறன் பூர்த்தி செய்தது.

இப்பரிசோதனை வெற்றிபெற்றது ககன்யான் திட்டத்தில் முக்கிய மைல்கல்லாகும். அத்திட்டத்தின்படி, மனிதரை விண்வெளிக்கு சுமந்து செல்லும் விண்கலத்தில் இந்த எஞ்சினை இணைப்பதற்கான நம்பகத்தன்மை பரிசோதனைமூலம் உறுதியாகியுள்ளது.

இந்த எஞ்சின் மேலும் நான்கு பரிசோதனைகளுக்கு உள்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023-ஆம் ஆண்டு ககன்யான் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கடந்த ஆண்டு மத்திய அரசு தெரிவித்தது. அமெரிக்கா, ரஷியா, சீனாவைத் தொடர்ந்து 4ஆவது நாடாக இத்திட்டத்தை இந்தியா செயல்படுத்த உள்ளது.

---

4. பிரதமர் மோடியின் பாதுகாப்புக்கு குறைபாடு ஏற்பட்ட விவகாரம்: ஓய்வுபெற்ற நீதிபதி இந்து மல்கோத்ரா தலைமையிலான குழு விசாரணை: உச்சநீதிமன்றம்

பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூரில் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்புக்கு குறைபாடு ஏற்பட்ட விவகாரத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி இந்து மல்கோத்ரா தலைமையிலான குழு விசாரிக்கும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக கடந்த ஐந்தாம் தேதி பிரதமர் மோடி விமானம் மூலம் பஞ்சாப் சென்றார். மோசமான வானிலை காரணமாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு காரில் செல்ல முடிவு செய்யப்பட்டது. ஆனால், விவசாயிகள் போராட்டம் காரணமாக அவரது வாகன அணி வகுப்பு மேம்பாலத்தில் 15 நிமிடத்துக்கும் மேலாக நின்றது. போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததால் தனது பயணத்தை பிரதமர் மோடி ரத்து செய்து பிரதமர் பாதி வழியிலேயே டெல்லி திரும்பினார். பிரதமரின் பாதுகாப்பில் மாநில அரசு அலட்சியமாக செயல்பட்டதாகவும், பிரதமர் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் பாஜகவினர் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் மத்திய மற்றும் பஞ்சாப் அரசுகள் தனித்தனியாக விசாரணைக் குழு அமைத்தன. அதேநேரம் என்ஜிஓ வழக்கறிஞர் இந்த விவகாரத்தை உச்ச நீதிமன்றம் கொண்டுச் செல்ல கடந்த வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சூர்ய காந்த், ஹிமா கோலி ஆகியோர் அமர்வு விசாரித்தது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் விசாரணைக் குழுக்கள் இந்த வழக்கில் விசாரணை செய்ய உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில் நாங்களே ஒரு விசாரணை குழுவை அமைக்கிறோம் என தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் பிரதமரின் பாதுகாப்பு குறைபாடு குறித்து விசாரிக்க உச்சநீதிமன்றம் அமைத்துள்ள குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி இந்து மல்கோத்ரா செயல்படுவார் என்றும், குழுவின் உறுப்பினர்களாக பஞ்சாப் காவல்துறை தலைவர் (பாதுகாப்பு), தேசிய புலனாய்வு முகமை இயக்குநர், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற பதிவாளர் ஆகியோர் இடம் பெறுவர்கள் எனவும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

---

5. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.3%-ஆக இருக்கும்: உலக வங்கி கணிப்பு

பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக மீட்சி பெறாததால், ஏற்கனவே கணித்தபடி, நடப்பு நிதியாண்டில் (2021-22) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கூறியுள்ளது.

தேசிய புள்ளியியல் அலுவலகம், தேசிய வருவாய் கிடைத்த விவரங்களை சமீபத்தில் வெளியிட்டது. அதில், உற்பத்தி, சுரங்கம், வேளாண்மை ஆகிய துறைகள் கரோனாவுக்குப் பிறகு மீண்டுள்ளதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சமீபத்திய சர்வதேச பொருளாதார வாய்ப்புகள் குறித்த அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கடந்த ஜூன் மாதம் கணித்திருந்தது. அதன் பிறகு பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக மீட்சி பெறவில்லை என்பதால் பொருளாதார வளர்ச்சி குறித்த கணிப்பில் எந்த வித மாற்றமிருக்காது. அது, 8.3 சதவீதமாகவே இருக்கும்.

பல்வேறு துறைகளுக்கு வங்கிகள் கடனுதவி அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்பட வேண்டும். நிதியுதவியைக் குறைக்கக் கூடாது.

மேலும், நாட்டின் பொருளாதார வளா'ச்சி 2022-23'இல் 8.7 சதவீதமாகவும் 2023-24'இல் 6.8 சதவீதமாகவும் இருக்கும். தனியாரின் ஒத்துழைப்புடன் முதலீடுகள் அதிகரித்திருப்பதாலும், உற்பத்திசார் ஊக்குவிப்புத் திட்டங்களாலும் பொருளாதார வளர்ச்சி பற்றிய கணிப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. சில்லறை பணவீக்கம் 5.59%-ஆக அதிகரிப்பு

கடந்த டிசம்பர் மாதத்தில் சில்லறை பணவீக்கம் 5.59 சதவீதமாக அதிகரித்துள்ளது மத்திய அரசின் புள்ளி விவரத்தில் தெரியவந்துள்ளது.

நுகர்வோர் விலைக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு சில்லறை பணவீக்கம் கணக்கிடப்படுகிறது.

இந்நிலையில் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, கடந்த நவம்பர் மாதம் சில்லறை பணவீக்கம் 4.91 சதவீதமாக இருந்தது. இது கடந்த டிசம்பரில் 5.59 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த நவம்பரில் உணவுப் பொருள்களின் பணவீக்கம் 1.87 சதவீதமாக இருந்தது. இது கடந்த டிசம்பரில் 4.05 சதவீதமாக அதிகரித்தது.

உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வால், கடந்த டிசம்பர் மாதம் சில்லறை பணவீக்கம் அதிகரித்துள்ளது.

ரிசர்வ் வங்கி மதிப்பீட்டின்படி நடப்பு நிதியாண்டின் நான்காவது காலாண்டில் மொத்த பணவீக்கம் உச்சத்தை எட்டி, பின்னர் படிப்படியாக குறையும் என எதிர்பார்க்கப்ப –டுகிறது.

---

7. க. திருநாவுக்கரசுக்கு பெரியார் விருது, கே சந்துருவுக்கு அம்பேத்கர் விருது

தமிழக அரசின் 2021–ஆம் ஆண்டுக்கான பெரியார் விருது திராவிட இயக்க ஆய்வாளர் க திருநாவுக்கரசுக்கும், அம்பேத்கர் விருது ஓய்வுபெற்ற நீதிபதி கே சந்துருவுக்கும் வழங்க முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும், சமூகநீதிக்காகப் பாடுபடுபவர்களைச் சிறப்பு செய்யும் வகையில், சமூக நீதிக்கான பெரியார் விருதினை வழங்கி கௌரவித்து வருகிறது.

அவ்வகையில், 2021ஆம் ஆண்டுக்கான பெரியார் விருது திராவிட இயக்க ஆய்வாளரும், எழுத்தாளருமான க திருநாவுக்கரசுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டுவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், 2021ஆம் ஆண்டுக்கான Dr அம்பேத்கர் விருது சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி கே சந்துருவுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

விருது தொகை உயர்வு: விருது பெற்றோருக்கு விருது தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் ₹1 இலட்சம் என்பதை ₹5 இலட்சமாக உயர்த்தி வழங்க முதல்வர் ஆணையிட்டுள்ளார். விருதுத் தொகையுடன், தங்கப் பதக்கமும் தகுதி உரையும் வழங்கப்படும்.

பெரியார் விருது பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள க திருநாவுக்கரசு திராவிட இயக்கத்தின் நடமாடும் கலைக் களஞ்சியம் என தமிழ்ச் சமூகத்தால் போற்றப்படுபவர். திராவிட இயக்க வரலாறான நீதிக்கட்சி வரலாறு என்னும் நூலை, அந்த இயக்கம் 1916–இல் தொடங்கப்பட்டது முதல் 1944–இல் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது வரை இரண்டு தொகுதிகளாகப் படைத்துள்ளார்.

திராவிட இயக்க வேர்கள், திராவிட இயக்கத் தூண்கள் போன்ற பல்வேறு வரலாற்று நூல்களையும் எழுதி தமிழ்ச் சான்றோர்களின் பாராட்டுகளைப் பெற்றவர்.

டாக்டர் அம்பேத்கர் விருது பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே சந்துரு தன்னுடைய பணிக்காலத்தில் 96,000 வழக்குகளுக்குத் தீர்வுகண்டு சாதனை படைத்தவர்.

'அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்', 'என் வழக்கை கவனி!', 'தமிழ்நாட்டில் ஒரு பெண் நீதிமன்றத்தை அணுகும்போது' ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.

---

8. 2 ஆண்டுகளில் இந்தியாவில் வனப்பரப்பு 2,261 சதுர கிமீ அதிகரிப்பு: ஆய்வறிக்கை தகவல்

இந்தியாவில் கடந்த 2 ஆண்டுகளில் 2261 சகிமீ அளவுக்கு வனப்பரப்பு அதிகரித்துள்ளதாக, ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனப்பரப்பு பற்றி ஆய்வை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்திய வனப்பரப்பு ஆய்வு அமைப்பு நடத்தி வருகிறது.

அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

கடந்த 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த இரு ஆண்டுகளில் 1540 சதுர கிமீ அளவுக்கு வனப்பரப்பும், 721 சகிமீ அளவுக்கு மரங்கள் அடந்த பகுதியும் அதிகரித்துள்ளது. இந்தியாவில் வனப்பரப்பு அதிகரித்திருப்பது திருப்திகரமாக உள்ளது.

நாட்டில் வனப்பரப்பை அதிகரிக்கச் செய்வதற்காக பல்வேறு முடிவுகளை மத்திய வனம், சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் எடுத்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் வனப் பரப்பை அதிகரிக்க பசுமைத் திட்டம், நகர் வன யோஜனா ஆகிய திட்டங்களை அரசு முன்னெடுத்துள்ளது.

நாட்டின மொத்த பரப்பில் தற்போது 8.09 கோடி ஹெக்டேர் அளவுக்கு வனப்பகுதியாக உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,261 சதுர கிமீ அளவுக்கு அதிகரித்துள்ளது. அதில், ஆந்திரம் (647 சதுர கிமீ), தெலங்கானா (632 சதுர கிமீ), ஒடிஸா (537 சதுர கிமீ), கர்நாடகம் (155 சதுர கிமீ), ஜார்கண்ட் (110 சதுர கிமீ) ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.


இருப்பினும் அருணாசல பிரதேசம், மணிப்பூர் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் வனப்பரப்பு 1,020 சதுர கிமீ அளவுக்கு குறைந்துள்ளது.

வனப்பகுதிகளில் கடந்த 2019 நவம்பர் முதல் 2020 ஜூன் வரையிலான காலகட்டத்தில் 1,46,920 தீ விபத்துகள் நடந்துள்ளன. இதேபோல், கடந்த 2020 நவம்பர் முதல் 2021 ஜூன் வரையிலான காலகட்டத்தில் 3,98,774 தீ விபத்துகள் நடந்துள்ளன என்று வனப்பரப்பு பற்றிய அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. IHU (B.1.640.2) என்ற புதிய COVID திரிபு கண்டறியப்ப –ட்ட நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) இந்தியா

இ) பிரான்ஸ் ☑

ஈ) இத்தாலி

✓ IHU (B.1.640.2) எனப் பெயரிடப்பட்ட புதிய COVID திரிபு பிரான்ஸில் அமைந்துள்ள IHU மெடிட்டரேனி தொற்று நிறுவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய மாறுபாடு ஒமிக்ரானைவிட 46 பிறழ்வுகளைக் கூடுதலாக கொண்டு உள்ளதாகக் கூறப்படுகிறது.

✓ இதன் முதல் பாதிப்பு ஆப்பிரிக்க நாடான கேமரூனில் இருந்து வந்த ஒருவரிடம் கண்டறியப்பட்டது. அறிவியலா –ளர்களின் கூற்றுப்படி, இப்புதிய திரிபு E484K பிறழ்வைக் கொண்டுள்ளது. அது தடுப்பூசி–எதிர்ப்புத் தன்மையைக் கொண்டுள்ளது.

---

2. 'KABIL' என்பது பின்வரும் எம்மத்திய அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும்?

அ) சுரங்க அமைச்சகம் ☑

ஆ) எஃகு அமைச்சகம்

இ) MSME அமைச்சகம்

ஈ) எரிசக்தி அமைச்சகம்

✓ சுரங்க அமைச்சகம் 'கனிஜ் பிதேஷ் இந்தியா (கபில்)' என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. தேசிய அலுமினிய நிறுவனம் (NALCO), ஹிந்துஸ்தான் காப்பர் (HCL) மற்றும் மினரல் எக்ஸ்ப்ளோரேஷன் கார்ப்பரேஷன் (MECL) ஆகியவற்றின் பங்கு இதில் 40:30:30 ஆகும்.

✓ ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா, பொலிவியா மற்றும் சிலி போன்ற நாடுகளில் லித்தியம் மற்றும் கோபால்ட் போன்ற முக்கிய கனிமங்களின் சுரங்கங்களைக் கையகப்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

---

3. எந்த மத்திய பொதுத்துறை நிறுவனத்தின் முதல் பெண் தலைவராக அல்கா மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்?

அ) ONGC ☑



ஆ) SAIL

இ) PFC

ஈ) NTPC

✓ எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகத்தின் (ONGC) முதல் பெண் தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரியாக அல்கா மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார். ONGC இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியாளர் ஆகும். இந்நியமனத்திற்கான பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு அமைச்சர –வையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

---

4. இந்தியாவின் முதல் நடமாடும் தேன் பதப்படுத்தும் வாகனம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம் ☑



ஆ) குஜராத்

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ இந்தியாவின் முதல் நடமாடும் தேன் பதப்படுத்தும் வேன் உத்தர பிரதேச மாநிலம் காஜியாபாத்தில் உள்ள சிரோரா கிராமத்தில் தொடங்கப்பட்டது. இதனை KVIC'இன் தலைவர் வினய் குமார் சக்சேனா தொடங்கி வைத்தார்.

✓ இந்நடமாடும் வாகனம் KVICஆல் அதன் பஞ்சோகெராவில் உள்ள பல்துறை பயிற்சி மையத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டது. இதால் 8 மணி நேரத்தில் 300 கிகி தேனைச் செயலாக்க முடியும். மேலும் தேனின் தரத்தை ஆராயும் ஒரு பரிசோதனை ஆய்வகத்தையும் இது தன்னகத்தே கொண்டுள்ளது.

---

5. 'Ecowrap' என்பது எந்த நிறுவனத்தால் வெளியிடப்பட்ட முதன்மை அறிக்கையாகும்?

அ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ) NITI ஆயோக்

இ) இந்திய ரிசர்வ் வங்கி

ஈ) பாரத ஸ்டேட் வங்கி ☑

✓ 'Ecowrap' என்பது பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) ஆய்வுக் குழுவால் வெளியிடப்படுகிற அறிக்கையாகும்.

✓ இந்த அறிக்கையின் சமீபத்திய பதிப்பின்படி, இந்தியாவின் மெய்யான GDP 2021–22'இல் 9.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2021–22 நிதியாண்டிற்கான தேசிய வருமானத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளை NSO வெளியிட்டது. இது 2021–22'இல் GDP வளர்ச்சியை 9.2 சதவீதமாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.

---

6. NPCIஇன்படி, ஒரு வாடிக்கையாளருக்கு, ஒரு நாளுக்கு ஒரு டெர்மினலுக்கு, ஆதார் அடிப்படையிலான ரொக்கம் பெறும் பரிவர்த்தனைகளின் அதிகபட்ச வரம்பு என்ன?

அ) இரண்டு

ஆ) மூன்று

இ) ஐந்து ☑

ஈ) ஏழு

✓ நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, பணம் எடுப்பதற்கும் மினி ஸ்டேட்மெண்ட்களுக்கும் அதிகபட்ச வரம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு வாடிக்கையாளருக்கு, ஒரு நாளுக்கு, ஒரு டெர்மினலுக்கு, ஆதார் அடிப்படையிலான பணம் எடுக்கும் பரிவர்த்தனை –களின் அதிகபட்ச வரம்பை ஐந்து என அது நிர்ணயம் செய்துள்ளது. இது 2022 ஜன.15 முதல் அமலுக்கு வரும்.

---

7. அகர்தலா மற்றும் ஜிரிபாம் இடையே தொடங்கப்பட்ட புதிய ஜன் சதாப்தி விரைவு இரயிலானது திரிபுராவை பின்வரும் எந்த மாநிலத்துடன் இணைக்கிறது?

அ) மேற்கு வங்கம்



ஆ) மணிப்பூர் ☑

இ) சிக்கிம்

ஈ) அஸ்ஸாம்

✓ இரு வடகிழக்கு மாநிலங்களான திரிபுரா & மணிப்பூரை இணைக்கும் அகர்தலா மற்றும் ஜிரிபாம் இடையேயான ஜன் சதாப்தி விரைவு ரயிலை மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் கொடியசைத்து தொடங்கினார்.

✓ ஜன் சதாப்தி விரைவு இரயில் வாரத்திற்கு மூன்று முறை இயக்கப்படும். இதன் பயணம் 6 மணி நேரம். இது தவிர, திரிபுராவில் இராஜ்தானி விரைவு இரயில், கஞ்சன்ஜங்கா விரைவு இரயில், ஹம்சாபர் விரைவு இரயில் உள்ளிட்டவை ஏற்கனவே இயக்கத்தில் உள்ளன.

---

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஓநாய் எரிமலை, எந்தத் தீவுக்கூட்டத்தின் மிகவுயரமான சிகரமாகும்?

அ) ஹவாய் தீவுகள்



ஆ) கலபகோஸ் தீவுகள் ☑

இ) மரியானா தீவுகள்

ஈ) கரோலின் தீவுகள்

✓ வைட்டன் மலை என்றுமழைக்கப்படும் ஓநாய் எரிமலை, கலபகோஸ் தீவுகளின் மிக உயரமான சிகரமாகும். இது பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு எரிமலைத்தீவுக்கூட்டம் ஆகும். இந்த எரிமலை சமீபத்தில் வெடித்துச்சிதறி, பசிபிக் பெருங்கடலில் புகை மண்டலத்தை உருவாக்கியது. இந்தத்தீவுகள் ஈக்வடார் மாகாணத்தின் ஒருபகுதியாகும்.

---

9. நந்தூர் மத்மேஷ்வர் பறவைகள் சரணாலயம் உள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா ☑

✓ நந்தூர் மத்மேஷ்வர் பறவைகள் சரணாலயம் மகாராட்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள நிபாத் என்ற இடத்தில் அமைந்துள்ள ஈரநிலமாகும். குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், இப்பறவைகள் சரணாலயத்தில் ஏராளமான புலம்பெயர் பறவைகள் குவிந்துள்ளன.

✓ வனத்துறையினர் கூறுகையில் பூநாரைகள், கொக்குகள், கல்பொறுக்கிகள், நீலக்குஞ்சுகள் உள்ளிட்ட முப்பது (30) ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் அங்கு வந்துள்ளன. கடுமையான குளிர்காலத்திலிருந்து தற்காத்துக்கொள்வத –ற்காக சைபீரியா, ஐரோப்பாவிலிருந்து அந்தப்பறவைகள் இங்கு இடம்பெயர்கின்றன.

---

10. 2022'இல் 25ஆவது தேசிய இளையோர் விழாவை நடத்திய மாநிலம்/யூடி எது?

அ) தமிழ்நாடு



ஆ) புதுச்சேரி ☑

இ) கோவா

ஈ) கர்நாடகா

✓ புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு, 25ஆவது தேசிய இளையோர் விழாவை ஜன.12 அன்று நடத்தியது. சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஜன.12 அன்று நடத்தப்பட்டது.

✓ மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்துடன் இணைந்து நடத்தப்பெற்ற இந்நிகழ்வில் நாடு முழுவதிலுமிருந்து 7,000 இளைஞுயோர் பங்கேற்ற –னர். விழாவின் சின்னமான, "சக்ஷம் யுவ–ஷக்திக்த் யுவா" ஆகியவற்றையும் அமைச்சர் வெளியிட்டார்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கணிதப்பாடத்தை எளிதாகக் கற்க புதுமையான திட்டம்: 25,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி

தமிழகத்தில் அரசுப்பள்ளி மாணவர்கள் கணிதப்பாடத்தை நன்கு புரிந்துகொண்டு ஆர்வத்துடன் கற்றுக்கொள்வதற் –காக ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (சமக்ரசிக்ஷா) சார்பில் 'மகிழ் கணிதம்' என்ற புதுமையான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 6ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை கற்பிக்கும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கணித ஆசிரியர்களுக்கு 'மகிழ் கணிதம்' தொடர்பான பயிற்சி முதற்கட்டமாக ஜனவரி 20 மற்றும் 21 ஆகிய இருநாள்கள் வழங்கப்படவுள்ளது.

ஆட்சியர்மூலம் சான்றிதழ்: அனைத்து கணித ஆசிரியர்க –ளும் பயிற்சியில் கலந்துகொள்வதை அந்தந்த மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உறுதிசெய்ய அறிவுறுத்தப் –பட்டுள்ளது. பயிற்சியில் கலந்துகொள்ளும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

---

2. இங்கிலாந்தில் பென்னிகுவிக் சிலை – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் நீராதாரமாக திகழ்வது முல்லைப்பெரியாறு அணை. தமிழக–கேரள எல்லையில் அமைந்துள்ள இந்த அணை ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில், இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுவிக் தனது பெரும் முயற்சியால் கட்டினார்.

பென்னிகுவிக் லண்டனில் உள்ள தனது சொத்துக்களை விற்று தென்மாவட்ட மக்களின் தாகம் தீர்க்கவும், வறண்டு கிடந்த நிலங்கள் வளம் பெறவும் இந்த அணையை கட்டினார். இதனால், 'முல்லைப்பெரியாறு அணையின் தந்தை' என பென்னிகுவிக் அழைக்கப்படுகிறார்.

தேனி மாவட்ட மக்கள் சாதி, மதம் கடந்து பென்னி குவிக்கை கடவுள்போல் வணங்கிவருகின்றனர்.

பென்னிகுவிக் பிறந்தநாளான இன்று (ஜனவரி 15) தேனி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் 'பென்னிகுவிக்' பொங்கல் என்ற பெயரில் பொங்கல் வைத்து மக்கள் வழிபடுகின்றனர். மேலும் பென்னிகுவிக் பிறந்தநாளை அரசு விழாவாகவும் தமிழக அரசு கொண்டாடி வருகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னி குவிக் சிலை அவரது சொந்த ஊரான இங்கிலாந்து நாட்டின் கேம்பர்லியில் நிறுவப்படும் என அறிவித்துள்ளார்.

---

3. திருவள்ளுவர் விருது பெங்களூர் மீனாட்சி சுந்தரத்துக்கும் காமராஜர் விருது குமரி அனந்தனுக்கும் அறிவிப்பு

2022ஆம் ஆண்டிற்கான "ஐயன் திருவள்ளுவர் விருது" பெங்களூர் மு மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும், 2021ஆம் ஆண்டிற்கான "பெருந்தலைவர் காமராசர் விருது" முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

விருதுபெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ₹1 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்பெறுவார்கள்.

---

4. ஜன.16 தேசிய ஸ்டார்ட் அப் தினம்: பிரதமர் மோடி அறிவிப்பு

ஜன.16ஆம் தேதி "தேசிய ஸ்டார்ட் அப்" தினமாக கடைபிடிக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார். இனிவரும் காலங்களில் ஜனவரி.16 தேசிய ஸ்டார்ட் அப் தினமாக கடைபிடிக்கப்படும் என பிரதமர் கூறினார்.

---

5. இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விலகினார் விராட் கோலி

இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விராட் கோலி விலகியுள்ளார்.

டி20 உலக கோப்பையுடன் இந்திய டி20 அணியின் கேப்டன்சியிலிருந்து விலகிய விராட் கோலி, ஒருநாள் அணியிலிருந்து கேப்டன்சியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். டெஸ்ட் அணியின் கேப்டனாக மட்டும் நீடித்த விராட் கோலி, இப்போது டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விலகியுள்ளார்.

2014ஆம் ஆண்டிலிருந்து இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக இருந்துவந்த விராட் கோலியின் கேப்டன்சியில் இந்திய அணி ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சிறப்பாக விளையாடி வெற்றிகளை குவித்தது. கோலி தலைமையிலான இந்திய அணி தான் வெளிநாடுகளில் ஆதிக்கம் செலுத்தி ஆடி வெற்றிகளை குவித்தது.

ஆஸ்திரேலிய மண்ணில் கோலி தலைமையில் முதல் முறையாக 2018–2019 சுற்றுப்பயணத்தில் டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்தது. கோலி தலைமையில் இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்டுவந்தது. முதல் முறையாக நடத்தப்பட்ட ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் ஃபைனல் வரை சென்ற இந்திய அணி, ஃபைனலில் தோற்று கோப்பையை இழந்தது.

டெஸ்ட் அணியை சிறப்பாக வழிநடத்திவந்தார் கோலி. இந்நிலையில், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி தோற்றது. இந்த தொடரில் முதல் முறையாக தென்னாப்பிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்ல இந்திய அணிக்கு வாய்ப்பிருந்தும், அனுபவமற்ற தென்னாப்பிரிக்க அணியிடம் இந்திய அணி தோற்றது. அதற்கு மோசமான பேட்டிங் தான் காரணம்.

மேலும், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்ட்டின் 2வது இன்னிங்ஸில் ஸ்டம்ப் மைக்கில் கோலி பேசியது பெரும் சர்ச்சையை கிளப்பியதோடு, கோலி மீது கடும் விமர்சனங்களையும் எழுப்பியது.

இந்நிலையில், டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விலகுவதாக கோலி திடீரென அறிவித்துள்ளார். கோலியின் அறிவிப்பு ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2014ம் ஆண்டிலிருந்து இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக இருந்துவந்த கோலி, டெஸ்ட் கேப்டனாக சிறப்பாக செயல்பட்டு பல வெற்றிகளை பெற்றுக்கொடுத்திருக்கிறார்.

---

1. தாயின் சான்றிதழ்களின் அடிப்படையில் சாதிச்சான்றை வழங்கும் முதல் மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா

இ) தில்லி ☑

ஈ) அஸ்ஸாம்

✓ தில்லியின் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, தாயின் சான்றிதழ்களின் அடிப்படையில் முதல் சாதிச்சான்றிதழை வழங்கினார். இதற்குமுன்னர், SC/ST சாதிச்சான்றிதழ்கள் தந்தையின் சாதிச்சான்றுகள்(அ)தந்தைவழி சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டன. எனவே, இது ஒரு முக்கிய நடவடிக்கையாக கருதப்படுகிறது.

---

2. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் எத்தனை வங்கிகள் அமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன?

அ) 2



ஆ) 3 ☑

இ) 4

ஈ) 5

✓ எஸ்பிஐ, ஐசிஐசிஐ வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவை உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகளாக தொடர்ந்து அடையாளம் காணப்படுவதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்தது. இவ்வங்கிகள் திவாலானால் நாட்டிற்கு பேரிடர் ஏற்படும். எனவே அவை மூலதனப் பாதுகாப்பு இடையகத்துடன் கூடுதலாக பொது ஈக்விட்டி அடுக்கு–1 மூலதனத்தையும் பராமரிக்க வேண்டும்.

✓ 2021 மார்ச் 31 அன்று வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

---

3. நலபானா பறவைகள் சரணாலயம் உள்ள மாநிலம் (அ) யூனியன் பிரதேசம் எது?

அ) மேற்கு வங்கம்



ஆ) ஒடிஸா ☑

இ) கேரளா

ஈ) கர்நாடகா

✓ நலபானா பறவைகள் சரணாலயம் என்பது ஒடிஸாவின் சிலிகா ஏரி ராம்சார் ஈரநிலங்களின் மையப்பகுதியாகும். சிலிகா ஏரி இந்தியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரியாகும். சிலிகாவில் நடத்தப்பட்ட நீர்ப்பறவை நிலை கணக்கெடுப்பு – 2022'இன்படி, 107 நீர்ப்பறவை இனங்களில் மொத்தம் 10,74,173 பறவைகளும், ஈரநிலத்தைச் சார்ந்த 76 இனங்களில் 37,953 பறவைகளும் கணக்கிடப்பட்டன.

✓ நலபானா பறவைகள் சரணாலயத்தில் மொத்தம் 97 வகையான 3,58,889 பறவைகள் கணக்கிடப்பட்டன.

---

4. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற 'Plan Bee' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) இரயில்வே அமைச்சகம் ☑



ஆ) சுற்றுச்சூழல், வன அமைச்சகம்

இ) உழவு அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்

✓ 'Plan Bee' முதன்முதலில் வடகிழக்கு எல்லையோர இரயில்வேயால் யானைகளை ரயில் பாதைகளிலிருந்து விலக்கிவைக்க ஒரு தனித்துவமான முறையாக செயல்ப –டுத்தப்பட்டது. நாடு முழுவதும் 'Plan Bee' திட்டத்தை ரயில்வே அமல்படுத்தவுள்ளதாக மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். தேனீக் கூட்டத்தின் சலசலப்பு ஒலியை ஒலிக்கும் ஓர் ஒலிபெருக்கி அமைப்பை இது பயன்படுத்துகிறது.

---

5. செப்டம்பரில் நடத்தப்பட்ட முதல் சோதனைக்குப் பிறகு, அண்மையில் "ஹைப்பர்சோனிக் ஏவுகணையை" ஏவிய நாடு எது?

அ) இஸ்ரேல்



ஆ) வட கொரியா ☑

இ) ஈரான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ அண்மையில் 'ஹைப்பர்சோனிக் ஏவுகணை'யை வட கொரியா பரிசோதித்தது. அந்த ஏவுகணை தன் இலக்கை வெற்றிகரமாக தாக்கியது. இச்சோதனை பிராந்தியத்தில் உள்ள பல இராணுவங்களால் கண்டறியப்பட்டது. மேலும் அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பானில் இருந்து விமர்சனங்களை அது ஈர்த்தது.

✓ வடகொரியா முதன்முதலில் ஹைப்பர்சோனிக் ஏவுக –ணையை செப்டம்பரில் சோதித்தது. ஹைப்பர்சோனிக் ஆயுதங்களால் ஒலியைவிட ஐந்து மடங்கு வேகத்தில் (மணிக்கு சுமார் 6,200 கிமீ) இலக்கை அடைய முடியும்.

---

6. 'எலக்ட்ரிக் பைக் டாக்ஸி திட்டம்' என்பது எந்த இந்திய மாநிலம் / UT'இன் முன்முயற்சியாகும்?

அ) தமிழ்நாடு



ஆ) ஒடிஸா

இ) கர்நாடகா ☑

ஈ) கேரளா

✓ 6 மாதங்களுக்கு முன் கர்நாடக மாநிலத்தில், 'கர்நாடகா எலக்ட்ரிக் பைக் டாக்ஸி திட்டம்' தொடங்கப்பட்டது.

✓ பெங்களூரில் எலக்ட்ரிக் பைக் டாக்சிகளை இயக்குதற்கு தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை இது அனுமதித்தது. குடிமக்கள் அதிகபட்சமாக 10 கிமீட்டர் தூரத்திற்கு இந்தச் சேவையைப்பெறலாம். ஆனால், போக்குவரத்து துறைக்கு உரிமம் கோரி, இதுவரை ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே வந்துள்ளது. பைக் டாக்ஸிக்கான கட்டணத்தை கர்நாடக அரசு இன்னும் நிர்ணயம் செய்யாமல் உள்ளது.

---

7. ஓமிக்ரான் திரிபைக் கண்டறியும் இந்தியாவின் முதல் RT-PCR கருவியான 'Omisure'ஐ உருவாக்கிய நிறுவனம் எது?

அ) TATA MD ☑



ஆ) பிரமல்

இ) சன் பார்மா

ஈ) அபெக்ஸ் பார்மா

✓ இந்தியா அண்மையில் ஒரு புதிய RT-PCR சோதனைக் கருவியை அங்கீகரித்துள்ளது. இதன்மூலம் ஓமிக்ரான் திரிபைக் கண்டறிய முடியும். 'Omisure' எனப்படும் இந்தக் கருவியை ICMR உடன் இணைந்து Tata MD நிறுவனம் உருவாக்கியுள்ளது. இது 'Sars-CoV-2'ஐக் கண்டறிகிறது. மேலும் ஓமிக்ரானில் உள்ள S மரபணு வேறுபாட்டையும் அதில் கண்டறிகிறது.

---

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பரத் சுப்ரமணியம் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ்



ஆ) சதுரங்கம் ☑

இ) டேபிள்-டென்னிஸ்

ஈ) பளு தூக்குதல்

✓ 14 வயதான பரத் சுப்ரமணியம், இத்தாலியில் நடந்த ஒரு நிகழ்வில் மூன்றாவது மற்றும் இறுதி GM நெறியைப் பெற்றபிறகு, இந்தியாவின் 73ஆவது சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆனார். அவர் இதற்கு தேவையான 2,500 (Elo) மதிப்பெண்ணையும் எட்டினார்.


✓ இப்போட்டியில் சக இந்திய வீரர் M R லலித் பாபு வெற்றி பெற்று பட்டத்தை வென்றார். கடந்த நவம்பரில் சங்கல்ப் குப்தா 71ஆவது GM ஆன இரண்டு நாட்களுக்குப் பிறகு, மித்ரபா குஹா நாட்டின் 72ஆவது GM ஆனார்.

---

9. இந்தியாவின் UNESCO உலக பாரம்பரிய தளங்களின் விளக்கங்களை எம்மொழியில் அதன் இணையதளத்தில் வெளியிட UNESCO ஒப்புக்கொண்டது?

அ) தமிழ்

ஆ) ஹிந்தி ☑



இ) சமற்கிருதம்

ஈ) தெலுங்கு

✓ UNESCO'இன் உலக பாரம்பரிய மையம் இந்தியாவில் உள்ள UNESCO உலக பாரம்பரிய தளங்கள் குறித்த விளக்கங்களை ஹிந்தியில் அதன் இணையதளத்தில் வெளியிட ஒப்புக்கொண்டுள்ளது.

✓ UNESCO'க்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதிகள் குழு இந்தத் தகவலைப்பகிர்ந்துகொண்டது. இது உலக ஹிந்தி நாள் முதல் செயல்பாட்டுக்கு வரும். உலக ஹிந்தி நாள் ஜன.10 அன்று அனுசரிக்கப்படுகிறது.

---

10. தாமதமான தேர்தல்களால், பின்வரும் எந்த ஆப்பிரிக்க நாட்டுடனான தங்கள் உறவை துண்டிக்கப்போவதாக மேலை ஆப்பிரிக்க நாடுகள் அறிவித்தன?

அ) மாலி ☑



ஆ) எகிப்து

இ) பெரு

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ தேர்தலை நடத்துவதில் மிகவும் தாமதம் ஏற்படுத்துவதால் மாலியுடனான தங்கள் எல்லைகளை மூடுவதோடு, அரசியல் ரீதியான உறவுகளை துண்டித்துக் கொள்ளவும் மேலை ஆப்பிரிக்க நாடுகள் முடிவு செய்துள்ளன.

✓ கடுமையான பொருளாதார தடைகள் விதிப்பும் இதில் அடங்கும். 15 உறுப்பு நாடுகளை உடைய மேலை ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் (ECOWAS), இந்த நிலைப்பாட்டை அறிவித்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கரோனா பரவல் விகிதம்: தேசிய அளவில் புதுச்சேரி முதலிடம்

கடந்த ஒரு வாரத்தில் வெளியான புள்ளிவிவரங்கள்படி, நாட்டிலேயே கரோனா தொற்று அதிகம் பரவும் மாநிலம் / யூனியன் பிரதேசங்களில் புதுச்சேரி முதலிடத்தில் உள்ளது. புதுச்சேரியில் 100 கரோனா பரிசோதனைகளுக்கு 51.75 சதவீதம் என்ற அளவில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

---

2. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: பாதை, நிலையங்கள் அமைக்க ஆரம்ப கட்டப் பணிகள் தீவிரம்

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தில், பாதை, நிலையங்கள் கட்டுவதற்காக, 12 இடங்களில் ஆரம்பக்கட்டப்பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

இதுதவிர, 3 வழித்தடங்களில் 48 சுரங்க ரயில் நிலையங்-கள் அமைக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இரண்டாம் கட்ட திட்டம்: சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், 2 வழித்தடங்களில் சுமார் 55 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ இரயில்கள் இயக்கப்படுகின்றன. இதைத்தொடர்ந்து, ₹63,246 கோடியில் 118.9 கிமீ தூரத்துக்கு இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணி நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தில் கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி வரை 26.1 கிமீ தொலைவுக்கும், மாதவரம்-சோழிங்கநல்லூர் வரை 47 கிமீ தொலைவுக்கும், மாதவரம்-சிறுசேரி சிப்காட் வரை 45.8 கிமீ தொலைவுக்கும் 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டாம் கட்ட திட்டத்தில், முதலில் சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. மாதவரம் – தரமணி இணைப்பு சாலை வரை, 30 சுரங்க நிலையங்கள் அமையவுள்ளன. இதுதவிர, பூந்தமல்லி புறவழிச்சாலை – கலங்கரை விளக்கம் மெட்ரோ ரயில் பாதையில், கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் – கலங்கரை விளக்கம் இடையே சுரங்கத்தில் 12 நிலையங்களும், மாதவரம் – சோழிங்கநல்லூர் மெட்ரோ

பாதையில் 6 நிலையங்களும் என்று 3 வழித்தடங்களில் 48 சுரங்க நிலைங்கள் அமையவுள்ளன.

---

3. உலகப் பொருளாதார கூட்டமைப்பின் உச்சி மாநாடு இன்று தொடக்கம்: முதல் நாளில் பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் உரை

சர்வதேச அளவில் சக்திவாய்ந்த அமைப்பாகத் திகழும் உலகப்பொருளாதார கூட்டமைப்பின் 5 நாள் உச்சிமாநாடு திங்கள்கிழமை (ஜன. 17) தொடங்கவுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள டாவோஸ் நகரில் கடந்த 50 ஆண்டுகளாக இந்த உச்சிமாநாட்டை உலகப் பொருளாதார கூட்டமைப்பு நடத்தி வரும் நிலையில், கரோனா பாதிப்பு காரணமாக கடந்த 2021-ஆம் ஆண்டு உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நிகழாண்டுக்கான உச்சிமாநாட்டை காணொலி வழியில் 5 நாள்களுக்கு அந்த அமைப்பு நடத்த உள்ளது. இதில் 'கரோனா பாதிப்பு' என்ற தலைப்பிலும், அடுத்ததாக 'நான்காவது தொழில் புரட்சியில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு' என்ற தலைப்பிலும் இரண்டு அமர்வுகள் நடைபெறவுள்ளன.

'உலகின் நிலை' என்ற கருப்பொருளில் கூட்டப்படும் நிகழாண்டுக்கான உச்சிமாநாடு, உலகின் மிக முக்கியத் தலைவர்கள் 2022ஆம் ஆண்டுக்கான தங்களின் தொலைநோக்குத் திட்டங்களை பகிர்ந்துகொள்ளும் தளமாக இருக்கும் என்று உலகப் பொருளாதார கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. அரபிக்கடலில் இந்திய- ரஷிய கடற்படைகள் கூட்டுப் பயிற்சி

அரபிக்கடலில் இந்திய-ரஷிய கடற்படையினர் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டதாக இந்திய கடற்படை தெரிவித்தது.

இந்தப் பயிற்சியில் ஈடுபடும் இருநாட்டுக் கடற்படைகளும் இயற்கைப்பேரிடர் அல்லது போர்போன்ற சூழ்நிலையில், சுமுகமான ஒத்துழைப்பையும், தகவல் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ளும் வகையில், இதுபோன்ற கூட்டுப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட INS கொச்சி போர்க் கப்பலும், ரஷியாவின் அட்மிரல் ட்ரிபியூட்ஸ் போர்க்கப்பலும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டன.

---

5. இந்தியாவின் தேசிய கோவிட் தடுப்பூசி திட்டத்தின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு அஞ்சல்தலையை Dr மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்

இந்தியாவின் தேசிய COVID-19 தடுப்பூசி திட்டத்தின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு அஞ்சல்தலையை மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.

கோவாக்சின் ஊசியுடன், சுகாதாரப் பணியாளர் மூத்த குடி மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதைப் போன்று அஞ்சல் தலை வடிவமைக்கப்பட்டிருந்தது. கடந்தாண்டு ஜன.16ஆம் தேதி தடுப்பூசி போடும் இயக்கம் தொடங்கியது. இந்த ஓராண்டு காலத்தில் 156 கோடிக்கும் அதிகமாக டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

---

6. இந்தியா ஓபன்: வாகை சூடினார் லக்ஷயா சென்; உலக சாம்பியனை வீழ்த்தினார்

இந்தியா ஓபன் பாட்மின்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடியான சாத்விக்சாய்ராஜ்/சிரக் ஷெட்டி சாம்பியன் ஆகி அசத்தினர்.

இப்போட்டியில் இவர்கள் பட்டம் வெல்வது இது முதல் முறையாகும். அதிலும், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவுக்கு இந்தப் போட்டியில் பட்டம் கிடைப்பதும் இது முதல்முறையே. ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் 3ஆவது இடத்திலிருந்த லக்ஷயா சென், நடப்பு உலக சாம்பியனும், போட்டித்தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருந்தவருமான சிங்கப்பூரின் லோ கீன் யீவை எதிர்கொண்டார்.

இருவருக்கும் இடையே விறுவிறுப்பாக 54 நிமிஷங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் லக்ஷயா சென் 24-22, 21-17 என்ற கேம்களில் லோ கீன் யீவை வீழ்த்தி அட்டகாசமான வெற்றியை பதிவு செய்தார்.

இதர வெற்றியாளர்கள்: இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் தாய்லாந்தின் புசானன் ஆங்பம்ரங்பான் சாம்பியன் ஆனார்.

மகளிர் இரட்டையரில் தாய்லாந்தின் பென்யபா எய்ம்சார்ட் / நந்தாகரன் எய்ம்சார்ட் இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் சிங்கப்பூரின் ஹீ யோங் காய் டெரி / தான் வெய் ஹான் ஜோடியும் வாகை சூடின.

---

7. 17-01-2022 – 'இந்திய மாமணி' டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் 105ஆவது பிறந்தநாள்.

---

8. சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் நீல பத்மநாபனின்: பள்ளிகொண்டபுரம் நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்ப்பு

சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர் நீல பத்மநாபன் திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். 'இலை உதிர் காலம்' என்னும் நாவலுக்காக கடந்த 2007ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதுபெற்ற இவரின் பள்ளிகொண்டபுரம் என்னும் நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கடந்த 1970ஆம் ஆண்டு வெளிவந்த பள்ளிகொண்டபுரம் நாவல் ஏற்கனவே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இதேபோல் நேஷனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் ஆதான் பிரதான் திட்டத்தின்கீழ் ஹிந்தி, மலையாளம், உருது, பஞ்சாபி, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, ஒரியா, வங்கம், அஸ்ஸாமி, கன்னடம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

திருவனந்தபுரத்தின் வாழ்க்கையை மையப்படுத்திய இந்நாவலை டாக்டர்லூபா பைச்சினா என்பவர் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

1. 2030ஆம் ஆண்டுக்கு முன், எந்த நாட்டுடனான $50 பில்லியன் இருதரப்பு வர்த்தக இலக்கை அடைவதற்கு இந்தியா நிர்ணயித்துள்ளது?

அ) தென் கொரியா ☑

ஆ) அமெரிக்கா

இ) ஜப்பான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ இந்தியாவும் தென் கொரியாவும் 2030ஆம் ஆண்டுக்கு முன் $50 பில்லியன் என்ற இருதரப்பு வர்த்தக இலக்கை நிர்ணயித்துள்ளன. தென் கொரிய வர்த்தக அமைச்சர் யோ ஹான்-கூ மற்றும் இந்திய வர்த்தக & தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் புது தில்லியில் இது குறித்த இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர்.

---

2. இந்தியாவில் எந்த மாதத்தில், 'தேசிய புத்தாக்க வாரம்' ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

அ) ஜனவரி ☑



ஆ) பிப்ரவரி

இ) மார்ச்

ஈ) ஏப்ரல்

✓ மத்திய கல்வி அமைச்சகம், AICTE, மற்றும் வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் இணைந்து 2022 ஜன.10- 16 வரை 'தேசிய புத்தாக்க வாரத்தை' ஏற்பாடு செய்கின்றன.

✓ இப்புத்தாக்க வாரத்தின்போது, புதுமைகளை ஊக்குவிக்கு நோக்கில் விழிப்புணர்வை பரப்புவதற்காக இம்முகமைக -ளால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி அமைச்சகத்தால் "கல்வி நிறுவனங்களில் புத்தாக்க சூழலை உருவாக்குதல்" என்ற தலைப்பில் காணொளி வழி கருத்தரங்கு நடைபெற்றது.

---

3. ரிசர்வ் வங்கி எந்தப் பேமெண்ட் வங்கிக்கு ஷெட்யூல்டு வங்கியின் அந்தஸ்தை வழங்கியுள்ளது?

அ) ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி ☑

ஆ) ஆதித்யா பிர்லா பேமெண்ட்ஸ் வங்கி

இ) என்எஸ்டிஎல் பேமெண்ட்ஸ் வங்கி

ஈ) ஜியோ பேமெண்ட்ஸ் வங்கி

✓ இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கிக்கு ஷெட்யூல்டு வங்கியின் அந்தஸ்தை வழங்கி உ உள்ளது. இதன்மூலம், ஏலங்களுக்கான அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி விண்ணப்பிக்கலாம். இது மத்திய மற்றும் மாநில அரசு அளவிலான வணிகங்களை மேற்கொள்ளலாம்.

---

4. எரிபொருள் விலையேற்றம் காரணமாக நடந்த மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து சமீபத்தில் பதவி விலகிய அரசாங்கம் எது?

அ) கஜகஸ்தான் ☑ ஆ) கிர்கிஸ்தான்

இ) உஸ்பெகிஸ்தான் ஈ) துர்க்மெனிஸ்தான்



✓ கசகசுதான் நாட்டின் அதிபர் காசிம்-சோமாட் டோகாயேவ், எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக எழுந்த நாடு தழுவிய போராட்டங்களை அடுத்து, அரசாங்கத்தின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டார். ஆயிரக்கணக்கான குடி மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால், அவசரகால நிலையை அவ்வரசாங்கம் முன்னதாகவே அறிவித்தது.

---

5. அடுத்துவரும் 2023ஆம் ஆண்டில் கேலோ இந்தியா விளையாட்டுக்களை நடத்தவுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

இ) கர்நாடகா ☑

ஈ) கோவா

✓ 2023ஆம் ஆண்டில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை கர்நாடகா மாநிலம் நடத்தும் என இளைஞர் அதிகாரம் & விளையாட்டுத் துறை அமைச்சர் அறிவித்தார். அடுத்த ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்காக மாநிலத்தில் 75'க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் அறிவித்தார். கேலோ இந்தியாவின் 2021 பதிப்பு தொற்றுநோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, ஹரியானாவில் நடைபெறவுள்ளது.

---

6. புதைபடிவமற்ற ஆற்றல்மூலங்களிலிருந்து, 2030ஆம் ஆண்டளவில் எத்தனை சதவீத மின்சக்தியை அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது?

அ) 30%

ஆ) 40% ☑

இ) 50%

ஈ) 100%



✓ COP-21'இல் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப் -புகளின் ஒருபகுதியாக, 2030ஆம் ஆண்டளவில் புதை படிவமற்ற ஆற்றல் மூலங்களிலிருந்து 40% மின்சக்தியை அடைய இந்தியா உறுதிபூண்டுள்ளது. 2021 நவம்பரில் அதன் புதைபடிவமற்ற எரிபொருள் அடிப்படையிலான ஆற்றல் இலக்கை இந்தியா அடைந்துள்ளதாக புது மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

✓ தற்போது, 392.01 GW என்ற மொத்த நிறுவப்பட்ட ஆற்றல் திறனுடன் இந்தியா உள்ளது.

7.PM-POSHAN திட்டத்தை திறம்பட செயல்படுத்துதற்காக அக்ஷய பாத்திரம் அறக்கட்டளையுடன் கூட்டு சேர்ந்துள்ள அமைப்பு எது?

அ) IMF

ஆ) உலக வங்கி

இ) ஐக்கிய நாடுகள் சபை - WFP ☑

ஈ) UNICEF

✓ பிரதம மந்திரி போஷான் சக்தி நிர்மான் (PM-POSHAN) திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்காக ஐநா உலக உணவுத்திட்டம் 'அக்ஷய பாத்திரம்' அறக்கட்டளையுடன் கைகோர்த்துள்ளது. உலக உணவுத்திட்டமானது (WFP)

60 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டு உள்ளது. அது பள்ளிகளில் உணவு வழங்குவது மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தை மேம்படுத்துவதில் பணியாற்றுகிறது.

✓ பிரதமர் போஷான் சக்தி நிர்மான் என்பது குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள் & பாலூட்டும் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும்.

---

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற குனோ பால்பூர் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ 1950'களிலிருந்து விடுதலை இந்தியாவில் அழிந்துவிட்ட சுமார் 8–12 சிறுத்தைகள், தென்னாப்பிரிக்கா, நமீபியா மற்றும் போட்ஸ்வானாவிலிருந்து குனோ பால்பூர் தேசிய பூங்கா – மத்திய பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளன. இந்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், 'இந்தியாவில் சிறுத்தைகளை அறிமுகப்படுத்துவத –ற்கான செயல் திட்டத்தை' வெளியிட்டுள்ளார்.

---

9. தனக்கென ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்து வரும் தென்னமெரிக்க நாடு எது?

அ) சிலி ☑

ஆ) பிரேஸில்

இ) அர்ஜென்டினா

ஈ) பொலிவியா

✓ தென்னமெரிக்க நாடான சிலி தனக்கென ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது சம்பந்தமாக, அரசியலமைப்பு அவை அண்மையில் அமைப்பின் அறிமுகத் தலைவர் எலிசா லோன்கானுக்குப் பதிலாக புதிய தலைவராக தொற்றுநோயியல் நிபுணர் மரியா எலிசா குயின்டெரோஸைத் தேர்ந்தெடுத்தது.

✓ அகஸ்டோ பினோசேயின் கொடுங்கோன்மை காலத்தில் தயாரிக்கப்பட்ட அதன் முந்தைய மேக்னா கார்ட்டாவை மாற்றுவதற்கு சிலி நாடு முடிவு செய்துள்ளது

---

10. 'நரகத்தின் நுழைவாயில்' என்றும் அழைக்கப்படும் தர்வாசா வளிப்பள்ளம் அமைந்துள்ள நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) ரஷ்யா

இ) இந்தோனேசியா

ஈ) துர்க்மெனிஸ்தான் ☑

✓ தர்வாசா வளிப்பள்ளத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முறையைக் கண்டறிவதற்கு வல்லுநர்களுக்கு துர்க்மெனிஸ்தான் அதிபர் குர்பாங்குலி பெர்டிமுகமடோவ் உத்தரவிட்டுள்ளார். 'நரகத்தின் நுழைவாயில்' என்றும் அழைக்கப்படும் இது ஒரு மிகப்பெரிய இயற்கை எரிவாயு பள்ளமாகும். இது துர்க்மெனிஸ்தானின் தலைநகரமான அஷ்கபாத்தில் இருந்து 260 கிமீட்டர் தொலைவில் உள்ள கரகம் பாலைவனத்தில் அமைந்துள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்த எரிவாயு எரிந்து கொண்டிருக்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கதக் நடன மேதை பிர்ஜு மகாராஜ் காலமானார்

பிரபல கதக் நடன மேதை பிர்ஜு மகாராஜ் (83) புது தில்லியில் காலமானார்.

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த நடனக் கலைஞரான அவர் லக்னௌ பாணி கல்கா–பிண்டாதின் கரானா பாணி கதக் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

பிர்ஜு மகாராஜ் என கலையுலகினரால் மதிப்புடன் அழைக்கப்பட்ட அவரது இயற்பெயர் ப்ரிஜ்மோகன் நாத் மிஸ்ரா என்பதாகும். சத்யஜித் ரேயின் 'சத்ரஞ்ஜ் கே கிலாடி' படத்துக்கு இசையமைத்ததுடன் அத்திரைப்படத்தில் இரு பாடல்களைப் பாடியுள்ளார்.

கதக் நடனக்கலைக்கு ஆற்றிய சேவைக்காக அவருக்கு 1986'இல் பத்ம விபூஷண் விருது அளிக்கப்பட்டது. சங்கீத நாடக அகாதெமி விருது, காளிதாஸ் சம்மான், ஆந்திர ரத்னா உள்ளிட்ட ஏராளமான விருதுகளை அவர் பெற்றுள்ளார். 'விஸ்வரூபம்' திரைப்படத்துக்காக சிறந்த நடன இயக்குநருக்கான தேசிய விருது அவர் பெற்றுள்ளார்.

---

2. ரயில்வே மேம்பாட்டு பணிகளுக்கு சிறந்த பரிந்துரை: தெற்கு ரயில்வேக்கு முதல் பரிசு, ICF'க்கு 2ஆம் பரிசு அறிவிப்பு

2020–21ஆம் ஆண்டில், இந்திய ரயில்வே மேம்பாட்டு பணிகளுக்கு சிறந்த பரிந்துரைகள் வழங்கியதற்காக, தெற்கு ரயில்வேக்கு முதல் பரிசும், சென்னை ICFக்கு இரண்டாம் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதையில் மேம்பாட்டு பணிக்காகவும், மின் சிக்கனம், ஆண்டுக்கு ₹110 கோடி வரை சேமிக்கும் வகையில், மின்சார ரயில் என்ஜின் இயக்கம் குறித்து சிறந்த பரிந்துரை வழங்கியதற்காக, தெற்கு ரயில்வே மற்றும் மேற்கு ரயில்வேக்கு முதல் பரிசும், ₹3 லட்சமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ரயில்வேக்கும் பரிசு தொகை தலா ₹1.5 லட்சம் வழங்கப்படவுள்ளது.

மின்சக்தியை இழப்பின்றி முழுவதுமாக பயன்படுத்துவதற்கான வழிகாட்டி பரிந்துரைக்கு தெற்கு ரயில்வே மூன்றாவது பரிசுக்கும் தேர்வுசெய்யப்பட்டு ₹33 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

ICF:

ரயில் பெட்டி தயாரிப்பில், பக்கவாட்டு சுவர் மற்றும் கூரை இணைப்புகளின் மேம்பாட்டு திட்டங்கள் தொடர்பாக சென்னை ICF (ரயில் பெட்டி இணைப்பு தொழிற்சாலை) அனுப்பிய பரிந்துரைக்கு இரண்டாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்விநியோக மாற்றிகள் வாயிலாக மின்சார ரயில் என்ஜினில் இருந்து பெட்டிக்கு மின்தொடர்பு மேம்பாட்டுக்கான பரிந்துரைக்கு கிழக்கு ரயில்வேக்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது. ICF மற்றும் கிழக்கு ரயில்வேக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் ₹2 லட்சம் பரிசு வழங்கப்படவுள்ளது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் கணினி பார்வை அடிப்படையில் மேம்பாட்டு பரிந்துரைக்காக, மேற்கு ரயில்வேக்கு மூன்றாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, வடமேற்கு ரயில்வேயும் மூன்றாம் பரிசுக்கு தேர்வாகியுள்ளது.

---

3. தொழில் முதலீடுகளுக்கு மிகச்சிறந்த மாநிலம் தமிழ்நாடு: ஆய்வில் தகவல்

தொழில் முதலீடுகளுக்குச் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலும் 304 திட்டங்களின் மூலமாக ₹1 லட்சத்து 43,902 கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில்

தமிழ்நாடு ₹36,292 கோடியை மட்டுமே தொழில் மூலதனமாகப் பெற்றிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் தொழில் முதலீடுகளை அதிகமாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழகமாகும்.

தமிழகத்துக்கு இந்த நிதியாண்டில் கிடைத்திருக்கும் ஒட்டு மொத்த முதலீட்டு ஆதாயம் ₹1 லட்சத்து 7,610 கோடியாகும். ₹77,892 கோடி தொழில் மூலதனத்துடன் குஜராத் மாநிலம் இரண்டாவது இடத்திலும், ₹65,288 கோடி தொழில் மூலதனத்துடன் தெலங்கானா மாநிலம் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன என புராஜெக்ட் டுடே நிறுவன ஆய்வு தெரிவிக்கிறது.

தமிழகத்தில் தொழில் முதலீடு செய்ய உறுதி பூண்டுள்ள சில நிறுவனங்களில் டாடா குழுமம், ஒநர தங்ய்ங்ஜ், ஹிந்துஸ்தான் யுனிலீவர், டி வி எஸ் மோட்டார், அதானி குழுமம், லார்சன் அண்ட் டூப்ரோ ஆகியவை அடங்கும்.

இந்தியா முழுவதிலும் நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 7,764 தொழில் திட்டங்கள் வந்துள்ளன. இவற்றின் மொத்த முதலீட்டு மதிப்பு ₹12 லட்சத்து 76,679 கோடியாகும்.

---

4. தமிழகத்தில் கடந்த ஆண்டில் காசநோய் பாதிப்பு 17% அதிகரிப்பு

தமிழகத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 82,000 பேர் காச நோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 17 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025-க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அதன் பயனாக காசநோய் பாதிப்பு தொடர்பு விழிப்புணர்வு மேம்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை காசநோயைக் குணப்படுத்தும் விகிதம் கணிசமாக உயர்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளில் 84% பேரை முதல் சிகிச்சையிலேயே குணப்படுத்துவதாகவும், தொடர் சிகிச்சைகள்மூலம் மீதமுள்ளவர்களையும் பூரண குணமாக்குவதாகவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த ஆண்டில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் காசநோய் பாதிப்புடன் அனுமதிக்கப்பட்டிருந்தோரின் தரவுகளை ஆய்வு செய்த போது நாடு முழுவதும் 21.38 லட்சம் பேருக்கு அந்நோய் தாக்கம் இருந்தது தெரியவந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே உத்தரபிரதேசம், மகாராஷ்டிரம், இராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில்தான் காசநோய் பாதிப்பு அதிகமாக இருந்து வருகிறது. அதன் நீட்சியாகவே கடந்த ஆண்டின் புள்ளி விவரங்களும் அமைந்திருந்தன.

குறிப்பாக உத்தர பிரதேசத்தில் மட்டும் 4.60 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தை எடுத்துக் கொண்டால் 82,352 பேருக்கு அந்நோயின் பாதிப்பு இருந்தது. அவர்களில், தனியார் மருத்துவமனைகளில் 18,016 பேரும், அரசு மருத்துவமனைகளில் 64,336 பேரும் முதல்கட்ட சிகிச்சை பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2020'இல் அந்த எண்ணிக்கை 17% குறைவாக இருந்தது. அதாவது, அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் 70,545 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் அதிகரித்ததற்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஏறத்தாழ காசநோய்க்கும், கரோனா தொற்றுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் இருப்பதால், பலர் முன்கூட்டியே பரிசோதனை செய்து கொண்டது கூட அந்நோய் பாதிப்பு அதிகமாக கண்டறியப்பட்டதற்கு காரணமாக இருக்கலாம் என மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

5. சமூக ஆர்வலர் சாந்தி தேவி காலமானார்

ஒடிசாவின் ராயகடா மாவட்டத்தை சேர்ந்த பிரபல சமூக ஆர்வலரும், 'பத்மஸ்ரீ' விருது பெற்றவருமான சாந்தி தேவி (88) அண்மையில் காலமானார். அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

---

6. இந்தியாவின் ஆப்பிள் ஏற்றுமதி 82% அதிகரிப்பு: வர்த்தக அமைச்சகம்

இந்தியாவின் ஆப்பிள் ஏற்றுமதி 82% அதிகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்து ஆப்பிள் ஏற்றுமதியானது 82% வளர்ச்சியைப்பெற்றுள்ளது. அதேசமயம், பழங்களின் இறக்குமதியானது 3.8% என்ற அளவிலேயே உயர்ந்து உள்ளது. அதன்படி, கடந்த 2014–15ஆம் நிதியாண்டில் 86 லட்சம் டாலராக இருந்த ஆப்பிள் ஏற்றுமதி 2020–21 நிதியாண்டில் $1.45 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது.

குறிப்பாக, நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான 8 மாத காலத்தில் இதன் ஏற்றுமதி 1.23 கோடி டாலரை எட்டியுள்ளது. இது, ஆப்பிள் ஏற்றுமதியில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட சிறப்பான வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அதேசமயம், பழங்களின் இறக்குமதி கடந்த 2014–15'இல் 23.08 கோடி டாலராக இருந்த நிலையில், கடந்த 2020–21–இல் 24 கோடி டாலரை தொட்டுள்ளது. இது, 3.8 சதவீத வளர்ச்சியாகும்.

இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஆப்பிள்களில் 82 சதவீதம் சிலி, நியூஸிலாந்து, துருக்கி, இத்தாலி, பிரேசில் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்தவை.

இந்தியாவின் ஆப்பிள் இறக்குமதியில் சிலி 25 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நியூஸிலாந்து (16.45%), துருக்கி (12.43 சதவீதம்), இத்தாலி (10.8%) ஆகிய நாடுகள் உள்ளதாக வர்த்தக அமைச்சக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

7. இந்திய வனநிலை அறிக்கை: தமிழ்நாட்டுக்கான பாடங்கள்

அண்மையில் வெளியாகியுள்ள இந்திய வனநிலை அறிக்கை– 2021, நாட்டின் மொத்த நிலப் பரப்பில் பசுமைப் பரப்பானது ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கை (24.6%) தொட்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளது. மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனப் பரப்பாக இருக்க வேண்டும் என்பது இலக்கு. ஆனால், பசுமைப் பரப்பை மதிப்பிடும்போது வனங்கள் மட்டுமின்றி வனங்களுக்கு வெளியே உள்ள மரங்களின் அடர்த்தியும் கணக்கில் கொள்ளப்படுகிறது. முந்தைய 2019 மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் நாடு முழுவதும் 2,261 சதுர கிமீ பரப்பு பசுமைப் பரப்பாக மாறியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. வனப் பரப்பை மட்டும் கணக்கில் கொண்டால், மொத்த நிலப் பரப்பில் இது 21.7% ஆக உள்ளது. முந்தைய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 0.2% வனப் பரப்பு அதிகரித்துள்ளது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் இந்த இரண்டு ஆண்டுகளில் வனப் பரப்பானது 55 சதுர கிமீ அதிகரித்திருப்பது பாராட்டுக்குரியது. அதே வேளையில், வனங்களுக்கு வெளியே உள்ள மரங்களின் அடர்த்தி 406 சதுர கிமீ அளவுக்குக் குறைந்திருப்பது வருத்தத்தையும் அளிக்கிறது. கஜா புயலால் காவிரிப் படுகை மாவட்டங்களில் லட்சக்கணக்கான தென்னை மரங்கள் வீழ்ந்ததும் மரங்களின் அடர்த்தி குறைந்ததற்கான காரணமாக ஊகிக்கப்படுகிறது.

என்றாலும், வனப் பரப்பைப் போலவே மரங்களின் அடர்த்தி குறித்த விவரங்களையும் மாவட்டவாரியாக இந்திய வனநிலை அறிக்கை தெரிவித்தால் மட்டுமே, மரங்களின் அடர்த்தி குறைந்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்வதற்கான வாய்ப்புகள் உருவாகும். அதற்கு முன்பே புயல், வெள்ளம், பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர்களை அடுத்து, புதிதாக மரக்கன்றுகளை நடுவதும் அவற்றைப் பராமரிப்பதும் பேரிடர்க் காலத்தின் பணிகளில் ஒன்றாக மாற வேண்டும். அது மட்டுமின்றி, சாலை விரிவாக்கப் பணிகளின்போது வெட்டப்படும் மரங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் கூடுதலான எண்ணிக்கையில் மரங்கள் நடுவதையும் ஒரு கட்டாய விதிமுறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் வனப் பரப்பு தற்போது 20% என்ற அளவிலேயே உள்ளது என்றாலும் காடுகள் அழிப்பைத் தடுப்பது, வனப் பரப்பை விரிவுபடுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளால் நேர்மறையான அறிகுறிகள் தென்படுகின்றன. காஞ்சிபுரம், புதுக்கோட்டை, அரியலூர் ஆகிய மாவட்டங்களில் வனப் பரப்பின் அளவு அதிகரித்துள்ளது. இடைப்பட்ட இதே ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில், வனப் பரப்பின் அளவு 23 சதுர கிமீ அளவில் குறைந்திருப்பதும் கவனத்துக்குரியது.

சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரையில், மொத்தப் பசுமைப் பரப்பு ஏறக்குறைய 5 சதுர கிமீ அளவுக்கு அதிகரித்துள்ளது. 2011–ல் 18 சதுர கிமீ ஆக இருந்த சென்னையின் மர அடர்த்திப் பரப்பு, 2021–ல் 22.7 சதுர கிமீ ஆக அதிகரித்துள்ளது. ஜப்பானிய வனவியலர் அகிரா மியாவாகியின் வழிமுறைகளைப் பின்பற்றி வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் மரத் தொகுதிகளை வளர்த்ததன் காரணமாக சென்னையின் பசுமைப் பரப்பு அதிகரித்துள்ளது. இத்திசையில் மேலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

---

8. பன்றியின் இதயம் மனிதருக்குப் பொருந்தியது எப்படி?

கடந்த ஜனவரி 7–ல் நவீன மருத்துவம் உலகிலேயே முதல் முறையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி சாதனை செய்துள்ளது. உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குத் தேவையான மனித உறுப்புகள் கிடைக்காமல், உலகெங்கும் இந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருந்த நிலையில், விலங்குகளின் உறுப்புகளையும் மனிதருக்குப் பயன்படுத்த முடியும் எனும் நம்பிக்கையை இது விதைத்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் நகரைச் சேர்ந்த 57 வயதான டேவிட் பென்னட் ஒழுங்கற்ற இதயத் துடிப்பு காரணமாக மேரிலேண்ட் மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். செயற்கை சுவாசக் கருவிகளுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த பென்னட்டுக்குப் பன்றியின் இதயத்தை மருத்துவர் கிரி◌ஃபித் பொருத்தினார். இன்றுவரை அந்த இதயம் சீராக இயங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தச் செயல்முறையைச் சொல்வது எளிது. நடைமுறையில் கடினம்.

உதவும் பன்றி உறுப்புகள்

மற்ற விலங்குகளைவிடப் பன்றியின் உறுப்புகள் கிட்டத்தட்ட மனிதர்களின் உறுப்புகளை ஒத்திருப்பதால்,

உறுப்பு மாற்று சிகிச்சைக்குப் பொருத்தமானவையாக இவை தேர்வு செய்யப்படுகின்றன. முதன்முதலில் 1838–ல் பன்றியின் ஒளிப்படலம் (Cornea) மனிதக் கண்ணில் பொருத்தப்பட்டது. 1964–ல் சிம்பன்சி குரங்கின் இதயம் மனிதருக்குப் பொருத்திப் பார்க்கப்பட்டது. அது தோல்வியில் முடிந்தது. 1984–ல் ஆப்பிரிக்க/அரேபியக் குரங்கின் (Baboon) இதயம் ஃபாயி (Fae) எனும் குழந்தைக்குப் பொருத்தப்பட்டது. அது 21 நாட்களுக்கு உயிரோடு இருந்தது.

பொதுவாக, 'மாற்றின உறுப்பு மாற்றுச் சிகிச்சை' யில் (Xenotransplantation) பொருத்தப்படும் உறுப்புகளை மனித உடல் நிராகரித்துவிடும். அப்படியே ஏற்றுக்கொண்டாலும் எதிர்கால நிராகரிப்பைத் தடுக்கத் தடுப்பாற்றல் எதிர்வினையை மட்டுப்படுத்தும் வீரியமான மருந்துகளைப் பயனாளி வாழ்நாள் முழுவதும் சாப்பிட வேண்டும். அதனால்தான் இம்மாதிரியான அறுவைச் சிகிச்சைகள் வேகம் பெறவில்லை. ஆனாலும், சோதனை முயற்சியாகச் சென்ற அக்டோபரில் நியூயார்க் மருத்துவமனை ஒன்றில் மூளை இறப்பு ஏற்பட்ட ஒருவருக்குப் பன்றியின் சிறுநீரகம் உடலுக்கு வெளியில் பொருத்தப்பட்ட அதிசயம் நடந்தது.

பன்றியின் சிறுநீரகச் செல்களில் சர்க்கரை வடிவில் 'ஆல்பா–1' நொதி இருக்கிறது. மனித உடலில் இது இல்லை. பன்றியிடமிருந்து பெறப்படும் சிறுநீரகத்தில், இந்த நொதியைக் கண்டுகொள்ளும் மனித உடல், இதை அந்நியனாகக் கருதி, மேற்படி உறுப்பை நிராகரித்துவிடுகிறது. கலிபோர்னியாவில் இருக்கும் 'சிந்தெடிக்ஸ் ஜீனாமிக்ஸ்' நிறுவனம், மரபணு மாற்று உறுப்புகளை வளர்ப்பதில் புகழ்பெற்றது. இந்த நிறுவனம் 'ஆல்பா–1' நொதி இல்லாத பன்றியை மரபணு மாற்று முறையில் வளர்த்துக் கொடுத்தது. அதன் சிறுநீரகத்தை மூளை இறப்பு நோயாளிக்கு நியூயார்க் மருத்துவர்கள் பொருத்தினார்கள். அதனால், அதில் பிரச்சினை எழவில்லை. இதை ஒரு மைல்கல் நிகழ்வாக மருத்துவ உலகம் பார்த்தது. இப்போது பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி வியப்பில் ஆழ்த்தியுள்ளனர் மேரிலேண்ட் மருத்துவமனை மருத்துவர்கள்.

சாத்தியமானது எப்படி?

பன்றிகளில் மரபணு வரிசையைத் துல்லியமாக மாற்றியமைக்கும் ஆராய்ச்சியில் முன்னேறிக்கொண்டிருக்கும் மற்றொரு அமெரிக்க நிறுவனம் 'ரெவிவிகார்' (Revivicor). இந்த நிறுவனத்தினர், பன்றி செல்களில் உறுப்பு நிராகரிப்புக்குக் காரணமாக இருக்கும் 4 வகை மரபணுக்களை 'கிரிஸ்பர்' (CRISPR/Cas9) எனும் மரபணுச் செதுக்கியால் செதுக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்கின்றனர். அடுத்து, பன்றி செல்லின் மரபணு வரிசையில் புதிதாக 6 மரபணுக்களைப் புகுத்திவிடுகின்றனர்.

பிறகு, பன்றியின் கருமுட்டையிலிருந்து மரபணுவை நீக்கிவிட்டு, அதனுள் மேற்சொன்ன மாற்றியமைக்கப்பட்ட மரபணு உள்ள பன்றி செல்லைக் கலந்துவிடுகின்றனர். இப்போது இது கருக்கோளமாகிறது (Zygote). அதை 'வாடகைத் தாய்' பன்றியின் கருப்பையில் பதித்துவிடுகின்றனர். அதில் வளர்கருவாக (Embryo) வளர்ந்து சிசுவாகி 114 நாட்களில் மரபணு மாற்றமுள்ள பன்றிக்குட்டி பிறக்கிறது. படியாக்கம் (Cloning) மூலம் டோலி ஆடு பிறந்ததுபோல்தான் இது. இதன் பலனாக, மனித உடல் இந்த உறுப்புகளை அந்நியனாகக் கருதும் வாய்ப்பு குறைந்துவிட, உறுப்பு நிராகரிப்பு தவிர்க்கப்படுகிறது.

சாதாரணமாகவே பன்றிகளின் மரபணுக்களில் ரீட்ரோ வைரஸ்கள் வசிப்பதுண்டு. இவை உறுப்பு மாற்றத்துக்குப் பிறகு பயனாளிக்குத் தொற்றை உண்டாக்கி, உறுப்பு நிராகரிப்பைப் பூதாகரமாக்கும். பன்றியின் மரபணுக்களிலிருந்து 12 வகையான ரீட்ரோ வைரஸ்களை நீக்கியதன் மூலம் இது சரிசெய்யப்படுகிறது. இப்படி, 'ரெவிவிகார்' நிறுவனம் தயாரித்தளித்த மரபணு மாற்றுப் பன்றியின் இதயத்தையே பென்னட்டுக்கு மேரிலேண்ட் மருத்துவர்கள் பொருத்தியுள்ளனர்.

உறுப்பு நிராகரிப்பைத் தடுக்கும் புதிய மருந்து ஒன்றை பென்னட் இப்போது பயன்படுத்துகிறார். இதுவரை அந்த இதயத்தை அவரது உடல் நிராகரிக்கவில்லை. அவருக்குப் பொருத்தப்பட்டுள்ள பன்றியின் இதயம் மனித உடலுக்கு அந்நியமாகத் தெரியாத அளவுக்கு மரபணு மாற்றமுறையில் வளர்க்கப்பட்டது என்பதால், இந்த மருந்து இனியும் அவருக்குத் தேவைப்படுமா என்பது போகப்போகவே தெரியும்.

இந்திய மருத்துவரின் சாதனையும் வேதனையும்

பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பயன்படுத்த முடியும் என்பதை 25 ஆண்டுகளுக்கு முன்பே அசாம் மாநில மருத்துவர் ராம் பருவா நிரூபித்திருக்கிறார். 1997, ஜனவரி 1–ல் 32 வயதான ஒருவருக்குப் பன்றியின் இதயத்தை அவர் பொருத்தினார். அந்த நோயாளி 7 நாட்களுக்கு உயிருடன் இருந்தார். அவருக்குப் பல தொற்றுகள் இருந்ததால், அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அரசிடம் இந்த சிகிச்சைக்கு முறையாக அனுமதி பெறவில்லை என்ற காரணத்துக்காக உறுப்பு மாற்றுச் சட்டம், 1994–ன் கீழ் பருவா கைதுசெய்யப்பட்டார்.

வரலாறு படைக்குமா?

இன்றைக்கு அமெரிக்காவில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் மாற்று உறுப்புகளுக்காகக் காத்திருக்கின்றனர். இந்தியாவில் இதயச் செயலிழப்பால் 50 ஆயிரம் பேர் அவதிப்படுகின்றனர். இவர்களில் அதிகபட்சம் 15 பேருக்குத்தான் இதய மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் 1.8 லட்சம் பேருக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படும் நிலையில், 6 ஆயிரம் பேருக்குத்தான் மாற்றுச் சிறுநீரகம் கிடைக்கிறது. வருடத்துக்கு 30 ஆயிரம் பேருக்குக் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. ஆனால், 1,500 பேருக்கு மட்டுமே இது சாத்தியப்படுகிறது. இந்த நிலையில் மரபணு மாற்றுப் பன்றிகளின் உள் உறுப்புகளை மனிதருக்கும் பயன்படுத்துவது சாத்தியமானால், அனுதினமும் உயிருக்குப் போராடிவரும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காக்கப்படும். நவீன மருத்துவத்தில் புதிய வரலாறு படைக்கப்படும்.

9. சேதி தெரியுமா?

ஜன.1: இந்தியாவிலேயே முதன் முறையாக கேரள உயர் நீதிமன்றம் காகித பயன்பாடு இல்லாத நீதிமன்றமாக மாறியது. அங்கே ஸ்மார்ட் நீதிமன்ற அறைகள் திறக்கப்பட்டதன் மூலம் இது சாத்தியமாகியிருக்கிறது.

ஜன.3: பிரான்ஸில் 'ஐஎச்யு பி.1.640.2' என்று பெயரிடப்பட்ட புதிய வகை கரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒமைக்ரானைவிட அதிக அளவில் பரவும் தன்மை கொண்டது.

ஜன.4: கரோனா தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ளாத செர்பிய டென்னிஸ் வீரர் நோவாக் ஜோகோவிச்சுக்கு ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க ஆஸ்திரேலிய அரசு விசா மறுத்தது.

ஜன.5: பஞ்சாப்பில் பதிண்டா விமான நிலையத்திலிருந்து ஹுசைனிவாலாவுக்குச் சாலை மார்க்கமாக சென்ற பிரதமர் மோடியின் பயணத்தில் பாதுகாப்புக் குறைபாடு ஏற்பட்டதால் சர்ச்சையானது.

ஜன.5: தமிழகத்தில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி 6,36,25,813 வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்திலேயே அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில் 7,11,755 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக கீழ்வேளூர் தொகுதியில் 1,78,517 வாக்காளர்களும் உள்ளனர்.

ஜன.6: இந்தியாவின் முதல் திறந்தவெளி பாறை அருங்காட்சியகம் ஹைதராபாத்தில் உள்ள சி.எஸ்.ஐ.ஆர். தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் திறக்கப்பட்டது.

ஜன.6: தமிழகச் சட்டப்பேரவை வரலாற்றில் முதன் முறையாகக் கேள்வி நேரம் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

ஜன.7: மஹாகாளி ஆற்றின் குறுக்கே தார்சுலாவில் பாலம் கட்டுவதற்கு இந்தியா – நேபாளம் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்ததுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

ஜன.8: நீட் தேர்வுக்கு எதிராக சட்டப் போராட்டத்தை முன்னெடுப்பது என்று தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நீட் விலக்குக் கோரும் மசோதாவுக்கு தமிழக ஆளுநர் ஒப்புதல் அளித்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பாத நிலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

ஜன.8: உத்தர பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதியைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

ஜன.8: 1983ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட கூட்டுறவு சங்கச் சட்டத்தின் மீதான திருத்த மசோதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் ஐந்து ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஜன.9: போர்க் கப்பலிலிருந்து இலக்கைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் அதிநவீன சூப்பர்சானிக் பிரம்மோஸ் ஏவுகணை விசாகப்பட்டினத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

ஜன.10: அமெரிக்க வரலாற்றில் முதன் முறையாகக் கறுப்பின பெண் எழுத்தாளர் மாயா ஏஞ்சலோ உருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட்டது.

ஜன.10: சென்னையைச் சேர்ந்த 14 வயதான பரத் சுப்ரமணியம் இந்தியாவின் 73–வது செஸ் கிராண்ட் மாஸ்டர் என்ற அந்தஸ்தைப் பெற்றார்.

ஜன.11: பிரதமரின் பஞ்சாப் பயணத்தின்போது ஏற்பட்ட பாதுகாப்புக் குறைபாடு தொடர்பாக விசாரிக்க, உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி இந்து மல்ஹோத்ரா தலைமையில் உச்ச நீதிமன்றம் விசாரணைக் குழுவை அமைத்தது.


ஜன.11: மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை டேவிட் பென்னட் (57) என்பவருக்குப் பொருத்தி அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் சாதனை புரிந்தனர்.

ஜன.12: தமிழகத்தில் புதிதாக 11 மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன, 1,450 மருத்துவக் கல்வி இடங்கள் உருவாக்கப்பட்டன.

ஜன.13: இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (ISRO) புதிய தலைவராக S சோம்நாத் நியமிக்கப்பட்டார்.

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'மேற்கத்திய இடையூறு' என்பதுடன் தொடர்புடையது எது?

அ) கலாச்சாரம்



ஆ) வானிலையியல் ☑

இ) பொருளாதாரம்

ஈ) அரசியல்

✓ ஒரு 'மேற்கத்திய இடையூறு' என்பது மத்தியதரைக்கடல் பகுதியில் உருவாகும் ஒரு கூடுதல் வெப்பமண்டல புயல் ஆகும். இது இந்திய துணைக் கண்டத்தின் வடக்குப் பகுதிகளில் குளிர்கால மழையைக் கொண்டுவருவதாகக் கூறப்படுகிறது. மேலை இந்தியாவைப் பாதிப்பதோடு ஒரு பெருமழையைக்கொண்டுவரும் தீவிர 'மேற்கு இடையூறு' வரும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை கணித்து உள்ளது.

✓ அதன்பின்னர், இரண்டு மேற்கு இடையூறுகள் வடமேற்கு இந்தியா மற்றும் மேற்கு இமயமலைப் பகுதியில் சில நாட்களுக்கு மழையைக் கொண்டுவரும் என்றும் அது கணித்துள்ளது.

---

2. இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில், எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பாகும்?

அ) கலாச்சார அமைச்சகம்

ஆ) வெளியுறவு அமைச்சகம்

இ) கல்வி அமைச்சகம் ☑

ஈ) சுற்றுலா அமைச்சகம்

✓ இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் என்பது மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். பேராசிரியர் இரகுவேந்திர தன்வார் அண்மையில் இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலின் தலைவராக 3 ஆண்டுகளுக்கு அல்லது மறு உத்தரவு வரும் வரை நியமிக்கப்பட்டுள்ளார். வரலாற்று ஆய்வுகளு –க்கு வழிகாட்டுதல் இந்தக் கவுன்சிலின் நோக்கமாகும்.

---

3. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற இராமாயணத்தின் சாயலில் உள்ள 'ஐபோனியா' உள்ள நாடு எது?

அ) நேபாளம்

ஆ) மடகாஸ்கர் ☑

இ) இலங்கை

ஈ) மொரிஷியஸ்

✓ இந்தியக்கவிஞரும் தூதருமான அபை கே, மடகாஸ்கரின் 'ஐபோனியா'வின் பெருங்கதை இந்திய இதிகாசமான 'இராமாயண'த்தை ஒத்திருப்பதைக் கண்டறிந்தார்.

✓ 'ஐபோனியா' என்பது மடகாஸ்கரின் காவியக்கவிதை ஆகும். இது அதன் கதாநாயகன் ஐபோனியாவின் பிறப்பு, நிச்சயதார்த்தம், போராட்டம் மற்றும் இறப்பு ஆகியவற்றை விவரிக்கிறது. அவரது நிச்சயமான மனைவி ராம்பேலா, ராமாயணத்தைப்போலவே ராவடோவால் கடத்தப்பட்டார். சமற்கிருதத்திற்கும் மலகாசி மொழிக்கும் இடையே 300'க்கும் மேற்பட்ட ஒத்த சொற்கள் உள்ளன.

---

4. இந்தியாவின் முதல் திறந்தவெளி பாறை அருங்காட்சி –யகம் அமைந்துள்ள நகரம் எது?

அ) ஹைதராபாத் ☑



ஆ) மைசூர்

இ) திருவனந்தபுரம்

ஈ) வாரணாசி

✓ இந்தியாவின் முதல் திறந்தவெளி பாறை அருங்காட்சியக –த்தை ஹைதராபாத்தில் மத்திய அறிவியல் & தொழில் நுட்பத்துறை இணை அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் திறந்து வைத்தார். இந்த அருங்காட்சியகத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 35 வகையான பாறைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை 3.3 பில்லியன் ஆண்டுகள் முதல் 55 மில்லியன் ஆண்டுகள் வரை பழைமையானவையாகும்.

---

5. பேரிடர் மேலாண்மையில் ஒத்துழைப்பு குறித்து எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது?

அ) பிரான்ஸ்



ஆ) துர்க்மெனிஸ்தான் ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) நியூசிலாந்து

✓ பேரிடர் மேலாண்மைத் துறையில் இந்தியா மற்றும் துர்க்மெனிஸ்தான் இடையேயான ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ தற்போது வரை சுவிச்சர்லாந்து, ரஷியா, ஜெர்மனி, ஜப்பான், தஜிகிஸ்தான், மங்கோலியா, பங்களாதேஷ், இத்தாலி ஆகிய நாடுகள் மற்றும் சார்க் அமைப்புடனும் பேரிடர் மேலாண்மை துறையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிக்கு இந்தியா–ஸ்பெயின் இடையே ஒப்பந்தம் செய்துகொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

6. 'ஜீவன் ரக்ஷா' பணியுடன் தொடர்புடையது எது?

அ) இந்திய ராணுவம்

ஆ) இந்திய கடற்படை

இ) இரயில்வே காவல் படை ☑

ஈ) தேசிய பாதுகாப்புப் படை

✓ இரயில்வே காவல் படை வீரர்கள் 2021ஆம் ஆண்டில் இந்திய இரயில்வே முழுவதும் 601 நபரைக் காப்பாற்றி உள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளில் 'மிஷன் ஜீவன் ரக்ஷா' திட்டத்தின்கீழ் இந்தியா முழுவதும் உள்ள ரயில் நிலையங்களில் ஓடும் ரயில்களின் சக்கரங்களில் சிக்க இருந்த 1650 பேரைக் காப்பாற்றியுள்ளனர்.

✓ 1.2 இலட்சத்துக்கும் அதிகமான சரியான பயணிகளிடம் அவர்கள் விட்டுச்சென்ற இருபத்து 3 கோடி மதிப்பிலான பொருட்களை இந்திய இரயில்வே திருப்பி அனுப்பியுள்ளது.

---

7. பிரதமரின் பாதுகாப்புக் குறைபாடு குறித்து விசாரிக்க நடுவண் உள்துறை அமைச்சகம் அமைத்த குழுவின் தலைவர் யார்?



அ) சுதிர் குமார் சக்சேனா ☑

ஆ) அஜய் பூஷன் பாண்டே


இ) சுர்ஜித் பல்லா

ஈ) ரஞ்சன் கோகோய்

- ✓ பிரதமர் நரேந்திர மோடியின் பஞ்சாப் மாநிலம் பெரோசுபூர் வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட குளறுபடிகள் குறித்து விசாரிக்க 3 பேர்கொண்ட குழுவை மத்திய உள்துறை அமைச்சகம் அமைத்தது.
- ✓ அமைச்சரவை செயலகத்தின் செயலாளர் (பாதுகாப்பு) சுதிர் குமார் சக்சேனா தலைமையில் குழு அமைக்கப்படும்.

---

8. 'செயற்கை சூரியன்' என்பது எந்த நாட்டின் இலட்சியத் திட்டமாகும்?



அ) இந்தியா

ஆ) சீனா ☑

இ) ரஷ்யா

ஈ) இலங்கை

- ✓ சீனாவின் 'செயற்கை சூரியன்', 17 நிமிடங்களுக்கு (1,056 வினாடிகள்) சூரியனைவிட 5 மடங்கு அதிக வெப்பத்திற்கு எரிந்து மீண்டும் புதிய உலக சாதனை படைத்தது. EAST (Experimental Advanced Superconducting Tokamak) அணுக்கரு இணைவு உலை 158 மில்லியன்° பாரன்ஹீட் (70 மில்லியன்°C) வெப்பநிலையை பராமரித்தது.
- ✓ கடந்த 2003'இல் பிரான்ஸின் டோரே சுப்ரா டோகாமாக், 390 வினாடிகளுக்கு இதேபோன்ற வெப்பநிலையை பராமரித்தது குறிப்பிடத்தக்கது.

---

9. பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில், எத்தனை மாநிலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன?



அ) மூன்று

ஆ) ஐந்து

இ) ஏழு ☑

ஈ) பத்து

- ✓ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு பசுமை ஆற்றல் வழித்தடத்திட்டத்தின் 2ஆம் கட்டத்திற்கு ஒப்புதலளித்தது. இத்திட்டத்தின்கீழ், குஜராத், இமாச்சல பிரதேசம், கர்நாடகா, கேரளா, இராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் 20 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்கள் நிறுவப்படும்.
- ✓ இத்திட்டத்தின் மதிப்பீடு ₹12,031 கோடி. இந்த மதிப்பீட்டில் 33 சதவீதம் மத்திய அரசு நிதியுதவியாக வழங்கப்படும்.

---

10. அண்மையில் தொடங்கப்பட்ட AI–அடிப்படையிலான காப்புரிமைபெற்ற அமைப்பான 'Clairvoyant'இன் நோக்கம் என்ன?

அ) வளிமாசைக்கையாளுதல்

ஆ) நீரைச்சுத்திகரித்தல் ☑

இ) கிரிப்டோகரன்சி தேடல்

ஈ) கிருமி நீக்கம்

- ✓ மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், நீர் சுத்திகரிப்புக்காக IIT முன்னாள் மாணவர்களால் தொடங்கப்பட்ட 'ஸ்வஜல் வாட்டர் பிரைவேட் லிட்' என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இயங்கும் துளிர் நிறுவனத்தைத்தொடங்கி வைத்தார். நிறுவனத்தின் காப்புரிமை பெற்ற அமைப்பான, 'Clairvoyant' செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு அமைப்புகளை மேம்படுத்தவும் எதிர்கால பழுதுகளைக் கணிக்கவும் பயன்படுகிறது.
- ✓ இணைய உலக தொழில்நுட்பத்தை சூரிய ஆற்றலுடன் இணைக்கும் சுத்தமான குடிநீர் தீர்வுகளையும் வாட்டர் ATM வடிவில் அவர்கள் உருவாக்கியுள்ளனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மும்பை கடற்படை கப்பலில் வெடி விபத்து: 3 வீரர்கள் பலி

மும்பை கடற்படை தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 3 வீரர்கள் பலியாகினர்.

மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் உள்ள கடற்படை தளத்தில் வெடிவிபத்து ஏற்பட்டது. INS ரன்வீர் கப்பலின் உள்பெட்டியில் ஏற்பட்ட இந்த வெடிவிபத்தில் சிக்கி 3 வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கடற்படை வீரர்கள் மற்றும் அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு வெடிவிபத்தை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்நிலையில் இந்த விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

2. தேசிய கலைத் திருவிழாவில் தமிழகமாணவர்கள் ஏழு பேருக்கு பரிசு

மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் தேசிய அளவில் நடத் கலைத்திருவிழாவில் முதல் முறையாக தமிழகத்தைச் சேர்ந்த 7 மாணவர்கள் பரிசுக்கு தேர்வு பெற்றுள்ளனர்.

பள்ளி மாணவ, மாணவிகளின் கலைத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் மத்திய கல்வி அமைச்சகம், தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவை இணைந்து தேசிய அளவிலான கலைத்திரு விழா போட்டிகளை கடந்த ஏழு ஆண்டுகளாக நடத்தி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தேசிய போட்டிகள் இணைய வழியில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்றன.

இதேபோன்று புது தில்லி, ஆந்திரம், கேரளம் உள்பட அனைத்து மாநிலங்களிலும் இணையவழியில் போட்டிகள் நடத்தப்பட்டன. வாய்ப்பாட்டு, இசை, நடனம்,

சிற்பக்கலை, பொம்மைகள் உருவாக்குதல் என ஒன்பது வகையான போட்டிகளில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில் தேசிய கலைத்திருவிழா போட்டியின் முடிவுகளை மத்திய கல்வி அமைச்சகம் தற்போது வெளியிட்டுள்ளது.

பரிசுத் தொகை: வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசாக தங்கப்பதக்கத்துடன் ₹25,000; 2ஆம் பரிசாக வெள்ளிப் பதக்கத்துடன் ₹20,000; மூன்றாம் பரிசாக வெண்கலப் பதக்கத்துடன் ₹15,000 வழங்கப்படவுள்ளது.

தமிழகம் முதலிடம்: இந்த ஆண்டு நடைபெற்ற தேசிய கலைத்திருவிழா போட்டிகளில் தமிழகம் ஏழு பரிசுகளை வென்று முதன்முறையாக முதலிடத்தைப் பிடித்தது. ஐந்து பரிசுகளை வென்று பிகார் இரண்டாம் இடத்தையும், தலா 4 பரிசுகளை வென்று திரிபுரா, புது தில்லி மாநிலங்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றன. தமிழகத்தில் இந்தப் போட்டிகளை ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்ட இயக்ககம் (சமக்ரசிஷா) ஒருங்கிணைத்திருந்தது.

---

3. M K பாண்டே ராணுவ துணை தலைமை தளதியாக நியமிக்க ஒப்புதல்

இந்திய ராணுவத்தின் அடுத்த துணை தலைமை தளபதியாக M K பாண்டேயை நியமிக்கும் பரிந்துரைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய துணை தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சி பி மொஹந்தி இம்மாத இறுதியில் ஓய்வு பெறவுள்ள நிலையில், அடுத்த துணை தலைமை தளபதியை நியமிப்பதற்கான ஆலோசனைகள் தொடங்கி உள்ளன. இந்த நிலையில், அருணாசல பிரதேசம், சிக்கிம் உள்ளிட்ட இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிரிவு தளபதியாக உள்ள லெப்டினன்ட் ஜெனரல் M K பாண்டே அடுத்த துணை தலைமை தளபதியாக நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டது. இந்தப் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுள்ளதாகத் தெரிகிறது. அந்தமான்–நிக்கோபார் தீவுகள் பகுதியில் முப்படைகளின் தலைமைப் பொறுப்பையும் M K பாண்டே வகித்துள்ளார்.

---

4. ஃபிஃபா கால்பந்து விருது – சிறந்த வீரர்; ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி, சிறந்த வீராங்கனை; அலெக்ஸியா புடெலாஸ்

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (ஃபிஃபா) வழங்கும் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரர் விருதை போலந்தின் ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கியும், சிறந்த வீராங்கனை விருதை ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸும் வென்றனர்.

இதில் லெவாண்டோவ்ஸ்கி (பேயர்ன் முனீச்) தொடர்ந்து 2–ஆவது முறையாக இந்த விருதை வெல்லும் நிலையில், அலெக்ஸியா (பார்சிலோனா) முதல் முறையாக இந்த விருதை கைப்பற்றியிருக்கிறார்.

ஸ்விட்சர்லாந்தின் ஜூரிச் நகரில் உள்ள ஃபிஃபா கால்பந்து தலைமையகத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முனீச்சில் இருந்து காணொலி வழியே நிகழ்ச்சியில் பங்கேற்ற லெவாண்டோவ்ஸ்கியிடம் அவரது கிளப் அதிகாரிகள் விருதை வழங்கினர். அலெக்ஸியாவும் காணொலி வழியே நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்.

சிறந்த வீரருக்கான வாக்கெடுப்பில் ஆர்ஜென்டீனாவின் லயோனல் மெஸ்ஸி (பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), எகிப்தின் முகமது சலா (லிவர்பூல்) ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி லெவாண்டோவ்ஸ்கி முதலிடம் பிடித்துள்ளார். மகளிர் பிரிவில், ஆஸ்திரேலியாவின் சாம் கெர் (செல்சி), ஸ்பெயினின் ஜெனிபர் ஹெர்மோசோ (பார்சிலோனா) ஆகியோரைவிட அதிக வாக்குகள் பெற்று அலெக்ஸியா வெற்றியாளர் ஆகியிருக்கிறார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் வழங்கப்பட்ட பேலன் தோர் கால்பந்து விருதில் ஆடவர் பிரிவில் வெவாண்டோவ்ஸ்கி 2ஆவது இடம் பிடித்திருந்தார். மெஸ்ஸி அதில் விருது வென்றிருந்தார். அதே விருதை மகளிர் பிரிவில் வென்று இருந்த அலெக்ஸியா, இவ்விருதையும் கைப்பற்றியிருக்கிறார்.

விருதுக்கான வாக்கெடுப்பில் தேசிய அணிகளின் கேப்டன்கள், பயிற்சியாளர்கள், ஊடகங்களிடம் இருந்து லெவாண்டோவ்ஸ்கிக்கு பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. ஆனால் ரசிகர்கள் தரப்பு வாக்குகளை லயோனல் மெஸ்ஸி அள்ளியிருக்கிறார்.

பேயர்ன் முனீச் அணிக்காக 2020–21 சீசனில் 41 கோல்கள் அடித்தும், 2021 காலண்டர் ஆண்டில் 43 கோல்கள் அடித்தும் பந்தெஸ்லிகா போட்டியில் இரு சாதனைகளை முறியடித்திருக்கிறார் லெவாண்டோவ்ஸ்கி. முன்னதாக இந்த சாதனை, அதே பேயர்ன் முனீச் அணியைச் சேர்ந்த ஜெர்மன் வீரரான ஜெர்ட் முல்லர் வசம் இருந்தது.

மகளிர் பிரிவில் சிறந்த வீராங்கனையாக தேர்வாகியிருக்கும் அலெக்ஸியா, தலைமையில் தான் பார்சிலோனா மகளிர் கால்பந்து அணி சாம்பியன்ஸ் லீக் பட்டம் வென்றது.

ரொனால்டோவுக்கு சிறப்பு விருது

சர்வதேச அளவில் தேசிய அணிக்காக அதிக கோல்களை அடித்த போர்ச்சுகல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 'ஃபிபா சிறப்பு விருது' வழங்கப்பட்டது. போர்ச்சுகல் அணிக்காக 2003ஆம் ஆண்டு முதல் ஆடி வரும் ரொனால்டோ, இதுவரை 184 ஆட்டங்களில் 115 கோல்கள் அடித்திருக்கிறார். முன்னதாக ஈரான் அணிக்காக அலி டேய் 109 கோல்கள் அடித்ததே நீண்டகாலமாக சாதனையாக இருந்தது.

சிறந்த கோல்

2021ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் அடிக்கப்பட்ட சிறந்த கோலுக்கான விருதை, ஆர்ஜென்டீன வீரர் எரிக் லமேலா வென்றுள்ளார். இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் ஆர்செனலுக்கு எதிரான ஆட்டத்தில் டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பருக்காக (தற்போது செவில்லா) அவரடித்த கோல் உலகிலேயே சிறந்ததாகத் தேர்வாகியிருக்கிறது. ஈரான் வீரர் மெஹதி தரேமி (போர்டோ) அடித்த 'பை சைக்கிள் கிக்' கோல், செக்

குடியரசு வீரர் பேட்ரிக் ஷிக் (பேயர் லெவர்குசன்) அடித்த கோல் ஆகியவை லமேலாவுக்கு சவால் அளித்தன.

சிறந்த கோல்கீப்பர்கள்

இந்த விருதை ஆடவர் பிரிவில் எட்வர்ட் மெண்டி (செனகல்/செல்சி), மகளிர் பிரிவில் கிறிஸ்டியன் எண்ட்லர் (சிலி/ஒலிம்பிக் லயன்) வென்றனர். இதில் எட்வர்டுக்கு, கியான்லுகி டோனாருமா (இத்தாலி/பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), மேனுவல் நியூவர் (ஜெர்மனி/பேயர்ன் முனீச்) ஆகியோரும், கிறிஸ்டியனுக்கு ஸ்டெபானி லேப் (கனடா/பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), ஆன் காட்ரின் பெர்கர் (ஜெர்மனி/செல்சி) ஆகியோரும் போட்டியாளர்களா –க இருந்தனர்.

சிறந்த பயிற்சியாளர்கள்

ஆடவர் பிரிவில் சிறந்த பயிற்சியாளர் விருதை தாமஸ் டுஷெலும் (ஜெர்மன்/செல்சி), மகளிர் பிரிவில் சிறந்த பயிற்சியாளர் விருதை எம்மா ஹெய்ஸும் பெற்றனர் (இங்கிலாந்து/செல்சி).

வாக்கு அடிப்படையில் ஆடவர் பிரிவில் ராபர்டோ மான்சினி (இத்தாலி) 2–ஆம் இடமும், பெப் குவார்டியாலோ (ஸ்பெயின்/மான்செஸ்டர் சிட்டி) 3ஆம் இடமும் பிடித்து உள்ளனர். மகளிர் பிரிவில் லூயிஸ் கார்டெஸ் (ஸ்பெயின் / பார்சிலோனா), சரினா வெய்க்மான் (நெதர்லாந்து) ஆகியோர் முறையே 2&3ஆம் இடங்களில் இருக்கின்றனர்.

சிறந்த ரசிகர்கள்

இவ்விருது டென்மார்க் ரசிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. யூரோ கோப்பை போட்டியில் ஃபின்லாந்துக்கு எதிரான ஆட்டத்தின்போது டென்மார்க் வீரர் கிறிஸ்டியன் எரிக்சன் மாரடைப்பு ஏற்பட்டு களத்தில் சரிந்த தருணத்தில், அணியினர் விக்கித்து நிற்க, மைதானத்தில் இருந்த அந்நாட்டு ரசிகர்கள் அணியினருக்கும், எரிக்சனுக்கும் ஆதரவாக எழுப்பிய குரலுக்காக இந்த கௌரவம் அளிக்கப்பட்டது.

ஃபேர் பிளே விருது

இந்த விருதும் கிறிஸ்டியன் எரிக்சன் சம்பவத்தின்போது அந்த அணியினர் காட்டிய ஆதரவு, துரிதமான செயல்பாடு, தோளோடு தோள் சேர்த்து நின்ற ஒற்றுமை ஆகியவற்றுக்காக டென்மார்க் அணி வீரர்கள் மற்றும் உதவிப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

தேர்வு முறை...

இந்த விருதுக்கான போட்டியாளர்கள் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தேசிய கால்பந்து அணியின் பயிற்சியாளர்கள், கேப்டன்கள், ஊடகத்தினர், ரசிகர்களின் வாக்குகள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தரப்பின் வாக்குகளும் 25 சதவீதம் என்ற அளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு வெற்றியாளர் தோ'வு செய்யப்பட்டுள்ளனர்.

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற PARAKH என்பது எந்தத் துறையுடன் தொடர்புடைய இணையதளமாகும்?

அ) மாணவர் கற்றல் மதிப்பீடு ☑

ஆ) பாதுகாப்பு கொள்முதல்

இ) முதலீட்டு ஆலோசனை

ஈ) சுங்க அனுமதி

✓ தேசிய கல்விக்கொள்கையானது PARAKH (Performance Assessment, Review, மற்றும் Analysis of Knowledge for Holistic Development) என்ற தேசிய மதிப்பீட்டு மையத்தை அறிமுகப்படுத்தியது.

✓ அண்மையில், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலானது (AICTE) இதற்கான இணையதளத்தை தொடங்கியது. இது உயர்கல்வி மற்றும் பள்ளி பயிலும் மாணவர்கள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ளும்.

---

2. போபாலில் உள்ள வான் விகார் தேசியப்பூங்கா மற்றும் உயிரியல் பூங்காவின் குலாபோ சமீபத்தில் காலமானது. அது ஒரு ____?

அ) ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம்

ஆ) தேன் கரடி ☑

இ) வங்கப்புலி

ஈ) இராட்சத ஆமை

✓ இந்தியாவின் வயதான தேன் கரடி 'குலாபோ', போபாலில் உள்ள வான் விகார் தேசியப் பூங்கா மற்றும் உயிரியல் பூங்காவில் தனது 40ஆம் வயதில் இறந்தது. இந்தப் பெண் கரடி, கடந்த 2006ஆம் ஆண்டு தனது 25 வயதில் தெருக் கலைஞரிடமிருந்து மீட்கப்பட்டது.

✓ மூப்புகாரணமாக உள்ளுறுப்புகள் செயலிழந்ததே தேன் கரடியின் இறப்புக்குக்காரணம் என உடற்கூறு பரிசோத –னைமூலம் தெரியவந்தது.

---

3. 'செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்' அமைந்து உள்ள நகரம் எது?

அ) மதுரை

ஆ) சென்னை ☑

இ) கோயம்புத்தூர்

ஈ) திருச்சிராப்பள்ளி

✓ சென்னை நகரத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள பெரும்பாக்கத்தில் 'செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவ –னத்தின் புதிய வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இது முன்னர் 'செம்மொழித் தமிழுக்கா –ன சிறப்பு மையம்' என அறியப்பட்டது.

✓ இது நடுவண் கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது 2006 முதல் 2008 வரை மைசூருவில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவன வளாகத்தில் செயல்பட்டு வந்தது.

---

4. மூன்றாவது தேசிய நீர் விருதுகள்–2020'இல் 'சிறந்த மாநிலப்' பிரிவில் முதல் பரிசை வென்ற மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) குஜராத்

ஈ) மகாராஷ்டிரா

✓ மூன்றாவது தேசிய நீர் விருதுகள்–2020'இல் 'சிறந்த மாநிலப் பிரிவில்' உத்தர பிரதேச மாநிலத்துக்கு முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு உள்ளது. நீர்வளங்கள், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் துறை, ஜல் சக்தி அமைச்சகம் ஆகியவை மாநிலங்கள், நிறுவனங்கள், தனிநபர்கள் போன்றவற்றுக்கு 11 வெவ்வேறு பிரிவுகளில் 57 விருதுகளை வழங்குகிறது.

✓ நீர் மேலாண்மையில் முழுமையான அணுகுமுறையை கடைப்பிடிக்க அது அவற்றை ஊக்குவிக்கிறது. மேலும் சிறந்த நீர் பயன்பாட்டு நடைமுறைகளை பின்பற்ற மக்களை அது ஊக்குவிக்கிறது.

---

5. ₹2,000 கோடி மதிப்பிலான பால் பண்ணை கூட்டு நிறுவனத்தை உருவாக்க, 'தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்துடன்' ஒப்பந்தம் செய்துள்ள மாநிலம் எது?

அ) பஞ்சாப்

ஆ) அஸ்ஸாம் ☑

இ) குஜராத்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ அஸ்ஸாம் அரசும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியமும் மாநிலத்தில் இத்துறையின் முழுமையான வளர்ச்சிக்காக ₹2,000 கோடி மதிப்பிலான கூட்டு நிறுவனத்தை உரு –வாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

✓ இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 7 ஆண்டுகளில் ஆறு புதிய அலகுகளில் இருந்து 10 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் நோக்குடன் ₹2,000 கோடியில் ஒரு கூட்டு நிறுவனம் அமைக்கப்படும். உலக வங்கியின் நிதியுதவி உடன் கூடிய, 'அஸ்ஸாம் வேளாண் வணிகம் மற்றும் கிராமப்புற போக்குவரத்துத் திட்டத்தின்'கீழ் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

6.NSO'இன் முதல் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளின்படி, 2021–22 நிதியாண்டிற்கான GDP வளர்ச்சி என்னவாக இருக்கும்?

அ) 8.5%

ஆ) 9.2% ☑

இ) 10%

ஈ) 11.5%

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) 2021–2022ஆம் நிதியாண்டிற்கான ஆண்டு வருமானத்தின் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. 2021–2022ம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021'ம் ஆண்டில் இது 7.3 சதவீதமாக இருந்தது.

✓ மதிப்பீடுகளின்படி, இந்தியப்பொருளாதாரம் உலகின் மிக வேகமாக வளர்ந்துவரும் பெரிய பொருளாதாரமாக அதன் நிலையை மீண்டும் பெறுவதற்கான பாதையில் உள்ளது. 9.5% வளர்ச்சி இருக்கும் என இந்திய ரிசர்வ் வங்கியும் கணித்துள்ளது.

---

7. எந்த ஆண்டில், முதல் ஸ்டார்ட்–அப் இந்தியா 'புத்தாக்க வாரம்' தொடங்கப்பட்டது?

அ) 2015

ஆ) 2017

இ) 2019



ஈ) 2021 ☑

✓ இந்திய அரசாங்கம், 2021 ஜன.10 அன்று முதல் ஸ்டார்ட் அப் இந்தியா 'புத்தாக்க வாரத்தை' ஏற்பாடு செய்தது. இது புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் நோக்கிற்காக துளிர் நிறுவல்கள், தொழில்முனைவோர்கள், முதலீட்டாளர்கள், அடைவுகள், நிதி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒரே தளத்தின் கீழ் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ தொழிலக & உள்நாட்டு வணிக மேம்பாட்டுத்துறை (DPIIT) இந்தப் புத்தாக்கக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தது.

---

8. கடவுச்சீட்டு சேவை திட்டம் 2.0'க்கான சேவை வழங்கு –நராக உள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?

அ) டெக் மஹிந்திரா

ஆ) TCS ☑

இ) அக்செஞ்சர்

ஈ) விப்ரோ

✓ பாஸ்போர்ட் சேவா திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தை வெளியுறவு அமைச்சகம் தேர்வு செய்துள்ளது.

✓ 2008'இல் அறிமுகப்படுத்தப்பட்ட இதன் முதல் கட்டத்தை டிசிஎஸ் வெற்றிகரமாக செயல்படுத்தியது. கடவுச்சீட்டு தொடர்பான சேவைகளை வழங்குவதை மேம்படுத்துதல், செயல்முறைகளை டிஜிட்டல் மயமாக்குதல், காலக்கோட் –டை விரைவாகக் கண்காணித்தல் மற்றும் வெளிப்படை –த்தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமா –கக் கொண்டதாகும் இது.

---

9. தேர்தல் ஆணையத்தின் அண்மைய அறிவிப்பின்படி, மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்களின் செலவு உச்சவரம்பு என்ன?

அ) ₹95 இலட்சம் ☑



ஆ) ₹75 இலட்சம்

இ) ₹60 இலட்சம்

ஈ) ₹50 இலட்சம்

✓ மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்களுக்கான செலவு உச்சவரம்பை ₹70 இலட்சத்தில் இருந்து ₹95 இலட்சமாக உயர்த்தி தேர்தல் ஆணையம் அறிவித்தது.

✓ தேர்தல் ஆணையம் செலவு காரணிகள் மற்றும் பிற சிக்கல்கள் குறித்து ஆய்வுசெய்ய ஒரு குழுவை அமைத்தது. சட்டமன்றத் தேர்தல்களுக்கு, வேட்பாளர்களுக்கான திருத்தப்பட்ட செலவின வரம்பு பெரிய மாநிலங்களுக்கு ₹40 இலட்சமாக உள்ளது. இது முன்னர் ₹28 இலட்சமாக இருந்தது. சிறு மாநில வேட்பாளர்களுக்கான வரம்பு ₹20 இலட்சத்திலிருந்து ₹28 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

---

10. இந்தியாவின் முதல் பல பரிமாண 'சாகச விளையாட்டுப் பயணம்' நடத்தப்பட்ட நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) பிரான்ஸ் ☑

இ) சுவிட்சர்லாந்து

ஈ) ஆஸ்திரேலியா

✓ இந்தியாவின் முதல் பல பரிமாண 'சாகச விளையாட்டுப் பயணம்' 2021 அக்.27 அன்று தொடங்கப்பட்டது. இது பிரான்ஸில் உள்ள தேசிய மலையேற்ற மற்றும் அதனைச் சார்ந்த விளையாட்டுப் பயிற்சி நிறுவனத்தால் (NIMAS) நடத்தப்பட்டது. சமீபத்தில், பிரான்ஸ் நாட்டில் நடத்திய, சாகச விளையாட்டுப் பயணத்தில் பங்கேற்றுத் திரும்பிய, இந்தியாவின் முதலாவது பல–பரிமாணக் குழுவை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வரவேற்றார்.

✓ இந்தக் குழுவினர், ஆல்ப்ஸ் மலைத்தொடரில், பிரான்ஸ், சுவிசர்லாந்து மற்றும் இத்தாலி நாடுகளில், 250 கிமீக்கும் அதிக தொலைவுக்கு, குளிர்கால மலையேற்றத்தில் ஈடுபட்டனர். அதன் தொடர்ச்சியாக, ஆல்ப்ஸ் மலைத் தொடரிலிருந்து இங்கிலீஷ் கால்வாய் வரை 975 கிமீட்டர் தொலைவுக்கு உடலை நடுங்கவைக்கும் குளிரில், சராசரியாக, ஒரு நாளைக்கு 09–10 மணி நேரம் என்ற அளவிற்கு மிதிவண்டி பயணத்தையும் மேற்கொண்டனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையில் ₹1500 கோடி முதலீட்டுக்கு அமைச்சரவை ஒப்புதல்

இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையில் ₹1500 கோடி முதலீட்டுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

சுமார் 10,200 பணி–வருடங்கள் வேலைவாய்ப்பு உருவா –க்கத்திற்கும், வருடத்திற்கு சுமார் 7.49 மில்லியன் டன் கரியமில வாயு உமிழ்வைக் குறைக்கவும் இந்த முதலீடு உதவும்.

இந்திய அரசு கூடுதலாக ₹1500 கோடி முதலீடு செய்வதன் காரணமாக இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை கீழ்காணும் பலன்களை பெறும்:

1. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு ₹12000 கோடி கடன் வழங்க முடியும், இதன்மூலம் 3500–4000 மெகாவாட் கூடுதல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனுக்கான கடன் தேவை நிறைவு செய்யப்படும்.

2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்திய அரசின் இலக்குகளை எட்டுவதற்கு பங்காற்றும் வகையில் அந்தத் துறையின் நிகர மதிப்பை அதிகரித்து கூடுதல் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி திட்டங்களுக்கு கூடுதல் நிதிவசதி ஏற்படும்.

3. கடன் வழங்கும் மற்றும் கடன் பெறும் செயல்களுக்கு வசதியளிக்கும் வகையில், மூலதனத்தையும் ஆபத்தையும் சரிபார்த்து மதிப்பீடுசெய்த சொத்து விகிதாச்சாரம் மேம்படும்.

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 'மினி இரத்னா' (வகை–1) நிறுவனமான இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு எ எனத் தனியாக, வங்கி அல்லாத நிதி நிறுவனமாக, 1987'இல் உருவாக்கப்பட்டது.

34 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்நுட்ப–வணிக நிபுணத்துவம் கொண்ட இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களு –க்கான நிதியளிப்பில் முக்கியப்பங்கு வகிக்கிறது.

---

2. ஜன.19 – தேசிய பேரிடர் மீட்புப் படை நாள்

---

3. ஜன. 27இல் இந்தியா–மத்திய ஆசியா மாநாடு

இந்தியா – மத்திய ஆசிய நாடுகளிடையேயான மாநாடு முதல் முறையாக வரும் ஜனவரி 27–இல் காணொலி வாயிலாக நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிசுதான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 5 நாடுகளின் அதிபர்கள் பங்கேற்கின்றனர். இந்தியா–மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் அளவில் நடைபெறும் முதல் மாநாடு இதுவே ஆகும்.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்:

இந்தியா – மத்திய ஆசியா பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக அதன் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான 3ஆம் கட்ட சந்திப்பு, கடந்த டிசம்பர்.18 முதல் 20ஆம் தேதி வரை தில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் இந்தியா–மத்திய ஆசிய நாடுகள் இடையிலான நட்புறவுக்கு உத்வேகம் அளித்தது.

ஆப்கானிஸ்தான் விவகாரம் மீதான பிராந்திய பாதுகாப்புப் பேச்சுவார்த்தை கடந்த ஆண்டு நவம்பர்.10'இல் தில்லியில் நடைபெற்றது. இதில், மத்திய ஆசிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலர்கள் பங்கேற்றது. ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் பொதுவான பிராந்திய அணுகுமுறையை வெளிப்படுத்தியது.

இந்தியா – மத்திய ஆசிய நாடுகளின் முதல் மாநாட்டில் இருதரப்பு உறவை புதிய உயரத்துக்கு கொண்டு செல்வதற்கான உத்திகள் குறித்து தலைவர்கள் விவாதிப் –பர். மேலும், பிராந்திய பாதுகாப்புச் சூழல், சர்வதேச பிரச் –னைகள் குறித்து தலைவர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வர் என அதில் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

4. இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஓய்வு பெறுவதாக அறிவிப்பு!

இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா 2003–ம் ஆண்டு முதல் இந்தியாவிற்காக விளையாடி வருகிறார். இதுவரை ஆறு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். 14ஆவது ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கும் சானியா மிர்சா 19 வருடங்களாக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் கலந்துகொண்டார் சானியா மிர்சா. பெண்கள் இரட்டையர் பிரிவில் நடந்த அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா – உக்ரைனின் நாடியா கிச்னோக் இணை ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி – ஸ்டோர்ம் சான்டெர்ஸ் ஜோடியுடன் மோதியது. இதில் சானியா மிர்சா ஜோடி தோல்வி அடைந்தது.

இதைத்தொடர்ந்து சானியா மிர்சா டென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

---

5. ₹2.3 கோடியில் செல்லம்மாள் பாரதி மையம் – சபாநாயகர் மு அப்பாவு அடிக்கல் நாட்டினார்.

கடையத்தில் ₹2.3 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள செல்லம்மாள் பாரதி மையத்திற்கு சபாநாயகர் மு அப்பாவு அடிக்கல் நாட்டினார்.

---

6. முன்னாள் நீதியரசர் சி டி செல்வம் தலைமையில் புதிய காவல் ஆணையம்: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

காவலர் – பொதுமக்கள் நல்லுறவு மேம்படவும், காவலர் நலன் காத்திடவும் முன்னாள் நீதியரசர் சி.டி.செல்வம் தலைமையிலான புதிய காவல் ஆணையத்திற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "காவலர் – பொதுமக்களுக்கு இடையேயான உறவை மேம்படுத்தவும், காவல்துறை பணியாளர்களுக் –கு நலத்திட்டங்களைச் செயல்படுத்திடவும், புதிய பயிற்சி முறைகளைப் பரிந்துரைத்திடவும் சென்னை உயர் நீதி மன்ற முன்னாள் நீதியரசர் சி டி செல்வம் தலைமையில் புதிய காவல் ஆணையம் அமைத்திட தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த ஆணையம், காவலர்களின் நலன் மற்றும் காவல்துறையின் பல்வேறு அம்சங்களை விரிவாக ஆய்வு செய்து, குறிப்பிட்ட காலவரையறைக்குள் அரசுக்குத் தனது பரிந்துரைகளை அளிக்கும். காவல்துறையின் செயல்பாடுகளைச் சிறப்பாக மேம்படுத்துவதற்கும், இணையவழிக் குற்றங்களைத் தடுத்திடவும், சேவை வழங்குவதில் மனிதாபிமானத்துடன் கூடிய நட்புறவோடு பொதுமக்களை அணுகுவதற்கும், உரிய நடவடிக்கைகள் மூலமாகக் காவல்துறையினரின் சேவையை மேலும் வலுவூட்டுவதற்கும், இந்த ஆணையத்தின் பரிந்துரைகள் வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் அமைந்திடும்" என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

---

7. கின்னஸ் உலக சாதனை படைத்த உலகின் வயதான மனிதர் 112 வயதில் காலமானார்

உலகின் மிக வயதான மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சாடர்னினோ டிலா ப்யூன்டே நேற்று முன்தினம் தனது 112ஆவது வயதில் காலமானார்.

ஸ்பெயின் நாட்டின் வடமேற்கில் உள்ள லியோன் நகரைச் சேர்ந்தவர் சாடர்னினோ டிலா ப்யூன்டே. இவரை உலகின் மிக வயதான மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகம் கடந்த செப்டம்பர் மாதம் அறிவித்தது.

1. RBI'இன் அண்மைய அறிக்கையின்படி, குறைதீர்ப்புத் திட்டத்தின்கீழ் அதிகபட்ச புகார்களைப்பெற்ற மண்டலம் எது?

அ) தென் மண்டலம்

ஆ) கிழக்கு மண்டலம்

இ) வடக்கு மண்டலம் ☑

ஈ) மேற்கு மண்டலம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 2020 ஏப்ரல் – 2021 மார்ச்சில் பல்வேறு குறைதீர்க்கும் திட்டங்களின்கீழ் 4,04,143 புகார்களைப் பெற்றுள்ளது. புகார்களின் அளவு 22.27% சதவீதம் அதிகரித்துள்ளது. சண்டிகர், கான்பூர் மற்றும் தில்லி ஆகியவை அதிகபட்ச புகார்களைப் பெற்றுள்ளன. மேலும் 2020–21'இல் வடக்கு மண்டலத்தில் அதிகபட்ச புகார்கள் (43.10 சதவீதம்) வந்துள்ளன. அதைத் தொடர்ந்து மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்கள் உள்ளன.

✓ கிழக்கு மண்டலம் தொடர்ந்து குறைவான புகார்களைக் கொண்டுள்ளது. ATM மற்றும் பற்றட்டைகள், மொபைல் பேங்கிங் மற்றும் கடனட்டைகள் ஆகியவை புகார்களின் முக்கிய காரணங்களாக உள்ளன.

---

2. இந்தியாவுடன் முறையான கட்டற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை சமீபத்தில் தொடங்கிய நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) இங்கிலாந்து ☑

இ) ரஷ்யா

ஈ) ஜப்பான்

✓ 2030ஆம் ஆண்டிற்குள் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான வர்த்தகத்தை இரட்டிப்பாக்கும் நோக்குடன், முறையான கட்டற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைக –ளை இருநாடுகளும் தொடங்கின. இருநாடுகளுக்கு இடையிலான இந்த இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பு ஆண்டுக்கு சுமார் $50 பில்லியன் ஆகும்.

✓ விவசாயம் மற்றும் பால்வளத்துறைபோன்ற முக்கியமான துறைகளில் இருநாடுகளும் ஒப்பந்தித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

---

3. தொலைக்காட்சி மதிப்பீடு புள்ளி (TRP) சேவைகளை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பணிக்குழுவின் தலைவர் யார்?

அ) சசி சேகர் வேம்படி ☑

ஆ) அனுராக் சிங் தாக்கூர்

இ) L முருகன்

ஈ) சுகந்த் வத்சா

✓ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது செய்தி சேனல்களின் பார்வையாளர் மதிப்பீட்டை உடனடியாக வெளியிடுமாறு தொலைக்காட்சி கண்காணிப்பு நிறுவனமான பிராட்காஸ்ட் ஆடியன்ஸ் ரிசர்ச் கவுன்சில் இந்தியாவை (BARC) கேட்டுக்கொண்டுள்ளது.

✓ பிரசார் பாரதியின் தலைமைச் செயல் அதிகாரி சசி சேகர் வேம்படியின் தலைமையில் செயற்குழு ஒன்றை தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் அமைத்துள்ளது. இது தொலைக்காட்சி மதிப்பீடு புள்ளி (TRP) சேவைகளை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

---

4. ககன்யான் திட்டத்தின் பணியாளர் திறன் என்ன?

அ) 2

ஆ) 3 ☑

இ) 4

ஈ) 5

✓ ககன்யான் திட்டத்திற்கான கிரையோஜெனிக் எஞ்சினின் தகுதிச்சோதனையை இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) 720 வினாடிகளுக்கு வெற்றிகரமாக நடத்தியது.

✓ தமிழ்நாட்டின் மகேந்திரகிரியில் அமைந்துள்ள இஸ்ரோ உந்துதல் வளாகத்தில் இச்சோதனை நடத்தப்பட்டது. இந்த நீண்டகால சோதனையானது, ககன்யான் திட்டத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

---

5. முர்ரி என்பது பின்வரும் எந்த நாட்டின் பிரபலமான மலைவாசஸ்தலமாகும்?

அ) இலங்கை

ஆ) பாகிஸ்தான் ☑

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) நேபாளம்



✓ பாகிஸ்தானின் பிரபலமான மலைவாசஸ்தலமான முர்ரி, வரலாறு காணாத பனிப்பொழிவு காரணமாக குறைந்தது 21 பேர் உறைந்து இறந்ததை அடுத்து, 'பேரிடர் பாதித்த பகுதி'யாக அறிவிக்கப்பட்டது.

✓ 'முர்ரி' என்பது பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தின் இராவல்பிண்டி மாவட்டத்தில் உள்ள பிர்பஞ்சால் மலைத் தொடரில் அமைந்துள்ள ஒரு மலையக நகரமாகும்.

---

6. 'பிரவாசி பாரதிய திவாஸ்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 9 ☑

ஆ) ஜனவரி 10

இ) ஜனவரி 11

ஈ) ஜனவரி 12

✓ ஜன.9 அன்று, இந்திய அரசாங்கத்துடன் வெளிநாடுகளில் உள்ள இந்திய சமூகத்தின் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற் –காக 'பிரவாசி பாரதிய திவாஸ்' அனுசரிக்கப்பட்டது. 1915ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பியதை நினைவுகூரும் விதமாக இந்த நிகழ்வு ஜனவரி.9 அன்று கொண்டாடப்படுகிறது.

---

7. மெல்போர்ன் சம்மர் செட் ATP 250 நிகழ்வு பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?

அ) ரோஜர் பெடரர்

ஆ) ரபேல் நடால் ☑

இ) டேனியல் மெட்வெடேவ்



ஈ) நோவக் ஜோகோவிச்

✓ டென்னிஸ் வீரர் ரபேல் நடால் சமீபத்தில் மெல்போர்ன் சம்மர் செட் ஏடிபி 250 நிகழ்வு பட்டத்தை வென்றார். 20 முறை கிராண்ட்ஸ்லாம் வென்ற சாம்பியனான அமெரிக்க வீரர் மேக்சிம் கிரெஸ்ஸியை நடால் தோற்கடித்தார். இது ரபேல் நடாலின் 89ஆம் சுற்றுப்பயண நிலை பட்டமாகும்.

---

8. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு நிதியத்தின் (AIIB) புதிய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ) இரகுராம் இராஜன்



ஆ) உர்ஜித் படேல் ☑

இ) D சுப்பாராவ்

ஈ) Y V ரெட்டி

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) முன்னாள் ஆளுநரான உர்ஜித் படேல், ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியின் (AIIB) துணைத் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். பெய்ஜிங்கை தளமாகக் கொண்ட இப்பலதரப்பு வங்கியின் ஐந்து துணைத் தலைவர்களுள் ஒருவராக அவர் மூன்றாண்டு காலம் பணியாற்றுவார்.

---

9. 'மிஷன் பர்வாரிஷ்' உடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) அஸ்ஸாம் ☑



ஆ) உத்தர பிரதேசம்

இ) பஞ்சாப்

ஈ) மகாராஷ்டிரா

✓ அஸ்ஸாம் மாநிலத்தின் கச்சார் மாவட்டம் 'மிஷன் பர்வாரிஷ்' என்ற திட்டத்தை மேற்கொண்டது. அது ஆறு மாதங்கள் முதல் ஐந்து வயது வரை உள்ள எண்ணூறு குழந்தைகளில் 704 குழந்தைகளை கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து மீட்டுள்ளது.

✓ அரசாங்க நிறுவனங்கள், உள்ளூர் சிவில் அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் வணிகர்களை உள்ளடக்கிய இந்தத்திட்டம் அண்மையில் 'SKOCH' விருதை வென்றது.

---

10. இந்தியாவில் நீர் மெட்ரோ திட்டம் கொண்ட முதல் நகரம் எது?

அ) சென்னை



ஆ) கொல்கத்தா

இ) கொச்சி ☑

ஈ) மும்பை

✓ கேரளாவின் கொச்சி நகரம் மின்கலம்மூலம் இயங்கும் மின்சார படகுகளை அறிமுகப்படுத்திய பிறகு, நீர் மெட்ரோ திட்டத்தைக்கொண்ட இந்தியாவின் முதல் நகரமாக மாறியது. அடையாளங்காணப்பட்ட 15 வழித்தடங்களுடன் ஒருங்கிணைந்த நீர்வழிப் போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டு உள்ளது. கொச்சி மெட்ரோ இரயில் லிமிடெட் மூலம் இது இயக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நிகழாண்டில் 3 இடங்களில் புதிதாக அகழாய்வுகள்: 4 பகுதிகளில் தொடர் ஆய்வுகள்

தமிழகத்தில் நிகழாண்டில் மூன்று இடங்களில் புதிதாக அகழாய்வுப் பணிகள் நடைபெறும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும், நான்கு இடங்களில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆய்வுப்பணிகள் நிகழாண்டிலும் தொடர்ந்து நடக்கும் என அவர் அறிவிப்புச் செய்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு:

கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் எட்டாம் கட்ட அகழாய்வும், தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் மூன்றாம் கட்டமும், அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் இரண்டாம் கட்டமும், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் இரண்டாம் கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் நடைபெறும்.

முதற்கட்டப்பணிகள்: முதற்கட்டமாக விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி, தருமபுரி மாவட்டம் பெரும்பாலை ஆகிய இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடக்கும். திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் இருந்து ஆறு கிமீ தொலையில் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ள துலுக்கர்பட்டியில் நடைபெறவுள்ள முதல்கட்ட ஆய்வானது, இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதாக இருக்கும்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியிலிருந்து 15 கிமீ தொலை –வில் வைப்பாறு ஆற்றின் இடதுகரையில் அமைந்துள்ள வெம்பக்கோட்டையில் ஏற்கெனவே, நுண்கற்கருவிகள், பல்வேறு வகையான மணிகள், அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல்கள், காதணிகள், சுடுமண்ணால் ஆன வட்டுகள், இரும்புக் கசடுகள் ஆகியன கிடைத்துள்ளன.

இப்போது அங்கு மேற்கொள்ளப்பட உள்ள அகழாய்வின் நோக்கமானது, அதிக எண்ணிக்கையில் நுண்கற்கருவி –களை சேகரிப்பதாக அமையும்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இருந்து 25 கிமீ தொலையில் பாலாறு ஆற்றின் இடதுகரையில் பெரும்பாலை அமைந்துள்ளது. காவிரியின் கிளை ஆறான பாலாற்றின் ஆற்றங்கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதே அங்குள்ள முதல் கட்ட ஆய்வின் நோக்கமாக இருக்கும்.

கொற்கைத் துறைமுகம்: தன்பொருநை ஆற்றின் முகத் துவாரத்துக்கு எதிரில் கடற்கரையோர முன்கள புலஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதில் முதல் கட்டமாக சங்ககால கொற்கைத் துறைமுகத்தின் தொல்லியல் வளத்தைக் கண்டறிய கடலோரங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படும். இந்தியக் கடலாய்வு பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கடலாய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அகழாய்வுப் பணிகள் வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி செப்டம்பர் இறுதி வரை நடைபெறும்.

2. ராணுவத்துக்கு 'ஏடி4' பீரங்கி எதிர்ப்பு ஆயுதம்: ஒப்பந்தம் பெற்றது ஸ்வீடன் நிறுவனம்

இந்திய ராணுவத்துக்கு 'ஏடி4' பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களைத் தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தத்தை ஸ்வீடன் நிறுவனம் பெற்றுள்ளது.

ஸ்வீடனில் உள்ள சாப் நிறுவனம், இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறது. அந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

பலத்த போட்டிக்குப் பிறகு, இந்திய ராணுவத்துக்கு 'ஏடி4' பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களை வழங்கும் ஒப்பந்தத்தை சாப் நிறுவனம் பெற்றுள்ளது. அந்த ஆயுதங்கள் விமானப் படையிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆயுதத்தை வீரர் ஒருவரே தனது தோள்பட்டையில் வைத்து பயன்படுத்த முடியும்.

எதிரியின் இருப்பிடம், போர்க்கப்பல், ஹெலிகாப்டர்கள், பீரங்கி வண்டிகள் மற்றும் வீரர்களை இந்த ஆயுதத்தால் எளிதில் குறிவைத்துத் தாக்க முடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவீந்த் குமார் ஜுக்நாத் ஆகியோர் இணைந்து திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளனர்

இந்திய உதவியுடன் கட்டப்பட்ட சமூக வீட்டு வசதி அலகுகளை பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் திரு பிரவீந்த் குமார் ஜுக்நாத் ஆகியோர் 2022 ஜனவரி.20 அன்று காணொளிமூலம் திறந்து வைக்க உள்ளனர்.

இந்தியாவின் வளர்ச்சி ஆதரவுடன் மொரிஷியஸில் நிறுவப்படும் குடிமை சேவை கல்லூரி மற்றும் 8 MW சூரியசக்தி ஒளிமின்னழுத்த பண்ணை திட்டங்களையும் இரு தலைவர்களும் தொடங்கி வைக்க உள்ளனர்.

மெட்ரோ எக்ஸ்பிரஸ் திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு இந்தியா மொரிஷியசுக்கு வழங்கும் 190 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுக்கான ஒப்பந்தம், சிறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்டவையும் பகிர்ந்து கொள்ளப்படும்.

---

4. சர்வதேச செஸ் வீரருக்கு ₹8 லட்சம் ஊக்கத் தொகை

தமிழகத்தைச் சேர்ந்த சர்வதேச செஸ் வீரர் பரத் சுப்ரமணியத்துக்கு, ₹8 இலட்சம் ஊக்கத் தொகையை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

தலைமைச் செயலகத்தில் முதல்வரை நேரில் சந்தித்து அவரிடம் இருந்து ஊக்கத் தொகையை பெற்றார் பரத் சுப்ரமணியம்.

சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வரும் பரத் சுப்ரமணியம், 2019ஆம் ஆண்டு சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்றார்.

மேலும், நிகழாண்டில் தனது 14ஆவது வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று இந்தியாவுக்கும், தமிழகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். சர்வதேச செஸ் மாஸ்டர் பட்டம் வென்றதற்காக ₹3 இலட்சமும், கிராண்ட்மாஸ்டர் பட்டம் வென்றதற்காக ₹5 இலட்சமும் சேர்த்து மொத்தம் ₹8 இலட்சத்துக்கான ஊக்கத் தொகைக்குரிய காசோலையை அவருக்கு முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

---

1. இந்தியா அளித்த இரயில் பெட்டிகளைப் பயன்படுத்தி நகரங்களுக்கு இடையேயான இரயில் சேவையைத் தொடங்கியுள்ள நாடு எது?

அ) ஆப்கானிஸ்தான்



ஆ) இலங்கை ☑

இ) நேபாளம்

ஈ) பங்களாதேஷ்

✓ இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டீசலில் இயங்கும் இரயிலைப் பயன்படுத்தி, நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவையை இலங்கை தொடங்கியது.

✓ தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் காங்கேசன்துறையுடன் தலைநகரமான கொழும்புவை இணைக்கும் வகையில், நாடு முழுவதும் இந்த ரயில் சேவை இயங்கும்.

---

2. 2022'இல் ரிசர்வ் வங்கியால் உருவாக்கப்பட்ட புதிய துறையின் பெயர் என்ன?

அ) டிஜிட்டல் நாணயத் துறை

ஆ) ஃபின்–டெக் துறை ☑

இ) தரவு அறிவியல் துறை

ஈ) AI துறை

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) ஃபின்–டெக் துறையில் புதுமைகளை மேம்படுத்துவதற்காக, "ஃபின்–டெக் துறை" என்ற புதிய துறையை உருவாக்கியுள்ளது. அதனுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை இனம் காண்பதும் இதன் நோக்கமாகும்.

✓ கடந்த 2018ஆம் ஆண்டில், ரிசர்வ் வங்கி அதன் கட்டணத் தீர்வு அமைப்புத் துறையில் நிதி தொழில்நுட்பப் பிரிவை உருவாக்கியது. இப்புதிய ஃபின்டெக் துறையானது, இந்த விஷயத்தில் மேலும் ஆய்வு செய்வதற்கான கட்டமைப்பை வழங்கும் மற்றும் RBI'இன் கொள்கை தலையீடுகளுக்கு உதவும்.

---

3. "இந்தியாவில் உலகளாவிய அணுகல்தன்மைக்கான இணக்கமான வழிகாட்டுதல்கள் & தரநிலைகள் – 2021" என்றவொன்றை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ) சட்டம் & நீதி அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின்கீழ் உள்ள மத்திய பொதுப்பணித்துறையானது 'இந்தியாவில் உலகளாவிய அணுகல்தன்மைக்கான இணக்கமான வழிகாட்டுதல்கள் & தரநிலைகள் – 2021'ஐ வெளியிட்டது. இது 2016'இல் வெளியிடப்பட்ட தடையற்ற சூழலுக்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பாகும்.

✓ இந்திய தொழில்நுட்பக் கழகம் – ரூர்க்கி மற்றும் MoHUA இன் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் ஆகியவற்றின் குழுவால் இது வரைவு செய்யப்பட்டுள்ளது.

---

4. நீதிபதி ஹேமா ஆணையத்தை அமைத்த மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) குஜராத்

✓ கடந்த 2017ஆம் ஆண்டில், கேரள மாநில அரசு நீதிபதி K ஹேமா (ஓய்வு பெற்றவர்), முன்னாள் அதிகாரி K B வல்சலாகுமாரி மற்றும் மூத்த நடிகை சாரதா ஆகியோர் உறுப்பினர்களாக மூன்றுபேர்கொண்ட ஆணையத்தை அமைத்தது. மலையாளத் திரையுலகில் பெண்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களை ஆயும் நோக்கில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. நீதிபதி K ஹேமா ஆணையத்தின் அறிக்கையின் பரிந்துரைகளை ஆய்ந்து செயல்படுத்துவத –ற்கான திட்டத்தை வகுப்பதற்கு மூன்று பேர் கொண்ட குழுவை கேரள மாநில அரசு சமீபத்தில் அமைத்தது.

---

5. சமீபத்தில் அடையாளங்காணப்பட்ட *'Xylophaga nandani'* என்பது ____?

அ) மொல்லஸ்க் (நத்தை வகை) ☑



ஆ) மீன்

இ) ஆமை

ஈ) பாம்பு

✓ கேரளா மற்றும் பிரெஸிலைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு, 'சைலோபாகா நந்தனி' என்ற ஓர் அரிய, ஆழ்கடல் மொல்லஸ்கின் புதிய இனத்தை கண்டறிந்துள்ளனர்.

✓ சைலோபாகைடே குடும்பத்தைச் சேர்ந்த இம்மொல்லஸ்க் கீழை அரபிக்கடலிலில் அடையாளங்காணப்பட்டது. கொச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கடல்சார் அறிவியல் துறையின் பேராசிரியர் பிஜோய் நந்தனின் நினைவாக இந்தப் புதிய நத்தை இனத்திற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

6. 'மகா மேளா' என்பது எந்த மாநிலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு மதஞ்சார் விழாவாகும்?

அ) உத்தர பிரதேசம் ☑



ஆ) பீகார்

இ) குஜராத்

ஈ) மேற்கு வங்கம்

✓ பிரயாக்ராஜில் அமைந்துள்ள சங்கமத்தின் கரையில் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் புனிதநீராடியதை அடுத்து 47 நாள் நடக்கும் வருடாந்திர 'மகா மேளா' தொடங்கியது. சங்கமம் என்பது கங்கை, யமுனை மற்றும் புராணகால சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகளின் புனித சங்கமமாகும். பொதுவாக மகர சங்கராந்தி விழாவைக் குறிக்கும் வகையில் இந்த விழா நடத்தப்படுகிறது.

---

7. '*Hydrophis gracilis*' **என்ற ஓர் அரியவகை கடல் பாம்பு காணப்பட்ட மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) கேரளா ☑



ஆ) மகாராஷ்டிரா

இ) கோவா

ஈ) ஆந்திரப் பிரதேசம்

✓ நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பின்போது, பறவை நோக்கா –ளர்கள் குழுவால் ஓர் அரியவகை கடல்பாம்பு கண்டறியப் –பட்டது. கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் உள்ள பெருமாத்துறா கடற்கரையில், '*Hydrophis gracilis*' என்ற ஒரு சிறுதலைகொண்ட கடல் பாம்பு காணப்பட்டது.

✓ திருவனந்தபுர பறவை ஆர்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் மன்றத்தின் உறுப்பினர்கள், ஆண்டுதோறும் மேற்கொள்ளும் நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக இக்கணக்கெடுப்பை மேற்கொண்டனர்.

---

8. ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியின் முதன்மை நோக்கம் என்ன?

அ) ஞாயிறின் மேற்பரப்புபற்றி அறிவது

ஆ) பிரபஞ்சத்தின் தோற்றம்பற்றி அறிவது ☑

இ) சேய்மையில் அறியப்பட்ட விண்மீன் திரள்பற்றி ஆய

ஈ) கோள்கள் அமைப்பின் கட்டமைப்பை ஆய

✓ NASA ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியை 2021 டிசம்பர்.25 அன்று ஏவியது. இது NASA, ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) மற்றும் கனடிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுப் பணியாகும்.

✓ இத்தொலைநோக்கி சமீபத்தில் அதன் இறுதிக்கட்டத்தை நிறைவுசெய்தது. ஜேம்ஸ் வெப் விண்தொலைநோக்கியின் நோக்கம் இதுவரை கட்டப்பட்டதிலேயே மிகப்பெரிய விண்வெளித் தொலைநோக்கியாக விளங்குவதும் பிரபஞ் –சத்தின் தோற்றம்பற்றி அறிவியலாளர்கள் மேலும் கண்ட –றிய உதவுவதுமாகும்.

---

9. உலக வர்த்தக அமைப்பில் சீனாவின் தற்போதைய நிலை என்ன?

அ) உயர் நடுத்தர வருமானம்கொண்ட நாடு

ஆ) வளர்ந்த நாடு

இ) வளரும் நாடு ☑

ஈ) குறைந்த வளர்ச்சியடைந்த நாடு

✓ உலக வர்த்தக அமைப்பில் (WTO) இருபது ஆண்டுகளை சீனா நிறைவுசெய்துள்ளது. 'உலக வர்த்தக அமைப்பில்' அதன் தற்போதைய நிலை 'வளரும் நாடு' என உள்ளது.

✓ உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளின்கீழ் 'வளரும் நாடுகளுக்கு' ஒதுக்கப்பட்ட பலன்களைப் பெறும் உயர் நடுத்தர வருமானம் கொண்ட நாடாக சீனா இருப்பதாக பல நாடுகள் கவலை தெரிவிக்கின்றன.

---

10. அத்தியாவசியப்பொருட்களை தடையின்றி வழங்குவ –தற்காக சிறப்பு குறைதீர்ப்புப் பிரிவை அறிவித்த மத்திய அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) உணவு பதப்படுத்தும் தொழிலக அமைச்சகம் ☑

இ) ஜவுளி அமைச்சகம்

ஈ) சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம்

✓ மத்திய உணவுபதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சகம், அனைத்து குடிமக்களுக்கும் சீராக அத்தியாவசியப்பொரு –ட்கள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற் –காக, உணவு&உணவு தொடர்பான தொழில்துறைக்காக சிறப்பு குறைதீர்ப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது.

✓ நாடடங்கு விதிக்கப்பட்ட முதல் அலையின்போது இந்த அமைச்சகம் இதேபோன்ற குறைதீர்ப்புப்பிரிவை அமைத்தது. தொழிற்துறையினர் மற்றும் மக்கள் தங்கள் குறைகள் & ஐயங்களை covidgrievance–mofpi@gov.in என்ற மின்னஞ்சல் (e–mail) முகவரிக்கு அனுப்பலாம் என உணவு பதப்படுத்துதல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவுக்கு எதிரான செயல்பாடு: 35 யூடியூப் சேனல்களை முடக்கிய மத்திய அரசு

கடந்த மாதம் 20 யூடியூப் சேனல்களை மத்திய அரசு முடக்கிய நிலையில், இன்று மீண்டும் 35 யூடியூப் சேனல்களை முடக்கியுள்ளது.

டிசம்பர் 21 அன்று மத்திய அரசு மொத்தம் 20 யூடியூப் சேனல்கள் மற்றும் இரண்டு இணையதளங்களை முடக்கியது. இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்பட்டதாக இந்தத் தளங்கள் முடக்கப்பட்டன. இந்தத் தளங்கள் பாகிஸ்தானில் இருந்து ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டுக்கு வருவதாகவும், நாட்டின் முக்கிய விவகாரங்களான காஷ்மீர், விவசாயிகள் போராட்டம் மற்றும் ராமர் கோவில் போன்றது தொடர்பாக தவறான தகவல்களை இவை பரப்பி வருவதாகவும் புகார் எழ, அந்தக் குற்றச்சாட்டின் பேரில் மத்திய அரசு அனைத்தையும் முடக்கி நடவடிக்கை எடுத்தது.

இதைத்தொடர்ந்து இன்று மீண்டும் 35 யூடியூப் சேனல்கள் முடக்கப்பட்டுள்ளது என மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை தெரிவித்துள்ளது.

இந்த 35 சேனல்களும் பாகிஸ்தானிலிருந்து செயல்பட்டு வந்தவை. இவை இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்பட்டதாக உளவுத்துறை கொடுத்த தகவலின் அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளன. 35 யூடியூப் சேனல்கள் உடன் இரண்டு டுவிட்டர் கணக்குகள், 2 இன்ஸ்டாகிராம் கணக்குகள், 2 இணையதளங்கள் மற்றும் ஒரு பேஸ்புக் கணக்கு முடக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் இந்த சேனல்கள் 1 கோடியே 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை –யும், 130 கோடிக்கும் மேற்பட்ட பார்வையாளர்களையும் கொண்டவையாகும். இவற்றில் சில யூடியூப் சேனல்கள்

பாகிஸ்தான் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்கள் & தொகுப்பாளர்களால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் டிஜிட்டல் மீடியா விதிமுறைகள்) சட்டம் 2021, விதி 16-ன் கீழ் இந்த முடக்கத்துக்கான 5 உத்தரவுகளை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தனித்தனியாக பிறப்பித்துள்ளது.

---

2. கோவை முகமது ரபிக்கு கோட்டை அமீர் பதக்கம்

குடியரசு தின விழாவில், கோவையைச் சேர்ந்த முகமது ரபி என்பவருக்கு, 'கோட்டை அமீர் மதநல்லிணக்க பதக்கம்' வழங்கப்பட உள்ளது.

மதநல்லிணக்கத்திற்காக பாடுபட்ட கோட்டை அமீர் பெயரில், 'கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கம்' அரசால் ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்தில் மத நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு, சிறப்பாக சேவை செய்து வரும் நபருக்கு, ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் இந்தப் பதக்கம் வழங்கப்படுகிறது.

முகமது ரபிக்கு வழங்கப்படும் பதக்கம் வெள்ளியால் செய்யப்பட்டு, தங்கமுலாம் பூசப்பட்டிருக்கும். இதுதவிர, 25 ஆயிரம் ரூபாய்க்கான வரைவு கேட்புக் காசோலை, சான்று போன்றவை முதல்வரால் வழங்கப்படவுள்ளன.

---

3. மருத்துவ அறிவியல் வெற்றி!

மருத்துவ அறிவியல் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்துவதற்கு முன்னோட்டம் நடத்தியிருக்கிறது. ஒட்டுமொத்த மனித இனத்துக்குமே வரப்பிரசாதமாக அமைய இருக்கும் அந்த சாதனை, அமெரிக்காவில் நிகழ்ந்திருக்கிறது.

நியூயார்க்கிலுள்ள மருத்துவமனை ஒன்றில் இதயம் செயலிழந்து மரணத்தின் விளிம்பில் இருந்த 57 வயது நோயாளி ஒருவருக்கு பன்றியின் இதயம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டிருக்கிறது. செயலிழக்கும் மனித உறுப்புகளுக்கு பதிலாக, விலங்கினங்களின் உறுப்புகளை மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்துவதற்கு 'செனோடிரான்ஸ்பிளாண்ட்' என்று பெயர். அமெரிக்காவின் பால்டிமோரைச் சேர்ந்த டேவிட் பென்னட், மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயம் அறுவை சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பொருத்தப்பட்ட முதல் மனிதராக வரலாற்றில் அறியப்படுவார்.

17-ஆவது நூற்றாண்டு முதலே விலங்கினங்களின் ரத்தத்தை மனிதர்களுக்கு செலுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜீன் பேப்டைஸ் டெனிஸ் என்கிற பிரெஞ்சு மருத்துவர், செம்மறி ஆட்டின் ரத்தத்தை சிறுவன் ஒருவனுக்கு செலுத்தியதுதான் பதிவாகி இருக்கும் முதலாவது ரத்த மாற்று முயற்சி. 19-ஆவது நூற்றாண்டு முதலே விலங்கினங்களின் தோல் பகுதிகளை மனிதர்களுக்குப் பொருத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1838-இல் முதன்முறையாக பன்றியின் விழிவெண்படலம் (கார்னியா) ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது.

20ஆம் நூற்றாண்டில் பல்வேறு 'செனோடிரான்ஸ்பிளாண்ட்' முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1960-இல் நியூ ஆர்லியன்ஸில் ரீம்ட்ஸ்மா என்கிற அறுவை சிகிச்சை மருத்துவர், மனித குரங்குகளின் சிறுநீரகத்தை அறுவை மாற்று சிகிச்சை மூலம் 13 பேருக்கு பொருத்தி சோதனை நடத்தினார். அதில் ஒரே ஒருவர் மட்டும் அந்த சிறுநீரகத்தை ஏற்றுக்கொண்டு மூன்று மாதங்கள் வாழ்ந்தார். 1964-இல் மனிதக் குரங்கின் இதயம் ஒருவருக்குப் பொருத்தப்பட்டு அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

நியூயார்க்கில் நடந்திருக்கும் இதய மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னோடி சோதனை இந்தியாவில்தான் நடந்தது. 1996-இல் பரூவா என்கிற அறுவை சிகிச்சை மருத்துவர், 32 வயது பூனோ சைக்யா என்பவருக்கு பன்றியின் நுரையீரலையும், இதயத்தையும் மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்த முற்பட்டார். அந்த நோயாளி இறந்தார் என்பது மட்டுமல்ல, முன் அனுமதி இல்லாமல் சோதனை நடத்தியதற்காக மருத்துவர் பரூவா கைது செய்யப்பட்டு, தனது மருத்துவர் பட்டத்தையும் இழக்க நேர்ந்தது. உலகில் அதுதான் பன்றியின் இதயத்தை மனிதர்களுக்குப் பொருத்தும் முதல் முயற்சி.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நியூயார்க் பல்கலைக்கழகத்தின் லங்கோன் மருத்துவ மையத்தில், முற்றிலுமாக மூளை செயலிழந்துவிட்ட ஒருவருக்கு மரபணு மாற்றப்பட்ட பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மனித உடலிலுள்ள எதிர்ப்பு சக்தி அந்நிய பொருள்கள் எதையும் ஏற்றுக்கொள்ளாது என்பதால், பன்றிகள் மரபணு மாற்றப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. அதன் மூலம் பொருத்தப்படும் உறுப்புகள் நிராகரிக்கப்படாமல் வேலை செய்யும் என்பது எதிர்பார்ப்பு.

ஏனைய விலங்கினங்களைவிட, பன்றியின் உறுப்புகள் மனித உறுப்புகளுடன் பொருந்துவதாக கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக அறியப்படுகிறது. இதற்காகவே ரெவிவிகார் என்கிற அமெரிக்க நிறுவனம் ஒரு பண்ணையை ஏற்படுத்தி அதில் மரபணு மாற்றப்பட்ட பன்றிகளை வளர்க்கிறது. மருத்துவ பரிசோதனைக்காக இந்தப் பன்றிகள் வழங்கப்படுகின்றன. இதேபோல வேறு சில பண்ணைகளும் அமெரிக்காவில் உருவாகியிருக்கின்றன.

பன்றியின் உறுப்புகள் நிராகரிக்கப்படாமல் இருப்பதற்காக அதன் 10 மரபணுக்கள் மாற்றப்படுகின்றன. அவற்றில் நான்கு செயலிழக்கச் செய்யப்படுகிறது. மனிதர்களின் ஆறு மரபணுக்கள் பன்றிக்குச் செலுத்தப்பட்டு அதன் மூலம் நிராகரிப்புக்கான வாய்ப்பைக் குறைக்கிறார்கள். இவையெல்லாம் தொடர்ந்து நடைபெறும் சோதனை முயற்சிகள்.

பன்றி உள்ளிட்ட விலங்கினங்களின் உறுப்புகளை மனிதர்களுக்குப் பொருத்தும் முயற்சியில் சில ஆபத்துகளும் இருக்கின்றன. எத்தனை காலத்திற்கு அந்த உறுப்புகள் மனித உடலில் செயல்படும் என்பது தெரியாது. அதனால், பக்கவிளைவுகள் ஏற்படுமா என்பதும் தெரியாது. அதன் மூலம் இதுவரை மனிதஇனம் அறியாத புதிய

நோய்கள் அந்த விலங்கினங்கள் மூலம் மனிதர்களுக்கு பரவும் அபாயமும் நிறையவே உண்டு.

சார்ஸ், கொவைட் 19, பறவைக் காய்ச்சல் போன்ற விலங்கினங்களிலிருந்தும், பறவைகளிலிருந்தும் நோய்த்தொற்றுப் பரவல் காணப்படும் நிலையில், இதுபோன்ற முயற்சிகள் தேவைதானா என்கிற கேள்வியும் எழுப்பப்படுகிறது. மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக விலங்கினங்களை பலியிடலாமா என்கிற கேள்விக்கு, பெரும்பாலான மக்கள் விலங்குகளைக் கொன்று மாமிசமாக உட்கொள்ளும்போது மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக விலங்குகளின் உறுப்புகளை பொருத்துவதில் தவறில்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.

இந்தியாவில் மட்டுமே ஆண்டொன்றுக்கு சுமார் 30,000 கல்லீரல் தேவைப்படும் நிலையில், 1,500 மாற்று அறுவை சிகிச்சைகள்தான் நடத்த முடிகிறது. 50,000-க்கும் அதிகமானோருக்கு இதய மாற்று சிகிச்சை தேவைப்படும் நிலையில், அதிகபட்சம் ஆண்டொன்றுக்கு 15 இதய மாற்று சிகிச்சைகள்தான் நடத்த முடிகின்றன. உலக அளவில் பல லட்சம் சிறுநீரக மாற்று சிகிச்சை தேவைப்படுகிறது.

அறிவியல் சோதனைகள் தொடர்வது மனிதஇனத்தின் நன்மைக்காக என்றால், அதை வரவேற்பதுதான் ஆக்கபூர்வ அணுகுமுறை.

---

4. பெண்களின் கல்வியும் திருமண வயதும்!

நமது நாட்டில் பெண்களின் திருமண வயதை நிர்ணயிக்கும் சட்டங்கள் ஆங்கிலேயர் காலத்திலிருந்தே சர்சைக்குரியனவாகவே இருந்து வந்திருக்கின்றன. சிறு குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்படும் கொடுமையை தடுக்கும் சட்டம் ஒன்றை கொண்டு வர 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஆங்கிலேய அரசு முயன்றது. அன்றைய காலகட்டத்தில் இந்தச் சட்டத்திற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது.

1891-இல் அரசு முன்வைத்த இந்தச் சட்டத்தின் முன்வடிவிற்கு பால கங்காதர திலகர் தன்னுடைய 'கேசரி' இதழின் வாயிலாக கடுமையாக கண்டனம் தெரிவித்தார். இந்து மதத்தின் அடிப்படைக் கூறுகளில் தலையிட, ஆங்கிலேயர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று முழங்கினார். திலகரின் இந்த கூற்றுக்கு அன்றைய இந்துக்களிடையே பேராதரவு கிடைத்தது. அதனால், இச்சட்ட முன்வடிவை அரசு திரும்பப் பெற்றது.

தமிழ்நாட்டில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நீதிபதி மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பாரதியார் போன்றவர்கள் பெண் விடுதலை குறித்து எழுதி விழிப்புணர்வு ஊட்டினார்கள். இந்திய அளவில் பெண் விடுதலை இயக்கங்கள் எழுச்சி பெற்றன. சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்யும் கொடுமையைத் தடை செய்ய வேண்டும் என்று டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ஹர்பிலாஸ் சார்தா போன்றவர்கள் குரலெழுப்பினர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், 1929-இல் மீண்டும் ஒரு முயற்சி எடுக்கப்பட்டு இந்த சட்ட முன்வடிவை, ராஜஸ்தான் அஜ்மீர் பகுதியைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதி ராய் சாஹிப் ஹர்பிலாஸ் சார்தா, முன்மொழிய, 1929, செப்டம்பர் 28-ஆம் நாள் குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி திருமணம் செய்வதற்கு பெண்ணுக்கு பதினான்கு வயதும், ஆணுக்கு பதினெட்டு வயதும் நிறைவடைந்திருக்க வேண்டும். இச்சட்ட முன்வடிவை ராய் சாஹிப் ஹர்பிலாஸ் சார்தா என்பவர் முன் மொழிந்ததால் இச்சட்டம் 'சார்தா சட்டம்' என்று அறியப்பட்டு, காலப்போக்கில் 'சாரதா சட்டம்' என்றாகி விட்டது.

சுதந்திரமடைந்த பின்னர், 1949-இல் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் பெண்ணின் திருமண வயது 15-ஆக உயர்த்தப்பட்டது. 1978-ஆம் ஆண்டில், அதாவது நாடு சுதந்திரமடைந்து சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சட்டம் மீண்டும் ஒரு முறை திருத்தம் செய்யப்பட்டு, பெண்ணின் குறைந்த பட்ச திருமண வயது 18 எனவும், ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 21 எனவும் மாற்றப்பட்டது.

இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தும், குழந்தைத் திருமணம் என்னும் கொடுமை நாட்டில் தொடர்ந்து கொண்டு இருந்ததால், 2006-ஆம் ஆண்டில் குழந்தைத் திருமண சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு மேலும் கடுமையான தண்டனைகளுடன் இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட குழந்தைத் திருமண தடுப்பு சட்டம் 2006-இன்படி, குறைந்தபட்ச வயதுக்கு கீழ் உள்ள ஆணுக்கோ பெண்ணுக்கோ திருமணம் செய்து வைத்தால் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

இந்த திருத்தியமைக்கப்பட்ட 2006 சட்டத்தின் படி, 18 வயது பூர்த்தியடையாத பெண் குழந்தையை திருமணம் செய்து கொண்டவரும், குழந்தை திருமணத்தை நடத்தியவரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவர். மேலும் குழந்தைத் திருமணம் உட்பட அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்ய வேண்டும் என 2006-இல் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அண்மையில், பெண்களின் சட்டபூர்வ திருமண வயதை 18-லிருந்து 21-ஆக உயர்த்த வழிகோலும் மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்ததை அடுத்து இந்த மசோதாவை ஆதரித்தும் எதிர்த்தும் சர்ச்சைகள் உருவாயின. முன்னதாக, சமதா கட்சியின் முன்னாள் தலைவர் ஜெயா ஜேட்லி தலைமையில் அமைக்கப்பட்ட குழு, பாலின சமத்துவம், பாலின பேதமின்றி அதிகாரமளித்தல் போன்ற கொள்கைகளை மனதில் கொண்டு ஆண்களின் திருமண வயதிற்கு நிகராக பெண்களின் திருமண வயதும் 21-ஆக உயர்த்த வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது.

அக்குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட மோடி அரசு, சிறார் திருமண சட்டம் 2006-இல் திருத்தங்கள் கொண்டு வருவதற்கான மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தது. ஆனால் இந்த மசோதா மக்களவையில் கடும் எதிர்ப்புக்குள்ளானதால், நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

'பெண்களின் திருமண வயதை 21-ஆக உயர்த்துவது, பெண்கள் திருமணம் என்னும் பந்தத்திற்குள் நுழைவதற்கு முன் கல்வி பெறுவதற்கும், அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரித்து வாழ்க்கையில் முன்னேற அவர்களுக்கு போதிய அவகாசம் கிடைப்பதற்கும் வழிவகுக்கும்' என்று பிரதமர் மோடி கூறினார்.

திருமண வயதை 18-லிருந்து 21-ஆக உயர்த்துவதன் மூலம் பெண்கள் பொருளாதார சுதந்திரமும் அதிகாரமும் பெற்று, தங்கள் விருப்பு வெறுப்புகளை வெளியிட வாய்ப்பு பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய குடும்ப நல கணக்கெடுப்பின் ஐந்தாவது சுற்றின் (2019-20) புள்ளிவிவரம், 15-லிருந்து 19-வயது வரை உள்ள கிராமப்புற மகளிரில் 7.9 சதவீத பெண்கள் ஏற்கெனவே தாயாகி விட்டனர் என்று குறிப்பிடுகிறது. இது மகளிரின் உடல்நலம் குறித்து கவலை கொள்ள வைக்கிறது.

பெண்களின் உடல்நலத்தில் அக்கறை கொண்ட பலரும், பெண்கள் பதின் பருவத்தில் கர்ப்பம் அடைவதை தடுப்பதன் மூலம், கருச்சிதைவு, குழந்தைகள் இறந்து பிறப்பது போன்ற கொடுமைகளிலிருந்து அவர்களை காப்பாற்ற முடியும் என்று கூறுகிறார்கள்.

இன்றைக்கு நாட்டில் 50 % பெண்கள் ரத்த சோகை போன்ற ஊட்டச்சத்து குறைபாட்டுடன் கர்ப்பத்தை எதிர்கொள்வதால் நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதம் போன்றவை அதிகமாக உள்ளன என்றும், திருமண வயதை உயர்த்துவதன் மூலம் அவர்களின் உடல்நலம் பாதுகாக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

நாட்டில் குழந்தைத் திருமணங்கள் குறைந்து கொண்டு வருகின்றன என்ற செய்தி ஆறுதலளித்தாலும், ஐக்கிய நாட்டு சபையின் யுனிசெஃப் அளிக்கும் தகவலின்படி உலகின் 15 வயதிற்குக் குறைவான மணமகள்களில் மூன்றில் ஒருவர் நம் நாட்டைச் சேர்ந்தவர் என்பது நம்மைக் கவலைகொள்ள வைக்கிறது. தேசிய குடும்ப நல கணக்கெடுப்பு ஆய்வின்படி, 20 முதல் 24 வயது வரையிலான மகளிரில், 23 சதவீதம் பேர் 18 வயதை அடைவதற்குள் திருமணம் செய்து கொண்டுவிட்டனர். குழந்தைத் திருமண பிரச்னை நகரங்களை விட கிராமப்புறங்களில் அதிகமாக இருப்பதாகக் கூறுகிறது ஓர் ஆய்வு முடிவு.

ஆனால், பெண்களின் திருமண வயதை உயர்த்துவதை எதிர்த்து வாதிடுபவர்களோ, குறைந்தபட்ச திருமண வயதை சட்டபூர்வமாக உயர்த்துவதனால் ஒன்றும் சாதித்து விடமுடியாது என்றும், இப்படிப்பட்ட சட்டங்களை அமல்படுத்துவதில் நடைமுறை பிரச்னைகள் உள்ளன என்றும் சுட்டிக் காட்டுகின்றனர்.

உதாரணமாக, தேசிய குற்றவியல் ஆணையம் அளித்திருக்கும் தகவலின்படி, 2020-ஆம் ஆண்டில் 758 குழந்தைத் திருமணங்கள் மட்டுமே குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகி உள்ளன. இத்தகவல், சட்டத்தின் கைகளில் பிடிபடாமல் தப்பிக்கும் திருமணங்கள் பல என்ற கசப்பான உண்மையை நமக்குப் புலப்படுத்துகிறது.

பெற்றோர், தங்களின் ஆண் குழந்தையைப்போல பெண் குழந்தையையும் கல்வி கற்க அனுமதிக்க வேண்டும். நமது நாட்டில் ஒரு பெண்ணிற்கு எந்த வயதில் திருமணம் செய்ய வேண்டும் என்பதை அப்பெண்ணின் குடும்ப பொருளாதார நிலை, அவருடைய இனம், மதம் சார்ந்த பழக்க வழக்கங்கள், குடும்பத்தினரின் கல்வி நிலை, சமூக சூழ்நிலை ஆகியவையே தீர்மானிக்கின்றன.

இந்த விஷயத்தில் வரதட்சணை எனும் சமூக அவலமும் பெரும்பங்கு வகிக்கிறது. இளம் வயதில் திருமணம் செய்து விட்டால், குறைந்த வரதட்சணையில் திருமணத்தை முடித்து விடலாம் பெற்றோர் நினைக்கின்றனர்.

வயது வந்த பெண்ணை திருமணம் செய்து கொடுக்காமல் வீட்டில் வைத்திருப்பது பாதுகாப்பு இல்லை என்று பெற்றோர் நினைப்பதில் வியப்பொன்றுமில்லை. வயதிற்கு வந்த பெண்ணை, அதுவும் சற்றே அழகான பெண்ணை வீட்டில் வைத்திருந்தால் கிராமப்புறங்களில் அவர்கள் இனத்தைச் சார்ந்த ஆண்கள் சிலர் அப்பெண்ணை தனக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு கட்டாயப்படுத்துவது நாம் அடிக்கடி கேள்விப்படும் செய்தி.

இவை எல்லாவற்றிற்கும் மேல், பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்றால் அதற்கான வசதி கிராமப்புறத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணிற்கும் கிடைக்க வழிவகுக்க வேண்டும். இன்னமும் பல கிராமங்களில் உயர்கல்வி பெற வேண்டுமென்றால் அருகிலுள்ள நகரத்திற்குத்தான் செல்ல வேண்டியுள்ளது.

குழந்தைத் திருமணத்தை தடை செய்யும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு முன், பெண்கள் உயர்கல்வி பெறவும், அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் தேவையான வசதிகளை அரசு செய்து தர வேண்டும்.

---

5. இந்தியா கேட் பகுதியில் நேதாஜிக்கு சிலை

தில்லியில் உள்ள 'இந்தியா கேட்' பகுதியில் சுதந்திரப் போராட்ட வீரரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் முழுஉருவச் சிலை நிறுவப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

குடியரசு தின விழா அணிவகுப்புக்காக நேதாஜியின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் மேற்கு வங்க அரசு வடிவமைத்த அலங்கார ஊர்தியை மத்திய அரசு நிராகரித்தது சர்ச்சைக்குள்ளான நிலையில், பிரதமர் மோடி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் ட்விட்டரில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125-ஆவது பிறந்த தின நூற்றாண்டை நாடு கொண்டாடி வரும் வேளையில், கிரானைட்டால் செய்யப்பட்ட அவரது பிரம்மாண்ட சிலை இந்தியா கேட் பகுதியில் நிறுவப்பட உள்ள செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நாடு அவருக்குக் கடன்பட்டுள்ளதை வெளிப்படுத்தும் சிறந்த அடையாளமாக அச்சிலை அமையும்.

கிரானைட் சிலை செய்யப்படும் வரை, சிலை அமையவுள்ள இடத்தில் 'ஹாலோகிராம்' தொழில்நுட்பத்தில் அவரது சிலை காட்சிப்படுத்தப்படும். ஹாலோகிராம் சிலையை நேதாஜியின் பிறந்த தினமான ஜனவரி 23-ஆம் தேதி திறந்துவைக்க உள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நேதாஜியின் சிலை 28 அடி உயரத்திலும் 6 அடி அகலத்திலும் அமைக்கப்படவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

6. பாக். உச்சநீதிமன்ற முதல் பெண் நீதிபதி

பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் (55) நியமிக்கப்பட்டுள்ளார். முஸ்லிம் நாடான பாகிஸ்தானின் நீதித் துறை வரலாற்றில் உச்சநீதிமன்றத்துக்கு பெண் நீதிபதி நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கையில், 'பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு அரசமைப்புச் சட்டத்தின் 177-ஆவது பிரிவின்படி, லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக்கை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க அதிபர் ஆரிஃப் ஆல்வி ஒப்புதல் அளித்துள்ளார். அவர் பதவியேற்கும் நாளில் இருந்து அவருடைய நியமனம் அமலுக்கு வரும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆயிஷா மாலிக்கை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்குமாறு பாகிஸ்தான் நீதித் துறை ஆணையம் கடந்த மாதம் பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரையை உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களுக்கான நாடாளுமன்றக் குழு இரு தினங்களுக்கு முன் பரிசீலித்தது. லாகூர் உயர்நீதிமன்றத்தில் நான்காவது இடத்தில் இருப்பவர் ஆயிஷா மாலிக். இருப்பினும், பணி மூப்பைக் கருத்தில் கொள்ளாமல் ஆயிஷா மாலிக்கைத் தேர்வு செய்து, அதிபரின் ஒப்புதலுக்கு அந்தக் குழு அனுப்பி வைத்தது. அதைத் தொடர்ந்து, ஆயிஷா மாலிக்கை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க அதிபர் ஒப்புதல் அளித்துள்ளார்.

---

7. ஆஸ்கர் தகுதிப் பட்டியலில் இடம்பிடித்த 'ஜெய் பீம்'

நடிகர் சூர்யா நடிப்பில் அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில், 'ஜெய் பீம்' கடந்த நவம்பர் மாதம் வெளியாகி பல தரப்புகளிடமிருந்து பாராட்டுகளைப் பெற்று வருகிறது. கூகுளில் அதிகம் தேடப்பட்ட இந்தியப் படமாகாவும் அறிவிக்கப்பட்ட 'ஜெய் பீம்' ஐஎம்டிபி இணையதளத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற படங்களில் முதலிடத்தில் உள்ளது. ஆஸ்கர் யூடியூப் தளத்தில் இடம்பிடித்த முதல் தமிழ் படமாகவும் தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

பல்வேறு சர்வதேச விழாக்களில் திரையிடப்பட்டுக் கொண்டு வரும் நிலையில் 'ஜெய்பீம்' திரைப்படம் ஆஸ்கர் விருது படங்களுக்கான தகுதிப்பட்டியலில் இடம்பிடித்துள்ளது. 276 படங்கள் போட்டியிட்டுள்ள இதன் இறுதிப்பட்டியல் வரும் பிப்ரவரி 8 ஆம் தேதி அறிவிக்கப்படும். ஏற்கனவே, சூர்யாவின் 'சூரரைப் போற்று' திரைப்படமும் ஆஸ்கர் விருது பரிந்துரைக்கான திரையிடலுக்கு தேர்வு செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

8. தமிழகம் முழுவதும் கூட்டுக் குடிநீர், பாதாள சாக்கடை உட்பட ரூ.662 கோடி திட்டங்களை முதல்வர் தொடங்கி வைத்தார்: ரூ.8.93 கோடியில் 5 புதிய பணிகளுக்கு அடிக்கல்

நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.662.22 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ள 17 திட்டப் பணிகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் திருப்பூர் மாவட்டம் பல்லடம், திருப்பூர் ஒன்றியங்களில் 155 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.99.24 கோடி, கரூர் மாவட்டம் தாந்தோணி ஒன்றியத்தில் 274 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.81.41 கோடி, கோவை மாவட்டம் பொள்ளாச்சி (தெற்கு), பொள்ளாட்சி (வடக்கு), கிணத்துக்கிடவு ஒன்றியங்களில் 212 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.69.31 கோடி, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஒன்றியத்தில் ராயக்கோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.8.46 கோடியில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள், நாமக்கல் நகராட்சிக்கு ரூ.185.24 கோடியில் குடிநீர் மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டப் பணிகள் முடிவுற்றுள்ன.

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் ரூ.30.11 கோடி, எஸ்.கண்ணனூர் பேரூராட்சியில் ரூ.19.45 கோடி, ஈரோடு மாவட்டம் பெருந்துறை பேரூராட்சியில் ரூ.51.50 கோடி, தஞ்சை மாவட்டம்வல்லம் பேரூராட்சியில் ரூ.34.51 கோடியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் தூத்துக்குடி மாநகராட்சி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில்ரூ.35.84 கோடியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ்ரூ.11.50 கோடியில் மேம்படுத்தப்பட்ட சிவகுளம், முள்ளிக்குளம், மீளவிட்டான் குளம், மதுரை மாநகராட்சி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு நிதியின் கீழ் மதுரை மாநகராட்சி, குருவிக்காரன் சாலையில் ரூ.23.17 கோடியில் தரைப்பாலம் உயர்மட்ட பாலமாக மாற்றியமைப்பு ஆகிய திட்டங்களும் முடிவுற்றுள்ன.

திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கரூர் சாலை, பெஸ்கி காலேஜ் எதிர்புறம் ரூ.70 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுரம் செயலாக்க மையக் கட்டிடம், கோவை மாநகராட்சி கரும்புக் கடைதெற்கு மண்டலத்தில் ரூ.75 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற சுகாதார மையக் கட்டிடம், ரூ.77 லட்சத்தில் காளப்பட்டி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடம், ரூ.50 லட்சத்தில் கே.கே.புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள உணவுக்கூடம் என மொத்தம் ரூ.662.22 கோடி மதிப்பிலான 17 முடிவுற்ற திட்டப்

பணிகளை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் நேற்று காணொலி மூலம் திறந்து வைத்தார்.

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திண்டுக்கல் மாநகராட்சி திருவள்ளுவர் சாலையில் ரூ.2.50 கோடியில் அமைக்கப்பட உள்ள நூலகம், அறிவுசார் மையம், கமலா நேரு மருத்துவமனை சாலையில் ரூ.1.40 கோடியில் நகர சமுதாய சுகாதார மையமாக மேம்படுத்தும் பணி, ஓசூர் மாநகராட்சி நேரு நகரில் ரூ.1.03 கோடியில் நகர்ப்புற வீடற்றவர்களுக்கான கட்டிடம், காமராஜ் காலனியில் ரூ.2.50 கோடியில் நூலகம், அறிவுசார் மையம், மத்திகிரி பகுதியில் ரூ.1.50 கோடியில் அமைக்கப்பட உள்ள நவீனஎரிவாயு தகனமேடை என ரூ.8.93 கோடியிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

---

9. மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை இனி 'செம்மொழிச் சாலை' – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை இனி 'செம்மொழிச் சாலை' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்று செம்மொழி விருது வழங்கும் விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இன்று நடந்த 2010 முதல் 2019–ஆம் ஆண்டுகள் வரையிலான செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் செம்மொழித் தமிழ் விருதுகள் வழங்கும் விழாவில், முதல்வர் ஆற்றிய உரை: "தமிழுக்கும் அமுதென்றுபேர்– அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்" என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நெஞ்சில் ஏந்தி, இந்த விழாவின் மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன். தமிழுக்குச் செம்மொழித் தகுதி ஏற்பட வேண்டும் என்பது தமிழறிஞர்களின் நூற்றாண்டுக் கனவு. அந்தக் கனவை நிறைவேற்றியவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி. அத்தகைய தலைவரின் பெயரால் அமைந்திருக்கக்கூடிய செம்மொழித் தமிழாய்வு விருதுகள், அதை விழாவாக, அதிலும் குறிப்பாக, அண்ணா பெயரில் அமைந்திருக்கக்கூடிய இந்த நூலகத்தின் அரங்கத்தில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அண்ணனாகவும் தம்பியாகவும் இருந்து தமிழுக்குத் தொண்டாற்றிய இரண்டு பெருமக்களின் நினைவை ஏந்தி இந்த விழா மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன். தமிழ் தொன்மையான மொழி என்பதைத் தமிழர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. உலகம் முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்கள், இனவியல் அறிஞர்கள் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் உண்மை இது.

தமிழ் குறிப்பிட்ட நாட்டு மக்கள் பேசும் மொழியாக மட்டுமல்ல, ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது நம்முடைய தமிழ் மொழியானது. நிலத்துக்கு, மண்ணுக்கு, இயற்கைக்கு, மக்களுக்கு, பண்பாட்டுக்கு இலக்கணத்தை வகுத்திருக்கக்கூடிய மொழி. தமிழைப் பேசும் போது இனிமையாக இருக்கிறது. தமிழைக் கேட்கும்போது இனிமையாக இருக்கிறது. ஏன், 'தமிழ்' என்று சொல்லும்போதே இனிமையாக இருக்கிறது. தமிழ் என்றாலே இனிமை என்றுதான் பொருள். 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்' என்று பிங்கலநிகண்டும் கூறுகிறது.தமிழ், உலகின் மூத்த மொழிகளில் ஒன்று. தமிழ், எந்த மொழியில் இருந்தும் கடன் வாங்கி உருவான கிளை மொழி அல்ல. தமிழில் இருந்துதான் ஏராளமான மொழிகள் உருவாகியுள்ளன. இப்படிப் பல மொழிகளை உருவாக்கும் திறன்கொண்ட மொழிதான், நமது தாய்மொழியான தமிழ். தமிழ், தமிழரசி, தமிழரசன் என்று மொழியின் பெயரையே பெயராக வைத்துக்கொள்ளும் அளவுக்கு பற்று நம் இனத்தில் இருக்கிறது. மொழிக்காக உயிரைத் தந்த தியாகிகளைப் பெற்ற மொழியும் நம் தமிழ்மொழி ஆகும்.

இலக்கியச் செழுமையும் இலக்கண அறிவும் கொண்ட மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் அறிஞர்கள் இடையே பல ஆண்டுகளுக்கு முன்பே எழுந்தது. அந்தக் கனவை நிறைவேற்றி வைத்தவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி. 2004–ஆம் ஆண்டு அக்டோபர் 14–ஆம் நாள், மத்திய அரசால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், அன்றைய மத்திய அரசால் 2007–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18–ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்கத்தில் இந்த நிறுவனம், மைசூரில், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் இருந்து செயல்பட்டது. 2008–ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாள் முதல் சென்னைக்கு இந்த நிறுவனம் மாற்றப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்போதுதான் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்று பெயர் சூட்டப்பட்டது. இதற்கும் காரணமாக இருந்தவர் தலைவர் கருணாநிதி.

சென்னை கடற்கரை காமராசர் சாலையில் உள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை அவர், கடந்த 2008–ஆம் ஆண்டு சூன் 30–ஆம் திறந்து வைத்தார். செம்மொழி நிறுவனத்துக்கு எனத் தனியாக ஒரு கட்டடம் அமைய வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார், அதற்காக 2007–ஆம் ஆண்டு நவம்பர் 5–ஆம் நாள் சென்னை பெரும்பாக்கத்தில் 16 ஏக்கர் நிலத்தை வழங்கினார்கள். சுமார் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பில் அந்த இடத்தை சமப்படுத்தி வழங்கினோம்.

அந்த இடத்தில் 24 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசு மாபெரும் கட்டடம் அமைத்துத் தந்துள்ளது. கடந்த 12–ஆம் தேதி அந்தக் கட்டடத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்திருக்கிறார். காணொலி வாயிலாக நடந்த அந்த விழாவுக்கு நான் முன்னிலை வகித்துப் பேசும்போது – ' இந்தியப் பிரதமர் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், அரசின் சார்பிலும், தனிப்பட்ட என் சார்பிலும் நன்றி தெரிவித்துக்

கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுச் சொன்னேன். "தலைவர் கருணாநிதி இன்று இருந்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்போது தமிழுக்கு இத்தகைய சிறப்பு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுக் காட்டியிருப்பார்கள். அதன் பிறகு நானும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசும் பெரும்பாக்கம் சென்று தமிழாய்வு நிறுவனத்தைப் பார்வையிட்டோம். உண்மையில் மிகச் சிறப்பாக அந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தொடக்கம் முதல் இன்று வரை இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. தொல் பழங்காலம் முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த நிறுவனம், தமிழ்மொழி ஆய்விலும் அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. செம்மொழித் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கருதிக் கொண்டிருக்கிறது. இந்த வரிசையில் செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்துக்கு, 2008–ஆம் ஆண்டு சூலை 24–ஆம் நாள், தனது சொந்த நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாயை தலைவர் கருணாநிதி வழங்கினார். 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் அறக்கட்டளை' என்ற பெயரால் ஓர் அறக்கட்டளையை நிறுவினார். இந்த அறக்கட்டளை சார்பில் தகுதிசால் தமிழறிஞர்களுக்கு விருது வழங்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இந்தியாவிலேயே மிக உயரிய விருதாக, பத்து லட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொண்டது இந்த விருது. பாராட்டு இதழும், தலைவர் கருணாநிதியின் உருவம் பொறித்த நினைவுப்பரிசும் வழங்கப்படும். முதல் விருது 2010, ஜூன் 23–அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், அன்றைய குடியரசுத் தலைவரால் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'பேராசிரியர் அஸ்கோபார்ப்போலா' க்கு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இந்த விருதைத் தொடர்புடைய அரசுகள் வழங்கி இருக்க வேண்டும். அதை இந்த மேடையில் பேசி நான் அரசியலாக்க விரும்பவில்லை.

தமிழுக்கு, தமிழறிஞர்களுக்குச் செய்ய வேண்டிய பாராட்டுகள், மரியாதையில் கூட அரசியல் புகுந்ததன் காரணமாக, 2011–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரை இந்த விருதுகள் வழங்கப்படவில்லை. திமுக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.வேறு எதற்காக இல்லாவிட்டாலும் , தமிழறிஞர்களுக்கு விருது கொடுப்பதற்காகவாவது, தமிழ்நாட்டில் மீண்டும் திமுக ஆட்சி மலர்ந்ததை நினைத்து இன்றைய நாளில் நான் பெருமைப்படுகிறேன். எப்போதும் தமிழுக்காகவே உழைத்திடும் திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதெல்லாம், தமிழின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,நமது மாநிலத்துக்கு மொழியின் பெயரால் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது, திமுக ஆட்சியில்தான். தமிழ்த்தாய் வாழ்த்தை நிறுவி, அதனை மாநிலப் பாடல் ஆக்கியதும் திமுக ஆட்சியில்தான்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளைப் அண்ணா தலைமையில் தொடங்கி, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரை நடத்தி, தமிழை உலகளவில் கொண்டு சென்றது. அய்யன் வள்ளுவர் ,அவ்வையார் முதலான பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் தொடங்கி, கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் வரை, திருவுருவச்சிலை நிறுவியதும் திமுக ஆட்சியில்தான். தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு சமூகநீதி வழியில் உயர்கல்வியில் இடஒதுக்கீடு தந்தது திமுக ஆட்சிதான்.வள்ளுவருக்குச் சென்னையில் கோட்டமும் , குமரியில் 133 அடியில் வானுயர்ந்த சிலையும் நிறுவி உலகமே அண்ணாந்து பார்க்க வைத்த ஆட்சிதான் திமுகஆட்சி.சுவடிகளில் இருந்து புத்தகங்களுக்குத் தமிழ் மாறியது போல், தமிழை இணையத்துக்குக் கொண்டு செல்ல 1999–லேயே தமிழ் இணைய மாநாடு நடத்தியதும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தை நிறுவி, இன்று உலகில் எங்கிருந்தாலும், தமிழ் இலக்கண, இலக்கியங்களை அனைவரும் படிக்கும் அளவிற்குத் தமிழை இணையப்படுத்தியதும் திமுக ஆட்சி தான்.இப்படி என்னால், ஒரு நீண்ட பட்டியலை சொல்லிக் கொண்டிருக்க முடியும்.

இப்படித் திமுக ஆட்சி தமிழுக்கு ஆற்றிய பணிகளின் தொடர்ச்சியாகத் தான் இந்த விழாவில் சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச்சாலை இனி "செம்மொழிச் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும். செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் 'செம்மொழித் தமிழ் இருக்கைகள்' அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களை செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடைய, தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும்.விருது பெற்ற தமிழறிஞர்கள் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். உங்களுக்கு விருது வழங்கியதன் மூலமாகச் செம்மொழி நிறுவனம் பெருமை அடைகிறது, ஏன், நானும் பெருமை அடைகிறேன், தமிழ்நாடு அரசும் பெருமை அடைகிறது. இந்த விருதின் மூலமாகத் தமிழ்மொழி மேலும் சிறப்படையப் பல்வேறு

ஆக்கப்பூர்வமான பணிகளை நீங்கள் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பழமைக்குப் பழமையாய், புதுமைக்கு என்றும் புதுமையாய் இருக்கக்கூடிய மொழி நம்முடைய தமிழ் மொழி. இந்த மொழி குறித்த ஆய்வுகள் தமிழ்நாட்டோடு, இந்திய எல்லையோடு முடிந்துவிடாமல் உலகளாவியதாக அமைய வேண்டும். உலக மொழியியல் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக நமது ஆய்வுகள் அமைய வேண்டும். மொழியை ஒரு பண்பாடாகச் சொல்வது உலக மரபாகவே உள்ளது.' நோம்சாம்ஸ்கி' போன்ற உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், மொழியை மூளையின் ஓர் உறுப்பு என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். "குழந்தையின் மூளைக்குள் ஒரு மொழியறிவு இருக்கிறது, இது மனித இனத்துக்கே உரியது" என்று அவர் சொல்கிறார். 'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்' என்று எப்போதோ சொல்லிவிட்டார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

உங்களது ஆய்வுகள் அறிவுப்பூர்வமானதாக மட்டுமில்லாமல் உணர்வுப்பூர்வமானதாகவும் அமைய வேண்டும். அப்படி அமைந்தால் உலக மொழியியல் அறிஞர்கள் அனைவரும் தேடி வரக்கூடிய இடமாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிச்சயமாக மாறும். அப்படி உயர்ந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!' என்று அண்ணா காட்டிய பாதையில், தலைவர் கருணாநிதியின் தொலைநோக்குப் பார்வையோடு நடைபோடும் அரசு, தமிழை ஆட்சிமொழியாகவும் வழக்காடு மொழியாகவும் மேலும் உயர்த்திட தொடர்ந்து குரல் கொடுக்கும் என்பதைக் கூறி, தமிழ் வாழ்க! செம்மொழித் தமிழ் வாழ்க என்று வாழ்த்தி விடைபெறுகிறேன் எனத் தெரிவித்தார்.

விருதுகள்: முன்னதாக இந்த விழாவில், 2011 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் பொன். கோதண்டராமனுக்கும் (மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்), 2012 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்திக்கும் (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்), 2013 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் ப. மருதநாயகத்துக்கும் (மேனாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், மேனாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்), 2014 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கு. மோகனராசுக்கும் (மேனாள் பேராசிரியர் & தலைவர், திருக்குறள் ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை), 2015 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் மறைமலை இலக்குவனாருக்கும் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி,சென்னை) 2016ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கா. ராஜனுக்கும் (மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம்) 2018 ஆம் ஆண்டிற்கான விருதினைக் கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக்கல்லூரி, சென்னை) 2019 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கு. சிவமணிக்கும் (மேனாள் முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் & திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை) முதல்வர் மு.க. ஸ்டாலின் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளை வழங்கினார். விருதாளர்களுக்கு விருதுடன் ரூபாய் 10 லட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ், வெண்கலத்தாலான மு.கருணாநிதியின் திருவுருவச்சிலையையும் வழங்கி முதல்வர் கௌரவித்தார். இந்த விழாவில் அமைச்சர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு துறைச் செயலர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

10. பருவநிலை மாற்றம்: இந்திய – அமெரிக்க நிபுணர்கள் ஆலோசனை

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தொழில்நுட்பத்தின் மூலம் கரியமில வாயுவை சேகரிப்பது மற்றும் பயன்பாட்டுத் தீர்வுகளின் சவால்கள் குறித்து இந்தியா, அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையும், அமெரிக்காவின் எரிசக்தி துறையும் இணைந்து இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன.

உலகில் அதிவிரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இருப்பதோடு பருவநிலை இலக்குகளை எதிர்கொள்வதற்கான இந்தியாவின் செயல்பாடு மற்றும் விருப்பங்கள் குறித்து அண்மையில் கிளாஸ்கோவில் நிறைவடைந்த பங்கேற்பாளர்கள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி எடுத்துரைத்ததை இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை செயலாளர் சந்திரசேகர் இந்தக் கூட்டத்தில் நினைவுகூர்ந்தார். "2070–ஆம் ஆண்டுக்குள் கரிய மில வாயு வெளியேற்றமே இல்லாத நாடாக இந்தியாவை மாற்றுவதற்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் நீடித்த வளர்ச்சி தொடரும் நிலையில், கரிய மில வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கு அதனை சேகரிப்பது, பயன்படுத்துவது, இருப்பில் வைப்பது போன்ற முக்கிய வழிமுறைகளும் காணப்படுகின்றன என்று அவர் கூறினார்.

இந்த பயிலரங்கில் பேசிய அமெரிக்காவின் படிம எரிசக்தி மற்றும் கரியமில வாயு அலுவலகம், எரிசக்தி துறை ஆகியவற்றின் துணை அமைச்சர் பொறுப்பு வகிக்கும் ஜெனிபா் வில்காக்ஸ், பருவநிலை மாற்றம், தூய்மையான எரிசக்தி இலக்குகளை எதிர்கொள்ள புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் பங்குதாரராக இந்தியா உள்ளது என்றார். "

தூய்மை எரிசக்தி தொடர்பாக அமெரிக்காவின் முன் முயற்சிகளை எடுத்துரைத்த வில்காக்ஸ் இது உலகளாவிய நெருக்கடி என்றும் இதற்கான தொழில்நுட்பங்களை உலகளாவிய பங்கேற்பு தேவை என்றும் கூறினார்.

---

1. கோல்டன் குளோப்ஸ் – 2022இல் 'சிறந்த பட (நாடகம்)' விருதை வென்ற திரைப்படம் எது?

அ) தி பவர் ஆஃப் எ டாக் ☑



ஆ) கிங் ரிச்சர்ட்

இ) பெல்ஃபாஸ்ட்

ஈ) கோடா

✓ கோல்டன் குளோப்ஸ் 2022'இல் 'தி பவர் ஆஃப் எ டாக்' 'சிறந்த படம் (நாடகம்)' என அறிவிக்கப்பட்டது. பெனடிக்ட் கம்பெர்பாட்ச் நடித்த இந்தப்படம் ஜேன் கேம்பியனுக்கு சிறந்த இயக்குநர் விருதையும், கோடி ஸ்மிட்–மெக்ஃபீக்கு சிறந்த துணை நடிகர் விருதையும் பெற்றுத்தந்தது.

✓ ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் 'வெஸ்ட் சைட் ஸ்டோரி' சிறந்த திரைப்படம் (இசை அல்லது நகைச்சுவை), சிறந்த திரைப் பட நடிகை (இசை அல்லது நகைச்சுவை) மற்றும் சிறந்த துணை நடிகைக்கான திரைப்பட விருதுகளை வென்றது. வில் ஸ்மித் (கிங் ரிச்சர்ட்) திரைப்படம், நாடகம் ஆகியவற் –றில் சிறந்த நடிகருக்கான விருதை வென்றார்.

---

2. மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதய மாற்று அறுவை சிகிச்சையை முதன்முதலில் வெற்றிகரமாக நடத்திய நாடு எது?

அ) சீனா



ஆ) ரஷ்யா

இ) அமெரிக்கா ☑

ஈ) இந்தியா

✓ அமெரிக்காவின் மேரிலாந்து பல்கலைக்கழக மருத்துவ மையத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதருக்கு பொருத்தும் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

✓ 57 வயதான டேவிட் பென்னட், இதுபோன்ற இதய மாற்று அறுவை சிகிச்சையை செய்துகொண்ட உலகின் முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

---

3. 'ரோஜ்கர் மிஷன்' என்பது எந்த மாநிலத்தின் சமீபத்திய முன்னெடுப்பாகும்?

அ) உத்தர பிரதேசம்



ஆ) சத்தீஸ்கர் ☑

இ) பஞ்சாப்

ஈ) அஸ்ஸாம்

✓ சத்தீஸ்கர் அரசு முதல்வர் பூபேஷ் பாகேல் தலைமையில் வேலைவாய்ப்பு திட்டத்தை அமைக்க முடிவு செய்துள்ளது. சத்தீஸ்கர் ரோஜ்கர் மிஷன் தலைமைச் செயலாளரும், முதன்மைச் செயலாளரும் முறையே துணைத் தலைவராகவும், CEO ஆகவும் இருப்பார்கள்.

✓ IIT மற்றும் IIM போன்ற முதன்மையான நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, அடுத்த 5 ஆண்டுகளில் மாநிலத்தில் சுமார் 15 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

4. அண்மையில் காலமான பண்டித பிர்ஜு மகாராஜுடன் தொடர்புடைய நடனம் எது?

அ) கதக் ☑



ஆ) பரதநாட்டியம்

இ) குச்சிப்புடி

ஈ) மோகினியாட்டம்

✓ பழம்பெரும் கதக் நடனக்கலைஞர் பண்டித பிர்ஜு மகராஜ் அண்மையில் தனது 83ஆம் வயதில் காலமானார். அவர் தனது சீடர்களால் பண்டிதஜி மற்றும் மகராஜ்–ஜி என்றும் அழைக்கப்படுகிறார். இந்தியாவின் சிறந்த கலைஞர்களில் ஒருவராகக்கருதப்படும் அவருக்கு கடந்த 1964இல் 'சங்கீத நாடக அகாதமி விருது'ம் 1986இல் 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்பட்டது. சிறந்த நடன அமைப்பிற்கான தேசிய திரைப்பட விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

5. மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற உட்கட்ட –மைப்பிற்கான தரநிலைகளின்படி, பொது மின்னேற்ற நிலையத்தை யார் அமைக்க முடியும்?

அ) டிஸ்காம்கள்



ஆ) தனிநபர்கள் ☑

இ) எரிசக்தி அமைச்சகம்

ஈ) மாநில அரசுகள்

✓ மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற உட்கட்டமைப் –பிற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் தர நிலைகளை மத்திய எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டது.

✓ இந்த வழிகாட்டுதல்களின்படி, எந்தவொரு தனிநபரும் / நிறுவனமும் உரிமம் ஏதுமில்லாமல் பொது மின்னேற்ற நிலையங்களை அமைக்கலாம். அத்தகைய நிலையங்கள் தொழில்நுட்ப ரீதியாக பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளை பூர்த்தி செய்திருத்தல் அவசியமாகும்.

---

6. COVID–19 தடுப்பூசி பற்றிய இந்தியாவின் நினைவு அஞ்சல்தலையில் இடம்பெற்றுள்ள தடுப்பூசி எது?

அ) கோவிஷீல்டு



ஆ) கோவாக்சின் ☑

இ) COVOVAX

ஈ) ZyCoV–D

✓ இந்தியாவின் தேசிய COVID–19 தடுப்பூசி திட்டத்தின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு அஞ்சல்தலையை மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. கோவாக்சின் ஊசியுடன், சுகாதாரப் பணியாளர் மூத்த குடிமக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதைப்போன்று இந்த நினைவு அஞ்சல் தலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ ஓராண்டு காலத்திற்குள், இந்தியா 156 கோடிக்கும் அதிக –மான தடுப்பூசிகளை செலுத்தியுள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து ஹைதராபாத்தைச் சார்ந்த பாரத் பயோடெக் நிறுவனத்தால் கோவாக்ஸின் தடுப்பூசி உருவாக்கப்பட்டது.

---

7. அமெரிக்க நாணயத்தில் இடம்பெற்ற முதல் கறுப்பினப் பெண்மணி யார்?



அ) மாயா ஏஞ்சலோ ☑

ஆ) பிலிஸ் வீட்லி

இ) வாண்டா கோல்மன்

ஈ) க்வென்டோலின் ப்ரூக்ஸ்

✓ கவிஞரும் ஆர்வலருமான மாயா ஏஞ்சலோ அமெரிக்க நாணயத்தில் இடம்பெற்ற முதல் கறுப்பினப் பெண்மணி ஆனார். இந்நாணயம் ஆப்பிரிக்க பெண்கள் குவார்டர்ஸ் திட்டத்தின் ஒருபகுதியாகும்.

✓ கடந்த 90 ஆண்டுகளாக, அமெரிக்காவின் நாணயத்தில் ஒருபுறத்தில் அதன் முதல் அதிபர் ஜார்ஜ் வாஷிங்டனும் மறுபுறத்தில் கழுகும் இடம்பெற்று வந்தது.

---

8. தொடர்ந்து 4ஆம் முறையாக எந்த நாட்டின் அதிபராக 'டேனியல் ஒர்டேகா' பதவியேற்றுள்ளார்?



அ) நிகரகுவா ☑

ஆ) எல் சல்வடோர்

இ) பெரு

ஈ) அர்ஜென்டினா

✓ மத்திய அமெரிக்க நாடான 'நிகரகுவா'வின் அதிபராக 4ஆவது முறையாக டேனியல் ஒர்டேகா பதவியேற்றார். தேர்தலுக்குப் பிறகு அவரது அரசாங்கத்தில் உள்ள பல நபர்கள்மீது அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடைகளை விதித்தன.

✓ ஒர்டேகாவின் அரசாங்கம் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் அதிகாரத்தில் இருந்து வருகிறது.

---

9. ஒராங் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்



ஆ) அஸ்ஸாம் ☑

இ) பீகார்


ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ ஒராங் தேசியப்பூங்கா அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா நதியின் வடகரையில் அமைந்துள்ளது. இது முன்பு 'ராஜீவ் காந்தி ஒராங் தேசியப்பூங்கா' என்று அழைக்கப்பட்டது. ஒராங் தேசியப்பூங்காவை தற்போதுள்ள அதன் அளவை விட மூன்று மடங்குக்கும் அதிகமாக மாற்றுவதற்கான அறிவிப்பை அரசாங்கம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

---

10. 'ஸ்மார்ட் டவுன்ஷிப்' திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) ஆந்திர பிரதேசம் ☑



ஆ) ஒடிஸா

இ) குஜராத்

ஈ) கேரளா

✓ ஆந்திர பிரதேச முதல்வர் ஒய் எஸ் ஜெகன் மோகன் ரெட்டி, ஜகனண்ணா ஸ்மார்ட் டவுன்ஷிப் திட்டத்திற்கான இணையதளத்தை அண்மையில் தொடங்கி வைத்தார்.

✓ வில்லங்கமற்ற அரசு நிலங்களை நியாயமான விலையில் வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அம்மாநில அரசு ஏற்கனவே நடுத்தர குடும்பங்களுக்கு 31 லட்சம் வீட்டு பட்டாக்களை வழங்கியுள்ளது. மேலும் முதல் கட்டமாக 15.6 இலட்சம் வீடுகளைக் கட்டும் பணியையும் அது தொடங்கியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தொல்லியல் அறிஞர் இரா நாகசாமி மறைவு

'பத்ம பூஷண்' விருது பெற்ற தொல்லியல் அறிஞர் இரா நாகசாமி (91) காலமானார். இந்திய வரலாறு, தொல்லியல் மற்றும் கல்வெட்டு எழுத்துக் குறிப்பு அறிஞர் இரா நாகசாமி சம்ஸ்கிருத வித்துவானான ராமச்சந்திரனுக்கு மகனாக 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் தேதி பிறந்தார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத மொழியில் முதுநிலைப் பட்டபடிப்பு முடித்தார். பின்னர், டெக்கான் கல்லூரியில் தொல்லியல் தொடர்பான ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றார்.

இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தில் தொல்லியல் துறையில் பயிற்சி எடுத்த நாகசாமி, 1959ஆம் ஆண்டு முதல் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பாதுகாவலர், தமிழக அரசின் தொல்லியல் துறையின் உதவி சிறப்பு அதிகாரி, தொல்லியல் துறையின் முதலாவது இயக்குநர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

மத்திய அரசின் பத்ம பூஷண், தமிழக அரசின் கலைமாமணி விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

---

2. சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி: பி.வி. சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற சர்வதேச சையது மோடி 2022 பேட்மிண்டன் இறுதி போட்டியில் வெற்றி பெற்று பி வி சிந்து சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார்

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் சர்வதேச சையது மோடி 2022 பேட்மிண்டன் போட்டிகள் நடைபெற்றது.

தகுதிச்சுற்று, காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகளி –ல் வெற்றி பெற்ற இருவருக்கு இன்று இறுதி போட்டி நடைபெற்றது.

இதில் மகளிர் பிரிவில் ஒலிம்பிக் போட்டியில் இரண்டு முறை பதக்கம் வென்ற பி வி சிந்து மற்றும் எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தில் 2ஆம் ஆண்டு பி டெக் படித்து வரும் நாக்பூரைச் சேர்ந்த 20 வயதான மாளவிகா பன்சோட் என்ற மாணவி நேருக்கு நேர் மோதினர்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியதால் 21–13, 21–16 என்ற நேர் செட் கணக்கில் மாளவிகா பன்சோட்டை வீழ்த்தி பி வி சிந்து வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் பி வி சிந்து, ரஷ்யாவின் ஈவ்ஜீனியா கொசெட்ஸ்கயாவை முதல் செட்டில் 21–11 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தினார்.

பி வி சிந்து வெற்றி பெற ஒரு செட் மீதம் இருந்த நிலையில், ரஷ்ய வீராங்கனை பாதியிலேயே விலகிக் கொள்வதாக அறிவித்ததால் பிவி சிந்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

---

3. தேசிய பூப்பந்தாட்ட போட்டியில் தமிழக மகளிர் அணி சாம்பியன்

தேசிய சப்–ஜூனியர் பூப்பந்து போட்டியில் தமிழக மகளிர் அணி தங்கப் பதக்கம் வென்றது.

40ஆவது தேசிய சப்–ஜூனியர் பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஆந்திராவில் கடந்த 8ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை நடைபெற்றது. 18 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் கலந்துகொண்ட இந்தத் தொடரில் தமிழ்நாடு மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்றது. தமிழக அணி அரை இறுதியில் 35–24 மற்றும் 35–26 என்ற கணக்கில் கர்நாடகாவை வீழ்த்தியது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிச் சுற்றில் தமிழக மகளிர் அணி 35–28, 28–35, 35–28 என்ற கணக்கில் ஆந்திராவை விழ்த்தியது.

---

1. மூன்றாம் பாலினத்தவர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் அமலுக்கு வந்த ஆண்டு எது?



அ) 2000

ஆ) 2005

இ) 2010

ஈ) 2020 ☑

✓ 3ஆம் பாலினத்தவர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 ஆனது கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வந்தது.

✓ மூன்றாம் பாலினத்தவரின் தனியுரிமை மற்றும் கண்ணி–யத்தைப் பாதுகாக்கும் வகையில் திருநம்பிகளுக்கும் திருநங்கைகளுக்கும் தனித்தனி இருப்பிட வசதிகளை ஏற்படுத்துமாறு மத்திய உள்துறை அமைச்சகம் சிறை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. திருநங்கைகள் சட்டம், 2019'ஐக் கருத்தில் கொண்டு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தி–ன்படி, கடந்த 2020இல் நாடு முழுவதுமுள்ள சிறைகளில் 70 மூன்றாம் பாலினத்தவர்கள் உள்ளனர்.

---

2. 'பிராந்திய திட்ட விதிகள், 2021'ஐ அறிவித்த மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) மணிப்பூர்

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ தமிழ்நாடு அரசானது 'மண்டல திட்டவிதிகள், 2021' என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மாநிலத்தில் 1.36 இலட்சம் ச.கிமீ பரப்பளவைக் கொண்ட 12 மண்டலங்களுக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கான விதிகள் அறிவிக்கப்பட்டு உள்ளன. புதிய விதிகளின்கீழ், அடுத்த 18 மாதங்களில் நிலம் மற்றும் கட்டட பயன்பாட்டு வரைபடங்களைத் தயாரிப்பதற்காக, தமிழ்நாடு அரசு ஒரு பிராந்திய திட்டமிடல் ஆணையத்தை அமைக்கும்.

✓ பிராந்தியத்திட்டம் என்பது ஒரு இடை–தீர்வுத் திட்டமாகும், அதே சமயம் முதன்மைத் திட்டங்கள் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் இதன் உள்–தீர்வுத் திட்டங்களாகும்.

---

3. 2022இல் '25ஆவது தேசிய இளையோர் விழா'வை நடத்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) கோவா

ஆ) இலட்சத்தீவுகள்

இ) புதுச்சேரி ☑

ஈ) அஸ்ஸாம்

✓ புதுச்சேரியில் 25ஆவது தேசிய இளையோர் விழாவை பிரதமர் மோடி காணொளிக்காட்சிமூலம் தொடங்கினார். புதுச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள MSME அமைச்சகத்தின் தொழில்நுட்ப மையம் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், ஆகியவற்றையும் அவர் திறந்துவைத்தார்.

---

4. WEF தாவோஸ் நிகழ்ச்சி நிரல் 2022'இன்போது 'P3 (Pro–Planet People) இயக்கத்தை அறிவித்த நாடு எது?



அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா

இ) இந்தியா ☑

ஈ) UK

✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) தாவோஸ் நிகழ்ச்சி நிரல் 2022'இல் இந்தியாவின் காலநிலை மாற்றக் கடமைகளை அடிக் கோடிட்டுக் காட்ட "P3 (Pro–Planet People) இயக்கத்தை" அறிமுகப்படுத்தினார். உலகப் பொருளாதார மன்றத்தின் தாவோஸ் நிகழ்ச்சி நிரல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள முக்கியமான நிறுவனங்களின் தலைவர்களால் கால நிலை நடவடிக்கை, தொற்றுநோய் மீட்பு மற்றும் சமூக–பொருளாதார மீள்தன்மை குறித்து விவாதிக்கப்பட்டது.

---

5. மூத்த அதிகாரியான விக்ரம் தேவ் தத், எந்த அமைப்பின் புதிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக உள்ளார்?

அ) ஏர் இந்தியா ☑



ஆ) ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

இ) சென்ட்ரல் எலெக்ட்ரானிக்ஸ் லிட்

ஈ) பாரத் சஞ்சார் நிகம் லிட்

✓ மூத்த அதிகாரி விக்ரம் தேவ் தத், ஏர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். விக்ரம் தேவ் தத் AGMUT (அருணா–ச்சல பிரதேசம், கோவா, மிசோரம் மற்றும் யூனியன் பிரதேசம்) கேடரின் 1993–பேட்ச் ஐஏஎஸ் அதிகாரி ஆவார்.

✓ மேலும் தற்போது தில்லி அரசாங்கத்தில் முதன்மை செயலராக (சுற்றுலா) உள்ளார். பணியாளர் அமைச்சகம் பிறப்பித்த உத்தரவின்படி, கூடுதல் செயலர் பதவிநிலை மற்றும் ஊதியக்கட்டில் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

6. 'இந்தியாவின் காலநிலை அபாயங்கள் மற்றும் பாதிப்பு அட்லஸை' வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑

இ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்


✓ இதன்வகையில் முதலாவதான 'இந்தியாவின் காலநிலை அபாயங்கள் மற்றும் பாதிப்பு அட்லஸை' மத்திய புவி அறிவியல் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

✓ இதன்படி, மேற்கு வங்கம், ஒடிஸா மாநிலத்தின் அண்டை மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக் கோட்டை மற்றும் தஞ்சாவூரில் உள்ள சுந்தரவனங்கள் ஆகியவை சூறாவளி மற்றும் 8.5 முதல் 13.7 மீ உயரம் வரை எழும் புயல் அலைகளால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவையாக அறியப்பட்டுள்ளன.

---

7. தடுப்பூசி போடப்படாத நிலையில், ஆஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட டென்னிஸ் ஆளுமை யார்?

அ) ரபேல் நடால்



ஆ) நோவக் ஜோகோவிச் ☑

இ) ரோஜர் பெடரர்

ஈ) டேனியல் மெட்வெடேவ்

✓ தடுப்பூசி போட்டுக்கொள்ளாத டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச்சின் சவாலை நீதிபதிகள் நிராகரித்ததை அடுத்து, ஆஸ்திரேலியாவிலிருந்து அவர் நாடு கடத்தப்பட்–டார். ஆஸி. அரசு "உடல்நலம் மற்றும் நல்லொழுங்கு" அடிப்படையில் அவரது நுழைவு இசைவை ரத்து செய்தது.

---

8. இந்தியாவின் குற்றவியல் சட்டங்கள் பற்றிய விரிவான மதிப்பாய்வைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம் ☑

ஆ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

இ) சுரங்க அமைச்சகம்

ஈ) புவி அறிவியல் அமைச்சகம்

✓ மத்திய உள்துறை அமைச்சகம் இந்தியாவின் குற்றவியல் சட்டங்களை "விரிவான மதிப்பாய்வு" செய்வதற்கான செயல்முறையைத் தொடங்கியுள்ளது.

✓ உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்திய தண்டனைச் சட்டம் (IPC), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) மற்றும் இந்திய சாட்சியச்சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்காக இந்தியத் தலைமை நீதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைக்கோரினார். உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள், யூனியன் பிரதேசங்களின் நிர்வாகி–கள், பார் கவுன்சில்கள் மற்றும் சட்டப் பல்கலைகளின் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

---

9. '2 Vs 2' வேளாண் சந்தை அணுகல் சிக்கல்களை செயல்படுத்துவதற்காக, இந்தியா, எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

அ) அமெரிக்கா ☑



ஆ) இஸ்ரேல்

இ) ரஷ்யா

ஈ) ஆஸ்திரேலியா

✓ இந்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை மற்றும் அமெரிக்க வேளாண்மைத் துறை ஆகியவை "2 Vs 2 வேளாண் சந்தை அணுகல்" சிக்கல்களைச் செயல்படுத்து–வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. சமீபத்திய ஒப்பந்தத்தின்படி இந்திய மாம்பழங்கள் மற்றும் மாதுளை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

✓ இந்தியாவிற்கு செர்ரிகள், நொய் வைக்கோல், அமெரிக்க பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும் ஒப்பந்தங்களிலும் இந்தியா கையெழுத்திட்டது.

---

10. பிரதமருக்கான பாதுகாப்பு வீதிமீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக உச்சநீதிமன்றம் நியமித்த விசாரணைக் குழுவிற்கு தலைமை தாங்குபவர் யார்?

அ) நீதிபதி இரஞ்சன் கோகாய்



ஆ) நீதிபதி இந்து மல்கோத்ரா ☑

இ) நீதிபதி P சதாசிவம்

ஈ) நீதிபதி K G பாலகிருஷ்ணன்

✓ பிரதமர் நரேந்திர மோடியின் பஞ்சாப் பயணத்தின்போது ஏற்பட்ட பாதுகாப்பு வீதிமீறல்கள் குறித்து விசாரிக்க, உச்ச நீதிமன்றம் அதன் முன்னாள் நீதிபதி இந்து மல்கோத்ரா தலைமையில் விசாரணைக் குழுவை நியமித்தது.

✓ இக்குழுவில் பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளர், தேசிய புலனாய்வு அமைப்பின் தலைமை இயக்குநர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரி & பஞ்சாப் காவல்துறையின் ஏடிஜிபி (பாதுகாப்பு) ஆகியோர் அடங்குவர். பாதுகாப்பு வீதிமீறல்களுக்கான காரணங்களை இந்தக் குழு ஆராய்ந்து, பிரதமர் மற்றும் அரசியலமைப்புச் செயல்பாட்டாளர்களின் பாதுகாப்பிற்கு பாதுகாப்புப்படை அவசியம் என்று பரிந்துரைக்கும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 29 குழந்தைகளுக்கு பிரதமர் விருது

2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான பிரதமரின் தேசிய பால புரஸ்கார் விருதுகள் மின் எண்மம் (டிஜிட்டல் சான்றி–தழ்கள்) முறையில் நாடு முழுவதுமுள்ள 29 குழந்தைக–ளுக்கு வழங்கப்பட்டன.

பிளாக்செயின் எனப்படும் இணையவழி ஆவண பரிமாற்ற தொழில்நுட்பத்தின்கீழ் முதன்முறையாக பிரதமர் மோடி சான்றிதழ்களை வழங்கினார்.

விருது பெற்ற 29 சிறார்களில் தமிழகத்தை சேர்ந்த இரு குழந்தைகளும் பிரதமரின் தேசிய பால புரஸ்கார் விருதுகள் பெற்றனர்.

விருதுநகரைச் சேர்ந்த 8 வயது சிறுமி என சி விஷாலினி வெள்ளப் பேரிடர்களின்போது நீரில் மூழ்குவதைத் தடுக்கும் ஒரு தானியங்கி பல் செயல்பாட்டு உயிர் மீட்பு வெள்ளவீடு ஒன்றை கண்டுபிடித்ததற்காக கிடைத்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த 14 வயது அஸ்வதா பிஜு இளம்பழங்கால ஆராய்ச்சியாளராகி, முதுகெலும்பிகள் அல்லது முள்ளந் தண்டுளிகள் சிற்றினங்கள் புதைபடிவ (தொல்லுயிர் எச்சம்) மாதிரிகளை சேகரித்து பாதுகாப்பதோ–டு கருத்தரங்குகள், காட்சிகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக பிரதமரின் விருதை பெற்றார்.

புதுமை, சமூக சேவை, கல்வித்திறன், விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம் (6), வீரம் (3) ஆகிய பிரிவுகளில் 29 விருதுகள் பெற்ற நபர்களில் 14 சிறுமிகள் உள்ளனர். இவர்களுக்கு சான்றிதழுடன் ₹1 லட்சம் ரொக்கமும் இந்த சிறார்களுக்கு பரிசாக வழங்கப்பட்டது.

---

2. உணவு தரச் சான்றுகள் பெற்ற 314 கோயில்கள்:

தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் வழங்கப்படும் உணவு, பிரசாதங்கள் சிறந்த தரமுடையதாக இருப்பதாக 314 கோயில்களுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தரச்சான்றுகள் வழங்கப்பட்டு உள்ளன.

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வ –ரர் கோயில், சென்னை தங்கசாலை ஏகாம்பரேஸ்வரர் கோயில், திருமுல்லைவாயல் மாசிலாமணீசுவரர் கோயில், திருப்போரூர் கந்தசாமி கோயில், மாமல்லபுரம் சயன பெருமாள் கோயில், சென்னை அங்காள பரமேஸ்வரி கோயில், கங்காதீஸ்வரர் கோயில் ஆகியவை தரச்சான்று பெற்ற கோயில்களில் குறிப்பிடத்தக்கவை.

சான்று எதற்கு?: தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் 754 கோயில் உள்ளன. இவற்றில் பழனி, திருவரங்கம், திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி ஆகிய கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படுகிறது. ஆண்டுக்கு ₹76 கோடி செலவில் 754 கோயில்களிலும் நாளொன்றுக்கு 70,000 பக்தர்களுக்கு உணவு தரப்படுகிறது.

இந்திய அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பா –ட்டு நிறுவனமானது, நாடு முழுவதும் உணவு தயாரித்து வழங்கும் நிறுவனங்களின் உணவு வகைகளை பரிசோதித்து தரச்சான்று வழங்கும் பணியைச் செய்கிறது. மேலும், மத வழிபாட்டுத் தலங்களில் தயாரிக்கப்படும் உணவுக்கும் சான்று அளிக்கிறது. அதன்படி, தமிழ்நாட்டில் 314 கோயில்களுக்கு உணவுக்கான தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

---

3. இந்தியா வருகிறார் இஸ்ரேல் பிரதமர்

இந்தியா – இஸ்ரேல் இடையேயான ராஜீய ரீதியிலான உறவு 30 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், அந்நாட்டு பிரதமர் நாஃப்டாலி பென்னட் இந்தியா வர உள்ளதாக இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நவோர் கிலோன் தெரிவித்தார்.

இந்தியா–இஸ்ரேல் இடையே தூதரக உறவு தொடங்கி 30 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிப்பிடும் வகையில் இணையவழியில் நடைபெற்ற சிறப்பு இலச்சினை வெளியீட்டு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நவோர் கிலோனும் இஸ்ரேலுக்கான இந்திய தூதர் சஞ்சீவ் சிங்லாவும் இணைந்து இந்த இலச்சினையை வெளியிட்டனர்.

வாராணசி, ஆமதாபாத் NIT'இன் இறுதி ஆண்டு மாணவர் நிகில் உருவாக்கிய இரு நாடுகளுக்கு இடையேயான 30 ஆண்டுகள் நல்லுறவை குறிப்பிடும் இலச்சினை இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டது.

---

4. கரீஃப் பருவத்தில் தமிழ்நாட்டில் 7 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்: 1,20,231 விவசாயிகள் பயன்

கரீஃப் பருவத்தில் (23.01.2022 வரை) நாடு முழுவதும் 606.19 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 7,43,077 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் 1,20,231 தமிழக விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2021–22ஆம் ஆண்டு கரீஃப் சந்தைப் பருவத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் நெல் கொள்முதல் சுமுகமாக நடைபெற்று வருகிறது.

குஜராத், அஸ்ஸாம், ஹரியாணா, ஹிமாசல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், ஜார்க்கண்ட், பஞ்சாப், உத்தர பிரதேசம், உத்தரகண்ட், தெலங்கானா, இராஜஸ்தான், கேரளம், தமிழ்நாடு, மேற்கு வங்கம், திரிபுரா, பிகார், ஒடிஸா, மகாராஷ்ட்ரம், சத்தீஸ்கர், ஆந்திரம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் ₹1,18,812.56 கோடி மதிப்பிலான நெல் கொள்முதல்மூலம், இதுவரை, 77.00 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்று மத்திய அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. ஐசிசி சிறந்த வீரர் ஷாஹின் ஷா அப்ரிடி, வீராங்கனை ஸ்மிருதி மந்தனா

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக 'சர் கேரிபீல்ட் சோபர்ஸ்' விருதுக்கு ஷாஹின் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்), 'ரேச்சல் ஹெஹோ பிளிண்ட்' விருதுக்கு ஸ்மிருதி மந்தனா (இந்தியா) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த வீரர்: ஷாஹின் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்):

'சர் கேரிபீல்ட் சோபர்ஸ்' விருது ஏற்படுத்தப்பட்டபின் முதன்முறையாக இந்த விருதைப் பெறும் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பை ஷாஹின் அப்ரிடி பெற்றுள்ளார்.

சிறந்த வீராங்கனை: ஸ்மிருதி மந்தனா (இந்தியா):

சிறந்த வீராங்கனைக்கான 'ரேச்சல் ஹெஹோ பிளிண்ட்' விருதுக்கு இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

சிறந்த டெஸ்ட் வீரர்: ஜோ ரூட் (இங்கிலாந்து)

சிறந்த ஒருநாள் வீரர்: பாபர் ஆஸம் (பாகிஸ்தான்)

சிறந்த ஒருநாள் வீராங்கனை: லிஸே லில்லி (தென்னாப்பிரிக்கா)

இந்த விருதைப் பெறும் முதல் தென்னாப்பிரிக்க வீராங்கனை லிஸே ஆவார்.

வளரும் வீரர் விருது தென்னாப்பிரிக்காவின் யான்மேன் மலானுக்கும், வீராங்கனை விருது பாகிஸ்தானின் பாத்திமா சனாவுக்கும் கிடைத்துள்ளது.

சிறந்த நடுவர் விருது மரைஸ் எராஸ்மஸுக்கு கிடைத்துள்ளது.

---

6. விபின் ராவத், 127 பேருக்கு பத்ம விருதுகள்: முழு விவரம்

2022ஆம் ஆண்டுக்கான 'பத்ம' விருதுகளை மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது. மறைந்த முப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத்துக்கு 'பத்ம விபூஷண்' விருது உள்பட 128 பேருக்கு 'பத்ம' விருதுகள் வழங்கப்பட்–டுள்ளன.

மறைந்த முன்னாள் உத்தர பிரதேச முதல்வர் கல்யாண் சிங்குக்கு 'பத்ம விபூஷண்' விருது, காங்கிரஸ் மூத்த தலைவர் குலாப் நபி ஆசாத், முன்னாள் மேற்கு வங்க முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்ஜி, கூகுள் தலைமைச்செயல் அதிகாரி சுந்தர்பிச்சை, மைக்ரோசாப்ட் தலைமைச்செயல் அதிகாரி சத்யா நாதெள்ளா உள்ளிட்–டோருக்கு 'பத்ம பூஷண்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த சிற்பி பாலசுப்பிரமணியம், சௌகார் ஜானகி உள்ளிட்டோருக்கு 'பத்மஸ்ரீ' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கலை, இலக்கியம், கல்வி, சமூக சேவை, அரசியல், தொழில், விளையாட்டு போன்ற துறைகளில் சாதனை படைப்பவர்களுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று 'பத்ம' விருதுகளை அறிவித்து வருகிறது.

நடப்பாண்டில் 128 பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 4 'பத்ம விபூஷண்' விருதுகளும் 17 'பத்ம பூஷண்' விருதுகளும், 107 'பத்மஸ்ரீ' விருதுகளும் அறிவிக்கப்பட்டு உள்ளன. 2 விருதுகளை இருவர் பகிர்ந்துகொள்கிறார்கள்.

விருது பெறுவோரில் 34 பேர் பெண்கள். 13 பேருக்கு மறைவுக்குப் பிறகு வழங்கப்படுகிறது. 10 பேர் வெளிநாட்டுப் பிரிவில் விருது பெறுகிறார்கள். 'பத்ம' விருதுகள் வழங்கும் விழா, வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் என்று தெரிகிறது.

பத்ம விபூஷண் விருது பெறுவோர் (4)

1. பிரபா ஆத்ரே– கலை– மகாராஷ்டிரம்

2. ராதேஷ்யாம் கெம்கா– இலக்கியம், கல்வி– உத்தர பிரதேசம்

3. விபின் ராவத்– ஆட்சிப் பணி– உத்தரகண்ட்

4. கல்யாண் சிங்– அரசியல்– உத்தர பிரதேசம்

பத்ம பூஷண் விருது பெறுவோர் (17)

1. குலாம் நபி ஆசாத்– அரசியல்– ஜம்மு–காஷ்மீர்

2. விக்டர் பானர்ஜி– கலை– மேற்கு வங்கம்

3. புத்ததேவ் பட்டாச்சார்ஜி– அரசியல்– மேற்கு வங்கம்

4. N சந்திரசேகரன், TATA குழுமத்தலைவர் – மகாராடிரா

5. கிருஷ்ணா எல்லா, சுசித்ரா எல்லா, பாரத் பயோடெக் நிறுவனம்– தொழில்– தெலங்கானா

6. ராஜீவ் மெஹரிஷி, முன்னாள் சிஏஜி– ஆட்சிப் பணி– ராஜஸ்தான்

7. சத்யா நாதெள்ளா, மைக்ரோசாப்ட் சிஇஓ– தொழில்– அமெரிக்கா

8. சுந்தர் பிச்சை, கூகுள் சிஇஓ– தொழில்– அமெரிக்கா

9. சைரஸ் பூனாவாலா, சீரம் நிறுவனம்– தொழில்– மகாராஷ்டிரம் உள்ளிட்ட 17 பேர்

பத்மஸ்ரீ விருது பெறுவோர் (107)

1. சிற்பி பாலசுப்பிரமணியம்– இலக்கியம், கல்வி– தமிழ்நாடு

2. S பல்லேஷ் பஜந்திரி– கலை– தமிழ்நாடு

3. S தாமோதரன்– சமூக சேவை– தமிழ்நாடு

4. சௌகார் ஜானகி– கலை– தமிழ்நாடு

5. R முத்துக்கண்ணம்மாள்–கலை–தமிழ்நாடு

6. A K C நடராஜன்– கலை– தமிழ்நாடு

7. V சேஷையா– மருத்துவம்– தமிழ்நாடு

8. நீரஜ் சோப்ரா– விளையாட்டு– ஹரியாணா

9. சங்கரநாராயண மேனன் சுண்டயில்– விளையாட்டு– கேரளம்

10. சோனு நிகம்– கலை– மகாராஷ்டிரம் உள்ளிட்ட 107 பேர்.

தமிழக பத்ம விருதாளர்கள்...

N சந்திரசேகரன் (பத்ம பூஷண்)

TATA சன்ஸ் குழுமத்தின் தலைவரான N சந்திரசேகரன் நாமக்கல் மாவட்டம், மோகனூரில் பிறந்தவர்.

1987'இல் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) நிறுவனத்தி–ல் சேர்ந்த அவர், 2009'இல் அதன் தலைமைச் செயல் இயக்குநராக உயர்ந்தார். தற்போது டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவராக உள்ளார். தற்போது மும்பையில் வசிக்கிறார்.

சிற்பி பாலசுப்பிரமணியம் (பத்மஸ்ரீ)

கோவை மாவட்டம், ஆத்துப்பொள்ளாச்சியை சேர்ந்த சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேராசிரியர், இதழாசிரியர், கல்வியாளர் என பன்முகம் கொண்டவர். மொழிபெயர்ப்புக்காகவும் (2001– அக்கினிசாட்சி), படைப்பிலக்கியத்துக்காகவும் (2003– ஒரு கிராமத்து நதி) இரண்டு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார். மேலும் தமிழ்நாடு அரசின் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

சௌகார் ஜானகி (பத்மஸ்ரீ)

N T ராமாராவ் நடித்த "சௌகார்" என்ற தெலுங்கு படத்தில் 19ஆவது வயதில் கதாநாயகியாக அறிமுகமானார். இவரது நடிப்பு ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றதை அடுத்து, "சௌகார் ஜானகி" ஆனார்.

டாக்டர் வி சேஷய்யா (பத்மஸ்ரீ)

கடந்த 1957ஆம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் MBBS பயின்ற டாக்டர் வி சேஷய்யா, அதன் பின்னர் இந்திய இராணுவத்தில் மருத்துவ சேவை ஆற்றினார்.

சென்னை மருத்துவக்கல்லூரியில் உதவிப்பேராசிரியராக இருந்த டாக்டர் வி சேஷய்யா, சர்க்கரை நோய் துறையை 1978'இல் தொடங்கினார்.

டாக்டர் வி சேஷய்யாவின் பிறந்தநாளான மார்ச் 10ஆம் தேதி தேசிய பேறுகால சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

A K C நடராஜன் (பத்மஸ்ரீ)

திருச்சியைச் சேர்ந்த கிளாரினெட் இசைக்கலைஞர் AKC நடராஜனுக்கு 'பத்மஸ்ரீ' விருது அறிவிக்கப்பட்டுள்ளது. காற்று இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் பாரம்பரிய குடும்பத்தை சேர்ந்தவர்.

R முத்துக்கண்ணம்மாள் (பத்மஸ்ரீ)

திருச்சி அருகே உள்ள விராலிமலையில் அமைந்துள்ள சதிர் நடனக்குடும்பத்தைச்சேர்ந்த R முத்துக்கண்ணம்மா (82), தனது எட்டு வயது முதல் நடனக் கலையை பயின்று –ள்ளார். சதிர் நடனக்கலையைப் பயிற்றுவித்து வருகிறார்.

S பல்லேஷ் பஜந்திரி (பத்மஸ்ரீ)

கலைப் பிரிவில் 'பத்மஸ்ரீ' விருது அறிவிக்கப்பட்டுள்ள பல்லேஷ் பஜந்திரி, ஷெனாய் இசைக் கலைஞராவார். ராஞ்சனா உள்ளிட்ட பல்வேறு ஹிந்தி திரைப்படங்களில் அவர் ஷெனாய் இசைத்துள்ளார்.

---

7. சிறப்பாக பணிபுரிந்ததற்காக தமிழகத்தைச் சேர்ந்த 20 காவல் அதிகாரிகளுக்கு குடியரசுத்தலைவர் விருது: செயல்பாடு, சாதனைகள் மற்றும் நன்மதிப்பு அடிப்படையில் வழங்கப்படுகிறது

சிறப்பாக பணிபுரிந்த தமிழ்நாட்டு காவல்துறையினர் 20 பேருக்கு குடியரசுத்தலைவர் விருது வழங்கப்படுகிறது.

காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு ஆண்டுதோறும் குடியரசு நாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில், இந்த ஆண்டு குடியரசுத் தலைவர் விருது பெற தமிழக காவல்துறை அதிகாரிகள் 20 பேர் தேர்வாகி உள்ளனர்.

தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவர் காவல் விருதுகள் சென்னை தலைமையிட ADGP வெங்கடராமன், தஞ்சாவூர் குற்றப்புலனாய்வுத்துறை ஆய்வாளர் சிவனருள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன.

பாராட்டத்தக்க பணிக்கான குடியரசுத்தலைவர் விருதுகள் தமிழக காவல்துறையில் 18 பேருக்கு வழங்கப்படுகின்றன.

---

8. இரயில்வே பாதுகாப்புப்படை உதவி ஆய்வாளருக்கு உயரிய விருது

குடியரசு தினத்தையொட்டி, இந்திய காவல்துறையின் உயரிய பதக்கம் தெற்கு ரயில்வேயின் பாலக்காடு கோட்டத்தின் இரயில்வே பாதுகாப்புப் படை (RPF) உதவி ஆய்வாளர் K M சுனில்குமாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

K M சுனில்குமார், இரயில்வே பாதுகாப்புப் படையில் கடந்த 1996ஆம் ஆண்டு சேர்ந்தார். இவர், பல்வேறு வழக்குகளை திறம்பட விசாரித்து, குற்றவாளிகளை கைது செய்துள்ளார். 2018ஆம் ஆண்டில், ஹவாலா வழக்கில் ₹3 கோடியே 44 லட்சத்து 54,500 ரொக்கத்தை பறிமுதல் செய்ததற்காக, இவரை கேரளகாவல்துறை பாராட்டியது குறிப்பிடத்தக்கது. சுனில் குமாரின் சிறப்பான பணியைப் பாராட்டி, இந்திய காவல்துறையின் உயரிய பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

8. வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத்தலைவர் பதக்கம்: 939 பேருக்கு அறிவிப்பு

குடியரசு நாளையொட்டி, வீரதீரச்செயல்களைப் புரிந்ததற்காக, காவல்துறையைச் சேர்ந்த 939 பேர் குடியரசுத்தலைவரின் பதக்கத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். அவர்களின் விவரங்களை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது.

நாடு முழுவதும் 939 பேர் காவல்துறையின் சிறந்த சேவைக்கான விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில், வீரதீரச்செயலுக்கான காவலர் பதக்கத்துக்கு 189 பேரும், தலைசிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவர் காவலர் பதக்கத்துக்கு 88 பேரும், தகுதிமிக்க சேவைக்கான காவலர் பதக்கத்துக்கு 662 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறும் 189 பேரில், 134 பேர் ஜம்மு–காஷ்மீரில் வீரச்செயல் புரிந்தமைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீரச்செயல் புரிந்தமைக்காக 47 பேருக்கும், வடகிழக்கு பிராந்தியத்தில் வீரச்செயல் புரிந்தமைக்காக ஒருவருக்கும் இந்தப் பதக்கம் வழங்கப்பட உள்ளது.

பதக்கம் பெறுவோரில் 115 பேர் ஜம்மு காஷ்மீர் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் ஆவர். 30 பேர் மத்திய ரிசர்வ் காவல்படையையும் (CRPF), 3 பேர் இந்திய–திபெத்திய எல்லைக்காவல்படையையும், 2 பேர் எல்லைப்பாதுகாப்புப் படையையும், 3 பேர் சசஸ்திர சீமா பல் படையையும், 10 பேர் சத்தீஸ்கர் காவல்துறையையும், 9 பேர் ஒடிஸா காவல்துறையையும், 7 பேர் மகாராஷ்டிர காவல் துறையையும், எஞ்சியவர்கள் பிறமாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

சிறைத் துறையினருக்கு சேவைப் பதக்கம்:

சிறைத்துறையினருக்கான சீர்திருத்த சேவைப் பதக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. தலைசிறந்த சேவைக்கான குடியரசுத்தலைவரின் சீர்திருத்த சேவைப் பதக்கம் 5 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சிறைத்துறையினர் 37 பேர், தகுதிமிக்க சேவையாற்றியதற்கான சீர்திருத்த சேவைப்பதக்கம்பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

அவர்களின் விவரம்:

டி பரணிதரன் – உதவி ஜெய்லர், வி பிரியா – உதவி ஜெய்லர், கே பாஸ்கர் – கிரேடு 1 வார்டர்.

6 வீரர்களுக்கு சௌர்ய சக்ரா விருது

இந்திய ராணுவம், அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த 6 வீரர்களுக்கு வீரதீரச் செயல்களுக்கான சௌர்ய சக்ரா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குடியரசு தினத்தையொட்டி இந்திய

ராணுவத்தைச் சேர்ந்த 5 வீரர்கள், அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த ஒரு வீரர் என மொத்தம் 6 பேருக்கு சௌர்ய சக்ரா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விருது அறிவிக்கப்பட்டுள்ள 5 ராணுவ வீரர்களான நாயப் சுபேதார் ஸ்ரீஜித், ஹவில்தார்கள் அனில் குமார் தோமர், காஷிராய் பம்மன்னள்ளி, பிங்கு குமார், சிப்பாய் மாருப்ரோலு ஜஸ்வந்த் குமார் ரெட்டி ஆகியோர் பயங்கரவாதிகளுடனான மோதலின்போது வீரமரணம் அடைந்தனர். இதுதவிர 4 வீரர்களுக்கு உத்தம் யுத்த சேவை விருது, 10 வீரர்களுக்கு யுத்த சேவை விருது, 84 பேருக்கு சேனை விருது (தீரச்செயல்), 40 பேருக்கு சேனை விருது (சிறப்பான சேவை) அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9. சிறந்த தேர்தல் நடைமுறை: 8 தமிழகம், புதுச்சேரி அதிகாரிகளுக்கு தேசிய விருதுகள்

2021ஆம் ஆண்டு தமிழகம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை முறையாக நடத்தி வாக்காளர்களை வாக்களிக்க ஊக்குவிக்கும் விதமாக செயல்பட்டது, தேர்தல் முறைகேடுகளைத் தடுத்தது உள்ளிட்ட பணிகளில் சிறப்பாக செயல்பட்ட 8 தமிழக, புதுச்சேரி தேர்தல் அதிகாரிகளுக்கு 12ஆவது தேசிய வாக்காளர் தினத்தையொட்டி இந்திய தேர்தல் ஆணையத்தின் சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் ஐந்து விதமான பிரிவுகளில் 23 பேருக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய விருதுகள் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. இந்திய தலைமை தேர்தல் ஆணையர்கள் முன்னிலையில் இந்த விருதுகளை மத்திய சட்டம், நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தில்லியில் செவ்வாய்க்கிழமை வழங்கினார். இதில் கடந்தாண்டு 2021 -இல் தமிழகம், மேற்கு வங்கம், கேரளம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் சிறப்பாக பணியாற்றிய பல்வேறு தரப்பினருக்கு நடப்பு ஆண்டின் சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

சிறந்த மாநில விருதுகள்: சிறப்பாக செயல்படும் மாநில விருதுகள் பிரிவில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகுவிற்கு வழங்கப்பட்டது.

தமிழகத்தில் 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் சுதந்திரமாகவும் நியாயமான முறையில் தேர்தலை சுமூகமாக நடத்த தகவல் தொழில்நுட்ப முயற்சிகள், பாதுகாப்பு மேலாண்மை மற்றும் பிற தொடர்புடைய அம்சங்களுக்காக இவ்விருது சத்ய பிரத சாகுவிற்கு வழங்கப்பட்டது.

இதே 2021ஆம் ஆண்டில் அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்ற அம்மாநில சட்டப்பேரவை தேர்தல் நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொண்ட அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நிதின் காடேவிற்கு சிறந்த மாநிலங்களுக்கான விருது கொடுக்கப்பட்டது.

சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருதுகளின் பொதுப்பிரிவில் 10 விருதுகள் வழங்கப்பட இதில் மூன்று விருதுகள் தமிழக, புதுச்சேரி மாநில அதிகாரிகள் பெற்றனர். இதில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான வி.விஷ்ணு, தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் "வாக்குச் சாவடி வழிகாட்டி" என்கிற செயலி மூலம் சமூக ஊடகங்களின் போலிச் செய்திகள், வேட்பாளர்களின் செலவுகள் உள்ளிட்டவையும் வெற்றிகரமாக கண்காணிக்கப்பட அவர் இந்த விருதை பெற்றார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்: இதேமாதிரி வாக்காளர்கள் மத்தியில் பல்வேறு புதுமையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியமைக்காக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் Dr கே செந்தில் ராஜ்க்கும் சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருது கிடைத்தது. அவர் மத்திய சட்ட அமைச்சரிடமிருந்து இவ்விருதை பெற்றார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வருவாய், உள்ளாட்சி, காவல் துறை உள்ளிட்ட முழு நிர்வாகத்தையும் வாக்காளர் விழிப்புணர்வு பணியில் ஈடுத்தப்பட்டது.

சுமார் 1 லட்சம் பள்ளி மாணவர்கள், பெற்றோருக்கு தபால் வழியாக கடிதம் எழுதி கட்டாயமாக வாக்களிக்க வேண்டும், அதுவும் வோட்டுக்கு பணம் பெறாமல் வாக்களிக்க வேண்டும் போன்றவைகளை கடிதத்தின் வாயிலாக மாணவர்கள் தெரிவித்தனர்.

பிரபலமான முத்து குளியல், கல்லூரி மாணவர்கள் ஆகியவை மூலமாக வாக்களிப்பது குறித்த விடியோ உருவாக்கப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டது. இதற்காக இந்த மாவட்ட தலைமை தேர்தல் அதிகாரி என்கிற முறையில் டாக்டர் செந்தில் ராஜ் விருதை பெற்றார்.

மேலும் புதுச்சேரி தேர்தலில் காரைக்கால் பகுதியில் சிறப்பாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காவல் கண்காணிப்பாளர் நிகரிகா பட், தமிழகம் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த வருமான வரி புலனாய்வுத் துறை இயக்குநர் ஜெனரல் பிரவீண் குமார், கூடுதல் இயக்குநர் பி எஸ் சிவசங்கரன் ஆகியோர் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் வேட்பாளர்களது செலவினங்களை கண்காணித்து 83 இடங்களில் சோதனைகளை மேற்கொண்டு ₹103 கோடி மதிப்புள்ள ரொக்கப்பணம் உள்ளிட்டவைகளை கைப்பற்றியதற்காக விருதுகளை பெற்றனர்.

இதே மாதிரி அம்பாச முத்திரம் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் அதிகாரியும் சேரன்மாதேவி துணை ஆட்சியருமான பிரதிக் தயாள், அதிக வாக்குபதிவு செய்த புதுச் சேரி மாநில துணை தலைமை தேர்தல் அதிகாரி பி தில்லைவேல் ஆகியோர் சிறந்த தேர்தல் நடைமுறைக்கா -ன தேசிய விருதைப் பெற்றனர்.

---

10. ஹிமாசல பிரதேசம் தினம்

யூனியன் பிரதேசமாக இருந்த ஹிமாசல பிரதேசம் கடந்த 1971ஆம் ஆண்டு ஜன.25ஆம் தேதி நாட்டின் 18ஆவது மாநிலமாக உருவெடுத்தது. அந்தத் தினமே ஹிமாசல பிரதேச தினமாக கொண்டாடப்படுகிறது.

---

11. சுனாமி தாக்கிய டோங்கா தீவுக்கு இந்தியா ₹1.50 கோடி நிதியுதவி

சுனாமி தாக்கிய டோங்கா தீவுக்கு உடனடி நிவாரணமாக இந்தியா சார்பில் $2 லட்சம் டாலர்கள் (சுமார் ₹1.50 கோடி) நிதியுதவி வழங்கப்படுகிறது.

கடந்த ஜன.15ஆம் தேதி தென் பசிபிக் தீவுகளில் ஒன்றான டோங்கா அருகே கடலுக்கு அடியில் எரிமலை வெடித்தது. அதனைத்தொடர்ந்து டோங்காவில் ஆழிப்பேரலைத் தாக்கியது. இந்தப் பேரிடரில் 3 பேர் பலியாகினர். அந்தத் தீவின் மொத்த மக்கள்தொகையில் 5இல் 4 பங்கு பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்–ட அறிக்கையில், "இந்திய–பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு கூட்டமைப்பின்கீழ் 'நெருங்கிய நட்பு நாடு' என்ற அடிப்படையிலும், இந்தியா உறுதுணையாக இருப்பதை வெளிப்படுத்தும் நோக்கிலும் இந்த உதவி டோங்காவுக்கு வழங்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

12. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 9%ஆக குறைத்தது IMF

சர்வதேச செலாவணி நிதியம் (IMF), நடப்பு நிதியாண்டுக்–கான பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 9 சதவீதமாக குறைத்துள்ளது.

இதுகுறித்து அந்நிதியத்தின் உலகப் பொருளாதார ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

புதிய வகை கரோனா தீநுண்மி வேகமாக பரவி வருவது வர்த்தக நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனைக்கருத்தில்கொள்ளும்போது நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9% அளவுக்கே இருக்கும் என தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டு அக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 9.5 சதவீதமாகவும், ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரையிலான 2023ஆம் நிதியாண்டில் 7.1 சதவீதமாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. சாதகமற்ற நிலவரங்களையடுத்து தற்போது இம்மதிப்பீடு குறைக்கப்–பட்டுள்ளது.

கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதா–ரம் 7.3% பின்னடைவைக்கண்டது என அவ்வறிக்கையி–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய புள்ளியியல் அலுவலகம் நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளது. ரிசர்வ் வங்கி மதிப்பீட்டில் இது 9.5 சதவீதமாக இருக்கும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், IMF மதிப்பீடு அதைவிட குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

13. வாக்களிப்பதை கட்டாயமாக்க 86% இந்தியர்கள் விருப்பம்: ஆய்வில் தகவல்

12ஆம் தேசிய வாக்காளர் நாளையொட்டி வெளியிடப்பட்ட ஆய்வு ஒன்றின்படி வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டும் என்று 86 சதவீத இந்தியர்கள் விரும்புவது தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணையம் கடந்த 1950ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் தேதி நிறுவப்பட்டது. கடந்த 2011 முதல் இந்த நாள் தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. புதிய மற்றும் இளம் வாக்காளர்களின் பெயர்களைப் பதிவு செய்ய இது ஊக்கமளிக்கிறது.

இந்நிலையில், நாடு முழுவதும் நான்கு லட்சம் பேரிடம் பப்ளிக் ஆப் என்ற சமூக வலைதளம் ஆய்வு ஒன்றை நடத்தியது. அந்த ஆய்வின்படி நாட்டின் தற்போதைய வாக்குப்பதிவு முறை மீது 80 சதவீதம் பேர் நம்பிக்கையை தெரிவித்தனர்.

"வாக்களிப்பது எனன்ற கடமையானது சமூக வளர்ச்சிக்கு இந்தியக் குடிமக்களின் முக்கியமான பங்களிப்பாகும். வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டுமா என்ற கேளவிக்கு 86 சதவீதம் பேர் ஆம் என்று பதிலளித்தனர்" என்று இந்த ஆய்வு கூறுகிறது.

உத்தர பிரதேசம், உத்தரகண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த மாதம் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 60 சதவீதம் பேர் 30 வயதுக்கும் கீழ் உள்ளவர்களாவர். எதை அடிப்படையாக வைத்து வாக்களிப்பீர்கள் என்ற கேள்விக்கு களத்தில் உள்ள வேட்பாளர் கடந்த முறை எவ்வாறு செயல்பட்டார் என்பதை அடிப்படையாக வைத்து வாக்களிப்போம் என்று 34 சதவீதம் பேர் பதிலளித்தனர்.

அனைத்து வேட்பாளர்களையும் விரிவாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் வாக்களிப்போம் என்று 31 சதவீதம் பேர் தெரிவித்தனர்.

ஒட்டுமொத்த செல்வாக்கை வைத்து வாக்களிப்பதாக 4.96 சதவீதம் பேரும் வேட்பாளர்களின் அரசியல் கட்சியை வைத்து வாக்களிப்பதாக 11.92 பேரும் தெரிவித்தனர்.

மக்கள் வாக்களிக்கத் தவறுவது ஏன் என்பது குறித்து இந்த ஆய்வில் கேட்கப்பட்டது. அதற்கு வாக்குப்பதிவின்போது உள்ளூரில் இல்லாமல் மற்றொரு நகரில் இருப்பதுதான் முக்கிய காரணம் என்று 30.04 சதவீதம் பேர் தெரிவித்தனர். எனினும் 56.3 சதவீதம் பேர் தாங்கள் வாக்களிக்கத் தவறியதே இல்லை என்று குறிப்பிட்டனர்.

கடந்த காலங்களில் வாக்களிக்காமல் இருந்ததற்கு தேர்தல் குறித்த தகவல் இல்லாதது (5.22 சதவீதம்), எந்தக் கட்சியையும் ஆதரிக்காதது (7.19), அக்கறை செலுத்தாதது (1.27) போன்ற காரணங்களையும் ஆய்வில் பங்கேற்றோர் தெரிவித்தனர்.

இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 79.5 சதவீதம் பேர் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது வாக்களித்திருப்பதாக கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

14. ஜஜாரியாவுக்கு பத்ம பூஷண்; நீரஜுக்கு பத்ம ஸ்ரீ

பாரா ஈட்டி எறிதல் வீரர் தேவேந்திர ஜஜாரியாவுக்கு 'பத்ம பூஷண்' விருதும், ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு 'பத்மஸ்ரீ' விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இதில் 'பத்ம ஸ்ரீ' விருதுக்கு நீரஜ் சோப்ரா உள்பட 8 பேர் தேர்வாகியுள்ளனர்.

2004 (ஏதென்ஸ்), 2016 (ரியோ) ஆகிய பாராலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் தேவேந்திர ஜஜரியா, கடந்த ஆண்டு நடந்த டோக்கியோ பாராலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் பெற்றிருந்தார். மறுபுறம், நீரஜ் சோப்ராவோ டோக்கியோ ஒலிம்பிக்கில் முதலிடம் பிடித்து, போட்டியின் வரலாற்றில் தடகள பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்தார்.

நீரஜ் சோப்ராவோடு, பாரா துப்பாக்கி சுடுதல் வீராங்கனை அவனி லெகாரா, பாரா பாட்மின்டன் வீரர் பிரமோத் பகத், பாரா ஈட்டி எறிதல் வீரர் சுமித் அன்டில், தற்காப்புக் கலையான 'கலரிப்பயட்டு' ஜாம்பவான் சங்கரநாராயண மேனன் சுண்டயில், முன்னாள் சர்வதேச தற்காப்புக்கலை சாம்பியன் பைசல் அலி தார், இந்திய கால்பந்து அணி முன்னாள் கேப்டன் பிரம்மானந்த் சங்க்வல்கர், ஹாக்கி வீராங்கனை வந்தனா கட்டாரியா ஆகியோரும் 'பத்ம ஸ்ரீ' விருது பெறுகின்றனர்.

---

15. T20 தரவரிசை: மீண்டும் முதலிடத்தில் ஷபாலி வர்மா

மகளிர் T20 கிரிக்கெட்டில் ICC தரவரிசையில் பேட்டர்கள் பிரிவில் இந்தியாவின் ஷபாலி வர்மா மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

ICC வெளியிட்ட புதிய தரவரிசையின்படி, ஷபாலி ஓரிடம் முன்னேறி முதலிடத்தைப் பிடிக்க, ஸ்மிருதி மந்தனா ஓர் இடம் சறுக்கி 4ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பெத் மூனி மற்றும் மெக் லேனிங் ஆகியோர் முறையே 2, 3ஆவது இடங்களில் உள்ளனர்.

பௌலர்கள் பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா ஓரிடம் ஏற்றங்கண்டு 4ஆவது இடத்தை எட்டியிருக்கிறார். முதல் 3 இடங்களில் மாற்றமின்றி இங்கிலாந்தின் சோபி எக்லஸ்டோன், சாரா கிளென், தென்னாப்பிரிக்காவின் ஷப்னிம் இஸ்மாயில் ஆகியோர் தக்கவைத்துக்கொண்டு உள்ளனர்.

ஆல்–ரவுண்டர்கள் பிரிவிலும் தீப்தி சர்மா ஓரிடம் முன்னே –றி 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். நியூஸிலாந்தின் சோபி டிவைன், இங்கிலாந்தின் நேட் ஸ்கிவர் ஆகியோர் முதலிரு இடங்களில் தொடர்கின்றனர்.

---

16. 15 இலட்சம் கிலோமீட்டர் தொலைவு சென்று இலக்கை அடைந்தது ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA அனுப்பியுள்ள உலகின் மிகப்பெரிய 'ஜேம்ஸ் வெப்' விண்வெளி தொலைநோக்கி செயற்கைக்கோள் அதன் இலக்கை அடைந்தது.

பிரபஞ்சம் தோன்றியபோது உருவான நட்சத்திரங்கள் குறித்து ஆய்வுசெய்வதற்காக 'ஜேம்ஸ் வெப்' தொலை நோக்கியை NASA உருவாக்கியது. 10 பில்லியன் டாலர் (சுமார் ₹74,000 கோடி) மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட இத் தொலைநோக்கி கடந்த டிசம்பர்.25ஆம் தேதி ஏவுகலம் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், பூமியிலிருந்து 15 இலட்சம் கிலோமீட்டர் தொலைவைக் கடந்து அதன் இறுதி சுற்றுவட்டப் பாதையை 'ஜேம்ஸ் வெப்' தொலைநோக்கி அடைந்தது. 'L2' என்ற சுற்றுவட்டப் பாதையில் அது சுற்றிவரும்.

ஆரம்பகால பிரபஞ்சத்தின் இரகசியத்தை இந்தத் தொலை நோக்கி வெளிக்கொண்டுவரும் என நம்பும் அறிவியலாள –ர்களுக்கு இது மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. ஜூலையிலிருந்து 'ஜேம்ஸ் வெப்' தொலைநோக்கியின் தரவுகள் கிடைக்கக்கூடும் என NASA தெரிவித்துள்ளது.

---

17. சத்தியமங்கல புலிகள் காப்பகத்துக்கு சர்வதேச விருது

உலகிலேயே 10 ஆண்டுகளில் புலிகள் எண்ணிக்கை இருமடங்குக்கும் மேல் உயர்ந்ததற்காக சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு சர்வதேச விருதான 'TS2' என்ற உயரிய விருது வழங்கப்படுகிறது.

நீலகிரி மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் 1,455 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள சத்தியமங்கலம் வனவுயிரிகள் சரணாலயம் 2013 டிச.1ஆம் தேதி சத்தியமங்கலம் புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது. அப்போது, சுமார் 30 புலிகள் இருந்ததாக அப்போதைய கணக்கெடுப்பில் தெரியவந்தது.

2013ஆம் ஆண்டு முப்பது புலிகளாக இருந்த காப்பகத்தில் தற்போது 80 புலிகள் உள்ளது தெரியவந்துள்ளது.

உலக அளவில் புலிகளை பாதுகாப்பதற்கு ரஷியா, சீனா, இந்தோனேசியா, வங்கதேசம் உள்ளிட்ட 13 நாடுகளில் உள்ள கன்சர்வேஷன் & டைகர் ஸ்டான்டர்டு, வைல்டு லைப் கன்சர்வேஷன் ஆப் சொசைட்டி, உலகளாவிய நிதியகம் என 13 அமைப்புகள் கூட்டமைப்பு ஏற்படுத்தியுள்ளன. இந்தக் கூட்டமைப்பு 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தும் நோக்கில் 2010ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டில் இருமடங்காக உயர்த்திய நாட்டுக்கு 'TS2' எனும் சர்வதேச விருது வழங்கப்படும் என அந்தக் கூட்டமைப்பு அறிவித்தது.

இதன்படி, சர்வதேச அளவில் 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கை இருமடங்குக்கும்மேல் உயர்ந்ததற்காக 'TS2' என்ற விருது முதல் பரிசாக சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு வழங்கப்பட்டது. 2ஆவது பரிசு நேபாளத்தில் உள்ள பர்தியா தேசியப்பூங்காவுக்கு வழங்கப்பட்டது.

---

18. சேலம் வனப்பகுதிகளில் புதிய வகை பச்சைப் புறா, பட்டாம்பூச்சி இனம்

சேலம் மாவட்டத்தில் புதிய வகை செம்மஞ்சள் மார்பு பச்சைப்புறா, 'கொக்கிகுறி வெள்ளையன்' என்ற பட்டாம்பூச்சி இனம் கண்டறியப்பட்டது.

இதுதொடர்பாக மாவட்ட வன அலுவலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் காப்புக்காடுகள் 115494.5 ஹெக்டேர் பரப்பளவும் மற்றும் காப்புநிலங்கள் 9268.420 ஹெக்டேர்

பரப்பளவும் என மொத்தம் 124762.9 ஹெக்டேர் பரப்பளவி –ல் வனங்கள் உள்ளன.

இக்காப்புக் காடுகளில் யானை, காட்டு மாடு, கரடி, மான், முள்ளம்பன்றி, உடும்பு, காட்டுப்பன்றி, குரங்குகள், மலைப் பாம்பு, மயில் உள்ளிட்ட பல்வேறு வகையான வன உயிரினங்கள், பறவை இனங்கள் வாழ்ந்து வருகின்றன.

சேலம் வன மண்டலம் – சேலம் வனக்கோட்டத்துக்கு உள்பட்ட சேர்வராயன் தெற்கு வனச்சரகம், சேர்வராயன் வடக்கு வனச்சரகம், டேனிஷ்பேட்டை, மேட்டூர், ஏற்காடு, ஆத்தூர், வாழப்பாடி, தம்மம்பட்டி, கல்வராயன் ஆகிய 9 வனச்சரகங்களை உள்ளடக்கியதாகும்.

கணக்கெடுப்புப் பணி...

இந்த வனச்சரகங்களில் உள்ள காப்புக்காடு, காப்பு நில வனப்பகுதியில் சுமார் 40 வனப்பணியாளர்கள் அடங்கிய குழுவினர் மற்றும் 83 நபர்கள் அடங்கிய தன்னார்வலர்க –ள் ஆகியோர் 16 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கடந்த 2021, பிப்.17 முதல் பிப்.19 வரை மூன்று நாள்கள் 2021ஆம் ஆண்டுக்கான பறவைகள், பட்டாம்பூச்சிகளைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டனர்.

சேலம் மாவட்ட வனங்களில் 225 வகையான பறவை இனங்கள் உள்ளன. இப்பறவைகள் கணக்கெடுப்பின் போது சேலம் மாவட்டத்தை வழியாகக்கொண்ட 175 வகையான இனங்களும், வெளிமாநிலம் மற்றும் மாவட்டங்களில் வாழும் 49 இனங்களும் மற்றும் பொதுவாக தெற்காசிய நாடுகளில் காணப்படும் (செம் மஞ்சள்மார்பு பச்சைப்புறா) என்ற புதிய வகை பறவை இனமும் கண்டறியப்பட்டன.

செம்மஞ்சள்மார்பு பச்சைப்புறா பறவை இனமானது பழ வகைகளை உண்ணக்கூடியது; ஜோடியாகவும், சிறுசிறு கூட்டங்களாகவும் வாழும் குணமுடையது.

இவை அமைதியாகவும், மரங்களில் மெதுவாக நகர்ந்து இரைதேடும் பழக்கமுடையவை. சேர்வராயன் மலை அடிவாரப்பகுதிகளில் இப்பறவை தென்பட்டுள்ளது.

பட்டாம்பூச்சி கணக்கெடுப்பு:

பட்டாம்பூச்சிகள் கணக்கெடுப்பில் 147 பட்டாம்பூச்சி இனங்கள் கண்டறியப்பட்டன. இதில், சேலம் மாவட்டத்தில் வாழும் 146 இனங்கள் மற்றும் இந்தியா (இமயமலை), சீனா, நேபாளம், இந்தோனேசியா, பாகிஸ்தான், மியான்மர், சிக்கிம், பூடான் ஆகிய நாடுகளில் வாழும் இனமான 'கொக்கிக்குறி வெள்ளையன்' என்ற புதிய வகை பட்டாம்பூச்சியும் கண்டறியப்பட்டன.

1. இந்தியாவின் முதல் சானிட்டரி நாப்கினற்ற கிராமமான 'கும்பலாங்கி' அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா ☑

இ) கர்நாடகா

ஈ) ஒடிஸா

✓ இந்தியாவிலேயே முதன்முறையாக சானிட்டரி நாப்கின் பயன்பாடற்ற கிராமமாக கும்பலாங்கி திகழ்கிறது. இது கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது எர்ணாகுளம் தொகுதியில் செயல்படுத்தப்படும் 'அவள் காயி' (அவளுக்காக) என்ற திட்டத்தின் ஒருபகுதியாகும்.

✓ இதன்கீழ் பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடை மகளிர்க்கு மாதவிடாய் கோப்பைகள் வழங்கப்படவுள்ளன. கும்பலாங்கி கிராமத்தை முன்மாதிரி கிராமமாக கேரள ஆளுநர் அறிவித்துள்ளார். இது இந்தியாவின் முதல் 'மாதிரி சுற்றுலா கிராமம்' என்ற பட்டத்தையும் பெற்றுள்ளது.

---

2. Tu–160M / White Swan Bomber'ஐ உருவாக்கிய நாடு எது?

அ) இஸ்ரேல்



ஆ) இந்தியா

இ) சீனா

ஈ) ரஷ்யா ☑

✓ ரஷ்யா தனது 'Tu–160M' உத்திசார் குண்டுதாரியான 'வைட் ஸ்வான்'ஐ உருவாக்கியுள்ளது. அண்மையில் இதன் பரிசோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ரஷ்ய இராணுவத்தின்படி, புதிதாக உருவாக்கப்பட்ட இக்குண்டு தாரியை சுமந்துசெல்லும் 'Tu–160M' ஏவுகணையின் 80% உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அணு மற்றும் வழமையான ஆயுதங்கள்மூலம் தொலைதூரத்தில் உள்ள எதிரி இலக்குகளையும் இது தாக்கும்.

3.எவ்வகையான LED, மின்னோட்டத்திற்கு பதிலளிக்கும் வகையில் ஒளியை உமிழும் கரிம சேர்மத்தை படலமாகப் பயன்படுத்துகிறது?

அ) QLED



ஆ) OLED ☑

இ) பீட்டா LED

ஈ) மெட்டா LED

✓ ஆர்கானிக் லைட்–எமிட்டிங் டையோடு (OLED) என்பது ஒரு வகை LED (ஒளி–உமிழும் டையோடு) ஆகும். இதில் உள்ள எமிசிவ் எலக்ட்ரோலுமினசென்ட் லேயர் என்பது மின்னோட்டத்திற்கு பதிலளிக்கும் ஓர் ஒளியை உமிழும் கரிம சேர்மத்தின் படலமாகும். இது Liquid Crystal Display –களுக்கு ஒரு மாற்றாக உள்ளது. சமீபத்தில், மினசோட்டா பல்கலை, எம்ஐடி, கொரிய இன்டஸ்ட்ரியல் டெக்னாலஜி நிறுவனம் மற்றும் பூசன் தேசிய பல்கலை ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் குழு, முழுவதுமாக 3D–அச்சிடப்பட்ட ஒரு நெகிழ்வான OLED டிஸ்ப்ளேக்களை உருவாக்கும் ஓர் அச்சிடும் நுட்பத்தை செய்து காண்பித்தது.

4. ICANN–ஆதரவிலான யுனிவர்சல் அக்செப்டென்ஸ் வழி செலுத்து குழுவின் தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ) விஜய் சேகர் சர்மா ☑



ஆ) சச்சின் பன்சால்

இ) பவிஷ் அகர்வால்

ஈ) தீபிந்தர் கோயல்

✓ உலகளாவிய இணைய அமைப்பான ICANN–ஆதரவு யுனிவர்சல் அக்செப்டன்ஸ் வழிசெலுத்து குழுமமானது Paytm நிறுவனர் விஜய் சேகர் சர்மாவை அதன் தூதராக நியமித்துள்ளது. இணையத்தை அணுகுவதற்கு தற்போது பயன்படுத்தப்படாத மொழிநிரல்களுக்கான தரநிலையை உருவாக்கி அதைப் பரிந்துரைப்பதில் குழு செயல்படுகிறது.

---

5. டிமிடர் கோவசெவ்ஸ்கி என்பவர் எந்த நாட்டின் புதிய பிரதமரானார்?

அ) கிரேக்கம்



ஆ) வடக்கு மாசிடோனியா ☑

இ) எகிப்து

ஈ) அர்ஜென்டினா

✓ வடக்கு மாசிடோனியாவின் நாடாளுமன்றம் புதிய சமூக ஜனநாயகத் தலைவரான டிமிடர் கோவசெவ்ஸ்கியின்கீழ் புதிய அமைச்சரவையைத் தேர்ந்தெடுத்தது. அவர் தனது சமூக ஜனநாயக முன்னோடியான சோரன் ஜாவ்வை அடுத்து பதவியேற்றார். தற்போதைய எரிசக்தி நெருக்கடி மற்றும் பல்கேரியாவுடனான முக்கிய பேச்சுவார்த்தைக –ளை சமாளிப்பது தனது உடனடி பணிகள் என்று புதிய பிரதமர் அறிவித்தார். வடக்கு மாசிடோனியா குடியரசு என்பது தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடாகும்.

---

6. உழவர்களின் உணவுப்பாதுகாப்பை மேம்படுத்துவதற் –காக உலக உணவுத் திட்டத்துடன் கைகோர்த்த இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) ஒடிஸா ☑

இ) தெலுங்கானா

ஈ) அஸ்ஸாம்

✓ சிறு மற்றும் குறு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக ஐநாவின் உலக உணவுத்திட்டமும் ஒடிஸா மாநில அரசும் கைகோர்த்துள்ளன.

✓ பருவநிலை மாற்றத்திற்கு ஏதுவாக உழவர்களின் நெகிழ் திறனை வலுப்படுத்துவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக உணவுத்திட்டமும் உழவுத்துறை –யும் சிறு உழவர்களுக்கு சேவைகளை வழங்குதற்கான கருவிகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்கும்.

---

7. இராபர்ட்டா மெட்சோலா என்பவர் எந்தப் பன்னோக்கு நிறுவனத்தின் இளவயது தலைவராகியுள்ளார்?

அ) ஐரோப்பிய நாடாளுமன்றம் ☑



ஆ) யுனெஸ்கோ

இ) யுனிசெப்

ஈ) உலக வங்கி

✓ மத்திய வலதுசாரி சட்டமியற்றுநர் இராபர்ட்டா மெட்சோலா ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 3ஆம் பெண் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகச்சிறிய நாடான மால்டாவைச் சேர்ந்த 43 வயதான இவர், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மிக இளம் வயது தலைவராகவும் உள்ளார்.

---

8. 'பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்புக்கான கூட்டணி'யை தொடக்கிய நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ஆஸ்திரேலியா

இ) இந்தியா ☑

ஈ) சீனா

✓ 2019ஆம் ஆண்டு நியூயார்க்கில் நடந்த ஐநா காலநிலை நடவடிக்கை உச்சிமாநாட்டில் 'பேரிடர் தாங்கக்கூடிய உட்கட்டமைப்புக்கான கூட்டணி'யை இந்தியா அறிவித்தது. தேசிய பேரிடர் மீட்புப்படை நாள் ஆண்டுதோறும் ஜன.19 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 2006'இல் இதே நாளில் உள்துறை அமைச்சகத்தின்கீழ், தேசிய பேரிடர் மீட்புப்படை (NDRF) உருவாக்கப்பட்டது.

---

9. இந்தியாவிலிருந்து பிரம்மோஸ் ஏவுகணைகளை கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் அளித்த முதல் நாடு எது?

அ) பிலிப்பைன்ஸ் ☑



ஆ) இஸ்ரேல்

இ) ரஷ்யா

ஈ) ஆஸ்திரேலியா

✓ பிலிப்பைன்ஸ் நாட்டின் கடற்படைக்கு கரையில் இருந்து கப்பலை எதிர்க்கும் ஏவுகணைகளை கொள்முதல் செய்வதற்காக பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனத்திற்கு $374 மில்லியன் ஒப்பந்தத்தை அந்நாடு வழங்கியுள்ளது.

✓ இந்தியா–ரஷ்ய கூட்டு முயற்சியான 'பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ்', நீர்மூழ்கிக்கப்பல்கள், கப்பல்கள், விமானங்கள் (அ) தரையிலிருந்து ஏவக்கூடிய சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணையான 'பிரம்மோஸ்'ஐ தயாரிக்கிறது.

---

10. 'Pandemic Billionaires' என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்றை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) பிரதம் அறக்கட்டளை

ஆ) ஆக்ஸ்பாம் ☑

இ) பன்னாட்டு மன்னிப்பு அவை

ஈ) யுனிசெப்

✓ ஆக்ஸ்பாமின் அண்மைய அறிக்கையின்படி, ஆசியாவில் உள்ள (இந்தியா, சீனா, ஹாங்காங் மற்றும் ஜப்பானைச் சேர்ந்தவர்கள்) 20 பேரின் (பெரும்பாலும் மருந்துத்துறை உடன் தொடர்புடையவர்கள்) செல்வநிலை தொற்றுநோய் காலத்தில் பல்கிப்பெருகியுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, இப்பகுதியில் உள்ள ஏழ்மையான 90 சதவீதத்தினரைவிட 1 சதவீத பணக்காரர்கள் அதிக சொத்துவைத்திருந்தனர். 2020 மார்ச் மாதத்தில் 803ஆக இருந்த மொத்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 1/3 பங்கு அதிகரித்து, கடந்த ஆண்டு நவம்பரில் 1,087 ஆக உயர்ந்துள்ளது. அவர்கள் அனைவரையும் இவ்வறிக்கை 'தொற்றுநோய்கால பில்லியனர்கள்' என அழைக்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு பிப்.19–ல் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளில் பிப்.19–ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல் ஒரே கட்டமாக நடத்தப்படுகிறது. 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சிகள் உள்ளன. 21 மாநகராட்சிகளில் 1,374 வார்டு உறுப்பினர் பதவியிடங்கள், 138 நகராட்சிகளில் 3,843 வார்டு உறுப்பினர் பதவியிடங்கள், 490 பேரூராட்சிகளில் 7,621 வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் என மொத்தம் 12,838 வார்டு உறுப் பினர் பதவிகளுக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இந்த பதவிகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் கட்சி அடிப்படையில் நடக்கும்.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 28–ம் தேதி (நாளை) தொடங்குகிறது. காலை 10 முதல் மாலை 5 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்படும். பிப்.4–ம் தேதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். மனுக்கள் மீதான பரிசீலனை பிப்.5–ம் தேதி நடக்கும். மனுக்களை திரும்பப் பெற பிப்.7 கடைசி நாளாகும். அன்று மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

வாக்குப்பதிவு பிப்.19–ம் தேதி ஒரே கட்டமாக நடக்கிறது. காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடக்கும். மாலை 5 முதல் 6 மணி வரை கரோனா அறிகுறி உள்ளவர்கள் மற்றும் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

தேர்தல் நடக்கும் மாநகராட்சிகளில் 15,158, நகராட்சிகளில் 7,417, பேரூராட்சிகளில் 8,454 என மொத்தம் 31,029 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. அதிகபட்சமாக சென்னை மாநகராட்சியில் 5,794 வாக்குச் சாவடிகள் உள்ளன.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வைப்புத் தொகையாக பேரூராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹500, நகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹1,000, மாநகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹2 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிற வேட்பாளர்களுக்கு வைப்புத் தொகையாக பேரூராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹1,000, நகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹2,000, மாநகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹4,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

---

2. பொதுநூலக சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முன்னாள் துணைவேந்தர் M ராஜேந்திரன் தலைமையில் குழு: தமிழக அரசு அரசாணை பிறப்பிப்பு

பொது நூலகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்வதற்காக முன்னாள் துணைவேந்தர் M ராஜேந்திரன் தலைமையில் ஓர் உயர்நிலைக்குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ப

பொது நூலகங்களுக்கான நிதிநிலையை மேம்படுத்துதல் மற்றும் நிதி ஆதாரத்தை ஏற்படுத்தும் வகையில் தற்போதைய பொது நூலகச் சட்டத்தில் திருத்தம் செய்வது அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய நவீன தொழில் நுட்பத்துக்கு ஏற்ப வாசகர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கவும், நவீன தகவல் வளங்களை நூலகங்களுக்கு வழங்கவும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு பொது நூலகச் சட்டத்தில் உரியதிருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுநூலக இயக்குநர் கூறியுள்ளார்.

நேரடி நியமன முறையில் பணி

மேலும், பொது நூலகங்களில்பணியாற்றும் நூலகர்களுக்கு பணிவிதிகளை முறைப்படுத்த வேண்டும். பொது நூலகங்களில்உள்ள அனைத்து பணியிடங்களிலும் நேரடி நியமன முறையில் பணியாளர்களை நியமிக்கும் வகையில்விதிகளை முறைப்படுத்த வேண்டும்.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் புதிதாக அமையவுள்ள கலைஞர்நினைவு நூலகம் ஆகியவற்றைஒரே அலகாகக் கருதி பணியிடங்களை உருவாக்கி அவற்றை நிரப்ப உரிய திருத்தங்கள் மேற்கொள்வதும் அவசியம். எனவே, இத்திருத்தங்களை மேற்கொள்ள ஓர் உயர்நிலைக் குழுவை அமைக்கலாம் என்றும் பொதுநூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இயக்குநரின் கருத்துருவை ஏற்று, தமிழ்நாடு பொதுநூலகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எம்.ராஜேந்திரன் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

இந்த உயர்நிலைக்குழு தனது அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

---

3. நாஞ்சில் சம்பத், சுகி சிவம், பாரதி பாஸ்கர்: தமிழ் வளர்ச்சித்துறை விருதுகள் அறிவிப்பு

கடந்த 2021ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சித்துறை விருதுகளை முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தி வழங்கி வருகிறது. அவ்வகையில் தமிழ்நாடு அரசின் விருதுகளுக்கான விருதாளர்களை தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பில், அந்த வகையில், 2021ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது – நாஞ்சில் சம்பத், மகாகவி பாரதியார் விருது – பாரதி கிருஷ்ணகுமார், பாவேந்தர் பாரதிதாசன் விருது – புலவர் செந்தலை கவுதமன், சொல்லின் செல்வர் விருது – சூர்யா சேவியர், சிங்காரவேலர் விருது – கவிஞர் மதுக் கூர் இராமலிங்கம், தமிழ்த்தாய் விருது – மலேசியத்தமிழ் எழுத்தாளர் சங்கம், அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் இரா. சஞ்சீவிராயர், சி. பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது – உயிர்மை திங்களிதழ், தேவநேயப் பாவாணர் விருது – முனைவர் கு. அரசேந்திரன், உமறுப் புலவர் விருது – நா. மம்மது, கிஆபெ விருது – முனைவர் ம ராசேந்திரன், கம்பர் விருது – பாரதி பாஸ்கர், ஜி யு போப் விருது – AS பன்னீர்செல்வம், மறைமலையடிகள் விருது – சுகி சிவம், இளங்கோவடிகள் விருது– நெல்லைக் கண்ணன், அயோத்திதாசப் பண்டிதர் விருது – ஞான. அலாய்சியஸ் அவர்களுக்கும் வழங்கிட ஆணையிடப் பெற்றுள்ளன.

இவ்வாண்டு முதல் விருது பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ₹1,00,000/–லிருந்து ₹2,00,000/– உயர்த்தியும் ஒரு சவரன் தங்கப்பதக்கம், விருதுக்கான தகுதியுரை ஆகியன வழங்கி பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப் பெறுவர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. காவல் ஆய்வாளர் உள்பட எட்டு பேருக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம்:

பெண் காவல் ஆய்வாளர் உள்பட எட்டு பேருக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள் வழங்கப்பட்டது.

அண்ணா பதக்கம்: பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கிக்கொண்ட பொதுமக்களை, களத்தில் இறங்கி வீர தீரத்துடன் காப்பாற்றியவர்களை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. நிகழாண்டில், எட்டு பேருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட்டது.

சென்னை ஓட்டேரி பகுதியில் மழை வெள்ளத்தில் சிக்கியவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்ததுடன், காணாமல்போன மாற்றுத்திறனாளி சிறுவனையும் 3

மணி நேரத்துக்குள் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தார், கீழ்ப்பாக்கம் காவல் ஆய்வாளர் இராஜேஸ்வரி.

வெள்ளத்தில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 2 நபர்களை மீட்டு கரை சேர்த்தார் விழுப்புரம் மாவட்டம் அத்தியூர் திருவாதியைச் சேர்ந்த தீயணைப்பு வீரர் மூ ராஜீவ்காந்தி. பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் விளைவித்த யானைகளை யாருக்கும் எந்தப் பாதகமும் இல்லாமல் பிடிக்க பேருதவி புரிந்த கோவை மாவட்டம் அன்னூர் வட்ட வனக்கால்நடை உதவி மருத்துவர் கி அசோகன் ஆகிய அரசு ஊழியர்களுக்கு வீர தீரச்செயலுக்கான அண்ணா பதக்கத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

பொதுமக்கள் பிரிவு: சாலைவிபத்தின்போது கண்மாய்க்கு –ள் விழுந்து நீரில் மூழ்கிக் கொண்டிருந்தவர்களை துணிச்சலுடன் போராடி காப்பாற்றினார் சிவகங்கை மாவட்டம் வைகை வடகரையைச்சேர்ந்த முத்துகிருஷ் –ணன்.

குளிக்கச்செல்லும்போது நிலைதடுமாறி கிணற்றில்விழுந்த சிறுமியைக் காப்பாற்றினார் திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த சிறுவன் லோகித்.

வாய்க்காலில் மூழ்கி உயிருக்குப்போராடிக்கொண்டிருந்த ஐந்து பேரைக் காப்பாற்றினார் திருப்பூர் மாவட்டம் வே கள்ளிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த சொக்கநாதன், சுதா என்ற பேச்சியம்மாள்.

திருவொற்றியூரில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுவதற்குள் மக்கள் அனைவரையும் வெளியேற்றி பேரிழப்பை தடுத்து நிறுத்தினார் திருவொற்றியூரைச் சேர்ந்த மு தனியரசு. வெவ்வேறு நிகழ்வுகளில் வீரதீரச் செயல்களின் மூலமாக உயிர்களைக் காத்த 8 பேருக்கும் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார். இந்த விருதானது தலா ₹1 லட்சக்கான காசோலை, ₹9,000 மதிப்புள்ள தங்கமுலாம் பூசிய பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

கோட்டை அமீர் பதக்கம்: கோவை மாவட்டத்தில் மத நல்லிணக்கத்துக்காக தொடர்ந்து பல்வேறு நற்செயல்களில் ஈடுபட்டு வருபவர், ஜே முகமது ரபி. கோவை கே கே புதூரைச் சேர்ந்த அவர், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கத்துக்குத் தேர்வு செய்யப்பட்டார். பதக்கமும், ₹25 ஆயிரத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ் அடங்கிய கோட்டை அமீர்பதக்கத்தை முதல்வர் மு க ஸ்டாலினிடம் இருந்து பெற்றார் முகமது ரபி.

சிறந்த வேளாண்மை: செம்மை நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி ஹெக்டேருக்கு 13 ஆயிரத்து 800 கிலோ நெல் தானிய மகசூல் பெற்ற சேலம் மாவட்டம் பூலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செ ராமசாமி, முதலமைச்சரின் சி நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருதினைப்பெற்றார். ₹5 இலட்சம், பதக்கம், சான்றிதழ் அடங்கியது இந்த விருது.

காந்தியடிகள் காவலர் பதக்கம்: கள்ளச்சாராய ஒழிப்பில் சிறந்த முறையில் பணியாற்றிவரும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் காந்தியடிகள் காவலர் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு குடியரசு தினத்தில் ஐவருக்கு இந்தப் பதக்கம் அளிக்கப்பட்டது. இந்த விருது ₹40 ஆயிரத்துக்கான காசோலை, பதக்கம் அடங்கியது.

---

5. தனி மாவட்டமாக திருப்பதி உதயம்: ஸ்ரீ பாலாஜி மாவட்டமாக அரசு கெஜட்டில் வெளியீடு

ஆந்திராவில் தற்போது 13 மாவட்டங்கள் உள்ளன. இவற்றை மக்களவைத் தொகுதிகளின் அடிப்படையில் 26 மாவட்டங்களாக உருவாக்க ஜெகன் மோகன் தலைமையிலான அரசு முடிவுசெய்தது. இதன்படி அமைச்சரவை ஒப்புதலுக்குப்பிறகு புதிய மாவட்டங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் தொடர்பான அறிவிப்பை ஆந்திர அரசு நேற்று வெளியிட்டது.

இதன்படி ஆந்திராவில், ஸ்ரீகாகுளம், மன்யம், விஜயநகரம், அல்லூரி சீதாராம ராஜு, விசாகப்பட்டினம், அனகாபள்ளி, காக்கிநாடா, கோனசீமா, இராஜ மகேந்திர வரம், பீமவரம், ஏலூரு, கிருஷ்ணா, விஜயவாடா, குண்டூர், பல்நாடு, பாபட்லா, நெல்லூர், கர்னூல், நந்தியாலா, அனந்தபுரம், புட்டபர்த்தி, கடப்பா, இராயசோட்டி, சித்தூர், திருப்பதி (ஸ்ரீபாலாஜி) என மொத்தம் 26 மாவட்டங்கள் செயல்பாட்டுக்கு வரும்.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் கருத்துகளை 30 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும். இதன் அடிப்படையில் இறுதி அறிவிப்பாணை வெளியிடப்பட்டு, உகாதி பண்டிகை முதல் புதிய மாவட்டங்கள் செயல்படத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சித்தூர் மாவட்டத்திலிருந்து தனி மாவட்டமாக திருப்பதி உதயமாகிறது. இதற்கு ஸ்ரீபாலாஜி மாவட்டம் என பெருமாளின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் திருப்பதி, சந்திரகிரி, ஸ்ரீகாளஹஸ்தி, வெங்கடகிரி, சூளூர் பேட்டை, நாயுடு பேட்டை ஆகிய சட்டப்பேரவை தொகுதிகள் இடம்பெற உள்ளன.

பூகோள ரீதியாக முதலில் தமிழகத்தில் இருந்து ஆந்திரா தனியாக பிரிந்தது. அப்போது கர்னூல் தலைநகரமாக அமைக்கப்பட்டது. இந்த தருணத்தில், மகாராஷ்டிரா, ஒடிசா, கர்நாடக எல்லையில் உள்ள சில பகுதிகள் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டன. ஏற்கனவே இணையமாட்டோம் என அடம்பிடித்த தெலங்கானாவும் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டது. இதனால் 294 தொகுதிகளுடன் தென்னிந்தியாவின் மிகப்பெரிய மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் 1956–ல் உருவானது.

இந்நிலையில் ஆந்திர பிரதேசத்தில் இருந்து 2014ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் தேதி தனி தெலங்கானா மாநிலம் உருவானது. ஐதராபாத்துடன் தெலங்கானா பிரிக்கப்பட்டதால், ஆந்திராவுக்கு புதிய தலைநகரமாக அமராவதி நகரம் அறிவிக்கப்பட்டது.

கடந்த 2019–ல் ஜெகன் தலைமையில் ஆட்சி ஏற்பட்ட பிறகு ஆந்திராவுக்கு 3 தலைநகரங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் தொடர் போராட்டத்தால் அந்த அறிவிப்பை முதல்வர் ஜெகன் வாபஸ் பெற்றார். இந்நிலையில் புதிதாக 13 மாவட்டங்கள் உருவாக்கும் அறிவிப்பை ஜெகன் அரசு வெளியிட்டுள்ளது.

---

6. பிரேம் பிஹாரி நாராயண் ராய்ஜாதா உருவாக்கத்தில் சித்திர எழுத்துக்களில் அரசியலமைப்பு சட்ட நூல்: நாடாளுமன்ற நூலக கண்ணாடி பேழையில் பாதுகாப்பு

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க நியமிக்கப்–பட்ட குழுவின் தலைவராக இருந்தவர் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர். மற்றொரு சிறப்பாக அம்பேத்கர் உருவாக்கிய சட்டத்தை ஆங்கில சித்திர எழுத்துக்கள் வடிவில் 233 பக்கங்கள் கொண்ட நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அதை உருவாக்கியவர் பிரேம் பிஹாரி நாராயண் ராய்ஜாதா. அந்த நிகழ்வு தற்போது 73ஆவது குடியரசு தினத்தில் வியப்புடன் நினைவுகூரப்படுகிறது.

அரசியலமைப்பு சட்டத்தை சித்திர எழுத்துகளால் முடிக்க பிரேம் நாராயண் ராய்ஜாதாவுக்கு 6 மாதம் ஆகியுள்ளது. இதை உருவாக்க அவர் தனது பேனாவில் 432 'நிப்'புகளை பயன்படுத்தி உள்ளார். 13 கிலோ எடையுள்ள பக்கங்களை, நூல் வடிவில் தொகுத்து அதன் அட்டைகள் உள்ளிட்ட ஒவ்வொரு பக்கத்தையும், சாந்திநிகேதனின் பிரபல ஓவியர்கள், அஜந்தா வகை ஓவியங்களால் அழகுப்படுத்தி உள்ளனர். இதன் இந்தி மொழிபெயர்ப்பும் சித்திர எழுத்துகளால் பதிவாகி நூல் வடிவம் பெற்றுள்ளது. இதை 264 பக்கங்களில் வசந்த் கிருஷ்ண வேத் என்பவர் எழுதியுள்ளார்.

தில்லியில் கடந்த டிசம்பர் 16, 1901–ல் பிறந்தவர் பிரேம் பிஹாரி நாராயண் ராய்ஜாதா. இவர் சித்திர எழுத்துகள் எழுதுவதில் புகழ்பெற்ற ஆய்வாளர்கள் குடும்பத்தை சேர்ந்தவர். தனது இளம்வயதிலேயே பெற்றோரை இழந்த பிரேம் நாராயண், அவரது தாத்தா ராம் பிரசாத் சக்ஸேனா மற்றும் தாய்மாமன் சத்தூர் பிஹாரி நாரயண் சக்ஸேனாவால் வளர்க்கப்பட்டார்.

ஆங்கிலம் மற்றும் பாரசீக மொழி அறிஞராக வளர்ந்த பிரேம் நாராயண், ஆங்கில அரசின் அதிகாரிகளுக்கு பாரசீக மொழியை பயிற்றுவித்து வந்தார்.

டெல்லியின் புகழ்பெற்ற செயின்ட் ஸ்டீபன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றவர், சித்திர எழுத்து கலையை தனதுதாத்தா ராம் பிரசாத் சக்ஸேனாவிடம் கற்றுக் கொண்டார். அதன்பிறகு சித்திர எழுத்துகள் எழுதுவதில் பிரேம் பிஹாரி புகழ் பெற்றார்.

இதனால், அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு, பிரேம் நாராயணனை அழைத்து கவுரப்படுத்தினார்.

இவ்விரண்டு நூல்களும் தற்போது நாடாளுமன்ற நூலக கட்டிடத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. தோல் பைண்டிங் செய்யப்பட்ட நூல்கள் கருப்புநிற அட்டைகளில் தங்கவேலைபாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இரு நூல்களும் கண்ணாடிப் பேழைகளில் வைத்து அவை கெடாமல் இருக்க நைட்ரஜன் வாயு நிரப்பப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு முறைக்காக, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஒரு நிறுவனத்திடம் 1992–ல் உதவி பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

7. கெயிலும் ஜான்டி ரோட்ஸும் உண்மையான சிறப்பு தூதர்கள்: 73ஆவது குடியரசு தினத்தில் பிரதமர் மோடி பாராட்டு

நாட்டின் 73ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடும் வேளையில் பிரதமர் நரேந்திர மோடி, பிரபல கிரிக்கெட் வீரர்களான ஜான்டி ரோட்ஸ் மற்றும் கிறிஸ் கெயில் ஆகியோருக்கு அந்நாட்டுடனான 'ஆழ்ந்த தொடர்பை' வெளிப்படுத்தும் விதமாக கடிதம் எழுதியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஜான்டி ரோட்ஸ், ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பீல்டிங் பயிற்சியாளராக பணியாற்றி உள்ளார். மேலும் அவர் தனது மகளுக்கு 'இந்தியா' எனவும் பெயர்சூட்டியுள்ளார். அதேவேளையில் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த கிறிஸ் கெயில், IPL தொடரில் தனது அதிரடி பேட்டிங்கால் ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பை பெற்றவராவார்.

---

8. குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற ரஃபேல் போர் விமான முதல் பெண் விமானி

தில்லி ராஜபாதையில் நேற்று நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பின்போது இந்திய விமானப் படையின் வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து விமானப் படையின் 75 விமானங்கள் பறந்து சாகசம் செய்தன. இதில் பிரான்ஸிடமிருந்து வாங்கிய ரஃபேல் போர் விமானங்களும் அடக்கம்.

அணிவகுப்பின்போது ரஃபேல் போர் விமானத்தின் முதல் பெண் போர் விமானி என்ற பெருமையைப் பெற்ற ஷிவாங்கி சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அதே நேரத்தில் குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற 2ஆவது பெண் போர் விமானி ஷிவாங்கி என்பது குறிப்பிடத்தக்கது.

வாரணாசியைச் சேர்ந்த ஷிவாங்கி சிங், இந்திய விமானப் படையில் 2017–ல் சேர்ந்தார். முதலில் மிக்–21 பைசன் ரக விமானத்தை இயக்கி வந்த ஷிவாங்கி தற்போது ரஃபேல் போர் விமானத்தை இயக்கி வருகிறார்.

---

8. 73ஆவது குடியரசு தின விழா கோலாகலம்: ஏஎஸ்ஐ பாபு ராமுக்கு அசோக சக்ரா விருது வழங்கினார் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்

அசோக சக்ரா விருது: ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி மூன்று தீவிரவாதிகளை கொலை செய்துவிட்டு வீரமரணமடைந்த சிறப்பு காவல் ஆய்வாளர் பாபு ராமுக்கு அசோக சக்ரா விருது வழங்கப்பட்டது. அந்த விருதினை அவருடைய மனைவி ரீனா ராணி, மற்றும் மகன் மாணிக் குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

---

9. காஷ்மீர்: லால் சவுக் பகுதியில் 30 ஆண்டுகளுக்கு பின் ஏற்றப்பட்ட இந்திய தேசியக்கொடி...!

காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள பிரபலமான லால் சவுக் பகுதியிலுள்ள மணிக்கூண்டு டவரில் 30 ஆண்டுகளுக்கு பின் நேற்று இந்திய தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

---

10. ஐடி நிறுவனங்களில் டிசிஎஸ் பெரும் சாதனை: உலக அளவில் 2ஆவது இடம்

உலகளவில் ஐடி துறையைச்சேர்ந்த அதிக சொத்து மதிப்பு மிக்க நிறுவனங்களின் பட்டியலில் டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் (டிசிஎஸ்) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதைத்தவிர முதல் 25 நிறுவனங்களின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த மேலும் நான்கு நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன.

இதுகுறித்து பிராண்ட் பைனான்ஸ் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

அதிக மதிப்புமிக்க நிறுவனங்களின் பட்டியலில், இந்திய மதிப்பில் சுமார் ₹2.71 லட்சம் கோடியுடன் அசென்ஸர் நிறுவனம் தகவல் தொழில்நுட்ப சேவையில் மிகவும் வலுவான இடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த 2ஆவது இடத்தை இந்தியாவின் டிசிஎஸ் நிறுவனம் பிடித்துள்ளது.

டிசிஎஸ் முந்தைய ஆண்டை விட 12% மற்றும் 2020'ஐ விட 24% அதிகரித்து இரண்டாவது இடத்தில் உள்ளது. டிசிஎஸ் பிராண்ட் மதிப்பு 16.8 பில்லியன் டாலர் ஆகும்.

அதிக மதிப்புமிக்க நிறுவன பட்டியலில், இன்போசிஸ் மூன்றாவது இடத்தில் உள்ளது. இன்போசிஸ், கடந்த ஆண்டை விட 52 சதவீத பிராண்ட் மதிப்பு மற்றும் 2020 இல் 80% வளர்ச்சியுடன் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் ஐடி சேவை வழங்கும் பிராண்டாக உருவெடுத்து உள்ளது. ஐபிஎம் நான்காவது இடத்தில் உள்ளது.

டிசிஎஸ் மற்றும் இன்போசிஸைத் தொடர்ந்து டாப் 25 நிறுவனங்களின் பட்டியலில் மேலும் நான்கு இந்திய நிறுவனங்கள் உள்ளன. விப்ரோ 7ஆவது இடத்திலும், HCL 8ஆவது இடத்திலும், டெக் மஹிந்திரா 15ஆவது இடத்திலும், எல்டிஐ 22ஆவது இடத்திலும் உள்ளன.

2020 முதல் 2022 வரையிலான காலத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனங்களின் சராசரி வளர்ச்சி விகிதம் 51 சதவீதமாக இருந்தது. அதேசமயம், அமெரிக்க பிராண்டுகளின் வளர்ச்சி 7% குறைந்துள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

11. தமிழ்நாட்டில் 3 சிறந்த காவல் நிலையங்களுக்கு விருது – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

தமிழ்நாட்டில் 3 சிறந்த காவல் நிலையங்களுக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கி கௌரவித்தார். இதில் முதலிடம் பிடித்த திருப்பூர் மாநகர தெற்கு காவல் நிலையம் சார்பில் ஆய்வாளர் பிச்சையா விருதை பெற்றுக் கொண்டார். இரண்டாமிடம் பிடித்த திருவண்ணாமலை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் ஹேமாமாலினி, மூன்றாமிடத்தைப்பிடித்த மதுரை மாநகர E–3 அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் சாதுரமேஷ் ஆகியோர் விருதைப் பெற்றுக்கொண்டனர்.

---

1. 'செயற்கை நிலவு' திட்டத்தை உருவாக்கிய நாடு எது?

அ) இந்தியா



ஆ) சீனா ☑

இ) ரஷ்யா

ஈ) இஸ்ரேல்

✓ சீன தேச அறிவியலாளர்கள் "செயற்கை நிலவு" ஆராய்ச்சி வசதியை உருவாக்கியுள்ளனர். இது காந்தத்தன்மையைப் பயன்படுத்தி குறை-ஈர்ப்புவிசைகொண்ட சூழல்களை உருவகப்படுத்துகிறது. இந்த ஆண்டு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்படும் இவ்வசதி, புவியீர்ப்பு விசையை மறையச் செய்வதற்காக வெற்றிட அறைக்குள் சக்திவாய்ந்த காந்தப் புலங்களைப்பயன்படுத்தும். இந்த விளைவு 'Diamagnetic Levitation' என்று அழைக்கப்படுகிறது.

---

2. 'தேசிய துளிர்நிறுவனங்கள் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 1



ஆ) ஜனவரி 16 ☑

இ) ஜனவரி 17

ஈ) ஜனவரி 25

✓ ஆண்டுதோறும் ஜன.16 தேதி தேசிய துளிர்நிறுவனங்கள் நாள் கொண்டாடப்படும் எனப் பிரதமர் மோடி அறிவித்தார்.

✓ இத்தசாப்தம் 'இந்தியாவின் தொழினுட்பம்' என்றும் பிரதமர் கூறினார். தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட 61,000'க்கும் மேற்பட்ட துளிர்நிறுவனங்களுடன், இந்தியா உலகின் மூன்றாவது மிகப்பெரிய துளிர்நிறுவனங்களுக்கு உகந்த சூழலமைப்பாக விளங்குகிறது.

---

3. இந்திய காடுகளின் அறிக்கை-2021'இன்படி, நாட்டின் காடுகளின் பரப்பளவானது இந்திய புவியியல் பரப்பளவில் எவ்வளவு சதவீதம் அதிகரித்துள்ளது?

அ) 19.71%



ஆ) 21.71% ☑

இ) 25.71%

ஈ) 30.71%

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது இந்திய காடுகள் அறிக்கை – 2021'ஐ வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, வனப்பகுதி 7,13,789 சகிமீ அல்லது இந்தியாவின் புவியியல் பகுதியில் 21.71% ஆக அதிகரித்துள்ளது. இது 1,540 சதுரகிலோமீ பரப்பளவு அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. ஆந்திரம், தெலுங்கானா, ஒடிஸா, கர்நாடகா மற்றும் ஜார்கண்ட் ஆகியவை காடுக-ளின் பரப்பை அதிகரிப்பதில் பெரும் பாங்காற்றியுள்ளன.

---

4. 'I4F இந்தியா-இஸ்ரேல் தொழிற்துறை ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப புதுமை நிதியம்' என்பது இந்தியாவுக்கும் கீழ்காணும் எந்நாட்டிற்கும் இடையிலான ஒத்துழைப்பாகும்?

அ) இந்தோனேசியா

ஆ) இஸ்ரேல் ☑



இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ 'I4F இந்தியா-இஸ்ரேல் தொழிற்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப புதுமை நிதியம்' என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய அரசு மற்றும் இஸ்ரேல் புத்தாக்க ஆணையம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பாகும். இது இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே கூட்டு தொழிற்துறை R&D'ஐ மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இருநாடுகளும் சமீபத்தில் $5.5 மில்லியன் மதிப்பிலான 3 கூட்டு R&D திட்டங்களுக்கு (சுகாதாரப் பராமரிப்பில் நோய் அறிதலுக்கான IoT நானோ உணரிகள்; 'NoMoreMos' – கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் ரீதியான தீர்வு; & 'IoT அடிப்படையில் இந்தியா முழுவதும் உழவு மற்றும் சுற்றுச்சூழல் தரவுகளை நிகழ்நேரத்தில் சேகரிப்-தற்காக செயற்கைக்கோள் தகவல்தொடர்புகளை செயல் முறைப்படுத்துவது) ஒப்புதல் அளித்துள்ளன.

---

5. 'இந்திய உதவியுடன் கட்டப்பட்ட சமூக வீட்டுவசதித் திட்டம்' தொடங்கப்பட்ட நாடு எது?

அ) மடகாஸ்கர்

ஆ) மொரிஷியஸ் ☑



இ) மாலத்தீவுகள்

ஈ) மியான்மர்

✓ இந்திய உதவியுடன் கட்டப்பட்ட சமூக வீட்டுவசதி அலகுகளை பிரதமர் மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவீந்த் குமார் ஜுக்நாத் ஆகியோர் திறந்துவைத்தனர். இந்தியாவின் வளர்ச்சி ஆதரவுடன் மொரிஷியஸில் நிறுவப்படும் குடிமை சேவை கல்லூரி மற்றும் 8 MW சூரியசக்தி ஒளிமின்னழுத்த பண்ணை திட்டங்களையும் இருதலைவர்களும் தொடங்கிவைத்தனர்.

✓ மெட்ரோ எக்ஸ்பிரஸ் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு இந்தியா மொரிஷியசுக்கு வழங்கும் $190 மில்லியன் டாலர் கடனுக்கான ஒப்பந்தம், சிறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்டவையும் பகிர்ந்துகொள்ளப்படும்.

---

6. எந்த இந்திய மாநிலம் தனது மாநிலத்தின் பொன்விழா கொண்டாட்டங்களைத் தொடங்கி, 'உட்கட்டமைப்பு நிதி ஆணையத்தை' அமைக்க முடிவுசெய்துள்ளது?

அ) தமிழ்நாடு

ஆ) அருணாச்சல பிரதேசம் ☑



இ) தெலுங்கானா

ஈ) அஸ்ஸாம்

✓ அருணாச்சல பிரதேச அரசு, உட்கட்டமைப்பு வளர்ச்சியை துரிதப்படுத்த, 'அருணாச்சல பிரதேச உட்கட்டமைப்பு நிதி ஆணையத்தை' நிறுவவுள்ளது.

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தின் பொன்விழா கொண்டாட்டங்களை விடுதலையின் அடையாளமாக

தொடக்கப்பட்டதை முதலமைச்சர் பேமா கந்து நினைவு கூர்ந்தார். மாவட்ட அளவிலான நல்லாட்சி குறியீட்டை உருவாக்கவும் அ பி அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

---

7. திருத்தப்பட்ட 'கிராமப்புற வளர்ச்சித்திட்ட உருவாக்கம் மற்றும் அமலாக்க வழிகாட்டுதல்களை' வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

✓ மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது திருத்தப்பட்ட 'கிராமப்புற வளர்ச்சித்திட்ட உருவாக்கம் & அமலாக்க வழிகாட்டுதல்களை' வெளியிட்டது.

✓ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கிராமப்புற வழிகாட்டுதல்கள் கிராமப்புற இந்தியாவை மாற்றுவதையும் கிராமப்புற செழிப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு உள்ளன. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் SVAMITVA திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் RURBAN திட்டம்போன்ற முன்னெடுப்புகளுக்கு இது துணைபுரியும்.

---

8. "2021'இல் இந்தியாவின் காலநிலை" அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) நபார்டு

ஆ) இந்திய வானிலை ஆய்வு மையம் ☑

இ) NITI ஆயோக்

ஈ) சுற்றுச்சூழல் அமைச்சகம்

✓ இந்திய வானிலை ஆய்வுத்துறை சமீபத்தில் தனது '2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை' அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, கடந்த 1901இல் நாடுதழுவிய அளவில் பதிவுகள் தொடங்கியதிலிருந்து '2021' ஆனது இந்தியாவில் ஐந்தாவது மிகவெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளது.

✓ மேலும், கடந்த ஆண்டில் (2021) நிகழ்ந்த தீவிர வானிலை நிகழ்வுகளால் நாட்டில் 1,750 உயிர்கள் பலியாகியுள்ளதா –கவும், மகாராஷ்டிரா மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டதா –கவும் இந்த அறிக்கை காட்டுகிறது.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற '(ALH) 84001' விண்கல், பின்வரும் எக்கோளிலிருந்து வந்து பூமியில் விழுந்தது?

அ) வியாழன்

ஆ) செவ்வாய் ☑

இ) வெள்ளி

ஈ) சனி

✓ '(ALH) 84001' என்று அழைக்கப்படும் விண்கல் 1984இல் செவ்வாய்க்கோளில் இருந்து பூமியில் வந்து விழுந்தது. 4 தசாப்தங்களுக்கும் மேலாக அறிவியலாளர்கள் இந்த விண்கல்லின் மேற்பரப்பில் காணப்படும் கரிமசேர்மங்கள் செவ்வாய்க்கோளின் முதுகாலத்திற்கு ஆதாரமா? என்று விவாதித்து வருகின்றனர்.

---

10. இந்தியா அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து வங்கக்கடலில், 'கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை' மேற்கொண்டது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) ஜப்பான் ☑



இ) பிரான்ஸ்

ஈ) இலங்கை

✓ இந்திய கடற்படைக் கப்பல்களான ஷிவாலிக் மற்றும் கட்மட் ஆகியவை வங்காள விரிகுடாவில் ஜப்பான் கடல் சார் தற்காப்புப்படை (JMSDF) கப்பல்களான உரகா மற்றும் ஹிராடோவுடன் இணைந்து கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை மேற்கொண்டன.

✓ இந்தப் பயிற்சியானது வான்பயிற்சிகள் மற்றும் உத்திசார் சூழ்ச்சிகள் உட்பட பல்வேறு கடல்சார் நடவடிக்கைகளை உள்ளடக்கியது. இரு கடற்படைகளுக்கு இடையிலான பரந்த உத்திசார் கூட்டாண்மைகளை மேலும் வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. செப்.10–ல் ஆசிய விளையாட்டு போட்டி: சீனாவில் தொடங்குகிறது

19ஆவது ஆசிய விளையாட்டு போட்டி செப்.10–25ம் தேதி வரை சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற உள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டுகளான நீச்சல், வில்வித்தை, தடகளம், பூப்பந்து, குதிரையேற்றம், வாள்வீச்சு, கால்பந்து, ஹாக்கி, ஜூடோ, கபடி உள்ளிட்ட 40 விளையாட்டுகளில் 61 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. ஈ–ஸ்போர்ட்ஸ் மற்றும் பிரேக்டான்சிங்கிற்கு இந்த ஆண்டு ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளதால் இவை பதக்க விளையாட்டுகளாக அறிமுகமாகிறது. மேலும், பார்வையாளர்களின் உற்சாகத்தை உயர்த்தும் வகையில் 11 வருடங்களுக்குப் பிறகு கிரிக்கெட் போட்டி டி20 வடிவமாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலின் தெற்காசிய மண்டலத்தில் இந்தியா உறுப்பினராக உள்ளது. மேலும் ஆசிய விளையாட்டுகளின் அனைத்து பதிப்புகளிலும் போட்டியிட்ட 7 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா உள்ளது. ஒவ்வொரு ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தியா குறைந்தபட்சம் ஒருதங்கப் பதக்கத்தையாவது வென்றுள்ளது. 1990ம் ஆண்டு போட்டியை தவிர, பதக்கப் பட்டியலில் முதல் 10 நாடுகளுக்குள் எப்போதும் இடம் பிடித்துள்ளது. இதுவரை, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 139 தங்கம், 178 வெள்ளி மற்றும் 299 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஓசியானியா நாடுகளைச் சேர்ந்த 300–க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் வாய்ப்பு முதன்முறையாக கிடைத்துள்ளது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட

ஓசியானியா விளையாட்டு வீரர்கள், டிரையத்லான், தடகளம், வுசு, ரோலர்ஸ்கேட்டிங், பளுதூக்குதல் ஆகிய 5 விளையாட்டுகளில் போட்டியிட அனுமதிக்கப்படுவார்கள். ஆசிய விளையாட்டு போட்டிகள் அனைத்தையும் சோனி தொலைக்காட்சி நேரலை செய்கிறது.

---

2. தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஐஐடி–ல் 5–ஜி தொழில்நுட்ப மேம்பாட்டு ஆராய்ச்சி

5ஜி தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பாக சென்னை ஐஐடில் ஆராய்ச்சி நடைபெற உள்ளது.

தொலைத்தொடர்புத் துறையில் 5ஜி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது தொடர்பாக சென்னை ஐஐடியுடன் இணைந்து செயல்பட L&T இன்போடெக் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதன்மூலம் இருநிறுவனங்களும் 5ஜி தொழில்நுட்பத்தில் புதுமைகளையும், கிராமப்புறங்களில் குறைந்த செலவில், குறைந்த அலைவரிசையில் மேம்படுத்தப்பட்ட 5ஜி நெட்வொர்க் வசதிகளையும் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளன.

---

3. காடு அதிகரிப்பு: உண்மையை மறைக்கும் கணக்கெடுப்பு

இந்தியக் காடுகளின் நிலை குறித்த அறிக்கையை (ISFR) 2021, இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு (FSI) ஜனவரி இரண்டாவது வாரம் வெளியிட்டது. இந்தியக் காடுகள் குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும் இந்த அறிக்கை 1987 முதல் வெளியிடப்பட்டுவருகிறது. சமீபத்திய அறிக்கையின்படி 2,261 ச.கி.மீ. காடு–மரஅடர்த்தி அதிகரித்திருக்கிறது. இந்தியப் புவியியல் பரப்பில் 24% காடு என்கிறது இந்த அறிக்கை.

இந்தக் கணக்கெடுப்பில் கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவில் காட்டுப் பரப்பு அதிகரித்துக்கொண்டே வருவதாக ஆரோக்கியமான சித்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அழகானதொரு சித்திரத்தைத் தீட்ட இந்த அறிக்கை முயன்றாலும் காட்டுப் பரப்பு அதிகரித்திருப்பதற்குக் களத்தில் எந்த ஆதாரமும் இல்லை. காடு என்றால் என்ன என்பதற்குக் காடு கணக்கெடுப்பு அமைப்பு வைத்துள்ள தவறான–திரிபான வரையறையே பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்கிறார் இயற்கைப் பாதுகாப்பு அறக்கட்டளையைச் சேர்ந்த காட்டுயிர் அறிவியலர் எம்.டி.மதுசூதன்.

ஒரு ஹெக்டேர் நிலப்பகுதியில் வெறும் 10% மரங்கள் இருந்தாலே, அது பசுமைப்பரப்பு என்கிறது இந்த அமைப்பு. இந்தப் புதிய வரையறை அடிப்படையிலேயே காடு–மரஅடர்த்தி அதிகமுள்ள பகுதிகளை பசுமைப்பரப்பு என்று அடையாளப்படுத்தி இந்த அமைப்பு கணக்கெடுப்பை நடத்தியுள்ளது. புதிய கணக்கெடுப்பு அறிக்கையில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி மதுசூதன் உள்ளிட்ட காட்டுயிர் அறிவியலர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருக்கிறார்கள். சிலவற்றைப் பார்ப்போம்.

தேயிலையும் தென்னையும் காடுகள்?

இந்தியாவில் மிக மோசமாக காடு அழிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று அசாமில் உள்ள சோனித்பூர். ஆனால், இப்பகுதியில் காட்டுப் பரப்பு அதிகரித்துவருவதாகக் காடுகளின் நிலை குறித்த அறிக்கை தெரிவிக்கிறது. இது எப்படிச் சாத்தியம்? சோனித்பூரின் ரங்கபரா பகுதியைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டங்களைக் காடுகள் என இந்த அறிக்கை காட்டியுள்ளது.

சோனித்பூர் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வால்பாறை பகுதியிலும் தேயிலைத் தோட்டங்கள் காடுகளாகக் காட்டப்பட்டுள்ளன; பொள்ளாச்சி தென்னந்தோப்புகளும் காடுகளாகக் காட்டப்பட்டுள்ளன. 150 ஆண்டுகளுக்கு முன்னால் விலைமதிப்பற்ற பசுமைமாறா ஈரப்பதக் காடுகள் வால்பாறையில் துவம்சம் செய்யப்பட்டுத் தேயிலை, காபித் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. 150 ஆண்டுகள் கழித்து அதே தேயிலை, காபித் தோட்டங்கள் காடுகளாகக் கணக்கெடுக்கப்படுவது வேடிக்கை!

இந்தியாவில் 90%–ம் அதிகமாகக் காடு இருக்கும் பகுதியாக லட்சத்தீவு கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தீவுகளில் இருப்பவை பெருமளவு தென்னை மரங்களே. அரசுக் கணக்குப்படி 'அடர்த்தியான அந்தக் காட்டுப் பகுதி'யில் ச.கி.மீ.க்குத் தலா 2,000 மக்களும் வசித்துவருவதுதான் ஆச்சரியம். இந்தியாவில் மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் ஒன்றான கொல்கத்தாவில் மூச்சு முட்டும் கட்டிடங்களுக்கு மத்தியில் இருக்கும் 10–15 மரங்களும் காடாகவே கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

அதேபோல், டெல்லியில் புதிய நாடாளுமன்ற வளாகம் கட்டப்பட்டுவரும் பகுதிக்கு அருகே மத்திய அரசின் அலுவலகக் கட்டிடங்கள் அடங்கியுள்ள பகுதியும்கூட காடாகவே காட்டப்பட்டுள்ளது. நம் நாட்டு உயிரினப் பன்மைக்கு எதிரியாகக் கருதப்படும் சீமைக் கருவேல ஆக்கிரமிப்புப் பகுதியையும் காடாகவே இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு காட்டியுள்ளது. ராஜஸ்தானில் கடுமையாக வறண்ட பாலைவனப் பகுதியான ஜெய்சால்மரிலும்கூடக் காடு இருப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளதுதான் உச்சம்.

இந்தியாவில் காடுகளை அழிக்கும் செயல்பாடு 1980–களிலிருந்து சீராக அதிகரித்துவருகிறது. அதேநேரம் காட்டின் பரப்போ புத்தாயிரம் ஆண்டுக்குப் பிறகு கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு அதிகரித்துவருவதாக அறிக்கை கூறுகிறது. காடுகளின் பரப்பு குறைவதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், எந்தப் பின்னணியும் இல்லாமல் காட்டின் பரப்பு அதிகரிப்பதாக முன்வைக்கப்படும் சித்திரம் எப்படி நம்பகமான ஒன்றாக இருக்க முடியும்?

ஆதாரமற்ற சித்திரம்

மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு, தனது மதிப்பீடுகள் குறித்த அறிக்கைகளை வெளியிடுகிறதே ஒழிய, எந்தக் காலத்திலும் கணக்கெடுப்புக்குப் பயன்படுத்திய செயற்கைக்கோள் வரைபடங்களை வெளியிட்டதே இல்லை. வரைபடங்கள்தானே உண்மையை எடுத்துரைக்கும்? தனது வரைபடங்கள் யாருக்காவது தேவையென்றால், ஒரு வரைபடக் கட்டத்தை ₹2,000–

க்கு அந்த அமைப்பு விற்பனை செய்கிறது. இப்படி மொத்த வரைபடங்களையும் யாராவது வாங்க நினைத்தால் ₹50 லட்சத்துக்குக் குறையாமல் தேவை.

"இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு தனது அறிக்கைகளைச் சரிபார்ப்பதற்கான எந்த ஆதாரத்தையும் பொதுவெளியில் வெளியிடுவதில்லை. அப்படி ஆதாரங்கள் வெளியிடப்பட்டால், ஒவ்வொரு 2 ஆண்டுகளுக்கும் ஒரு முறை காட்டுப்பரப்பு அதிகரித்துவருகிறது எனபோலியான சித்திரத்தைக் கட்டியெழுப்பும் அந்த அமைப்பின் முயற்சி படாரென்று உடைந்துவிடும். ஒரு காலத்தில், புலிகளின் கால்தடத்தை அடிப்படையாகக் கொண்டு புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகக் கூறப்பட்டு, பிறகு அது பொய் என்று நிரூபணமானது. அதைப் போன்றதுதான் காட்டுப் பரப்பு அதிகரித்துவருகிறது என்கிற கணக்கெடுப்பும்" என்கிறார் எம்.டி. மதுசூதன்.

நோக்கம் என்ன?

சரி, தவறான புரிதலின் காரணமாகத் தோட்டங்களையும் தோப்புகளையும் இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு காடு என வகைப்படுத்துகிறதோ என்கிற கேள்வி எழலாம். அப்படிச் சொல்ல முடியாது. மற்றொரு அரசு அமைப்பான 'தேசிய தொலையுணர்வுமையம்' (NRSC) வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் வரைபடங்கள் காடு, தேயிலைத் தோட்டம், தென்னந்தோப்பு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை தெளிவாகக் கூறுகின்றன. அது மட்டுமல்லாமல், 2015-க்குப் பிறகு இந்தியக் காடுகளின் நிலை மிக மோசமாகச் சரிந்துவருவதையும் தேசியத் தொலைவுணர்வு மையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. அப்படியானால், மேற்கண்ட அம்சங்களைத் தெரிந்துகொண்டே காடு கணக்கெடுப்பு அமைப்பு தவறான சித்திரத்தை வலிந்து உருவாக்க முனைகிறது என்றே புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படிச் செய்வதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்?

எரிபொருள், கனிமச் சுரங்கம், போக்குவரத்துக்கான சாலை வசதி, தொழிற்சாலைகளுக்குக் காடுகளைத் திருப்பிவிட அரசு முயல்கிறது. நடப்பில் காடுகளின் பரப்பு குறைந்துகொண்டே போகும்போது, காட்டை மேலும் அழிக்கும் செயல்பாடுகள் குறித்து மக்களிடையே பெருத்த கேள்விகள் எழக்கூடும். இந்தப் பின்னணியில் காடுகளுக்கான வரையறையையே மாற்றியமைத்துவிட்டால், காடுகளின் பரப்பு அதிகரித்ததாகக் காட்டிவிடலாம். மற்றொரு பக்கம், காடுகளை அழிப்பதும் கேள்விக்கு அப்பாற்பட்டதாகிவிடும் என அரசு நினைக்கிறது.

அத்துடன், புவி வெப்பமாதலுக்கு எதிராகக் காடுகளின் பரப்பை அதிகரித்துக் காட்டுவதால், கார்பன் வர்த்தகத்தில் அதைப் பணமாக மாற்றிக்கொள்ள முடியும். காட்டின் பரப்பை அதிகரிக்கும் மூன்றாம் உலக நாடுகள் அதற்குப் பதிலீடாக பணக்கார நாடுகளிடம் பணம் பெற்றுக்கொண்டு, அந்த நாடுகள் கூடுதல் கார்பன் வெளியிட வழியமைக்க முடியும்.

உணர்ந்திருக்கிறோமா?

கரோனா வைரஸ் பரவலுக்குக் காடழிப்புதான் முதன்மைக் காரணம் என்பது உறுதியாகத் தெரிந்த பின்னரும் காடழிப்பை நாம் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். கரோனா வைரஸை விடவும் தீவிரமான–நீடித்த பிரச்சினைகளைக் காடழிப்பினால் இந்தியா எதிர்கொண்டுள்ளது. அஸாம் சோனித்பூர் பகுதியில் மட்டுமல்லாமல், காடழிக்கப்பட்டுள்ள பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களுக்கும் யானை/புலி/சிறுத்தைகளுக்கும் இடையிலான எதிர்கொள்ளல் கடந்த 10 ஆண்டுகளில் மிக மோசமாக அதிகரித்திருக்கிறது. இரு தரப்பிலும் உயிர்ப் பலிகளும் அதிகமாகவே உள்ளன. அதேபோல் சோனித்பூர் பகுதியில் மலேரியா காய்ச்சல் வழக்கத்தைவிட 8 மடங்கு அதிகரித்திருக்கிறது. காடுகளுக்கான வரையறையை அரசு மாற்றலாம். ஆனால், இதுபோன்ற மோசமான பக்கவிளைவுகளை வரையறை மாற்றங்கள் தடுக்கப் போவதில்லை. காடழிப்பு ஏற்படுத்தும் இதுபோன்ற நிஜமான பாதிப்புகளை அரசும் மக்களும் புறந்தள்ளிவருவதுதான் பிரச்சினைக்கு மூல காரணம்.

இயற்கையான காடுகள் உயிரினப் பன்மைக்கும், மக்களுக்கும் கணக்கற்ற பலன்களை வழங்கிவருகின்றன. காடும் இயற்கையும் வழிவழியாக நம்மை வந்தடைந்துள்ள உயிருள்ள மரபுச் சொத்துகள், பண்பாட்டு அடையாளங்கள். காட்டு வளம் என்பது ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளத்தின் அடையாளமும்கூட. யுனெஸ்கோ, ஐ.நா. சபை போன்ற அமைப்புகள், அந்த மரபுச் சின்னங்களை உரிய வகையில் அங்கீகரிக்கின்றன, போற்றுகின்றன, பாதுகாக்க வலியுறுத்துகின்றன. மாறாக, காடுகளுக்கும் இயற்கை வளத்துக்கும் உரிய மதிப்பையும் அங்கீகாரத்தையும் வழங்காமல் வெறும் மேற்பூச்சை நம்பிக்கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்துக்கு உத்தரவாதமான வருங்காலம் இல்லை என்பதே காலம் உணர்த்தியுள்ள நிதர்சனம்.

---

4. 'மகிழ் கணிதம்' திட்டம்: பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு

தமிழக அரசுப் பள்ளிகளில் 'மகிழ் கணிதம்' திட்டத்தை செயல்படுத்துவதற்காக பள்ளி ஒன்றுக்கு ₹1,350 வீதம் மொத்தம் ₹93.79 லட்சம் (6,948 பள்ளிகள்) ஒதுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாநிலத் திட்ட இயக்குநர் இரா. சுதன், முதன்மைக்கல்வி அதிகாரிக–ளுக்கு அனுப்பிய சுற்றறிக்கை: தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ–ர்களுக்கு எளிய முறையில் கணிதப் பாடத்தை கற்பிக்க ஏதுவாக 'மகிழ் கணிதம்' என்ற திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

இதுசார்ந்து ஆசிரியர்களுக்கு முதல்கட்டமாக கடந்த ஜனவரி 20, 21ஆம் தேதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ந்து பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அடுத்தகட்ட பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பள்ளி ஒன்றுக்கு ₹1,350 வீதம் மொத்தம் ₹93.79 லட்சம் (6,948 பள்ளிகள்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1. பொது பார்மோசா USD பத்திரங்களை வெளியிடும் முதல் இந்திய அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி எது?

அ) பஞ்சாப் நேஷனல் வங்கி

ஆ) பாரத ஸ்டேட் வங்கி ☑

இ) கனரா வங்கி

ஈ) HDFC வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கி ஐந்து ஆண்டுகளுக்கு "Regulation S" பார்மோசா பத்திரங்கள்மூலம் $300 மில்லியன் டாலர் நிதி திரட்டியுள்ளது. பொது பார்மோசா பத்திரங்களை வெளியிடும் முதல் இந்திய அட்டவணைப்படுத்தப்பட்ட வணிகவங்கி இதுவாகும்.

✓ இந்தப் பத்திரங்கள் ஐந்தாண்டுகால அமெரிக்க கருவூல குறிப்புகளுக்கு எதிராக தரப்படுத்தப்பட்டுள்ளன.

---

2. அந்நிய செலாவணி நெருக்கடியைக் சமாளிப்பதற்காக, இந்தியா, அண்மையில் எந்த நாட்டிற்கு $900 மில்லியன் மதிப்பிலான கடனை வழங்கியது?

அ) நேபாளம்

ஆ) இலங்கை ☑

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) வெனிசுலா

✓ இந்தியா இலங்கைக்கு அதன் குறைந்துவிட்ட அந்நிய செலவாணிகளை கட்டியெழுப்புவதற்கும் உணவு இறக்கு –மதிக்குமாக $900 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடனை அறிவித்துள்ளது.

✓ சரக்குகளை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து $1 பில்லியன் டாலர்கள் கடனைப்பெற இலங்கை பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. இறக்குமதிக்காக செலுத்தவேண்டிய டாலர்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் கிட்டத்தட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

---

3. 2022 ஜனவரி நிலவரப்படி, எட்டுப்பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் குறைந்தபட்சம் எத்தனை வளிப் பைகளைக் (airbag) கொண்டிருக்க வேண்டும்?

அ) ஒன்று

ஆ) இரண்டு ☑

இ) நான்கு

ஈ) ஆறு

✓ 2019 ஜூலை.1ஆம் தேதி முதல் அனைத்து பயணிகள் வாகனங்களுக்கும் ஓட்டுநருக்கான வளிப்பை (driver air bag) கட்டாயமாக்கப்பட்டது. 2022 ஜனவரி மாதம் முதல் அனைத்து வாகனங்களிலும் இரண்டு வளிப்பைகள் (ஓட்டுநர் மற்றும் முன்வரிசையில் பயணிப்போர்) கட்டாய –மாக்கப்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்து அமைச்சகம் சமீபத்தில் குறைந்தபட்சம் 6 வளிப்பைகளை கொண்டிருப் –பதற்கான வரைவு அறிவிப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ எட்டுப் பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கு இது கட்டாயம். 'முன் மற்றும் பக்கவாட்டு விபத்துகளின்' தாக்கத்தைக் குறைப்பதே இதன் நோக்கம்.

4. இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 'இராணுவ நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 15 ☑

ஆ) ஜனவரி 20

இ) ஜனவரி 25

ஈ) ஜனவரி 30

✓ ஜெனரல் FR ராய் புச்சரைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் முதல் இந்தியத் தலைமைத் தளபதியாக ஜெனரல் KM கரியப்பா (பின்னர் பீல்ட் மார்ஷல் ஆனார்) பதவியேற்ற நாளைக் குறிக்கும் வகையில், ஜன.15ஆம் தேதி ஆண்டுதோறும் இராணுவ நாளாகக் கொண்டாடப்ப –டுகிறது.

---

5. 'புலிகள் பாதுகாப்பு தொடர்பான ஆசிய அமைச்சர்கள் மாநாட்டை' ஏற்பாடு செய்துள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) மலேசியா ☑

இ) UK

ஈ) இலங்கை

✓ மலேசிய அரசாங்கமும் குளோபல் டைகர் போரமும் (GTF) இணைந்து புலிகள் பாதுகாப்பு தொடர்பான 4ஆவது ஆசிய அமைச்சர்கள் மாநாட்டை ஏற்பாடு செய்தன. புலிகள் பாதுகாப்பு மாநாட்டில் இந்தியாவின் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ் இந்தியாவின் அறிக்கையை வழங்கினார்.

✓ இரஷ்யாவில் நடைபெறும் உலகளாவிய புலிகள் உச்சி மாநாட்டிற்கான புது தில்லி பிரகடனத்தை இறுதி செய்ய புலிகள் உள்ள நாடுகளுக்கு இந்தியா உதவும்.

---

6. 'கொய்லா தர்பன்' இணையதளத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ) எஃகு அமைச்சகம்

ஆ) நிலக்கரி அமைச்சகம் ☑

இ) மின்சார அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ நிலக்கரி துறை தொடர்பான முக்கிய செயல்திறன் குறிகா –ட்டிகளுக்காக "Koyla Darpan" என்ற இணையதளத்தை மத்திய நிலக்கரி அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.

✓ தற்போது, நிலக்கரி/பழுப்பு நிலக்கரி உற்பத்தி, அனல்மின் நிலையங்களில் நிலக்கரி இருப்புநிலை, உட்கட்டமைப்பு திட்டங்கள், தொகுதிகள் ஒதுக்கீடு, முக்கிய நிலக்கரிச் சுரங்கங்களின் கண்காணிப்பு மற்றும் நிலக்கரி விலை உள்ளிட்ட 9 குறிகாட்டிகள் இந்தத்தளத்தில் உள்ளன.

---

7. ஆயிஷா மாலிக், எந்த நாட்டின் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி ஆனார்?

அ) இஸ்ரேல்

ஆ) பாகிஸ்தான் ☑

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) பங்களாதேஷ்

- ✓ பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியா –க உயர்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் நியமிக்கப்பட்டு உள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு முதல் லாகூர் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வரும் நீதிபதி ஆயிஷா மாலிக்கின் பதவி உயர்வுக்கு பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி ஒப்புதல் அளித்தார்.
- ✓ அவர் 2031 ஜூனில் பணி ஓய்வு பெறும் வரை உச்சநீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றுவார்.

---

8. 2021ஆம் ஆண்டுக்கான தேசிய துளிர்நிறுவன விருதின் வெற்றியாளர்களுள் ஒருவரான 'ரெபோஸ்' உடன் சார்ந்த துறை எது?

அ) ஆற்றல் விநியோகம் ☑

ஆ) மருத்துவத் துறையில் புத்தாக்கம்

இ) நிதியியல் தொழில்நுட்பம்

ஈ) திறன் மேம்பாடு

- ✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் சிறந்த 46 இந்திய துளிர் நிறுவனங்களை அறிவித்து அவர்களுக்கு தேசிய துளிர் நிறுவன விருதுகளை வழங்கியது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மெய்நிகர் கூட்டத்தில் 150 தொழில்முனைவோர் தங்கள் கொள்கை பரிந்துரைக –ளை வழங்கினர். புனேவைச் சார்ந்த 'Repos', 'ஆற்றல் விநியோகப்பிரிவில்', எரிபொருளை வீட்டுக்கு வீடு விநி –யோகம் செய்ததற்காக இந்த விருதை வென்றது.

---

9. BHELஆல் கட்டப்பட்ட 'நிலக்கரியிலிருந்து மெத்தனால் எடுக்கும் இந்தியாவின் முதல் ஆலை' அமைந்துள்ள இடம் எது?

அ) சென்னை

ஆ) மும்பை

இ) ஹைதராபாத் ☑



ஈ) கொச்சி

- ✓ மத்திய கனரக தொழிற்துறை அமைச்சர் மகேந்திர நாத் பாண்டே, BHELஆல் கட்டப்பட்ட 'நிலக்கரியிலிருந்து மெத்த –னால் எடுக்கும் இந்தியாவின் முதல் ஆலை'யை (CTM) ஹைதராபாத்தில் திறந்து வைத்தார்.
- ✓ இந்த 0.25 TPD (ஒரு நாளைக்கு டன்கள்) திறன்கொண்ட CTM ஆலை BHELஆல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்ப –ட்டு, மேம்படுத்தப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இது அதிக சாம்பல் கலந்த இந்திய நிலக்கரியிலிருந்து 99 சதவீதத்திற்கும் அதிகமான தூய்மையுடன் மெத்தனாலை உற்பத்தி செய்கிறது.

---

10. இந்திய ஓப்பன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அறிமுக போட்டியில் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் யார்?

அ) K ஸ்ரீகாந்த்

ஆ) லக்ஷ்யா சென் ☑



இ) P காஷ்யப்

ஈ) சாய் பிரனீத்

- ✓ இறுதிப்போட்டியில் நடப்பு உலக சாம்பியனான லோ கீன் யூவை தோற்கடித்ததன்மூலம், இந்திய ஓப்பன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை அறிமுகப்போட்டியில் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை லக்ஷ்யா சென் பெற்றார்.
- ✓ BWF சுற்றுப்பயணத்தில் இது லக்ஷ்யாவின் முதல் 'சூப்பர் 500' பட்டமாகும். முன்னதாக 2021 உலக சாம்பியன்ஷிப் போட்டியில் அவர் வெண்கலம் வென்றிருந்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பிரமோஸ் ஏவுகணைகள் முதல் முறையாக ஏற்றுமதி: ₹2,800 கோடிக்கு வாங்குகிறது பிலிப்பின்ஸ்

அதிநவீன பிரமோஸ் ஏவுகணைகளை முதல்முறையாக இந்தியா ஏற்றுமதி செய்யவுள்ளது. சுமார் ₹2,800 கோடிக்கு பிரமோஸ் ஏவுகணைகளை பிலிப்பின்ஸ் கொள்முதல் செய்யவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையொப்பமானது.

இந்தியா–ரஷியா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட பிரமோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனம் பிரமோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. அந்த ஏவுகணைகள் ஒலியைவிட அதிக வேகத்தில் பயணிக்கக் கூடியவையாகும். தரையில் இருந்து மட்டுமில்லாமல் நீர்மூழ்கிக்கப்பல்கள், கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றில் இருந்தும் பிரமோஸ் ஏவுகணைகளை ஏவ முடியும்.

இந்நிலையில், கப்பல்களைத்தாக்கி அழிக்கக்கூடிய பிரமோஸ் ஏவுகணைகளை சுமார் ₹2,800 கோடிக்கு பிலிப்பின்ஸ் கடற்படை வாங்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின்கீழ் செயல்படும் பிரமோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனம் ஏவுகணைகளைத் தயாரித்து வழங்கவுள்ளது.

பிரமோஸ்–ஒரு பார்வை...

இந்தியா–ரஷியா கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்டது பிரமோஸ் ஏவுகணை.

சூப்பர்சானிக் ரக பிரமோஸ் ஏவுகணைகளை தரையில் இருந்து மட்டுமன்றி கப்பல்கள், விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்தும் செலுத்த முடியும்.

பிரமோஸ் ஏவுகணைகள் இந்தியாவின் முப்படையிலும் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. 400 கிலோமீட்டர் தொலைவு இலக்கு வரை தாக்கும் மேம்படுத்தப்பட்ட பிரமோஸ் ஏவுகணையை 2020, செப்டம்பரில் இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது.

---

2. புதிய தலைமை பொருளாதார ஆலோசகராக டாக்டர் வி ஆனந்த நாகேஸ்வரன் நியமனம்

டாக்டர் வி ஆனந்த நாகேஸ்வரன் மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய நிதியமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் பதவிக் காலம் நிறைவடைந்த நிலையில் அப்பதவிக்கு தற்போது நியமனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் பகுதிநேர உறுப்பினராகப் பணியாற்றியுள்ள ஆனந்த நாகேஸ்வரன் ஆமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் முதுகலை பட்டம் பெற்றவர்.

---

3. 30-01-2022 – 'மகாத்மா' காந்தியடிகளின் 75ஆவது நினைவு நாள்.

---

4. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் 44 ஆண்டு ஏக்கம் தீர்ந்தது: ஆஷ்லி பார்டி சாம்பியன்

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், உள்ளூர் நட்சத்திரம் ஆஷ்லி பார்டி சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். இத்தொடரில் 44 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆஸ்திரேலிய வீராங்கனை கோப்பையை முத்தமிட்டது, அந்நாட்டு ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் டேனியலி கோலின்சுடன் (28 வயது, 30வது ரேங்க்) நேற்று மோதிய நம்பர் 1 வீராங்கனை ஆஷ்லி (25 வயது), தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக புள்ளிகளைக் குவித்து 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் ஆக்ரோஷமாக விளையாடி பதிலடி கொடுத்த கோலின்ஸ், ஒரு கட்டத்தில் 5-1 என முன்னிலை வகித்ததால், அந்த செட்டை மிக எளிதாக வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், உள்ளூர் ரசிகர்களின் ஆரவார ஆதரவுடன் உற்சாகமாக விளையாடிய ஆஷ்லி அடுத்தடுத்து கோலின்சின் சர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து முன்னேறி 5-5 என சமநிலையை எட்டினார். கோலின்சும் விட்டுக் கொடுக்காமல் போராடியதால் ஆட்டம் டை பிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது.

அதில் பதற்றமின்றி அமர்க்களமாக விளையாடிய ஆஷ்லி 6-3, 7-6 (7-2) என்ற நேர் செட்களில் வெற்றியை வசப்படுத்தி சாம்ம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். விறுவிறுப்பான இப்போட்டி 1 மணி, 27 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது. இந்த தொடரில் ஒரு செட்டில் கூட தோற்காமல் கோப்பையை முத்தமிட்டுள்ள ஆஷ்லி, 44 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸி. ஓபன் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் உள்ளூர் வீராங்கனை என்ற பெருமையை தட்டிச் சென்றார். சொந்த மண்ணில் நடக்கும் கிராண்ட் ஸ்லாம் தொடரில் மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு கிடைத்திருக்கும் இந்த வெற்றியை ஆஸி. மக்கள் மகிழ்ச்சியுடன் உற்சாகம் பொங்கக் கொண்டாடி வருகின்றனர்.

* தொழில்முறை கிரிக்கெட் வீராங்கனையாகும் முயற்சியில் 2014ம் ஆண்டில் டென்னிசில் இருந்து விலகியிருந்த ஆஷ்லி, தற்போது மகளிர் டென்னிசில் உலகின் நம்பர் 1 வீராங்கனையாக இருப்பதுடன் ஆஸி. ஓபனையும் வென்று மகத்தான சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. 1978ல் ஆஸி. ஓபன் சாம்பியன் பட்டம் வென்ற வீராங்கனை கிறிஸ்டைன் ஓ நீல், நேற்று ஆஷ்லிக்கு கோப்பையை வழங்கி பாராட்டினார்.

* ஆஷ்லி வென்ற 3வது கிராண்ட் ஸ்லாம் பட்டம் இது. முன்னதாக, 2019ல் பிரெஞ்ச் ஓபன் பட்டத்தையும் கடந்த ஆண்டு விம்பிள்டன் பட்டத்தையும் அவர் வென்றிருந்தார்.

* மார்சிங்கோ அசத்தல்

ஆஸ்திரேலிய ஓபன் சிறுமியர் ஜூனியர் பிரிவில் குரோஷியா வீராங்கனை பெத்ரா மார்சிங்கோ (16 வயது, நம்பர் 1) சாம்பியன் பட்டம் வென்றார். பைனலில் சோபியா கோஸ்டுலாஸுடன் (16 வயது, பெல்ஜியம், 8வது ரேங்க்) நேற்று மோதிய மார்சிங்கோ 7-5, 6-1 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டார். இப்போட்டி 1 மணி, 16 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது.

* புரூனோ அமர்க்களம்

ஆஸி. ஓபன் ஜூனியர் சிறுவர் பிரிவில் அமெரிக்காவின் புரூனோ குஸுஹரா (17 வயது, நம்பர் 1) சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் செக் குடியரசின் ஜேக்கப் மென்சிக்குடன் (4வது ரேங்க்) மோதிய புரூனோ 7-6 (7-4), 6-7 (6-8), 7-5 என்ற செட் கணக்கில் 3 மணி, 43 நிமிடம் கடுமையாகப் போராடி கோப்பையை தட்டிச் சென்றார்.

* நடாலுடன் இன்று மெட்வதேவ் மோதல்

ஆஸ்திரேலிய ஓபன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இன்று ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடாலுடன் (35 வயது, 6வது ரேங்க்) ரஷ்யாவின் டேனியல் மெட்வதேவ் (25 வயது, 2வது ரேங்க்) மோதுகிறார். கிராண்ட் ஸ்லாம் வேட்டையில் ரோஜர் பெடரர் (சுவிஸ்), நோவாக் ஜோகோவிச் (செர்பியா) ஆகியோருடன் சமநிலை வகிக்கும் நடால் (தலா 20 சாம்பியன் பட்டங்கள்), மெட்வதேவை வீழ்த்தி மகத்தான சாதனை படைப்பாரா என்பதே டென்னிஸ் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதே சமயம், கடந்த ஆண்டு யுஎஸ் ஓபன் பைனலில் ஜோகோவிச்சை வீழ்த்தி அதிர்ச்சி அளித்த மெட்வதேவ் தொடர்ச்சியாக 2வது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றும் முனைப்புடன் களமிறங்குவதால் போட்டி மிகக் கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

* இருவரும் இதுவரை 4 முறை மோதியுள்ளதில் நடால் 3 வெற்றிகளுடன் முன்னிலை வகிக்கிறார்.

* 2019 யுஎஸ் ஓபன் பைனலில் மெட்வதேவுடன் மோதிய நடால் 5 செட்கள் கடுமையாகப் போராடி பட்டம் வென்றார்.

* 2020 ஏடிபி பைனல்ஸ் தொடரில் நடாலுக்கு எதிராக நேர் செட்களில் மெட்வதேவ் வெற்றி பெற்றார்.

---

1. 'உலகப்பொருளாதார நிலை & வாய்ப்புகள்' என்பது எந்த அமைப்பின் முதன்மை வெளியீடாகும்?

அ) உலக வங்கி

ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி

இ) ஐக்கிய நாடுகள் ☑

ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

✓ "உலகப்பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள்" என்பது ஐநா சபையின் முதன்மையான வெளியீடாகும். சமீபத்தில் இதன் 2022ஆம் ஆண்டின் பதிப்பு வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, உலகளாவிய உற்பத்தி 2022'இல் 4 சதவீதமாகவும், 2023'இல் 3.5 சதவீதமாகவும் மட்டுமே வளரும் எனக்கணிக்கப்பட்டுள்ளது.

---

2. பெஞ்ச் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ மத்திய பிரதேச மாநிலத்தில் பெஞ்ச் புலிகள் காப்பகம் உள்ளது. இந்தப் புலிகள் காப்பகத்தில் இருந்த 'காலர்வாலி' என்ற மிகப்பிரபலமான புலி சமீபத்தில் இறந்துவிட்டதாக அக்காப்பகம் அறிவித்தது. இந்தப் புலி (டி-15) செப்டம்பர் 22, 2005 அன்று பிறந்தது. ஒரே பிரசவத்தில் 5 குட்டிகளைப் ஈன்றெடுத்து புகழ்பெற்ற சாதனையைப் பெற்றதால், அது 'சூப்பர்மாம்' என்றும் அன்புடன் அழைக்கப்படுகிறது. அந்தப் புலி இதுவரை 29 குட்டிகளைப் பெற்றெடுத்துள்ளது. அதில் 25 குட்டிகள் உயிரோடு உள்ளன.

---

3. 'மன ஊரு, மன பதி' என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிற மாநிலம் எது?

அ) ஒடிஸா

ஆ) தெலுங்கானா ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) கர்நாடகா

✓ ₹7,289 கோடி பட்ஜெட்டில் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் 'மன ஊரு, மன பதி' திட்டத்திற்கு தெலுங்கானா அமைச்சரவை சமீபத்தில் தனது ஒப்புதலை அளித்துள்ளது.

✓ இது மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் அவற்றில் பயனுள்ள அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 26000 பள்ளிகளைச் சேர்ந்த 19.84 லட்சம் குழந்தைகள் இதனால் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

4. 'திறந்தவெளி தரவு வாரம்' அனுசரிக்கும் அமைச்சகம்?

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் ☑

இ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் 'திறந்தவெளி தரவு வாரத்தை' அனுசரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இது திறந்தவெளி தரவுகளை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பது மற்றும் இந்தியாவின் நகர்ப் புறச்சூழலமைப்பு முழுவதும் புதுமைகளை ஊக்குவிப்ப -தை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 2022 பிப்ரவரியில் சூரத்தில் நடைபெறவுள்ள 'அமுதப் பெருவிழா - சீர்மிகு நகரங்கள்: சீர்மிகு நகரமயமாக்கல்' மாநாட்டிற்காக, திறந்தவெளி தரவுகள் குறித்த விழிப்புண -ர்வையும் பயன்பாட்டையும் ஊக்குவிப்பதற்காக மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும் நிகழ்வுக்கு முந்தைய முயற்சிகளின் ஒருபகுதியாக இந்தத் திறந்தவெளி தரவு வாரம் உள்ளது.

---

5. "யோக்யதா" என்ற திறன்பேசி செயலி கீழ்காணும் எதனால் தொடங்கப்பட்டது?

அ) பொது சேவை மையங்கள் ☑

ஆ) தேசிய பசுமை தீர்ப்பாயம்

இ) இந்திய தேர்தல் ஆணையம்

ஈ) இந்திய உச்சநீதிமன்றம்

✓ பொதுசேவை மையமானது (CSC) சமீபத்தில் "யோக்யதா" என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ இது கிராமப்புறங்களில் உள்ள இளையோர் மற்றும் பிற குடிகளுக்கு தொழிற்சார் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வேலைவாய்ப்பை அதிகரிக்க, சைபர் செக்யூரிட்டி, CAD மற்றும் முப்பரிமாண (3D) அச்சுபோன்ற படிப்புகளுக்கான அணுகலை இது உள்ளடக்கியுள்ளது.

---

6. இந்தியாவின் முதல் மாவட்ட நல்லாட்சி குறியீட்டை அறிமுகப்படுத்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) கேரளா

ஆ) ஜம்மு & காஷ்மீர் ☑

இ) கோவா

ஈ) சிக்கிம்

✓ இந்தியாவின் முதல் மாவட்ட நல்லாட்சி குறியீடு ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் வெளியிடப்பட்டது. இந்தக் குறியீட்டின் கூட்டுத்தரவரிசையில், ஜம்மு மாவட்டம் முதல் இடத்திலும், தோடா, சம்பா, புல்வாமா மற்றும் ஸ்ரீநகர் மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. இந்தக் குறியீடு 58 குறிகாட்டிகளுடன் பத்து நிர்வாகத் துறைகளின்கீழ் செயல்திறனை மதிப்பிடும் ஒரு கட்டமைப்பு ஆவணமாகும்.

---

7. 'உழவு எந்திரமயமாக்கலின் துணைப்பணி' என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டமாகும்?

அ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம் ☑

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம் 2014–15'இல் Sub–Mission on Agricultural Mechanization (SMAM) என்ற திட்டத்தைத்தொடங்கியது. இது சிறு & குறு உழவர்களின் பண்ணை எந்திரமயமாக்களுக்கு உதவும். SMAM'இன் சமீபத்திய வழிகாட்டுதல்களின்படி, வேளாண் இயந்திரப் பயிற்சி மையங்கள், வேளாண் ஆராய்ச்சி மையங்கள், கிரிஷி விஞ்ஞான் மையங்கள், வேளாண் பல்கலைகள் வாங்கும் டிரோன்களுக்கு 100 சதவீத மானியம் அல்லது ₹10 இலட்சம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும். வேளாண் உற்பத்தியாளர் சங்கங்கள், ட்ரோன்கள் வாங்க 75% மானியம் வழங்கப்படும்.

---

8. 'மசாலாப் பொருட்கள் வாரியம்' என்பது பின்வரும் எந்த அமைச்சகத்தின்கீழுள்ள ஒழுங்குமுறை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனமாகும்?

அ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

ஆ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑

இ) MSME அமைச்சகம்

ஈ) பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

✓ 'மசாலாப்பொருட்கள் வாரியம்' என்பது மசாலாப்பொருட்கள் சார்ந்த ஓர் ஒழுங்குமுறை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனமாகும். இது வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

✓ இதன் தலைமையகம் கேரளாவின் கொச்சியில் உள்ளது. மசாலா வாரியம் மசாலா ஏற்றுமதிக்கான நாட்டின் முதல் மெய்நிகர் தளமான 'Spice Xchange'ஐ தொடக்கியது. இந்தியா ஆனது 180'க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 225 வகையான மசாலா மற்றும் மசாலாப் பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. இது ஒரு 3D மெய்நிகர் தளமாகும், இது இந்தியாவில் உள்ள மசாலா ஏற்றுமதியாளர்களை உலகெங்கிலும் உள்ள வாங்குபவர்களுடன் AIமூலம் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

9. 'மக்களுக்காக வீதிகள்' என்பது கீழ்காணும் எந்த மத்திய அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் ☑

இ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்



✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த இணையவழி நிகழ்வில், 'மக்களுக்–காக வீதிகள்' என்பதில் வெற்றி பெற்ற 11 நகரங்கள் 'அண்டை அயல் நட்புகளை வளர்த்தல்' என்பதன் முதற் கட்டத்தில் வென்ற 10 நகரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

✓ இந்த நிகழ்வின்போது, மாற்றத்திற்கான மிதிவண்டிகள் மக்களுக்காக வீதிகள் என்பதன் இரண்டாம் கட்டத்தை அமைச்சகம் தொடங்கியது. 'அண்டை அயல் நட்புகளை வளர்த்தல்: களத்திலிருந்து கதைகள்' எனப்பெயரிடப்பட்ட ஒரு நூல் வெளியிடப்பட்டது.

---

10. 'கிராம ஒன்' திட்டமானது பின்வரும் எம்மாநிலத்தின் முன்முயற்சியாகும்?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) கர்நாடகா ☑

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ 12 மாவட்டங்களில் உள்ள கிராமப்புறங்களில் குடியரசு நாளிலிருந்து 'கிராம ஒன்' திட்டம் செயல்படுத்தப்படும் என கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை கூறினார்.

✓ இத்திட்டம் குடிமக்களின் வீட்டு வாசலிலேயே பல்வேறு துறைகளின் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு அரசு சேவைகளை வழங்குதற்–காக மாநிலங்கள் முழுவதும் 30000 'கிராம ஒன்' சேவை மையங்கள் திறக்கப்படவுள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மத்திய பட்ஜெட் – வரலாறும் சுவாரஸ்யங்களும்

மத்திய அரசின் 2022–23ஆம் நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்) பிப்.1 தாக்கல்செய்யப்படவுள்ளது.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து 4ஆவது முறையாக மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ளார். இந்நிலையில், பட்ஜெட்டின் வரலாறு குறித்தும் பல்வேறு சுவாரஸ்ய தகவல்கள் குறித்தும் காண்போம்.

வரலாற்று சிறப்பு தாக்கல் செய்யப்பட்ட நாள் / ஆண்டு தாக்கல் செய்தவர்.

இந்தியாவுக்கான முதலாவது பட்ஜெட் ஏப்ரல் 7, 1860 பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தால் அந்நாட்டு அரசி விக்டோரியா முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் முதல் பட்ஜெட் நவம்பர் 26, 1947 ஆர் கே சண்முகம் செட்டி

நீண்ட பட்ஜெட் உரை பிப்ரவரி 1, 2020 (2 மணி நேரம் 42 நிமிஷங்கள்) நிர்மலா சீதாராமன்

பட்ஜெட் உரையில் அதிக சொற்கள் 1991 (18,650 சொற்கள்) மன்மோகன் சிங்

2018 (18,604 சொற்கள்) அருண் ஜேட்லி

பட்ஜெட் உரையில் குறைந்த சொற்கள் 1977 (800 சொற்கள்) எச் எம் படேல்

முதல் காகிதமில்லா பட்ஜெட் 2021–22 நிர்மலா சீதாராமன்

சுவாரஸ்யங்கள்:

அதிகமுறை பட்ஜெட் தாக்கல் செய்தவர்கள் மொரார்ஜி தேசாய்–10 முறை; ப சிதம்பரம்–9 முறை; பிரணாப் முகர்ஜி, யஷ்வந்த் சின்ஹா (8 முறை)

பட்ஜெட் மொழி 1955 வரை ஆங்கிலம் மட்டுமே; அதன் பிறகு ஹிந்தி, ஆங்கிலம்

பட்ஜெட் தாக்கல்செய்த முதல் பெண் இந்திராகாந்தி (1970–71)

நிர்மலா சீதாராமன்–முழுநேர நிதியமைச்சர் (2019)

இரயில்வே பட்ஜெட் 2017 வரை தனியாகத்தாக்கல்; அதன் பிறகு பொது பட்ஜெட்டுடன் இணைப்பு

சிறப்புப் பெயர்கள் பட்ஜெட் காரணம்

கருப்பு பட்ஜெட் 1973–74 ₹550 கோடி நிதிப்பற்றாக்குறை.

கேரட்–ஸ்டிக் பட்ஜெட் 1986 சலுகைகளும் அபராதங்களும் ஒருசேர அறிவிப்பு.

புதிய சகாப்தம் வகுத்த பட்ஜெட் 1991 தாராளமய கொள்கை அறிமுகம்.

கனவு பட்ஜெட் 1997–98 தனிநபர், நிறுவன, இறக்குமதி வரிகள் குறைப்பு.

ஆயிரமாண்டுக்கான பட்ஜெட் 2000 தகவல்–தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வழிகோலியது.

பின்வாங்கிய பட்ஜெட் 2002–03 பெரும்பாலான அறிவிப்புகள் திரும்பப்பெறப்பட்டன.

நூற்றாண்டுக்கு ஒருமுறை பட்ஜெட் 2021–22 கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிப்பு.

---

2. திருப்பூர் இளநீர் விற்கும் பெண்ணுக்கு பிரதமர் மோடி பாராட்டு

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையை சேர்ந்த இள நீர் விற்கும் பெண் தாயம்மாள் பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளி கட்டமைப்புக்காக ₹1 லட்சம் நன்கொடை வழங்கி இருந்தார்.

அவருக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பேசிய மோடி, தாயம்மாளை குறிப்பிட்டு பேசினார்.

கல்வி பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் தெரிகிறது. தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் வசிக்கும் தாயம்மாளின் செயல்மிகவும் ஊக்கம் அளிக்கிறது.

அவருக்கு சொந்தமாக நிலம் எதுவும் இல்லை. இவர்களது குடும்பம் பல ஆண்டுகளாக இளநீர் விற்று சம்பாதித்து வருகிறார்கள். பொருளாதார நிலை அவருக்கு நன்றாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தாயம்மாள் தனது மகன், மகளுக்கு கல்வி கற்பதற்கு எந்த தடைக்கல்லையும் ஏற்படுத்தவில்லை.

இவரது குழந்தைகள் சீன்னவீரம்பட்டு பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியில் படித்து வருகிறார்கள். அந்த பள்ளியில் பெற்றோர்கள் கூட்டம் நடந்த போது, வகுப்பறைகள் மற்றும் பள்ளியின் நிலையை மேம்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

பள்ளியின் உட்கட்டமைப்புகளை சரி செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த பணிக்கான பண பற்றாக்குறை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் தாயம்மாளும் பங்கேற்றிருந்தார். அவர் என்ன செய்தார் என்று யாராலும் நினைத்து பார்க்க முடியவில்லை. இளநீர் விற்று ஓரளவுக்கு சம்பாதித்த பணத்தை தாயம்மாள் பள்ளி கட்டமைப்புக்காக ரூ.1 லட்சம் நன்கொடை அளித்தார்.

உண்மையில் இதை செய்வதற்கு ஒரு பெரிய மனது, சேவை உணர்வு தேவை. அங்குள்ள பள்ளியில் 8ஆம் வகுப்பு வரை இருப்பதாக தாயம்மாள் கூறுகிறார்.

இப்போது பள்ளியின் உட்கட்டமைப்பு மேம்பட்டால் மேல் நிலை கல்வி வரை வகுப்புகள் நடத்தப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

---

3. தேசிய மகளிர் ஆணைய தொடக்க தினம்

கடந்த 1992ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி தேசிய மகளிர் ஆணையம் தொடங்கப்பட்டது.

---

4. வாகை சூடினார்; வரலாறு படைத்தார்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில், உலகின் 5ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் (35) சாம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் தனது 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றிய நடால், டென்னிஸ் வரலாற்றில் அத்தனை கிராண்ட்ஸ்லாம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையை படைத்தார். முன்னதாக அவர் 20 கிராண்ட்ஸ்லாம்கள் வென்று, ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், செர்பியாவின் ஜோகோவிச் ஆகியோருடன் சமனிலையில் இருந்தார்.

அவா'களில் யாா' முதலில் 21–ஆவது கிராண்ட்ஸ்லாமை எட்டி சாதனை படைப்பது என்ற போட்டி இருந்தது. இந்த நிலையில், முழங்கால் அறுவைச் சிகிச்சை காரணமாக ரோஜர்பெடரரும், கரோனா தடுப்பூசி சர்ச்சையால் நோவக் ஜோகோவிச்சும் ஆஸ்திரேலிய ஓபனில் பங்கேற்காமல் போனது நடால் அந்தச் சாதனையை முதலில் எட்டுவதற்கு சற்று சாதகமாகிப்போனது.

2ஆவது அதிகபட்சம்...

இந்த இறுதிச்சுற்று மொத்தமாக 5 மநே 24 நிமிஷங்கள் நடைபெற்றது. ஆஸ்திரேலிய ஓபன் வரலாற்றில் நீண்ட நேரம் நடைபெற்ற இறுதிச்சுற்றில் இது 2ஆவது இடத்தில் இருக்கிறது. முன்னதாக, 2012இல் ஜோகோவிச்சிடம் நடால் தோல்வி கண்ட இறுதிச்சுற்று 5 மணி நேரம் 53 நிமிஷங்களுடன் முதலிடத்தில் இருக்கிறது.

தலா 2 கிராண்ட்ஸ்லாம்கள்...

இந்த ஆஸ்திரேலிய ஓபனில் சாம்பியன் ஆனதன்மூலம், அனைத்து கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் குறைந்தது 2 முறை பட்டங்கள் வென்ற கணக்கை எட்டியிருக்கிறார் நடால். ஓபன் எராவில் இத்தகைய சாதனையை எட்டும் 2ஆவது வீரர் இவர். முதல் வீரர் நோவக் ஜோகோவிச்.

முதல் வீரர்...

ஆஸ்திரேலிய ஓபன் வரலாற்றில், இறுதிச்சுற்றில் முதல் இருசெட்களை இழந்து அடுத்த 3 செட்களை கைப்பற்றி சாம்பியன் ஆன முதல் வீரர் என்ற பெருமையை நடால் பெற்றிருக்கிறார். மறுபுறம், நடாலின் டென்னிஸ் வரலாற்றில் அவர் இவ்வாறு முதலிரு செட்களை இழந்தும் வெற்றியை பதிவு செய்தது இது 4ஆவது முறை.

---

5. ஒடிஸா ஓபன்: வாகை சூடினார் உன்னாட்டி ஹூடா

ஒடிஸா ஓபன் பாட்மின்டன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் உன்னாட்டி ஹூடா வாகை சூடினார். இப்போட்டியில் சாம்பியன் ஆன மிக இளவயது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

14 வயதே ஆகியிருக்கும் உன்னாட்டி தனது இறுதிசுற்றில் சக இந்தியரான ஸ்மித் டோஷ்னிவாலை 21–18, 21–11 என்ற நேர் கேம்களில் 35 நிமிஷங்களில் தோற்கடித்தார். உன்னாட்டிக்கு ₹4.22 லட்சம் ரொக்கம் வழங்கப்பட்டது.

ஆடவர் ஒற்றையர்: மறுபுறம், போட்டித்தரவரிசையில் இடம்பிடிக்காவிட்டாலும் அசத்தலாக ஆடி முன்னேறி வந்த கிரண் ஜார்ஜ் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் 21–15, 14–21, 21–18 என்ற கேம்களில் மற்றொரு இந்திய வீரரான பிரியான்ஷு இரஜாவத்தை வீழ்த்தி முதலிடம் பிடித்தார். அவருக்கும் ₹4.22 லட்சம் ரொக்கம் கிடைத்தது.

மகளிர் இரட்டையர்: இப்பிரிவின் இறுதிச்சுற்றில் போட்டித் தரவரிசையில் 5ஆம் இடத்திலிருந்த இந்தியாவின் டிரிசா ஜாலி/காயத்ரி கோபிசந்த் இணை 21–12, 21–10 என்ற நேர் கேம்களில் மிக எளிதாக, போட்டித்தரவரிசையில் 8ஆவது இடத்திலிருந்த இந்தியாவின் சன்யோகிதா கோர்படே/ஷ்ருதி மிஸ்ரா கூட்டணியை வீழ்த்தியது.

இந்த ஆட்டம் 28 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது. டிரிசா /காயத்ரி இணை ₹4.44 லட்சம் ரொக்கப்பரிசை பகிர்ந்து கொள்கிறது.

2 வெள்ளி: எனினும் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்தியா சாம்பியன் பட்டத்தை தவறவிட்டது.

ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றில் இந்தியாவின் ரவி கிருஷ்ணா /சங்கர் பிரசாத் உதயகுமார் இணை 21–18, 14–21, 16–21 என்ற கேம்களில் மலேசியாவின் நூர் முகமது அஸ்ரியின்/லிம் கிம் வா இணையிடம் 51 நிமிஷங்களில் வெற்றியை இழந்தது.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் M R அர்ஜூன் / டிரீசா ஜாலி ஜோடி 16–21, 20–22 என்ற கேம்களில் இலங்கையின் சச்சின் டியாஸ்/தில்லினி ஹெந்தஹேவா இணையிடம் 36 நிமிஷங்களில் தோற்றது.

இந்த இரு பிரிவுகளிலும் 2ஆம் இடம்பிடித்த இந்திய இணை தலா ₹2.13 லட்சம் பரிசைப் பகிர்ந்துகொண்டன.

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி என்பாருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ்

ஆ) கால்பந்து ☑



இ) ஹாக்கி

ஈ) மட்டைப்பந்து

✓ போலந்து கால்பந்தாட்ட வீரர் ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி 2021ஆம் ஆண்டிற்கான 'FIFA சிறந்த வீரர்' விருதை வென்றார். தற்போது, அவர் பேயர்ன் முனிச் அணிக்காக விளையாடி, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த விருதை வெல்கிறார்.

✓ பார்சிலோனாவின் ஸ்பானிய நடுகள வீராங்கனையான அலெக்ஸியா புட்டெல்லாஸ் 'FIFA சிறந்த வீராங்கனை' விருதை வென்றார். இந்த ஆண்டின் சிறந்த கோலுக்கான புஸ்காஸ் விருதை அர்ஜென்டினா வீரர் எரிக் லமேலா வென்றுள்ளார்.

---

2. 'நுசந்தரா' என்பது எந்நாட்டின் புதிய தலைநகரமாகும்?

அ) கஜகஸ்தான்



ஆ) ஆப்கானிஸ்தான்

இ) இந்தோனேசியா ☑

ஈ) இலங்கை

✓ இந்தோனேஷியா தனது தலைநகரமான ஜகார்த்தாவை போர்னியோ தீவின் கிழக்கே அமைந்துள்ள கிழக்கு கலிமந்தனுக்கு மாற்றும் மசோதாவை நிறைவேற்றியது. இந்தோனேஷியாவின் புதிய தலைநகர் நுசந்தரா என்று அழைக்கப்படும். 'நுசந்தரா' என்றால் ஜாவனிய மொழியில் 'தீவுகளின் கூட்டம்' எனப்பொருள்.

✓ ஜகார்த்தா ஏற்கனவே மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும் காரணத்தால், இந்தப் புதிய நகரத்தில் ஒரு சீர்மிகு நகரக் கட்டமைப்பை உருவாக்க இந்தோனேஷிய அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளது. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தோனேசியா நான்காவது மிகப்பெரிய மக்கள்தொகை கொண்ட நாடாக உள்ளது.

---

3. 'குளோபல் சைபர் செக்யூரிட்டி அவுட்லுக் – 2022' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உலக வங்கி

ஆ) உலக பொருளாதார மன்றம் ☑

இ) உலக வர்த்தக அமைப்பு

ஈ) சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம்

✓ உலக பொருளாதார மன்றம் 'குளோபல் சைபர்செக்யூரிட்டி அவுட்லுக் – 2022' என்றவோரறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, COVID–19 தொற்று வணிகத்திலும் வீட்டிலும் டிஜிட்டல் கருவிகளின் பயன்பாட்டை அதிக்கப்ப –டுத்தியுள்ளது. இந்த அதீத உயர்வு பல்வேறு இணைய நிகழ்வுகளுக்கு வழிவகுத்தன.

---

4. 'ஆபரேஷன் சர்த் ஹவா'வை மேற்கொள்கிற இந்திய ஆயுதப்படை எது?

அ) இந்தோ–திபெத்திய எல்லைக்காவல்படை

ஆ) எல்லைப் பாதுகாப்புப் படை ☑

இ) மத்திய சேமக்காவல்படை

ஈ) மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை

✓ எல்லைப் பாதுகாப்புப் படையானது ஜன.23–28 வரை நடைபெறவுள்ள அதன் "ஆபரேஷன் சர்த் ஹவா" கீழ் ராஜஸ்தான் மாநிலத்தில் பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் கண்காணிப்பை அதிகரிக்கும். எல்லைப் பாதுகாப்புப்படை கோடையில் "கரம் ஹவா" மற்றும் குளிர்காலத்தில் "சர்த் ஹவா" ஆகியவற்றை நடத்துகிறது.

---

5. 'சாதி' என்ற திறன்பேசிச் செயலியை அறிமுகப்படுத்திய நிதி நிறுவனம் எது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி

ஆ) நபார்டு

இ) SEBI ☑

ஈ) SIDBI

✓ பங்குச்சந்தையின் அடிப்படைக்கருத்துகள் குறித்து முதலீ –ட்டாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக, மூலதனச் சந்தை ஒழுங்காற்றுநரான SEBI தனது திறன் பேசிச்செயலியை 'சாதி' என்ற பெயரில் வெளியிட்டது.

✓ பங்குச்சந்தையில் நுழையும் தனிநபர் முதலீட்டாளர்களின் அதிகரிப்பு காரணத்தாலும் திறன்பேசி அடிப்படையிலான வணிகநடவடிக்கைகளாளும் இச்செயலி வெளியிடப்பட்டு உள்ளது. KYC செயல்முறை, வர்த்தகம் மற்றும் தீர்வு, பரஸ்பர நிதிகள், சந்தை மேம்பாடுகள், முதலீட்டாளர் குறைகளை நிவர்த்தி செய்யும் பொறிமுறை போன்ற அடிப்படைக் கருத்துகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

6. 'AFC மகளிர் ஆசிய கோப்பை – 2022' போட்டியை நடத்துகிற நாடு எது?

அ) ஜப்பான்

ஆ) ஆஸ்திரேலியா

இ) சீனா

ஈ) இந்தியா ☑

✓ 'AFC மகளிர் ஆசிய கோப்பை – 2022' போட்டியை இந்தியா நடத்துகிறது. இந்தியா காலிறுதிக்கு தகுதிபெற்று 2023 ஃபிஃபா மகளிர் உலகக் கோப்பையை எட்டுவதன் மூலம் சரித்திரம் படைக்கும் நோக்கில் உள்ளது. ஃபிஃபா மகளிர் உலகக் கோப்பை அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

✓ இந்திய சீனியர் கால்பந்து அணி இதுவரை எந்த உலகக் கோப்பைப் போட்டியிலும் விளையாடியதில்லை. ஆஸ்திரேலியாவும் சீனாவும் மிகப்பெரிய சவாலாக உள்ள நிலையில், தொடர்ந்து 3ஆவது முறையாக தனது முதலிட –த்தை உறுதிப்படுத்திக்கொள்ள ஜப்பான் விழைகிறது.

---

7. 'முடிவிலி பாலம்' என்பது எந்த நாட்டில் அமைந்துள்ள ஒரு சிறப்புவாய்ந்த கட்டடக்கலை அமைப்பு ஆகும்?

அ) ரஷ்யா

ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑



இ) இந்தியா

ஈ) அமெரிக்கா

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் உள்ள 'இன்ஃபினிட்டி பிரிட்ஜ்' முதன்முறையாக சமீபத்தில் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளது. துபாய் சிறுகுடாமீது கட்டப்பட்டுள்ள இப்புதிய பாலம், அல் ஷிந்தகா சுரங்கப்பாதைக்கு அருகில், வாகனங்கள் நீருக்கடியில் அந்தச் சிறுகுடாவை கடக்க உதவுகிறது. 2018'இல் முதன்முதலில் முன்மொழியப்பட்ட அல் ஷிந்தகா வழித்தட திட்டத்தின் ஒருபகுதியாக இந்த 'முடிவிலி பாலம்' அமைந்துள்ளது.

---

8. குடியரசுத்தலைவர் சார்பாக 'இந்தியாவின் எதிர்பாராச் செலவுக்கான நிதியத்தை' நிர்வகிக்கிற துறை எது?

அ) பொருளாதார விவகாரங்கள் துறை ☑

ஆ) செலவினத்துறை

இ) நிதியியல் சேவைகள் துறை

ஈ) வருவாய்த்துறை

✓ 'இந்தியாவின் எதிர்பாராச் செலவுக்கான நிதியம்' என்பது இந்தியக்குடியரசுத்தலைவரின் சார்பாக நிதியமைச்சகத்–தின் பொருளாதார விவகாரங்கள் துறையால் நிர்வாகம் செய்யப்படுகிறது. இது நிர்வாக செயல்முறை நடவடிக்கை மூலம் இயக்கப்படலாம். பேரிடர்கள் மற்றும் தொடர்புடைய எதிர்பாராத செலவுகளின் போது பயன்படுத்தப்படலாம்.

✓ சமீபத்தில், இந்த நிதிக்கான செலவின விதிமுறைகளை அரசாங்கம் மாற்றியமைத்துள்ளது. மொத்த நிதி மதிப்பில் 40 சதவீதத்தை செலவினச் செயலாளரின் வசம் வைக்க இது வழிகோலுகிறது.

---

9. அஸ்ஸாமின் உயரிய குடிமக்கள் விருதான 'அஸ்ஸாம் வைபவ்'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) ரத்தன் டாடா ☑



ஆ) கௌதம் அதானி

இ) முகேஷ் அம்பானி

ஈ) அஸிம் பிரேம்ஜி

✓ தொழிலதிபரும், கொடையாளியுமான ரத்தன் டாடாவுக்கு மாநிலத்தின் மிகவுயரிய விருதான 'அஸ்ஸாம் பைபவ்' விருதை அஸ்ஸாம் அரசு வழங்கவுள்ளது.

✓ அஸ்ஸாம் மாநிலம் 'அஸ்ஸாம் பைபவ்', 'அஸ்ஸாம் சௌரவ்' & அஸ்ஸாம் கௌரவ் ஆகிய விருதுகளையும் வழங்கும். 'அஸ்ஸாம் சௌரவ்' விருது ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற லவ்லினா போர்கோஹைன் உட்பட ஐந்து நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

---

10. '*Halodule uninervis*' என்ற கடற்புல் வகையானது, கீழ்காணும் எந்த நோய்க்கு எதிராக வலுவான செயல்பாட்–டைக் கொண்டுள்ளது?

அ) புற்றுநோய் ☑



ஆ) உயர் இரத்தவழுத்தம்

இ) நீரிழிவு நோய்

ஈ) COVID–19

✓ '*Halodule uninervis*'இன் எத்தில் அசிடேட் கூறினிலுள்ள வலுவான புற்றுநோய் எதிர்ப்பு செயல்பாட்டின் அறிவியல் ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது தென் தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் அருகே கடலோரப் பகுதியில் காணப்படும் ஒரு கடற்புல் வகையாகும்.

✓ வீரியம்மிக்க கருங்கட்டி, நுரையீரல், கருப்பைவாய்ப்புற்று நோய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய்கள் உள்ளிட்ட மனிதரில் ஏற்படும் பல்வேறு புற்றுநோய் செல்களுக்கு எதிரான இது செயல்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பருவநிலை மாற்றத்தில் இந்தியாவின் பொறுப்புணர்வு: குடியரசுத்தலைவர் பெருமிதம்

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியா பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியது. இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத்தலைவர் ஆற்றிய உரை:

உலகம் தற்போது பருவநிலை மாற்றத்தின் சவால்களைச் சந்தித்து வருகிறது. இந்த விவகாரத்தில் பொறுப்புணர்வுடன் சர்வதேச அளவில் இந்தியா குரல் கொடுத்துவருகிறது. 2070ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ய கரியமில வாயு உமிழ்வு நிலை உள்ளிட்ட பல்வேறு இலக்குகளை கிளாஸ்கோ பருவநிலை மாநாட்டில் இந்தியா நிர்ணயித்தது.

'ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின் விநியோக அமைப்பு' திட்டத்தையும் இந்தியா முன்னெடுத்தது.

கரோனா தொற்று பரவல் காலத்திலும், கடந்த 2020–21 நிதியாண்டில் நாட்டின் விவசாயிகள் 30 கோடி டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்தனர். 433 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையை விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசு கொள்முதல் செய்தது. அதன்மூலமாக 50 லட்சம் விவசாயிகள் பலனடைந்தனர். நாட்டின் வேளாண் ஏற்றுமதி ₹3 லட்சம் கோடியைக் கடந்துள்ளது.

விவசாயிகள் நிதியுதவித் திட்டம் வாயிலாக 11 கோடி விவசாயிகள் பலனைடந்துள்ளனர்.

ரயில்வே துறையில் சாதனை: உழவர்களுக்கான ரயில் (கிசான் ரயில்) சேவை, ரயில்பாதைகள் மின்மயமாக்கம், நவீனமயம், வடகிழக்கு மாநிலங்களுக்கான ரயில் சேவை உள்ளிட்டவை ரயில்வே துறையில் அரசு நிகழ்த்திய முக்கிய சாதனைகள். வந்தே பாரத் ரயில்,

'விஸ்டாடோம்' பெட்டிகள் உள்ளிட்டவை நவீனத்தை வெளிப்படுத்துகின்றன.

கடந்த 7 ஆண்டுகளில் 24,000 கிமீ தொலைவுக்கு ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. காஷ்மீரில் செனாப் நதிக்கு மேலே கட்டப்பட்டு வரும் ரயில்வே மேம்பாலம் நவீனத்தின் மையமாகத் திகழ்கிறது.

வடகிழக்கின் வளர்ச்சி: வடகிழக்கு மாநிலங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த அரசு உறுதிகொண்டுள்ளது. அந்த மாநிலங்களின் தலைநகரங்கள் அனைத்தும் ரயில் சேவைகளால் இணைக்கப்பட்டுள்ளன. விமானப் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வடகிழக்கின் வளர்ச்சி, நாட்டின் வளர்ச்சிக்கான வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும் நிலை உருவாகும்.

வலுவான நிலையில் இந்தியா: தொடர்ந்து மாறிவரும் சர்வதேச சூழலில் தூதரகத்தொடர்புகள்மூலமாக இந்தியா தனது நிலையை வலுப்படுத்திக்கொண்டுவருகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டில் ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை ஏற்று பல்வேறு முக்கிய முடிவுகளை இந்தியா எடுத்தது; கடல்சார் பாதுகாப்பு குறித்து முதல்முறையாக விவாதம் நடத்தப்பட்டது.

அண்டைநாடான ஆப்கானிஸ்தானில் நிலையில்லாத் தன்மை ஏற்பட்டவுடன், அந்நாட்டில் சிக்கிக்கொண்டவர்கள் 'ஆபரேஷன் தேவி சக்தி'மூலமாக மீட்கப்பட்டனர். ஆப்கனுக்கு மனிதாபிமான அடிப்படையில் மருந்துகள், உணவுப்பொருள்களை இந்தியா அனுப்பி வருகிறது.

'ஒரே இந்தியா, சிறந்த இந்தியா': பல ஆண்டுகளாகப் புறக்–கணிக்கப்பட்டு வந்த ஜம்மு–காஷ்மீர், லடாக் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கை–ளை அரசு மேற்கொண்டு வருகிறது. 'ஒரே இந்தியா, சிறந்த இந்தியா' என்ற கொள்கையின் அடிப்படையில் ஜனநாயக கொள்கைகளைக்கடைபிடித்து வளர்ச்சிக்கான புதிய அத்தியாயம் எழுதப்பட்டு வருகிறது என்றார் இந்தியக் குடியரசுத் தலைவர்.

---

2. பொருளாதார வளர்ச்சி 8 – 8.5% ஆக இருக்கும்: பொருளாதார ஆய்வறிக்கை

2022–23ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 முதல் 8.5% ஆக இருக்கும் என பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

2021–22ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று தாக்கல் செய்தார்.

பொருளாதார ஆய்வறிக்கையின்படி, எதிர்வரும் 2022–23ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8–8.5 சதவிகிதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நிதியாண்டில் வரக்கூடிய சவால்களை சந்திக்–கக்கூடிய வகையில் பொருளாதாரம் நல்ல நிலையில் இருப்பதாகவும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், நாட்டின் மெய்யான பொருளாதார வளர்ச்சி 9 புள்ளி 2 சதவிகிதமாக ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், வேளாண் துறை 3.9 சதவிகிதமாக வளரும் எனக் கணிக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டு உள்ளது. இதேபோல், தொழில்துறை 11.8 சதவிகிதமாக வளர்ச்சி அடையும் எனக் கருதப்படுவதாகவும், சேவைத் துறை 8.2 சதவிகிதமாக உயரும் என கணிக்கப்படுவதாக –வும் அதில் கூறப்பட்டுள்ளது.

---

3. 2020–21 பொருளாதார வளர்ச்சியில் 6.6% பின்னடைவு

கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 6.6 சதவீதம் சரிவைக் கண்டதாக தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்க –ப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கரோனா பேரிடரின் தாக்கம் இந்தியப்பொருளாதாரத்தில் முன்பு கணிக்கப்பட்டதைவிட குறைவாகவே இருந்தது. அதனை எடுத்துக்காட்டும் வகையில், 2021 மே மாதத்தில் வெளியிடப்பட்ட மதிப்பீட்டில் இந்தியப்பொருளதாரம் 2020 –21ஆம் நிதியாண்டில் 7.3 சதவீத சரிவை சந்திக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பாதிப்பின் தாக்கம் எதிர்பார்த்ததைவிட குறைவாக இருந்ததன் பலனாக இந்தச் சரிவு 6.6 சதவீதம் அளவுக்கே ஏற்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான (2011–12) விலை அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019–20ஆம் நிதியாண்டில் ₹145.16 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2020–21இல் ₹135.58 லட்சம் கோடியாக குறைந்துள்ளது என NSO தெரிவித்துள்ளது.

---

1. 2022'இன்படி, இந்தியாவின் வடகோடியில் அமைந்து உள்ள மாநிலம் எது?

அ) ஜம்மு மற்றும் காஷ்மீர்

ஆ) பஞ்சாப்



இ) ஹிமாச்சல பிரதேசம் ☑

ஈ) ஹரியானா

✓ ஹிமாச்சல பிரதேச மாநிலம் இந்தியாவின் வடகோடியில் உள்ள மாநிலமாகும். அது வடக்கே ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களுடன் தனது எல்லைகளைப் பகிர்ந்துகொள்கிறது. 1971ஆம் ஆண்டு இதேநாளில் 18ஆவது இந்திய மாநிலமாக அது உருவாக்கப்பட்டது.

✓ டாக்டர் யஷ்வந்த் சிங் பர்மர் அதன் முதல் முதலமைச்சராக இருந்தார். இம்மாநிலம் அதன் 52ஆவது மாநில தினத்தை ஜன.25 அன்று கொண்டாடியது.

---

2. 'INS குக்ரி நினைவகம்' அமைந்துள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?

அ) பஞ்சாப்



ஆ) டையூ ☑

இ) புதுச்சேரி

ஈ) கோவா

✓ 'INS குக்ரி நினைவகம்' என்பது கடந்த 1976ஆம் ஆண்டு பாகிஸ்தான் நீர்மூழ்கிக்கப்பலால் தாக்கப்பட்ட ஒரு போர்க் கப்பலை நினைவுகூரும் ஓர் இந்திய–பாகிஸ்தான் போர் நினைவிடமாகும். உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியக்கடற்படையின் முதல் ஏவுகணை ஏந்திய போர்க் கப்பலான INS குக்ரி டையூ நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

✓ மசகான் கப்பல்கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்ட இந்தக் கப்பல், கடந்த 1989ஆம் ஆண்டு மும்பையிலிருந்து பணிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டது. 2021டிசம்பரில் பணிநீக்கம் செய்யப்பட்ட இக்கப்பல், பொதுமக்களின் பார்வைக்காக டையூவுக்கு அனுப்பப்பட்டது.

---

3. 512 கிமீட்டர் நீள எல்லையைப் பகிர்ந்துகொண்டு, எந்த மாநிலத்திலிருந்து நாகாலாந்து பிரிக்கப்பட்டது?

அ) அஸ்ஸாம் ☑



ஆ) சிக்கிம்

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) மேற்கு வங்கம்

✓ நாகாலாந்து மாநிலமானது கடந்த 1963ஆம் ஆண்டில் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டது. இருமாநிலங்களும் 512.1 கிமீ நீள எல்லையைப் பகிர்ந்துகொள்கின்றன.

✓ அஸ்ஸாமின் அப்போதைய வட கச்சார் மற்றும் நாகோன் மாவட்டங்களில் உள்ள நாகா மலைகள் மற்றும் நாகா ஆதிக்கம் செலுத்தும் அனைத்து பகுதிகளையும் நாகாலாந்து மாநிலத்தின் ஒருபகுதியாக வேண்டும் என நாகாலாந்து கோரி வருகிறது. நாகாலாந்து மற்றும் அஸ்ஸாம் மாநில அரசுகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மாநிலங்களுக்கு இடையேயான எல்லைப் பிரச்சனைக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்வு காண தயாராக இருப்பதாக அறிவித்தன.

---

4. எந்த நிறுவனத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில், இந்தியா, $29.9 மில்லியனைச் செலுத்தியுள்ளது?

அ) உலக வங்கி

ஆ) ஐக்கிய நாடுகள் ☑

இ) ADB

ஈ) BRICS வங்கி

✓ 2022ஆம் ஆண்டிற்கான ஐநா'இன் வழமையான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் இந்தியா $29.9 மில்லியன் அமெரிக்க டாலர்களை செலுத்தியுள்ளது. 15 நாடுகளைக் கொண்ட பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தரமற்ற உறுப்பினராக உள்ளது மற்றும் அதன் ஈராண்டு பதவிக் காலம் 2022 டிசம்பர்.31 அன்று முடிவடைகிறது.

✓ 2022 ஜன.21 நிலவரப்படி, 24 உறுப்புநாடுகள் தங்கள் வழமையான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை முழுமை –யாகச் செலுத்தியுள்ளன. ஈரான், கினியா & வனுவாட்டு ஆகிய நாடுகள் தங்களின் வாக்களிக்கும் உரிமையை மீண்டும் பெறுவதற்காக ஐநா'இன் வழமையான வரவு செலவுத்திட்டத்திற்கு போதுமான தொகையைச்செலுத்தின. 193 உறுப்பினர்களைக்கொண்ட அமைப்பில் வெனிசுலா மற்றும் பப்புவா நியூ கினியாவுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை இதுவரை இல்லை.

---

5. IMF உலகப்பொருளாதாரக்கண்ணோட்டத்தின் ஜனவரி மதிப்பீட்டின்படி, 2021–22இல் இந்தியாவின் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி என்ன?

அ) 8.5%



ஆ) 9% ☑

இ) 9.5%

ஈ) 10%

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியம் (IMF) தனது உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் 2022 ஜனவரி மாத மதிப்பீட்டை வெளியிட்டது. இவ்வெளியீட்டின்படி, இந்தியா 2021–2022இல் 9% வளர்ச்சியடையும். 2021 அக்டோபர் மாதத்தில் இந்தக் கணிப்பு சதவீதம் 9.5ஆக இருந்தது.

✓ இது 2022–23ஆம் ஆண்டில் இந்தியப்பொருளாதாரத்தின் வளர்ச்சி 9%ஆக இருக்கும் எனக்கணித்துள்ளது. உலகப் பொருளாதார வளர்ச்சியானது 2021இல் 5.9%ஆக இருந்து 2022இல் 4.4%ஆகக் குறையும்.

---

6. எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ், தூய்மைப் பணியாள –ர்களுக்கான தேசிய ஆணையம் இயங்குகிறது?

அ) சட்டம் & நீதி அமைச்சகம்

ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ தூய்மைப்பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக்காலத்தை 2022 மார்ச்.31ஆம் தேதிக்குப் பிறகு 3

ஆண்டுகளுக்கு நீடிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த ஆணையமானது 1994'இல் தூய்மைப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையச்சட்டம், 1993ன் மூலம் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது.

✓ இது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2021 டிசம்பர்.31, நிலவரப்படி நாட்டில் 58,098 தூய்மைப் பணியாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

---

7. லாகோவா & புராச்சபோரி வனவுயிரி சரணாலயங்கள் அமைந்துள்ள மாநிலம் எது?



அ) அஸ்ஸாம் ☑

ஆ) மத்திய பிரதேசம்

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ அஸ்ஸாமின் கசிரங்கா தேசியப்பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், அந்தத் தேசியப்பூங்காவில் குறைந்தது 868 சதுப்புநில மான்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த 2018இல் 907ஆக இருந்தது.

✓ ஈரநிலப்பறவைகள் கணக்கெடுப்பில், மொத்தம் 66,776 எண்ணிக்கையிலான 126 வகையான பறவைகள் கண–க்கிடப்பட்டன. அவற்றில் 42,205 பறவைகள் கசிரங்கா தேசியப்பூங்கா பகுதியிலும் 24,571 பறவைகள் அசாமின் லாகோவா & புரசாபோரி வனவுயிரி சரணாலயங்களிலும் கணக்கிடப்பட்டன.

---

8. 'டிஜிட்டல் கொடுப்பனவுக் குறியீட்டை' வெளியிடுகிற நிறுவனம் எது?



அ) NITI ஆயோக்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ) நிதி அமைச்சகம்

ஈ) இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகம்

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது 'டிஜிட்டல் கொடுப்பனவுக் குறியீட்டை' வெளியிடுகிறது. இது இந்தியாவில் டிஜிட்டல் முறைகள்மூலம் பணஞ்செலுத்தும் வளர்ச்சியைக்காட்டுகி–றது. 2021 செப்டம்பரில் இக்குறியீடு 39.64% உயர்ந்து 304.06ஆக இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டில் இதே மாதத்தில் அது 217.74ஆக இருந்தது.

---

9. இந்தியாவானது எந்த நாட்டுடன் இணைந்து 'பசுமை உத்திசார் கூட்டணி – செயல் திட்டம் 2020–2025'இல் கையெழுத்திட்டது?



அ) பிரான்ஸ்

ஆ) டென்மார்க் ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஐக்கிய இராச்சியம்

✓ பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட பசுமை எரிபொருட்களுக்–கான ஆராய்ச்சி & உற்பத்தியில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதென, இந்தியா – டென்மார்க் நாடுகளின் அறிவியல் & தொழில்நுட்ப கூட்டுக்குழுவின் கூட்டத்தில் இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

✓ இருநாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பசுமை செயல்திட்ட ஒத்துழைப்புக்கான, 2020–25 செயல்திட்டத்தில் ஒப்புக் கொண்டபடி, பருவநிலை மாற்றம், பசுமைத்திட்டங்களுக்–கு மாற்றம், எரிசக்தி, தண்ணீர், கழிவு, உணவுபோன்ற துறைகளில் கூட்டாக செயல்பட வலியுறுத்தப்பட்டது.

---

10. 'பத்ம விபூஷண்' விருது பெற்ற பிரபா ஆத்ரேவுடன் தொடர்புடைய துறை எது?



அ) இலக்கியம்

ஆ) இசை ☑

இ) விளையாட்டு

ஈ) குடிமைச்சேவை

✓ **73ஆவது குடியரசு நாளை முன்னிட்டு, இந்த ஆண்டு 128 பேருக்கு 'பத்ம' விருதுகள் வழங்க குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார். 89 வயதான 'கிரானா கரானா' பாடகர் பிரபா ஆத்ரே 'பத்ம விபூஷண்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரே மேடையில் இருந்து ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் பதினோரு இசை நூல்களை வெளியிட்டு உலக சாதனை படைத்துள்ளார். அவர் 'ஸ்வர்மயீ குருகுலத்தின்' நிறுவனராவார்.**

✓ **ராதேஷ்யாம் கெம்கா (மரணத்திற்குப்பின்; இலக்கியம், உபி), ஜெனரல் பிபின் ராவத் (குடிமைப்பணி) மற்றும் கல்யாண் சிங் (மரணத்திற்குப் பின்; பொது விவகாரங்கள், உபி) ஆகியோரும் 'பத்ம விபூஷண்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.**

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கிரிப்டோகரன்சிக்கு 30% வரி; எண்ம செலாவணி அறிமுகம்

இந்திய ரிசர்வ் வங்கி சார்பில் 2022–23ஆம் நிதி ஆண்டில் எண்ம செலாவணி (டிஜிட்டல் கரன்சி) அறிமுகப்படுத்தப்படும் எனத் தெரிவித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், கிரிப்டோகரன்சி உள்ளிட்ட மெய்நிகர் சொத்துகள் மீது 30 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றார்.

இதுதொடர்பாக பட்ஜெட் உரையின்போது அவர் கூறுகை–யில், "எண்ம செலாவணியானது, திறன்மிக்க மலிவான செலாவணி மேலாண்மை அமைப்பை உருவாக்கும். அதைக் கருத்தில்கொண்டு 'பிளாக்செயின்' உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட எண்ம செலாவணியை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தவுள்ளது. எண்ம செலாவணியானது எண்மப் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும்.

கிரிப்டோகரன்சி உள்ளிட்ட மெய்நிகர் சொத்துகளின் பரிவர்த்தனைமூலமாக கிடைக்கும் வருமானத்துக்கு 30 சதவீதம் வரி விதிக்கப்படும். குறிப்பிட்ட மதிப்புக்குமேல் பரிவர்த்தனை செய்யப்படும் மெய்நிகர் சொத்துகளுக்கு டிடிஎஸ் (மூலவரிக்கழிப்பு) பிடித்தம் செய்யப்படும். புதிய நடைமுறைகள் ஏப்ரல்.1ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வரவுள்ளன" என்றார்.

லாட்டரி, விளையாட்டு நிகழ்வுகள், புதிர் விளையாட்டுகள் உள்ளிட்டவற்றின்மூலமாக ஈட்டப்படும் வருவாய்க்கு ஏற்கெனவே 30% வரி விதிக்கப்பட்டு வருகிறது. அதற்கு நிகராக கிரிப்டோகரன்சி பரிவர்த்தனைக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது.

பிட்காயின் உள்ளிட்ட கிரிப்டோகரன்சிகளின் பயன்பாடு இதுவரை முறைப்படுத்தப்படாமல் இருந்த நிலையில், பல்வேறு தரப்பினரது கோரிக்கையை ஏற்று அவற்றின் பரிவர்த்தனைக்கு மத்திய அரசு தற்போது வரி விதித்து உள்ளது.

---

2. மாநிலங்களுக்கு ₹1 லட்சம் கோடி வட்டியில்லா கடன்

மூலதன முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் மாநிலங்களுக்கு 2022-23ஆம் நிதியாண்டில் ₹1,00,000 கோடி வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் மத்திய அரசு அறிவித்துள்ளது.

அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் 50 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் 2022-23ஆம் நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார். தொடர்ந்து 2ஆவது ஆண்டாக காகிதமில்லா நிதிநிலை அறிக்கையை அவர் தாக்கல்செய்தார். அப்போது பல்வேறு முக்கிய அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

கரோனா பரவல் காரணமாக கடந்த 2020-21ஆம் நிதியாண்டில் 6.6% வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதா -ரம், படிப்படியாக மீண்டு வருகிறது. பொருளாதாரத்தை மீட்கும் வகையிலான பல்வேறு திட்டங்களும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டன. கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில் மூலதன செலவினம் ₹7.5 லட்சம் கோடியாக அதிகரிக்கப்படவுள்ளதாக அமைச்சர் அறிவித்தார்.

கட்டமைப்புத் திட்டங்களில் அரசின் செலவினம் அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப தனியார் முதலீடும் அதிகரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர், அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார். அரசு-தனியார் ஒத்துழைப்புடன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 ஆண்டுகளுக்கு வட்டியில்லா கடன்: மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையிலான திட்டத்தை மத்திய அரசு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வருகிறது. அத்திட்டத்தின் கீழ் நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டில் ₹15,000 கோடி கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியைப் பயன்படுத்தி நீண்டகாலத்துக்கான கட்டமைப்பு -த் திட்டங்களில் மாநிலங்கள் முதலீடு செய்ய முடியும்.

அத்திட்டத்தின் கீழ் அடுத்த நிதியாண்டில் ₹1,00,000 கோடி கடன் மாநிலங்களுக்கு வழங்கப்படும் என அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அக்கடனை ஐம்பது ஆண்டுகளில் மாநிலங்களில் திருப்பிச்செலுத்த வேண்டும் என்றும், அத்தொகைக்கு வட்டி வசூலிக்கப்படா -து என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகள் கடன் பெறுவதற்கான உச்சவரம்புக்கு கூடுதலாக இந்தக் கடன் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் சுமையை அதிகரிக்கவில்லை: தனிநபர்கள் வருமானவரி செலுத்துவதற்கான உச்சவரம்பு உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது தொடர்பான எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவித்த அமைச்சர் நிர்மலா சீதாராமன், "கடந்த ஆண்டிலும் நடப்பாண்டிலும் தனிநபருக்கான வருமான வரி உயர்த்தப்படவில்லை. கரோனா தொற்று பரவல் காலத்தில் வரியை உயர்த்துவதன்மூலமாக மக்களின் சுமையை அதிகரித்து வருவாயைப் பெருக்க மத்திய அரசு முயற்சிக்கவில்லை" என்றார்.

இலக்கு குறைப்பு: பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைப்பதன் மூலமாக ₹1.75 லட்சம் கோடியைத் திரட்ட கடந்த நிதிநிலை அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், ₹12,030 கோடியை மட்டுமே மத்திய அரசால் திரட்ட முடிந்தது. ஏர் இந்தியாவை விற்றதன்மூலமாக ₹2,700 கோடியும், மற்ற பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்ன் மூலமாக ₹9,330 கோடியும் மத்திய அரசுக்குக் கிடைத்தது.

இந்நிலையில், அடுத்த நிதியாண்டுக்கான இலக்கு ₹65,000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை (LIC) பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட -டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் நிர்மலா சீதாராமன், அத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் தற்போதைய நிதிநிலை அறிக்கையில் அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறினார்.

மானியம் குறைப்பு: உணவுப் பொருள்கள், உரங்களுக்கு மத்திய அரசு அதிக அளவில் மானியங்களை வழங்கி வருவதாகவும் அதைக் குறைக்க வேண்டுமெனவும் பொருளாதார ஆய்வறிக்கைகளில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. அக்கோரிக்கையை மத்திய அரசு தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. உணவுக்கான மானியம் ₹2,42,836 கோடியில் இருந்து ₹2,06,831 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மானியம் 39 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

பசுமைப் பத்திரங்கள்: நாட்டில் முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் விநியோகம் சார்ந்த விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதன் காரணமாகவே பெரிய அளவிலான சலுகைகள் அறிவிக்கப்படவில்லை என அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் பசுமைசார் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களுக்காக 'பசுமைப் பத்திரங்கள்' வெளியிடப்பட்டு நிதி திரட்டப்படும் என நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மீண்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர், கடந்த ஜனவரியில் சரக்கு-சேவை வரி (GST) வருவாய் வரலாறு காணாத வகையில் ₹1,40,986 கோடியாக அதிகரித்தது எனவும் கூறினார்.

நிதிப்பற்றாக்குறை: கரோனா பரவலால் நாட்டின் வருவாய் பெருமளவில் குறைந்ததன் காரணமாக கடன் வாங்கி திட்டங்களைச் செயல்படுத்தும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டது. அதன் விளைவாக அரசின் நிதிப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அடுத்த நிதியாண்டுக்கான நிதிப்பற்றாக்குறை இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில் 6.4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை 2025-26ஆம் நிதியாண்டில் 4.5 சதவீதமாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

சலுகைகள் இல்லை: உத்தர பிரதேசம் உள்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் ஆதாயம் பெறும் நோக்கில் அந்த மாநிலங்களுக்கு சாதகமான அறிவிப்புகள் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அத்தகைய அறிவிப்புகள் எதையும் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்படவில்லை.

நிதிநிலை அறிக்கையை அமைச்சர் நிர்மலா சீதாராமன் 1 ½ மணி நேரம் வாசித்தார். அவர் அறிக்கையை வாசித்துக் கொண்டிருக்கும்போதே, அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் அவ்வப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குரலெழுப்பினர். முக்கியமாக, ஏலம் மூலமாக 5ஜி அலைக் கற்றை தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தபோது, 'BSNL நிறுவனம் என்னானது?' என சிலர் கேள்வி எழுப்பினர்.

தேசிய ஓய்வூதியத் திட்டம்: மாநில அரசு ஊழியர்களுக்கும் வரி விலக்கு வரம்பு அதிகரிப்பு

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (NPS) மாநில அரசு ஊழியர்களுக்கு நிர்வாக பங்களிப்புத்தொகைக்கான வரி விலக்கு வரம்பு 10-இலிருந்து 14 சதவீதமாக நிதிநிலை அறிக்கையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

NPS'இல் மத்திய அரசு ஊழியர்களுக்கு தற்போதுள்ள நிர்வாக பங்களிப்பு 14 சதவீத தொகை வரிவிலக்கைப் போன்று, மாநில அரசு ஊழியர்களுக்கும் வரி விலக்கு வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய அறிவிப்புகள்

* எண்ம செலாவணி அறிமுகம்.

* 'சிப்' பொருத்தப்பட்ட இ-பாஸ் போர்ட் அறிமுகம்.

* மெய்நிகர் சொத்துகளின் பரிவர்த்தனைக்கு 30 சதவீதம் வரி.

* விவசாயத்திலும் நில அளவையிலும் ட்ரோன் பயன்பாடு.

* 3 ஆண்டுகளில் 400 "வந்தே பாரத்' ரயில்கள்.

* சிறப்புப் பொருளாதார மண்டல சட்டம் மறுசீரமைப்பு

* ஒவ்வொரு வகுப்புக்கும் பிராந்திய மொழியில் தனித்தனி தொலைக்காட்சி சேனல்கள்.

* 5ஜி அலைக்கற்றை ஏலம்

ஒதுக்கீடுகள்

* பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு ₹44,720 கோடி கூடுதல் மூலதனம்.

* இரயில்வேக்கு ₹1.40 லட்சம் கோடி.

* கோதுமை, நெல் கொள்முதலுக்கு ₹2.37 லட்சம் கோடி.

* வீடுதோறும் குடிநீர்க் குழாய் திட்டத்துக்கு ₹60,000 கோடி.

* பிரதமரின் வீட்டு வசதி திட்டத்துக்கு ₹48,000 கோடி.

* சூரிய மின்கலன்கள் தயாரிப்புக்கு கூடுதலாக ₹19,500 கோடி.

* வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு ₹1,500 கோடி.

* MSME துறைக்கு ₹2 லட்சம் கோடி கூடுதல் கடன்.

* உள்நாட்டு பாதுகாப்புக்கு ₹1.85 லட்சம் கோடி.

வரிச் சலுகை/ வரி அறிவிப்பு

* தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் ₹50,000 கூடுதல் வரிவிலக்கு தொடரும்.

* கூட்டுறவு நிறுவனங்களுக்கான குறைந்தபட்ச மாற்று வரி (ஏஎம்டி) 15 சதவீதமாகக் குறைப்பு.

* வெளிநாட்டு குடைகளுக்கு 20 சதவீத வரி.

* சில மின்னணு உபகரணங்கள் மீதான இறக்குமதி வரி அதிகரிப்பு.

* பொலிவூட்டப்பட்ட வைரம் மீதான இறக்குமதி வரி 5%ஆக குறைப்பு.

விலை அதிகரிக்கும் பொருள்கள்

இறக்குமதி செய்யப்படும் ஹெட்போன்கள், இயர்போன், குடைகள், சூரிய மின்கலன், சூரிய மின் தகடுகள், ஒலிபெருக்கிகள், ஸ்மார்ட் மீட்டர், கவரிங் நகைகள், எக்ஸ்ரே இயந்திரம், பேட்டரியில் இயங்கும் சிறார் விளையாட்டுப் பொருள்களுக்கான உதிரிபாகங்கள்.

இறக்குமதி வரி அல்லது இவற்றின் உதிரி பாகங்களுக்கான இறக்குமதி வரி அதிகரிப்பால் மேற்கண்ட பொருள்களின் விலை உயருகிறது.

உள்நாட்டில் சிறு தொழில் புரிவோருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் வெளிநாட்டு குடைகள், அதற்கான உதிரிபாகங்கள் மீதான இறக்குமதி வரி 10 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

விலை குறையும் பொருள்கள்

இறக்குமதி செய்யப்படும் பொலிவூட்டப்பட்ட மற்றும் அறுத்து வடிவமைக்கப்பட்ட வைரங்கள், உணவாகப் பயன்படுத்தப்படும் பதப்படுத்தப்பட்ட சிப்பிகள், பதப்படுத்தப்பட்ட கணவாய் மீன்கள், பெருங்காயம், கோகோ பீன்ஸ், மெத்தனால், அசிட்டிக் அமிலம், செல்லிடப்பேசி கேமராக்களுக்கான லென்ஸ் ஆகியவற்றின் விலை குறையும்.

மேற்கண்ட பொருள்களின் இறக்குமதி வரியை மத்திய அரசு குறைத்துள்ளதால் அவற்றின் விலை குறைய இருக்கிறது. இதில் செல்லிடப்பேசி கேமரா லென்ஸ் மீதான வரி 15 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

---

3. வேளாண் துறைக்கு ₹1,32,513 கோடி ஒதுக்கீடு கடந்த ஆண்டை விட 4.5 சதவீதம் அதிகம்

வேளாண் அமைச்சகத்துக்கு நடப்பு பட்ஜெட்டில் ₹1,32,513 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் அதிகம்.

மீன், பால், கால்நடை அமைச்சகத்துக்கு ₹6,407.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட 44% அதிகம். இதுகுறித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையில் கூறுகையில், 'உள்நாட்டில் எண்ணெய் வித்து பயிர் விதைகள் உற்பத்தியை அதிகரிக்கவும், வெளிநாட்டிலிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும் மத்திய அரசு ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளது.

2023ஆம் ஆண்டு சிறுதானியங்களின் சர்வதேச ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், உள்நாட்டு சிறுதானிய உற்பத்தியை அதிகரித்து சர்வதேச அளவில் கொண்டு செல்ல மத்திய அரசு ஆதரவளிக்கும்.

வேளாண் பொருள்களை குறைந்தபட்ச ஆதரவு விலையின்மூலம் 2021-22ஆம் பருவ ஆண்டில் 163 லட்சம் விவசாயிகளிடம் இருந்து 1,208 லட்சம் டன்னுக்கும் அதிகமாக நெல், கோதுமை கொள்முதல் நடைபெறும். இதற்காக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் ₹2.37 லட்சம் கோடி நேரடியாக செலுத்தப்படும்.

பிரதமரின் கிஸான் திட்டத்துக்கு அடுத்த ஆண்டு ₹6,57,000 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோல், பயிர் காப்பீட்டு திட்டத்துக்கு ₹15,500 கோடியும், கிருஷ்னாட்டி திட்டத்துக்-கு ₹7,183 கோடியும், ராஷ்ட்ரீய கிருஷ் திட்டத்துக்கு ₹10,433 கோடியும், சந்தை விலை ஆதரவு திட்டத்துக்கு ₹1,500 கோடியும் மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

---

4. 2022-23ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்

2022-23 நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை மத்திய நிதி மற்றும் பெரு நிறுவனங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

பகுதி-அ

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதம் என்ற அளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் 14 துறைகளில் 60 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

உற்பத்தியுடன் இணைந்த முதலீட்டுத் திட்டத்தின்மூலம் கூடுதலாக 30 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி நடைபெறும்

நாடு அடுத்த 25 ஆண்டுகளில் 100வது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ள நிலையில் நீண்டகால திட்டங்களுக்காக நான்கு முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

பிரதமர் கதிசக்தி

அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி

உற்பத்தி மேம்பாடு மற்றும் முதலீடு, புதிய வாய்ப்புகள், எரிசக்தி மாற்றம் மற்றும் பருவநிலை திட்டம்

முதலீட்டிற்கான நிதி

பிளம் கதிசக்தி

சாலைகள், ரயில்வே, விமான நிலையங்கள், துறைமுகங்கள், விரைவுப் போக்குவரத்து, நீர்வழிகள், போக்குவரத்து உள்கட்டமைப்பு ஆகியவை பிளம் கதிசக்தியை இயக்கும் 7 என்ஜின்கள் ஆகும்.

பிளம் கதிசக்தி தேசிய பெருந்திட்டம்

பிளம் கதிசக்தி தேசிய பெருந்திட்டத்திற்கான வாய்ப்பு பொருளாதார மாற்றம், வலுவான பன்மாதிரி இணைப்பு மற்றும் போக்குவரத்துத் திறனுக்கான 7 என்ஜின்களை உள்ளடக்கியதாகும்.

தேசிய உள்கட்டமைப்பு திட்டத்தில், இந்த 7 என்ஜின்களை உள்ளிடக்கிய திட்டங்கள் பிளம் கதிசக்தி வரையறைக்குள் கொண்டு வரப்படும்.

சாலைப் போக்குவரத்து

2022-23இல் தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு 25,000 கிலோ மீட்டர் தொலைவுக்கு விரிவாக்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு விரிவாக்கத்திற்கான ₹20,000 கோடி திரட்டப்படும்

பன்மாதிரி போக்குவரத்து பூங்காக்கள்

2022-23இல் பன்மாதிரி போக்குவரத்து பூங்காக்களை 4 இடங்களில் செயல்படுத்துவதற்கு தனியார் பொதுத்துறை கூட்டு முயற்சி மூலம் ஒப்பந்தங்கள் வழங்கப்படும்

ரயில்வே

உள்ளூர் வர்த்தகம் மற்றும் விநியோக சங்கிலிக்கு உதவும் வகையில், ஒரு நிலையம் ஒரு பொருள் என்ற கருத்தியல் நடைமுறைப்படுத்தப்படும்.

2022-23 உலகத் தரம் வாய்ந்த உள்நாட்டு தொழில்நுட்பம் மற்றும் திறன் அதிகரித்தலுக்கு கவாஜ் திட்டத்தின் கீழ் 2000 கிலோ மீட்டர் ரயில்வே கட்டமைப்பு கொண்டு வரப்படும்.

அடுத்த 3 ஆண்டுகளில் 400 புதிய தலைமுறை வந்தே பாரதம் ரயில்கள் தயாரிக்கப்படும்.

அடுத்த 3 ஆண்டுகளில் பன்மாதிரி சரக்குப் போக்குவரத்துக்கான 100 பிளம் கதிசக்தி சரக்கு முனையங்கள் உருவாக்கப்படும்.

பர்வதமாலா

தேசிய ரோப்வே வளர்ச்சித் திட்டம் பர்வதமாலா பொதுத்துறை, தனியார் கூட்டு முயற்சியில் மேற்கொள்ளப்படும்.

2022-23இல் 60 கிலோ மீட்டர் தூரத்துக்கு 8 ரோப்வே திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்.

உள்ளடக்கிய வளர்ச்சி

வேளாண்மை

கோதுமை மற்றும் நெல் கொள்முதலுக்காக 1.63 கோடி விவசாயிகளுக்கு ₹2.37 லட்சம் கோடி நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் ரசாயன கலப்பற்ற இயற்கை வேளாண்மை மேம்படுத்தப்படும். கங்கை நதியின் குறுக்கே 5 கிலோ மீட்டர் அகல வழித்தடத்தின் விவசாய நிலங்கள் மீது ஆரம்பக்கட்ட கவனம் செலுத்தப்படும்.

வேளாண்மை மற்றும் கிராமப்புற தொழில் தொடங்வோருக்கு நிதி அளிக்க மூலதனத்துடன் கூடிய நிதியை நபார்டு வழங்கும்.

பயிர் மதிப்பீடு, நில ஆவணங்கள் டிஜிட்டல்மயமாக்கம், பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஊட்டச்சத்து தெளித்தலுக்கு கிசான் ட்ரோன்கள் பயன்படுத்தப்படும்.

கென்– பெட்வா திட்டம்

கென் – பெட்வா இணைப்புத் திட்ட அமலாக்கத்துக்கு ₹1400 கோடி ஒதுக்கீடு

கென் – பெட்வா இணைப்புத் திட்டத்தால் 9.08 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ)

உதயம், இ–ஷ்ரம், என்சிஎஸ் மற்றும் அசீம் (ASEEM) இணையதளங்கள் ஒன்றாக இணைக்கப்படும்.

130 லட்சம் எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கு அவசரகால கடன் உத்தரவாத திட்டத்தின் (ECLGS)

கீழ் கூடுதல் கடன் வழங்கப்பட்டது.

இசிஎல்ஜிஎஸ் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்படவுள்ளது.

இசிஎல்ஜிஎஸ் திட்டத்தின் கீழான உத்திரவாதம் விரிவுபடுத்தப்படவுள்ளது. ₹50,000 கோடி அதிகரிக்கப்பட்–டு மொத்தம் ₹5 லட்சம் கோடியாக விரிவுபடுத்தப்படும்.

குறு மற்றும் சிறு நிறுவனங்ளுக்கான கடன் உத்திரவாத அறக்கட்டளையின் (CGTMSE) கீழ், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு ₹2 லட்சம் கோடி கூடுதல் கடன் வழங்கப்படும்.

₹6,000 கோடி மதிப்பில் எம்எஸ்எம்இ–க்களின் செயல்பாட்டை மேம்படுத்தும் திட்டம்(RAMP) அறிமுகம் செய்யப்படும்.

திறன் மேம்பாடு

ஆன்லைன் பயிற்சி மூலம் மக்களின் திறனை மேம்படுத்த திறன் மற்றும் வாழ்வாதாரத்துக்கான டிஜிட்டல் அமைப்பு (DESH–Stack இ–இணையதளம்) தொடங்கப்படும்.

* டிரோன் சேவைகளுக்கு, 'டிரோன் சக்திக்கு' உதவ தொடக்கநிலை நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

கல்வி

பிரதமரின் இ–வித்யா திட்டத்தின் 'ஒரு வகுப்பு– ஒரு TV சேனல்' 200 TV சேனல்களாக விரிவுபடுத்தப்படும்.

* விவேகமான சிந்திக்கும் திறன்களை ஊக்குவிக்க மெய்நிகர் ஆய்வு கூடங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மின்னணு–ஆய்வு கூடங்கள் மற்றும் கற்றல் சூழல் ஏற்படுத்தப்படும்.

* டிஜிட்டல் ஆசிரியர்கள் மூலம் கல்வி கற்பிக்க உயர்தர மின்னணு–பாடத்திட்டம் உருவாக்கப்படும்.

* உலகத்தரத்திலான கல்விக்கு டிஜிட்டல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படும்.

சுகாதாரம்

தேசிய டிஜிட்டல் சுகாதார அமைப்புக்கு திறந்தவெளி தளம் அறிமுகப்படுத்தப்படும்.

* தரமான மனநல ஆரோக்கிய கலந்தாய்வுக்கு 'தேசிய தொலைதூர மன நல திட்டம் மற்றும் சேவைகள் தொடங்கப்படும்.

நிமான்ஸ்– ஐ சிறப்பு மையமாக கொண்டு 23 தொலை தூர மன நல சிறப்பு மையங்களின் நெட்வொர்க் ஏற்படுத்தப்படும். இதற்கான தொழில்நுட்ப உதவிகளை பெங்களூரில் உள்ள சர்வதேச தகவல் தொழில்நுட்ப மையம் (IIITB) வழங்கும்.

ஷக்ஷம் அங்கன்வாடி

மிஷன் சக்தி, மிஷன் வத்சல்யா, ஷக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷான் 2.0 திட்டம் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த பயன்கள்

2 லட்சம் அங்கன்வாடிக்கள் ஷக்ஷம் அங்கன்வாடிகளாக மேம்படுத்தப்படும்.

ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு

வீட்டுக்கு வீடு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2022–23ம் ஆண்டில் 3.8 கோடி வீடுகளுக்கு ₹60,000 கோடி ஒதுக்கப்பட்டது.

அனைவருக்கும் வீடு

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 2022–23ம் ஆண்டில் 80 லட்சம் வீடுகள் கட்டி முடிக்க ₹48,000 கோடி ஒதுக்கப்பட்டது.

வடகிழக்கு பகுதிக்கான பிரதமரின் மேம்பாட்டு நடவடிக்கை (PM–DevINE)

வடகிழக்கு மாநிலங்களில் சமூக வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமரின்–DevINE என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இளைஞர்கள் மற்றும் பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்ப கட்டமாக ₹1,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

துடிப்பான கிராமங்கள் திட்டம்

வடக்கு எல்லையில் குறைவான மக்கள், இணைப்பு வசதி மற்றும் கட்டமைப்புகள் உள்ள எல்லை கிராமங்களின் மேம்பாட்டுக்கு துடிப்பான கிராமங்கள் திட்டம் தொடங்கப்பட்டது.

வங்கி வசதிகள்

1.5 லட்சம் தபால் அலுவலகங்களில் 100 சதவீதம் வங்கி அமைப்புக்குள் வரவுள்ளன.

வணிக வங்கிகள், 75 மாவட்டங்களில், 75 டிஜிட்டல் வங்கி யூனிட்டுகளை தொடங்கவுள்ளன.

இ–பாஸ்போர்ட்

மின்னணு சிப்கள் பொருத்தப்பட்ட இ–பாஸ்போர்ட்டுகள் மற்றும் எதிர்கால தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.

நகர்ப்புற திட்டம்

கட்டிட விதிகளின் நவீனமயமாக்கல், நகர திட்டமிடல் திட்டங்கள் மற்றும் போக்குவரத்து சார்ந்த வளர்ச்சி ஆகியவை அமல்படுத்தப்படும்.

நகர பகுதிகளில் சார்ஜிங் நிலையங்கள் அமைக்க பேட்டரி மாற்று கொள்கை கொண்டு வரப்படும்.

நில ஆவணங்கள் மேலாண்மை

தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் நில ஆவணங்கள் மேலாண்மைக்கு தனித்துவமான நில அடையாள எண்.

துரிதமான பெருநிறுவனம் வெளியேற்றம்

நிறுவனங்கள் விரைவாக வெளியேறுவதற்கு, துரிதமான பெருநிறுவன வெளியேற்ற மையம் (C–PACE) அமைக்கப்படும்.

ஏவிஜிசி ஊக்குவிப்பு குழு

அனிமேஷன், விஷூவல் எபெக்ட்ஸ், விளையாட்டு மற்றும் காமிக்ஸ் (AVGC) ஆகியவற்றின் ஊக்குவிப்புக்கு இத்துறையில் தனி குழு உருவாக்கப்படும்.

தொலை தொடர்பு துறை

உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக 5ஜி தொழில்நுட்பத்துக்கு வலுவான சூழலை உருவாக்க வடிவமைப்பு சார்ந்த உற்பத்தி திட்டம் தொடங்கப்படும்.

ஏற்றுமதி வளர்ச்சி

நிறுவனம் மற்றும் சேவை மையங்கள் மேம்பாட்டில் மாநிலங்களையும் பங்குதாரர்களாக்க சிறப்பு பொருளாதார மண்டலங்கள் சட்டத்துக்கு மாற்றாக புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும்.

பாதுகாப்புத்துறையில் இந்தியா தற்சார்பு அடைதல்:

2022–23இல் மூலதன கொள்முதலில் 68% உள்நாட்டு தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய பட்ஜெட்டில் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2021–22இல் 58% ஆக இருந்தது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், பெருந்தொழில்துறையினர், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவதுடன் இந்நிறுவனத்தின் பட்ஜெட்டில் 25% இதற்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

பரிசோதனை மற்றும் சான்றிதழ் பெறுவதற்கு, சுதந்திரமான அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

புதிய வகைப் பொருட்கள், சேவை வாய்ப்புகள்

செயற்கை நுண்ணறிவு, புவி வானியல் சாதனங்கள், மற்றும் ட்ரோன்கள் செமி கண்டக்டர் மற்றும் அதன் சூழல் அமைப்பு, விண்வெளி பொருளாதாரம், மரபியல் பொருளாதாரம் மற்றும் மருந்து பொருட்கள், பசுமை எரிசக்தி மற்றும் தூய்மையான போக்குவரத்து சாதனங்கள் போன்ற புதிய வகைப் பொருட்கள், சேவை வாய்ப்புகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கு அரசு பங்களிப்பு வழங்கப்படும்.

எரிசக்தி மாற்றம் மற்றும் பருவநிலை செயல்திட்டம்:

2030'க்குள் 280 GW சூரியசக்தி உற்பத்தி இலக்கை அடைய, உயர்திறன் கொண்ட சூரியசக்தி சாதனங்களை உற்பத்தி செய்ய, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ₹19,500 கோடி கூடுதலாக ஒதுக்கப்படும்.

அனல்மின் நிலையங்களில் உயிரி கழிவு வில்லைகள், 5 முதல் 7% அளவுக்கு இணை எரிபொருளாக பயன்படுத்தப்படும்.

ஆண்டுக்கு 38 மில்லியன் மெட்ரிக் டன் கரியமில வாயு (CO2) வெளியேற்றம் தவிர்ப்பு.

விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு

விளை நிலங்களில் பயிர்க்கழிவுகள் எரிப்பதை தவிர்க்க உதவி

தொழிற்சாலைகளுக்காக நிலக்கரியை ரசாயனப் பொருட்களாக மாற்றுதல் மற்றும் நிலக்கரி எரிவாயு நிலையங்களை அமைக்க நான்கு முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தப்படும்

வேளாண் காடுகளை வளர்க்க விரும்பும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியின விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

அரசு மூலதன முதலீடு

2022–23இல் முக்கிய தனியார் முதலீடு மற்றும் தேவைகளை ஊக்குவிப்பதில் அரசு முதலீடு தொடரும்.

நடப்பாண்டில் ₹5.54 லட்சம் கோடியாக உள்ள மூலதன செலவு ஒதுக்கீடு 2022–23இல் 35.4% அதிகரிக்கப்பட்டு ₹7.50 லட்சம் கோடி ஒதுக்கீடு

2022–23இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 2.9% ஒதுக்கீடு

மத்திய அரசின் 'வலுவான மூலதன செலவு' 2022–23இல் ₹ 10.68 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 4.1% ஆகும்.

குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரம் – சர்வதேச நிதிச்சேவைகள் மையம்.

குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரத்தில், உலகத்தரம் வாய்ந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் தொடங்க அனுமதிக்கப்படும்.

சர்வதேச நீதித்துறை விவேகத் திட்டத்தின்கீழ், சச்சரவுகளுக்கு குறித்த காலத்திற்குள் தீர்வு காண ஏதுவாக சர்வதேச சமரசத் தீர்வு மையம் அமைக்கப்படும்.

வளங்களைத் திரட்டுதல்

தரவு மையங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு அமைப்புகளுக்கு கட்டமைப்பு அந்தஸ்து வழங்கப்படும்

கடந்த ஆண்டில் ₹5.5 லட்சம் கோடிக்கும் அதிகமான மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு மூலதனம் மற்றும் தனியார் பங்கு முதலீடு, பெரிய அளவிலான ஸ்டார்ட் அப் மற்றும் வளர்ச்சி சூழலுக்கு வகை செய்துள்ளது.

புதிய வகை பொருட்கள், சேவை வாய்ப்புகள் துறைகளுக்கு கலப்பு நிதியம் ஊக்குவிக்கப்படும்.

பசுமை கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி திரட்ட பசுமைத் தங்கப்பத்திரங்கள் வெளியிடப்படும்.

டிஜிட்டல் பணம்

2022-23-லிருந்து இந்திய ரிசர்வ் வங்கி டிஜிட்டல் ரூபாயை அறிமுகப்படுத்தும்.

மாநிலங்களுக்கு அதிக நிதி வாய்ப்புகளை வழங்குதல்

'மாநிலங்களின் மூலதன முதலீட்டுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்திற்கு' ஒதுக்கீடு அதிகரிப்பு:

₹10,000 கோடி பட்ஜெட் மதிப்பீடு நடப்பாண்டின் திருத்திய மதிப்பீட்டில் ₹15,000 கோடி

பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த முதலீடுகளை ஊக்குவிப்பதில் மாநிலங்களுக்கு உதவ 2022-23இல் ₹1 லட்சம் கோடி ஒதுக்கீடு: 50 ஆண்டுகளுக்கு வட்டியில்லா கடன்கள், வழக்கமான மற்றும் அதற்கு மேற்பட்ட கடன் வாங்க அனுமதி

நிதி மேலாண்மை

பட்ஜெட் மதிப்பீடுகள் 2021-22: ₹34.83 லட்சம் கோடி

திருத்திய மதிப்பீடுகள் 2021-22: ₹37.70 லட்சம் கோடி

2022-23இல் மொத்த செலவினம் ₹39.45 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது

2022-23இல் கடன் தவிர்த்த மொத்த வரவுகள் ₹22.84 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது

நடப்பாண்டில் நிதிப்பற்றாக்குறை: மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.9% (பட்ஜெட் மதிப்பீடுகள் 6.8%)

2022-23இல் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 6.4% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது

நேர்முக வரிகள்

நிலையான மற்றும் ஊகிக்கும் வரிமுறையின் கொள்கையை முன்னெடுத்து செல்வதற்கு

நம்பிக்கைதரும் வரி முறையை நிறுவுவதற்கான தொலைநோக்குப் பார்வை

வரி முறையை மேலும் எளிமைப்படுத்தவும், வழக்குகளைக் குறைக்கவும்

'புதிய வடிவிலான கணக்கு தாக்கல்' அறிமுகம்

கூடுதல் வரி செலுத்துவதற்கு புதிய வடிவிலான கணக்கு தாக்கலுக்கு வாய்ப்பு

ஏற்கனவே தவறவிட்ட வருவாயை அறிவிப்பதற்கு மதிப்பீட்டாளரால் இயலும்

உரிய மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில் இருந்து 2 ஆண்டுகளுக்குள் கணக்கு தாக்கல் செய்ய முடியும்

கூட்டுறவு சங்கங்கள்

கூட்டுறவுகளால் செலுத்தப்பட்ட குறைந்தபட்ச மாற்றுவரி விகிதம் 18.5 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே சமச்சீரான வாய்ப்பை வழங்குதல்

₹1 கோடிக்கும் அதிகமாகவும், ₹10 கோடி வரையிலும் மொத்த வருமானம் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கான கூடுதல் வரி 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு வரி நிவாரணம்

பெற்றோர்கள் / காப்பாளர்களின் வாழ்க்கை காலத்தில் அதாவது பெற்றோர்கள் / காப்பாளர்கள் 60 வயதை எட்டிய போது, மாற்றுத்திறனாளிகளை சார்ந்திருப்போருக்கு காப்பீட்டு திட்டத்தில் இருந்து கிடைக்கும் வருடாந்திர தொகை அல்லது மொத்த தொகை அனுமதிக்கப்படும்.

தேசிய ஓய்வூதிய திட்டப் பங்களிப்பில் சமநிலை

மாநில அரசு ஊழியர்களின் தேசிய ஓய்வூதிய திட்ட கணக்கிற்குப் பங்களிப்பு செய்யும் உரிமையாளர்களுக்கான வரிப்பிடித்த வரம்பு 10 சதவீதத்தில் இருந்து 14 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக இவர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இது சமூகப் பாதுகாப்புப் பலன்களை விரிவாக்க உதவும்.

புதிய தொழில்களுக்கு ஊக்குவிப்பு

தகுதிவாய்ந்த புதிய தொழில்களுக்கு வரிப் பயன் கிடைப்பதற்கான இணைப்புக்காலம் ஓராண்டிற்கு, 31.03.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இணைப்புக்கான கால வரம்பு ஏற்கனவே 31.03.2022 ஆக இருந்தது.

சலுகை வரி முறையின் கீழ் ஊக்குவிப்பு திட்டங்கள்

பிஏபி பிரிவு 115இன் கீழ் தயாரிப்பு அல்லது உற்பத்தி தொடக்கத்திற்கான கடைசி தேதி ஓராண்டுக்கு அதாவது 31 மார்ச் 2023இல் இருந்து 31 மார்ச் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களின் வரி விதிப்புக்கான திட்டம்

மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களுக்கான குறிப்பிட்ட வரிமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிமாற்றத்திலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு 30 சதவீத விகிதத்தில் வரி விதிக்கப்படும்.

ஆர்ஜித செலவு தவிர மற்ற வருவாயை கணக்கிடும் போது செலவு அல்லது ஊதியம் வரிக்குறைப்புக்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களின் பரிமாற்றத்தில் ஏற்படும் இழப்பு இதர வருவாய்க்கு மாற்றாக எடுத்துக் கொள்ள இயலாது

பரிமாற்ற விவரங்களை பெறுவதற்கு மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிமாற்றம் தொடர்பாக வழங்கப்பட்ட தொகைக்கு ஒரு சதவீத அளவிற்கு டிடிஎஸ் (வருவாயிலிருந்து வரிப்பிடித்தம்) பிடித்தம் செய்யப்படும்.

மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிசளிக்கப்படும் போது அதனை பெறுபவருக்கு வரி விதிக்கப்படும்.

வழக்கு நிர்வாகம்

உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தால்

சட்டம் பற்றிய கேள்வி முடிவு செய்யப்படும் வரை மேல்முறையீடு தாக்கல் செய்வது ஒத்திவைக்கப்படும்.

துறைக்கும், வரி செலுத்துவோருக்குமிடையே அடுத்தடுத்து வழக்கு தொடரப்படுவதை இது பெருமளவு குறைக்க உதவும்.

ஐஎஃப்எஸ்சி–க்கு வரி ஊக்குவிப்புகள்

குறிப்பிட்ட நிலைமைகளுக்கு உட்பட்டு கீழ் வருபவற்றுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கடலுக்கு அப்பால் உருவாக்கப்பட்ட பொருட்களிலிருந்து வெளிநாடு வாழ் இந்தியரின் வருவாய்

கடலுக்கு அப்பால் உள்ள வங்கிப் பிரிவால் வழங்கப்பட்ட மாற்றுக் கணக்குகளிலிருந்து பெறப்படும் வருவாய்

கப்பல் குத்தகையின் கணக்கில் பெறப்படும் உரிமத் தொகை மற்றும் வட்டி வருவாய்

ஐஎஃப்எஸ்சியில் பங்கு நிர்வாக சேவைகளிலிருந்து பெறப்படும் வருவாய்

கூடுதல் வரியில் சீர்திருத்தம்

ஏஓபி–க்கள் (ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு அமைக்கப்படும் கூட்டமைப்பு) மீதான கூடுதல் வரி உச்சவரம்பு 15 சதவீதமாக இருக்கும்.

தனிநபர் நிறுவனங்களுக்கும், கூட்டு நிறுவனங்களுக்கும் இடையேயான துணை வரியில் பாகுபாடு குறைக்கப்படும்

எந்தவகையான சொத்துக்கள் பரிமாற்றத்திலிருந்தும் கிடைக்கின்ற நீண்டகால மூலதன லாபங்கள் மீதான துணை வரி 15 சதவீதமாக இருக்கும்

புதிய தொழில் தொடங்கும் சமூகத்தினருக்கு ஊக்கம் அளிப்பதற்காக

வருவாய் மற்றும் லாபங்கள் மீதான துணை வரி அல்லது செஸ் வரி வர்த்தக செலவாக அனுமதிக்கப்பட மாட்டாது

வரி ஏய்ப்புக்கு எதிரான தடுப்பு நடவடிக்கை

தேடுதல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளின் போது கண்டறியப்பட்ட வெளிப்படுத்தப்படாத வருவாய்க்கு மாறான எந்த இழப்பையும் வெளிப்படுத்த அனுமதிக்கப்படாது.

டிடிஎஸ் அம்சங்களில் சீர்திருத்தங்கள்

• வணிக மேம்பாட்டு உத்தியாக முகவர்களின் கைகளில் இருக்கும் வரி விதிப்பின் பயன்கள் முகவர்களுக்கு வழங்கப்படும்.

• நிதியாண்டின் போது ஒரு நபருக்கு வழங்கப்படும் பணப்பயன்களின் மொத்த மதிப்பு ₹20,000–ஐ கடக்கும் போது வரிப்பிடித்தம் செய்யப்படும்.

மறைமுக வரிகள்

ஜிஎஸ்டியில் மகத்தான வளர்ச்சி

பெருந்தொற்றுக்கு இடையிலும் ஜிஎஸ்டி வருவாய் அதிகரிப்பு – இந்த வளர்ச்சிக்கு வரிசெலுத்துவோர் பாராட்டுக்குரியவர்கள்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் சுங்க நிர்வாகம் முற்றிலும் தொழில்நுட்பமயமாக்கம். 2022 செப்டம்பர் 30–ந் தேதி வாக்கில் சுங்க தேசிய வலைத்தளத்தின் செயல்பாடு நடைமுறைக்கு வரும்.

சுங்க சீர்திருத்தங்கள் மற்றும் தீர்வை விகித மாற்றங்கள்

முகமற்ற சுங்க நடைமுறை முற்றிலும் உருவாக்கப்பட்டுள்ளது. கொவிட்–19 பெருந்தொற்று காலத்தில், அனைத்து விதமான சிரமங்களுக்கு இடையே சுங்க அமைப்புகள் சிறப்பான முன்களப் பணியில் ஈடுபட்டன.

திட்ட இறக்குமதிகள் மற்றும் மூலதனப் பொருட்கள்

மூலதனப் பொருட்கள் மற்றும் திட்ட இறக்குமதிகளில் சலுகை விகிதங்கள் படிப்படியாக அகற்றப்படும். இந்தியாவில் தயாரிப்போம் மற்றும் உள்நாட்டுத் துறை வளர்ச்சிக்கு உதவும் வகையில் 7.5 சதவீதம் என்ற மிதமான கட்டணம் வசூலிக்கப்படும்.

உள்நாட்டில் தயாரிக்கப்படாத நவீன இயந்திரங்களுக்கான சில சலுகைகள் தொடரும்.

மூலதனப் பொருட்களில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க, சிறப்பு வார்ப்புகள், திருகாணி உருண்டைகள், நேரியல் இயக்கம் போன்ற உற்பத்திப் பொருட்களுக்கு சில சலுகைகள் அறிமுகம்.

சுங்க சலுகைகள் மறு ஆய்வு மற்றும் கட்டண எளிதாக்கம்

சில வகையான வேளாண் உற்பத்திப் பொருட்கள், ரசாயனங்கள், துணிகள், மருத்துவ உபகரணங்கள் மீதான சலுகை போன்ற 350–க்கும் மேற்பட்ட சலுகைகளை படிப்படியாக அகற்ற உத்தேசம். போதுமான உள்ளூர் திறன் கொண்ட மருந்துகளுக்கு இச்சலுகைகள் நீடிக்கும்.

ரசாயனங்கள், ஜவுளி, உலோகங்கள் போன்ற பிரிவுகளுக்கான கட்டண விகிதம் மற்றும் சுங்க விகிதம் எளிதாக்கப்படுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அல்லது தயாரிக்கப்படக் கூடிய பொருட்களுக்கு சலுகை ரத்து செய்யப்பட்டு, இந்தியாவில் தயாரிப்போம், தற்சார்பு இந்தியா ஆகியவற்றின் நோக்கங்களுடன் தயாரிக்கப்படும் பொருட்களுக்குப் பயன்படும் கச்சா பொருட்களுக்கு சலுகை அடிப்படையிலான தீர்வைகள் வழங்கப்படும்.

குறிப்பிட்ட துறை முன்மொழிவுகள்

மின்னணு

அணியக்கூடிய உபகரணங்கள், கேட்கும் உபகரணங்கள், மின்னணு ஸ்மார்ட் மீட்டர்கள், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க படிப்படியான விகித அமைப்பை உருவாக்க சுங்கத் தீர்வை விகிதங்கள் திருத்தியமைக்கப்படும்.

மொபைல் ஃபோன் மின்னூக்கிகள் மின்மாற்றி, மொபைல் கேமராவுக்கான கேமரா லென்ஸ் ஆகியவற்றின் பாகங்கள் மற்றும் சில பொருட்களுக்கு, உயர் வளர்ச்சி மின்னணு பொருட்கள் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிக்கும் தீர்வை சலுகைகள்.

வைரங்கள் மற்றும் ஆபரணங்கள்

பட்டைத் தீட்டப்பட்ட வைரங்கள் மற்றும் வைரக்கற்கள் மீதான சுங்கத் தீர்வை 5 சதவீதமாக குறைக்கப்படுகிறது. வைரங்கள் மற்றும் நகைப்பிரிவை ஊக்குவிக்கும் வகையில் அறுக்கப்பட்ட வைரங்களுக்கு சுங்கத் தீர்வை இல்லை.

மின் வணிகம் மூலம் நகை ஏற்றுமதியை ஊக்கவிக்க இந்த ஆண்டு ஜூன் மாதம் எளிதாக்கப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பு அமல்படுத்தப்படும்.

கவரிங் நகை இறக்குமதிக்கு ஊக்கத் தடை விதிக்கும் வகையில், கவரிங் நகை இறக்குமதி மீது குறைந்தபட்சம் கிலோவுக்கு ₹400 வீதம் சுங்கத் தீர்வை செலுத்த வேண்டும்.

ரசாயனங்கள்

மெத்தனால், அசிடிக் ஆசிட் போன்ற சில முக்கிய ரசாயனங்கள், பெட்ரோலிய சுத்திகரிப்புக்கான கனரக இருப்பு மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்படுகிறது; உள்நாட்டு உற்பத்தித் திறன் உள்ள சோடியம் சயனைடு மீதான தீர்வை அதிகரிக்கப்படுகிறது. இது உள்நாட்டு மதிப்புக் கூடுதலை அதிகரிக்க உதவும்.

எம்எஸ்எம்இ

குடைகள் மீதான சுங்கத் தீர்வை 20 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது. குடைகளுக்கான பாகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை திரும்பப் பெறப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வேளாண் துறைக்கான உபகரணங்கள் மீதான சலுகை மாற்றியமைக்கப்படுகிறது.

சிறு, குறு, நடுத்தர தொழிலின் இரண்டாம் கட்ட உருக்கு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கும் வகையில் இரும்புக் கழிவுகளுக்கு சுங்கத் தீர்வை விலக்களிக்கப்படுகிறது.

பொது நலன் கருதி உலோகங்களுக்கு அதிக விலை அளிக்கும் வகையில், துருப்பிடிக்காத ஸ்டீல், இரும்புக் கம்பிகள், அல்லாய் ஸ்டீல் மீதான சிவிடி தீர்வை ரத்து செய்யப்படுகிறது.

ஏற்றுமதிகள்

ஏற்றுமதியை ஊக்குவிக்க அலங்காரம், டிரிம்மிங், பாஸ்ட்னர்கள், பொத்தான்கள், ரிவிட், லைனிங் மெட்டீரியல், குறிப்பிட்ட தோல், மரச்சாமான்கள் பொருத்துதல்கள் மற்றும் பேக்கேஜிங் பெட்டிகள் போன்ற பொருட்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இறால் ஏற்றுமதியை ஊக்குவிக்க, இறால் வளர்ப்புக்குத் தேவையான சில பொருட்கள் மீதான தீர்வை குறைக்கப்படுகிறது.

எரிபொருள் கலப்பை ஊக்குவிக்க கட்டண அளவீடு

எரிபொருள் கலப்பை ஊக்குவிக்க, கலக்காத எரிபொருளுக்கு 2022 அக்டோபர் 1 முதல் லிட்டருக்கு ₹2 வீதம் கூடுதல் வித்தியாச கலால் வரி விதிக்கப்படும்.

---

5. 2025-26-ஆம் நிதியாண்டில் இந்திய பொருளாதார மதிப்பு 5 டிரில்லியன் டாலராக உயரும்: தலைமை பொருளாதார ஆலோசகர்

இந்தியாவின் பொருளாதார மதிப்பு 2025-26ஆம் நிதியாண்டில் 5 டிரில்லியன் டாலரை (சுமார் ₹370 லட்சம் கோடி) எட்டும் என்று மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் வி அனந்த நாகேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை கூறுகையில், "மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு ஏற்கெனவே 3 டிரில்லியன் டாலரை (சுமார் ₹225 லட்சம் கோடி) கடந்துள்ளது. செலாவணி மதிப்பு விகிதத்தின் போக்கு, வளர்ந்த நாடுகளில் உள்ள நிலவரம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் இந்திய ரூபாயின் மதிப்பு ஸ்திரமாகவும் வலுவாகவும் இருக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை 8-9 சதவீதமாக தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டால், அது டாலர் மதிப்பில் 8 சதவீத வளர்ச்சியாக இருக்கும். இந்தப் போக்கு தொடர்ந்து சாத்தியமானால் 2025-26 அல்லது 2026-27ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதார மதிப்பு 5 டிரில்லியன் டாலரை எட்டும்" எனத் தெரிவித்தார்.

இந்திய பொருளாதார மதிப்பை 5 டிரில்லியன் டாலராக அதிகரித்து, 2024-25ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய பொருளாதார சக்தியாக இந்தியாவை உயர்த்தும் தனது கனவை கடந்த 2019ஆம் ஆண்டு பிரதமர் மோடி வெளிப்படுத்தினார். இதன்மூலம் உலகில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்.

நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 9.2 சதவீதம் வளர்ச்சியடையும் எனவும், அடுத்த நிதியாண்டில் 8-8.5 சதவீதம் வளர்ச்சியடையும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

6. சேதி தெரியுமா?

ஜன.22: த.செ. ஞானவேல் இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்த 'ஜெய் பீம்' திரைப்படம் ஆஸ்கர் விருதுக்கான தகுதிப் பட்டியலில் இடம்பெற்றது.

ஜன.23: தமிழக அரசின் தொல்லியல் துறையின் முதல் இயக்குநராகப் பணி யாற்றியவரும் முதுபெரும் தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆய்வாளருமான நாகசாமி (92) காலமானார்.

ஜன.23: லக்னோவில் நடைபெற்ற சையது மோடி சர்வதேச பாட்மிண்டன் தொடரின் ஒற்றையர் பட்டத்தை இந்தியாவின் பி.வி. சிந்து வென்றார்.

ஜன.24: 1945இல் இரண்டாம் உலகப் போரின்போது மாயமான அமெரிக்க விமானம் இமயமலைப் பகுதியில் அமெரிக்க மலையேற்ற சாகச வீரர் கிளேட்டன் குக்லெஸ் தலைமையில் கண்டறியப்பட்டது.

ஜன.25: தமிழகத்தைச் சேர்ந்த சிற்பி பாலசுப்பிரமணியம் (இலக்கியம், கல்வி); எஸ் தாமோதரன் (சமூக சேவை); வீ. சேஷையா (மருத்துவம்), AKC நடராஜன், முத்துக்கண்ண

–ம்மாள், சௌகார் ஜானகி, எச் பல்லேஷ் பஜந்திரி (கலை) ஆகியோர் 2022–ம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

ஜன.26: தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பிப்ரவரி 19 அன்று நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

ஜன.27: டாடா குழுமத்திடம் ஏர் இந்தியா நிறுவனத்தை மத்திய அரசு அதிகாரபூர்வமாக ஒப்படைத்தது. முன்னதாக ₹18 ஆயிரம் கோடிக்கு ஏர் இந்தியா நிறுவனத்தை டாடா நிறுவனம் வாங்கியது.


ஜன.27: 1964ஆம் ஆண்டில் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய ஹாக்கி அணிக்கு கேப்டனாக இருந்து தங்கப் பதக்கம் வென்ற சரண்ஜித் சிங் (90) காலமானார்.

ஜன.28: மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக ஆனந்த் நாகேஸ்வரனை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டது.

ஜன.29: இந்தியாவிடமிருந்து முதன்முறையாக பிரமோஸ் ஏவுகணையை 375 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் பிலிப்பைன்ஸ் வாங்க ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

---

1. ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி சுற்றிவரும் விண்வெளிப்பரப்பின் பெயர் என்ன?



அ) லாக்ரேஞ்ச் புள்ளி L2 ☑

ஆ) கியூரி புள்ளி

இ) நியூட்டன் புள்ளி

ஈ) CV இராமன் புள்ளி

✓ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கிமீ தொலைவில் அதன் இறுதி இலக்கை அடைந்தது. அது 'லாக்ரேஞ்ச் புள்ளி' எனப்படும் விண்வெளிப் பகுதியில் சுற்றும், அங்கு சூரியன் மற்றும் பூமியின் ஈர்ப்பு விசை சுழலும் அமைப்பின் மையவிலக்கு விசையால் சமநிலைப்படுத்தப்பட்டிருக்கும்.

✓ இப்புள்ளிகள் முதலில் இத்தாலிய பிரெஞ்சு கணிதவியலா –ளர் ஜோசப்–லூயிஸ் லாக்ரேஞ்ச் என்பவரால் கோட்பாடு செய்யப்பட்டது.

---

2. IIT கரக்பூரின் அறிவியலாளர்கள், கீழ்காணும் எந்த நோயைக் கண்டறிவதற்கான ஒரு சிறிய சாதனத்தை உருவாக்கியுள்ளனர்?

அ) வாய்ப்புற்றுநோய் ☑

ஆ) மார்பகப்புற்றுநோய்

இ) ஆண்மைச்சுரப்பிப் புற்றுநோய்

ஈ) நுரையீரல் புற்றுநோய்

✓ IIT கரக்பூரின் விஞ்ஞானிகள், வாய்வழி புற்றுநோயைக் கண்டறிவதற்கான ஒரு சிறிய, மலிவான சாதனத்தை உருவாக்கியுள்ளனர். ஒரு சாதனத்திற்கான மதிப்பிடப்பட் –ட விலை $500 அமெரிக்க டாலருக்குள் இருக்கும்.

✓ இந்தப் புதிய தொழில்நுட்பம், சுகாதார மையத்தில் உள்ள மருத்துவரால், முதல் பரிசோதனையின்போதே பாதிப்புக –ளைக் கண்டறிய உதவுகிறது.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'MY2022' செயலியுடன் தொடர்புடைய நாடு எது?



அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா

இ) சீனா ☑

ஈ) இஸ்ரேல்

✓ 'MY2022' என்பது பெய்ஜிங்கில் நடக்கவுள்ள குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பிறரால் பயன்படுத்தப்படும் செயலியின் பெயராகும். 'சிட்டிசன் லேப்' என்ற இணைய கண்காணிப்புக் குழுவின் சமீபத்திய அறிக்கையின்படி, செயலியில் உள்ள குறியாக்கத்தில் குறைபாடு உள்ளது. அதன்மூலம் முக்கியமான தரவு மற்றும் பிற தரவுகள் ஹேக் செய்யப்பட வாய்ப்புண்டு.

---

4. முதலாவது UNDP இந்திய இளையோர் காலநிலை சாம்பியனாக அறிவிக்கப்பட்டவர் யார்?



அ) பிரஜக்தா கோலி ☑

ஆ) லிசிப்ரியா கங்குஜம்

இ) தியா மிர்சா

ஈ) A திஷா ரவி

✓ ஐநா வளர்ச்சித் திட்டம்–இந்தியா, உள்ளடக்க உருவாக்கு –நரும் நடிகருமான பிரஜக்தா கோலியை அவற்றின் முதல் UNDP இந்திய இளையோர் காலநிலை சாம்பியனாக அறிவித்தது. பல்வேறு உலகளாவிய சமூக பிரச்சாரங்கள் மூலம் மனநலம், பெண்கள் உரிமைகள் மற்றும் பெண் குழந்தை கல்வி ஆகியவற்றிற்கான அவரது பங்களிப்பை UNDP அங்கீகரித்துள்ளது.

---

5. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பிரஸ்ஸின் அண்மைய ஆய்வின்படி, 2021ஆம் ஆண்டிற்கான சிறார்களுக்கான சொல்லாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சொல் எது?



அ) Depression (மனச்சோர்வு)

ஆ) Virus (தீநுண்மம்)

இ) Anxiety (கவலை) ☑


ஈ) Teacher (ஆசிரியர்)

✓ ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பிரஸ்ஸின் ஒரு புதிய ஆராய்ச்சியின்படி, குழந்தைகளால் 'Anxiety' என்ற சொல் 2021ஆம் ஆண்டிற்கான சொல்லாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. ஆசிரியர்கள் "Resilience" என்ற சொல்லை தங்களின் சொல்லாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

✓ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பிரஸ் ஆனது குழந்தைகள் மொழியின் பரிணாம வளர்ச்சியையும், அவர்களின் உண –ர்வுகளையும் அனுபவங்களையும் பிரதிபலிக்க அவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதையும் ஆய்வுசெய்தது.

---

6. ஒற்றையர் (அ) இரட்டையர் பிரிவில் முதலிடத்திற்கு உயர்ந்த முதல் இந்திய டென்னிஸ் வீராங்கனை யார்?



அ) அங்கிதா ரெய்னா

ஆ) சானியா மிர்சா ☑

இ) கர்மன் தண்டி

ஈ) ரியா பாட்டியா

✓ சானியா மிர்சா 2015'இல் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்தபோது, ஒற்றையர் அல்லது இரட்டையர் பிரிவில் முதலிடத்திற்கு முன்னேறிய இந்திய டென்னிஸ் வீராங்கனை ஆனார்.

✓ விம்பிள்டனில் வென்றபோது கிராண்ட்ஸ்லாம் இரட்டைய –ர் பட்டத்தை வென்ற முதல் இந்தியப்பெண்மணி என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார். ஒரு இடைவெளி –க்குப் பிறகு, ஃபெட் கோப்பை இதய விருதை வென்று சாதனை படைத்தார். சமீபத்தில் அவர் 2022 சீசனுக்குப் பிறகு ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

---

7. 2022 ஜனவரி மாதத்தில், எந்த நாட்டின் தலைவர் உலகளாவிய ரேட்டிங் சர்வேயில் மிகவும் பிரபலமான தலைவராக முதலிடம் பிடித்தார்?

அ) சீனா



ஆ) இந்தியா ☑

இ) ரஷ்யா

ஈ) அமெரிக்கா

✓ இந்தியப்பிரதமர் மோடி 71 சதவீத ஒப்பளிப்பு மதிப்பீட்டுடன் உலகத்தலைவர்களிடையே மிகவும் பிரபலமான தலைவராக உலகளாவிய ரேட்டிங் சர்வேயில் முதலிடம் பிடித்தார். இந்தக் கருத்துக்கணிப்பு மார்னிங் கன்சல்ட் அரசியல் நுண்ணறிவு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. 2022 ஜனவரி 13–19 வரை சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.

✓ மெக்ஸிக்கோ அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோ 66% மதிப்பீட்டுடன் இரண்டாவது இடத்தையும், இத்தாலிய பிரதமர் மரியோ ட்ராகி 60% மதிப்பீட்டுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

---

8. 'ஸ்வச்சதா ஸ்டார்ட்–அப் சவாலை' அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்



இ) விவசாய அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது தூய்மை மற்றும் கழிவு மேலாண்மை துறையை மாற்றி அமைக்க புதுமையான ஸ்டார்ட்–அப்களை ஊக்குவிக்க 'ஸ்வச்சதா ஸ்டார்ட்–அப் சவாலை' தொடங்கியது. தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) மற்றும் Agence Française de Developpement (AFD) ஆகியவற்றுடன் இணைந்து இது தொடங்கப்பட்டுள்ளது.

✓ இது தூய்மை இந்தியா இயக்கம்–நகர்ப்புறம் 2.0'இன்கீழ், நிறுவன வளர்ச்சியை ஊக்குவிக்க முயல்கிறது.

---

9. 2022 ஜனவரி மாத நிலவரப்படி, கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசிகளுக்கு எவ்வகையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது?

அ) அவசரகால பயன்பாட்டுக்கான அங்கீகாரம்



ஆ) நிபந்தனையுடனான சந்தை அங்கீகாரம் ☑

இ) அத்தியாவசிய சந்தை அங்கீகாரம்

ஈ) முழுமையான சந்தை அங்கீகாரம்

✓ சீரம் இந்தியா நிறுவனத்தின் 'கோவிஷீல்டு' மற்றும் பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவாக்ஸின்' COVID–19 தடுப்பூசிகளுக்கு மருந்து ஒழுங்காற்றுநர் "நிபந்தனையுட–ன் கூடிய சந்தை அங்கீகாரத்தை" வழங்கியுள்ளது.

✓ கடந்தாண்டு ஜனவரி முதல், இவ்விரண்டு தடுப்பூசிகளும் "அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்தின்கீழ் கிடைத்து வருகின்றன. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரவை அந்நிறுவனங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இது முன்னர் 15 நாட்களுக்கு ஒருமுறையாக இருந்தது. இது முழுமையான சந்தை (Full Market) அங்கீகாரத்திலிருந்து வேறுபட்டது.

---

10. கோடைகால முகாமுக்கு விவசாயம் குறித்த தேசிய கருத்தரங்கின் மற்றொரு பெயர் என்ன?

அ) ரபி மாநாடு



ஆ) சயத் மாநாடு ☑

இ) கரீப் மாநாடு

ஈ) பணப்பயிர் மாநாடு

✓ **2021–22 கோடைகால முகாமுக்கு வேளாண்மைகுறித்த 4ஆவது தேசிய கருத்தரங்கு காணொலி காட்சிமூலம் தொடங்கியது. இது 'சயத் மாநாடு' என்றும் அழைக்கப்படு–கிறது. கரீப் மற்றும் ராபி பருவங்களுக்கு இடையே 'சயத் பயிர்கள்' பயிரிடப்படுகின்றன.**

✓ **இந்த மாநாட்டில் மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர குமார் தோமர் கலந்துகொண்டார். முந்தைய பயிர் பருவங்களில் பயிரின் செயல்திறனை மறுபரிசீலனை செய்வதும், மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து அடுத்த கோடை பருவத்திற்கான பயிர்வாரியான இலக்குகளை நிர்ணயிப்பதும் இந்த மாநாட்டின் நோக்கமாகும்.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'பத்ம' விருதுகளால் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள்

*** சதிராட்டத்தில் சாதனை படைத்த முத்து கண்ணம்மாள்**
***தூய்மையே வெல்லும் என உழைக்கும் தாமோதரன்**

தங்களது துறைகளில் அரிய சாதனைகளை செய்திருந்தாலும் அதிகம் அறியப்படாத இருதமிழர்களை 'பத்மஸ்ரீ' விருதுக்கு நடுவணரசு தேர்ந்தெடுத்துள்ளது.

பரதநாட்டியத்தின் முன்னோடியான சதிராட்டம் என்னும் நடனத்தில் கைதேர்ந்த விராலிமலையைச் சேர்ந்த முத்து கண்ணாம்மாளுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக 1,000'க்கும் மேற்பட்ட நடனம் மற்றும் இசைநிகழ்ச்சிகளில் பங்கேற்று உள்ளார். 84 வயதான இவர், இளங்கலைஞர்களுக்கு இன்னமும் பயிற்சியளிக்கிறார்.

உயிரோடிருக்கும் ஒரே மற்றும் கடைசி தேவதாசியான முத்துக்கண்ணாம்மாள், 7ஆம் தலைமுறை சதிர் கலைஞர் ஆவார். இந்தக் கலையைக்காக்க பல்வேறு முயற்சிகளை அவர் எடுத்துவருகிறார். அவரது சேவையை பாராட்டும் விதமாக கலைப்பள்ளியில் அவரது சிலை ஒன்றை மூத்த சிற்பி ஜி சந்திரசேகரன் நிறுவியுள்ளார்.

தூய்மைப்பணிக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள 57 வயதான எஸ் தாமோதரன், நான்கு மாநிலங்களில் ஆறு இலட்சம் குறைந்த விலையிலான குட்டைக்கழிவறை அமைப்புகளைக் கட்டமைத்துள்ளார்.

இந்தியாவின் தெற்குப்பகுதியிலுள்ள கிராமங்கள் மற்றும் குடிசைப்பகுதிகளில் தண்ணீர், கழிவுநீர்மேலாண்மை

மற்றும் சுகாதாரத்திற்கான அணுகலுக்கு அவரது முயற்சிகள் வழிவகுத்தன.

இந்தியாவிலேயே முதல்முறையாக, வசதிகளற்ற மக்களுக்காக சமூக மேலாண்மை முறையில் நடத்தப்படு–ம் கட்டணக் கழிவறை அமைப்புகளை 'கிராமாலயா' என்னும் தனது முன்முயற்சி மூலம் அறிமுகப்படுத்தினார்.

மகளிர் சுய உதவிக்குழுக்களை நிறுவி கழிவறைகள் தூய்மையாக பேணப்படுவதை உறுதி செய்தார்.

---

2. இலங்கைக்கு இந்தியா ₹3,737 கோடி கடன் வழங்க ஒப்பந்தம் கையெழுத்து

இலங்கைக்கு அவசரகால உதவியாக ₹3,737 கோடி கடன்வழங்க முன்வருவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் G L பீரிசுக்கு மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் கடந்த மாதம் எழுதிய கடிதத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில் அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்மூலம், எந்த ஒரு இந்திய வினியோகஸ்தர்மூலமும் எரிபொருளை இலங்கை இறக்குமதி செய்ய முடியும் என அந்நாட்டு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியா தற்போது வழங்கும் கடன், அந்நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடியை ஓரளவு தணிக்கும் என்று கருதப்படுகிறது. இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பை மேம்படுத்தும் விதமாக, பணப்பரிமாற்ற திட்டத்தில் ₹2,990 கோடி வழங்கவும் இந்தியா கடந்த வாரம் ஒப்புதல் தெரிவித்தது.

இந்தியன் ஆயில் நிறுவனத்திடம் இருந்து தலா 40 ஆயிரம் டன் பெட்ரோல், டீசலை வாங்க இலங்கை நேற்று முன்தினம் முடிவெடுத்தது குறிப்பிடத்தக்கது.

---

3. தெற்கு ரயில்வேவின் 10 புதிய பாதை திட்டங்கள்: தலா ₹1,000 மட்டுமே ஒதுக்கீடு

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2022–23ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் தெற்கு ரயில்வேயில் பல்வேறு பணிகளுக்கு ₹7,114 கோடியே 45 லட்சத்து 69 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் புதிய பாதை திட்டங்களுக்கு ₹59 கோடியே 10 ஆயிரம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், தமிழகத்தில் 8 திட்டங்கள் உள்பட 10 புதிய பாதை திட்டங்களுக்கு தலா ₹1,000 மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகலப்பாதை திட்டப்பணிகளுக்கு ₹346 கோடியே 80 லட்சத்து ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரட்டை பாதை திட்டங்களுக்கு ₹381 கோடியே 51 லட்சத்து ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இந்த திட்டங்களுக்காக, ₹1,064 கோடியே 34 லட்சம் 58 ஆயிரம் வெளிமூலதனம் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய பாதை திட்டம்: தெற்கு ரயில்வே பகுதிக்குட்பட்ட 11 புதிய திட்டங்களில் 2 திட்டங்கள் கேரளப் பகுதியில் திருநின்னவாயா–குருவாயூர் (35 கிமீ), அங்கமாலி–சபரிமலா (116 கிமீ) ஆகிய திட்டங்கள் வருகின்றன. மீதம் 9 திட்டங்கள் தமிழக பகுதிகளில் வருகின்றன.

இதில் திண்டிவனம்–செஞ்சி–திருவண்ணாமலை திட்டம் (70 கிமீ), திண்டிவனம்–நகரி (179.2 கிமீ), அத்திப்பட்டு–புத்தூர் (88.30 கிமீ), ஈரோடு–பழனி (91.05 கிமீ), சென்னையில் இருந்து மாமல்லபுரம் வழியாக கடலூர் (179.28 கிமீ), மதுரையில் இருந்து அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி (143.5 கிமீ), ஸ்ரீபெரும்புதூர்–கூடுவாஞ்சேரி (60 கிமீ), மொரப்பூர்–தருமபுரி (36 கிமீ) ஆகிய 8 திட்டங்களுக்கு தலா ₹1,000 மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோல, கேரளத்தில் இரண்டு புதிய பாதை திட்டங்களுக்கும் தலா ₹1,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ராமேசுவரம்–தனுஷ்கோடி (17.2 கிமீ) புதிய பாதை திட்டத்துக்கு ₹59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகலப்பாதை திட்டம்: திருச்சிராப்பள்ளி–காரைக்கால் திட்டத்தில், நாகப்பட்டினம்– வேளாங்கண்ணி–திருத்துறைப்பூண்டி (வழி: திருக்குவளை) புதிய பாதை திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ₹121.80 கோடி ஆகும். இந்தத் திட்டத்தில் திருச்சிராப்பள்ளி–காரைக்கால் அகலப் பாதை பணிகள் முடிந்து ரயில்கள் இயக்கப்படுவதால், இந்நிதி நாகைப்பட்டினம்–திருத்துறைப்பூண்டி புதிய பாதை திட்டத்துக்கு கிடைக்கும். மேலும், இத்திட்டம் வேகமடையும்.

மன்னார்குடி–பட்டுக்கோட்டை, பட்டுக்கோட்டை–தஞ்சை ஆகிய புதிய பாதை திட்டங்களும், திருத்துறைப்பூண்டி–அகஸ்தியம்பள்ளி அகலப்பாதை திட்டமும் உள்ளடக்கிய மயிலாடுதுறை–திருவாரூர்–காரைக்குடி அகலப்பாதை திட்டத்துக்கு ₹75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில், மயிலாடுதுறை–காரைக்குடி அகலப்பாதை திட்டப்பணிகள் முடிந்து ரயில்கள் இயக்கப்படுகின்றன. திருத்துறைப்பூண்டி–அகஸ்தியம்பள்ளி திட்டப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைய உள்ளது. இதற்கு இந்நிதி பயன்படுத்தப்படும். அகலப்பாதை திட்டப்பணிகளு–க்கு மொத்தம் ₹346 கோடியே 80 லட்சத்து ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரட்டைபாதை திட்டம்: சென்னை கடற்கரை–கொருக்குப்பேட்டை இடையே 3ஆவது பாதை திட்டத்துக்கு ₹10 கோடியும், சென்னை கடற்கரை–அத்திப்பட்டு இடையே 4ஆவது பாதை (22 கிமீ) ₹25 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு–விழுப்புரம் (103 கிமீ) பாதையுடன் தாம்பரம்–செங்கல்பட்டு 3ஆவது பாதையில் மின்மயமாக்குதல் திட்டத்துக்கு ₹25 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. ஒமலூர்–மேட்டூர் அணை (29.03) இரட்டை பாதை மற்றும் மின்மயமாக்கும் திட்டப்பணிக்கு ₹11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு பணிகள்: பழைய தண்டவாளங்களை புதுப்பித்தல் பணிக்கு ₹1,470 கோடியும், பாலப் பணிகளுக்கு ₹105 கோடியே 91 லட்சத்து 22 ஆயிரமும், சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு பணிக்கு ₹189 கோடியே 76 லட்சத்து 98 ஆயிரமும், பயணிகள் வசதிக்காக ₹327 கோடியே 77 லட்சத்து 95 ஆயிரமும், இதர மின்னணு பணிகளுக்கு ₹30 கோடியே 8 லட்சத்து 78 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

4. தமிழகத்தில் 50,296 மின்சார வாகனங்கள் இதுவரை விற்பனை

நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தமிழகத்தில் மின்சார வாகனங்களின் விற்பனை நிலவரம் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதில், "சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து வழி முறைகளை மேம்படுத்துவதற்கும், போக்குவரத்துத் துறையின் கரியமில வாயு மையத்தை போக்குவதற்கும், மாற்று எரிபொருட்களை அறிமுகப்படுத்துவதற்காக வெகுஜன உமிழ்வு தரநிலைகளைச் சாலை போக்குவரத் –து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் அறிவித்துள்ளது.

எத்தனால் கலந்த பெட்ரோல் (இ–10, இ–12, இ–15, இ–20), நெகிழ்வு எரிபொருள் (இ 85 அல்லது இ 100) மற்றும் டீசல் வாகனங்களுக்கான எத்தனால் கலவை (இடி 95), பயோடீசல், உயிரி எரிவாயு, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு, மெத்தனால் (எம் 15 அல்லது எம் 100) இரட்டை எரிபொருள், ஹைட்ரஜன் எரிபொருள் உள்ளிட்டவை இதில் அடங்கும். மேலும், மின்சாரப் போக்குவரத்தை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் எடுத்து வருகிறது.

நாட்டில் 9,66,363 மின்சார வாகனங்கள் இதுவரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இரு சக்கர வாகனங்கள் 2,82,542, மூன்று சக்கர வாகனங்கள் 6,47,186, நான்கு சக்கர வாகனங்கள் 26,335, சரக்கு வாகனங்கள் 3,036, பொதுச் சேவை வாகனங்கள் 2,039, சிறப்புப் பிரிவு வாகனங்கள் 410, அவசரகால ஊர்திகள் அல்லது அமரர் ஊர்திகள் 6, கட்டுமான உபகரண வாகனங்கள் 397, இதர வாகனங்கள் 4412 ஆகும்.

தமிழ்நாட்டில் 50,296 மின்சார வாகனங்கள் இதுவரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இரு சக்கர வாகனங்கள் 44,302, மூன்று சக்கர வாகனங்கள் 4,470, நான்கு சக்கர வாகனங்கள் 13, சரக்கு வாகனங்கள் 1,281, பொது சேவை வாகனங்கள் 37, இதர வாகனங்கள் 193 ஆகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. சாம்பல் நீர் எனப்படும் கழிவு நீர் மேலாண்மையில் வழி காட்டும் தமிழ்நாட்டின் பாப்பாங்குழி கிராமம்

சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்தும் வகையில் வீடுகளின் சமையலறைகள் மற்றும் குளியல் பகுதிகளில் இருந்து நிரம்பி வழியும் அல்லது தேங்கி நிற்கும் சாம்பல் நீர் பிரச்சினையைத் தீர்க்க, தனி நபர் மற்றும் சமூக கழிவு நீர் ஊறவைக்கும் குழிகளை தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள பாப்பாங்குழி கிராமப் பஞ்சாயத்து அமைத்துள்ளது.

இரண்டு குடியிருப்பு பகுதிகளைக் கொண்ட பாப்பாங்குழி கிராமப் பஞ்சாயத்தில் 254 குடும்பங்களில் 1016 பேர் வசிக்கின்றனர். தலா 900 மீட்டர் நீளமுள்ள 13 தெருக்களும், ஒவ்வொன்றிலும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலைத் தொட்டிகளும் இருந்தன.

கடந்த காலத்தில், முறையான சுத்திகரிப்பு செயல்முறை இல்லாத நிலையில், கிராமப்புற வீடுகளில் இருந்து தெருக்கள், காலி நிலங்கள் அல்லது நீர்நிலைகளில் கழிவு நீர் வெளியேற்றப்பட்டதன் விளைவாக நீர் மாசுபடுதல், நிலம் மாசுபடுதல் மற்றும் நீரால் பரவும் நோய்கள் ஏற்பட்டன.

இதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் ஆதரவுடன் 93 வீடுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் தனிநபர் கழிவு நீர் ஊறவைக்கும் குழிகள் உருவாக்கப்பட்டன மற்றும் 161 குடும்பங்கள் கழிவுநீர் கால்வாயுடன் இணைக்கப்பட்டன.

மேலும், அப்புறப்படுத்தும் இடத்தில் இரண்டு கிடைமட்ட கழிவு நீர் ஊறவைக்கும் குழிகள் அமைக்கப்பட்டு, வடிகட்டிய நீர் பெரிய ஏரி மற்றும் ராஜந்தாங்கல் ஏரியின் நீர்நிலைகளில் விடப்பட்டது.

இந்த முன்முயற்சிகள் பஞ்சாயத்தின் தூய்மை நடவடிக்கைகளுக்குப் பெரும் பங்களிப்பை அளித்து, திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமமாகவும் பாப்பாங்குழியை ஆக்கியுள்ளன.

---

6. பாரத் மாலா திட்டத்தின் கீழ் பொருளாதார பெருவழித்தடங்கள்: மாநிலங்களவையில் கட்கரி தகவல்

நெடுஞ்சாலைகள் மற்றும் பலவகை சரக்குப் போக்கு வரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான பாரத் மாலா திட்டத்தின் முதல்கட்டத்தில், 9,000 கி.மீ. தொலைவுக்கு பொருளாதார பெருவழித்தடங்களை அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு, எழுத்து மூலம் அளித்த பதிலில் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதில், 6,087 கிமீ தொலைவு திட்டங்களுக்கு ஒப்புதல், ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டிருப்பதுடன், எஞ்சிய தொலை –வுள்ள சாலைகளுக்கு அடுத்த இரு நிதியாண்டுகளில் அனுமதியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுவரை, 1,613 கிமீ பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய தொலைவுக்கா –ன பணிகளை 2026–27ஆம் ஆண்டுக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் தனது பதிலில் கட்கரி தெரிவித்துள்ளார்.

---

7. அமெரிக்கா: உலகின் மிக நீண்ட மின்னல்

அமெரிக்காவில் கடந்த 2020ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட மின்னல், உலகின் மிகநீண்ட மின்னலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஜெனீவாவில் இயங்கி வரும் உலக வானியல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்காவின் மிஸிஸிபி, லூசியானா, டெக்ஸாஸ் மாகாணங்களிடையே மிகநீளமான மின்னல் கடந்த 2020 ஏப்.29ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது.

768.8 கிமீ நீளத்துக்கு ஏற்பட்ட இந்த மின்னல் உலகில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மின்னல்களிலேயே அதிக நீளமாகும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

8. அயல்நாடு–வெளிமாநிலத்தவர் தமிழ்மொழி கற்க தனி பரப்புரைக் கழகம்

அயல்நாடுகள், வெளிமாநிலங்களில் வசிக்கும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் பரப்புரைக் கழகம் உருவாக்கப்பட உள்ளது. இதற்கான நிதிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து, மாநில அரசு வெளியிட்ட உத்தரவு:

வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் வசிக்கும் தமிழர்கள், தமிழ்மொழியை கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்துதரப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் தமிழ் மொழியை கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கவும், ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டு இருந்தது. இதற்கென தமிழ் இணையக்கல்விக்கழகத்தில் இருந்து தமிழ்ப்பரப்புரை கழகம் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கழகத்தின் மூலமாக, தமிழ் மொழியின் பண்பாடு, கலாசாரப் பரப்புரை, ஒலி–ஒளி உச்சரிப்புடன் பாடப் புத்தகம் வடிவமைப்பு, தமிழ் கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல், இணையதளத்தில் தமிழ் ஆசிரியா'கள் மூலம் கற்றுத் தருதல், தமிழ் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி அளித்தல், தமிழாசிரியருக்கான பயிற்சிகள் அளித்தல், பயிற்சிபெற்ற ஆசிரியர்களை அனுப்பி வைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்கா –க ₹1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. சர்வதேச சுங்க நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 25

ஆ) ஜனவரி 26 ☑

இ) ஜனவரி 27

ஈ) ஜனவரி 28

✓ 'சர்வதேச சுங்க நாள்' ஒவ்வோராண்டும் ஜன.26 அன்று உலகம் முழுவதும் ஐநா அவையால் அனுசரிக்கப்படுகிறது. சுங்க அதிகாரிகள் மற்றும் முகமைகளின் பங்கை இது அங்கீகரிக்கிறது. சுங்க ஒத்துழைப்பு கவுன்சில் 1953'இல் இந்த நாள் கடைப்பிடிக்கப்படும் என அறிவித்தது.

✓ 1994'இல் இந்தக் கவுன்சிலுக்கு உலக சுங்க அமைப்பு என மறுபெயரிடப்பட்டது. "Scaling up Customs Digital Transformation by Embracing a Data Culture and Building a Data Ecosystem" என்பது நடப்பு 2022இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்

---

2. 2022 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாடு எது?

அ) ஜப்பான்

ஆ) சீனா ☑

இ) இரஷ்யா

ஈ) அமெரிக்கா

✓ 2022ஆம் ஆண்டின் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அதிகாரப்பூர்வமாக 2022 பிப்.4 முதல் 20 வரை சீனாவில் உள்ள பெய்ஜிங் மற்றும் அதன் அண்டை நகரங்களில் நடைபெறவுள்ளது. ஸ்போர்ட் எக்காலஜி குழுமம் மற்றும் சேவ் எவர் வின்டர்ஸ் ஆகிய அமைப்புகளால் வெளியிடப்ப–ட்ட ஓர் அறிக்கையில், ஒலிம்பிக்கில் தடகள வீரர்களின் உடலில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை பனியின் இடர்கள்குறித்து கூறப்பட்டுள்ளது. இவ்விளையாட்டுகளில் செயற்கை பனிப்பொழிவுக்காக ஏற்படும் தண்ணீர்விரயம் குறித்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

3. எந்த உலக அமைப்பு 2022ஆம் ஆண்டிற்கான 'Five–alarm global fire' என முன்னுரிமைகளை வழங்கியது?

அ) உலக வங்கி

ஆ) உலக பொருளாதார மன்றம்

இ) ஐக்கிய நாடுகள் ☑

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் பொதுச் சபையில் உரையாற்றி, நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகளை வகுத்தார். இதை 'ஐந்து எச்சரிக்கை உலகளாவிய தீ' என்று குறிப்பிட்ட அவர், தார்மீக ரீதியாக COVID–19 தொற்றுநோயால் நொடிந்துபோன உலக நிதி அமைப்பு, காலநிலை நெருக்கடி, இணையவெளியில் சட்டமின்மை மற்றும் குறைந்து வரும் அமைதி மற்றும் பாதுகாப்பு என ஐந்து முன்னுரிமைகளை பட்டியலிட்டார்.

---

4. எந்த நகரத்தில் நெகிழிப்பூங்கா அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?

அ) சென்னை

ஆ) மங்களூரு ☑

இ) பெங்களூரு

ஈ) திருநெல்வேலி

✓ கர்நாடக மாநிலம் மங்களூருவில் உள்ள கஞ்சிமட்டில் 'நெகிழிப்பூங்கா' அமைப்பதற்கு மத்திய அரசு தனது இறுதி ஒப்புதலை வழங்கியுள்ளது. ₹62.77 கோடி மதிப்பீட்டில் 104 ஏக்கரில் அமைக்கப்படும் இப்பூங்காவின் 50% திட்ட மதிப்பீட்டை நடுவணரசும், மீதியை கர்நாடக தொழிற் துறை பகுதி மேம்பாட்டு வாரியமும் (KIADB) ஏற்கும்.

---

5. 'வாழும் வேர்ப்பாலங்கள்' என்பது எந்த மாநிலத்தில் காணப்படும் ஒரு தனித்துவமிக்க கட்டமைப்பாகும்?

அ) மேற்கு வங்காளம்

ஆ) மேகாலயா ☑

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) மத்திய பிரதேசம்

✓ 'வாழும் வேர்ப்பாலங்கள்' மேகாலயா மாநிலத்தில் காணப்படுகின்றன. அவை 'பிகஸ் எலாஸ்டிகா' மரம் என அழைக்கப்படும் இரப்பர் மரத்தின் வேர்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மேலும் அவற்றின் பின்னலான வேர்கள் மரப்பாலங்களுக்கு நிலையான மாற்றாக அமைகின்றன.

✓ சமீபத்தில், இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவனம் ஆனது UNESCO உலக பாரம்பரிய தள குறிச்சொல்லைப் பெறுவதற்கு 'வாழும் வேர்ப்பாலங்களுக்கான' சில விதி முறைகளை அடிக்கோடிட்டுக்காட்டியது. மேகாலய மாநில முதல்வர் கான்ராட் K சங்மா 50ஆவது மாநில நாளான ஜன.21 அன்று UNESCOஇன் அங்கீகாரத்தைக்கோரினார்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற கிரிபட்டி அமைந்துள்ள கண்டம் எது?

அ) ஆசியா

ஆ) ஓசியானியா ☑

இ) ஐரோப்பா

ஈ) ஆப்பிரிக்கா

✓ கிரிபட்டி உலகின் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளுள் ஒன்றாகும். ஓசியானியாவில் அமைந்துள்ள இது ஆஸ்திரேலியாவிலிருந்து சுமார் 4,800 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கடந்தவாரம் வரை, கிரிபட்டி இரு COVID பாதிப்புகளை மட்டுமே கண்டுள்ளது. முதல் சர்வதேச விமானத்தில் பயணம் செய்த பயணிகளுக்கு COVID தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அந்நாடு தனது முதல் பொது முடக்கத்தை அறிவித்துள்ளது.

---

7. இந்தியாவில் 'அமர் ஜவான் ஜோதி' கட்டப்பட்ட ஆண்டு எது?

அ) 1947

ஆ) 1950

இ) 1972 ☑



ஈ) 1958

✓ 'அமர் ஜவான் ஜோதி' நினைவகம் 1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1971 போரில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் வெற்றியைக் குறிக்கும் வகையில் இது உள்ளது. இந்தப் போரின் வெற்றியை அடுத்து வங்கதேசம் உருவானது. இந்திய அரசாங்கம் இந்தியாவின் நுழைவு வாயிலின் அடியில் உள்ள 'அமர் ஜவான் ஜோதி'யுடைய அழியாச்சுடரை அணைத்து, கடந்த 2019இல் தேசிய போர் நினைவகத்தில் நிறுவப்பட்ட சுடருடன் இணைத்தது.

✓ 1972ஆம் ஆண்டு குடியரசு நாளில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அதைத் திறந்து வைத்தார்.

---

8. ஆதி பத்ரா அணையைக் கட்டுவதன்மூலம் சரஸ்வதி ஆற்றை புதுப்பிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரு மாநில அரசுகள் எவை?

அ) ஹரியானா–ஹிமாச்சல பிரதேசம் ☑



ஆ) குஜராத்–ராஜஸ்தான்

இ) ஹரியானா–பஞ்சாப்

ஈ) ஹிமாச்சல பிரதேசம்–தில்லி

✓ யமுனாநகர் மாவட்டத்தில் உள்ள ஆதி பத்ரியில் அணை கட்டுவதற்கு ஹரியானா மற்றும் இமாச்சல பிரதேச மாநில அரசுகள் ஒப்பந்தம் செய்துகொண்டன. இத்துடன், இப்பகுதி புனித யாத்திரை தலமாகவும் உருவாகும்.

✓ சரஸ்வதி ஆற்றுக்கு புத்துயிரளிப்பதுடன் நிலத்தடி நீர்மட்ட–த்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இமாச்சல பிரதேசத்தில் 31.66 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஆதி பத்ரி அணை கட்டப்படும். இதற்காக ₹215.33 கோடி செலவிடப்படும்.

---

9. தேலிநீலாபுரம் பறவைகள் புகலிடம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) ஆந்திர பிரதேசம் ☑



இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

✓ தேலிநீலாபுரம் சர்வதேச பறவைகள் சரணாலயம் ஆந்திர பிரதேசத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. சமீபத்தில், இப்பறவைகள் சரணாலயத்தில் புலம்பெயர்ந்த கூழைக்கடாக்கள் பெருமளவில் இறந்துகிடந்தன.

✓ அரசாங்க தரவுகளின்படி, சைபீரியா, ரஷ்யா, மலேசியா, ஹங்கேரி, சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 113 வகையான அயல் நாட்டுப்பறவைகள் இப்பகுதிகளுக்கு இனப்பெருக்கத்திற்–காக வருகின்றன.

---

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'நியோகோவ்', முதலில் எந்த உயிரினத்தில் கண்டறியப்பட்டது?

அ) குரங்கு

ஆ) வௌவால் ☑



இ) ஆந்தை

ஈ) கொறித்துண்ணி

✓ **'நியோகோவ்' என்பது வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நியோரோமிசியா வௌவால் இனத்தைக் குறிக்கிறது.**

✓ **இப்புதிய வைரஸ் MERS கொரோனா தீநுண்மத்துடன் (SARs–CoV–2 அன்று) தொடர்புடையது. தென்னாப்பிரிக்–காவில் வௌவால்களில் கண்டறியப்பட்ட இவ்வைரஸ் குறித்த செய்திகள் சமீபத்தில் தீயாகப்பரவின. இருப்பினும், 'நியோகோவ்' கொரோனா வைரஸ் மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதா? என்பது குறித்த கூடுதல் ஆய்வு தேவை என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பிப்ரவரி 4 – உலக புற்றுநோய் நாள்

கருப்பொருள்: "Close the Care Gap".

---

2. இன்று தொடங்குகிறது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்

24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் சீனாவின் பெய்ஜிங் நகரில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

பெய்ஜிங்கில் உள்ள தேசிய மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் அதிபர் ஷி ஜின்பிங் பங்கேற்று போட்டிகளை தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருசில விளையாட்டுகளின் முதல்கட்ட சுற்றுகள் கடந்த 2ஆம் தேதியே தொடங்கிவிட்டாலும், ஒலிம்பிக் தீபமேற்றிய பிறகே, ஒலிம்பிக்ஸ் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அக்.18 அன்று, ஒலிம்பிக்ஸின் பிறப்பிடமான கிரீஸில் தொடங்கிய ஒலிம்பிக் ஜோதி ஓட்டம், வெள்ளிக்கிழமை போட்டியின் தொடக்க நிகழ்ச்சி நடக்கும் மைதானத்தில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதுடன் நிறைவடைகிறது. கரோனா தொற்று அச்சம் காரணமாக பெய்ஜிங் நகரில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தின் கால அளவு குறைக்கப்பட்டுள்ளது.

கரோனா தொற்று பாதிப்பு சூழலில் டோக்கியோ ஒலிம்பிக் கடந்த ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அதேபோல் நடத்தி முடிக்கப்படும் நோக்குடன் தொடங்குகிறது இந்த குளிர்கால ஒலிம்பிக். உலகெங்கும் கரோனா பாதிப்பு மீண்டும் தீவிரமாகியிருக்கும் நிலையில் இந்தப் போட்டியை ஒத்திவைப்பதற்கு கோரிக்கைகளும், பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

அவற்றைக் கடந்த வகையில் உரிய பாதுகாப்பு முன்னெச்–சரிக்கை நடவடிக்கைகளுடன் போட்டியை நடத்துவதற்–கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிகக் கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய 'பயோ பபுள்' பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், போட்டியா

–ளர்கள் உள்பட ஒலிம்பிக்குடன் தொடர்புடைய அனைவ –ருக்கும் அவ்வப்போது கரோனா பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், போட்டியில் பங்கேற்க வந்துள்ள வீரர், வீராங்க –னைகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் கரோனா பாதிப்பு ஏற்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையில் இருக்கின்றனர்.

இதனிடையே, மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டி அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் ராஜ்ஜீய ரீதியிலாக இந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதை தவிர்த்துள்ளன. எனினும், அந்த நாடுகளின் சார்பில் போட்டியாளர்கள் களம் காண்கின்றனர்.

இந்தியாவின் பங்கேற்பு:

இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் ஒரேயொரு வீரர் மட்டும் பங்கேற்கிறார். பனிச் சறுக்கு வீரரான ஆரிப்கான், 'ஸ்லாலம்', 'ஜயன்ட் ஸ்லாலம்' ஆகிய இரு பிரிவுகளில் களம் காண்கிறார். அவரோடு 6 பேர்கொண்ட இந்திய குழு பெய்ஜிங் சென்றுள்ளது.

தொடக்கம் – பிப்ரவரி 4

நிறைவு – பிப்ரவரி 20

விளையாட்டுகள் – 15 விளையாட்டுகள்/109 போட்டிகள்

பங்கேற்பு – 91 நாடுகள்

போட்டியாளர்கள் (சுமார்) – 2,871

ஆடவர் – 1,581

மகளிர் – 1,290

---

3. கடலூர் மாவட்டம் வடலூரில் தோட்டக்கலை பூங்கா அமைக்க ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு

கடலூர் மாவட்டம் வடலூரில் தோட்டக்கலை பூங்கா அமைக்க ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. 3.20 ஏக்கரில் அமைக்கப்ப –டும் இப்பூங்காவில் நடைபாதைகள், மூலிகைச் செடிகள், குளம், பார்வையாளர் இருக்கை வசதி, சிறுவர் பூங்கா ஆகியவை இடம்பெறவுள்ளன.

---

1. மிகப்பெரிய கச்சா எண்ணெய் கசிவுக்குப் பிறகு, எந்த நாடு, 90 நாள் "சுற்றுச்சூழல் அவசரநிலை" அறிவித்தது?

அ) அர்ஜென்டினா



ஆ) பெரு ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) கனடா

✓ 6,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெய் கடலில் கசிந்ததை அடுத்து, சேதமடைந்த கடலோரப் பகுதிகளில் 90 நாள் "சுற்றுச்சூழல் அவசரநிலையை" பெருவிய அரசாங்கம் அறிவித்தது. ஸ்பானிய எரிசக்தி நிறுவனமான ரெப்சோலு –க்குச் சொந்தமான "மேர் டோரிகம்" டேங்கர் 9,65,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெயைக் கொண்டு சென்ற லா பாம்பிலா சுத்திகரிப்பு நிலையத்தில் இச்சம்பவம் நிகழ்ந்து உள்ளது. இக்கசிவு கடல்வாழ உயிரிகளின் இறப்பிற்கு காரணமாக அமைந்தது.

---

2. "தேசிய பெண் குழந்தைகள் நாள்" கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 24 ☑



ஆ) ஜனவரி 25

இ) ஜனவரி 26

ஈ) ஜனவரி 27

✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஜன.24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும். இது இந்தியப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புகளை வழங்குவதற்குமாக கொண்டாடப்படுகிறது.

---

3. சையத் மோடி சர்வதேச போட்டியில் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்ற இந்திய பேட்மிண்டன் வீராங்கனை யார்?

அ) பி வி சிந்து ☑



ஆ) சாய்னா நேவால்

இ) அஷ்மிதா சாலிஹா

ஈ) மாளவிகா பன்சோட்

✓ சையத் மோடி சர்வதேச போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பேட்மிண்டன் வீராங்கனை பிவி சிந்து சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப்போட்டியில் முதல் நிலை வீராங்கனையான சிந்து 21–13, 21–16 என்ற செட் கணக்கில் மாளவிகா பன்சோட்டை தோற்கடித்தார்.

✓ சையத் மோடி சர்வதேச போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியானது, இறுதிப்போட்டியாளர்களில் ஒருவருக்கு COVID பாசிட்டிவ் என அறிவிக்கப்பட்டதால், 'போட்டி இல்லை' என அறிவிக்கப்பட்டது.

---

4. சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாளை 'தேஷ் நாயக் திவாஸ்' எனக் கொண்டாடுகிற மாநிலம் எது?

அ) மேற்கு வங்காளம் ☑



ஆ) பஞ்சாப்

இ) மகாராஷ்டிரா

ஈ) நாகாலாந்து

✓ கடந்தஆண்டு, S C போஸின் பிறந்தநாளை 'பராக்கிரம திவாஸ்' (வீரத்தின் நாள்) எனக் கொண்டாட மத்திய அரசு முடிவு செய்தது. மேற்கு வங்காளத்தில் அந்த நாள் 'தேஷ் நாயக் திவாஸ்' (தேச நாயகனின் நாள்) என்று அனுசரிக்கப்படும் என்று அம்மாநிலம் அறிவித்தது.

✓ 'நேதாஜி' SC போசின் ஹாலோகிராம் சிலையை இந்தியா கேட்டில் பிரதமர் திறந்து வைத்தார். இந்த ஆண்டு (2022) நேதாஜியின் 125ஆவது பிறந்தநாளாகும்.

---

5. 'G20 மக்கள் காலநிலை வாக்கு–2021 அறிக்கையை' வெளியிட்ட நிறுவனம் எது?

அ) UNFCCC

ஆ) UNDP ☑

இ) UNEP

ஈ) WEF

✓ அண்மையில் ஐநா வளர்ச்சித்திட்டத்தால் (UNDP) வெளியிடப்பட்ட "G20 People's Climate Vote – 2021" என்ற அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள 67 சதவீத இளைஞர்கள் காலநிலை நெருக்கடியை 'உலகளாவிய அவசரநிலை' என்று கருதுகின்றனர்.

✓ அவசரக்கொள்கை உருவாக்கம் மற்றும் மாற்றத்தின் அவசியம் குறித்தும் இளைஞர்கள் குரல் கொடுக்கின்றனர். அதேசமயம், பருவநிலை மாற்றத்தை உலகளாவிய அவசரநிலையாகக்கருதும் வயதுவந்தோருள் இந்தியாவி –ல் 58 சதவீதம் பேர் மட்டுமே உள்ளனர்.

---

6. நேதாஜி ஆராய்ச்சி பணியகத்தால் 2022ஆம் ஆண்டுக் –கான 'நேதாஜி விருது', கீழ்காணும் எந்த முன்னாள் பிரதமருக்கு வழங்கப்பட்டது?

அ) டொனால்டு டிரம்ப்



ஆ) மன்மோகன் சிங்

இ) ஷின்சோ அபே ☑

ஈ) தெரசா மே

✓ சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு நேதாஜி ஆராய்ச்சி பணியகத்தால் 2022 – நேதாஜி விருது வழங்கப்பட்டது. முன்னாள் பிரதமர் சின்சோ அபே சார்பில் கொல்கத்தாவில் உள்ள ஜப்பான் தூதரக அதிகாரி நகாமுரா யுடகா இந்த விருதினைப் பெற்றுக்கொண்டார்.

---

7. பண்டிட் ஜஸ்ராஜுடன் தொடர்புடைய துறை எது?

அ) இலக்கியம்



ஆ) சாஸ்திரிய சங்கீதம் ☑

இ) கதக்

ஈ) ஓவியம்

✓ மேவதி கரானாவைச் சேர்ந்த பண்டிட் ஜஸ்ராஜ் (1930–2020) ஓர் இந்திய பாரம்பரிய பாடகர் ஆவார். சமீபத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பண்டிட் ஜஸ்ராஜ் கலாச்சார அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இது தேசிய பாரம்பரியம், கலை மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

---

8. உலகின் மிகப்பெரிய பவளப்பாறை அமைப்பான 'பெருந்தடுப்புப்பவளப்பாறை' அமைந்துள்ள நாடு எது?

அ) ஆஸ்திரேலியா ☑



ஆ) ரஷ்யா

இ) ஜப்பான்

ஈ) அமெரிக்கா

✓ 'பெருந்தடுப்புப்பவளப்பாறை' என்பது ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய பவளப்பாறை அமைப்பாகும். ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன், 'பெருந்தடுப்புப்பவளப்பாறையைப்' பாதுகாக்க மேலும் ஒரு பில்லியன் ஆஸ்திரேலிய டாலர் நிதியை ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்.

✓ புவிவெப்பமடைதலால் இந்தப் பாறைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக ஆஸி. அரசாங்கம் தெரிவித்துள்ளது.

---

9. எரிசக்தி பாதுகாப்பு குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒத்துழைக்க ஒப்புக்கொண்ட நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) ஆஸ்திரேலியா

இ) இந்தியா

ஈ) ஜப்பான்

✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் ஐரோப்பாவின் எரிசக்தி பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க ஒத்துழைக்க உறுதியளித்தனர்.

✓ உக்ரைனின் எல்லையில் துருப்புக்களை இரஷ்யா பலப்ப–டுத்தியதால் ஏற்பட்ட மோதலுக்கு மத்தியில் அவர்கள் ஒரு கூட்டு ஒத்துழைப்பு அறிக்கையை வெளியிட்டனர். ஐரோப்பிய ஒன்றியம் அதன் எரிவாயு விநியோகத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு ரஷ்யாவைச் சார்ந்துள்ளது.

---

10. நடப்பு 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, உலக எஃகு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு எது?

அ) இந்தியா **ஆ) சீனா ☑**

இ) அமெரிக்கா ஈ) ஆஸ்திரேலியா



✓ உலக எஃகு சங்கத்தின் கூற்றுப்படி, 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் கச்சா எஃகு உற்பத்தி 18% அதிகரித்து 118 மில்லியன் டன்னாக (MT) உள்ளது. இந்தியா 2020'இல் 100.3 MT எஃகு உற்பத்தி செய்து உலகின் இரண்டாவது பெரிய எஃகு உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. சீனா 1064.7 MT எஃகு உற்பத்தி செய்து உலகின் மிகப்பெரிய எஃகு உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. சீனா, 2021இல் 1032.8 MTஆக 3 சதவீதம் சரிவைப் பதிவுசெய்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தொழில்–வணிக பயன்பாட்டுக்கு நிலங்கள்: இணையத்தில் விண்ணப்பிக்கலாம்

தொழில் மற்றும் வணிகப் பயன்பாட்டுக்கு நிலங்களை உபயோகிக்க இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

முன்னதாக, காகிதங்களின் வழியே விண்ணப்பிக்கும் முறை அமலில் இருந்தது. இப்போது இணையதளத்தின் வழி (https://edistricts.tn.gov.in/) விண்ணப்பங்களை பதிவு செய்யலாம். இதற்கென தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

---

2. 1000–ஆவது ஒன் டே ஆட்டத்தில் இந்தியா: மைல் கல்லை எட்டும் முதல் அணி

கிரிக்கெட் விளையாட்டில் ஒன் டே பார்மட்டில் 1000ஆவது ஆட்டத்தில் களம் காணும் சாதனையை படைக்கிறது இந்திய அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒன் டே தொடரின் முதல் ஆட்டத்தில் வரும் 6ஆம் தேதி விளையாடுவதன் மூலம் இந்திய அணி இந்த மைல் கல்லை மகுடமாக தரித்துக்கொள்ள இருக்கிறது.

கடந்த 1974 முதல் ஒன் டே ஆட்டங்களில் பங்கேற்று வரும் இந்திய அணி தொடக்க காலத்தில் தடுமாறினாலும் பிறகு காலப்போக்கில் அந்த பார்மட்டிலும் சிறந்த அணியாக தன்னை உருமாற்றிக் கொண்டது இந்தியா.

ICC ஒன்டே தரவரிசையில் முதலிடம் பிடித்தது, இருமுறை உலகக்கோப்பையை வென்றது என தனது பெருமையை பறைசாற்றிக் கொண்டது. தற்போது 1000ஆவது ஒன் டே ஆட்டத்தில் களம் காணும் முதல் அணி என்ற தனிச் சிறப்பையும் பெறுகிறது.

அந்த ஆட்டத்தில் இந்திய அணியை வழி நடத்தும் கேப்டனாக இருக்கும் பெருமையை ரோகித் சர்மா பெற்றி–ருக்கிறார். ஒன் டே பார்மட் கேப்டனாக அறிவிக்கப்பட்ட பிறகு இந்திய அணியை அவர் வழிநடத்த இருக்கும் முதல் ஆட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டம், உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமா–ன, குஜராத் மாநிலம் அகமதாபாதில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறவிருப்பது கூடுதல் சிறப்பு ஆகும். எனினும், கரோனா சூழல் கட்டுப்பாடு காரணமாக இந்த ஆட்டத்தை காண மைதானத்தில் ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

முதல் ஆட்டம்

கடந்த 1974ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் தேதி இங்கிலாந்துக்கு எதிராக தனது முதல் ஒன் டே ஆட்டத்தை விளையாடிய இந்தியா, அதில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. 2 ஆட்டங்கள் கொண்ட அந்த முதல் தொடரையும் முழுமையாக இழந்தது.

1971

கிரிக்கெட் உலகின் முதல் ஒன் டே ஆட்டம் நடைபெற்றது, 1971ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி. இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகள் மெல்போர்ன் நகரில் மோதிய இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

4000...

ஒன் டே பார்மட் அறிமுகம் செய்யப்பட்டது முதல் இதுவரை, உலக அளவில் 28 அணிகளால் 4000க்கும் அதிகமான ஒன் டே ஆட்டங்கள் விளையாடப்பட்டுள்ளன.

12 அணிகள்...

ICC தரவுப்படி, டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் 12 அணிகளுக்கு தான் 'நிரந்தர ஒன் டே அணி' என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய அணிகளுக்கு தற்காலிக அடிப்படையில் அந்த அந்தஸ்து அளிக்கப்படுகிறது.

---

3. இராமானுஜர் சிலையை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

ஐதராபாத் முச்சிந்தலாவில் 216 அடி உயர இராமானுஜர் சிலையை பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார்.

தெலங்கானா மாநிலம் ஐதராபாதின் புறநகர் பகுதியான ஷம்ஷாபாதில் ₹1,000 கோடி செலவில் மிகப் பிரமாண்டமாய் இராமானுஜருக்கு சிலை அமைக்கப்பட்டு உள்ளது. இச்சிலை தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை மற்றும் துத்தநாகம் என ஐந்து விதமான உலோகங்களின் கலவையான "பஞ்சலோக" சிலையாக நிறுவப்பட்டுள்ளது.

இராமானுஜர் சிற்பம் மேல் கோட்டை மற்றும் ஸ்ரீரங்கம் கோயில்களில் உள்ள இராமானுஜரின் செதுக்கப்பட்ட கல் உருவங்களை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப் –பட்டுள்ளது. இராமானுஜர் இந்தப் பூமியில் 120 வருடங்கள் வாழ்ந்ததை நினைவுகூரும் வகையில் 120 கிலோ தங்கத்தைக்கொண்டு சிலையின் கருவறை அமைக்கப்ப –ட்டுள்ளது. கருவறை தங்கத்தால் செய்யப்பட்டுள்ள அதே நேரத்தில் 216 அடி கொண்ட வெளிப்புறச்சிலை, உட்கார்ந்த நிலையில் உள்ள உயரமான சிலைகளில் ஒன்றாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'சமத்துவத்துக்கான சிலை' என வர்ணிக்கப்படும் இந்தச் சிலையை பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார்.

உட்கார்ந்த நிலையில் தாய்லாந்தில் அமைந்துள்ள 302 அடி உயரம்கொண்ட புத்தர் சிலையே உலகின் மிகப் பெரிய சிலையாக இருந்து வருகிறது. இதற்கடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரிய சிலை என்ற பெருமையை இராமானுஜரின் 216 அடி உயர சிலை பெறவுள்ளது.

இராமானுஜரின் 1000ஆவது பிறந்தநாளைக்கொண்டாடும் வகையில் இந்தச் சிலை அமைக்கும் பணி கடந்த 2014 ஆம் ஆண்டே தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

4. ஜூனியர் உலகக்கோப்பை: 5ஆவது முறையாக இந்தியா சாம்பியன்

14ஆவது ஜூனியர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) வெஸ்ட் இண்டீசில் நடந்து வருகிறது. இதில் ஆன்டிகுவாவில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா–இங்கிலாந்து அணிகள் விளையாடின.

இந்திய அணி 47.4 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ரன்களை சேர்த்து வெற்றி பெற்று கோப்பையை தட்டிச்சென்றுள்ளது. நான்கு முறை கோப்பையை வென்றுள்ள நிலையில், இந்த வெற்றியால் 5ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்று இந்தியா சாதனை படைத்துள்ளது.

---

5. பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்: முதல் தங்கம் வென்றார் தெரஸே ஜோஹாக்

பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் முதல் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார் நார்வே வீராங்கனை தெரஸே ஜோஹாக்.

சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நார்வே கிராஸ் கண்ட்ரி ஸ்கையர் தெரஸே ஜோஹாக் 15 கிமீ ஸ்கையத்லானில் இப்போட்டியின் முதல் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். கடும் காற்று மற்றும் குளிரையும் பொருள்படுத்தாமல் ஜோஹாக் சிறப்பாக செயல்பட்டு முதல் தங்கத்தை வென்றார்.

பிரான்ஸின் போ குயின்டின், ரஷியாவின் லேட்டிபோவ் முறை வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

மகளிர் ஸ்பீட்ஸ்கேட்டிங் 3000 மீ பிரிவில் டச்சு வீராங்கனை ஐரீன் சௌடென் தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். இதன்மூலம் ஜெர்மன் வீராங்கனையின் கிளாடியா பெச்ஸ்டென் 20 ஆண்டுகால சாதனையையும் முறியடித்தார்.

---

6. லதா மங்கேஷ்கர் காலமானார்

பழம்பெரும் திரைப்படப் பாடகி லதா மங்கேஷ்கர் இன்று (06–02–2022) காலமானார்.

லதா மங்கேஷ்கர் தனது 13ஆம் வயதில் பாடல்கள் பாடத் தொடங்கினார். 1942இல் முதல் பாடலைப் பதிவுசெய்தார். பல்வேறு மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார். தமிழில் வளையோசை உள்ளிட்ட நிறைய பாடல்களைப் பாடியுள்ளார்.

இவர் 1969இல் பத்ம பூஷண், 1999இல் பத்ம விபூஷண், 2001இல் 'பாரத் ரத்னா' விருதுகளைப் பெற்றுள்ளார். திரைத்துறையின் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே விருதையும்' இவர் பெற்றுள்ளார்.

---

1. 2022 ஆசிய கோப்பையில் இந்திய பெண்கள் ஹாக்கி அணி பிடித்த இடம் எது?

அ) முதலாவது

ஆ) இரண்டாவது



இ) மூன்றாவது ☑

ஈ) நான்காவது

✓ இந்திய மகளிர் ஹாக்கி அணி, முன்னாள் சாம்பியனான சீனாவை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது. சவிதா புனியா தலைமையிலான அணி ஆசிய கோப்பையை தக்கவைக்க தவறினாலும், வெண்கலப் பதக்கத்துடன் திரும்பியது. மலேசியாவை 9–0 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்திய இந்திய மகளிர் அணி, ஆசிய விளையாட்டு சாம்பியனான ஜப்பானுக்கு எதிராக 0–2 என்ற புள்ளிக் கணக்கில் தோல்வியைத் தழுவியது.

✓ சிங்கப்பூர் அணியை 9–1 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. அரையிறுதிப்போட்டியில் கொரியாவிடம் தோல்வியடைந்தது. தென்கொரியாவை வீழ்த்தி ஜப்பான் ஆசிய கோப்பையை வென்றது.

---

2. Hwasong–12என்ற நடுத்தரமான எறிகணையை ஏவிய நாடு எது?

அ) சீனா

ஆ) ஜப்பான்



இ) வட கொரியா ☑

ஈ) தென் கொரியா

✓ 'Hwasong–12' என்ற நடுத்தரமான எறிகணையை தாம் ஏவியதை வடகொரியா உறுதிப்படுத்தியுள்ளது. 2017ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த அளவிலான ஆயுதத்தை வட கொரியா சோதனை செய்வது இதுவே முதல்முறை.

✓ ஜப்பானும் தென்கொரியாவும் இந்த நடுத்தர தொலைவு பாயக்கூடிய எறிகணை ஏவப்பட்டதைக் கண்டறிந்துள்ளன. இது வடகொரியாவால் இம்மாதம் மேற்கொள்ளப்பட்ட ஏழாவது ஆயுதப்பரிசோதனையாகும்.

---

3. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் புவி பூங்காவை அமைப்பதற்கு இந்திய புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது?

அ) மகாராஷ்டிரா

ஆ) கோவா



இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) தெலுங்கானா

✓ இந்தியாவின் முதல் புவிசார் பூங்காவை மத்திய பிரதேச மாநிலத்தில் நர்மதா நதிக்கரையில் உள்ள லாம்ஹெட்டா கிராமத்தில் அமைக்க இந்திய புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது. புவிசார் பூங்கா என்பது ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்; இது, புவியியல் பாரம்பரியத்தை நிலையான வழியில் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்தத் தளம் ஏற்கனவே யுனெஸ்கோ புவி பாரம்பரிய தளங்களுக்கான தற்காலிக பட்டியலில் இடம்பெற்றுள்ளது. ஜபல்பூரின் பெடகாட்–லமேட்டா காட் பகுதியில் உள்ள நர்மதா பள்ளத்தாக்கில் பல தொன்மாக்களின் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

---

4. 'இந்தியாவில் மரணதண்டனை' குறித்த அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) தேசிய குற்ற ஆவணக்காப்பகம்

ஆ) தேசிய சட்டப் பல்கலைக்கழகம் ☑

இ) NITI ஆயோக்

ஈ) உச்சநீதிமன்றம்

✓ தில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் உள்ள குற்றவியல் சட்டச் சீர்திருத்தங்களுக்கான வழக்கறிஞர் குழுவால் (திட்டம் 39A) "இந்தியாவில் மரணதண்டனை" குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

✓ இவ்வறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டின் இறுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 488 ஆக இருந்தது. இது 17 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இது கடந்த 2020 இலிருந்து ஏறக்குறைய 21% அதிகரிப்பு ஆகும்.

---

5. இந்திய ரிசர்வ் வங்கியால் நடத்தப்படும் 'VRR ஏலத்தில்' VRR என்பதன் விரிவாக்கம் என்ன?

அ) Variable Rate Repo ஏலம் ☑



ஆ) Virtual Reality Repo ஏலம்

இ) Viable Rate Repo ஏலம்

ஈ) Vernacular Region Repo ஏலம்

✓ 'VRR ஏலம்' என்பது "Variable Rate Repo" ஏலத்தைக் குறிக்கிறது. ரெப்போ என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களின் விகிதமாகும். அதன் ஒருபகுதி நிலையான விகிதத்திலும் சிலபகுதிகள் மாறி விகிதத்திலும் உள்ளன.

✓ இந்திய ரிசர்வ் வங்கி ₹75,000 கோடிக்கு பணப்புழக்கம் சரிசெய்தல் வசதியின்கீழ் ஒரே இரவில் மாறி விகித ரெப்போ ஏலத்தை நடத்துவதாகக் கூறியது. ஜன.20ஆம் தேதி, RBI ₹50,000 கோடிக்கு ஒரே இரவில் மாறி விகித ரெப்போ (VRR) ஏலத்தை நடத்தியது.

---

6. 'நஜாப்கர் ஜீல்' என்பது எந்த இருமாநிலங்களுக்கு இடையே உள்ள எல்லைதாண்டிய ஈரநிலமாகும்?

அ) தில்லி–உத்தரபிரதேசம்

ஆ) தில்லி–ஹரியானா ☑



இ) உத்தரபிரதேசம்–உத்தரகாண்ட்

ஈ) உத்தரபிரதேசம்–பீகார்

✓ 'நஜாப்கர் ஜீல்' என்பது தில்லிக்கும் ஹரியானாவுக்கும் இடையே உள்ள ஓர் எல்லைதாண்டிய ஈரநிலம் ஆகும்.

✓ தேசிய பசுமை தீர்ப்பாயம் முன்னதாக ஹரியானா மற்றும் தில்லிக்கு சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை தயாரிக்க உத்தரவிட்டிருந்தது. நஜாப்கர் ஜீலின் புத்துயிர் மற்றும் பாதுகாப்பிற்காக இரு அரசாங்கங்களும் தயாரித்து உள்ள சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்களை

அமல்படுத்துமாறு தில்லி மற்றும் ஹரியானாவுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

---

7. "டேவிட் நட்சத்திரம் & அசோக சக்கரம்" ஆகியவை கீழ்காணும் எவ்விரு நாடுகளின் நினைவுச்சின்னத்தில் காணப்படுகின்றன?

அ) இந்தியா–அமெரிக்கா

ஆ) இந்தியா–UK



இ) இந்தியா–இஸ்ரேல் ☑

ஈ) இந்தியா–ஆஸ்திரேலியா

✓ இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய இருநாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகளை ஏற்படுத்தி 30 ஆண்டுகள் நிறைவைதைக் குறிக்கும் வகையில் ஒரு நினைவுச் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நினைவுச் சின்ன –த்தில் 'டேவிட் நட்சத்திரமும் அசோக சக்கரமும்' உள்ளன. இவை இருநாடுகளின் தேசியக்கொடிகளில் இடம்பெறும் இரண்டு சின்னங்களாகும்.

✓ இருதரப்பு உறவுகளின் 30ஆவது ஆண்டு நிறைவைச் சித்தரிக்கும் எண் 30'ஐ உருவாக்கும் வகையில் இது உள்ளது. 1992ஆம் ஆண்டு ஜன.29 அன்று இஸ்ரேலும் இந்தியாவும் தூதரக உறவுகளை ஏற்படுத்திக்கொண்டன.

---

8. 2022 – தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Sustainable Tourism



ஆ) Rural & Community Centric Tourism ☑

இ) Gender – Neutral Tourism

ஈ) Child Friendly Tourism

✓ சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் பொருளாதாரத்தில் அதன் தாக்கம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.25 அன்று நாடு முழுவதும் 'தேசிய சுற்றுலா நாள்' கொண்டாடப்படுகிறது.

✓ இந்த ஆண்டு, சுற்றுலா அமைச்சகம் 'அமுதப் பெருவிழா' என்ற பெயரில் தேசிய சுற்றுலா நாளை அனுசரிக்கிறது. "Rural and Community Centric Tourism" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

9. 'CHIRU–2Q22' என்பது கீழ்காணும் எந்தெந்த நாடுகள் மேற்கொள்ளும் கூட்டுக்கடற்படைப்பயிற்சியாகும்?

அ) சீனா–ரஷ்யா



ஆ) சீனா–ரஷ்யா–ஈரான் ☑

இ) சீனா–ரஷ்யா–இஸ்ரேல்

ஈ) சீனா–ரஷ்யா–இந்தியா

✓ 'CHIRU–2Q22' என்ற கூட்டுப் பயிற்சியில் சீனா–ரஷ்யா–ஈரான் நாட்டுக் கடற்படைகள் பங்கேற்கின்றன. இந்த ஒத்திகையில் பங்கேற்பதற்காக ஓமன் வளைகுடாவுக்கு தனது 'உரும்கி' என்ற கடற்படை ஏவுகணை அழிக்கும் கப்பலை அனுப்பியுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

✓ சீன அரசு உலங்கூர்திகளையும் கடற்படை வீரர்களையும் பயிற்சிக்கு அனுப்பியுள்ளது. ரஷ்யா தனது பசிபிக் கடற் படையின் பணிக்குழுவை அனுப்பியது. அதில் 'நகிமோவ்' ஏவுகணை கப்பல் வர்யாக் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பலான அட்மிரல் ட்ரிபட்ஸ் ஆகியவை அடங்கும். இந்தப் பயிற்சிகள் மத்தியதரைக்கடல் மற்றும் ஓகோட்ஸ்க் கடல்களில் நடத்தப்படுகின்றன.

---

10. ICC'இன் 'சிறந்த கிரிக்கெட் வீராங்கனை' விருதை வென்ற இரண்டாவது வீராங்கனை யார்?

அ) மிதாலி ராஜ்



ஆ) ஸ்மிருதி மந்தனா ☑

இ) ஹர்மன்ப்ரீத் கவுர்

ஈ) ஷபாலி வர்மா

✓ இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 2021ஆம் ஆண்டிற்கான ICCஇன் 'சிறந்த கிரிக்கெட் வீராங்கனை'யாக தேர்வு செய்யப்பட்டார். அவர் 'ரேச்சல் ஹெய்ஹோ பிளின்ட் கோப்பைக்கான' இறுதிப்பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார்.

✓ 2007ஆம் ஆண்டு ICC'இன் சிறந்த வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த வேகப்பந்து வீச்சாளர் ஜூலன் கோஸ்வாமியைத் தொடர்ந்து ஐசிசி விருதைப்பெறும் 2ஆவது இந்திய வீராங்கனையாக ஸ்மிருதி மந்தனா உள்ளார். இங்கிலாந்து கேப்டன் ரூட், கடந்த 2021ஆம் ஆண்டிற்கான ICCஇன் சிறந்த டெஸ்ட்கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் 2021ஆம் ஆண்டிற்கான ICC 'ODI கிரிக்கெட்டராக' தேர்வு செய்யப்பட்டார்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஒரே தவனையாக செலுத்தக்கூடியா 'ஸ்புட்னிக் லைட்' தடுப்பூசிக்கு மத்திய அரசு அவசரகால அனுமதி

கரோனா வைரஸுக்கு எதிரான ஒரே டோஸில் செலுத்திக் கொள்ளும் வகையிலான ஸ்புட்னிக் லைட் தடுப்பூசிக்கு மத்திய அரசு அவசரகால பயன்பாட்டுக்கான அனுமதியை வழங்கியுள்ளது. இது நாட்டில் பயன்பாட்டுக்கு வரும் 9ஆவது தடுப்பூசியாகும்.

ரஷ்ய நாட்டுத் தயாரிப்பான ஸ்புட்னிக் லைட் தடுப்பூசியை இந்தியாவில் பெற்று விநியோகிக்கிறது ஹைதராபாத்தின் Dr ரெட்டிஸ் லேப் ரஷ்ய நிறுவனம் ஸ்புட்னிக் V என்ற தடுப்பூசியையும் இந்தியாவுக்கு விநியோகித்துள்ளது. அதுவும் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் அது இரண்டு டோஸ்கள் கொண்டது. ஸ்புட்னிக் லைட் சிங்கிள் டோஸ் தடுப்பூசி. இந்தத் தடுப்பூசியை மற்ற தடுப்பூசிகளை செலுத்தியவர்களுக்கு இரண்டாவது டோஸாகப் பயன்படுத்துவது பற்றியும் ரெட்டிஸ் லேப் கிளினிக்கல் பரிசோதனைகளை முடித்து டிசிஜிஐயில் அறிக்கையை தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் ஊசியில்லா தடுப்பூசியான ஜைக்கோவ் டி தடுப்பூசியும் பயன்பாட்டுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. சைகோவ்–டி தடுப்பூசி அவசரகால பயன்பாட்டிற்கு

உபயோகிக்க கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்திய மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்தது.

இந்த தடுப்பூசி உலகின் முதல் பிளாஸ்மிட் டி என் ஏ வகை தடுப்பூசி ஆகும். இந்தத் தடுப்பூசியை முத்தவணைகளாக செலுத்தவேண்டும். ஊசிக்கு அச்சம் கொண்டவர்களுக்கு இந்த வகை தடுப்பூசி ஒரு நல்லதீர்வு எனக் கூறப்படுகிறது. ஸ்ப்ரிங் உதவியுடன் தோலில் இவ்வூசி செலுத்தப்படுகிறது.

---

2. டாடா ஓபன்: போபண்ணா–ராம்குமார் சாம்பியன்

TATA ஓபன் ATP டென்னிஸ் போட்டி இரட்டையர்பிரிவில் இந்தியாவின் ரோகன் போபண்ணா–ராம்குமார் இராமநாதன் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

மகாராட்டிர மாநிலம் புனேயில் TATA ஓபன் ATP போட்டிக –ள் நடந்து வருகின்றன. இதன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டம் ஞாயிறன்று நடைபெற்றது. முதல்நிலை இணையான ஆஸ்திரேலியாவின் லூக் சவிலே–ஜான் பேட்ரிக்கை எதிர்கொண்டது இந்திய இணை.

முதல் செட்டை கடும் போராட்டத்துக்கு இடையே 6–7 என இழந்தனர் போபண்ணா–ராம்குமார். 2ஆவது செட்டை 6–3 என எளிதாக கைப்பற்றிய நிலையில், மூன்றாவது செட்டில் இரு இணைகளும் கடுமையாக மோதின. இறுதியில் அந்த செட்டை 10–6 என கைப்பற்றி சாம்பியன் பட்டத்தையும் வென்றது இந்திய இணை.

இது போபண்ணாவுக்கு 21ஆவது ஏடிபி இரட்டையர் பட்டமாகும். ஏற்கெனவே 2019'இல் திவிஜ் சரணுடன்–போபண்ணா இப்பட்டத்தை கைப்பற்றினார்.

---

3. விவேகானந்தர் நாடு திரும்பிய 125ஆவது ஆண்டு தினம்:

அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய சுவாமி விவேகானந்தர், பின்னர் இந்தியா திரும்பிய 125ஆவது ஆண்டு விழா நேற்று (06–02–2022) கொண்டாடப்பட்டது.

---

4. ஆசியாவின் மிகப்பெரிய அனிமேஷன் சிறப்பு மையம் பெங்களூருவில் திறப்பு

ஆசியாவின் மிகப்பெரிய அனிமேஷன், விஷூவல் எபெக்ட்ஸ், கேமிங், காமிக்ஸ் (AVGC) ஆகியவற்றுக்கான சிறப்பு மையம் பெங்களூருவில் திறக்கப்பட்டது.

கர்நாடக அரசு சார்பில் பெங்களூருவில் உள்ள ஒயிட் பீல்டில் அனிமேஷன், விஷூவல் எஃபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ் (AVGC) ஆகியவற்றுக்கான மிகப்பெரிய சிறப்பு மையத்தை தகவல் தொழில்நுட்ப, உயிரி தொழில் நுட்ப அமைச்சர் அஸ்வத் நாராயண் திறந்துவைத்தார்.

தற்போது திறக்கப்பட்டுள்ள இந்தச் சிறப்பு மையமானது டிஜிட்டலில் ஆக்கப்பூர்வமான தொழில்கள் தொடங்க வாய்ப்பை ஏற்படுத்தி தரும். இந்த மையத்தில் விர்ச்சுவல் (மெய்நிகர்) ரியாலிட்டி, டிஜிட்டல் கம்ப்ரஷன், போட்டோகிராமெட்ரி, கல்வியின் கேமிஃபிகேஷன், நிகழ் நேர மெய்நிகர் உற்பத்தி, பிற வளர்ந்துவரும் தொழில் நுட்பங்கள் குறித்து தனித்துவமான படிப்புகளை வழங்கும் பள்ளியும் இடம்பெற்றுள்ளது.

---

1. டாக்கா சர்வதேச திரைப்பட விழாவில் 'சிறந்த திரைப் படத்திற்கான' விருதை வென்ற இந்திய திரைப்படம் எது?

அ) கூழாங்கல் ☑



ஆ) ஜெய் பீம்

இ) நிமிர்

ஈ) அண்ணாத்த

✓ 20ஆவது டாக்கா சர்வதேச திரைப்பட விழாவில் ஆசிய திரைப்படப் போட்டிப் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த 'கூழாங்கல்' என்ற படம் 'சிறந்த திரைப்படத்திற்கான' விருதை வென்றது. தமிழ்நாட்டைச்சார்ந்த PS வினோத் ராஜ் இந்தப்படத்தை இயக்கியிருந்தார்.

✓ 'சிறந்த நடிகருக்கான' விருதை ரஞ்சித் சங்கர் இயக்கிய சன்னி படத்திற்காக ஜெயசூர்யா பெற்றார். சிறந்த உரை எழுத்தாளர் விருதை இந்திய-வங்காளதேசம் படமான மயர் ஜோஞ்சலுக்காக இந்திரனில் ராய்சௌத்ரி மற்றும் சுகதா சின்ஹா ஆகியோர் பெற்றனர்.

✓ ஜமி பருவா இயக்கிய செம்கோர் திரைப்படத்திற்கு சிறப்பு பார்வையாளர் விருது வழங்கப்பட்டது. 17 விருதுகளில் 4 விருதுகளை இந்தியா வென்றுள்ளது.

---

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'UNCITRAL' என்ற ஐநா நிறுவனத்துடன் தொடர்புடைய துறை எது?

அ) குழந்தைகள் நலன்

ஆ) பருவநிலை மாற்றம்

இ) திவால் நிலை ☑

ஈ) பாரம்பரியம்

✓ சர்வதேச வாணிபச் சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஆணையத்தின் (UNCITRAL) எல்லைதாண்டிய திவால் நிலைக்கான மாதிரிச் சட்டம் (1997) என்பது எல்லை தாண்டிய திவால்நிலை குறித்த மிகவும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சட்டக்கட்டமைப்பாகும்.

✓ பொருளாதார ஆய்வானது சிலமாற்றங்களுடன் UNCITRAL சட்டத்தை ஏற்றுக்கொள்ள பரிந்துரைக்கிறது. சிங்கப்பூர், UK, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா மற்றும் கொரியா போன்ற 49 நாடுகள் இதை ஏற்றுக்கொண்டுள்ளன. திவால்நிலை சட்டக்குழுவும் UNCITRAL'ஐ ஏற்றுக்கொள்ள பரிந்துரைத்துள்ளது.

---

3. 'Services e-Health Assistance and Teleconsultation (SeHAT)' என்ற முன்னெடுப்பைத் தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?



அ) பாதுகாப்பு அமைச்சகம் ☑

ஆ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

இ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ நடுவண் பாதுகாப்பு அமைச்சகமானது 'Services e-Health Assistance and Teleconsultation (SeHAT)' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது படைவீரர்கள் மற்றும் ராணுவ வீரர்களுக்கு மருந்துகளை வீட்டுக்கே சென்று தருவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இத்திட்டம் முதன்முதலில் தில்லியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது முப்படைகளின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இணையவழி மருத்துவ ஆலோசனை சேவையையும் வழங்குகிறது.

---

4. "வயம் ரக்ஷமா" அல்லது "நாங்கள் பாதுகாக்கிறோம்" என்பது எந்த ஆயுதப்படையின் குறிக்கோளாகும்?

அ) இந்திய கடலோரக் காவல்படை ☑

ஆ) இந்தோ-திபெத்திய காவல்படை



இ) அஸ்ஸாம் சென்டினல்ஸ்

ஈ) எல்லைப் பாதுகாப்புப் படை

✓ இந்திய கடலோரக் காவல்படை அதன் 46ஆவது உதய நாளை 2022 பிப்ரவரி.1 அன்று கொண்டாடியது. இது "வயம் ரக்ஷமா" அல்லது "நாங்கள் பாதுகாக்கிறோம்" என்ற குறிக்கோளுடன் உலகின் நான்காவது பெரிய கடலோர காவல்படையாக விளங்குகிறது.

✓ இந்திய கடலோரக்காவல்படையானது 7 இயங்குதளங்க -ளுடன் 1978'இல் தொடங்கப்பட்டது. இது, 2025ஆம் ஆண்டிற்குள் 80 வானூர்திகள் & 200 இயங்குதளங்கள் என்ற இலக்கை அடைய எண்ணம் கொண்டுள்ளது.

---

5. US FDA'இடமிருந்து முழு அனுமதி பெற்ற 'Spikevax', எந்த மருந்து நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது?

அ) பைசர்

ஆ) மாடர்னா ☑



இ) ஜான்சன் & ஜான்சன்

ஈ) அஸ்ட்ராசெனெகா

✓ மாடர்னாவின் COVID 19 தடுப்பூசியான 'ஸ்பைக்வாக்ஸ்'ஐ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்குப் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் முழு அனுமதியைத்தந்துள்ளது.

✓ ஆகஸ்டில் அங்கீகரிக்கப்பட்ட பைசரின் COVID தடுப்பூசியா -ன 'Comirnaty'க்குப்பிறகு FDA'இடமிருந்து முழு ஒப்புத -லைப் பெற்ற இரண்டாவது COVID தடுப்பூசி இதுவாகும். அமெரிக்காவில் உரிமம் பெறும் மாடர்னாவின் முதல் தயாரிப்பு இதுவாகும்.

---

6. 'AK 203' என்ற ஒப்பந்தத்தில் எந்த நாட்டுடன் சேர்ந்து இந்தியா கையெழுத்திட்டது?

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா ☑



இ) பிரான்ஸ்

ஈ) இஸ்ரேல்

✓ 'AK 203' இரக துப்பாக்கிகளை இந்தியாவில் தயாரிப்பதற் -காக AK-203 ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, 70,000 துப்பாக்கிகள்கொண்ட முதல் தொகுதியை ரஷ்யா வழங்கியுள்ளது. அமேதி தொழிற்சாலையில் தயாரிக்கப்ப -டும் AK 203 இரக துப்பாக்கிகள் இராணுவத்துக்கு வழங்கப்படும் அதே வேளையில், முதல் தொகுதி விமானப் படையால் பயன்படுத்தப்படவும் வாய்ப்புள்ளது.

✓ இந்தோ–ரஷ்ய ரைபிள்ஸ் பிரைவேட் லிட், அட்வான்ஸ்டு வெபன்ஸ் & எக்யூப்மென்ட் இந்தியா லிட் (முன்னர் OFB) & ரஷிய ரோசோபோரோனெக்ஸ்போர்ட் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு நிறுவனத்தால் இது உற்பத்தி செய்யப்படும்.

---

7. 'பத்ம பூஷன்' விருதை மறுத்த புத்ததேவ் பட்டாச்சார்ஜி, எந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார்?

அ) ஒடிஸா



ஆ) மேற்கு வங்கம் ☑

இ) உத்தர பிரதேசம்

ஈ) பீகார்

✓ இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவர் புத்ததேவ் பட்டாச்சார்ஜி (77) 2022இல் அறிவிக்கப்பட்ட 'பத்ம பூஷன்' விருதை மறுத்துவிட்டார். அவர் 2000 முதல் 2011ஆம் ஆண்டுவரை மே வங்கத்தின் முதலமைச்சராக பணியாற்றினார். பழம்பெரும் பாடகி சந்தியா முகர்ஜியும் தபேலா கலைஞர் அனிந்தியா சட்டர்ஜியும் தங்களின் விருதுகளை பெற மறுத்துவிட்டனர்.

---

8. பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியானது (PMC வங்கி) எந்த வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது?

அ) யூனிட்டி சிறு நிதி வங்கி ☑



ஆ) ஜனா சிறு நிதி வங்கி

இ) ஈக்விடாஸ் சிறு நிதி வங்கி

ஈ) கேரளா வங்கி

✓ பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியை (PMC வங்கி) யூனிட்டி சிறு நிதி வங்கியுடன் (USFBL) இணைக்–கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

✓ USFBL என்பது சென்ட்ரம் நிதியியல் சேவைகள் மற்றும் டிஜிட்டல் பேமெண்ட் தளமான BharatPe ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு நிறுவனமாகும். PMC வங்கியின் அனைத்து கிளைகளும் USFBL'இன் கிளைகளாக உடனடியாக செயல்படும்.

---

9. 2021 – ஊழல் புலனாய்வுக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ) 64



ஆ) 75

இ) 85 ☑

ஈ) 101

✓ 2021ஆம் ஆண்டின் ஊழல் புலனாய்வுக் குறியீட்டில், 180 நாடுகளில் இந்தியா 85ஆவது இடத்தில் உள்ளது. இந்தக் குறியீட்டை 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' வெளியிடுகிறது. இது 180 நாடுகள் மற்றும் பிரதேசங்களை அவற்றின் பொதுத்துறை ஊழல் அளவுகளின் அடிப்படை–யில் தரவரிசைப்படுத்துகிறது.

✓ 0 முதல் 100 வரையிலான மதிப்பெண்ணில், '0' என்பது அதிக ஊழல் மிகுந்திருப்பதையும் '100' என்பது ஊழல் மிகவும் குறைவாக இருப்பதையும் கூறுகிறது.

✓ இதில் இந்தியாவின் மதிப்பெண் 40 ஆகும். இவ்வறிக்கை இந்தியாவின் ஜனநாயக நிலை குறித்த கவலையையும் எழுப்பியுள்ளது.

---

10. "மன்யம் மற்றும் அல்லூரி சீதாராம ராஜு" ஆகியவை எந்த மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பழங்குடியின மாவட்டங்களாகும்?

அ) கர்நாடகா



ஆ) ஆந்திர பிரதேசம் ☑

இ) தெலுங்கானா

ஈ) மத்திய பிரதேசம்

✓ **ஆந்திர பிரதேசம் 'AP மாவட்டங்கள் உருவாக்கும் சட்டம், பிரிவு 3(5)'இன்கீழ் 13 புதிய மாவட்டங்களைப் பெறுகிறது என ஆந்திர பிரதேசம் அறிவித்துள்ளது.**

✓ **ஆந்திர பிரதேசத்தில் உள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை இதன்மூலம் 26ஆக உயர்ந்துள்ளது. 'மன்யம்' மற்றும் 'அல்லூரி சீதாராம ராஜு' என்னும் பழம் பெரும் தெலுங்கு விடுதலைப் போராட்ட வீரரின் பெயரால் இந்த இரண்டு புதிய பழங்குடி மாவட்டங்களுக்கும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 07–02–2022 – தேவநேயப்பாவாணரின் 120ஆவது பிறந்தநாள்.

---

2. ஜேஎன்யு முதல் பெண் துணைவேந்தராக முன்னாள் மாணவர் சாந்திஸ்ரீ பண்டிட் நியமனம்!

தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் சாந்திஸ்ரீ பண்டிட் முதல் பெண் துணைவேந்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிரத்தில் உள்ள சாவித்ரிபாய் பூலே பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்து வரும் சாந்திஸ்ரீ பண்டிட் (59) தற்போது தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (ஜேஎன்யு) துணைவேந்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய கல்வித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

2. சேதி தெரியுமா?

ஜன.29: 2019–20ஆம் நிதியாண்டில் தேசியக் கட்சிகளின் சொத்துக் கணக்கு அடிப்படையில் பாஜக ரூ. 4,874 கோடி சொத்துகளுடன் முதலிடத்தில் உள்ளது.

ஜன.30: சீனாவில் 'நியோகோவ்' என்கிற புதிய கரோனா வைரஸ் வகை வெளவால்களிடம் மட்டும் கண்டறியப்பட்டுள்ளது.

ஜன.30: ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ஸ்பெயினின் ரபேல் நடால் வென்றார். இதன்மூலம் 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று நடால் சாதனை புரிந்தார்.

ஜன.31: சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரியை தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்தது.

பிப்ரவரி.1: மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் 2022–23ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

பிப்ரவரி.2: 'நட்சத்திரவாசிகள்' நாவலுக்காக 2021–ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி யுவ புரஸ்கார் விருது கார்த்திக் பாலசுப்ரமணியனுக்கு அறிவிக்கப்பட்டது.

பிப்ரவரி.3: நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரும் தமிழக அரசின் சட்ட மசோதாவை ஆளுநர் RN ரவி, சபாநாயகருக்குத் திருப்பி அனுப்பினார்.

பிப்ரவரி.4: பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுஜிசி) தலைவராக ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எம்.ஜெகதேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிப்ரவரி.4: தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட 74,416 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

பிப்ரவரி.5: நீட் தேர்வு விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்க சட்டப்பேரவை அனைத்துக் கட்சி கூட்டத்தைத் தமிழக அரசு கூட்டியது.

1. இந்தியாவின் முதல் பெண் ரபேல் போர் விமானி யார்?



அ) ஷிவாங்கி சிங் ☑

ஆ) பாவனா காந்த்

இ) மோகனா சிங்


ஈ) அவனி சதுர்வேதி

✓ நாட்டின் முதல் பெண் ரபேல் போர்விமானி ஷிவாங்கி சிங் குடியரசு தின அணிவகுப்பில் இந்திய விமானப்படையின் அலங்கார ஊர்தியில் பங்கேற்றார்.

✓ கடந்த ஆண்டு பிளைட் லெப்டினன்ட் பாவனா காந்த், IAF அலங்கார ஊர்தியின் ஒருபகுதியாக இருக்கும் முதல் பெண் போர் ஜெட் விமானி ஆனார். ஷிவாங்கி சிங், IAF அலங்கார ஊர்தியில் ஓர் அங்கமாக விளங்கும் 2ஆவது பெண் போர் ஜெட் விமானி ஆனார்.

---

2. இந்தியாவின் முதல் 'கிராபீன் புத்தாக்க மையத்தை' அமைப்பதற்கான எந்த மாநில அரசின் திட்டத்திற்கு MeiTY ஒப்புதல் அளித்துள்ளது?



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑

இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இந்தியாவின் முதலாவது 'கிராபீன் புத்தாக்க மையத்தை' அமைப்பதற்கு கேரள மாநில அரசுக்கு ஒப்புதலளித்துள்ளது.

✓ கேரள மாநில அரசு நடத்தும் கேரள டிஜிட்டல் பல்கலை, CMET–திருச்சூர் உடன் இணைந்து, 'கிராபீன் இந்தியா புத்தாக்க மையம்', R&D அடைவு மையத்தை அமைக்க உள்ளது. கேரள அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் இதற்கு, TATA ஸ்டீல் லிட் தொழிற்துறை பங்குதாரராக இருக்கும். கிராபீன் என்பது உலகின் மிகமெல்லிய மற்றும் வலிமையான பொருளாகும்.

---

3. உலகின் மிகப்பெரிய கடல் மடையான இஜ்முய்தீன் கடல் மடையை திறந்த நாடு எது?



அ) அமெரிக்கா

ஆ) நெதர்லாந்து ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) இந்தியா

✓ டச்சு மன்னர் வில்லெம்–அலெக்சாண்டர் அதிகாரப்பூர்வ –மாக இஜ்முய்தீன் கடல் மடையைத் திறந்து வைத்தார். இது உலகின் மிகப்பெரிய கடல் மடை என்று கூறப்படுகிறது. வடகடல் கால்வாயை ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்துடன் இணைக்கும் துறைமுக நகரமான இஜ்முய்தீனில் 500–மீட்டர் நீளமும் 70–மீட்டர் அகலமும் கொண்ட இந்த மடை அமைக்கப்பட்டுள்ளது.

✓ இந்த மடை ஆழமாக இருப்பதால் கப்பல்கள் கால்வாயில் நுழைவதற்கு சாதகமான நீர்மட்டத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை.

---

4. 'மூலதனப்பொருட்கள் துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கான திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) எஃகு அமைச்சகம்

ஆ) கனரக தொழில்துறை அமைச்சகம்

இ) ஜவுளி அமைச்சகம்

ஈ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑

✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் மூலதனப் பொருட்கள் துறையில் போட்டித்தன்மையை மேம்படுத்து –வதற்கான திட்டத்தின் 2ஆம் கட்டத்தை அறிவித்தது. இத் திட்டம் ₹1,207 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிவிக்கப்பட்டது.

✓ இதில் ₹975 கோடியை அரசாங்கத்தின் பட்ஜெட் மூலமும் மீதமுள்ள ₹232 கோடி தொழில்துறை பங்களிப்பு மூலமும் பெறப்படும்.

---

5. 'உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 25

ஆ) ஜனவரி 30 ☑

இ) பிப்ரவரி 1

ஈ) பிப்ரவரி 3

✓ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, ஒவ்வோர் ஆண்டும் ஜன.30 அன்று 'உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள்' அனுசரிக்கப்படுகிறது. "Achieving health equity to end the neglect of poverty–related diseases" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில்வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

✓ சிக்குன்குனியா, டெங்கு, தொழுநோய் மற்றும் ரேபிஸ் போன்றவை புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்க –ளுக்கான சில எடுத்துக்காட்டுகள். இவ்வகை நோய்கள் உலகளவில் 1 பில்லியன் மக்களைப் பாதிக்கின்றன.

---

6. 'ஆல்பர்ட் ஏரி', எந்த இருநாடுகளுக்கு இடையேயான எல்லையாக அமைந்துள்ளது?

அ) உகாண்டா–காங்கோ மக்களாட்சிக் குடியரசு ☑



ஆ) அல்ஜீரியா–லிபியா

இ) தென்னாப்பிரிக்கா – தான்சானியா

ஈ) உகாண்டா – எத்தியோப்பியா

✓ 2 மிகப்பெரும் எண்ணெய் நிறுவனங்களான பிரான்சின் டோட்டல் எனர்ஜிஸ் மற்றும் சீனா நேஷனல் ஆஃப்ஷோர் ஆயில் கார்ப்பரேஷன் ஆகியன உகாண்டாவின் எரிசக்தி வளங்களை மேம்படுத்துவதற்கும் பிராந்திய எண்ணெய் குழாய் அமைப்பதற்கும் 10 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

✓ உகாண்டாவிற்கும் காங்கோ மக்களாட்சிக் குடியரசிற்கும் இடையே 160 கிமீட்டர் இயற்கை எல்லையான ஆல்பர்ட் ஏரியிலுள்ள கச்சா எண்ணெய் இருப்புக்களை எடுப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

7. பாஸ்சிம் லெகர் என்பது எந்த நாடு நடத்திய கூட்டு பாதுகாப்புப் பயிற்சியாகும்?

அ) நேபாளம்



ஆ) இந்தியா ☑

இ) பங்களாதேஷ்

ஈ) மியான்மர்

✓ 'பாஸ்சிம் லெகர்' என்ற பெயரில் கடற்படையின் மேற்கு மண்டலக்கட்டுப்பாட்டு மையம் மேற்கொண்ட கூட்டுக் கடல்சார்பயிற்சி 2022 ஜன.25 அன்று நிறைவடைந்தது.

✓ இந்திய கடற்படை, வான்படை, இராணுவம் & கடலோரப் பாதுகாப்புப்படைகள் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்ப –தற்காகவும், தனது செயல்பாட்டுத் திட்டங்களை மதிப்பிடு –வதற்காக இந்திய கடற்படையின் மேற்கு மண்டலக் கட்டுப்பாட்டு மையம் இக்கூட்டுப்பயிற்சியை 20 நாட்கள் நடத்தியது.

---

8. 'டிரோன் சான்றளிப்புத் திட்டத்தை' வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்



ஆ) சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் ☑

இ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

✓ மத்திய உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகமானது குறைந்தபட்ச பாதுகாப்பு மற்றும் தரத்தேவைகளை உறுதி செய்வதற்கும் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற் –குமாக 'டிரோன் சான்றளிப்புத் திட்டத்தை' அறிவித்தது.

✓ தாராளமயமாக்கப்பட்ட டிரோன் விதிகள், 2021'இன்கீழ் வெளியிடப்பட்ட இதன் நோக்கம், டிரோன்களுக்கான பாதுகாப்புத் தேவைகளுக்கான குறைந்தபட்சத் தேவைக –ளை வழங்குவதும், சான்றிதழுக்கான மதிப்பீட்டை செயல்படுத்துவதும் ஆகும்.

✓ தாராளமயமாக்கப்பட்ட டிரோன் விதிகள், 2021, ஆகஸ்ட் 2021'இல் MoCA'ஆல் வெளியிடப்பட்டது.

---

9. UNESCO பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்ட 'கிளிங்கர் படகுகள்' சார்ந்த பகுதி எது?

அ) நோர்டிக் நாடுகள் ☑



ஆ) பால்டிக் நாடுகள்

இ) பால்கன் பகுதிகள்

ஈ) கீழை ஆப்பிரிக்க நாடுகள்

✓ மனிதகுலத்தின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரி –யத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாரம்பரியங்களின் பட்டியலில் UNESCO 'கிளிங்கர் படகுகளை' சேர்த்துள்ளது.

✓ டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் கூட்டாக UNESCO'இடம் இதற்காக நாடின. இது ஒரு நோர்டிக் பாரம்பரியம் ஆகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, பாய்மரப்படகுகள் வட ஐரோப்பாவின் வர்த்தகத்திற்கு உதவியுள்ளன.

---

10. முதல் இந்திய–மத்திய ஆசிய உச்சிமாநாட்டை நடத்திய நாடு எது?

அ) இந்தியா ☑



ஆ) கஜகஸ்தான்

இ) தஜிகிஸ்தான்

ஈ) உஸ்பெகிஸ்தான்

✓ **இந்திய–மத்திய ஆசிய உச்சிமாநாட்டை இந்தியா மெய் நிகர் வடிவத்தில் நடத்தியது. இந்தியாவுக்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முப்பது ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், இந்தியாவும் மத்திய ஆசிய நாடுகளும் ஒரு இலட்சிய பார்வையை வரையறுக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் மோடி வலியுறுத்தினார்.**

✓ **கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஐந்து நாடுகளின் அதிபர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வங்கிக் கணக்கில் மோசடி; வாடிக்கையாளர் பணத்தை மீட்க '155260' ஹெல்ப் லைன் அறிமுகம்: சைபர் கிரைம் போலீஸார் நடவடிக்கை

வங்கிக்கணக்கிலிருந்து வாடிக்கையாளர்களின் பணத்தை நூதனமுறையில் கொள்ளையடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதைத் தடுக்க சைபர் கிரைம் போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதன்படி, '155260' என்ற உதவி எண் சைபர் கிரைம் சார்பில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

---

2. ஆசிய பணக்காரர் பட்டியலில் கவுதம் அதானி முதலிடம்: பின்தங்கினார் ரிலையன்ஸ் தலைவர் முகேஷ் அம்பானி

ஆசிய பணக்காரர்கள் வரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார் தொழிலதிபர் கவுதம் அதானி. தொடர்ந்து முதலிடத்தில் இருந்துவந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி இரண்டாமிடத்துக்கு தள்ளப்பட்டார்.

59 வயதாகும் கவுதம் அதானின் சொத்து மதிப்பு 8,850 கோடி டாலராக உயர்ந்துள்ளது. முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 8,790 கோடி டாலராக உள்ளது.

கவுதம் அதானியின் சொத்து மதிப்பு 1,200 கோடி டாலர் அதிகரித்ததில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்த ஆண்டில் உலகிலேயே அதிகபட்ச வருமானத்தை ஈட்டிய தொழிலதிபர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

நிலக்கரி சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட அதானி நிறுவனம் ஆஸ்திரேலியாவில் நிலக்கரி சுரங்கத்துக்கு பெற்ற அனுமதி பெரும் சர்ச்சைக்குள்ளானது.

பருவநிலை மாறுபாடு விழிப்புணர்வு ஆதரவாளர்கள் பலரும் நிலக்கரி சுரங்கத் தொழில் குறித்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதனால் மரபுசாரா எரிசக்தித் தொழிலில் அதிக கவனம் செலுத்தி வருகிறது அதானி

குழுமம். இது தவிர விமான நிலைய பராமரிப்பு, ராணுவ தளவாட ஒப்பந்த பணி உள்ளிட்ட தொழில்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. கடந்த 2 ஆண்டில் அதானி குழுமபங்குகள் விலை 600% அளவுக்கு அதிகரித்துள்ளன.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி அடுத்த 3 ஆண்டுகளில் பசுமை சார்ந்த எரிசக்திக்கென 1,000 கோடி டாலர் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளார். அதானி அடுத்த 8 ஆண்டுகளில் 7,000 கோடி டாலர் முதலீடு செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

1. இந்தியாவின் முதல் குடிமக்களால் உருவாக்கப்பட்ட மாநில அளவிலான பறவைகள் விவரப்படத்தை வெளியீடு செய்துள்ள மாநிலம் / UT எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா ☑

இ) கர்நாடகா

ஈ) மேற்கு வங்கம்

✓ அண்மையில் வெளியிடப்பட்ட கேரள பறவைகள் அட்லஸ் ஆனது 'ஆசியாவின் மிகப்பெரிய பறவை அட்லஸ்' என்று கூறப்படுகிறது. இந்தியாவிலேயே இதன்வகையில் முதலாவதாக தயார்செய்யப்பட்டுள்ள இந்த மாநில அளவிலான பறவைகள் விவரப்படம், 1000க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களின் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டது.

---

2. புதிய இராம்சர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள கிஜாடியா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்/UT எது?

அ) ஹரியானா



ஆ) பீகார்

இ) குஜராத் ☑

ஈ) உத்தரகாண்ட்

✓ உலக சதுப்பு நில நாளை முன்னிட்டு இரு புதிய இராம்சர் தளங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குஜராத்தில் கிஜாடியா வனவுயிரி சரணாலயம், உபியில் பகீரா வனவுயிரி சரணாலயம் ஆகிய இரண்டு சரணாலயங்கள் ராம்சரில் சேர்க்கப்பட்டுள்ளன.

✓ இந்தியா 10,93,636 ஹெக்டேர் பரப்பளவைக்கொண்ட 49 தளங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது. இது தெற்காசியாவிலேயே மிக அதிகமாகும். மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் ஜஜ்ஜாரில் உள்ள சுல்தான்பூர் தேசியப் பூங்கா மற்றும் பிந்தாவாஸ் வனவுயிரி சரணாலயத்தை ஹரியானாவில் உள்ள இராம்சார் தளங்களாக முன்னர் அறிவித்தது.

---

3. சத்தீஸ்கரின் ஒருங்கிணைப்புடன், 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டைத்'திட்டம் எத்தனை மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தப்படுகிறது?

அ) 15



ஆ) 20

இ) 28

ஈ) 35 ☑

✓ சத்தீஸ்கர் மாநிலம் சமீபத்தில் 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை'த்திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. இதன்கீழ் அந்த மாநில மக்கள் தங்கள் உணவு தானிய ஒதுக்கீட்டை நாடு முழுவதும் உள்ள எந்தவொரு நியாயவிலைக்கடைகளில் இருந்தும் வாங்கிக்கொள்ளலாம்.

✓ சத்தீஸ்கரின் ஒருங்கிணைப்புடன், நாட்டில் உள்ள சுமார் 77 கோடி NFSA பயனாளிகளில் கிட்டத்தட்ட 96.8 சதவீதத்தை உள்ளடக்கிய 35 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இந்தத் திட்டம் இப்போது செயல்பாட்டில் உள்ளது. இதனை உணவு மற்றும் பொது விநியோகத் துறை தெரிவித்துள்ளது.

---

4. தலையில்லா குதிரைக்கருகே புதைக்கப்பட்ட மனிதனி –ன் எலும்புக்கூடு, எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?

அ) ரஷ்யா



ஆ) கிரீஸ்

இ) ஜெர்மனி ☑

ஈ) சீனா

✓ தலையில்லா குதிரைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த மனிதனின் எலும்புக்கூடுகளை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டுபிடித்தனர். தெற்கு ஜெர்மனியில் உள்ள நிட்லிங்கனில் இந்த எலும்புக்கூட்டடின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1400 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி மெரோவிங்கியன் வம்சத்தால் ஆளப்பட்டபோது இம்மனிதனும் குதிரையும் புதைக்கப்பட்டிருக்கவேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

---

5. அண்மையில் IT துறைக்காக பிரத்யேக 'தொழில்நுட்ப பூங்கா'வைத் திறந்த வடகிழக்கு மாநிலம் எது?

அ) அஸ்ஸாம்



ஆ) மேகாலயா ☑

இ) மணிப்பூர்

ஈ) மிசோரம்

✓ மேகாலயா முதலமைச்சர் கான்ராட் கே சங்மா, 'ஷில்லாங் தொழில்நுட்ப பூங்கா'வைச் சமீபத்தில் திறந்துவைத்தார். இதில் பல நிறுவனங்கள் தங்கள் கிளைகளைத் திறக்க ஒப்புதல் அளித்துள்ளன. தற்போது, மேகாலயாவில் 35 வயதுக்குட்பட்டோர் 70 சதவீதம் உள்ளனர். தொழில்நுட்ப பூங்காவின் முதல்கட்டம் நேரடியாக 1,500 பேருக்கு பணி வாய்ப்பை உருவாக்கும். மேலும் மறைமுகமாகவும் இது அதிக வேலைகளை உருவாக்கும்.

---

6. 2021இல் இந்தியாவின் மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) சீனா

இ) நெதர்லாந்து

ஈ) ஜெர்மனி

✓ இந்தியாவின் மின்னணுப்பொருட்களின் ஏற்றுமதி 2021 டிசம்பரில் 1.67 பில்லியன் அமெரிக்க டாலரைத் எட்டியது. இது கடந்த 2020 டிசம்பரில் காணப்பட்ட 1.25 பில்லியன் அமெரிக்க டாலர்களைவிட 33.99% அதிகமாகும்.

✓ கடந்த நிதியாண்டில் மின்னணுப்பொருட்களின் ஒட்டுமொத்த ஏற்றுமதி $11.11 பில்லியன்டாலர்களாக இருந்தது. 2021 ஏப்ரல்–நவம்பரில் இந்திய மின்னணுப் பொருட்களின் முதல் 5 ஏற்றுமதி இடங்கள்: அமெரிக்கா (18%), UAE (16.6%), சீனா (7.6%), நெதர்லாந்து (4.5%) & ஜெர்மனி (4.2%). இந்தியாவின் மின்னணுப் பொருட்கள்

துறை ஏற்றுமதியில் மொபைல் போன்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

---

7. கடந்த பத்தாண்டுகளில் 0.93% என்ற மிகக்குறைந்த வளர்ச்சியைக்கண்ட இந்திய அண்டை நாடு எது?

அ) இலங்கை

ஆ) நேபாளம் ☑



இ) பங்களாதேஷ்

ஈ) மியான்மர்

✓ நேபாளத்தின் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021 இன் ஆரம்பக்கட்ட முடிவுகளின்படி, அந்நாட்டின் மக்கள் தொகை 29,192,480'ஐ எட்டியுள்ளது. இது வெறும் 0.93% வளர்ச்சியாகும். இது கடந்த எண்பதாண்டுங்களில் மிகக் குறைந்த வளர்ச்சியாகும். நேபாளத்தின் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் உலக மக்கள்தொகையின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிடவும் குறைவாக உள்ளது.

✓ நேபாளிகள் வேலைக்காகவும் படிப்புக்காகவும் வெளியில் குடியேறுவதே இதற்குக் காரணமாகும். கடந்த 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பில் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.35 சதவீதமாக இருந்தது.

---

8. "A Little Book of India: Celebrating 75 years of Independence" என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ) ரஸ்கின் பாண்ட் ☑



ஆ) அருந்ததி ராய்

இ) சுதா மூர்த்தி

ஈ) விக்ரம் சேத்

✓ மூத்த எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட், "A Little Book of India: Celebrating 75 years of Independence" என்ற தலைப்பில் தனது சமீபத்திய நூலை வெளியிட்டார்.

✓ பிரிட்டிஷ் வம்சாவளியைச் சேர்ந்த 87 வயதான இந்திய எழுத்தாளர், இந்தியாவின் ஆன்மீக சித்தாந்த பண்புகளை இதில் சித்தரித்துள்ளார். ரஸ்கின் பாண்ட் சாகித்ய அகாடமி விருது, சாகித்ய அகாடமியின் பால சாகித்ய புரஸ்கார், பத்மஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

---

9. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாவட்டம் எது?

அ) ஈரோடு ☑



ஆ) கோயம்புத்தூர்

இ) திண்டுக்கல்

ஈ) சேலம்

✓ தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள சத்திய மங்கலம் புலிகள் காப்பகம் புலிகளை இரட்டிப்பாக்கியதற் –கான 'TX2' விருதைப் பெற்றுள்ளது. இந்தப் புலிகள் காப்பகம் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியும் புலிகளின் காப்பகமுமாகும்.

✓ இந்தக் காப்புக்காடு நீலகிரி உயிர்க்கோள நிலப்பரப்பின் ஒருபகுதியாகும். இது உலகின் மிகப்பெரிய புலிகள் வாழிடமாகும். IUCN, UNDP, உலக இயற்கை நிதியம் உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகள் இணைந்து இந்த விருதை வழங்குகின்றன.

---

10. தேசிய பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் (HRIDAY) திட்ட காலம் என்ன?

அ) 2014–2018

ஆ) 2015–2019 ☑



இ) 2016–2020

ஈ) 2017–2021

✓ நடுவணரசின் தேசிய பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் வளர்ச்சித்திட்டமானது (HRIDAY) கடந்த 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 12 நகரங்களில் செயல்படுத்தப்பட்டது.

✓ ₹453.90 கோடி மதிப்பீட்டில் 77'க்கும் மேற்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ₹18.34 கோடி மதிப்பிலான இரண்டு திட்டங்கள் – பாதாமி (கர்நாடகா) திட்டம் மற்றும் வாரங்கல் (தெலுங்கானா) திட்டம் செயல்ப –டுத்தப்பட்டு வருகின்றன. இதன் திட்ட காலம் கடந்த 2019ஆம் ஆண்டில் நிறைவடைந்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 87 சதவீதம் பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி: சுகாதாரத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தகவல்

தமிழகத்தில் 87 சதவீதம் பேருக்குநோய் எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளது என்று சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் மா சுப்பிரமணியன் கூறியதாவது:

தமிழகத்தில் 2 தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத கரோனா நோயாளிகளில் 70% பேர் உயிரிழக்கின்றனர்.

10 கோடி தடுப்பூசி இலக்கு

இதுவரை 4 லட்சத்து 99,408 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதேபோல 15 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 26 லட்சத்து 92,917 பேருக்கு முதல் தவணை தடுப்பூசியும், 7 லட்சத்து 40,383 சிறுவர்களுக்கு 2ஆவது தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை மொத்தமாக 9 கோடியே 71 லட்சத்து 61,368 டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. விரைவில் 10 கோடி தடுப்பூசி என்ற இலக்கை அடைவோம்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குருதிசார் ஆய்வின் (சீரோ சர்வே) 4ஆம்கட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பரில் வெளியான முதல்கட்ட ஆய்வில் 32 சதவீதம் பேருக்கும், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியான 2ஆம் கட்ட ஆய்வில் 29% பேருக்கும், 2021ஆம் ஆண்டு ஆகஸ்டில் வெளியான 3ஆம்கட்ட ஆய்வில் 70% பேருக்கும் தமிழகத்தில் நோயெதிர்ப்பு சக்தி கண்டறியப்பட்டது.

அதேபோல், தமிழகத்தில் நேற்றுமுன்தினம் வெளியான 4ஆம் கட்டஆய்வில் 10 வயதுக்கு மேற்பட்ட 87 சதவீதம் பேருக்கு நோயெதிர்ப்புசக்தி இருப்பது கண்டறியப்பட்டு

உள்ளது. இந்த ஆய்வு 30 குழுக்களைக் கொண்ட 1,706 பேர், 32,245 கிராமமற்றும் நகர்ப்புற மக்களின் இரத்த மாதிரிகளை சேகரித்து மாநில பொது சுகாதாரத்துறை ஆய்வகங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வெளியான முடிவுகளாகும்.

திருவாரூர் மாவட்டம் முதலிடம்

இதில் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி 90 சதவீதமாகவும், தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி 69 சதவீதமாகவும் உள்ளது தெரிய வந்துள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகபட்சமாக திருவாரூரில் 93 சதவீதம் பேருக்கும், தென்காசியில் 92 சதவீதம் பேருக்கும், பெரம்பலூர், மதுரை, சிவகங்கை, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் 91 சதவீதம் பேருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் 90 சதவீதம் பேருக்கும், நெல்லை, நாமக்கல், சென்னை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 88 சதவீதம் பேருக்கும், நீலகிரி, அரியலூர், தூத்துக்குடி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 87 சதவீதம் பேருக்கும், தேனி, திருச்சி, திருப்பூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, கரூர், வேலூர், புதுக் கோட்டை, கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 86 சதவீதம் பேருக்கும்,

திருவண்ணாமலை, இராமநாதபுரம், மயிலாடுதுறை, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் 85% பேருக்கும், தருமபுரி, காஞ்சிபுரம், திருப்பத்தூர் மாவட்டங்களில் முறையே 84, 83, 82% பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

2. சூரிய புயலில் சிக்கிய 40 செயற்கைக்கோள்கள் வளிமண்டலத்தில் நுழைந்து எரிந்தன

அமெரிக்காவின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் விண்வெளிக்கு அனுப்பியிருந்த 40 செயற்கைக்கோள்கள் சூரிய புயல் தாக்குதலால் புவிவட்டப்பாதையிலிருந்து விலகி வளி மண்டலத்துக்குள் நுழைந்து எரிந்தன.

இதுதொடர்பாக ஸ்பேக்ஸ்X நிறுவனம் தெரிவித்ததாவது:

சமீபத்தில் ஏற்பட்ட சூரிய புயல், வளிமண்டலத்தை அடர்த்தியாக்கியது. இதனால் கடந்த வாரம் விண்வெளியில் செலுத்தப்பட்டிருந்த 49 சிறிய செயற்கைக் கோள்களில் (ஒரு செயற்கைக்கோளின் எடை 260 கிகி) 40 செயற்கைக்கோள்கள் புவி வட்டப்பாதையிலிருந்து விலகி மீண்டும் வளிமண்டலத்துக்குள் நுழைந்து எரிந்தன. சில செயற்கைக்கோள்கள் புவிவட்டப்பாதையில் இருந்து விலகும் தறுவாயில் உள்ளன. இந்த விபத்தைத் தவிர்க்க மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தன. இந்தச் சம்பவத்தால் புவி வட்டப்பாதையிலோ, பூமியிலோ எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

பூமியின் சுற்றுவட்டப்பாதையில் ஸ்பேஸ்X நிறுவனத்தின் சுமார் 2,000 ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்கள் சுற்றி வருகின்றன. அவற்றின்மூலம் உலகின் தொலைதூர இடங்களுக்கு இணையவழி சேவை கிடைத்து வருகிறது. இச்செயற்கைக்கோள்கள் பூமியை 340 மைல்களுக்கும் அதிகமான உயரத்தில் சுற்றிவருகின்றன என்று தெரிவித்துள்ளது.

3. சென்னை – விளாடிவோஸ்க் நகரங்களுக்கான கடல்வழி வர்த்தக போக்குவரத்து திட்டம்: விரைவில் செயல்படுத்தப்படும் என ரஷ்ய துணைத் தூதர் தகவல்

சென்னை – விளாடிவோஸ்க் (ரஷ்யா) நகரங்களுக்கான கடல்வழி வர்த்தக போக்குவரத்து திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது என்று ரஷ்ய துணைத்தூதர் ஒலெக் என் அவ்தீவ் கூறினார்.

இந்தியா, ரஷ்யா இடையிலான உறவை வலுப்படுத்த கலாச்சாரம், வர்த்தகம், அறிவியல் உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. அதன்தொடர்ச்சியாக இந்திய – ரஷ்ய தொழில் வர்த்தக சபை மற்றும் ரஷ்ய பிரிமோர்ஸ்கி மண்டல தொழில் வர்த்தக கூட்டமைப்பு சார்பில் இரு நாடுகளுக்கு இடையே புதிய தொழில் வாய்ப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இணையவழியில் நேற்று கையெழுத்தாகின.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய – ரஷ்ய தொழில் வர்த்தக சபை நிறுவனர் V M லட்சுமி நாராயணன், பிரிமோர்ஸ்கி மண்டல தொழில் வர்த்தக கூட்டமைப்பு தலைவர் போரிஸ் ஸ்டுப்நட்ஸ்கி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

---

1. அண்மைச் செய்திகளில் காணப்பட்ட புனௌரா தாம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) பீகார் ☑

ஆ) உத்தர பிரதேசம்

இ) மத்திய பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ பீகாரில் அமைந்துள்ள புனௌரா தாம், 'ஸ்வதேஷ் தர்ஷன்' திட்டத்தின் இராமாயண சுற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. இது சமீபத்தில் சுற்றுலா அமைச்சகத்தின் பிரசாத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது. பீகாரில் வைஷாலியில் தீர்த்தங்கர் சுற்று – அர்ரா – மசாத் – பாட்னா – இராஜ்கிர் – பவாபுரி – சம்பாபுரி, ஆன்மீக சுற்றுலா சுல்தாங்கஞ்ச் – தர்மஷாலா – தியோகர் மற்றும் புத்த கயாவில் உள்ள பௌத்த சுற்றுலா உட்பட பல சுற்றுலாத் தலங்கள் இத்திட்டத்தில் உள்ளன.

---

2. "The $10 Trillion Dream" என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ) ரகுராம் ராஜன்



ஆ) சுபாஷ் சந்திர கார்க் ☑

இ) உர்ஜித் படேல்

ஈ) அரவிந்த் சுப்ரமணியன்

✓ முன்னாள் நிதிச்செயலர் சுபாஷ் சந்திர கார்க், "The $10 Trillion Dream" என்ற நூலை எழுதியுள்ளார். இது இன்று இந்தியா எதிர்கொள்ளும் கொள்கைச் சிக்கல்களை ஆய்ந்–து, 2030'களின் இடைப்பகுதியில் 10 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான சீர்திருத்தங்களை இது பரிந்துரைக்கிறது.

✓ ஓர் இந்திய குடிமைப்பணி அதிகாரியான S C கார்க், கடந்த 2019இல் நிதிச்செயலராக நியமிக்கப்பட்டார்.

---

3. 'லாக்பிட் 2.0' குழு, எந்த நாட்டின் நீதி அமைச்சகத்தின் மீது சைபர் தாக்குதலை நடத்தியது?

அ) அமெரிக்கா



ஆ) பிரான்ஸ் ☑

இ) ரஷ்யா

ஈ) சீனா

✓ 'லாக்பிட் 2.0' எனப்படும் குழுவின் சைபர் தாக்குதலால் பிரான்சின் நீதி அமைச்சகம் பாதிக்கப்பட்டுள்ளது. அக்குழு அவ்வமைச்சகத்தின் கோப்புகளைப்பூட்டி, அதனை மீட்க வேண்டுமெனில் பிரான்ஸ் அரசாங்கம் பிணைத்தொகை தரவேண்டும் என வேண்டியது. இத்தாக்குதல்குறித்து அந்நாடு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

---

4. 'தேசிய மருந்தாக்கத்தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER)' என்பது எந்த அமைச்சகத்தின் கீழ் உள்ள ஓர் ஆராய்ச்சி நிறுவனமாகும்?

அ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

ஆ) ரசாயனங்கள் & உரங்கள் அமைச்சகம் ☑

இ) கல்வி அமைச்சகம்

ஈ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ தேசிய மருந்தாக்கத் தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER) என்பது இந்தியாவின் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு பொதுத் துறை மருந்து ஆராய்ச்சி நிறுவனமாகும்.

✓ மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சர் மான்சுக் மாண்டவியா, அனைத்து ஏழு NIPER'கள் மற்றும் அவற்றின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிய தகவல்க–ளைப் பரப்புவதற்காக NIPER ஆராய்ச்சி வலைதளத்தைத் தொடங்கினார்.

---

5. கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனைத் தொடர்ந்து இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

அ) உர்ஜித் படேல்



ஆ) ஜீன் டிரேஸ்

இ) கௌசிக் பாசு

ஈ) V ஆனந்த நாகேஸ்வரன் ☑

✓ இந்திய அரசாங்கம் அதன் தலைமைப் பொருளாதார ஆலோசகராக V ஆனந்த நாகேஸ்வரனை நியமனம் செய்துள்ளது. அவர் IFMR வணிகப்பள்ளியின் தலைவராக பணியிலிருந்தார். 2019–2021 வரை பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக்குழுவின் பகுதிநேர உறுப்பி–னராகவும் இருந்தார். வரவிருக்கும் கருத்துக்கணிப்பு முதன்மைப் பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் தலைமையிலான குழுவால் தயாரிக்கப்பட்டதாகும்.

---

6. சியோமாரா காஸ்ட்ரோ, பின்வரும் எந்த நாட்டின் முதல் பெண் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ) பகாமாஸ்



ஆ) கோண்டுராஸ் ☑

இ) மொராக்கோ

ஈ) துனிசியா

✓ நடுவமெரிக்க நாடான கோண்டுராஸ், ஆளுங்கட்சியின் தோல்வியை ஒப்புக்கொண்டதையடுத்து, அதன் முதல் பெண் அதிபரான சியோமாரா காஸ்ட்ரோவை தேர்வு செய்யவுள்ளது. இடதுசாரி லிப்ரே கட்சியின் வேட்பாளரான திருமதி காஸ்ட்ரோ, எதிர்க்கட்சி வேட்பாளரைவிட 20% புள்ளிகள் முன்னிலை பெற்றார். வலதுசாரி தேசியக்கட்சி அதன் 12 ஆண்டுகால ஆட்சி முறைகேடுகள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டது.

---

7. ஆண்டுதோறும் 'உலக சமய நல்லிணக்க வாரம்' அனுசரிக்கப்படுகிற மாதம் எது?

அ) ஜனவரி

ஆ) பிப்ரவரி ☑

இ) டிசம்பர்

ஈ) நவம்பர்

✓ 2010ஆம் ஆண்டில் ஐநா பொதுச்சபை அறிவித்ததிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாத முதல் வாரத்தின்போது 'உலக சமய நல்லிணக்க வாரம்' அனுசரிக்கப்பட்டு

வருகிறது. அனைத்து நாட்டு மக்களிடையே அவர்களின் நம்பிக்கையைப் பொருட்படுத்தாமல் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான ஒருவழியாக உலக சமய–சர்வமத நல்லிணக்க வாரத்தை பொதுச்சபை, நிறுவியது.

✓ இந்த ஆண்டு, "Interfaith Pandemic Recovery" என்னும் முழக்கத்தின்கீழ் இந்த வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

---

8. 'ஸ்வச்சதா சாரதி பெல்லோஷிப்–2022'ஐ அறிவித்த நிறுவனம்/அலுவலகம் எது?

அ) NITI ஆயோக்



ஆ) முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் ☑

இ) IIT – மெட்ராஸ்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ 'ஸ்வச்சதா சாரதி பெல்லோஷிப் – 2022' ஆனது இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தால் அதன் 'வேஸ்ட் டூ வெல்த்' திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டது.

✓ 'ஸ்வச்சதா சாரதிகள்' என்ற பாத்திரத்தில், கழிவு மேலாண்மை சமூகப்பணிகளில் ஈடுபட்டுள்ள இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக இது அறிவிக்கப்பட்டுள்ளது. 'வேஸ்ட் டூ வெல்த்' பணி என்பது பிரதமரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனைக் குழுவின் 9 தேசிய பணிகளில் ஒன்றாகும்.

---

9. "ராஷ்ட்ரிய யுவ சசக்திகரன் காரியக்ரம்" என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டமாகும்?

அ) இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டமைச்சகம் ☑



ஆ) கல்வி அமைச்சகம்

இ) திறன் மேம்பாட்டமைச்சகம்

ஈ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

✓ "ராஷ்ட்ரிய யுவ சசக்திகரன் காரியக்ரம்" 15ஆவது நிதி ஆணைய சுழற்சியில் (2021–22 முதல் 2025–26 வரை) ₹2,710.65 கோடி செலவில் நீட்டிக்கப்பட்டுள்ளது. RYSK திட்டம் என்பது இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகத்தின் முதன்மையான திட்டமாகும்.

✓ இந்தத் திட்டத்தின் பயனாளிகள் 15–29 வயதுக்குட்பட்ட இளையோராவர். அந்தந்த துறைகளில் சிறந்து விளங்க இளைஞர்களை ஊக்குவிப்பதும், அவர்களின் ஆற்றலை தேசியகட்டமைப்பிற்கு பயன்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

---

10. 2022'இல் நேரு டிராபி படகுப்போட்டி நடைபெறும் இடம் எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑



ஆ) இலங்கை

இ) மாலத்தீவுகள்

ஈ) மொரிஷியஸ்

✓ **கேரளத்தின் ஆலப்புழையில் நடைபெறும் புகழ்பெற்ற நேரு டிராபி படகுப்போட்டி, இந்த ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தின் ராஸ் அல் கைமாவில் நடைபெறவுள்ளது.**

✓ **ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அல் மர்ஜான் தீவில் பன்னாட்டு கடல்சார் விளையாட்டுக்கள் சங்கம் ராஸ் அல் கைமாவுடன் இணைந்து மார்ச்சில் இந்தப் பந்தயத்தை நடத்தவுள்ளது. ஜவகர்லால் நேரு, கடந்த 1952இல் கேரள படகுப்போட்டிக்கு வருகை தந்ததை அடுத்து இந்தப் பந்தயத்தின் பெயர் இவ்வாறு அமைக்கப்பட்டது.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கரோனா எதிரொலி: பொருளாதார வளர்ச்சிக்கான மதிப்பீடு 7.8%ஆக குறைப்பு

கரோனா இடர்ப்பாடுகளின் காரணமாக வரும் நிதி ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி மதிப்பீடு 7.8%ஆக குறைக்கப்படுவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்தது.

பணவியல் கொள்கைக்குழுவின் முடிவுகளை வெளியிட்ட ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

வட்டி விகிதங்களில் மாற்றமில்லை: 6 உறுப்பினர்களைக் கொண்ட பணவியல் கொள்கை குழுவில் வங்கிக் கடனுக்கான வட்டி விகிதங்களில் பழைய நிலையே தொடர ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 4%ஆக தொடரும். அதேபோன்று இதர வணிக வங்கிகளிடமிருந்து ரிசர்வ் வங்கி பெறும் கடனுக்கான ரிவர்ஸ் ரெப்போ வட்டி விகிதமும் மாற்றமின்றி 3.35 சதவீதமாகவே நீடிக்கும்.

பொருளாதார வளர்ச்சி: COVID பேரிடர், பொருளாதாரத்தில் நிச்சயமற்ற சூழலை உருவாக்கியுள்ளது. மேலும், சர்வதேச அளவில் பொருள்களின் விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது. இதுபோன்ற சாதகமற்ற அம்சங்களை கருத்தில் கொள்ளும்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8%ஆகவே இருக்கும் எனக்கணிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2021–22ஆம் நிதியாண்டில் எதிர்பார்க்க –ப்பட்ட 9.2% சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது குறைவான விகிதமாகும்.

பணவீக்கம்: நடப்பு நிதியாண்டில் நாட்டின் சில்லறைப் பணவீக்கமானது 5.3%ஆக இருக்கும் எனத்தெரிவிக்கப்ப –ட்டுள்ள நிலையில், வரும் மார்ச்சில் தொடங்கவுள்ள 2022–23ஆம் நிதியாண்டில் இது 4.5%ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சாதகமான பருவநிலை, புதிய பயிர்களின் வரத்து ஆகியவை பணவீக்கம் குறைவதற்கு முக்கிய காரணிகளாக விளங்கும்.

எண்ம பற்றுச்சீட்டு: ஈ–ரூபி எனப்படும் எண்ம (டிஜிட்டல்) பற்றுச்சீட்டுக்கான (வௌச்சர்) உச்சவரம்பு தற்போதைய ₹10,000இலிருந்து ₹1 இலட்சமாக அதிகரிக்கப்படுவதுடன், பன்முறை பயன்பாட்டுக்கும் அனுமதியளிக்கப்படுகிறது.

கிரிப்டோகரன்சி அச்சுறுத்தல்: நாட்டின் பொருளாதாரம் & நிதி ஸ்திரத்தன்மைக்கு தனியார்களின் கிரிப்டோகரன்சி மிகப்பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்த 2 முனைகளிலிருந்துவரும் சவால்களை எதிர்கொள்வதற் –கான திறனை கிரிப்டோகரன்சி குறைப்பதாக உள்ளது.

எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாத நீர்க்குமிழியாக இருக்கும் கிரிப்டோகரன்சி போன்ற சொத்து முதலீடுகளில் முதலீட்டாளர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

ரிசர்வ் வங்கியின் அடுத்த பணவியல் கொள்கைக் குழுக் கூட்டம் ஏப்.6 முதல் 8ஆம் தேதி வரையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக முனீஸ்வர் நாத் பண்டாரி நியமனம்

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த சஞ்சீவ் பானர்ஜி கடந்த நவம்பர் மாதம் மேகாலயா மாநிலத்திற்கு இடமாற்றம் செய்யபப்ட்டார். இதனை தொடர்ந்து சென்னை ஐகோர்ட்டின் பொறுப்பு தலைமை நீதிபதியாக முனீஸ்வர்நாத் பண்டாரி நியமிக்கப்பட்டார்.

அலகாபாத் கோர்ட்டில் மூத்த நீதிபதியாக இருந்த முனீஸ்வர்நாத் பண்டாரி, சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பதவி ஏற்றார். அவரை ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் குழு (கொலீஜியம்) முடிவு செய்துள்ளது. இதற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்தார்.

---

3. நிகழாண்டின் முதல் செயற்கைக்கோள்: பிப்.14–இல் செலுத்துகிறது இஸ்ரோ

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிகழாண்டின் முதல் செயற்கைக்கோளை வரும் 14–ஆம் தேதி விண்ணில் செலுத்தவுள்ளது.

'EOS–04' என்ற இந்த ரிசாட்–1ஏ புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்தின் முதல் ஏவுதளத்திலிருந்து PSLV–C52 ஏவுகலம் மூலமாக பிப்.14 அன்று விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

PSLV–C52 ராக்கெட் EOS–04 செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவதற்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்படும் 1710கிகி எடைகொண்ட ஏவுகலமாகும்.

இத்திட்டத்தில் EOS–04 செயற்கைக்கோளுடன் மேலும் இரண்டு சிறிய செயற்கைக்கோள்களும் விண்ணுக்கு அனுப்பப்பட உள்ளன.

அதில் ஒன்று 'INSPIRE SAT–1' என்ற மாணவர் செயற்கைக்கோளாகும். இது இந்திய விண்வெளி அறிவியல் & தொழில்நுட்ப நிறுவனமும், அமெரிக்காவின் கொலரடோ பல்கலைக்கழகத்தில் உள்ள வளிமண்டலம் மற்றும் விண்வெளி இயற்பியல் ஆய்வகமும் இணைந்து உருவாக்கியதாகும்.

மற்றொன்று நிலம் & நீர்நிலைகளின் தட்பவெப்பநிலை ஆய்வுக்காக இஸ்ரோ சார்பில் உருவாக்கப்பட்ட INS–2டிடி செயற்கைக்கோளாகும்.

EOS–04 பயன் என்ன? நாட்டில் எல்லைப்பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாக EOS–04 புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் அனுப்பப்படுகிறது.

'ரேடார் உதவியுடன் அனைத்து தட்பவெப்ப நிலைகளிலும் உயர்தர நிழற்படங்களை எடுத்து அனுப்பும் வகையிலான தொழில்நுட்பம் இந்தச் செயற்கைக்கோளில் இடம்பெற்று உள்ளது. வேளாண், வனம், பயிரிடுதல், மண் ஈரப்பதம், நீர்வளம், வெள்ளபாதிப்பை படமாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கான தரவுகளையும் செயற்கைக்கோள் மூலம் பெறமுடியும்' என ISRO தெரிவித்துள்ளது.

---

4. கீழடி 8ஆம் கட்ட அகழாய்வினை முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்

தொல்பொருள் ஆராய்ச்சியில் தமிழர்களின் பெருமையை பறைசாற்றும் கீழடியின் 8ஆம் கட்ட அகழாய்வுப்பணியை முதல்வர் ஸ்டாலின் இன்று காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்

சிவகங்கை மாவட்டம், திருபுவனம் அருகேயுள்ள கீழடியில், மத்திய அரசின் தொல்லியல் துறை சார்பில் கடந்த 2015 ஆம் ஆண்டு 3 கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்றது.

2018ஆம் ஆண்டு நடந்த 4ஆம் கட்ட அகழாய்விலிருந்து இதுவரை 18,000க்கும் அதிகமான பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழர்கள் வரலாறு மிகவும் தொன்மையானது எனக்கண்டறிப்பட்டுள்ளது. இதனால் கீழடியில் தொடர்ந்து அகழாய்வுப்பணி நடத்தத் தொல்லியல் துறை நடைவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் கீழடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 8ஆம்கட்ட அகழாய்வு பணிகளை தமிழக தொல்லியல் துறையினர் இன்று தொடங்கவுள்ளனர்.

இந்தப்பணியினை முதல்வர் ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக தொடங்கிவைக்கவுள்ளார்.

---

1. ஆப்பிரிக்க ஒன்றிய உச்சிமாநாடு – 2022 நடைபெறும் நாடு எது?

அ) ஜிம்பாப்வே



ஆ) மாலி

இ) எத்தியோப்பியா ☑

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ 2022ஆம் ஆண்டின் ஆப்பிரிக்க ஒன்றிய உச்சிமாநாடு அண்மையில் எத்தியோப்பியாவில் அமைந்துள்ள AU தலைமையகத்தில் அடிஸ் அபாபாவில் தொடங்கியது.

✓ பல்வேறு இராணுவ சதிப்புரட்சிகள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு மத்தியில் இந்த உச்சிமாநாடு நடைபெற்றது. இரு நாள் நடைபெற்ற இவ்வுச்சிமாநாடு கடந்த 18 மாதங்களில் நிகழ்ந்த 6 ஆட்சிக்கவிழ்ப்பு அல்லது சதித்திட்ட முயற்சிகள் மற்றும் குறைந்த தடுப்பூசி விகிதங்–கள்பற்றி விவாதித்தது.

---

2. 'வடிவமைப்புக் கூடங்களின் மேம்பாடு' என்பது எந்த திட்டத்தின்கீழ் ஒரு புதிய துணைத் திட்டமாக உள்ளது?

அ) இந்திய காலணி & தோல் மேம்பாட்டு திட்டம் ☑

ஆ) வடிவமைப்புடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம்

இ) PM YUVA திட்டம்



ஈ) PM KUSUM திட்டம்

✓ இந்திய காலணி & தோல் மேம்பாட்டுத் திட்டத்தை (IFLDP) 2021–22 முதல் ₹1,700 கோடி செலவில் தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக நடுவண் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது. 'வடிவமைப்புக் கூடங்களின் மேம்பாடு' (உத்தேச செலவு ₹100 கோடி) என்பது இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள ஒரு புதிய துணைத்திட்டமாகும்.

✓ தோல் தொழிற்துறைக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்–துதல், சுற்றுச்சூழல் சிக்கல்களை நிவர்த்தி செய்தல், முதலீடுகளை எளிதாக்குதல், வேலைவாய்ப்பு உருவாக்க–ம் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதை IFLDP தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. 'இராட்சச மாகெல்லன் தொலைநோக்கி'த் திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) பிரான்ஸ்

இ) ரஷ்யா

ஈ) சீனா

✓ பிரம்மாண்ட மாகெல்லன் தொலைநோக்கியை உள்ளடக்கிய US பிரம்மாண்ட தொலைநோக்கி திட்டம் ஆனது ஆஸி, பிரேஸில் மற்றும் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்காவால் வழிநடத்தப்படுகிறது.

✓ சிலி இத்திட்டத்தை நடத்துகிறது. $1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய இத்திட்டம், 'வானியல் மற்றும் வான் இயற்பியல்பற்றிய 2020 தசாப்த ஆய்வினால்' 'மிஷன் கிரிட்டிகல்' எனத் தரப்படுத்தப்பட்டுள்ளது.

---

4. சரிஸ்கா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) இராஜஸ்தான் ☑

இ) பஞ்சாப்

ஈ) உத்தர பிரதேசம்

✓ சரிஸ்கா புலிகள் காப்பகம் இராஜஸ்தான் மாநிலத்தின் அல்வார் மாவட்டத்தில் உள்ளது. புலிகளின் வாழ்விட மேலாண்மைக்கான பல்வேறு நடவடிக்கைகள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு அக்காப்பகத்தில் தொடங்கப்பட்டன. இதன் விளைவாக, அக்காப்பாகத்தில் புலிகளின் எண்ணிக்கை 25ஆக உயர்ந்துள்ளது.

---

5. கீழ்காணும் எந்நாட்டின் அதிபராக 2ஆவது முறையாக செர்ஜியோ மேட்டரெல்லா தெரிவு செய்யப்பட்டுள்ளார்?

அ) பிரேசில்



ஆ) இத்தாலி ☑

இ) பிரான்ஸ்

ஈ) உக்ரைன்

✓ இத்தாலியின் அதிபர் செர்ஜியோ மேட்டரெல்லா சமீபத்தில் நடந்த தேர்தலில் இரண்டாவது முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமியற்றுபவர்கள் & பிராந்திய பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில், மெட்டரெல்லா அறுதிப்பெரும்பான்மையுடன் மீண்டும் அதிபரானார். 80 வயதான மெட்டரெல்லா 2015ஆம் ஆண்டு முதல் இத்தாலியின் அதிபராக பணியாற்றி வருகிறார்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'HERMES' திட்டத்துடன் தொடர்புடைய நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்


✓ 'HERMES' என்பது Heliophysics Environmental & Radiation Measurement Experiment Suite என்பதைக் குறிக்கிறது. இது நாசாவின் ஆர்டெமிஸ் திட்டத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். HERMES என்பது நாசாவின் நிலவுச்சுற்றுப் பாதயின் நுழைவாயிலுக்கு வெளியே நிறுவப்படும் ஒரு நான்கு–கருவி தொகுப்பாகும்.

✓ HERMES விண்வெளி வானிலை மற்றும் சூரியனால் விண்வெளியில் ஏற்படும் ஏற்றஇறக்கமான நிலைகளை கண்காணிக்கும்.

---

7. "United for Dignity" என்ற பிரச்சாரம், எந்த நோயால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணியத்தை மதிக்கின்றது?

அ) COVID



ஆ) தொழுநோய் ☑

இ) புற்றுநோய்

ஈ) காசநோய்

- ✓ உலக தொழுநோய் நாளானது ஜனவரி கடைசி ஞாயிறு அன்று அனுசரிக்கப்படுகிறது. நடப்பு 2022ஆம் ஆண்டில், உலக தொழுநோய் நாள் ஜனவரி.30 அன்று அனுசரிக்கப்–பட்டது. "United for Dignity" பிரச்சாரம் தொழுநோயை அனுபவித்த மக்களின் கண்ணியத்தை மதிப்பதற்காக அழைப்புவிடுக்கிறது.
- ✓ தொழுநோய் ஒழிப்புக்கான WHO'இன் நல்லெண்ணத் தூதர் "Don't forget leprosy" என்ற பிரச்சாரத்தைத் தொட–ங்கினார். இந்தியாவில், மகாத்மா காந்தியின் நினைவு நாளான ஜனவரி.30 அன்று தொழுநோய் ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

8. எரிசக்தி அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட பவர்தான் – 2022 என்ற ஹேக்கத்தானின் மைய முகமை எது?

அ) PFC



ஆ) REC ☑

இ) NITI ஆயோக்

ஈ) ONGC

- ✓ மத்திய எரிசக்தி அமைச்சர் R K சிங், தரமான எரிசக்தி வழங்குவதற்கான தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் தீர்வுகளைக் கண்டறிவதற்காக 'பவர்தான்–2022' என்ற ஹேக்கத்தானைத் தொடங்கினார். REC லிட், IIT பாம்பே இன் Society for Innovation and Entrepreneurship (SINE) உடன் இணைந்து மைய முகமையாக செயல்படுகிறது.
- ✓ RDSS'இன் (Revamped Distribution Sector Scheme) கீழ் இது தொடங்கப்பட்டது. புதிய எண்ணங்கள் மற்றும் கருத்துகளுக்கு உரிமத்துடன் வெகுமதி அளிக்கப்படும்.

---

9. 'மத்திய ஊடக அங்கீகார வழிகாட்டுதல்கள்–2022'ஐ வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

இ) தகவல்தொடர்பு அமைச்சகம்

Ministry of Information and Broadcasting Government of India

ஈ) உள்துறை அமைச்சகம்

- ✓ மத்திய தகவல் & ஒலிபரப்பு அமைச்சகமானது 'மத்திய ஊடக அங்கீகார வழிகாட்டுதல்கள்–2022'ஐ வெளியிட்டது.
- ✓ இந்தியாவின் இறையாண்மை & ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் பத்திரிகையாளர் ஒருவர் செயல்பட்டால், அவரது அங்கீகாரம் இடைநிறுத்தப்படும் அல்லது ரத்து செய்யப்படும் என்ற கடுமையான விதியை இது உள்ளடக்கியுள்ளது.

---

10. 'கஞ்சோத் திருவிழா' கொண்டாடப்படுகிற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) பீகார்



ஆ) ஜம்மு–காஷ்மீர் ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) அஸ்ஸாம்

- ✓ **'கஞ்சோத் விழா' என்பது நாக கலாச்சாரத்தைப்பின்பற்றும் மக்களின் ஒரு மதஞ்சார் நிகழ்வு ஆகும். இது சமீபத்தில் ஜம்மு–காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் கொண்டாடப்பட–டது. இந்தத்திருவிழாவின்போது பார்வதிதேவியுடனான சிவபெருமானின் திருமணத்தை மக்கள் கொண்டாடுகிறா–ர்கள். இது கௌரி–திருதியை என்றுமழைக்கப்படுகிறது.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கீழடி உள்பட நான்கு இடங்களில் தொடர் அகழாய்வுப் பணிகள்: 3 இடங்களில் புதிதாக ஆய்வு

கீழடி உள்பட நான்கு இடங்களில் தொடர் அகழாய்வுப் பணிகளை முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கிவைத்தார். வெம்பக்கோட்டை, துலுக்கர்பட்டி உள்பட 3 இடங்களில் முதல் கட்ட ஆய்வுப்பணிகளையும் அவர் தொடக்கினார்.

நான்கு இடங்கள்: தமிழகத்தில் 4 இடங்களில் வெவ்வேறு கட்டங்களாக ஏற்கெனவே அகழாய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. சிவகங்கை மாவட்டம் கீழடியில் ஏழு கட்டங்களும், தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் 2 கட்டங்களும், அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் முதல் கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், கீழடியில் எட்டாம் கட்டமாகவும், சிவகளையில் மூன்றாம் கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மயிலாடும்பாறை, கங்கைகொண்டசோழபுரத்தில் 2ஆம் கட்ட ஆய்வுப்பணிகளும் தொடக்கப்படவுள்ளன. வெம்பக் கோட்டை, துலுக்கர்பட்டி, பெரும்பாலை ஆகிய இடங்களில் ஆய்வுப்பணிகள் முதல் கட்டமாகத் தொடங்கப்படவுள்ளன.

புதிதாக ஆய்வு: விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டையில் 25 ஏக்கர் பரப்பிலான தொல்லியல் மேட்டில் நுண்கற்காலம் முதல் இடைக்காலம் வரையிலான வாழ்வுக்குரிய அடையாளங்கள் வெளிப்படுகின்றன. இப்போது மேற்கொள்ளப்படவுள்ள அகழாய்வின் நோக்கமானது காலவாரியாக தொடர்ச்சியாக நிலவிய நிலவியல் உருவாக்கத்தின் பின்னணியில் அதிக எண்ணிக்கையிலான நுண்கற்கருவிகளைச் சேகரிப்பதாகும்.

துலுக்கர்பட்டி–பெரும்பாலை: திருநெல்வேலி மாவட்டம் நம்பியாற்றின் இடக்கரையில் துலுக்கர்பட்டி அமைந்து உள்ளது. இந்த ஊரிலிருந்து கண்ணநல்லூர் செல்லும் சாலையில் 2.5 கிமீட்டர் தொலைவில் வாழ்வியல் மேடு காணப்படுகிறது. இங்கு மேற்கொள்ளப்பட உள்ள அகழ்வு ஆய்வின் குறிக்கோள், செறிவுமிக்க தொல்லியல் தளத்தின் உருவாக்கம், குடியேற்ற முறை, தொல்பொருள்களின் தன்மை ஆகியவற்றைக் கண்டறிவதாகும். நம்பியாற்றின் கரையில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதும் அகழாய்வின் நோக்கம்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இருந்து 25 கிமீட்டர் தொலைவில் பாலாற்றின் இடதுகரையில் பெரும்பாலை அமைந்துள்ளது. இங்குள்ள வாழ்விட மேடானது இப்போதைய நிலவியல் அமைப்பில் இருந்து 3 முதல் 4 மீ உயரத்தில் அமைந்துள்ளது. பாலாற்றின் ஆற்றங் கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவது அகழாய்வின் நோக்கமாகும்.

பதினைந்து லட்சம் ஆண்டுகள் கொண்ட நிலப்பகுதியின் தொன்மை வரலாற்றைத் தொகுத்து எழுதுவதற்கு அதிகளவிலான சான்றுகள் தேவை. இதனைப் பூர்த்தி செய்ய அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்படும்.

---

2. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தேஜஸ் விமானம்: சிங்கப்பூர் விமான கண்காட்சியில் பங்கேற்கிறது

சிங்கப்பூரில் விமான கண்காட்சி – 2022இல் இலகு இஇரக தேஜஸ் போர்விமானம் பங்கேற்கிறது.

வான்படையை மேலும் பலப்படுத்தும் வகையில் நவீன தேஜஸ் மார்க் 1 இஇரக போர் விமானம் கடந்த ஆண்டு விமானப்படையில் இணைக்கப்பட்டது. தேஜஸ் இரக விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை. கூடுதல் சிறப்பு அம்சங்கள், தாக்குதல், கண்காணிப்பு திறன் கொண்டவை.

இந்த இலகு இரக விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது. இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிட் நிறுவனத்திடம் இருந்து இந்த விமானங்கள் இந்திய விமானப்படைக்கு வாங்கப்படுகிறது. இந்தநிலையில் சிங்கப்பூரில் விமான கண்காட்சி – 2022இல் இலகு இரக தேஜஸ் போர் விமானம் பங்கேற்கிறது.

சிங்கப்பூரில் நடைபெறும் விமான கண்காட்சி – 2022இல் பங்கேற்க 44 பேரைக்கொண்ட இந்திய விமானப் படையினர் சிங்கப்பூரில் உள்ள சாங்கி சர்வதேச விமான நிலையம் சென்றடைந்தனர். இந்த விமான கண்காட்சி வரும் 15 முதல் 18 வரை நடைபெறவுள்ளது. சர்வதேச விமான தொழில்துறை இரண்டாண்டுக்கு ஒருமுறை தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்த சிங்கப்பூர் விமானக் கண்காட்சி வழிவகுத்துள்ளது.

பல்வேறு நாடுகள் பங்கேற்கும் இந்தக் கண்காட்சியில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகு இரக தேஜஸ் எம்கே–I போர் விமானத்தை இந்திய விமானப்படை காட்சிப்படுத்தவுள்ளது.

---

1. 'விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆய்வுக்கூடமானது எந்நிறுவனத்தின்கீழ் செயல்படுகிறது?

அ) டிஆர்டிஓ

ஆ) இஸ்ரோ ☑

இ) சி.எஸ்.ஐ.ஆர்

ஈ) பார்க்

✓ அகமதாபாத்தைச் சார்ந்த விண்வெளி பயன்பாட்டு மையம் & இயற்பியல் ஆய்வுக்கூடமானது இந்திய விண்வெளி ஆய்வுமையத்தின்கீழ் (இஸ்ரோ) செயல்படுகிறது.

✓ சமீபத்தில், இந்த நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'குவாண்டம் சிக்கலை' வெற்றிகரமாக நிரூபித்துள்ளனர். நிகழ்நேர குவாண்டம் கீ விநியோகத்தைப்பயன்படுத்தி, 300 மீ இடைவெளி உடைய இரண்டு கட்டிடங்களுக்கு இடையே ஹேக்–புரூப் தொடர்பை மேற்கொண்டனர்.

---

2. இந்தியா சமீபத்தில் எக்கூட்டமைப்புடன் இணைந்து 'புதுப்பிக்கத்தக்க ஆற்றல்குறித்த உயர்நிலை மாநாட்டை' நடத்தியது?

அ) சார்க்

ஆ) ஆசியான் ☑

இ) பிரிக்ஸ்

ஈ) ஜி–20

✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமும் வெளியுறவு அமைச்சகமும் இந்தோனேசியாவின் ASEAN எரிசக்தி மையமும் இணைந்து 'ASEAN–India High level Conference on Renewable Energy (RE)'ஐ நடத்துகின்றன.

✓ இது தி எனர்ஜி அண்ட் ரிசோர்சஸ் இன்ஸ்டிடியூட் (TERI) உடன் இணைந்து நடத்தப்படுகிறது. "Experience and Innovations for Integrated Renewables Market" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

---

3. 'ஆண்டின் சிறந்த உலக விளையாட்டு தடகள வீரர்' விருதை வென்ற முதல் வீரர் யார்?

அ) விராட் கோலி

ஆ) பங்கஜ் அத்வானி

இ) PR ஸ்ரீஜேஷ் ☑



ஈ) ஆரிப் கான்

✓ மூத்த இந்திய ஹாக்கி கோல்கீப்பர் PR ஸ்ரீஜேஷ், '2021ஆம் ஆண்டின் மதிப்புமிக்க சிறந்த உலக விளையாட்டு தடகள வீரர்' விருதை வென்றார். 2019ஆம் ஆண்டுக்கான பரிசை வென்ற இந்திய ஹாக்கி மகளிர் அணி கேப்டன் இராணிக்குப்பிறகு, இவ்விருதை வென்ற முதல் வீரரும் இரண்டாவது ஹாக்கி வீரருமானார் ஸ்ரீஜேஷ். டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற ஆடவர் அணியில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

---

4. அன்டோனியோ கோஸ்டா, எந்த நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ) இத்தாலி

ஆ) போர்ச்சுகல் ☑



இ) ஜெர்மனி

ஈ) இஸ்ரேல்

✓ அன்டோனியோ கோஸ்டா, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் போர்ச்சுகலின் பிரதமராக பணியாற்றி வருகிறார். சோசலிச கட்சியின் தலைவரான அவர், சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

5. 'தேசிய நிலப்பணமாக்கல் கழகத்தில்' இந்திய அரசின் பங்கு சதவீதம் எவ்வளவு?

அ) 25%

ஆ) 50%

இ) 75%

ஈ) 100% ☑

✓ பொருளாதார ஆய்வறிக்கையின்படி, நிலம் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் முக்கியத்துவமற்ற சொத்துக்கள் பணமாக்கலை விரைவாக கண்காணிப்பதற்காக தேசிய நிலப்பணமாக்கல் கழகத்தை அரசாங்கம் அமைத்துள்ளது. ₹5,000 கோடி ஆரம்பநிலை பங்கு மூலதனத்துடன் 100% இந்திய அரசுக்கு சொந்தமான நிறுவனமாக இந்தக் கழகம் இணைக்கப்படுகிறது.

---

6. மத்திய பட்ஜெட்டானது விவசாயம் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கான ஸ்டார்ட்அப்களுக்கு நிதியளிக்கும் நிதியை அறிவித்தது. அந்நிதியானது எந்நிறுவனம்மூலம் விநியோகிக்கப்படவுள்ளது?

அ) பாரத ஸ்டேட் வங்கி

ஆ) நபார்டு ☑

இ) NABFID

ஈ) REC

✓ கூட்டு முதலீட்டு மாதிரியின்கீழ் திரட்டப்பட்ட கலப்புமுறை மூலதனத்துடன்கூடிய நிதி, நபார்டுமூலம் வழங்கப்படும் என மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இது விவசாயம் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கான ஸ்டார்ட்–அப் நிறுவனங்களுக்கு நிதியளிக்க பயன்படும். பயிர் மதிப்பீடு, நிலப்பதிவேடுகளை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பூச்சிக் கொல்லிகள் தெளித்தல் ஆகியவற்றுக்கு 'கிசான் டிரோன்' பயன்பாட்டை அரசாங்கம் ஊக்குவிக்கும்.

---

7. சமீபத்தில் அறிவிக்கப்பட்ட 'பர்வத மாலா' திட்டத்தின் நோக்கம் என்ன?

அ) சாகச விளையாட்டுகளை ஊக்குவித்தல்

ஆ) மலைகளில் போக்குவரத்து ☑



இ) புனித தலங்களை மேம்படுத்துதல்

ஈ) வனவுயிரிகளின் பாதுகாப்பு

✓ மத்திய பட்ஜெட்டில் 'பர்வத மாலா' (அ) தேசிய கயிற்றுப் பாதைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், J & K மற்றும் வடகிழக்கு போன்ற பகுதிகளுக்கு நவீன போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது.

---

8. நாட்டின் புதிய பாலூட்டி இனமான வெண்கன்ன குரங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ) உத்தரகாண்ட்



ஆ) அஸ்ஸாம்

இ) அருணாச்சல பிரதேசம் ☑

ஈ) சிக்கிம்

✓ இந்திய விலங்கியல் ஆய்வுமையத்தின் விஞ்ஞானிகள், அருணாச்சல பிரதேச மாநிலத்தில், வெண்கன்னமுள்ள குரங்கை புதிய பாலூட்டி இனமாக கண்டுபிடித்துள்ளனர். இக்குரங்கு வகை முதன்முதலில் சீனாவில் 2015'இல் கண்டுபிடிக்கப்பட்டது. தென்கிழக்காசியாவில் கண்டுபிடிக்–கப்பட்ட கடைசி பாலூட்டி இனம் இதுவாகும்.

---

9. கல்லூரிகளில் ஹிஜாப்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டதைக் கேள்விக்குட்படுத்தும் மனுக்களை விசாரிக்க, 3 நீதிபதிகள்கொண்ட அமர்வை அமைத்து உள்ள உயர்நீதிமன்றம் எது?

அ) ஆந்திர பிரதேசம்



ஆ) கர்நாடகா ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) உத்தர பிரதேசம்

✓ கர்நாடகா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, மாநிலத்தில் உள்ள ஒரு சில கல்லூரிகளில் ஹிஜாப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டதைக் கேள்விக்குட்படுத்தும் மனுக்களை விசாரிக்க அவர் உட்பட மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வை அமைத்தார்.

✓ இந்த வழக்கில் மிகப்பெரிய அரசியலமைப்புச் சிக்கல்கள் உள்ளதாகக்கண்டறிந்ததால், மனுக்களை வேறொரு பெரிய அமர்விற்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக கர்நாடகா முழுவதும் இரண்டு நாட்களாக நடந்த பதற்றம் மற்றும் போராட்டங்களுக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

10. ஏழு இராணுவ வீரர்கள் பனிச்சரிவில் இறந்த கமெங் செக்டார் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) சிக்கிம்



ஆ) லடாக்

இ) அருணாச்சல பிரதேசம் ☑

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ **அருணாச்சல பிரதேசத்தின் கமெங் செக்டாரில் உள்ள ஓர் உயரமான பகுதியில் பனிச்சரிவில் சிக்கி, ரோந்துப் பணியிலிருந்த இந்திய இராணுவ வீரர்கள் ஏழுபேர் உயிரிழந்தனர். 14,500 அடி உயரத்தில் அமைந்துள்ள இப்பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு காணப்பட்டது. கடந்த 2019ஆம் ஆண்டில் சியாச்சின் பனிச்சரிவுகளில் சிக்கி இராணுவம் ஆறு வீரர்களை இழந்தது.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இன்று விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–52!

புவி கண்காணிப்புக்கான இஓஎஸ்–04 (ரிசாட்–1ஏ) செயற்கைக்கோளுடன் பிஎஸ்எல்வி சி–52 ராக்கெட் பிப்.14 அதிகாலை விண்ணில் பாய்கிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து அதிகாலை 5.59 மணிக்கு அந்த ராக்கெட் செலுத்தப்படவிருக்கிறது. முன்னதாக, அதற்கான 25 மணி நேர கவுண்ட் டவுன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

அதன் தொடர்ச்சியாக ராக்கெட்டின் நான்காம் நிலையில் எரிபொருள் நிரப்பும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு, குறித்த நேரத்துக்குள் அவை நிறைவடைந்தன.

இஸ்ரோ தலைவராக சோமநாத் பொறுப்பேற்ற பிறகு செலுத்தப்படும் முதல் ராக்கெட் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. பிஎஸ்எல்வி சி–52 ராக்கெட் தாங்கிச் செல்லும் இஓஎஸ்–04 செயற்கைக்கோள் 1,710 கிலோ எடையுடையது. இதன் ஆயுள்காலம் 5 ஆண்டுகளாகும்.

பூமியில் இருந்து 529 கிமீட்டர் உயரத்தில் சூரிய வட்ட சுற்றுப்பாதையில் அது நிலைநிறுத்தப்பட உள்ளது. புவிக் கண்காணிப்பு, வேளாண், வனஞ்சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இது பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை வழங்கும் திறன்கொண்டது. இதனுடன் ஆய்வுத்திட்டத்தின்கீழ் மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட இரண்டு சிறிய வகை செயற்கைக் கோள்களும் ஏவப்படவுள்ளன. இதைத்தொடர்ந்து நிகழ் ஆண்டில் 10'க்கும் மேற்பட்ட இராக்கெட் திட்டங்களை செயல்படுத்த இஸ்ரோ உத்தேசித்துள்ளது.

---

2. நாடு முழுவதும் காவல் துறையை நவீனப்படுத்த ₹26,275 கோடி: மத்திய அரசு ஒப்புதல்

மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: அடுத்த ஐந்து ஆண்டுகளில் அதாவது 2025–26ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் காவல் துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ₹26,275 கோடியை செலவிடவுள்ளது. இதற்கான அனுமதியை மத்திய உள்துறை அமைச்சகம் தற்போது வழங்கியுள்ளது.

இத்தொகையானது ஜம்முகாஷ்மீர், வடகீழை மாநிலங்கள், மாவோயிஸ்ட்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள், புதிதாக பட்டாலியன்களை உருவாக்குதல், அதிநவீன ஃபாரன்சிக் (தடய அறிவியல்) ஆய்வகங்கள் உருவாக்குதல், இதர காவல்துறை கருவிகளை மேம்படுத்துதல் போன்றவற்று –க்கு செலவிடப்படும்.

காவல்துறையை நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் இத் தொகையை ஒதுக்கீடு செய்ய பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

ஜம்மு-காஷ்மீர், தீவிரவாதம் பாதித்துள்ள வடகிழக்கு மாநிலங்கள், மாவோயிஸ்ட்கள் அதிக பாதிப்புள்ள பகுதிகளில் காவல்துறையை மேம்படுத்த ₹18,839 கோடி செலவிடப்படும். மேலும் ₹4,846 கோடியானது மாநில காவல்துறையின் படைகளை மேம்படுத்த செலவு செய்யப்படும். பாரன்சிக் ஆய்வகங்களை மேம்படுத்துதல், யூனியன் பிரதேசங்களில் காவல் துறையை மேம்படுத்த ₹2,080.50 கோடி செலவிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

3. பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்ஸ்: ஆரிப் கானுக்கு 45-ஆவது இடம்

சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்று வரும் 24-ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஜயன்ட் ஸ்லாலம் விளையாட்டில் இந்தியாவின் ஆரிப் முகமது கான் 45-ஆவது இடம் பிடித்தார்.

போட்டியின் 10-ஆவது நாளான ஞாயிற்றுக்கிழமை ஆல்பைன் ஸ்கீயிங் விளையாட்டில், ஆடவருக்கான ஜயன்ட் ஸ்லாலம் பிரிவில் களம் கண்டார் ஆரிப்.

இப்பிரிவில் இரு பனிச்சறுக்கு பந்தயங்கள் நடத்தப்பட்டு அவற்றில் இலக்கை அடைய போட்டியாளர்கள் எடுத்துக்கொள்ளும் நேரம் மொத்தமாக கணக்கிடப்பட்டு வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

அந்த வகையில் ஆரிப் முதல் பந்தயத்தில் 1 நிமிஷம் 22.35 விநாடிகளில் இலக்கை எட்டி 53-ஆவது இடம் பிடித்தார். இந்தப் பந்தயத்தை மொத்தம் 54 போ் நிறைவு செய்தனர். 2ஆவது பந்தயத்தில் ஆரிப், 1 நிமிஷம் 24.89 விநாடிகளில் இலக்கை அடைந்து 44-ஆவது இடம் பிடித்தார். இந்தப் பந்தயத்தை 45 வீரர்கள் நிறைவு செய்தனர்.

இருபந்தயங்களையும் சேர்ந்து மொத்தமாக 2 நிமிஷம் 47.24 விநாடிகள் எடுத்துக்கொண்ட ஆரிபுக்கு இறுதியில் 45ஆவது இடம் கிடைத்தது. சுவிட்ஸர்லாந்தின் மார்கோ ஆடர்மாட் (2 நிமிஷம் 9.35 விநாடிகள்) தங்கமும், ஸ்லோவேகியாவின் ஸான் கிராஞ்ஜெக் (2 நிமிஷம் 9.54 விநாடிகள்) வெள்ளியும், மேத்யூ பேவ்ரே (2 நிமிஷம் 10.69 விநாடிகள்) வெண்கலமும் வென்றனர்.

குளிர்கால ஒலிம்பிக்கில் ஜயன்ட் ஸ்லாலம் பிரிவில் இதுவே இந்தியாவின் அதிகபட்சமாகும். முன்னதாக கடந்த 1968 கிரெனோபல் குளிர்கால ஒலிம்பிக்கில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற ஜெரிமி புஜாகோவ்ஸ்கி இதே ஜயன்ட் ஸ்லாலமில் 65ஆவது இடம் பிடித்திருந்தார். போலந்தில் பிறந்த ஜெரிமி தான், குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கேற்ற முதல் இந்தியராவார்.

முன்னதாக ஆரிப், கடந்த டிசம்பரில் மான்டினீக்ரோவில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிச்சுற்று போட்டியில் இதே பிரிவில் பந்தய இலக்கை அடைய 1 நிமிஷம் 59.47 விநாடிகளே எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஆரிப் அடுத்தபடியாக, வரும் புதன்கிழமை நடைபெற இருக்கும் ஸ்லாலம் பிரிவிலும் களம் காண இருக்கிறார். இந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றிருக்கும் ஒரே இந்திய வீரர் அவர் என்பதும், அவருக்கு இது முதல் ஒலிம்பிக் போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

1. 'Women in the Boardroom' என்ற அறிக்கையின்பாடு 2021ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள வாரியங்களில் பெண்களின் பிரதிநிதித்துவ சதவீதம் என்ன?

அ) 4.1

ஆ) 7.1



இ) 17.1 ☑

ஈ) 27.1

✓ 'Deloitte's Women in the Boardroom' அறிக்கையின்படி, இந்திய வாரியங்களில் உறுப்பினராக உள்ள மகளிரின் பிரதிநிதித்துவ சதவீதம், 2014இல் 9.4 சதவீதமாக இருந்து 2021இல் 17.1%ஆக அதிகரித்துள்ளது.

✓ ஆனால், மகளிரின் பிரதிநிதித்துவம் வாரிய தலைமைப் பதவிகளில் 3.6% மட்டுமே உள்ளது. இச்சதவீதம் 2018இல் இருந்து 0.9% குறைந்துள்ளது. உலக அளவில் 19.7 சதவீத வாரிய இடங்களை பெண்கள் கொண்டுள்ளனர். இது 2018ஆம் ஆண்டிலிருந்து 2.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

---

2. "ஹோகே டௌன்" தேசியப்பூங்காவில் அமைந்துள்ள "ஹோகர் சோனென்ப்ளிக்" மலை உள்ள நாடு எது?

அ) ரஷ்யா



ஆ) ஜெர்மனி

இ) ஆஸ்திரியா ☑

ஈ) நியூசிலாந்து

✓ ஆஸ்திரியாவில் அமைந்துள்ள "ஹோகே டௌன்" தேசிய பூங்காவில் உள்ள "ஹோகர் சோனென்ப்ளிக்" மலையின் உச்சியில் 3106 மீட்டர் உயரத்தில் ஒரு புதிய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி, அம்மலை உச்சியில் அளவிடப்பட்ட நானோபிளாஸ்டிக் துகள்களுள் சுமார் 30% நகரங்களிலிருந்து 200 கிமீ சுற்றளவில் உருவாகின்றன.

---

3. 'PM–DevINE' என்ற புதிய திட்டத்தின் மைய முகமை எது?

அ) நபார்டு

ஆ) வடகிழக்குச்சபை ☑

இ) NITI ஆயோக்

ஈ) IRDAI

✓ 2022–23ஆம் ஆண்டுக்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல்செய்யும்போது, புதிய திட்டமாக, வட கிழக்குக்கான பிரதமரின் வளர்ச்சி முன்முயற்சியை 'PM–DevINE' என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். 'PM–DevINE' வடகிழக்குக்கவுன்சில்மூலம் செயல்படுத்தப்படும்.

✓ முதற்கட்டமாக ₹1,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வடகிழக்கின் தேவைகளின் அடிப்படையில் உட்கட்ட –மைப்பு & சமூகவளர்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிக்கும்.

---

4. காலநிலை மாற்றமானது தாவரங்களை முன்னதாக –வே பூக்கத்தூண்டுகிறது எனக் கண்டறிந்துள்ள நாடு எது?

அ) இத்தாலி



ஆ) UK ☑

இ) ஜெர்மனி

ஈ) இஸ்ரேல்

✓ இங்கிலாந்து நாட்டு ஆராய்ச்சியாளர்களின் அண்மைய ஆய்வின்படி, காலநிலை மாற்றம் தாவரங்களை முன்பே பூக்கத்தூண்டுகிறது. UK தாவரங்களின் சராசரி பூக்கும் நாளானது 1986'க்கு முன் இருந்ததைவிட ஒரு மாதம் முன்னதாக உள்ளது.

---

5. டாம்டாம் போக்குவரத்துக் குறியீட்டின்படி, எந்த இந்திய நகரம் அதிக போக்குவரத்து நெரிசலைக் கொண்டுள்ளது?

அ) புது தில்லி



ஆ) மும்பை ☑

இ) பெங்களூரு

ஈ) சென்னை

✓ புவி–இருப்பிட தொழில்நுட்ப வல்லுநரான் டாம்டாம் அதன் வருடாந்திர டாம்டாம் போக்குவரத்துக்குறியீட்டின் 11ஆம் பதிப்பை வெளியிட்டுள்ளது. இது 2021ஆம் ஆண்டில் 58 நாடுகளில் உள்ள 404 நகரங்களில் காணப்பட்ட போக்கு வரத்து போக்குகளை பகுப்பாய்வுசெய்யும் அறிக்கையாகும். உலக சராசரியான 10 சதவீத நெரிசலைவிட இந்தியா சிறப்பாக செயல்பட்டது.

✓ ஆனால், இந்தியாவின் நான்கு நகரங்கள் இக்குறியீட்டின் முதல் 25 இடங்களுள் இடம்பெற்றுள்ளன. அவை மும்பை (5ஆவது), பெங்களூரு (10ஆவது), மற்றும் புது தில்லி (11ஆவது) மற்றும் புனே (21ஆவது).

---

6. வருடாந்திர கல்விநிலை அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) பிரதம் அறக்கட்டளை ☑

இ) கல்வி அமைச்சகம்

ஈ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டமைச்சகம்

✓ பிரதம் அறக்கட்டளை ஆண்டுதோறும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை ஆய்வுசெய்வதற்காக பள்ளிகளில் விரிவான ஆய்வை நடத்துகிறது. சமீபத்தில், அது ஆண்டு கல்விநிலை அறிக்கையை (ASER, மேவ) வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, மேற்கு வங்க மாநிலத்தில் பள்ளி மாணவர்களின் அடிப்படை வாசிப்பு மற்றும் எண் திறன்கள் COVID காலத்தில் குறைந்துள்ளன.

---

7. கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு குறித்த தேசிய சிறப்பு மையம் (NCOE–CCU) நிறுவப்பட்டுள்ள நிறுவனம் எது?

அ) டிஆர்டிஓ



ஆ) ஐஐடி – பம்பாய் ☑

இ) IISc – பெங்களூரு

ஈ) இஸ்ரோ

✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது இந்திய தொழில்நுட்பக்கழகம் பம்பாயில் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடுகுறித்த (NCOE–CCU) தேசிய சிறப்பு மையத்தை நிறுவியுள்ளது. DSTமூலம் மத்திய அரசு நிதியுதவிபெறும் இந்தியாவின் முதல் மையம் இதுவாகும்.

✓ இந்தச் சிறப்பு மையம் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு குறித்த தொழில்நுட்பங்களின் திறனை ஆராய்கிறது. இது இந்தியாவின் காலநிலை மாற்ற இலக்குகளை அடைய உதவும் என எண்ணப்படுகிறது.

---

8. சமீபத்தில் எந்த நாட்டில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர் –களால் பண்டைய ரோமானிய குடியேற்றம் கண்டறியப் –பட்டது?

அ) கிரேக்கம்



ஆ) UK ☑

இ) அமெரிக்கா

ஈ) ரஷ்யா

✓ UKஇன் ஆராய்ச்சியாளர்கள், 'HS2' எனப்படும் அதிவேக இரயில்பாதைத் திட்டத்துக்காக அகழ்வாய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, பண்டைய ரோமானிய குடியேற்ற தளத்தைக்கண்டுபிடித்தனர்.

✓ சமீபத்திய அகழ்வாராய்ச்சியில், விஞ்ஞானிகள் 40 தலை துண்டிக்கப்பட்ட எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தனர், அவை தூக்கிலிடப்பட்ட குற்றவாளிகளுடையதாக இருக்க –லாம் எனக்கருதப்படுகிறது. துண்டிக்கப்பட்ட தலைகள் கால்களுக்கு இடையிலோ அல்லது காலடியிலோ வைக்க ப்பட்டிருந்தன. இக்குழு இதற்குமுன்பு 1,200 நாணயங்கள், மட்பாண்டங்கள், பகடை, மணிகள் மற்றும் ஈய எடை அளவைகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்திருந்தது.

---

9. இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தப்பட்ட 'கோஸ்ட் ஆர்மி'க்கு சமீபத்தில் அங்கீகாரம் வழங்கிய நாடு எது?

அ) அமெரிக்கா ☑

ஆ) சீனா



இ) ஜெர்மனி

ஈ) ரஷ்யா

✓ அமெரிக்க (USA) அதிபர் ஜோ பிடன், 'கோஸ்ட் படை'க்கு அங்கீகாரம் வழங்குவதற்காக "Ghost Army Congressional Gold Medal Act" என்ற சட்டத்தில் கையெழுத்திட்டார். இது இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்ட ஒரு உத்திசார் படைப்பிரிவாகும்.

✓ அமெரிக்கா முழுவதும் கோஸ்ட் படையின் 9 வீரர்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

---

10. COVID–19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதலை கட்டா –யமாக்கியுள்ள முதல் ஐரோப்பிய நாடு எது?

அ) ஜெர்மனி



ஆ) இத்தாலி

இ) சுவிட்சர்லாந்து

ஈ) ஆஸ்திரியா ☑

✓ COVID–19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதலை கட்டாயமா –க்கியுள்ள முதல் ஐரோப்பிய நாடு ஆஸ்திரியா ஆகும்.

✓ கடந்த ஆண்டு நவம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் அண்மையில் அமலுக்கு வந்தது. அந்நாட்டு அதிபர் அலெக்சாண்டர் வான் டெர் பெல்லன், இதற்கு தனது ஒப்புதலை அளித்தார். இந்தச் சட்டத்தின்படி, 2022 மார்ச் 15'க்குள் நாட்டில் உள்ள அனைவரும் தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் – 54 சீன செயலிகளுக்கு தடை: மத்திய அரசு நடவடிக்கை

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள 54 சீன செயலிகளுக்குத் தடைவிதிக்கவேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அரசுக்கு பரிந்துரைசெய்துள்ளது. இத்தகவலை உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன்படி, மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்தச் செயலிகளுக்கு தடைவிதிப்பது தொடர்பான முறையான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

ஸ்வீட் செல்பி HD, பியூட்டி கேமிரா, மியூசிக் பிளேயர், மியூசிக் பிளஸ், வால்யூம் பூஸ்டர், வீடியோ பிளேயர்ஸ் மீடியா, விவா வீடியோ எடிட்டர், நைஸ் வீடியோ பைடு, ஆப்லாக், ஆன்மையோஜி செஸ், ஆன்மையோஜி அரேனா, எம்பி3 கட்டர், பார்கோடு ஸ்கேனர், நோட்ஸ், யுயு கேம் பூஸ்டர், கரீனா ப்ரீபயர், பேட்லேண்டர்ஸ், விங்க், ரியல் லைட் மற்றும் அஸ்ட்ராகிராப்ட் ஆகிய செயலிகளும் இதில் அடங்கும். சீன செயலிகளுக்கு எதிராக 2ஆம் முறையாக இதுபோன்ற தடை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 59 சீன செயலிகளுக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதில் பிரபலமான டிக்டாக், UC பிரவுசர், வீசாட், பிகோ லைவ் உள்ளிட்டவை அடங்கும். இந்த செயலிகளின் செயல்பாடு நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி மத்திய அரசு தடை விதித்தது.

எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் லடாக் பிராந்தியத்தில் சீன இராணுவ ஊடுருவலைத் தொடர்ந்து இத்தகைய நடவடிக்கையை மத்திய அரசு எடுத்தது.

இரு நாடுகளிடையிலான எல்லைப் பிரச்சினை ஏப்ரல் 2020இலிருந்து நீடித்து வருகிறது. லடாக் முதல் அருணாசல பிரதேசம் வரையிலான 3,400 கிமீ நீண்ட தொலைவுப்பகுதி உள்ளது. இப்பகுதியில் சீன ராணுவம் ஊடுருவியதில் பிரச்சினை ஏற்பட்டது.

---

2. ஏர் இந்தியாவின் புதிய நிர்வாக இயக்குனராக இல்கர் ஐசி நியமனம்.

டாடா நிறுவனத்தின் ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக இல்கர் ஐசி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏர் இந்தியா நிறுவனம் டாடா நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. கடந்த 1953ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தை மத்திய அரசு நாட்டுடைமை ஆக்கியது. கடந்த பல ஆண்டுகளாக கடும் நஷ்டத்தில் சிக்கி தவித்து வந்தது. அதனை வாங்க ஆளில்லாமல் இருந்தது.

அதனைத்தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாகவே அந்த நிறுவனத்தை விற்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வந்தது. எனினும் கடன் சிக்கலால் அந்நிறுவனத்தை வாங்க யாரும் முன்வரவில்லை. COVID-19 தொற்று சூழலுக்கு பின்பு ஏர் இந்தியாவை விற்பனை செய்யும் முயற்சியை மத்திய அரசு தீவிரப்படுத்தியது.

ஏர் இந்தியா விமான நிறுவனத்தை வாங்க டாடா சன்ஸ் நிறுவனம் விருப்பம் தெரிவித்தது. அதன் பிறகு ஏலத்தில் அதிக தொகை கேட்டதால் டாடா சன்ஸ் துணை நிறுவனமான தலேஸ் பிரைவேட் லிமிடெட் ஏர் இந்தியா நிறுவனத்திடம் விற்பனை செய்வதாக மத்திய அரசு அறிவித்தது. ஏர் இந்தியாவை வாங்க தலாஸ் நிறுவனம் குறிப்பிட்ட மதிப்பு ₹18,000 கோடி ஆகும். இதில் ₹15,300 கோடி ஏர் இந்தியாவின் கடனுக்கான பாகமாகும், மீதம் உள்ளவை மத்திய அரசுக்கு செலுத்தப்படுகிறது.

ஏர் இந்தியா நிறுவனம் மற்றும் அதன் சொத்துக்களை டாடா குழுமத்திடம் கடந்த மாதம் மத்திய அரசு முறைப்படி ஒப்படைத்தது. இதன் தொடர்ச்சியாக ஏர் இந்தியா நிறுவனத்தில் பல்வேறு மாற்றங்களை செய்ய டாடா குழுமம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தநிலையில் ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரி, நிர்வாக இயக்குநராக இல்கர் ஐசி நியமனம் செய்யப்பட்டிருப்பதாக டாடா தெரிவித்திருக்கிறது. துருக்கி ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவராக பணியாற்றியவர் இல்கர் ஐசி.

1. 2022 குடியரசு நாளில் பங்கேற்ற எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தின் அலங்கார ஊர்தி 'பிரபலமான தேர்வு'ப் பிரிவில் 'சிறந்ததென' தேர்ந்தெடுக்கப்பட்டது?

அ) மகாராஷ்டிரா ☑



ஆ) அஸ்ஸாம்

இ) மேகாலயா

ஈ) உத்தர பிரதேசம்

✓ 'பிரபலமான தேர்வு'ப்பிரிவில் மகாராஷ்டிர மாநிலத்தின் அலங்கார ஊர்தி சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன் அலங்கார ஊர்தியானது 'மகாராஷ்டிராவின் பல்–உயிர் மற்றும் மாநிலத்தின் உயிரிச்சின்னங்கள்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

✓ உத்தர பிரதேச மாநிலத்தின் அலங்கார ஊர்தி, 'ODOP மற்றும் காசி விஸ்வநாத் தாம்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக்கொண்டு, பன்னிரு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்ப–ட்டது. மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம், கடற்படையின் அணிவகுப்பு குழு மற்றும் CISF ஆகியவை அந்தந்தப் பிரிவுகளில் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டன.

---

2. ஆயிரம் ஒருநாள் போட்டிகளில் விளையாடிய முதல் கிரிக்கெட் அணி எது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) இந்தியா ☑

இ) மேற்கிந்தியத் தீவுகள்

ஈ) இங்கிலாந்து

✓ மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தின்போது 1000ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய முதல் அணி என்ற சாதனையை இந்திய கிரிக்கெட் அணி படைத்தது. இதற்கு முன்னர், இந்தியா, 999 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 518 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. இந்திய அணியின் 1000ஆவது ஒருநாள் போட்டியில் ரோகித் சர்மா கேப்டனாக இருந்தார்.

✓ இந்தியாவின் 100ஆவது ஒருநாள் போட்டியில் கபில்தேவ் கேப்டனாக இருந்தார். அதே சமயம் சௌரவ் கங்குலி இந்திய அணியின் 500ஆவது ஒருநாள் போட்டியில் கேப்டனாக இருந்தார். ஆஸ்திரேலிய அணி 958 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளது. பாகிஸ்தான் அணி 936 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளது.

---

3. JNU துணைவேந்தர் மமிதாலா ஜெகதேஷ் குமார், எந்த நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?

அ) என்சிஇஆர்டி

ஆ) யுஜிசி ☑



இ) யுபிஎஸ்சி

ஈ) எஸ்எஸ்சி

✓ ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) துணை வேந்தர் மமிதாலா ஜெகதேஷ் குமார் பல்கலைக்கழக மானியக்குழுவின் (யுஜிசி) தலைவராக நியமிக்கப்பட்டார்.

✓ ஐந்து வருட காலத்திற்கு அல்லது அவருக்கு 65 வயதாகும் வரையில் அவர் இந்தப் பதவியில் இருப்பார் எனக் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

4. மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்களுக்கு 1000 விரைவு மின்னேற்ற நிலையங்களை அமைக்க ஏதர் எனர்ஜி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) மகாராஷ்டிரா

இ) கேரளா

ஈ) கர்நாடகா ☑

✓ கர்நாடகா மாநில அரசுக்கும் ஏதர் எனர்ஜிக்கும் இடையே மாநிலம் முழுவதும் மின்சார இருசக்கர வாகனங்களுக்கு 1000 விரைவு மின்னேற்ற நிலையங்களை அமைப்பதற்–கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

✓ ஏதர் எனர்ஜி மற்றும் எலக்ட்ரிக் சப்ளை நிறுவனங்கள் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. மின்சார இரு சக்கர வாகனங்களுக்கு ஏதர் நிறுவனம் இலவச மின்னேற்ற சேவைகளை வழங்கும்.

---

5. அண்மையில் எந்த உயிரினத்தை 'அருகிவிட்ட இனம் – Endangered' என ஆஸ்திரேலியா அறிவித்தது?

அ) பாண்டா கரடி



ஆ) கோலா கரடி ☑

இ) கங்காரு

ஈ) சோம்பல் கரடி

✓ ஆஸ்திரேலியா அண்மையில் கோலாவை 'அருகிவிட்ட இனம்' என நியமித்துள்ளது. இது பத்து ஆண்டுகளுக்கு முன், 'அழிவாய்ப்பிலுள்ள இனம்' என வகைப்படுத்தப்பட்ட –து. நீடித்த வறட்சியின் தாக்கம், கோடைகால காட்டுத்தீ மற்றும் கடந்த 20 ஆண்டுகளில் நோய், நகரமயமாக்கல் மற்றும் வாழ்விட இழப்பு ஆகியவற்றின் ஒட்டுமொத்த தாக்கங்கள் இதற்கு காரணமாகியுள்ளன. இனிமேல், ஆஸ்திரேலியாவின் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின்கீழ் கோலா கரடிகளுக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்படும்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற ஒன் உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) பிரான்ஸ் ☑

இ) ரஷ்யா

ஈ) சீனா

✓ 'ஒன் ஓஷன் உச்சிமாநாடு', ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் பிரான்ஸால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'தேசிய அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்–ட பல்லுயிர் பெருக்கத்தின் உயர் இலட்சியக்கூட்டணி' என்ற பிரெஞ்சு முன்னெடுப்பை இந்தியா ஆதரித்தது.

✓ இம்மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் மோடி, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழியை ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது என்றார்.

---

7. பின்வரும் எக்கடலின் எல்லையில் பெலாரசு உள்ளது?

அ) பால்டிக் கடல்



ஆ) வட கடல்

இ) கருங்கடல்

ஈ) கடல் எல்லை இல்லை ☑

✓ பெலாரஸ் என்பது கீழை ஐரோப்பிய பகுதியில் நிலத்தால் சூழப்பட்ட ஒருநாடாகும். இது கிழக்கு மற்றும் வடகிழக்கில் ரஷ்யா, தெற்கில் உக்ரைன், மேற்கில் போலந்து மற்றும் வடமேற்கில் லித்துவேனியா மற்றும் லத்துவியா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ளது.

✓ உக்ரைனுடனான பெலாருஷிய எல்லைக்கு அருகே ரஷ்யாவும் பெலாரஸும் கூட்டு இஇராணுவப் பயிற்சியை தொடங்கியுள்ளன. ரஷ்யா, ஏற்கனவே உக்ரைனுடனான தனது சொந்த எல்லையிலும், இணைக்கப்பட்ட கிரிமியன் தீபகற்பத்திலும் படைகளைக் குவித்துள்ளது.

---

8. 2022-23ஆம் ஆண்டுக்கான அதிகாரபூர்வ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணவாட்ட சதவீதம் என்ன?

அ) 1.5-2%



ஆ) 3-3.5% ☑

இ) 4.5-5%


ஈ) 10%

✓ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறுகையில், 2022-23ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பணவாட்ட முன்கணிப்பானது 3-3.5% ஆகும். GDP பணவாட்டி என்பது பணவீக்கத்தின் அளவீடு மற்றும் பெயரளவு GDP மற்றும் உண்மையான GDP ஆகியவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசமாகும். மத்திய பட்ஜெட் 2022-23'க்கு பெயரளவு GDP வளர்ச்சி விகிதத்தை 11.1 சதவீதமாக கருதுகிறது.

---

9. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற MUSE & HelioSwarm ஆகியவையுடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?

அ) இஸ்ரோ



ஆ) ஜாக்ஸா

இ) நாசா ☑

ஈ) இஎஸ்ஏ

✓ Multi-slit Solar Explorer (MUSE) மற்றும் HelioSwarm ஆகிய 2 புதிய அறிவியல் திட்டங்களை நாசா அறிவித்துள்ளது. இந்த இரண்டு திட்டங்களும் சூரியனின் கரோனாவை ஆய்வதையும் சூரியக்காற்றின் காந்தப்புலத்தை அளவிடு -வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

✓ சூரியனை நோக்கிசெல்லும் பாதையில் பார்க்கர் சோலார் ஆய்வுசெய்த சமீபத்திய தகவல்களை நாசா முன்னதாக அறிவித்தது.

10. உலகின் மிகப்பெரிய 'இக்லூ கபே' திறக்கப்பட்டுள்ள நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) இந்தியா ☑

இ) சீனா

ஈ) ஜெர்மனி

✓ **ஜம்மு-காஷ்மீரில் உள்ள குல்மார்க்கில், உலகின் மிகப் பெரியதாகக் கூறப்படும் 'இக்லூ கபே' திறக்கப்பட்டுள்ளது. 37.5 அடி உயரமும் 44.5 அடி விட்டமும்கொண்ட இதுவே உலகின் மிகப்பெரிய கபே ஆகும். கின்னஸ் நூலின்படி, மிகப்பெரிய 'இக்லூ கபே' சுவிச்சர்லாந்து நாட்டில் உள்ளது. அதன் உயரம் 33.8 அடி மற்றும் விட்டம் 42.4 அடி ஆகும்.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நாட்டின் ஏற்றுமதி 3,450 கோடி டாலராக அதிகரிப்பு

நவரத்தினங்கள், ஆபரணங்கள் உள்ளிட்ட துறைகளின் செயல்பாடு சிறப்பாக இருந்ததையடுத்து நடப்பாண்டு ஜனவரியில் நாட்டின் ஏற்றுமதி 3,450 கோடி டாலராக அதிகரித்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகம் மேலும் கூறியதாவது:

கடந்த ஜனவரி மாதத்தில், பொறியியல், பெட்ரோலியம், நவ ரத்தினங்கள் - தங்க ஆபரணங்கள் துறைகளின் செயல்பாடு சிறப்பான வகையில் அமைந்திருந்தது. அதன் காரணமாக, அந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி ₹3,450 கோடி டாலரை எட்டியுள்ளது. இது, இந்திய மதிப்பில் சுமார் ₹2.59 லட்சம் கோடி ஆகும்.

இருப்பினும், வர்த்தக பற்றாக்குறையானது நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் ₹1,742 கோடி டாலராக மிகவும் உயர்ந்துள்ளது. இறக்குமதி 23.54 சதவீதம் உயர்ந்து 5,193 கோடி டாலரானது. ஏப்ரல் 2021-ஜனவரி 2022 வரையிலான இடைப்பட்ட காலத்தில் ஒட்டுமொத்த ஏற்றுமதி 22,892 கோடி டாலரிலிருந்து 46.73 சதவீதம் அதிகரித்து 33,588 கோடி டாலரைத் தொட்டது.

இதே காலகட்டத்தில் இறக்குமதி 62.65 சதவீதம் அதிகரித்து 49,575 கோடி டாலரானது. இந்தப் பத்துமாத காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறை ₹7,587 கோடி டாலரிலிருந்து 15,987 கோடி டாலராக உயர்ந்துள்ளது என வர்த்தக அமைச்சகம் புள்ளிவிவரத்தில் கூறியுள்ளது.

---

2. சென்னை-விசாகப்பட்டினம் இடையே பெண் இராணுவ அதிகாரிகள் கடல்வழி சாகசப் பயணம்

சென்னை-விசாகப்பட்டினம் இடையே பெண் இராணுவ அதிகாரிகள் மட்டும் பங்கேற்கும் கடல்வழி சாகசப் பயணத்தை தெலங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்திரராஜன் சென்னையில் தொடக்கிவைத்தார்.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகத்தின் சென்னை அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

செகந்திராபாதில் உள்ள இராணுவக்கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் இயந்திரவியல் துறை, இஎம்இ கடல் பயண சங்கம், தெற்கு பிராந்திய இராணுவப்பிரிவு உள்ளிட்டவை இணைந்து முற்றிலுமாக பெண் ராணுவ அதிகாரிகள் மட்டுமே பங்கேற்கும் கடல்வழி சாகசப் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன.

சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் வரை செல்லும் இந்த அணியினர் மீண்டும் கடல்வழியாகவே சென்னை திரும்புகின்றனர். இராணுவ பெண் அதிகாரிகள் மட்டும் கடல்வழி சாகசப் பயணத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.

---

3. ஜி–20 தலைமையை இந்தியா ஏற்பதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஜி–20 செயலகத்தை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

ஜி–20 அமைப்புக்கு செயலகம் உருவாக்குவதற்கு பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஜி–20 அமைப்பின் தலைமையை இந்தியா ஏற்கவுள்ள நிலையில் அதன் செயலகத்தை அமைப்பது மற்றும் ஒட்டுமொத்த கொள்கை முடிவுகளை செயலாக்கும் அமைப்புகளை ஏற்படுத்துவது ஆகியவற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஜி–20 அமைப்பின் தலைமை பொறுப்பை 2022 டிசம்பர் 1 முதல் 2023 நவம்பர் 30 வரை இந்தியா ஏற்கவுள்ளது. இது 2023இல் நடைபெறவுள்ள ஜி–20 உச்சிமாநாட்டுடன் நிறைவடையும். உலகப் பொருளாதார நிர்வாகத்தில் முக்கிய பங்குவகிக்கும் சர்வதேச பொருளாதார ஒத்துழை –ப்புக்கான முக்கிய அமைப்பாக ஜி–20 விளங்குகிறது.

ஜி–20 தலைமைப் பொறுப்பை ஏற்கும் நாட்டில், செயலகம் அமைப்பது அதற்கான ஏற்பாடுகளை அந்நாடு மேற்கொள் –வது வழக்கமாகும். வெளியுறவு அமைச்சகம், நிதி அமைச்சகம் மற்றும் பொருத்தமான மற்ற அமைச்சகங்கள் மற்றும் துறைகளிலிருந்து இதுகுறித்த நிபுணத்துவம் பெற்ற பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 2024 பிப்ரவரி வரை இந்தச் செயலகம் செயல்படும்.

பிரதமர் தலைமையிலான உயர்மட்டக்குழு செயலக செயல்பாட்டுக்கு வழிகாட்டும். இந்தக்குழுவில் இடம்பெறும் நிதியமைச்சர், உள்துறை அமைச்சர், வெளியுறவு அமைச்சர், ஜி–20 ஷெர்பா அமைப்பு (வர்த்தகம் மற்றும் தொழில், ஜவுளி, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர்) ஆகியோர் இந்தியாவின் ஜி–20 தலைமைப்பொறுப்புக்கு ஒட்டு மொத்த வழிகாட்டுதலை வழங்குவார்கள்.

மேலும் ஜி–20 தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்பார்வையிட ஒருங்கிணைப்பு குழு ஒன்றும் அமைக்கப்படும். இக்குழு உயர்மட்ட குழுவுக்கு ஏற்பாடுகள் குறித்து தகவல்களை அளிக்கும். பன்னோக்கு அமைப்புக –ளில் உலக விஷயங்கள் குறித்த இந்தியாவின் தலைமைப்பொறுப்புக்கு ஜி–20 செயலகம் உதவிகரமாக இருக்கும்.

---

1. "Salesforce Global Digital Skills" குறியீட்டில், அதிக டிஜிட்டல் தயார்நிலை மதிப்பெண்ணைப்பெற்ற நாடு எது?



அ) இந்தியா ☑

ஆ) ஜெர்மனி

இ) ஆஸ்திரேலியா

ஈ) பின்லாந்து

✓ 'Salesforce Global Digital Skills' குறியீட்டின்படி, 19 நாடுகளில், இந்தியா 100க்கு 63 என்ற அதிகபட்ச டிஜிட்டல் தயார்நிலை மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது. 66% பேர் டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்வதற்கான மூலங்களுடன் இருப்பதாகக்கூறியுள்ளனர். 19 நாடுகளில் 23,500க்கும் அதிகமான தொழிலாளர்களிடம் மேற்கொள்–ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், சராசரி உலகளாவிய மதிப்பெண் 33 ஆகும்.

---

2. எந்த இந்திய மாநிலம் கல்வி நிறுவனங்களுக்கு 'சீர்–உடைகளை' கட்டாயமாக்க உத்தரவு பிறப்பித்துள்ளது?



அ) பீகார்

ஆ) உத்தர பிரதேசம்

இ) கர்நாடகா ☑

ஈ) கோவா

✓ கர்நாடக கல்விச்சட்டம்–1983இன் 133(2) இன்படி, கல்வித் துறை ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவு 'ஒரே மாதிரியான சீருடைகளை' மாணவர்கள் கட்டாயமாக அணிதல்வேண்டும் என்று கூறுகிறது. தனியார்பள்ளி நிர்வாகம் தங்களுக்கு விருப்பமான சீருடையைத் தேர்வு செய்துகொள்ளலாம். அந்த உத்தரவின்படி, நிர்வாகக்குழு சீருடையைத்தேர்ந்தெடுக்கவில்லை என்றால், சமத்துவம், ஒருமைப்பாடு மற்றும் பொதுச்சட்டம் மற்றும் ஒழுங்கைக் கெடுக்கும் ஆடைகளை மாணாக்கர் அணியக்கூடாது.

---

3. சமீபத்தில் காலமான பாடகி லதா மங்கேஷ்கருக்கு எந்த ஆண்டு 'இந்திய மாமணி' விருது வழங்கப்பட்டது?



அ) 2001 ☑

ஆ) 2002

இ) 2003

ஈ) 2004

✓ அண்மையில் காலஞ்சென்ற பழம்பெரும் பாடகி இலதா மங்கேஷ்கரின் உடல் முழு அரசு மரியாதையுடன் நல் அடக்கஞ்செய்யப்பட்டது. 36 மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார்.

✓ கடந்த 1999ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தின் மேலவைக்கு அவர் பரிந்துரைக்கப்பட்டார். கடந்த 2001ஆம் ஆண்டு இந்தியாவின் மிகவுயரிய குடிமக்கள் விருதான 'இந்திய மாமணி'யை அவர் பெற்றார்.

---

4. ஜஸ்டின் டுரூடோ பிரதமராக இருந்துவரும் எந்த நாடு, மிகப்பெரிய தடுப்பூசி–எதிர்ப்புப் போராட்டங்களைக்கண்டு வருகின்றது?



அ) இத்தாலி

ஆ) கனடா ☑

இ) சுவிச்சர்லாந்து

ஈ) பிரான்ஸ்

✓ ஜஸ்டின் டுரூடோ பிரதமராக இருந்து வரும் கனடாவில் தடுப்பூசிக்கெதிரான போராட்டங்கள் வலுத்துவருகின்றன. இப்போராட்டங்களுக்கு மத்தியில் தலைநகரமான ஒட்டாவாவில் அவசரநிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டது.

✓ அமெரிக்க–கனடிய எல்லையைக் கடக்கும்போது தடுப்பூசி கட்டாயம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கோபமடைந்த சரக்குந்து ஓட்டுநர்கள், "Freedom Convoy" என்ற பெயரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்களை மே. கனடாவில் தொடங்கினர்.

---

5. 2022இல் ICC U19 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியின் கேப்டன் யார்?



அ) யாஷ் துல் ☑

ஆ) இராஜ் பாரா

இ) நிஷாந்த் சிந்து

ஈ) ஷேக் ரஷீத்

✓ நடப்பு 2022ஆம் ஆண்டு ICC U19 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணிக்கு யாஷ் துல் அணித் தலைவராக இருந்தார். ஆன்டிகுவாவில் நடந்த இறுதிப்போட்டியில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றிபெற்றது. இது இந்தியாவுக்கான ஐந்தாவது U19 பட்டமாகும். வெற்றிக்கு பங்களித்த மற்ற வீரர்கள் – நிஷாந்த் சிந்து, ஷேக் ரஷீத், ராஜ் பாரா மற்றும் ரவி குமார் உட்பட பலர். இங்கிலாந்து அணி 44.5 ஓவரில் 189 இரன்களுக்கு ஆட்டமிழந்தது.

---

6. 'மும்பை–அகமதாபாத் அதிவேக இரயில் திட்டத்திற்கு' 'அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவிக்'கடனை வழங்குகிற நாடு எது?



அ) அமெரிக்கா

ஆ) ஜப்பான் ☑

இ) ரஷ்யா

ஈ) ஜெர்மனி

✓ ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மும்பை–அகமதாபாத் அதிவேக இரயில் (MAHSR) திட்டத்திற்கான 'அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவிக்'கடனை வழங்குகிறது.

✓ இந்தத் திட்டத்திற்கான முதல் நிலையமாக சூரத் அமைக்கப்பட்டுள்ளது. MAHSR வழித்தடமானது மொத்தம் 12 நிலையங்களை உள்ளடக்கும். அவை சூரத், வதோதரா, ஆனந்த், அகமதாபாத், சபர்மதி, பிலிமோரா, பரூச், மும்பை, தானே, விரார், போயிசர், வாபி ஆகும்.

---

7. 'JIVA' என்ற வேளாண் சூழலியல் அடிப்படையிலான திட்டத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) நபார்டு ☑

இ) ஐசிஏஆர்

ஈ) சிஎஸ்ஐஆர்

✓ வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு) சமீபத்தில் வேளாண் சூழலியல்சார்ந்த 'JIVA' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 11 மாநிலங்களில் 5 வேளாண்–சுற்றுச்சூழல் மண்டலங்களை உள்ளடக்கிய நபார்டின் நீர்வடிகால் மற்றும் வறண்ட ஆற்றுப்படுகை திட்டங்களின்கீழ் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இயற்கை விவசாயத்தை நோக்கி விவசாய சமூகத்தை கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

8. இந்தியாவில் பங்குச்சந்தைகளை ஒழுங்காற்றுகிற அமைப்பு எது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி

ஆ) இந்திய பங்கு & பரிவர்த்தனை வாரியம் ☑

இ) நிதி அமைச்சகம்

ஈ) பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம்

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) என்பது SEBI சட்டம், 1992இன்கீழ் நிறுவப்பட்ட ஓர் ஒழுங்குமுறை ஆணையமாகும். இது இந்தியாவிலுள்ள பங்குச்சந்தைகளுக்கான முதன்மைக் கட்டுப்பாட்டாளர் ஆகும். SEBI சமீபத்தில் தேசிய பங்குச்சந்தைக்கு (NSE) அதன் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரிகளான சித்ரா ராமகிருஷ்ணா மற்றும் ரவி நரேன் ஆகியோருக்கு அதன் தலைமை இயக்க அதிகாரி ஆனந்த் சுப்ரமணியனை பணியமர்த்துவதில் ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுகளுக்காக அபராதம் விதித்தது.

---

9. இந்திய பாதுகாப்பு அச்சகம் & நாணயம் உற்பத்திக் கழகமானது எதன்கீழ் செயல்படுகிறது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி

ஆ) நிதியமைச்சகம் ☑

இ) வெளியுறவு அமைச்சகம்


ஈ) வர்த்தக அமைச்சகம்

✓ இந்திய பாதுகாப்பு அச்சகம் & நாணயம் உற்பத்திக் கழகம் (SPMCIL) என்பது ஓர் அரசு அச்சிடுதல் மற்றும் நாணய விநியோக நிறுவனமாகும். இது நிதியமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது. SPMCIL'இன் பதினேழாவது நிறுவன நாளையொட்டி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 'பஞ்சதந்திரம்' குறித்த முதல் வண்ணமயமான நினைவு நாணயத்தை வெளியிட்டார்.

---

10. NCRB'இன்படி,'பலிவேட்டை'யின் ஒருபகுதியாக அதிக எண்ணிக்கையிலான கொலைகள் நடைபெறும் இந்திய மாநிலம் எது?

அ) ஜார்கண்ட் ☑



ஆ) ஒடிஸா

இ) குஜராத்

ஈ) உத்தர பிரதேசம்

✓ **தேசிய குற்ற ஆவணக்காப்பகத்தின் கூற்றுப்படி (NCRB), 'பலிவேட்டை'யின் ஒருபகுதியாக அதிக எண்ணிக்கை –யிலான கொலைகள் நடைபெறும் மாநிலங்களுள் ஜார்கண்டிற்கு அடுத்தபடியாக ஒடிஸா உள்ளது.**

✓ **ஒடிஸா மாநில பெண்கள் ஆணையம் சமீபத்தில் ஒடிஸா பலிவேட்டைத்தடுப்புச்சட்டம், 2013இல் கடும் விதிகளைக் கோரியுள்ளது. மேலும் இதனை கொடூரமான குற்றமாகக் கருதி மாநிலத்தில் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.**

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இரு சக்கர மோட்டார் வாகனத்தில் நான்கு வயதுக்கும் கீழ் உள்ள குழந்தைகள் பயணித்தல் அல்லது அமர்ந்து செல்லும்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது

இருசக்கர மோட்டார் வாகனத்தில் நான்கு வயதுக்கும்கீழ் உள்ள குழந்தைகள் பயணித்தல் அல்லது அமர்ந்து செல்லும்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதி 138 பிப்ரவரி 15, 2022 அன்று திருத்தப்பட்டதன் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் இந்த அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டம் பிரிவு 129இன் கீழ் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்பு சேணம் (அ) தலைக்கவசம் பயன்படுத்தப்பட வேண்டும். இத்தகைய மோட்டார் வாகனங்களின் வேகம் மணிக்கு 40 கிலோமீட்டராக மட்டுமே இருக்க வேண்டுமென்றும் இந்த அறிவிக்கை கட்டுப்பாடு விதித்துள்ளது.

மத்திய மோட்டார் வாகனங்கள் (இரண்டாவது திருத்த) விதிகள், 2022 வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்குப்பின் இந்த விதிகள் அமலுக்கு வரும்.

---

2. ஒலிம்பிக்ஸ்: ஆரிப் முகமது கான் ஏமாற்றம்

பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் ஆடவருக்கான ஸ்லாலம் பிரிவில் இந்திய வீரர் ஆரிப் முகமது கான் பந்தயத்தை நிறைவு செய்யாமல் ஏமாற்றமளித்தார். இத்துடன் பெய்ஜிங் ஒலிம்பிக்கில் இந்தியாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

சீனாவின் பெய்ஜிங் நகரில் 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இதில் புதன்கிழமை நடைபெற்ற ஆல்பைன் ஸ்கீயிங் விளையாட்டில் ஆடவருக்கான ஸ்லாலம் பிரிவில் களம் கண்டார் ஆரிப்.

இருபந்தயங்கள் நடத்தப்பட்டு, அவற்றில் போட்டியாளர்கள் இலக்கை அடைய எடுத்துக்கொண்ட நேரத்தின் மொத்த கணக்கீட்டின் அடிப்படையில் வெற்றியாளர்கள் இந்த விளையாட்டில் அறிவிக்கப்படுகின்றனர்.

எனினும் இதில் முதல் பந்தயத்தையே ஆரிப் நிறைவு செய்யாமல் தவறவிட்டார். இதனால் அவர் தொடர்ந்து களம் காணும் தகுதியை இழந்தார். இப்பிரிவில் பிரான்ஸ் வீரர் கிளமென்ட் நோயல் மொத்தமாக 1 நிமிஷம் 44.09 விநாடிகளில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார்.

ஆஸ்திரியாவின் ஜோகன்னஸ் ஸ்ட்ரோல்ஸ் அவரைவிட 0.61 விநாடிகள் கூடுதலாக எடுத்துக்கொண்டு வெள்ளியும், நார்வே வீரர் செபாஸ்டியன் போஸ் சோல்வாக் 0.70 விநாடிகள் அதிகமாக எடுத்து வெண்கலமும் பெற்றனர். தங்கம்வென்ற கிளமென்ட் நோயல் கடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இதே பிரிவில் 0.04 விநாடிகள் வித்தியாசத்தில் வெண்கலத்தை இழந்து 4ஆம் இடம் பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதக்கப்பட்டியல்: போட்டியின் 13ஆம் நாளான புதன் கிழமை நிறைவில், நார்வே 28 பதக்கங்களுடன் (13 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலம்) முதலிடத்திலும், ஜெர்மனி 20 பதக்கங்களுடன் (10 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலம்) 2ஆவது இடத்திலும், அமெரிக்கா 19 பதக்கங்களுடன் (8 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலம்) 3ஆவது இடத்திலும் உள்ளன.

---

1. நடப்பு 2022ஆம் ஆண்டில் உலக தொழுநோய் நாள் கடைபிடிக்கப்பட்ட தேதி எது?

அ) ஜனவரி 30 ☑

ஆ) ஜனவரி 31

இ) பிப்ரவரி 01

ஈ) பிப்ரவரி 02

✓ உலக தொழுநோய் நாளானது ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில் (2022) ஜன.30 அன்று இந்த நாள் கடைபிடிக்கப்பட்டது. இந்தக் கொடிய நோயைப் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதைத் தடுக்கவும், சிகிச்சையளிக்கவும், குணப்படுத்தவும் முடியும் என்பதில் கவனஞ்செலுத்துதற்–காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ "United for Dignity" என்பது நடப்பாண்டு (2022) வரும் உலக தொழுநோய் நாளுக்கான கருப்பொருளாகும்.

2.எந்தத்தேசியத்தலைவரின் நினைவுநாள், இந்தியாவில், ஜன.30 அன்று தியாகிகள் நாளாக அனுசரிக்கப்படுகிறது?

அ) ஜவஹர்லால் நேரு

ஆ) மகாத்மா காந்தி ☑

இ) பகத் சிங்

ஈ) சர்தார் வல்லபாய் படேல்

✓ 1948 ஜன.30 அன்று 'மகாத்மா' காந்தியடிகள், நாதுராம் கோட்சேவால் படுகொலை செய்யப்பட்டார். இந்த நாளில், மகாத்மா காந்தி மற்றும் தேசத்தின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த அனைத்து தியாகிகளுக்கும் மரியாதை செலுத்துவதற்காக, இந்தியா, தியாகிகள் நாள் அல்லது ஷாஹித் திவாஸை அனுசரிக்கிறது.

---

3. உலக மனித சகோதரத்துவ நாள் கடைப்பிடிக்கபடுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 02

ஆ) பிப்ரவரி 03

இ) பிப்ரவரி 04 ☑

ஈ) பிப்ரவரி 05

✓ ஆண்டுதோறும் பிப்.4 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் உலக மனித சகோதரத்துவ நாள் அனுசரிக்கப்படுகிறது. 2019ஆம் ஆண்டு இதே நாளில், "உலக அமைதி மற்றும் ஒன்றாக வாழ்வதற்கான மனித சகோதரத்துவம்" என்ற தலைப்பிலான ஆவணம் கையெழுத்தானது.

---

4. நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் 'உலக ஈரநிலங்கள் நாளுக்கான'க் கருப்பொருள் என்ன?

அ) Wetlands for Us

ஆ) Wetlands Action for People and Nature ☑

இ) Wetlands and COVID–19

ஈ) Save Wetlands

✓ ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் புவியில் அதன் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் பிப்.2 அன்று உலக ஈரநிலங்கள் நாள் அனுசரிக்கப்படுகிற–து. "Wetlands Action for People and Nature" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில்வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

5.உலக பருப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 8

ஆ) பிப்ரவரி 9

இ) பிப்ரவரி 10 ☑

ஈ) பிப்ரவரி 11

✓ கடந்த 2019ஆம் ஆண்டில், ஐநா பொது அவை, பிப்.10ஆம் தேதியை உலக பருப்புநாளாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து, உணவு & உழவு அமைப்பின் தலைமையில், உலகெங்கிலும் உள்ள பருப்பு வகைகளின் சர்வதேச ஆண்டாக, கடந்த 2016ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

✓ பருப்பு வகைகளின் ஊட்டச்சத்து மதிப்புகள் மற்றும் பருப்பு வகைகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிக்கும் வழிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப்படுகிறது. "Pulses to empower youth in achieving sustainable agrifood systems" என்பது நடப்பு 2022இல் வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும்.

---

6. 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 10

ஆ) பிப்ரவரி 11 ☑

இ) பிப்ரவரி 12

ஈ) பிப்ரவரி 13

✓ 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாள்' ஆனது ஆண்டுதோறும் பிப்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது.

✓ நடப்பாண்டு (2022) 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாளின்' ஏழாமாண்டு நாளாகும். ஐநா அவை இந்நாளை கடைப்பிடிக்கின்கிறது. "Equity, Diversity, and Inclusion: Water Unites Us" என்பது 2022'இல் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

7. இந்தியாவில் ஆண்டுதோறும் பிப்.10 மற்றும் ஆக.10 ஆகிய தேதிகளில் அனுசரிக்கப்படுகிற நாள் எது?

அ) தேசிய குடற்புழுநீக்க நாள் ☑

ஆ) தேசிய குருதிச்சோகை நாள்

இ) தேசிய நீரழிவு நாள்

ஈ) தேசிய புற்றுநோய் நாள்

✓ இந்தியாவில், ஆண்டுதோறும் பிப்ரவரி.10 மற்றும் ஆக.10 ஆகிய தேதிகளில் தேசிய குடற்புழுநீக்க நாள் கடைப்பிடிக்–கப்படுகின்றது. 1–19 வயதிற்குள் இருப்போருக்கு குடற் புழுக்களை ஒழிப்பதை இந்நாள் நோக்கமாகக்கொண்டு உள்ளது. அவை மண்வழியாக பரவும் புழுக்களாகும்.

✓ WHOஇன் கூற்றுப்படி, இந்தியாவில், 1–14 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 241 மில்லியன் சிறார்கள், ஒட்டுண்ணி குடற்புழுக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

8. அண்மையில் காலமான லூக் மாண்டாக்னியர் அவரது எந்தக் கண்டுபிடிப்புக்காக மருத்துவத்துக்கான நோபல் பரிசை வென்றார்?

அ) மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ் (HIV) ☑

ஆ) எபோலா

இ) சிக்குன்குனியா

ஈ) ரோட்டா வைரஸ்



✓ நோபல் பரிசு வென்ற மூத்த தீநுண்மவியலாளர் லூக் மாண்டாக்னியர் சமீபத்தில் பாரிஸில் காலமானார். AIDS நோயை உண்டாக்கும் HIV வைரஸைக் கண்டறிந்ததற்–காக 2008ஆம் ஆண்டில் மருத்துவத்துக்கான நோபல் பரிசை அவர் தனது சக ஊழியரான பிராங்கோயிஸ் பார்–சினூசியுடன் இணைந்து பெற்றார்.

---

9. பால்–ஹென்றி சண்டோகோ டமிபா, சமீபத்தில் எந்த நாட்டின் அதிபராக அறிவிக்கப்பட்டார்?

அ) புர்கினா பாசோ ☑

ஆ) நமீபியா

இ) ஜிம்பாப்வே

ஈ) மாலி



✓ ஆப்பிரிக்க நாடான புர்கினா பாசோவின் அதிபராக தேசிய ஆயுதப்படையின் லெப்டினன்ட் கர்னலான பால் ஹென்றி சண்டாகோ டமிபா அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் நடந்த ஆட்சிக்கவிழ்ப்புக்குப்பிறகு அந்நாட்டின் உயர்மட்ட அரசியலமைப்பு அமைப்பு இந்த முடிவை அறிவித்துள்ளது.

---

10. 2021 ஜனநாயகக்குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 32

ஆ) 46 ☑

இ) 52

ஈ) 85



✓ சமீபத்தில் வெளியிடப்பட்ட EIUஇன் ஜனநாயகக்குறியீட்டு அறிக்கையில் இந்தியா 46ஆவது இடத்தில் உள்ளது.

✓ உலகளாவிய குறியீட்டில் இந்தியா 6.91 புள்ளிகளைப் பெற்றுள்ளது. நார்வே மற்றும் நியூசிலாந்து ஆகியவை முறையே முதல் இரண்டு இடங்களையும், வட கொரியா, மியான்மர், ஆப்கானிஸ்தான் ஆகியவை கடைசி இடத்திலும் உள்ளன. அரசியல் கலாச்சாரத்தில் குறைந்த மதிப்பெண்ணான 5–உம் தேர்தல் செயல்முறை மற்றும் பன்மைத்துவம் ஆகியவற்றில் அதிகபட்ச மதிப்பெண்ணா–ன 8.67–உம் இந்தியா பெற்றுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கீழடியில் பாசிமணிகள், யானை தந்த பகடை கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் தொடங்கப்பட்டுள்ள 8ஆம்கட்ட அகழாய்வில், முதல்முறை–யாக பாசிமணிகள், யானை தந்தத்தினாலான செவ்வக வடிவ பகடை ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள அகரம், மணலூர், கொந்தகை ஆகிய இடங்களில் ஏற்கெனவே நடைபெற்ற 7ஆம் கட்ட அகழாய்வுகளில், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பண்டையகால தமிழர்கள் பயன்படுத்திய தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கீழடியில் 8ஆம்கட்ட அகழாய்வுக்காக குழிகள் தோண்டப்பட்டன. இவற்றில் ஒரு குழியில் 2 பச்சை நிற பாசிமணிகளும், 2 ஊதா நிற பாசிமணிகளும் மற்றும் யானை தந்தத்தினாலான செவ்வக வடிவ பகடையும் கண்டெடுக்கப்பட்டன.

---

2. 18.02.2022 – 'சிந்தனைச் சிற்பி' ம. சிங்காரவேலர் 163ஆவது பிறந்தநாள்.

---

1. கஞ்சா சாகுபடியை ஒழிக்க 'ஆபரேஷன் பரிவர்தன்' என்றவொன்றைத் தொடங்கிய மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம் ☑

ஈ) கோவா

✓ கஞ்சா சாகுபடியை ஒழித்தற்காக ஆந்திர பிரதேச மாநிலக் காவல்துறை 'ஆபரேஷன் பரிவர்தன்' என்றவொரு சிறப்பு நடவடிக்கையைத்தொடங்கியுள்ளது. விசாகப்பட்டினத்தில் உள்ள சிறப்பு அமலாக்கப் பணியகத்துடன் இணைந்து ஆந்திர பிரதேச காவல்துறையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அண்மையில், சுமார் 2 லட்சம் கிகி பதப்படுத்தப்பட்ட கஞ்சா அம்மாநிலத்தில் கைப்பற்றப்பட்டது.

---

2. எந்த நாட்டுக்கு கோதுமை விநியோகம் செய்வதற்காக ஐநா உலக உணவு திட்டத்துடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?



அ) மாலத்தீவுகள்

ஆ) ஆப்கானிஸ்தான் ☑

இ) சிரியா

ஈ) இலங்கை

✓ 50,000 மெட்ரிக் டன் கோதுமையை விநியோகம் செய்வ –தற்காக ஐநா உலக உணவுத் திட்டத்துடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. மனிதாபிமான உதவியின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தானுக்கு உதவ இந்தியா உறுதி அளித்துள்ளது. சாலை வழியாக பாகிஸ்தானூடே சரக்கு உந்துகளில் அவை கொண்டு செல்லப்படவுள்ளன.

---

3. ஆளுநரால் மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்ட NEET எதிர்ப்பு மசோதாவை மீண்டும் நிறைவேற்றிய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கர்நாடகா

இ) பஞ்சாப்

ஈ) மேற்கு வங்காளம்

✓ தமிழ்நாட்டின் ஆளுநர் RN இரவியால் மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்ட NEET எதிர்ப்பு மசோதா, தமிழ்நாடு சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தொடரில் மீண்டும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவை மீண்டும் நிறைவேற்றி, அதை மீண்டும் ஆளுநருக்கு அனுப்புவதன் மூலம், அவர் அதை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ மருத்துவ மாணவர் சேர்க்கையில் NEET தாக்கம்குறித்து ஆராய நீதிபதி AK ராஜன் கமிட்டியை அரசு அமைத்தது.

---

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற குனோ பால்பூர் தேசியப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?



அ) பீகார் ஆ) உத்தரகாண்ட்

இ) அஸ்ஸாம் **ஈ) மத்திய பிரதேசம் ☑**

✓ சுமார் 8–12 சிறுத்தைகள், தென்னாப்பிரிக்கா, நமீபியா மற்றும் போட்ஸ்வானாவிலிருந்து மத்தியபிரதேச மாநிலம் குனோ பால்பூர் தேசியப்பூங்காவிற்கு கொண்டு வரப்பட உள்ளன. 1950களுக்குப் பிறகு விடுதலை இந்தியாவில் இவ்வினம் முற்றாக அழிந்தது.

✓ இந்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் கால நிலைமாற்றம் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், 'இந்தியாவில் சிறுத்தையை அறிமுகப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை' வெளியிட்டுள்ளார்.

---

5. 'ஒற்றை டிஜிட்டல் அடையாள கட்டமைப்பை'ச் செயல்ப –டுத்துவதற்காக பின்வரும் எந்த நாட்டிற்கு மானியம் வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?



அ) நேபாளம்

ஆ) இலங்கை ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) பங்களாதேஷ்

✓ 'ஒற்றை டிஜிட்டல் அடையாள கட்டமைப்பை' நடைமுறை –ப்படுத்துதற்கு இலங்கைக்கு மானியம் வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இது இந்தியாவின் ஆதார் அட்டையைப்போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இக்கட்டமைப்பை தேசிய அளவிலான வேலைத்திட்டமாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிப்பதாக இலங்கையின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

---

6. 'மேடாரம் ஜாதரா' கொண்டாடப்படுகிற மாநிலம் எது?



அ) மத்திய பிரதேசம்

ஆ) தெலுங்கானா ☑

இ) குஜராத்

ஈ) பீகார்

✓ தெலுங்கானாவின் கோயா பழங்குடியினர் சமூகத்தால் நான்கு நாட்கள் கொண்டாடப்படும், 'மேடாரம் ஜாதரா' கும்பமேளாவிற்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய திருவிழாவாகும். பழங்குடியினர் விவகார அமைச்சகம், நடப்பு 2022ஆம் ஆண்டு 'மேடாரம் ஜாதரா' தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ₹2.26 கோடி நிதியை வழங்கியுள்ளது.

---

7. முன்னாள் துருக்கிய ஏர்லைன்சு தலைவரான இல்கர் ஐசி, எந்த இந்தியன் ஏர்லைன்ஸின் MD மற்றும் CEOஆக நியமிக்கப்பட்டுள்ளார்?



அ) ஸ்பைஸ் ஜெட்

ஆ) இண்டிகோ

இ) ஏர் இந்தியா ☑

ஈ) விஸ்தாரா

✓ TATA குழுமம், துருக்கிய ஏர்லைன்சு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் இல்கர் ஐசியை ஏர் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயலதிகாரியாக நியமித்துள்ளது. அண்மையில் இந்திய அரசாங்கத்திடம் இருந்து கையகப்படுத்தப்பட்ட ஏர் இந்தியா நிறுவனத்தை

நடத்துவதற்கு ஒரு வெளிநாட்டு தலைவரை நியமிக்கும் TATA குழுமத்தின் திட்டங்களுக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

8. அமுதப்பெருவிழாவின்ஒருபகுதியாக,'புதியஎல்லைகள்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) நிலக்கரி அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ அமுதப்பெருவிழாக் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த 'புதிய எல்லைகள்' என்ற நிகழ்ச்சியை நடத்துகிறது. 2070ஆம் ஆண்டிற்குள் நிகர–சுழிய அளவிலான கார்பன் உமிழ்வை அடைவதற்கான வழிமுறைகள் குறித்த சிந்தனைக்கூட்டம் நடத்தப்பட்டது.

---

9. தேசிய ஆறுகள் இணைப்புக் கொள்கையின்கீழ் அமைக்கப்பட்ட முதல் நிறுவனம் எது?

அ) கென்–பெட்வா இணைப்புத் திட்ட ஆணையம் ☑

ஆ) காவிரி–கோதாவரி இணைப்புத் திட்ட ஆணையம்

இ) கோதாவரி–கிருஷ்ணா இணைப்புத் திட்ட ஆணையம்

ஈ) நர்மதை–தபதி இணைப்புத் திட்ட ஆணையம்

✓ தேசிய ஆறுகள் இணைப்புக் கொள்கையின் கீழ் முதல் முன்னெடுப்பைச்செயல்படுத்துதற்காக நடுவணரசு கென் –பெட்வா இணைப்புத் திட்ட ஆணையத்தை அமைத்து உள்ளது. இக்கொள்கை உத்தர பிரதேச மாநிலம் மற்றும் மத்திய பிரதேச மாநிலம் இடையே உள்ள புந்தேல்கண்ட் பகுதியில் கிட்டத்தட்ட 11 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை பாசனத்தின்கீழ் கொண்டுவர எண்ணுகிறது.

---

10. 2022 ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் எது?

அ) India Untouched

ஆ) Writing with Fire ☑



இ) Period. End of Sentence

ஈ) Jai Bhim

✓ திரைப்பட தயாரிப்பாளர்களான ரிந்து தாமஸ் மற்றும் சுஷ்மித் கோஷ் இயக்கிய 'ரைட்டிங் வித் பையர்' என்ற இந்திய ஆவணப்படம் 94ஆவது அகாதமி விருதுகளில் 'சிறந்த ஆவணப்படம்' பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக் –கப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் இதுவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. செயல்பாட்டுக்கு வந்தது தேசிய அணை பாதுகாப்பு ஆணையம்

நாட்டில் உள்ள அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையம் வெள்ளிக்கிழமை முதல் செயல்பாட்டுக்கு வந்தது.

தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தை அமைக்க வழி வகுப்பதற்கான மசோதாவுக்கு நாடாளுமன்றம் கடந்த டிச.8ஆம் தேதி ஒப்புதலளித்தது. இந்நிலையில், ஜல் சக்தி அமைச்சகம் வெளியிட்ட அரசாணையில், "தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தை மத்திய அரசு நிறுவுகிறது.

தேசிய அணை பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை அந்த ஆணையம் இனி நிறைவேற்றும். அந்த ஆணையத்துக்கு ஒரு தலைவரும், 5 உறுப்பினர்க –ளும் நியமிக்கப்படவுள்ளனர். ஐந்து உறுப்பினர்களும் கொள்கை–ஆராய்ச்சி, தொழில்நுட்பம், ஒழுங்குமுறை, பேரிடர், நிர்வாகம்–நிதி ஆகிய பிரிவுகளை நிர்வகிக்க உள்ளனர்.

ஆணையத்தின் தலைமையகம் தில்லியில் இடம்பெறும். 4 இடங்களில் ஆணையத்தின் பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநில அணை பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையே ஏற்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பணிகளை தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் மேற்கொள்ளும். அணைசார்ந்த பேரிடர்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் ஆணையம் மேற்கொள்ளும்.

தேசிய அணை பாதுகாப்பு குழுவையும் மத்திய அரசு அமைத்துள்ளது. 22 உறுப்பினர்களைக்கொண்ட அந்தக் குழுவின் தலைவராக மத்திய நீர் ஆணையத்தலைவர் செயல்படுவார். நாட்டில் 5,264 பெரிய அணைகள் உள்ளதாக தேசிய அணைகள் பதிவேடு குறிப்பிடுகிறது. மேலும் 437 அணைகள் கட்டப்பட்டு வருகின்றன.

---

2. நுகர்வோர் குறியீட்டு எண்: தமிழகம் முதலிடம்

வேளாண் மற்றும் ஊரகத்தொழிலாளர்கள் சார்ந்த அகில இந்திய குறியீட்டு எண் தரவரிசையில், தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்துக்கான வேளாண் மற்றும் ஊரகத் தொழிலாளர்கள் சார்ந்த அகில இந்திய நுகர்வோர் குறியீட்டு எண் முறையே 2 மற்றும் 1 புள்ளிகள் குறைந்து, வேளாண் தொழிலாளர்களுக்கு 1095–ஆகவும், ஊரகத் தொழிலாளர்களுக்கு 1105 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் வேளாண் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண் வரிசையில் 1,292 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. 869 புள்ளிகளுடன் இமாசலபிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது. ஊரகத் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண்ணின் பட்டியலில் 1,278 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடத்திலும், 917 புள்ளிகளுடன் இமாசல பிரதேசம் கடைசி இடத்திலும் உள்ளன.

விவசாயம் மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்களில் அதிகபட்ச சரிவு உத்தர பிரதேசத்தில் (தலா 9 புள்ளிகள்) ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கோதுமை, தானியங்கள், காய்கறிகள் & பழங்க –ள் உள்ளிட்டவற்றின் விலைவீழ்ச்சி இதற்கு காரணமாகும்.

அரிசி, சோளம், காய்கறிகள் மற்றும் பழங்கள், இறைச்சி உள்ளிட்டவற்றின் விலை உயர்வு காரணமாக, விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்களில் அதிகபட்சமான உயர்வை இமாசல பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியன சந்தித்துள்ளன.

---

3. விவசாய ட்ரோன் திட்டம்: பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்

நாடு முழுவதும் 100 இடங்களில் விளைநிலங்களில் பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட பொருள்களைத் தெளிப்பதற்கான விவசாய ட்ரோன் திட்டத்தை பிரதமர் மோடி காணொலி வாயிலாக தொடக்கிவைத்தார்.

அடுத்த 2 ஆண்டுகளில் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின்கீழ், கருடா ஏர்ஸ்பேஸ் நிறுவனம் ஒரு லட்சம் ட்ரோன்களை தயாரிக்க இலக்கு நிர்ணயித்திருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஏற்கனவே, 'ஸ்வாமிதா' திட்டத்தின்கீழ் ட்ரோன்கள்மூலம் கிராமங்களின் நிலம் மற்றும் வீடுகளின் வரைபடம் தயாரிக்கப்படுகிறது. ட்ரோன்கள் மூலம் மருந்துகள் அனுப்பப்படுகின்றன. தொலைவில் உள்ள பகுதிகளுக்கு தடுப்பூசிகள் சென்று சேருகின்றன. வயல்களில் பூச்சிமருந்து தெளிக்கவும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

---

4. இந்திய–ஐக்கிய அரபு அமீரக வர்த்தக ஒப்பந்தம்: ஆபரணத் துறையின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும்

இந்திய–ஐக்கிய அரபு அமீரக தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்நாட்டில் ஆபரண துறையின் ஏற்றுமதியை பெரிதும் ஊக்குவிக்கும் என மத்திய வர்த்தக செயலர் பி.வி.ஆர். சுப்ரமணியம் சனிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

தங்கம் இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 800 டன் தங்கத்தை நம்நாடு இறக்குமதி செய்து கொள்கிறது.

இந்தச் சூழ்நிலையில், இந்திய–ஐக்கிய அரபு அமீரக வா'த்தக ஒப்பந்தம் நாட்டின் ஆபரண துறையை ஊக்குவிப்பதில் பெரும் பங்கு வகிக்கும். ஏனெனில், இந்த ஒப்பந்தத்தில் யுஏஇ சந்தையை இந்திய ஆபரண துறை வரி விதிப்பின்றி அணுகுவதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

அதேபோன்று, கடந்த 2020–21–ஆம் ஆண்டில் இந்தியா யுஏஇ–விலிருந்து 70 டன் தங்கத்தை இறக்குமதி செய்துள்ளது. இந்த நிலையில், 200 டன் தங்கம் வரையிலான இறக்குமதிக்கு வரிச் சலுகை அளிக்க இந்த ஒப்பந்தத்தில் இந்தியா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு ஆபரண தயாரிப்பாளர்கள் ஐக்கிய அரபு அமீரக சந்தையை வரி விதிப்பின்றி பயன்படுத்திக் கொள்வது இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆதாயத்தை அளிக்கும். தற்போது இந்திய ஆபரணங்களுக்கு ஐக்கிய அரபு அமீரக சந்தையில் 5 சதவீத வரி விதிக்கப்படும் நிலையில் இந்த புதிய ஒப்பந்தத்தில் அது பூஜ்யமாக மாற்றப்பட்டுள்ளது என்றார் அவர்.

---

5. சேதி தெரியுமா?

பிப்.4: சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் 24–வது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின. ஒலிம்பிக் போட்டிகளில் 91 நாடுகளைச் சேர்ந்த 2,871 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

பிப்.5: வைணவ மத ஆச்சார்யர்களில் ஒருவரும் இந்துமத சீர்த்திருத்தவாதியுமான ராமானுஜரின் ஆயிரமாவது பிறந்த நாளையொட்டி தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் 216 அடி உயரத்தில் பஞ்சலோக சிலையைப் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

பிப்.6: இந்தியாவின் 'நைட்டிங்கேல்' என்றழைக்கப்பட்ட பழம் பெரும் பாடகி லதா மங்கேஷ்கர் (92) கரோனா தொற்றுப் பாதிப்பால் காலமானார். இவர் பத்ம பூஷண், பத்ம விபூஷண், பாரத ரத்னா, தாதா சாகேப் பால்கே எனப் பல விருதுகளை பெற்றவர்.

பிப்.6: பிரிட்டனின் இராணி 2ஆம் எலிசபெத், இராணியாக முடிசூடிய எழுபதாம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இவருடைய தந்தை ஆறாம் ஜார்ஜ் மறைவுக்குப் பிறகு 1952 பிப்.6 அன்று இராணியானார் எலிசபெத்.

பிப்.8: நீட் தேர்விலிருந்து விலக்குக்கோரும் சட்ட மசோதாவை சிறப்புச் சட்டப் பேரவைக் கூட்டத்தைக் கூட்டித் தமிழக அரசு மீண்டும் இயற்றியது. அது ஆளுநர் ஆர்.என். இரவிக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டது. முன்னதாக இயற்றப்பட்ட தீர்மானத்தை ஆளுநர், தமிழக அரசுக்குத் திருப்பி அனுப்பினார்.

பிப்.9: ஹிஜாப் விவகாரத்தில் பள்ளிகளில் சீருடை மட்டுமே அணிய வேண்டும் என்கிற கர்நாடக அரசின் உத்தரவுக்குத் தடை விதிக்க கர்நாடக உயர்நீதிமன்றம் மறுத்தது.

பிப்.10: சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக முனீஷ்வர் நாத் பண்டாரியை நியமித்துக் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டார்.

---

1. ஓய்வூதியம் வழங்குவதற்கான முழு செயல்முறையை –யும் டிஜிட்டல் மயமாக்கியுள்ள மாநிலம்/UT எது?

அ) தமிழ்நாடு



ஆ) புது தில்லி ☑

இ) புதுச்சேரி

ஈ) கோவா

✓ தில்லி அரசு ஓய்வூதியம் வழங்கும் முழு செயல்முறையை –யும் டிஜிட்டல் மயமாக்கியுள்ளது. விண்ணப்பப்படிவத்தை நிரப்புவது முதல் ஓய்வூதியம் வழங்குவது வரை முழு செயல்முறையும் இனி இணையவழியிலேயே இருக்கும். தில்லியின் சமூக நலத்துறை இந்தச் செயல்முறையை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. மேலும், ஓய்வூதியம் வழங்குவதில் எந்தவித இடையூறும், தாமதமும் ஏற்படாது என்றும் அது அறிவித்துள்ளது.

---

2. தங்கப்பத்திரத்திட்டத்தின் முதிர்வுக்காலம் என்ன?

அ) 8 ஆண்டுகள் ☑

ஆ) 10 ஆண்டுகள்

இ) 5 ஆண்டுகள்

ஈ) 4 ஆண்டுகள்

✓ 'சவரன் தங்கப்பத்திரங்கள்' என்பது இந்திய அரசாங்கத்தி –ன் சார்பாக ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் கிராம் தங்கத்தில் குறிப்பிடப்படும் அரசுப்பத்திரங்களாகும். சவரன் தங்கப்பத்திரத்தின் முதிர்வுக்காலம் 8 ஆண்டுகள்.

✓ அத்தகைய தங்கப்பத்திரங்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்தாவது ஆண்டுக்குப் பிறகு முன்கூட்டியே திரும்பப் பெறுதல் அனுமதிக்கப்படுகிறது.

---

3. சமீப நாடாளுமன்றக்குழு அறிக்கையின்படி, MGNREGA இல் உத்தேச 'உத்தரவாத வேலைநாட்கள்' எத்தனை?

அ) 90



ஆ) 120

இ) 150 ☑

ஈ) 350

✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டத்தில் (MGNREGA) 'உத்தரவாதமுள்ள வேலைநாட்களை 100இல் இருந்து 150ஆக அதிகரிக்க நாடாளுமன்றக்குழு பரிந்து –ரைத்துள்ளது. மேலும் இந்தத் திட்டம் கிராமப் புறங்களில் உள்ள பலருக்கு கடைசி விருப்பமாக உள்ளது என்பதையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

✓ சிவசேனை உறுப்பினர் பிரதாப்ராவ் ஜாதவ் தலைமையி –லான ஊரக வளர்ச்சி & பஞ்சாயத்து இராஜ் தொடர்பான நிலைக்குழு தனது அறிக்கையை அண்மையில் மக்களவையில் தாக்கல்செய்தது.

---

4. USAID உடன் இணைந்து SAMRIDH முன்னெடுப்பின் கீழ் புதிய கூட்டாண்மையை அறிவித்த நிறுவனம் எது?

அ) NITI ஆயோக் ☑

ஆ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

NITI Aayog

இ) ஐநா பெண்கள் அமைப்பு

ஈ) பெண்களின் உலகளாவிய அதிகாரமளிக்கும் நிதியம்

✓ அடல் புத்தாக்க இயக்கம் (AIM), NITI ஆயோக் மற்றும் US பன்னாட்டு வளர்ச்சிக்கான முகமை (USAID) ஆகியவை Sustainable Access to Markets and Resources for Innovative Delivery of Healthcare (SAMRIDH)இன்கீழ் ஒரு புதிய கூட்டாண்மையை அறிவித்தன.

✓ AIM, NITI ஆயோக் உடனான கூட்டு, சுகாதாரத்துறையில் செலவினங்களின் தரத்தை மேம்படுத்துதற்கு நீடித்த சுகாதார மாதிரிகள் மற்றும் புதுமையான நிதியளிப்பு வழிமுறைகளை அடைவதற்கான SAMRIDH திட்டத்தின் முயற்சிகளை ஊக்குவிக்கும்.

---

5. 'வேளாண்மை மற்றும் நீர்வளத்துறையில்' மிகவும் மேம்பட்ட முன்னேற விழையும் மாவட்டங்களில் முதல் இடத்தில் உள்ள மல்கங்கிரி உள்ள மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம்



ஆ) ஒடிஸா ☑

இ) தெலுங்கானா

ஈ) பஞ்சாப்

✓ 2021 டிசம்பரில் வேளாண் மற்றும் நீர்வளத்துறையில் மிகவும் மேம்பட்ட ஐந்து மாவட்டங்களை NITI ஆயோக் அறிவித்துள்ளது. அப்பட்டியலில் ஒடிஸாவின் மல்கங்கிரி மாவட்டம் முதலிடத்திலுள்ளது. அதைத்தொடர்ந்து மத்திய பிரதேச மாநிலத்தின் சத்தர்பூரும், ஜம்மு–காஷ்மீரின் பாரமுல்லாவும் உள்ளன. இது, NITI ஆயோக் வெளியிட்டுள்ள டெல்டா தரவரிசையின்படி உள்ளது.

---

6. 'உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டை' நடத்துகிற நிறுவனம் எது?

அ) UNFCCC

ஆ) NITI ஆயோக்

இ) எரிசக்தி மற்றும் வள நிறுவனம் ☑

ஈ) பாபா அணு ஆராய்ச்சி மையம்

✓ எரிசக்தி மற்றும் வளநிறுவனமானது (TERI) உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டின் சமீபத்திய பதிப்பை நடத்தியது. 'Towards a Resilient Planet: Ensuring a Sustainable and Equitable Future' என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற்ற இந்த உச்சிமாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

✓ கயானா குடியரசுத்தலைவர் டாக்டர் இர்பான் அலி மற்றும் ஐநாஇன் துணைப்பொதுச்செயலாளர் ஆகியோர் முக்கிய உரைகளை ஆற்றினர்.

---

7. 2022–23 மத்திய பட்ஜெட்டில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனாவுக்கான (PMAY) செலவினம் எவ்வளவு?

அ) ₹96,000 கோடி

ஆ) ₹75,000 கோடி

இ) ₹48,000 கோடி ☑

ஈ) ₹36,000 கோடி

- ✓ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், 2022–23ஆம் ஆண்டில் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின்கீழ் 80 இலட்சம் வீடுகளை கட்டிமுடிக்க ₹48,000 கோடி ஒதுக்கீடுசெய்தார்.
- ✓ சமீபத்தில், ஆந்திரபிரதேசம், சத்தீஸ்கர், இமாச்சலபிரதேசம், கர்நாடகா மற்றும் இராஜஸ்தான் ஆகிய 5 மாநிலங்களில் 60,000க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டுவதற்கான திட்ட முன்மொழிவுகளுக்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

---

8. டார்க்–நெட் சந்தைகளை ஒழிப்பதற்கான தீர்வுகளைக் கண்டறிய 'டார்கத்தான்–2022' முன்னெடுப்பை ஏற்பாடு செய்துள்ள நிறுவனம் எது?

அ) மத்திய புலனாய்வுப் பணியகம்

ஆ) போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் ☑



இ) அமலாக்க இயக்குநரகம்

ஈ) தேசிய புலனாய்வு நிறுவனம்

- ✓ போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகமானது டார்க்–நெட் சந்தைகளை ஒழிப்பதற்கான தீர்வுகளைக்கண்டறிய 'டார்கத்தான்–2022' முயற்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- ✓ 'டார்க்நெட்' மூலம் போதைப்பொருள் கடத்தலைத்தடுக்க பயனுள்ள தீர்வுகளைக் கண்டறிவதற்கு மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை ஈடுபடுத்துவதை இந்த முயற்சி நோக்கங்கொண்டுள்ளது. NCB என்பது உள்துறை அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு சட்ட அமலாக்க மற்றும் புலனாய்வு நிறுவனமாகும்.

---

9. எந்த நாட்டுடனான புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?

அ) இஸ்ரேல்



ஆ) ஆஸ்திரேலியா ☑

இ) அமெரிக்கா

ஈ) நியூசிலாந்து

- ✓ இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான ஒப்புதல் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளன. இது மலிவு விலை சூரிய மற்றும் தூய ஐட்ரஜனின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கம் எனக்கொண்டுள்ளது. 4ஆவது இந்தியா–ஆஸ்திரேலியா எரிசக்தி பேச்சுவார்த்தையின்போது இது கையெழுத்தான –து. இந்தக்கூட்டத்திற்கு இந்திய தரப்பிலிருந்து மத்திய மின்சாரம், புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் RK சிங் மற்றும் ஆஸ்திரேலிய தரப்பிலிருந்து அந்நாட்டின் எரிசக்தி மற்றும் உமிழ்வு குறைப்பு அமைச்சர் ஆங்கஸ் டைலர் ஆகியோர் தலைமை வகித்தனர்.

---

10. PM கதி சக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?

அ) திறன் மேம்பாடு



ஆ) உட்கட்டமைப்பு மேம்பாடு ☑

இ) சுகாதார மேம்பாடு

ஈ) ஏற்றுமதி வளர்ச்சி

- ✓ 16 அமைச்சகங்களை ஒன்றிணைத்து, ஒருங்கிணைந்த திட்டமிடல் & உட்கட்டமைப்பு இணைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் 'கதிசக்தி' என்பது ஒரு டிஜிட்டல் தளமாகும்.
- ✓ சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகத்தின் படி, பிரதமர் கதிசக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தின்கீழ் 22 பசுமையான விரைவுச்சாலைகள், பிற நெடுஞ்சாலைகள் உட்பட 23 முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் 35 பன்மாதிரி போக்குவரவுப் பூங்காக்கள் ஆகியவற்றை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வளர்ச்சிக்கான என்ஜினாக வடகிழக்கு இந்தியா: பிரதமர் மோடி

21ஆம் நூற்றாண்டில் நாட்டின் வளர்ச்சிக்கான என்ஜினாக வடகிழக்கு இந்தியா இருக்கும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 1987ஆம் ஆண்டு பிப்.20ஆம் தேதி யூனியன் பிரதேசமாக இருந்த அருணாசல பிரதேசம் மாநில அந்தஸ்து பெற்றது. அத்துடன் அந்த மாநிலத்துக்கு அருணாசல பிரதேசம் என்று பெயர்சூட்டப்பட்டு 50 ஆண்டுகளாகியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த முதல் ஆளுநருக்கு விருது:

அருணாசல பிரதேசத்தின் முதல் துணைநிலை ஆளுநராக பதவி வகித்தவர் காலஞ்சென்ற கே.ஏ.ஏ.ராஜா. தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். அருணாசல பிரதேசம் யூனியன் பிரதேசமாக இருந்தபோது, அதன் சமூக–பொருளாதார மற்றும் நிர்வாக வளர்ச்சிக்காக கே.ஏ.ஏ.ராஜா அளப்பரிய பங்களிப்பை வழங்கினார். அவருக்கு அருணாசல பிரதேசத்தின் உயரிய விருதான 'அருணாசல் ரத்னா' வழங்க முடிவு செய்யப்பட்டது. அந்த விருதை மாநிலத்தின் தற்போதைய ஆளுநர் பி.டி.மிஸ்ரா கே.ஏ.ஏ.ராஜாவின் மூத்தமகள் விஜயலட்சுமியிடம் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

---

2. மெட்ரோ இரயில் திட்டங்களை அமல்படுத்த தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களிடமிருந்து 16 திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன: மத்திய அமைச்சர் தகவல்

நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக பதில் அளித்த மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறியதாவது:

நகர்ப்புற மேம்பாட்டில், நகர்ப்புற போக்குவரத்து ஒருங்கிணைந்த பகுதி. இது மாநிலம் சம்பந்தப்பட்ட விஷயம். இதனால், மெட்ரோ இரயில் திட்டங்கள் உட்பட நகர்ப்புற போக்குவரத்து கட்மைப்பை உருவாக்குவது.

அதற்கான நிதியை திரட்டுவது மாநில அரசுகளின் பொறுப்பு. மெட்ரோ இரயில் கொள்கை 2017இன்படி, நகரங்களில் இது போன்ற திட்டங்களுக்கான நிதி

உதவியை, திட்டங்களின் சாத்தியம், நிதி ஆதாரம், மாநிலங்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசு வழங்கிவருகிறது. மத்திய அரசின் நிதி உதவிக்காக குஜராத் அரசு எந்த புதிய மெட்ரோ இரயில் திட்டத்தையும் சமர்பிக்கவில்லை.

தமிழ்நாடு, தில்லி, மகாராஷ்டிரா, கேரளா, உத்தரப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஹரியானா, உத்தரகாண்ட், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து மெட்ரோ இரயில் திட்டங்களை அமல்படுத்த 16 திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.

---

3. குடிதண்ணீர் தரத்தை பரிசோதிப்பதற்காக தமிழ்நாட்டில் உள்ள ஆய்வகங்கள் குறித்த விவரங்கள்

நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய ஜல் சக்தி இணை அமைச்சர் திரு. ப்ரகலாத் சிங் படேல், கீழ்காணும் தகவல்களை வெளியிட்டார்.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் அளித்துள்ள தகவல்களின் படி, மாநிலம், மாவட்டம், துணைப்பிரிவு மற்றும்/அல்லது வட்ட அளவில் 2021 குடிநீர் தர சோதனை ஆய்வகங்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள குழாய் நீர் இணைப்புக்கள் குறித்த தகவல்கள் மாநிலம்/யூனியன் பிரதேசங்கள், மாவட்டம் மற்றும் கிராமம் வாரியாக ஜல் ஜீவன் இயக்கத்தின் தகவல் பலகை இணைப்பான https://ejalshakti.gov.in/jjmreport/JJMIndia.aspx எனும் முகவரியில் கிடைக்கிறது:

தமிழ்நாட்டில் மாநில அளவில் 1 ஆய்வகமும், மாவட்ட அளவில் 31 ஆய்வகங்களும், துணைப்பிரிவு மற்றும்/அல்லது வட்ட அளவில் 81 ஆய்வகங்களும் என மாநிலம் முழுவதும் 113 ஆய்வகங்கள் உள்ளன.

2019 ஆகஸ்ட் 15 அன்று தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் 126.89 லட்சம் வீடுகளும், அவற்றில் 21.76 லட்சம் வீடுகளில் குடிநீர் குழாய் இணைப்புக்களும் இருந்த நிலையில், 29.21 லட்சம் வீடுகளில் தற்போது குடிநீர் குழாய் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

4. ஸ்வாமித்வா திட்டத்தின் நிலை: தமிழ்நாடு குறித்த விவரங்கள்

நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சர் கபில் மோரேஷ்வர் பாடீல் கீழ்காணும் தகவல்களை வழங்கினார்.

கிராமப்புற பகுதிகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆய்வு செய்து வரைபடமிடுதலுக்கான மத்திய திட்டமான ஸ்வாமித்வா, 2020–21–ம் நிதியாண்டில் தொடங்கப்பட்டது. கிராமங்களில் உள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு சொத்து அட்டைகள்/ஆவணங்கள் வழங்குவதன் மூலம் சொத்துக்கான உரிமையை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

பஞ்சாயத்துராஜ் அமைச்சகம், இந்திய ஆய்வு அமைப்பு, மாநில வருவாய் துறை, மாநில பஞ்சாயத்துராஜ் துறை, மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன. இத்திட்டத்திற்காக இதுவரை 29 மாநிலங்கள் சர்வே ஆஃப் இந்தியா எனப்படும் இந்திய ஆய்வு அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

நாடு முழுவதும் 103,644 கிராமங்களில் ட்ரோன் விமானங்கள் இயக்கப்பட்டு, 28,072 கிராமங்களில் 36,56,173 எண்ணிக்கையிலான சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 2 கிராமங்களிலும், புதுச்சேரியில் 19 கிராமங்களிலும் இத்திட்டத்தின் கீழ் ட்ரோன் விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன.

---

5. தமிழ்நாடு மற்றும் அதன் சாத்தியமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை ஆராய்தல்: இந்தியா–ஜப்பான் இடையே இணைய கருத்தரங்கு

சுதந்திர இந்தியாவின் 75ஆம் ஆண்டு தின கொண்டாட்டம் மற்றும் இந்தியா–ஜப்பான் தூதரக உறவின் 70ஆவது ஆண்டை முன்னிட்டு சென்னையில் உள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி வாரிய (APEDA) அலுவலகம், தமிழ்நாடு மற்றும் அதன் சாத்தியமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை ஆராய்தல் குறித்த இந்தியா – ஜப்பான் இணைய கருத்தரங்கை இன்று நடத்தியது.

இந்த இணைய கருத்தரங்கு, முருங்கை, செவ்வாழை, தினைகள், மூலிகைகள், மா மற்றும் அவற்றின் மதிப்பு கூட்டு தயாரிப்புகள், கொய்யா, மாதுளை, நெல்லி மற்றும் எலுமிச்சைபோன்ற தமிழ்நாட்டின் ஏற்றுமதிக்கு சாத்திய –மான வேளாண் பொருட்கள்மீது கவனம் செலுத்தியது.

---

1. எந்த நாட்டைச்சேர்ந்த அறிவியலாளர்கள் 59 MJ நீடித்த ஆற்றலை உருவாக்கி அணுக்கரு இணைவு ஆற்றலில் மைல்கல் சாதனையை எட்டியுள்ளனர்?



அ) அமெரிக்கா

ஆ) சீனா

இ) இந்தியா

ஈ) UK ☑

✓ UK'இல் உள்ள அறிவியலாளர்கள் அணுக்கரு இணைவு ஆற்றலை உற்பத்தி செய்வதில் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளனர். சூரியனில் ஆற்றல் உற்பத்தி செய்யப்படும் முறையை இது பின்பற்றுகிறது.

✓ மத்திய இங்கிலாந்தில் உள்ள Joint European Torus (JET) வசதியிலுள்ள ஒரு குழு ஒரு பரிசோதனையின் போது 59 மெகா ஜூல்கள் நீடித்த ஆற்றலை உருவாக்கியது. ஒரு கிலோ இணைவு எரிபொருளில் ஒரு கிலோ நிலக்கரி, எண்ணெய் அல்லது எரிவாயுவால் உண்டாக்கப்படும் ஆற்றலைவிட 10 மில்லியன் மடங்கு ஆற்றல் உள்ளது.

---

2. கல்விநிலைகுறித்த ஆண்டறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) பிரதம் அறக்கட்டளை ☑

இ) கல்வி அமைச்சகம்

ஈ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ பிரதம் அறக்கட்டளை ஆண்டுதோறும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை ஆய்வுசெய்வதற்காக பள்ளிகளில் விரிவான ஆய்வை நடத்துகிறது. சமீபத்தில், அது கல்வி நிலைகுறித்த ஆண்டறிக்கையை (ASER, மேற்கு வங்கம்) வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, மேற்கு வங்கத்தில் பள்ளி மாணவர்களின் அடிப்படை வாசிப்பு மற்றும் எண் திறன்கள் COVID–19 காலத்தில் குறைந்துள்ளன.

---

3. எந்த வளரும் நாடு, டிரோன்களை இறக்குமதி செய்ய தடைவிதித்துள்ளது?

அ) இந்தியா ☑



ஆ) இந்தோனேசியா

இ) அர்ஜென்டினா

ஈ) பிரேசில்

✓ இந்திய வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் ஆளில்லா வானூர்திகளை (டிரோன்) இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, ராணுவ மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதற்கு இதில் விலக்களிக்கப்பட்டுள்ளது.

✓ இந்த நடவடிக்கையானது உலகின் தலைசிறந்த டிரோன் தயாரிப்பாளரான சீனாவின் SZ DJI'இன் சந்தையைத் தடுக்கிறது மற்றும் உற்பத்தியை அதிகரிக்க இந்தியாவின் உள்ளூர் தொழிற்துறையை ஊக்குவிக்கிறது.

---

4. 2022 பிப்ரவரி நிதிக்கொள்கைக்குழுக்கூட்டத்திற்குப் பிறகு, புதிய கொள்கை ரெப்போ விகிதம் என்ன?



அ) 3.75%

ஆ) 4.00% ☑

இ) 4.25%

ஈ) 4.50%

✓ ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக்குழு பாலிசி ரெப்போ விகிதத்தை 4 சதவீதமாக மாற்றாமல் இருக்க ஒருமனதாக வாக்களித்துள்ளது. ரிவர்ஸ் ரெப்போ விகிதமும் மாறாமல் 3.35 சதவீதமாக உள்ளது. ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸின் கருத்துப்படி, 'இணக்க' நிலைப்பாடு தேவைப்படும் காலம் வரை தொடரும்.

---

5. 'நம்ம ஷாலே நன்னா கொடுகே' செயலியானது எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் முன்னெடுப்பாகும்?



அ) மேற்கு வங்கம்

ஆ) கர்நாடகா ☑

இ) தெலுங்கானா

ஈ) பஞ்சாப்

✓ கர்நாடக மாநிலத்தின் தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வித்துறை, 'நம்ம ஷாலே நன்னா கொடுகே' என்ற செயலியை உருவாக்கியுள்ளது. இது அரசுப்பள்ளிகளின் உட்கட்டமைப்புத் தேவைகள், ஆசிரியர் பற்றாக்குறை, கற்றல் கருவிகளின் சிறந்த பயன்பாடு மற்றும் பெரு நிறுவன சமூகப்பொறுப்பு நிதியைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

6. NASA'இன் கூற்றுப்படி, 2022 வரை சுற்றுப்பாதையில் கண்காணிக்கப்பட்ட மொத்த பொருட்களின் எண்ணிக்–கை என்ன?

25 000

அ) 1000

ஆ) 10000

இ) 25000 ☑

ஈ) 50000

✓ NASA'இன் அண்மைய அறிவிப்பின்படி, சுற்றுப்பாதையில் தற்போதுவரை மொத்தம் 25,000 பொருட்கள் கண்காணி–க்கப்பட்டுள்ளன. ஸ்பேஸ்X'இன் Gen2 விரிவாக்கம் 30 ஆயிரம் செயற்கைக்கோள்களை ஏவுவதை உள்ளடக்கி உள்ளது. அது சுற்றுப்பாதையில் கண்காணிக்கப்படும் பொருட்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும்.

---

7. ஒரு சமீபத்திய ஆய்வின்படி, இந்தியாவின் எந்தத்தேசிய பூங்கா, தான் உறிஞ்சும் அளவைவிடவும் அதிக கரியமில வளியை (CO_2) வெளியிடுகிறது?



அ) பக்கே புலிகள் காப்பகம்

ஆ) காசிரங்கா தேசிய பூங்கா ☑

இ) நம்தாபா தேசிய பூங்கா

ஈ) குனோ தேசிய பூங்கா

- ✓ ஒரு சமீபத்திய ஆய்வின்படி, அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள காசிரங்கா தேசிய பூங்கா, தான் உறிஞ்சுவதைவிட அதிக கரியமில வாயுவை (CO_2) வெளியிடுகிறது. இத்தேசிய பூங்காவில் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் உள்ளது.
- ✓ வழக்கமாக, காடுகள் அவை வெளியிடுவதைவிட அதிக CO_2'ஐ உறிஞ்சுகின்றன. இதனால் அவ்விடத்தில் CO_2' இன் அளவுஅதிகரித்துவிடும். அப்பகுதியில் மழைப்பொழிவு குறைந்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

---

8. 'உலக பருப்பு நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 8

ஆ) பிப்ரவரி 10 ☑

இ) பிப்ரவரி 12

ஈ) பிப்ரவரி 15

- ✓ 'உலக பருப்பு நாளானது' ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி.10 அன்று கொண்டாடப்படுகிறது. 2019ஆம் ஆண்டில் ஐநா பொதுச்சபை, உலகளவில் பருப்பு வகைகளுக்கான விழிப்புணர்வு மற்றும் அணுகலை அதிகரிப்பதற்காக இந்நாளை உருவாக்கியது. "Pulses to empower youth in achieving sustainable agri-food systems" என்பது நடப்பு 2022'இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

9. 'இந்திய அருங்காட்சியகங்களின் மறு-உருவாக்கம்' என்ற உச்சிமாநாட்டை ஏற்பாடுசெய்த மத்திய அமைச்சகம் / நிறுவனம் எது?

அ) கலாச்சார அமைச்சகம் ☑

ஆ) சுற்றுலா அமைச்சகம்

இ) NITI ஆயோக்

ஈ) UNESCO

- ✓ "இந்தியாவின் அருங்காட்சியகங்களை மறு-உருவாக்கம்" செய்வதுகுறித்து முதன்முறையாக உலகளாவிய இரு நாள் உச்சிமாநாட்டிற்கு மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. 75ஆவது அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ கட்டடக்கலை மற்றும் செயல்பாட்டுத் தேவைகள், நிர்வாகம், சேகரிப்பு (பராமரிப்பு, பாதுகாப்பு நடைமுறைகள் உட்பட), கல்வி மற்றும் பார்வையாளர் ஈடுபாடு ஆகிய 4 கருப்பொருட்களைக் கொண்டதாக இம்மாநாடு இருக்கும்.

---

10. 2022ஆம் ஆண்டில் G20'இன் தலைமைப்பொறுப்பை வகிக்கும் நாடு எது?

அ) இந்தியா

ஆ) இந்தோனேசியா ☑

இ) சீனா

ஈ) ஜப்பான்

- ✓ 2022ஆம் ஆண்டில்இந்தோனேசியா G20இன் தலைமைப் பொறுப்பை வகிக்கிறது. G20இன் 2ஆவது நிதி மற்றும் மத்திய வங்கிப் பிரதிநிதிகள் கூட்டமானது எதிர்கால தொற்றுநோய்களைச் சமாளிக்க நீண்டகால பொருளாதார மீட்பு உத்தியைக்கொண்ட ஒரு தகவல்தொடர்பு வரைவை உருவாக்கியது.
- ✓ முதலாவது நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில் இந்த அறிக்கை வரைவு மேலும் விவாதிக்கப்படும். இந்த ஆண்டு G20இன் கருப்பொருள் "Recover Together, Recover Stronge" என்பதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அகரமுதலி இயக்ககத்தில் தாய்மொழி நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்பட்டு வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில், "எப்பொழுதும் முப்பொழுதும் எந்தமிழே!" என்னும் பொருண்மையில் உலகத்தாய்மொழி நாள் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

---

2. 12 – 18 வயதினருக்கு தடுப்பூசி செலுத்த அனுமதி: மத்திய அரசு

நாட்டில் 12 – 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கும் கரோனா தடுப்பூசி செலுத்த இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது. 'கோர்பேவாக்ஸ்' என்ற தடுப்பூசியை 12 – 18 வயதுக்குள்பட்ட சிறார்களுக்கு செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் உள்நாட்டு தயாரிப்பான 'கோர்பெவேக்ஸ்' தடுப்பூசிக்கு, அவசரகால பயன்பாட்டுக்கான அனுமதியை இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு வழங்கியிருப்பதாக பயாலஜிகல் இ லிட் தெரிவித்துள்ளது. ஏற்கனவே, 16 – 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு 'கோவேக்ஸின்' இரு தவணை தடுப்பூசி செலுத்த அனுமதி வழங்கப்பட்டு, அந்தத்திட்டம் செயல்படுத்-தப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.

---

3. நீலப்பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா – பிரான்ஸ் ஒப்பந்தம்

நீலப்பொருளாதாரம், கடல்சார் நிர்வாகம் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்த வழிவகுக்கும் ஒப்பந்தத்தில் இந்தியாவும் பிரான்ஸும் கையொப்பமிட்டுள்ளன.

தென்சீனக்கடல், கிழக்கு சீனக்கடல், இந்தோ-பசிபிக் பிராந்தியம் உள்ளிட்ட பகுதிகளில் சீனா தனது ஆதிக்கத்தை அதிகரித்து வரும் நிலையில், இந்த ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

ஐரோப்பிய நாடான பிரான்ஸுக்கு வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்-ளார். அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜீன் ஈவ் லெடிரையனை அவர் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

அப்போது, கடல்சார்ந்த நீலப்பொருளாதாரத்தில் இரு நாடுகளுக்கிடையே நிலவும் நல்லுறவை வலுப்படுத்த வழிகாட்டும் ஒப்பந்தம் கையொப்பமானது.

---

3. டி20 தரவரிசையில் இந்தியா முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC), டி20 கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நேற்றுமுன் தினம் நடைபெற்ற கடைசி டி20 ஆட்டத்தில் 17 இரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 3 ஆட்டங்கள்கொண்ட தொடரை முழுமையாக 3–0 என கைப்பற்றி கோப்பை –யைவென்ற இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறி உள்ளது.

இங்கிலாந்து, இந்தியா அணிகள் மதிப்பீடு புள்ளிகளை (269) ஒரே மாதிரியாக பெற்ற போதிலும் ஒட்டுமொத்த புள்ளிகள் கணக்கில் இந்திய அணி 10,484 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறது. இங்கிலாந்து 10,474 புள்ளிகளை பெற்று 2ஆம் இடத்தில் உள்ளது.

1. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற கிரிம்சன் ரோஸ் சார்ந்த இனம் எது?

அ) பூ



ஆ) பட்டாம்பூச்சி ☑

இ) பாண்டா

ஈ) பாம்பு

✓ கிரிம்சன் ரோஸ் என்பது ஒரு பெரிய பட்டாம்பூச்சியாகும்; அதன் இறக்கைகள் மற்றும் உடலில் கருப்பு, வெள்ளை மற்றும் கருஞ்சிவப்பு நிறங்கள் கலந்திருக்கும். இது ஸ்வாலோடெயில்ஸ் (Papilionidae) குடும்பத்தைச்சேர்ந்தது ஆகும். அவை உள்நாட்டில் அடிக்கடி இடம்பெயர்கின்றன.

✓ சமீபத்தில், ஆயிரக்கணக்கான கிரிம்சன் ரோஸ் பட்டாம் பூச்சிகள் இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியிலிருந்து தெற்கு முனையில் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலங்கையை நோக்கி பறந்து கொண்டுள்ளன.

---

2. 'DefExpo-2022' பாதுகாப்பு கண்காட்சி நடைபெறும் இடம் எது?

அ) கோவா

ஆ) சென்னை

இ) காந்தி நகர் ☑

ஈ) வாரணாசி

✓ ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் 'DefExpo' என்ற பாதுகாப்பு கண்காட்சியின் நடப்பு 2022ஆம் ஆண்டின் பதிப்பு குஜராத்தின் காந்திநகரில் மார்ச் மாதம் நடைபெற உள்ளது. 900'க்கும் மேற்பட்ட பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் 55 நாடுகள் இதுவரை இந்தக் கண்காட்சியில் தங்கள் பங்கேற்பை உறுதிப்படுத்தியுள்ளன.

✓ இது ஆசியாவின் மிகப்பெரிய பாதுகாப்பு கண்காட்சி எனக் கூறப்படுகிறது. இந்தக் கண்காட்சியின் 2020ஆம் ஆண்டு பதிப்பு லக்னோவில் நடைபெற்றது

---

3. எச்.ஐ.வி நோயிலிருந்து குணமடைந்த உலகின் முதல் பெண், எச்செயல்முறையின்மூலம் குணமாக்கப்பட்டார்?

அ) ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை ☑

ஆ) ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சை



இ) காசநோய் சிகிச்சை

ஈ) குருதிமாற்றம்

✓ உலகில் HIV நோயால் குணமடைந்த மூன்றாவது நபர் என்ற பெருமையை அமெரிக்க பெண்மணி ஒருவர் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. HIVஇலிருந்து குணமான முதல் பெண்ணும் இவர்தான்.

✓ தீவிர குருதிப்புற்று நோயாளியான அப்பெண் எய்ட்ஸை உண்டாக்கும் வைரஸுக்கு இயற்கையான எதிர்ப்பைக் கொண்ட ஒருவரிடமிருந்து ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சையைப் பெற்றார். அவரது புற்றுநோய் சிகிச்சையின் ஒருபகுதியாக, இந்தக் குருதிமாற்று அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது.

---

4. 'PM KUSUM' திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ) எரிசக்தி அமைச்சகம்



இ) விவசாய அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது சோலார் பம்புகள் மற்றும் கிரிட் இணைக்கப்பட்ட சோலார் & பிற புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்காக விவசாயிகளுக்காக பிரதமர் கிஸான் உர்ஜா சுரக்ஷா ஈவ் உத்தன் மகாபியன் (PM KUSUM) திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

✓ சமீபத்தில், மத்திய அரசு 2024ஆம் ஆண்டுக்குள் வேளாண் துறையில் டீசலுக்குப்பதிலாக புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

5. 'கல்வி நிர்வாகத்தில் புதுமைகள் & நல்ல நடைமுறைக-ளுக்கான தேசிய விருது' யாருக்கு வழங்கப்படுகிறது?

அ) ஆசிரியர்கள்

ஆ) கல்வி அதிகாரிகள் ☑

இ) மாணவ தன்னார்வலர்கள்

ஈ) பள்ளிக்கல்வியில் உள்ள NGO


✓ தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனம் (NIEPA) 'கல்வி நிர்வாகத்தில் புதுமைகள் மற்றும் நல்ல நடைமுறைகளுக்கான தேசிய விருதை' நிறுவியுள்ளது.

✓ நாட்டின் 29 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட மற்றும் தொகுதி அளவிலான கல்வி அதிகாரிகளுக்கு ஐந்தாவது தேசிய விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்த விருது அல்லது பாராட்டுச்சான்றிதழைப் பெற்றனர்.

---

6. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற 'பிராக்ஸிமா டி' என்றால் என்ன?

அ) புதிய தடுப்பூசி



ஆ) புதிய புறக்கோள் ☑

இ) புதிய விண்மீன்

ஈ) புதிய கனிமம்

✓ சூரியனுக்கு மிகவருகிலுள்ள நட்சத்திரமான 'பிராக்ஸிமா சென்டாரி'யைச் சுற்றி வரும் ஒரு புதிய புறக்கோளை வானியலாளர்கள் குழு கண்டுபிடித்துள்ளது. 'பிராக்ஸிமா டி' என்று பெயரிடப்பட்ட இந்தப்புறக்கோள், இவ்வமைப்பில் கண்டறியப்பட்ட மூன்றாவது புறக்கோளாகும்.

✓ இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புறக்கோள்களில் இது மிகவும் இலகுவானதாக உள்ளது. சிலியில் அமைந்துள்ள ஐரோப்பிய தெற்கு ஆய்வகத்தின் மிகப்பெரிய தொலை நோக்கியை பயன்படுத்தி வானியலாளர்கள் இந்தப் புறக் கோளை கண்டறிந்துள்ளனர்.

---

7. நிலையான வெளிகளுக்கான உலகளாவிய USGBC – 2021 பட்டியலில், இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 1ஆவது

ஆ) 3ஆவது ☑

இ) 5ஆவது

ஈ) 7ஆவது

✓ நிலையான வெளிகளுக்கான (Sustainable Spaces) அமெரிக்க பசுமைக் கட்டடக் குழுவின் (USGBC) 2021 பட்டியலில் இந்தியா உலக அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது. இது, கடந்த 2021ஆம் ஆண்டில் ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் தலைமைத்துவத்திற்கான அமெரிக்காவிற்கு வெளியே உள்ள முதல் 10 நாடுகள் மற்றும் பகுதிகளின் தரவரிசையாகும். இந்தியாவில் 1,649 LEED சான்றளிக்கப்பட்ட கட்டிடங்கள் உள்ளன.

---

8. NSE அகாதமியுடன் இணைந்து நிதிக்கல்வியறிவை அவசியமான வாழ்க்கைத்திறனாக ஊக்குவிக்கிற இந்திய வங்கி எது?

அ) பஞ்சாப் தேசிய வங்கி

ஆ) பாரத ஸ்டேட் வங்கி ☑

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) ஆக்சிஸ் வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கியின் உத்திசார் பயிற்சிப் பிரிவு, NSE அகாதமியுடன் இணைந்து, நிதியியல் கல்வியறிவை அவசியமான வாழ்க்கைத் திறனாக ஊக்குவிக்கிறது.

✓ SBI'இன் முதல் 5 பெரிய ஆன்லைன் ஓப்பன் கோர்ஸ்கள் NSE அறிவு மைய தளத்தில் உள்ளன. வங்கி மற்றும் நிதிச் சேவைகளின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அறிவைச் சேகரிக்க இவை உதவுகின்றன.

---

9. ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான கூட்டமைப்பின் தலைமையகம் எங்குள்ளது?

அ) ஜெனீவா ☑

ஆ) வாஷிங்டன்

இ) பாரிஸ்

ஈ) பிரஸ்ஸல்ஸ்

✓ ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான கூட்டமைப்பு என்பது ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். இது, கடந்த 1964'இல் சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவில் நிறுவப்பட்டது. வளரும் நாடுகளிடையே வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இது உள்ளது.

✓ சமீபத்தில், உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 2022ஆம் ஆண்டில் 0.6%ஆகக் குறைந்துள்ளது. இது தொற்றுக்கு முந்தைய நிலைகளில் 0.7%ஆக இருந்தது.

---

10. சமீபத்தில் போலியோ நோய்த்தாக்குதலுக்கு ஆளான ஆப்பிரிக்க நாடு எது?

அ) மலாவி ☑



ஆ) தென்னாப்பிரிக்கா

இ) நைஜீரியா

ஈ) காங்கோ மக்களாட்சிக் குடியரசு

✓ நிலத்தால் சூழப்பட்ட ஆப்பிரிக்க நாடான மலாவி சமீபத்தில் போலியோ தாக்குதலுக்கு உள்ளானதாக அறிவித்தது. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, இந்தப் பாதிப்பு ஆப்பிரிக்க கண்டத்தில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் முதல் பாதிப்பாகும். இது, WPV1 (வகை 1 வைல்ட் போலியோ வைரஸ்) வகையைச் சார்ந்ததாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வேலைவாய்ப்பில்லா வளர்ச்சி! | இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் கணிப்பு பற்றிய தலையங்கம்

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சென்டர் ஃபார் மானிடரிங் இண்டியன் எகானமி) என்கிற ஆய்வு நிறுவன கணிப்பின்படி, கடந்த டிசம்பர் மாதம் 7.9%–ஆக இருந்த வேலையின்மை விகிதம், ஜனவரி மாதத்தில் 8%–ஆக அதிகரித்திருக்கிறது. நவம்பர் மாதம் 8.2%–ஆக இருந்த நகர்ப்புற வேலையின்மை, டிசம்பரில் 9.3%–ஆகவும், கிராமப்புற வேலையின்மை 6.4%–ஆக இருந்தது 7.3%–ஆகவும் அதிகரித்திருக்கிறது.

மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, 2020–இல் வேலைவாய்ப்பின்மையால் உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை 3,548 என்று அரசு தெரிவித்திருக்கிறது. 2018–இல் 2,741 இளைஞர்களும், 2019–இல் 2,851 இளைஞர்களும் வேலைவாய்ப்பு இன்மையால் தற்கொலை செய்துகொண்டனர் என்கிற புள்ளிவிவரமும் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிவரப்படி, மிக அதிகமான வேலைவாய்ப்பின்மைத் தற்கொலைகள் கர்நாடகம் (720), மகாராஷ்டிரம் (625), தமிழ்நாடு (336) ஆகிய மூன்று மாநிலங்களில்தான் காணப்படுகின்றன. மத்திய – மாநில அரசுகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க, போதுமான முனைப்பு காட்டுவதில்லை. அறிக்கைகள் வெளிவருகின்றனவே தவிர, புதிய வேலைவாய்ப்புகள் உருவானதாகத் தெரியவில்லை.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் ஆய்வின்படி, 2021 டிசம்பரில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 5.3 கோடி. மேலும் 1.7 கோடி பேர் வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். உலக வங்கியின் புள்ளிவிவரப்படி, இந்தியாவில், வேலை செய்ய உகந்த வயதினரில் 43% பேர் மட்டுமே அதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இதுவே பாகிஸ்தானில் 48%, வங்க தேசத்தில் 58%. வேலை செய்யும் வயதிலான மக்கள்தொகையினர் 2021–31–இல் ஆண்டொன்றுக்கு 97 லட்சம் என்கிற அளவிலும், 2031–41–இல் 42 லட்சம் என்கிற அளவிலும் மேலும் அதிகரிப்பார்கள் என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தியா மிகப்பெரிய வேலைவாய்ப்பு பிரச்னையை எதிர்கொள்கிறது. இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் படித்த 60% மாணவர்களுக்குத்தான் உடனடியாக வேலை கிடைக்கிறது. 2000 முதல் 2008 வரை தொடங்கப்பட்ட பொறியியல், நிர்வாக மேலாண்மை கல்லூரிகள் பரவலாக மூடப்படுகின்றன.

வேலைவாய்ப்புகள் இல்லை என்பது மட்டுமல்ல, கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புகள் கிடைப்பதில்லை என்பதும் மிகப் பெரிய பிரச்னை. சமீபத்தில் உத்தர பிரதேசத்திலும், பிகாரிலும் ரயில்வே வேலைக்கான தேர்வுக்கு வந்த இளைஞர்கள் நடத்திய வன்முறைப் போராட்டம் அதன் வெளிப்பாடே.

2018–19–இல் 2,83,747 காலிப் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பை ரயில்வே வெளியிட்டது. அதற்கு நான்கு கோடிக்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்தன. 1.32 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

தொழில்நுட்பம் சாராத சாதாரண 35,000 வேலைகளுக்கான பணியிடங்களுக்கு 1.25 கோடி பேர் விண்ணப்பித்திருந்தனர். இரண்டு ஆண்டுக்கு முன்பு அதற்கான தேர்வு நடத்தப்பட்டு கடந்த டிசம்பர் – ஜனவரி மாதங்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அந்த முடிவுகள் முதல் சுற்று தேர்வுக்கானவை என்றும், விரைவிலேயே அடுத்தச் சுற்று தேர்வு நடைபெறும் என்றும் ரயில்வே அறிவித்ததுதான் வன்முறைப் போராட்டம் வெடிக்கக் காரணமானது.

விண்ணப்பித்தவர்களில் பலரும், குறைந்த ஊதியமுள்ள கடைநிலை ஊழியர் பணிக்காக விண்ணப்பித்திருப்பவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் மிகவும் ஏழ்மையான பின்னணியில் இருந்து வருபவர்கள். விண்ணப்பத்துக்கு ரூ.500 முதல் ரூ.2,500 வரை கட்டணம் நிர்ணயம் செய்து பல்லாயிரம் கோடி ரூபாய் வசூலித்திருக்கிறது ரயில்வே நிர்வாகம்.

இதன் பின்னணியில் பல கேள்விகளுக்கு விடை அளிக்க இந்திய ரயில்வேத் துறை கடமைப்பட்டிருக்கிறது. பணியிடங்களை நிரப்புவதற்கு மூன்று ஆண்டு இடைவெளி தேவைதானா? சாதாரண அடிமட்டப் பணிகளுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தேர்வுகள் எதற்கு? ரயில்வே நிர்வாகம் ஆண்டுதோறும் பணியிடங்களை நிரப்பாமல் மொத்தமாக தேர்வுகள் நடத்தி நிரப்புவது ஏன்? இதுபோன்ற பல கேள்விகளை எழுப்புகிறது அந்த வன்முறை நிகழ்வு.

காவல்துறையில் காவலர் பணியிடங்களுக்கும், ஏனைய அரசுத்துறைகளில் கடைநிலை ஊழியர் பணியிடங்களுக்கும் ஆயிரக்கணக்கான பொறியியல், நிர்வாகவியல், முதுநிலை பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிப்பது, பரவலாக இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் காணப்படுகிறது. அரசுத்துறை தவிர்த்த தனியார் துறை வேலைவாய்ப்பு என்பதும்கூட, கொள்ளை நோய்த்தொற்றுக்குப் பிறகு குறைந்துவிட்டது.

'கிக்' எனப்படும் ஓலா, உபேர் ஓட்டுநர்கள், ஸ்விக்கி, ஜொமேட்டோ உணவு விநியோக ஊழியர்கள் போன்றோர் "கிக்' தொழிலாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அதாவது தின ஊதியமோ, வார ஊதியமோ, மாத ஊதியமோ இல்லாமல் ஒவ்வொரு பணிக்கும் ஊதியம் பெறுபவர்கள் இவர்கள். இதற்கான வேலைவாய்ப்பு அதிகரித்திருப்பதால் வேலையின்மை அகன்றுவிட்டதாகக் கருத முடியாது.

பொருளாதார வளர்ச்சி என்பது இந்தியா போன்ற மக்கள்தொகை அதிகமுள்ள நாடுகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவதாக இல்லாமல் போனால், வளர்ச்சி என்பது கானல் நீராகத்தான் இருக்குமே தவிர, நிஜமான வளர்ச்சியாக இருக்காது. இந்தியா எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால் வேலைவாய்ப்பின்மை என்பதை உணர்ந்து மத்திய – மாநில ஆட்சியாளர்கள் செயல்படாமல் போனால், விளைவு விபரீதமாக இருக்கும்.

---

2. 'எங்கும் அறிவியல்': டிஆர்டிஓ கண்காட்சியில் "2047–க்கான திட்டம்"

சுதந்திரத்தின் நூற்றாண்டில் (2047) தொழில்நுட்பங்கள் குறித்த கண்காட்சியை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) சென்னை உள்ளிட்ட 16 நகரங்களில் அமைத்துள்ளது. வருகின்ற பிப்ரவரி 28 – ஆம் தேதி வரை இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையில், கொண்டாடப்படும் சுதந்திரத்தின் அம்ருத் மகோத்சவ் விழாவையொட்டி நாடு முழுவதும் "எங்கும் அறிவியல்" நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. அறிவியல், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை பறைசாற்றும் அறிவியல் நிகழ்ச்சி, நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பிப்ரவரி 22 முதல் 28–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பும் பங்கேற்கிறது.

இதில் டிஆர்டிஓ "2047–க்கான திட்டம்" என்னும் கருப்பொருளில் சென்னை, தில்லி, ஆக்ரா, பெங்களூரு, உள்ளிட்ட 16 நகரங்களில் தனது எதிர்கால திட்டங்களுக்கான கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. மேலும், டிஆர்டிஓ மேற்கொண்டுள்ள பணிகளை வெளிப்படுத்தும் வாய்ப்பாக இந்தக் கண்காட்சிகள் அமைந்துள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

1. 6ஆவது ஆப்பிரிக்க ஒன்றியம் – ஐரோப்பிய ஒன்றியம் உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?

அ) பிரஸ்ஸல்ஸ் ☑



ஆ) கெய்ரோ

இ) ரோம்

ஈ) ஜோகன்னஸ்பர்க்

✓ 6ஆவது ஆப்பிரிக்க ஒன்றிய – ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு 2022 பிப்.17–18 ஆகிய தேதிகளில் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது. இதில் ஆப்பிரிக்க ஒன்றிய & ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

✓ கூட்டத்திற்கு ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர், சென்கல் அதிபர் மற்றும் AU'இன் தலைவர் ஆகியோர் தலைமை தாங்கினர். இவ்வுச்சிமாநாட்டின்போது, மேம்படுத்தப்பட்ட கூட்டாண்மைக்கான கூட்டுப்பார்வைக்கு தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

---

2. 2022இல் பாகிஸ்தானின் 2ஆவது உயரிய குடிமக்கள் விருதான 'ஹிலால்–இ–பாகிஸ்தான்' விருது கீழ்காணும் யாருக்கு வழங்கப்பட்டது?

அ) பில் கேட்ஸ் ☑



ஆ) மலாலா யூசுப்சாய்

இ) எலோன் மஸ்க்

ஈ) சி ஜின்பிங்

✓ கொடையாளியும் மைக்ரோசாப்டின் நிறுவனருமான பில் கேட்ஸுக்கு பாகிஸ்தானின் 2ஆவது உயரிய குடிமக்கள் விருதான 'ஹிலால்–இ–பாகிஸ்தான்' வழங்கப்பட்டுள்ளது. பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் இணைத் தலைவராக அவர் இந்த விருதைப்பெறுகிறார்.

✓ இளம்பிள்ளைவாதத்தை ஒழிப்பதற்கும் பாகிஸ்தானில் வறுமையைக்குறைப்பதற்குமான அவ்வறக்கட்டளையின் தொடர்ச்சியான முயற்சிகளுக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

3. பிளாஸ்டிக் பேக்கேஜிங்கைப் பொறுத்து, 'EPR' என்பது எதைக் குறிக்கிறது?

அ) Extended Producer Responsibility ☑



ஆ) Environment Protection Responsibility

இ) Ecological Protection Role

ஈ) Epoxy Poly Rehydroxy–sulphate

✓ நெகிழிக்கழிவு நிர்வாக விதிகள் 2016'இன்கீழ் பிளாஸ்டிக் பேக்கேஜிங்கில் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறு–ப்பு வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்ற அமைச்சகம் அறிவித்துள்ளது.

✓ குறைந்தபட்ச பயன்பாட்டையும், அதிகபட்ச மாசினையும் கொண்ட 1 முறை பயன்படுத்தும் நெகிழிப்பொருட்களை 2022 ஜூலை 1 முதல் தடைசெய்வதுடன் இணைந்ததாக இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன.

---

4. 'எரிசக்தி புள்ளிவிவரங்கள் இந்தியா – 2022' என்ற தலைப்பில் வெளியீட்டை வெளியிட்ட அமைச்சகம் எது?

அ) புள்ளியியல் & திட்ட அமலாக்க அமைச்சகம் ☑

ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) நிலக்கரி அமைச்சகம்

ஈ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

✓ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், 'எரிசக்தி புள்ளிவிவரங்கள் இந்தியா–2022' வெளியீட்டின் 28வது பதிப்பை வெளியிட்டது. இது எரிசக்தி வளங்கள் பற்றிய புள்ளிவிவரங்களின் களஞ்சியமாக உள்ளது.

✓ நீடித்த ஆற்றலமைப்புகளில் இந்தியாவின் அர்ப்பணிப்பு மற்றும் முன்னேற்றத்தை இது எடுத்துக் காட்டுகிறது. இவ் வெளியீடு உற்பத்தி, நுகர்வு, வர்த்தகம், ஆற்றல் சமநிலை போன்றவற்றை முன்வைக்கிறது. நிலக்கரி அமைச்சகம், பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம், எரிசக்தி அமைச்சகம், புதிய &புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஆகியவற்றிலிருந்து தரவு சேகரிக்கப்பட்டது.

---

5. நடுவண் அரசு பட்ஜெட் 2022–23'இன்படி, கூட்டுறவு சங்கங்களுக்கான புதிய மாற்று குறைந்தபட்ச வரிவிகிதம் எவ்வளவு?

அ) 10%



ஆ) 12.5%

இ) 15% ☑

ஈ) 17.5%

✓ மத்திய அரசு பட்ஜெட் 2022–23இல் கூட்டுறவு சங்கங்கள் செலுத்தவேண்டிய மாற்று குறைந்தபட்ச வரி 15%ஆக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, கூட்டுறவு சங்கங்கள் இதனை 18.5 சதவீதமாக செலுத்தி வருகின்றன. அதே நேரத்தில் நிறுவனங்கள் 15%ஆக செலுத்தி வருகின்றன.

✓ ₹1 கோடி முதல் ₹10 கோடி வரை மொத்த வருமானம் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு கூடுதல் கட்டணத்தை 12 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறைக்க இந்தப் பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டுள்ளது.

---

6. புதிதாக அறிவிக்கப்பட்ட 'துடிவினை சிற்றூர்கள் திட்டத்தின்' பயனாளிகள், எவ்வகையான சிற்றூர்களைச் சார்ந்தோராக இருப்பர்?

அ) கடலோர சிற்றூர்கள்



ஆ) எல்லைப்புறச் சிற்றூர்கள் ☑

இ) மலைப்பாங்கான சிற்றூர்கள்

ஈ) ODF சிற்றூர்கள்

✓ இந்திய எல்லையில் குறிப்பாக சீன எல்லையில் அமைந்து உள்ள சிற்றூர்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தலை நோக்கமாகக்கொண்ட 'Vibrant Villages' என்னும் புதிய திட்டத்தை மத்திய பட்ஜெட் அறிவித்துள்ளது.

✓ இந்தத் திட்டத்தின்கீழ், கூடுதல் நிதி அளிக்கப்படுவதோடு, ஏற்கனவேயுள்ள திட்டங்கள் ஒன்றிணைக்கப்படும். வீடுகள், சுற்றுலா மையங்கள், சாலை இணைப்பு, பரவலாக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குதல்,

தூர்தர்ஷன் மற்றும் கல்வித்தொலைக்காட்சிகளுக்கான DTH அணுகல் மற்றும் வாழ்வாதார உதவி இதிலடங்கும்.

---

7. உலக வானொலி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 13 ☑



ஆ) பிப்ரவரி 14

இ) பிப்ரவரி 15

ஈ) பிப்ரவரி 16

✓ 'உலக வானொலி நாளானது ஆண்டுதோறும் பிப்ரவரி.13 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது முதன்முதலில் கடந்த 2011இல் யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகளால் அறிவிக்கப்பட்டது. 2012இல் ஐநா பொதுச்சபை இம்முன்மொழிவை ஏற்றுக்கொண்டது. 2022இல் வரும் உலக வானொலி நாளுக்கானக்கருப்பொருள் 'வானொலி மற்றும் நம்பிக்கை (Radio and Trust)" என்பதாகும்.

---

8. 2022 பிப்ரவரியில் இந்தியா எந்த நாட்டுடன் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑



ஆ) சீனா

இ) பிரேஸில்

ஈ) ரஷ்யா

✓ இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் (UAE) சமீபத்தில் ஒரு விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் (CEPA) கையெழுத்திட்டன. இருநாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி & இறக்குமதி ஆகிய இரண்டிலும் கிட்டத்தட்ட 90 சதவீத வர்த்தகத்திற்கு இது பயனளிக்கும்.

✓ ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தங்கத்திற்கு இந்தியா வரிச்சலுகைகளை வழங்கியுள்ளது. அதேவேளையில் இந்திய ஏற்றுமதியாளர்களும் தங்களது நகைகளுக்கு 0% வரி செலுத்துவார்கள்.

---

9. இந்தியா, எந்த நாட்டிடமிருந்து 100,000 டன் சோயா எண்ணெயை இறக்குமதி செய்து சாதனை படைத்தது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) அமெரிக்கா ☑



இ) மலேசியா

ஈ) ஆஸ்திரேலியா

✓ வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னமெரிக்காவில் இருந்து வரத்து குறைவாக இருப்பதால், இந்திய வர்த்தகர்கள் அமெரிக்காவிலிருந்து நூறாயிரம் (100,000) டன் சோயா எண்ணெயை இறக்குமதி செய்து சாதனை படைத்து உள்ளனர். பனையெண்ணெயின் விலையேற்றத்துக்கு இடையே இந்த இறக்குமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

10. உலக வங்கியின் 'REWARD' திட்டத்தின் நோக்கம் என்ன?

அ) பள்ளிக்கல்வியை மேம்படுத்துதல்

ஆ) நீர்ப்பிடிப்பு மேலாண்மை ☑

இ) திடக்கழிவு மேலாண்மை

ஈ) உட்கட்டமைப்பு மேம்பாடு

✓ இந்திய அரசு, கர்நாடகா மற்றும் ஒடிஸா மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி ஆகியவை 115 மில்லியன் அமெரிக்க டாலர் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன. இத்திட்டத்தின் பெயர் 'REWARD' (Rejuvenating Watersheds for Agricultural Resilience through Innovative Development Programme). தேசிய மற்றும் மாநில நிறுவனங்கள் நவீன நீர்ப்பிடிப்பு மேலாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதற்கு இது உதவும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அனைத்து வகை கரோனாவுக்கும் ஒரே தடுப்பூசி

கரோனா தீநுண்மிகள் எத்தகைய உருமாற்றம் அடைந்தாலும் அதிலிருந்து தற்காக்கும் வகையிலான ஒரே தடுப்பூசியைக் கண்டறியும் ஆராய்ச்சிகள் முதல்கட்ட நிலையில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி டாக்டர் சௌமியா சுவாமிநாதன் தெரிவித்தார்.

அடுத்த 4 ஆண்டுகளுக்குள் அதனை பயன்பாட்டுக்கு கொண்டுவர முயன்று வருவதாகவும் அவர் கூறினார்.

கரோனா தொற்றைக் கட்டுப்படுத்த தற்போது உலகம் முழுவதும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் கோவேக்ஸின், கோவிஷீல்ட், ஸ்புட்னிக் உள்ளிட்ட தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன.

இரு தவணைகளாக அவற்றை செலுத்திக் கொண்டாலும், உருமாற்றமடைந்த புதிய வகை COVID பாதிப்பு வராமல் அதனால் தடுக்க இயலாது. அதேவேளையில், நோய்த் தொற்று தீவிரமடையாமல் தடுப்பூசிகள் உதவுகின்றன.

இந்நிலையில், அனைத்து வகை கரோனா பாதிப்பையும் தடுக்கவல்ல சிறப்பு கரோனா தடுப்பூசியை உருவாக்கும் பணிகளை உலக சுகாதார அமைப்பு முன்னெடுத்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைமை விஞ்ஞானி Dr சௌமியா சுவாமிநாதன் பகிர்ந்துகொண்ட தகவல்:

COVID தொற்றை வேரறுப்பது என்பது இயலாத காரியம். அதேவேளையில் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருக்கலாம். புதிய உருமாற்றங்கள் ஆகாமல் ஓரளவு தடுக்கலாம். ஒருவேளை உருமாற்றங்கள் நிகழ்ந்தால் அவை மிகசாதாரணமான பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தும் என்பதையும் நாம் திட்டவட்டமாகக் கூற இயலாது. தற்போது பயன்பாட்டில் உள்ள கரோனா தடுப்பூசிகள் புதிய பாதிப்பு வராமல் தடுக்காவிட்டாலும், அதனால் தீவிர நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும் என்பது உறுதி.

இதற்கு ஒரே தீர்வு அனைத்து வகையான கரோனா பாதிப்புகளுக்கும் ஒரே தடுப்பூசியை உருவாக்குவது மட்டும்தான். அதற்கான ஆராய்ச்சிகளும், பணிகளும் ஆரம்பநிலையில் உள்ளன. அதன் பொருட்டு சர்வதேச தரவுகள், ஆய்வுகள் மற்றும் மருத்துவ நுட்பங்களைத் திரட்டி வருகிறோம்.

அடுத்த 4லிருந்து 5 ஆண்டுகளுக்குள் கரோனாவுக்கான ஒரே தடுப்பூசி பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

கரோனா தொற்று அனைவருக்கும் வந்து போனால் அதற்கு எதிரான நோய் எதிர்ப்பாற்றல் உருவாகிவிடும் என்ற பொதுக்கருத்து நிலவுகிறது. அது முற்றிலும் தவறு. தடுப்பூசிகளைக்கொண்டு மட்டுமே எதிர்ப்பாற்றலை வளர்ப்பது சாத்தியம். ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் போதிய அளவில் கரோனா தடுப்பூசிகள் கிடைப்பதில்லை. இதனால், அங்கிருந்து தீநுண்மி உருமாறி மீண்டும் உலகம் முழுவதும் பரவியது. தடுப்பூசி விநியோகத்தில் நீடிக்கும் சமநிலையற்ற தன்மையைப் போக்க உலக சுகாதார அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நிகழாண்டுக்குள் உலகின் 70 சதவீத நாடுகளில் இரு தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது எங்களது இலக்கு. அதனைக் கருத்தில்கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

கரோனா பெருந்தொற்று உணர்த்திய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகள் இனி வரும் காலத்தில் மருத்துவத் துறையில் அதிக முதலீடுகளை மேற்கொள்வது அவசியம். மருத்துவக் கட்டமைப்பு, ஆராய்ச்சி, பயிற்சி உட்பட அனைத்து விஷயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார் டாக்டர் சௌமியா சுவாமிநாதன்.

---

2. தமிழகத்தில் 188 புதிய அவசரகால வாகன சேவை: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

தமிழகத்தில் 188 புதிய அவசரகால வாகன சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், ஐம்பது இலட்சமாவது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தையும் அவர் அளித்தார்.

'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டமானது கடந்த ஆகஸ்டில் தொடக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டமானது 50 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு இன்று அனைத்து இடங்களிலும் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், கள அளவில் 10,969 பெண் சுகாதாரத் தன்னார்வலர்களும், 385 இயன்முறை மருத்துவர்களும், 385 நோய் ஆதரவுச் செவிலியர்களும், 4 ஆயிரத்து 848 இடைநிலை சுகாதாரச் சேவையாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டத்தின்படி இதுவரை 50 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். ஐம்பது இலட்சமாவது பயனாளிக்கு மருந்துப் பெட்டகத்தை முதல்வர் அளித்தார்.

இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் கீழ் இதுவரை 21,762 பேர் பயன் பெற்றுள்ளனர்.

அவசரகால ஊர்திகள்: பொதுமக்களின் உயிரைக்காக்கும் வகையில் 108 அவசரகால ஊர்திசேவைத்திட்டம் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், 1,303 அவசர கால ஊர்திகள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில், மேலும் புதிதாக 188 அவசரகால ஊர்திகளின் சேவையை முதல்வர் தொடக்கி வைத்தார்.

---

3. கடற்பசு பாதுகாப்பகம் அமைக்க ₹5 கோடி நிதி ஒதுக்கி அரசாணை வெளியீடு

தமிழகத்தில் மன்னார் வளைகுடா, பாக் விரிகுடா கடல் பகுதியில் காணப்படும் கடற்பசுக்களுக்கான பாதுகாப்பகம் அமைக்க ₹5 கோடி நிதி ஒதுக்கி வனத்துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

கடல் மாசு மற்றும் கடற்புல் படுகைகள் அழிக்கப்படுவதால் கடற்பசு இனம் சமீப காலங்களில் அழிந்து வருகின்றன. இதைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தியாவின் முதல் கடல் பசு பாதுகாப்பகம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் விரிகுடா கடற்பகுதியில் அமைக்கப்படும் என்று கடந்த சட்டப்பேரவைக்கூட்டத்தொடரில் வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

கடற்பசு இனத்தைக்காக்கும் நோக்கில் அமைக்கப்படும் இந்தப் பாதுகாப்பகம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் விரிகுடாவில் காணப்படும் பல வகையான மீன்கள், ஆமைகள், கடல் தாவரங்கள் ஆகிய கடல் உயிர்ப்பன்மை –யத்தை பாதுகாக்க உதவும் என இயற்கை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

---

4. 24–02–2022 – தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் 'புரட்சித்தலைவி' செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 74ஆவது பிறந்தநாள்.

---

5. சதுரங்க சாதனை! | பிரக்ஞானந்தாவின் வெற்றி குறித்த தலையங்கம்

ஒட்டுமொத்த உலகத்தையும் தமிழகத்தை நோக்கித் திரும்பி பார்க்க வைத்திருக்கிறார் பிரக்ஞானந்தா என்கிற 16 வயதுச் சிறுவன். ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் ஆன்லைன் ரேபிட் செஸ் போட்டியில் நார்வேயை சேர்ந்த உலக சாம்பியன் மேக்னஸ் கார்ல்செனை அவர் தோற்கடித்திருப்பது சாதனை வெற்றி.

16 வீரர்கள் பங்குபெறும் ரேபிட் பார்மெட் இணையவழி செஸ் போட்டியில் பிரக்ஞானந்தா இந்த சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்.

கடந்த ஆண்டு செஸ் கிளாஸிக் பந்தயத்தில் இதே மேக்னஸ் கார்ல்செனுடனான போட்டி வெற்றி – தோல்வி இல்லாமல் முடிந்தது. தன்னுடன் போட்டிபோடும் தகுதி இருப்பதாக அந்தச் சிறுவனிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையை, கார்ல்சென் வியந்து பாராட்டினார். இப்போது தன்னைத் தோற்கடித்திருக்கும் பிரக்ஞானந்தாவை வாழ்த்தி ஆசீர்வதித்திருக்கிறார்.

மேக்னஸ் கார்ல்சென் சாதாரணமான விளையாட்டு வீரர் அல்ல. இதற்கு முன்னால் அவரை வென்ற இந்திய வீரர்கள் முன்னாள் உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்தும், கிராண்ட் மாஸ்டர் பெந்தல ஹரிகிருஷ்ணாவும் என்பதிலிருந்தே பிரக்ஞானந்தாவின் வெற்றி எத்தகையது என்பதை உணர முடியும்.

தனது போட்டியாளர்களை அசர அடிக்கும் கார்ல்சென், பதற்றமே இல்லாத அமைதியான அணுகுமுறையால் பிரக்ஞானந்தா கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாக்கியதை உலகமே கண்டு வியந்தது.

இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த அந்த 16 வயது சிறுவன், காய்களை எங்கேயும் நகர்த்த முடியாத தர்மசங்கடத்துக்கு மேக்னஸ் கார்ல்சென உள்ளாக்கினார். 39–ஆவது நகர்வில் கார்ல்சென் கைகளை விரித்துத் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். தனது கதாநாயகனைத் தோற்கடித்த பெருமிதமும், தன்னையே நம்ப முடியாத ஆச்சரியமும் பிரக்ஞானந்தாவை திக்குமுக்காடச்செய்தன.

2016இல் தனது 10ஆவது வயதில், உலகின் மிகக் குறைந்த வயதில் செஸ் பந்தயத்தில் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்றவர் பிரக்ஞானந்தா. தொடக்கம் முதலே அவர் சர்வதேச விளையாட்டுக்காரருக்கான தகுதி பெற்று இருந்ததை செஸ் வல்லுனர்கள் அடையாளம் கண்டனர்.

இரண்டாண்டு கொள்ளை நோய்த்தொற்று காலத்தில் பிரக்ஞானந்தாவின் தன்னம்பிக்கை கடுமையாகக் குறைந்திருந்தது. செஸ் போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இருந்ததும், சர்வதேச பந்தயங்களில் பங்குபெறாமல் போனதும் அந்தச் சிறுவனுக்குத் தளர்வை ஏற்படுத்தியதாக பயிற்சியாளர் குறிப்பிட்டிருந்தார். சரியான நேரத்தில் ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் கார்ல்சென வென்றிருப்பது பிரக்ஞானந்தாவுக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய ஊக்கம்.

சதுரங்க ஆட்டம் என்பது இந்தியாவுக்குப் புதிதொன்றுமல்ல. நமது புராண இதிகாச காலத்திலிருந்து அரண்மனைகளிலும் தெருவோரங்களிலும் விளையாடப்படுவதுதான் அது. பிற்காலத்தில் மேல்நாட்டு பாணி சதுரங்கமான செஸ் விளையாட்டு அறிமுகமானபோது இந்தியர்களுக்கு அதில் தேர்ச்சி பெறுவது சிரமமாக இருக்கவில்லை.

சர்வதேச அளவிலான போட்டிகளில் இந்தியா கடந்த 60 ஆண்டுகளாகத்தான் முத்திரை பதித்து வருகிறது. 1961–இல் இந்தியாவின் முதல் சர்வதேச மாஸ்டராக மேனுவல் ஆரான் தடம் பதித்தார். அதற்கு பிறகு 26 ஆண்டுகள் கழித்து 1987–இல் 18 வயதுகூட நிரம்பியிராத விஸ்வநாதன் ஆனந்த் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டராக சாதனை நிகழ்த்தினார். 2000–இல் இந்தியாவின் முதல் உலக சாம்பியனாக உயர்ந்ததும் விஸ்வநாதன் ஆனந்தே. இதுவரை 5 முறை உலக சாம்பியனாகவும், ஒருமுறை ரஷியாவுடன் இணைந்து செஸ் ஒலிம்பிக் சாம்பியனாகவும் தேர்ந்தவர் ஆனந்த்.

ஆனந்தை தொடர்ந்து இப்போது ஏராளமான சிறுவர்களும், இளைஞர்களும் செஸ் விளையாட்டில் சாதனை புரிந்து வருகின்றனர். பிரக்ஞானந்தா மட்டுமல்லாமல் திவ்யா தேஷ்முக், நிகல் ஷரின், வைஷாலி, பெந்தல ஹரிகிருஷ்ணா, விதீத் குஜராத்தி, கோனேரு ஹம்பி, ஹரிகா என்று வரிசையாகப் பலர் சர்வதேச அளவில் இந்தியக் கொடியை செஸ் பந்தயங்களில் உயர்த்திப் பிடிக்கிறார்கள். இதற்கெல்லாம் முன்னோடியும், இந்த இளைஞர்களுக்கு வழிகாட்டியும் விஸ்வநாதன் ஆனந்த் என்பதை பதிவு செய்யாமல் இருக்க முடியவில்லை.

1987–இல் விஸ்வநாதன் ஆனந்த முதலாவது கிராண்ட் மாஸ்டர் ஆனதைத் தொடர்ந்து, இப்போது இந்திய கிராண்ட் மாஸ்டர்களின் எண்ணிக்கை 73. பிரக்ஞானந்தா இந்திய விளையாட்டு வீரர்களில் 16–ஆவது இடத்திலும், உலகத் தர வரிசையில் 193–ஆவது இடத்திலும் இருக்கிறார். இன்றைய பதின்ம வயது இந்திய செஸ் விளையாட்டு வீரர்களில் அதீத திறமைசாலி என்று கருதப்படும் பிரக்ஞானந்தா இப்போது விஸ்வநாதன் ஆனந்தின் வழிகாட்டுதலில் இருக்கிறார் எனும்போது அவரது வருங்காலம் பிரகாசமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்து பங்குபெறுவதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்த், அனடோலி கார்போவ், கேரி கேஸ்பரோவ், மேக்னஸ் கார்ல்சென் வரிசையில் பிரக்ஞானந்தா இடம்பெறும் காலம் வெகு தொலைவில் இல்லை.

பிரக்ஞானந்தாவின் வளர்ச்சியும் வெற்றியும் நமக்கு சில செய்திகளைத் தருகின்றன. தமிழகத்திலுள்ள தனியார் பள்ளிகளில் மாணவர்களை செஸ் விளையாட்டில் ஊக்கப்படுத்துவதுபோல, அரசுப் பள்ளிகளில் வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. தொடக்கப்பள்ளி நிலையிலேயே செஸ் விளையாட்டுப் பயிற்சி வழங்குவதன் மூலம் வருங்கால விஸ்வநாதன் ஆனந்த்களையும், பிரக்ஞானந்தாக்களையும் அடையாளம் காண முடியும். அவர்களுக்குத் தகுந்த ஊக்கமும், அரசு ஆதரவும் ஆரம்பத்திலிருந்தே வழங்கப்பட்டால் தமிழகம், கிராண்ட் மாஸ்டர்களின் கேந்திரமாக உயரக்கூடும்!

1. 'இன்டர்-ஆபரேபிள் கிரிமினல் ஜஸ்டிஸ் சிஸ்டம் (ICJS)' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) சட்டம் & நீதித்துறை அமைச்சகம்

ஆ) உள்துறை அமைச்சகம் ☑

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம்

ஈ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

✓ 2022-23 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் ₹3,375 கோடி செலவில், 'இன்டர்-ஆபரேபிள் கிரிமினல் ஜஸ்டிஸ் சிஸ்டம்' (ICJS) திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த நடுவணரசு ஒப்புதலளித்துள்ளது. உள்துறை அமைச்சகத்தின் ICJS திட்டத்தின் இக்கட்டம், மத்திய துறை திட்டமாக செயல்படுத்தப்படும்.

✓ ICJS என்பது நாட்டில் குற்றவியல் நீதி வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய தகவல் தொழில்நுட்ப அமைப்பின் ஒருங்கிணைப்பை செயல்படுத்துவதற்கான ஒரு தேசிய தளமாகும்.

---

2. 'கஜுராஹோ நடன விழா' நடைபெறும் மாநிலம் எது?



அ) குஜராத்

ஆ) பீகார்

இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) மகாராஷ்டிரா

✓ 48ஆவது 'கஜுராஹோ நடன விழா' மத்திய பிரதேசத்தில் இருந்து தொடங்கியது. 1 வாரகாலம் நடக்கும் இவ்விழா 2022 பிப்ரவரி.26 வரை நடைபெறும். உலகப்புகழ்பெற்ற 'கஜுராஹோ நடன விழா' மத்திய பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கஜுராஹோவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற கருப்பொருளில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

3. இமயமலை சுற்றுச்சூழலில், 'மகரந்தச் சேர்க்கையில்' முக்கிய பங்கு வகிக்கிற உயிரினம் எது?

அ) அந்துப்பூச்சிகள் ☑



ஆ) தேனீக்கள்

இ) பட்டாம்பூச்சிகள்

ஈ) வெளவால்கள்

✓ சமீபத்திய ஆய்வின்படி, வடகிழக்கு இந்தியாவின் இமய மலை சுற்றுச்சூழல் அமைப்பில் மகரந்தச் சேர்க்கைக்கு அந்துப்பூச்சிகள் இன்றியமையாதவை. சிக்கிம் மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள 21 தாவரக்குடும்பங்களின் மகரந்தச் சேர்க்கையாளர்களாக 91 வகையான அந்துப்பூச்சிகளை இந்த ஆய்வு குறிப்பிட்டுக் கூறுகிறது.

---

4. 'பிரம்மாண்ட மீட்டர் வேவ் ரேடியோ தொலைநோக்கி' அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?



அ) குஜராத் ஆ) சிக்கிம்

இ) மகாராஷ்டிரா ☑ ஈ) உத்தரகாண்ட்

✓ 'Giant Metrewave Radio Telescope (GMRT)' என்பது 30° வரை முழுமையாகத் திசைதிருப்பக்கூடிய பரவளைய ரேடியோ தொலைநோக்கியாகும். இது மகாராஷ்டிராவில் புனே அருகே 'கோதாத்' என்ற இடத்தில் அமைந்துள்ளது.

✓ புனேவில் உள்ள தேசிய வானொலி வானியற்பியல் மையம், கலிபோர்னிய பல்கலைக்கழகம், சாண்டா குரூஸ் ஆகியவற்றின் வானியலாளர்கள், Fast Radio Burst (FRB) பேரடையிலிருந்து அணு ஹைட்ரஜன் வாயுவின் வழங்க -லை வரைபடமாக்க GMRT ஐப் பயன்படுத்தியுள்ளனர்.

---

5. 2023 – பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தின் அமர்வின் தொகுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ) புது தில்லி

ஆ) மும்பை ☑

இ) சென்னை

ஈ) ஹைதராபாத்

✓ 2023 – பன்னாட்டு ஒலிம்பிக் குழுவின் (IOC) அமர்வை இந்தியா மும்பையில் நடத்தவுள்ளது. 86ஆவது அமர்வு 1983ஆம் ஆண்டில் புதுதில்லியில் நடைபெற்றது. அதற்குப் பிறகு முதன்முறையாக இந்தியா இந்த மதிப்புமிக்க IOC கூட்டத்தை நடத்தவுள்ளது. அடுத்த ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்தில் நடைபெறும் அமர்வில், 2030 குளிர்கால ஒலிம்பிக்கிற்கான போட்டி நடத்தும் நாட்டிற்கான தேர்தல் நடைபெறும்.

---

6. மாறிவரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு 'மூத்தகுடிகட்கான வரைவுக்கொள்கையை' வகுத்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) தெலுங்கானா

✓ மாறிவரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு அரசு மூத்த குடிமக்களுக்கான வரைவுக் கொள்கையை உருவாக்கியுள்ளது. மூத்த குடிமக்களின் நலனுக்கான இயக்குநரகத்தை உருவாக்கவும் இந்தக் கொள்கை முன்மொழிகிறது.

✓ வரைவு ஆவணம் அரசியலமைப்பின் 41ஆவது பிரிவை அடிப்படையாகக் கொண்டது. இது வேலை, கல்வி மற்றும் வேலையின்மை, முதுமை, நோய் மற்றும் இயலாமை போன்ற நிலைகளில் பொது உதவிக்கான உரிமையைப் பாதுகாக்க மாநிலத்திற்குப் பயன்படுகிறது.

---

7. உழவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ₹20,000 கருணைத் தொகை வழங்க ஒப்புதலளித்துள்ள மாநிலம்/UT எது?



அ) மேற்கு வங்கம்

ஆ) தில்லி ☑

இ) பஞ்சாப்

ஈ) உத்தர பிரதேசம்

✓ கடந்தாண்டு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20,000 ரூபாய் கருணை நிவாரணம் வழங்க தில்லி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. செப்டம்பர்–அக்டோபர் – 2021'இல், கனமழை மற்றும் வயல்களில் தண்ணீர் தேங்கியதால் பல ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்தன. சேதம் 70% அல்லது அதற்கும் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டால், இழப்பீடு தொகையில் 70% வழங்கப்படும். இழப்பு சதவீதம் 70%க்கு மேல் இருந்தால், ஏக்கருக்கு ₹20,000 வழங்கப்படும்.

---

8. மூன்று தென்னாப்பிரிக்க நாடுகளில் கரையைக்கடந்த வெப்பமண்டல புயலின் பெயர் என்ன?

அ) ரீனா



ஆ) ஆனா ☑

இ) பாஸ்

ஈ) சூ

✓ வெப்பமண்டல புயல் 'ஆனா' மூன்று தென்னாப்பிரிக்க நாடுகளைத் தாக்கியது. இதன் காரணமாக 70 பேர் இறந்தனர். இந்தப் புயல் மொசாம்பிக் மற்றும் மலாவிக்குள் நுழைவதற்கு முன்பு மடகாஸ்கரில் கரையைக்கடந்தது. மடகாஸ்கரில் 41 பேரும், மொசாம்பிக்கில் 18 பேரும் மலாவியில் 11 பேரும் இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற மசாடா கோட்டை உள்ள நாடு எது?

அ) இந்தியா



ஆ) இலங்கை

இ) இஸ்ரேல் ☑

ஈ) ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

✓ இஸ்ரேலில் அமைந்துள்ள 'மசாடா கோட்டை' என்பது யூத வீரத்தின் சின்னமாகும். இந்தியாவுக்கான இசுரேல் தூதர் நவர் கிலோன், இஸ்ரேலில் உள்ள 'மசாடா கோட்டை' விளக்குகளால் ஒளிர்வதைக் காட்டும் காணொளியைப் பகிர்ந்துள்ளார். இருநாடுகளும் தூதரக உறவுகளின் 30 ஆண்டுகளைக்கொண்டாடும் நிலையில், இது இந்தியா–இஸ்ரேல் உறவுகளை நினைவுகூருவதாக உள்ளது.

---

10. இருபத்தொரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் டென்னிஸ் வீரர் யார்?

அ) ரோஜர் பெடரர்



ஆ) ரபேல் நடால் ☑

இ) நோவக் ஜோகோவிச்

ஈ) ஆண்ட்ரே அகாசி

✓ ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேனியல் மெட்வெடேவை வீழ்த்தி, 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று வரலாற்று சாதனை படைத்தார் ரபேல் நடால்.

✓ இருபத்தொரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் டென்னிஸ் வீரர் என்ற பெருமையை அவர்பெற்றார். சுவிச்சர்லாந்தின் ரோஜர்பெடரரும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் தலா 20 பட்டங்களைப்பெற்று சம நிலை –யில் உள்ளனர். ஓய்வுபெற்ற ஆஸ்திரேலிய டென்னிஸ் வீராங்கனை மார்கரெட் கோர்ட், 24 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் முதன் முறையாக மகா சிவராத்திரி விழா, கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு: அமைச்சர் சேகர்பாபு தகவல்

இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் முதன் முறையாக மகா சிவராத்திரி விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்து உள்ளார். சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, இராமகிருஷ்ணா மடம் சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

---

2. ரஷ்யா மீது ஜி7 நாடுகள் பொருளாதார தடை: உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நடுநிலை

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஜெர்மனி, இத்தாலி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி7 கூட்டமைப்பு சார்பில் ரஷ்யா மீது ஏற்கெனவே பல்வேறு பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த நாட்டின் மீது ஜி7 சார்பில் மேலும் பல்வேறு கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று ஜெர்மனி அறிவித்துள்ளது.

உக்ரைன் விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நேற்று முன்தினம் விவாதம் நடந்தது. இதில் உக்ரைன் போர் பதற்றம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த இந்தியா, அனைத்து தரப்பும் அமைதி காக்க வேண்டுகோள் விடுத்தது. எனினும் ரஷ்யா மீது இந்தியா எவ்வித விமர்சனத்தையும் முன்வைக்கவில்லை. இறுதியில் நடந்த வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கவில்லை. உக்ரைன் விவகாரத்தில் ஆரம்பம் முதலே இந்தியா நடுநிலை வகித்து வருகிறது.

---

3. நாசாவின் செயற்கைக்கோளுக்கு சிக்காத சூரிய புரோட்டான் நிகழ்வுகளை சந்திரயான்–2 விண்கலம் கண்டறிந்தது: இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் தகவல்

நாசாவின் செயற்கைக்கோளுக்கு சிக்காத சூரிய புரோட்டான் நிகழ்வுகளைச் சந்திரயான்–2 விண்கலம் கண்டறிந்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), சந்திரயான்–2 விண்கலத்தை 2019 ஜூலை 22–ல் · ஹரிகோட்டாவில் இருந்து அனுப்பியது.

பல்வேறு கட்டத்துக்குப் பிறகு, சந்திரயான் விண்கலம் வெற்றிகரமாக நிலவை நெருங்கியது. ஆனால், செப்.7–ம் தேதி சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் கலன் திட்டமிட்டபடி நிலவில் தரையிறங்கவில்லை. திடீர் தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் வேகமாகச் சென்று நிலவின் தரையில் மோதியதாகக் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், விண்கலத்தின்மற்றொரு பகுதியான ஆர்பிட்டர், நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. அதன்பிறகு, நிலவைச் சுற்றிவரும் ஆர்பிட்டர் பல்வேறு தகவல்களைப் பூமிக்கு அனுப்பி வருவதாக இஸ்ரோ தெரிவித்தது. இந்நிலையில், சூரிய புரோட்டான் நிகழ்வுகளை சந்திரயான் விண்கலம் கண்டறிந்துள்ளது.

இதுதொடர்பாக 'இஸ்ரோ' கூறியதாவது: சந்திரயான் 2–ன் ஆர்பிட்டர் கருவியானது சூரியனின் வெப்ப பிழம்புகளின் வெளியேற்றங்கள், அயனியாக்கம் செய்யப்பட்ட துகள் மற்றும் காந்தப்புலங்களின் சக்திவாய்ந்த ஓடை ஆகியவற்றைக் கடந்த ஜன.18–ம் தேதி பதிவு செய்துள்ளது. இந்த வெப்ப வெளியேற்றங்கள்தான் புவி காந்தப் புயல்களுக்கும், வானத்தில் துருவ ஒளியை ஒளிரவும் வழிவகுக்கிறது. இத்தகைய சூரிய புரோட்டான் நிகழ்வுகளின் தாக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதால், வெவ்வேறு கிரக அமைப்புகளில் இது எவ்வாறுசெயல்படுகிறது என்பது புரிந்துகொள்ள உதவும்.

சூரியன் மிக உக்கிரமாக இருக்கும்போது, சூரிய எரிப்பு எனப்படும் கண்கவர் வெடிப்புகள் ஏற்படுகின்றன. அப்போது சூரியனின் பிழம்புகள் விண்வெளியில் வெடித்துச் சிதறும். அவை சில நேரங்களில் ஆற்றல்மிக்க துகள்களைப் பூமி போன்ற கிரகங்களுக்குள் நுழைகிறது. இவற்றில் பெரும்பாலானவை அதிக ஆற்றல் கொண்ட புரோட்டான்களே ஆகும்.

இந்த ஆற்றலின் சக்திக்கு ஏற்ப, அவை விண்வெளியைக் கடுமையாகப் பாதிக்கிறது. இதில் ஏற்படும் கதிர்வீச்சு விண்வெளி நிலையங்களில் இயங்கும் மனிதர்களைப் பாதிக்கிறது.

மேலும், பூமியின் நடுத்தர வளிமண்டலத்தில் பெரிய அளவில் அயனியாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவைன சூரியவெடிப்பில் ஏற்படும் பிழம்புகளின்வலிமைக்கு ஏற்ப வகைப்படுத்தப்படுகின்றன.

ஏ – மிகச்சிறியவை. அதைத் தொடர்ந்து பி, சி, எம் மற்றும் எக்ஸ் உள்ளது. ஒவ்வொரு வகுப்பிலும் 1–9 வரையிலான நுணுக்கமான அளவுகளும் உள்ளன. உதாரணமாக எம்2 என்பது எம்1–ஐ விட 2 மடங்கு வலிமை கொண்டது.

அதன்படி, சமீபத்தில், இரண்டு எம் வகுப்பு அளவுள்ள வெடிப்புகள் நடந்துள்ளன. அவற்றில், ஒன்று எம் 1.5 அளவில் வெப்ப பிழம்புகளின் வெளியேற்றங்களுடனும், மற்றொன்று எம் 5.5 அளவுக்கு ஆற்றல்மிக்க துகள்களையும் கிரகங்களுக்குள் செலுத்தியுள்ளது.

இந்த சூரிய புரோட்டான் நிகழ்வைப் பூமியைச் சுற்றி வரும் நாசாவின் புவிசார் செயல்பாட்டுச் சுற்றுச்சூழல் செயற்கைக்கோள் (GOES) கண்டறியவில்லை. ஆனால், நிலவைச் சுற்றி வரும் நமது சந்திரயான் –2 தனது மென்மையான எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீட்டர் மூலம் இந்த நிகழ்வைக் கண்டறிந்துள்ளது. இவ்வாறு இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சந்திரயான்–2 விண்கலம் வெற்றிகரமாக நிலவை அடையாமல்போனதும், இஸ்ரோ விஞ்ஞானிகள் கடுமையாக சோர்வடைத்திருந்தனர். ஆனால், தற்போது நாசாவுக்கு சிக்காத அறிய தகவல்கள் சந்திரயான்–2வின் ஆர்ப்பிட்டரில் சிக்கிஉள்ளது விஞ்ஞானிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சூரியனின் பிழம்புகள் விண்வெளியில் வெடித்துச் சிதறும். அவை சில நேரங்களில் ஆற்றல்மிக்க துகள்களைப் பூமி போன்ற கிரகங்களுக்குள் நுழைகிறது. இவற்றில் பெரும்பாலானவை அதிக ஆற்றல் கொண்ட புரோட்டான்களேயாகும்.

1. 'தேசிய அறிவியல் நாள்' முன் கடைப்பிடிக்கப்படும் ஒரு வார கால நினைவேந்தலின் பெயர் என்ன?

அ) Atmanirbhar Vigyan

ஆ) Vigyan Sarvatra Pujyate ☑

இ) Celebration of Science in Past

ஈ) 'Science in Culture' Celebrations

✓ 'விக்யான் சர்வத்ர பூஜ்யதே' என்ற தலைப்பில் ஒரு வார கால நினைவேந்தலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் மற்றும் மத்திய கலாச்சார அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி ஆகியோர் தொடங்கினர்.

✓ அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்ட–து. தேசிய அறிவியல் நாளான பிப்.28ஆம் தேதி வரை நாடு முழுவதும் 75 இடங்களில் ஒரே நேரத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

---

2. 'நீலப்பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுகைக்–கான செயல்திட்டத்தை' கீழ்காணும் எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா ஒப்புக்கொண்டது?

அ) அமெரிக்கா

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) பிரான்ஸ் ☑



ஈ) ஜப்பான்

✓ இந்தியாவும் பிரான்ஸும் "நீலப்பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுகைக்கான செயல்திட்டத்தில்" உடன்ப–ட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் அறிவியல் அறிவு மற்றும் கடல் சார் பாதுகாப்புக்கு பங்களிப்பதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. மேலும், கடல் என்பது உலகளாவிய சொத்தாக இருப்பதை உறுதிசெய்கிறது.

✓ வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக பிரான்ஸ் நாட்டுக்கு சென்றிருந்தபோது இது மேற்கொள்ளப்பட்டது.

✓ கடல்சார் வர்த்தகம், கடல் சூழல் சுற்றுலா, உள்நாட்டு நீர்வழிகள், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை ஆகியவை இதில் அடங்கும்.

---

3. COVID தடுப்பூசியை உருவாக்க, 'CEPI', எந்த இந்திய மருந்து நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?

அ) பனசீ பயோடெக் ☑

ஆ) கேடிலா ஹெல்த்கேர்

இ) சிப்லா

ஈ) சன் பார்மா

✓ Coalition for Epidemic Preparedness Innovations (CEPI) ஆனது, COVID தடுப்பூசியை உருவாக்க, Translational Health Science and Technology Institute (THSTI) மற்றும் Panacea Biotec ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டமைப்புடன் இணையும்.

✓ THSTI என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித் தொழில்நுட்பவியல் துறையின் தன்னாட்சி நிறுவனமாகும். CEPI, இப்புதிய திட்டத்திற்கு $12 மில்லியன் டாலர் வரை நிதியளிக்கும்.

4. 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) சீனா

ஆ) அமெரிக்கா

இ) நார்வே ☑

ஈ) ஜெர்மனி

✓ 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் பதினாறு தங்கப் பதக்கங்களுடன் நார்வே முதலிடம் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஜெர்மனி பன்னிரு தங்கமும் சீனா 9 தங்கமும் பெற்று முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தில் உள்ளது. விளையாட்டுப் போட்டிகள் சமீபத்தில் 'பேர்ட்ஸ் நெஸ்ட்' மைதானத்தில் முடிவடைந்தன.

✓ சீனாவும் அதன் அதிபர் ஜி ஜின்பிங்கும் 2026இல் இந்தப் போட்டிகளை நடத்தும் மிலானோ–கார்டினாவிடம் இதன் பொறுப்புக்களை ஒப்படைத்தனர்.

---

5. யூனிஸ், பிராங்க்ளின் & டட்லி ஆகிய மூன்று புயல்கள் உள்ளிட்ட புயல் தொகுதியால் பாதிக்கப்பட்ட பகுதி எது?

அ) வட அமெரிக்கா

ஆ) ஐரோப்பா ☑



இ) ஆஸ்திரேலியா

ஈ) ஆப்பிரிக்கா

✓ யூனிஸ் புயல், இலண்டனுக்கு முதல் சிவப்பு வானிலை எச்சரிக்கையை வழங்கியது. 1987இல் பிரிட்டன் மற்றும் வடக்கு பிரான்சில் பெரும் புயல் தாக்கியதற்குப்பின் இது ஐரோப்பாவில் வீசும் சக்திவாய்ந்த புயல்களுள் ஒன்றாகும்.

✓ பிரிட்டன், அயர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், ஜெர்மனி மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் மரங்கள் முறிந்து விழுந்தது பலத்த காற்று வீசியது ஆகியவற்றால் 15 பேர் இறந்தனர். அதைத்தொடர்ந்த 2 நாட்களில் பிராங்க்ளின் மற்றும் டட்லி புயல்கள் அங்கு தாக்கின.

---

6. தொற்றுநோய்க்கு பிறகு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எந்த இனத்திற்கு, 'ஹம்பர்டியம் கோவிடம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது?

அ) பாம்பு

ஆ) தட்டைப்புழு ☑



இ) வீட்டு எலி

ஈ) வீட்டு ஈ

✓ ஒரு சிறிய இராஜநாகம்போல தோற்றமளிக்கும் தட்டைப் புழு இனத்தை அறிவியலார்கள் கண்டுபிடித்துள்ளனர்.

✓ பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் இந்த உயிரினங்கள் நத்தைகளை வேட்டையாடுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். COVID தொற்றுநோயின் பெயரால் இந்தத் தட்டைப்புழுவுக்கு 'ஹம்பர்டியம் கோவிடம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

7. புதிய இராம்சர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள கிஜாடியா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?

அ) ஹரியானா



ஆ) பீகார்

இ) குஜராத் ☑

ஈ) உத்தரகாண்ட்

✓ உலக சதுப்பு நில நாளை முன்னிட்டு 2 புதிய இராம்சர் தளங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை: குஜராத்தில் உள்ள கிஜாடியா வனவுயிரி சரணாலயம் மற்றும் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள பகீரா வனவுயரி சரணாலயம். இந்தியா 10,93,636 ஹெக்டேர் பரப்பளவைக்கொண்ட 49 தளங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது.

✓ இந்த எண்ணிக்கை தெற்காசியாவிலேயே மிகவுயர்ந்தது ஆகும். மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஜஜாரில் உள்ள சுல்தான்பூர் தேசிய பூங்கா மற்றும் பிந்தாவாஸ் வனவுயிரி சரணாலயத்தை ஹரியானாவில் உள்ள இராம்சர் தளங்களாக முன்னதாக அறிவித்தது.

---

8. 99 மில்லியன் ஆண்டுகள் பழமையான மலர்கள், எந்த நாட்டில் பாதுகாக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன?

அ) இந்தியா



ஆ) மியான்மர் ☑

இ) இலங்கை

ஈ) அமெரிக்கா

✓ மியான்மரில் '*Eophylica priscastellata*' மற்றும் '*Phylica piloburmensis*' ஆகிய இரண்டு புதிய வகை புதைபடிவ பூக்களைப் பழங்கால ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். அவை குறைந்தது 99 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய வட மியான்மரில் உள்ள கம்தி மற்றும் தனைங் சுரங்கங்களில் இருந்த கிரெட்டேசியஸ் அம்பரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

---

9. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, '2010 TK7 மற்றும் 2020 XL5' என்பது என்ன?

அ) புறக்கோள்கள்



ஆ) பூமி டிரோஜன்கள் ☑

இ) விண்கற்கள்

ஈ) தொலைநோக்கிகள்

✓ 'பூமி டிரோஜன்' என்பது ஒரு சிறுகோளாகும். இது நமது புவியின் அதே சுற்றுப்பாதையைப் பகிர்ந்துகொள்வதோடு சூரியனையும் சுற்றிவருகிறது. 2ஆவது 'பூமி டிரோஜன்' 2020இல் கண்டறியப்பட்டது; அகற்கு '2020 XL5' என்று பெயரிடப்பட்டது. இது பூமிக்கு அருகிலுள்ள சிறுகோளாகும்.

✓ இது விலகிச்செல்லும் முன் அடுத்த 4,000 ஆண்டுகளுக்கு இச்சுற்றுப்பாதையிலிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சிறுகோள் 'Pan-STARRS S1' தொலைநோக்கிமூலம் கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் அறியப்பட்ட பூமி டிரோஜன் சிறுகோள் '2010 TK7' ஆகும். சுமார் 0.3 கிமீ அகலம் உடைய இது, 2010இல் கண்டுபிடிக்கப்பட்டது.

10. கொங்குர்ஸ்-M ஏவுகணைகளைத் தயாரிப்பதற்காக, இந்திய இராணுவம், பின்வரும் எந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது?

அ) டிஆர்டிஓ

ஆ) பாரத் டைனமிக்ஸ் லிட் ☑

இ) ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட்

ஈ) பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்

✓ பாரத் டைனமிக்ஸ் லிட்டும் (BDL) இந்திய இராணுவமும் ₹3,131.82 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் 'Konkurs-M' ஏவுகணைகளை வாங்குவதற்காக ஈடுபட்டுள்ளன. 75-4000 மீ வீச்சுத்திறன்கொண்ட இந்த ஏவுகணை BMP-II இலிருந்தோ அல்லது தரை ஏவியிலிருந்தோ ஏவப்படலாம். கொங்குர்ஸ்-M இரஷ்ய மூலக்கருவி உற்பத்தியாளரின் (OEM) உரிம ஒப்பந்தத்தின்கீழ் இது தயாரிக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. எல்ஐசி பொதுப் பங்கு: 20% அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி

ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் (LIC) பொதுப் பங்குகளை வாங்குவதில் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது: LIC'ல் மத்திய அரசின் பங்குகளை பொதுப்பங்கு வெளியீடு மூலம் விற்பனை செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பொதுப்பங்குகளை வாங்கு-தற்கு விரும்பலாம். ஆனால், தற்போதைய விதிகளின்படி, எல்ஐசியில் அந்நிய நேரடி முதலீடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தற்போதைய அந்நிய நேரடி முதலீட்டு விதிகளின்படி, பொதுத்துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு 20 சதவீதம் வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி எல்ஐசி நிறுவனத்தில் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

எல்ஐசியில் மத்திய அரசின் பங்கில் 5 சதவீதமான 31.63 கோடி பங்குகளை பொதுப்பங்கு வெளியீடுமூலம் விற்க இந்திய பங்கு, பரிவர்த்தனை வாரியத்திடம் (செபி) கடந்த 13-ஆம் தேதி வரைவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த விற்பனைமூலம் ₹63,000 கோடி திரட்ட திட்டமிடப்ப-ட்டுள்ளது.

இணையவழி ஏல முறையில் நிலக்கரி விற்பனைக்கு ஒப்புதல்: கோல் இந்தியா லிட் உள்ளிட்ட அரசு நிலக்கரி நிறுவனங்கள், துறைசார்ந்த ஏல விற்பனைக்குப் பதிலாக, இணையவழி பொது ஏல முறையில் நிலக்கரியை விற்பனை செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதுதொடர்பாக முடிவெடுக்கப்பட்டது.

இதுகுறித்து நிலக்கரித்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'மத்திய அரசின் இந்த முடிவால் சந்தையில் விலைகுறித்த தவறான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்; அனைத்து நுகர்வோருக்கும் ஒரே விலை தெரிவிக்கப்படும். மேலும், இணையவழி ஏல நடைமுறை, மின்னுற்பத்தி துறை உள்பட அனைத்து துறைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் (எண்ம) மிஷன் திட்டத்துக்கு ஒப்புதல்: நாடு முழுவதும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் எனப்படும் எண்ம சுகாதார அடையாள அட்டைத் திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் ₹1,600 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின்கீழ் குடிமக்களுக்கு எண்ம சுகாதார அடையாள அட்டை வழங்கப்படும். அவர்களின் சுகாதாரம் பற்றிய தகவல்கள் எண்ம வடிவில் ஆவணங்களாக சேமித்து, அதனுடன் அடையாள எண் இணைக்கப்படும். தகவல் தொழில்நுட்ப உதவியுடன் மக்களுக்கு தரமான மருத்துவச் சேவையை வழங்குவதற்கு இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்கும்.

மத்திய அரசின் இந்தத் திட்டத்தை தேசிய சுகாதார ஆணையம் செயல்படுத்தும் என்று மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. மத்திய அரசு சார்பில் 'உடல் ஆரோக்கிய சவால் போட்டி' – அமைச்சர் மா. சுப்பிரமணியன் முதலிடம்: சென்னை மாநகரில் அதிக போட்டியாளர்கள் பங்கேற்பு

மத்திய அரசு நடத்திய 'உடல் ஆரோக்கிய சவால்' போட்டியில், தமிழ்நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் முதலிடம் பிடித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

75ஆம் ஆண்டு இந்திய விடுதலை விழாவை முன்னிட்டு, உடல் ஆரோக்கியஞ்சார் போட்டிகளில் இந்திய அளவில் 75 நகரங்களைச் சார்ந்த தலைவர்கள், பல்வேறு நிறுவனங்களின் முதன்மைசெயல் அலுவலர்கள், ஆணையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

இதில் இணையதளம் வாயிலாக பதிவுசெய்த நபர்களின் நடைபயிற்சி, ஓடுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் போன்ற நிகழ்வுகள் இணையம் வழியே கண்காணிக்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

75 நகரங்கள் பங்கேற்பு

நடைபயிற்சி, ஓடுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் போன்ற நிகழ்வுகளில் 75 நகரங்களில் உள்ள முக்கிய தலைவர்களில் 297 பேரும், பல்வேறு நிறுவனங்களின் முதன்மை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு ஆணையாளர்கள் 56 பேரும் பதிவு செய்தனர்.

நடைபயிற்சி, ஓடுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் ஆகிய சவால் போட்டிகளில் சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிவு செய்திருந்தார். இதில் அதிக எண்ணிக்கையிலான செயல்பாடுகளில் 390 கிமீ தூரம் ஓடி முதலிடத்தைப்பிடித்துள்ளார்.

நடைபயிற்சி சவால் போட்டியில் அதிக எண்ணிக்கையி –லான செயல்பாடுகளில் மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி 5ஆம் இடத்தை பிடித்துள்ளார்.

சென்னை மாநகரம் முதலிடம்

சென்னை மாநகரில் மிதிவண்டி ஓட்டுதல் சவாலில் 1,059 பேர் பதிவு செய்து மொத்தம் 72,458 கிமீ தூரத்தை கடந்துள்ளனர். இதன்மூலம் போட்டியில் கலந்துகொண்ட நகரங்களிலேயே அதிகம் பதிவுசெய்தவர்கள், கடந்த தூரம் அடிப்படையில் சென்னை மாநகரம் முதலிடத்தை பெற்றுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

1. 'பிரதம அமைச்சர் கிராம சதக் யோஜனா' திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

✓ மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகமானது தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமையுடன் இணைந்து 'பிரதம அமைச்சர் கிராம சதக் யோஜனா' திட்டத்தைச் செயல்படுத்துகிறது. சமீபத்தில், மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங், பொது வெளியில் கிராமப்புற இணைப்புக்கான GIS தரவை வெளியிட்டார்.

✓ பிரதமரின் கிராமப்புற சாலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக 800,000+ கிராமப்புற வசதிகள் தொடர்பான புவியியல் தகவல் அமைப்பு பற்றிய தரவுகளும், ஒரு மில்லியன்+ வசிப்பிடங்கள் மற்றும் 25,00,000+ கிலோமீட்டர் தூர சாலைகள் பற்றிய தரவுகளும் சேகரிக்கப்பட்டு ஜிஐஎஸ் அமைப்பை பயன்படுத்தி டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

---

2. இந்தியாவில் அனைத்து முன்கட்டண கருவிகளையும் அங்கீகரிக்கும் நிறுவனம் எது?

அ) NPCI

ஆ) RBI ☑

இ) நிதி அமைச்சகம்

ஈ) அமலாக்க இயக்குநரகம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி இந்தியாவில் உள்ள அனைத்து ப்ரீ-பெய்டு கருவிகளையும் (PPI) அங்கீகரிக்கிறது. பணஞ் செலுத்துதல் மற்றும் செட்டில்மெண்ட் சிஸ்டம்ஸ் சட்டம், 2007 (PSS சட்டம்) கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் அது அங்கீகரிக்கிறது. PSS சட்டம், 2007 இன்கீழ், மத்திய வங்கியின் அங்கீகாரம் இல்லாமல், வாடகை கார் சேவை வழங்கும் செயலியான 'sRide' குறித்து RBI அண்மையில் நாட்டு மக்களை எச்சரித்தது.

---

3. எந்த இந்திய கணிதவியலாளருக்கு 2021-க்கான 'இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசு' வழங்கப்பட்டுள்ளது?

அ) நீனா குப்தா ☑



ஆ) R பிரக்ஞானந்தா

இ) Dr B உமா சங்கர்

ஈ) Dr குந்தல் கோஷ்

✓ கொல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளியியல் கழகத்தின் கணிதவியலாளரான பேராசிரியர் நீனா குப்தாவுக்கு 'இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசு' வழங்கப்பட்டது. அஃபைன் இயற்கணித வடிவியல் மற்றும் பரிமாற்ற இயற்கணிதம் ஆகியவற்றில் அவர் செய்த குறிப்பிடத்தக்க பணிக்காக கடந்த 2021ஆம் ஆண்டிற்கான விருதை அவர் பெற்றார்.

✓ சர்வதேச கோட்பாட்டு இயற்பியல் மையம் (ICTP) மற்றும் சர்வதேச கணித ஒன்றியம் ஆகியவற்றுடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை நிதியுதவியுடன் ஒரு வளரும் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளருக்கு ஆண்டுதோறும் இப்பரிசு வழங்கப்படுகிறது.

---

4. நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் கவுன்சிலின் தலைவர் யார்?

அ) RBI ஆளுநர்



ஆ) மத்திய நிதி அமைச்சர் ☑

இ) பிரதமர்

ஈ) NITI ஆயோக் CEO

✓ நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் கவுன்சிலின் 25ஆவது கூட்டம், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடந்தது. நிதித்துறையின் வளர்ச்சிக்கும், பொருளாதார நிலைப்புத்தன்மையுடன் உள்ளடங்கிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் தேவையான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. நாணய மேலாண்மை தொடர்பான பல்வேறு செயல்பாட்டு சிக்கல்களையும் அக்கவுன்சில் விவாதித்தது.

---

5. National Means-cum-Merit Scholarship (NMMSS) திட்டமானது எந்த ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது?

அ) 2023-24

ஆ) 2025-26 ☑

இ) 2029-30

ஈ) 2031-32

✓ 2025-26 வரை தேசிய மீன்ஸ்-கம்-மெரிட் ஸ்காலர்ஷிப் திட்டத்தை (NMMSS) தொடர கல்வி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. வருமான உச்சவரம்பை ஆண்டுக்கு ₹1.5 இலட்சத்திலிருந்து ₹3.5 இலட்சமாக அதிகரிப்பதுபோன்ற தகுதி அளவுகோல்களில் சில மாற்றங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எட்டாம் வகுப்பில் தேர்ச்சியடைந்த மாணவர்களின் இடைநிற்றலை தடுத்தலும், 2ஆம் நிலைக் கட்டத்தில் கல்வியைத் தொடர ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

6. 'சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிலைமாற்ற அறிக்கை'யை வழங்கிய விண்வெளி நிறுவனம் எது?

அ) ஸ்பேஸ்X



ஆ) NASA ☑

இ) ESA

ஈ) CNSA

✓ NASA, 'சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிலைமாற்ற அறிக்கை'யின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது. வணிகச் சேவைகளுக்கு சுமூகமான மாற்றத்திற்கு வழி வகுக்கும் அடுத்த பத்தாண்டிற்கான நிலைய செயற்பாடுக -ளுக்கான இலக்குகள் இதில் அடங்கும்.

✓ தாழ்புவி சுற்றுவழி குறித்த வணிகப் பொருளாதாரத்தின் அளிப்பு மற்றும் தேவைப் பக்கம் ஆகிய இரண்டையும்

மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் மாற்றத்திற்குத் தேவையான தொழில்நுட்ப நிலைகள் மற்றும் பட்ஜெட் ஆகியவையும் இதில் அடங்கும்.

---

7. 'COVID-19 தொற்றுச்சூழலில் சுகாதாரக் கழிவுகளின் உலகளாவிய பகுப்பாய்வு' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) WHO ☑

இ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம்

ஈ) FDA

✓ உலக சுகாதார நிறுவனம், 'COVID-19 சூழலில் சுகாதாரக் கழிவுகளின் உலகளாவிய பகுப்பாய்வு' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, உலகளவில் செலுத்தப்பட்ட 8 பில்லியன் தடுப்பூசிகள் கண்ணாடி குப்பிகள், மருந்தூசிகள் மற்றும் முதலுதவிப் பெட்டிகள் வடிவில் கூடுதலாக 144,000 டன் கழிவுகளை உற்பத்தி செய்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

---

8. 'விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆய்வுக்கூடம்' எந்த நிறுவனத்தின்கீழ் செயல்படுகிறது?

அ) DRDO

ஆ) ISRO ☑

இ) CSIR

ஈ) BARC

✓ அகமதாபாத்தைச் சார்ந்த விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகமானது இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின்கீழ் செயல்படுகிறது. சமீபத்தில், இந்த நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'குவாண்டம் சிக்கலை' வெற்றிகரமாக நிரூபித்துள்ளனர்.

✓ நிகழ்நேர குவாண்டம் கீ விநியோக உத்தியை (QKD) பயன்படுத்தி, 300 மீ இடைவெளியில் அமைந்த இரண்டு கட்டடங்களுக்கு இடையே ஹேக்-புரூப் தகவல் தொடர்பு முறையை அவர்கள் மேற்கொண்டனர்.

---

9. 2021-2022இல் தனது முதல் ஆப்பிரிக்க நாடுகளின் கோப்பையை வென்ற அணி எது?

அ) செனகல் ☑

ஆ) மலாவி

இ) கினியா

ஈ) நமீபியா

✓ பெனால்டி ஷூட் ஔட்டில் எகிப்தை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 2022ஆம் ஆண்டில் செனகல் தனது முதல் ஆப்பிரிக்க நாடுகளின் கோப்பையை வென்றது. செனகலின் சாடியோ மானே வெற்றிக்கான கோலை அடித்தார். செனகல், 2019 - ஆப்பிரிக்கக் கோப்பையின் இறுதிப்போட்டியில் அல்ஜீரியாவிடம் 0-1 என்ற கோல் கணக்கில் வீழ்ந்து இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

✓ செனகல் ஆப்பிரிக்க நாடுகளின் கோப்பையின் பதினாறு பதிப்புகளில் விளையாடியுள்ளது. இறுதியாக 2021இல் இவ்வணி தனது முதல் AFCON பட்டத்தை வென்றது.

---

10. 2022 ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் எது?

அ) India Untouched

ஆ) Writing with Fire ☑



இ) Period. End Of Sentence

ஈ) Jai Bhim

✓ திரைப்பட தயாரிப்பாளர்களான ரிந்து தாமஸ் மற்றும் சுஷ்மித் கோஷ் இயக்கிய 'ரைட்டிங் வித் பையர்' என்ற இந்திய ஆவணப்படம் 94ஆவது அகாதமி விருதுகளில் 'சிறந்த ஆவணப்பட'ப் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

✓ இந்த ஆண்டுக்கான ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் இதுவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முதல்வரின் சுயசரிதை: இன்று வெளியிடுகிறார் ராகுல்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தன் வரலாற்று நூலான 'உங்களில் ஒருவன்' நூலின் முதல் பாகத்தை அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பிப்.28 அன்று வெளியிடுகிறார்.

நூலை இராகுல் காந்தி வெளியிட, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் பெற்றுக்கொள்கிறார்.

---

2. பல்கேரியாவில் நடைபெறும் 73ஆவது ஸ்ட்ரேண்ட்ஜா நினைவு பாக்சிங் தொடரில், இந்திய வீராங்கனைகள் நிக்கத் ஜரீன் (52 கிகி), நீட்டு (48 கிகி) தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தனர்.

---

3. மெக்சிகோ ஓபன்; 4ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற நடால்

மெக்சிகோ நாட்டின் அகாபல்கோ நகரில் மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியனான நடால் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த கேமரூன் நார்ரி ஆகியோர் விளையாடினர்.

இந்தப் போட்டியில், 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் கேமரூனை வீழ்த்தி ரபேல் நடால் பட்டம் வென்றுள்ளார். அகாபல்கோவில் நடாலுக்கு இது 4ஆவது சாம்பியன்பட்டம் ஆகும். நடப்பு 2022ஆம் ஆண்டில் நடாலின் மூன்றாவது சாம்பியன் பட்டம் இதுவாகும்.

---

4. பொதுத்துறை வங்கிகளுக்கு ₹15,000 கோடி மூலதன நிதி

பொதுத்துறை வங்கிகளுக்கு ₹15,000 கோடி மூலதன நிதியை வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அதில்

பெரும் பங்கானது நிதிப் பிரச்னையைச் சந்தித்து வரும் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் & சிந்து வங்கி உள்ளிட்டவற்றுக்கு வழங்கப்படவுள்ளது.

வங்கிகள் கடன் வழங்குவதில் பிரச்னை ஏற்படக்கூடாது என்பதற்காக மூலதன நிதியை மத்திய அரசு வழங்கி வருகிறது. நடப்பு 2021-22ஆம் நிதியாண்டில் பொதுத் துறை வங்கிகளுக்கு ₹20,000 கோடி மூலதன நிதி வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது.

அதில் ₹15,000 கோடி நிதியைப் பொதுத்துறை வங்கிகளுக்கு மத்திய அரசு விரைவில் வழங்கும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் & சிந்து வங்கி உள்ளிட்ட வங்கிகளுக்கு அதிக நிதி வழங்கப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறப்பு நிதிப்பத்திரங்கள் வாயிலாக இந்த மூலதன நிதி வழங்கப்படவுள்ளது. அப்பத்திரங்களுக்கு வட்டி எதுவும் விதிக்கப்படாது. அதே வேளையில், நிதிப்பத்திரங்களின் அசல் விலையில் குறிப்பிட்ட தள்ளுபடியுடன் அவை விநியோகிக்கப்படவுள்ளன.

எந்தெந்த வங்கிகளுக்கு எவ்வளவு நிதி வழங்குவது என்பது தொடர்பாக மார்ச்சில் முடிவெடுக்கப்படவுள்ளதாக -வும், அதையடுத்து மூலதன நிதியானது பகிர்ந்து வழங்கப்படும் என்றும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பஞ்சாப் & சிந்து வங்கிக்குக் கடந்த 2020-21ஆம் நிதி ஆண்டின் 3ஆவது காலாண்டின்போது மூலதன நிதி வழங்கப்பட்டது. அதையடுத்து பேங்க் ஆப் இந்தியா (₹3,000 கோடி), இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (₹4,100 கோடி), சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா (₹4,800 கோடி), யுசிஓ வங்கி (₹2,600 கோடி) ஆகியவற்றுக்குக் கடந்த ஆண்டு மார்ச்சில் ₹14,500 கோடி மூலதன நிதி வழங்கப்பட்டிருந்தது. அடுத்த 2022-23ஆம் நிதியாண்டில் வங்கிகளுக்கான மூலதன நிதி இலக்கு ₹15,000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

---

5. 30 'பிரிடேட்டர் ட்ரோன்'கள் வாங்கும் ஒப்பந்தம்: இறுதிக்கட்டத்தில் இந்திய-அமெரிக்க பேச்சுவார்த்தை

அமெரிக்காவிடமிருந்து $3 பில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ₹22,500 கோடி) மதிப்பில் பன்முகத் தாக்குதலுக்கு பயன்படக்கூடிய 30-எம்கியூ9பி பிரிடேட்டர் ட்ரோன்களை (ஆளில்லா விமானங்கள்) இந்தியா வாங்குவதற்கான ஒப்பந்த பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்பு ஒத்துழைப்பு (நேட்டோ) கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத ஒரு நாட்டுக்கு இந்த ட்ரோன்களை வழங்க அமெரிக்கா ஒப்பந்தம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த மிகப்பெரிய பாதுகாப்புத்துறைசார் ஒப்பந்தத்துக்கான முன்மொழிவு, கடந்த 2017-ஆம்ஆண்டு முந்தைய அதிபர் டிரம்ப் ஆட்சி காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது அறிவிக்கப்பட்டதாகும்.

அதன் பிறகு, இரு நாடுகளிடையே நடத்தப்பட்ட தீவிர பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியாவின் ராணுவம், விமானப் படை மற்றும் கடற்படை என முப்படைகளுக்கும் தலா 10 ட்ரோன்கள் வீதம் 30 பிரிடேட்டர் ட்ரோன்களை இந்தியாவுக்கு விற்க முதல்கட்ட அளவில் உடன்பாடு எட்டப்பட்டது. இந்த உடன்பாடு தொடர்பான பேச்சுவார்த்தை தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் மற்றும் சீனா என இரு எல்லை தொடர்பான போர் வந்தாலும், அதனை சமாளிக்கும் வகையில் எல்லையில் ராணுவ மற்றும் உள் கட்டமைப்புகளை இந்தியா பலப்படுத்தி வருகிறது. இந்தச் சூழலில், பிரிடேட்டர் ட்ரோன்களுக்கான உடன்பாடு இறுதி கட்டத்தை எட்டியிருப்பது இந்தியாவுக்கு மேலும் வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

பயன் என்ன? அமெரிக்க பாதுகாப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் இந்த பிரிடேட்டர் ட்ரோன்கள் மணிக்கு 482 கி.மீ. வேகத்தில் தொடர்ந்து 27 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டது. மேலும், வானில் 50,000 அடி உயரம் வரை பறக்கக் கூடியது.

அதோடு, 215 கிலோ எடையை தாங்கிச் செல்லும் திறன் கொண்டது. கண்காணிப்பு, உளவு பார்த்தல், உளவுத் தகவல் சேகரிப்பு மற்றும் எதிரி இலக்குகளை அழித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இந்த ட்ரோன்களைப் பயன்படுத்த முடியும்.

---

6. சாலை விபத்தில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கான இழப்பீடு 8 மடங்காக உயர்கிறது

சாலை விபத்துகளில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை 8 மடங்காக உயர்த்தப்பட்டு ₹2 லட்சமாக வழங்கப்படவுள்ள -து. இது, வரும் ஏப்.1 முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதுதொடர்பான அறிவிக்கையை மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சகம் பிப்.25ஆம் தேதி வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

சாலை விபத்துகளில் பலத்த காயமடைந்தவர்களுக்கு நிவாரணமாக தற்சமயம் வழங்கப்படும் தொகை ₹12,500-இல் இருந்து ₹50,000-ஆக உயர்த்தப்படுகிறது. விபத்தில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்படும் தொகை ₹25,000-இல் இருந்து ₹2 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

கடந்த 1989ஆம் ஆண்டின் நிவாரண உதவித் திட்டத்துக்கு மாற்றாக, 2022ஆம் ஆண்டின் மோட்டார் வாகன விபத்துகளால் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டம், வரும் ஏப்.1 முதல் அமலுக்கு வரவுள்ளது.

இழப்பீடு கேட்டு பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதை குறித்த காலத்துக்குள் முடிக்க வேண்டும் என்று அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சமீபத்திய தகவல்படி, கடந்த 2020இல் நாடு முழுவதும் 3,66,138 சாலை விபத்துகள் நிகழ்ந்தன.

அவற்றின் காரணமாக 1,31,714 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

7. உக்ரைன் போரின் பின்னணி

ஓட்டோமான் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ரஷ்யப் பேரரசு கிரீமியா தீபகற்பத்தைத் தன்னோடு இணைத்துக்கொண்டது. ரஷ்யப் பேரரசில் உக்ரைன் இணைந்ததன் 300-ம் ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், 1954-ல் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் அதிபர் நிகிதா குருஷேவ் கிரீமியாவை உக்ரைனுக்குப் பரிசாக வழங்கினார். 40 ஆண்டுகளில் சோவியத் ஒன்றியம் தகர்ந்துவிடும் என்று அவர் அன்று நினைத்திருக்க வாய்ப்பில்லை.

சோவியத் ஒன்றியம் 1991-ல் உடைந்தபோது, சோவியத்தின் அணு ஆயுதக் கிடங்குகளில் மூன்றில் ஒரு பகுதி உக்ரைனில் இருந்தது. அன்றைய காலகட்டத்தில் அது உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் கிடங்கு என்று கூறலாம். இதிலிருந்தே முன்பு நிலவிய உக்ரைன்-ரஷ்ய பரஸ்பர உறவைப் புரிந்துகொள்ள முடியும். பின்பு, இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் சோவியத்திலிருந்து பிரிந்து சென்ற சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பின் கண்காணிப்பில் இருந்தன. உக்ரைன் 1994-ல் ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திட்ட பின்பு, தன்னிடம் இருக்கிற அனைத்து அணு ஆயுதங்களையும் 1996-ல் ரஷ்யாவிடம் ஒப்படைத்தது.

1991-ல் சோவியத் ஒன்றியம் சிதறுண்டதோடு பனிப்போர் முடிவுக்கு வந்தது. ஆனால், தன்னுடன் எல்லையைப் பகிர்ந்துகொண்டுள்ள முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் ரஷ்யாவுக்குப் புதிய பாதுகாப்பு சவால்களைத் தோற்றுவித்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மேற்கத்திய நாடுகளால் தூண்டப்படுகின்றன. குறிப்பாக, ஐரோப்பியக் கூட்டமைப்பு, அமெரிக்கா ஆகியவற்றின் வழிகாட்டுதலில் உள்ள வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் (நேட்டோ) உக்ரைன் சேர்வதற்கான முயற்சிகளைத் தனது பாதுகாப்புக்கான பெரும் அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது. உக்ரைன் மக்களில் ஒருசாராரிடம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் ஆர்வம் இருக்கிறது. சோவியத் ஆட்சிமுறையில் கட்டுப்பாடுகளை அனுபவித்த அம்மக்கள், ஐரோப்பிய சுதந்திர ஜனநாயகத்தைப் பெரிதும் விரும்புகின்றனர். இதனால், உக்ரைன் அதிபர் தேர்தல்களில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்வதற்கு முன்மொழியும் தலைவருக்கே கூடுதல் ஆதரவு கிடைத்தது. அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான சாத்தியங்கள் இன்னும் அங்கு உருவாகவில்லை. குறிப்பாக, அதன் வளர்ச்சி பெறாத பொருளாதாரம், வலுப்பெறாத ஜனநாயக அமைப்பு, அரசுக்கு எதிராக நடக்கும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மாஸ்கோவின் சுற்றுப்பாதையிலிருந்து கீவ் விலகி மேற்கத்திய சித்தாந்தத்தை நோக்கிய மாற்று வழியில் பயணிக்கத் தடைக்கல்லாக உக்ரைன் முன்னாள் அதிபர் விக்டர் யெனுகோவேய்க் இருந்தார். அவர் ஒரு ரஷ்ய ஆதரவாளர். 2010-ல் அவருடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பெண் வேட்பாளர் டைமோஷென்ஸ்கோ இருமுறை பிரதமராகப் பதவி வகித்தவர். இவர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் அங்கம் வகிக்க வேண்டும், அவ்வாறு இணைந்தால் உக்ரைன் செழிப்படையும் என்று வெளிப்படையாக ஆதரவு திரட்டியவர். உக்ரைனின் பாதுகாப்புக்கு நேட்டோவுடன் இணைவது முக்கியம் என்ற கருத்தைக் கொண்டவர். அதிபர் தேர்தலில் தோல்வியடைந்த அவர், அரசியல் கைதியாகச் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் தன் மருத்துவச் சிகிச்சைகளுக்காக ஜெர்மனி செல்லவும், உக்ரைனில் அரசியல் பதற்றம் தணியவும் உக்ரைன் நாடாளுமன்றத்தில் நவம்பர் 2013-ல் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பேரலையைப் போல அங்கு போராட்டங்கள் வெடித்தன.

அதிபர் விக்டர் யெனுகோவேய்க் தலைமையிலான அரசு, ஐரோப்பிய ஒன்றியத்துடனான அனைத்துப் பேச்சுவார்த்தைகளையும் முடித்துக்கொண்டு, ரஷ்யாவுடன் கைகோக்கத் தயாரானது. இதன் காரணமாக, ஏற்கெனவே நடந்துகொண்டிருந்த போராட்டங்கள் மேலும் வலுப்பெற்றன. இந்தப் போராட்டங்களில் 18 காவல் துறை அதிகாரிகள் உட்பட மொத்தம் 130 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே, எதிர்க் கட்சியினருக்கும் அதிபர் விக்டர் யெனுகோவேய்க்குக்கும் இடையே ஒருங்கிணைந்த ஒரு அரசை நிறுவுவதற்கும் நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கும் ஒரு இடைக்கால ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், யாரும் எதிர்பாராத நிலையில் விக்டர் யெனுகோவேய்க் அதிபர் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாக நாடாளுமன்றம் பிரகடனப்படுத்தியது. அதற்கு முன்பே அவர் ரஷ்யாவின் உதவியை நாடி, அங்கு தப்பி ஓடினார். இதன் தொடர்ச்சியாக ரஷ்ய ஆதரவாளர்களுக்கும் ஐரோப்பிய ஆதரவாளர்களுக்கும் இடையே பெரும் மோதல்கள், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களில் தோன்றின. பூர்விக ரஷ்யர்கள் பெருமளவில் வாழும் கிரீமியாவில் கீவுக்கு எதிராகவும் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் போராட்டங்கள் வெடித்தன. ரஷ்ய ஆதரவாளர்கள் கிரீமியாவில் உள்ள அரசாங்கக் கட்டிடங்களையும் விமான நிலையங்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக உக்ரைன் முன்வைத்த குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்தது. மேலும், உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ராணுவத்தை அனுப்பவும் மார்ச், 2014-ல் ரஷ்ய அதிபர் புதின் உத்தரவிட்டார். கிரீமியாவில் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு ஒன்றும் நடந்தது. பெரும்பான்மையினர் ரஷ்யாவுடன் இணைய வாக்களித்தனர். இதை எதிர்பார்த்துக் காத்திருந்த ரஷ்யாவும் கிரீமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாக அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து, ரஷ்யாவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது. பனிப்போர் காலகட்டத்துக்குப் பிறகு ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான உறவு கடுமையான பாதிப்புக்குள்ளாகியது. உக்ரைனுடனான

ரஷ்யாவின் உறவும் தீர்க்கவியலாத சிக்கலுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியில், உக்ரைன் சிக்குண்டு தன்னுடைய நிலப்பரப்பை ரஷ்யாவிடம் இழந்தது, சர்வதேசச் சட்டங்களுக்கு ஒரு சவாலாக அமைந்துவிட்டது. உக்ரைனின் எல்லையோரப் பிராந்தியமான டான்பாஸில் ரஷ்ய ஆதரவுப் படையினருக்கும் உக்ரைன் ராணுவத்துக்கும் இடையே கடந்த 2021-லிருந்தே மோதல்கள் தொடங்கிவிட்டன. அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன், 'நோட்டோ' வுடன் உக்ரைன் சேர்வதற்கு ஊக்கமளித்தார். ஜோ பைடனுடனான காணொளிப் பேச்சுவார்த்தையின்போது, இந்த முயற்சிகள் தங்களது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்று புதின் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்தார். அதற்கு பைடனின் பதில், ரஷ்யாவின் மீது கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்பதாகவே இருந்தது.

இதற்கிடையில், உக்ரைன் எல்லையில் படை குவிப்புக்கு புதின் உத்தரவிட்டார். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உக்ரைன் எல்லையை நோக்கி விரைந்தனர். கூடுதலாகத் தனது நேசநாடான பெலாரஸில் அணு ஆயுதப் போர்ப் பயிற்சியிலும் ரஷ்ய ராணுவம் ஈடுபட்டுவந்தது. உக்ரைன் மீது முப்படைகளின் மூலமும் முழுத் தாக்குதலுக்கு உத்தரவிட்டுள்ளார் புதின். தாக்குதல் தொடங்கிய முதல் நாளிலேயே செர்னோபில் அணுமின் உலை இயங்கிய பகுதியை ரஷ்யா கைப்பற்றிவிட்டது. இந்நடவடிக்கை உக்ரைன் அரசை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஐரோப்பிய எல்லையில் இரு நாடுகள் மோதிக்கொள்வது இதுவே முதல்முறை.

8.

மார்ச் 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. தொழிற்துறையில் அன்னிய முதலீட்டை ஊக்குவிப்பது தொடர்பான கொள்கைக்கு சமீபத்தில் ஒப்புதலளித்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) கோவா

ஆ) அஸ்ஸாம்



இ) ஜம்மு–காஷ்மீர் ☑

ஈ) லடாக்

✓ துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா தலைமையிலான நிர்வாக கவுன்சில், ஜம்மு–காஷ்மீரில் தொழிற்துறையில் அன்னிய முதலீட்டை மேம்படுத்துவத –ற்கான கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய கொள்கையானது குறைந்தபட்சம் 51 சதவீத வெளிநாட்டு பங்குகளுடன் ₹100 கோடிக்கும் அதிகமான வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

2. இந்தியாவின் COVID–19 தடுப்பூசி மேம்பாடு மற்றும் நிர்வாகப் பயணத்தை ஆவணப்படுத்தும் அறிக்கைகளை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) போட்டித்தன்மைக்கான நிறுவனம் ☑

ஆ) NITI ஆயோக்

இ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலை

ஈ) எய்ம்ஸ்

✓ மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, இந்தியாவின் COVID தடுப்பூசி மேம்பாடு மற்றும் தடுப்பூசி நிர்வாகப் பயணத்தை ஆவணப்படுத்தும் போட்டித்தன் –மைக்கான நிறுவனத்தின் (இந்திய அத்தியாயம்) இரு அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

✓ இந்தியாவின் தடுப்பூசி மேம்பாடு குறித்த இவ்வறிக்கை, உள்நாட்டு தடுப்பூசிக்கான 'PM CARES' நிதியின் ₹100 கோடி நிதியுதவி மற்றும் மருத்துவ பரிசோதனைகளை நடத்துவதற்கான உலகளாவிய நிறுவனங்களுடன் இந்திய மருந்து நிறுவனங்களின் ஒத்துழைப்பில் கவனம் செலுத்துகிறது. நிர்வாகம் குறித்த அறிக்கை, 'Co–WIN' மற்றும் 'ஆரோக்கிய சேது' போன்ற செயலிகளில் கவனம் செலுத்துகிறது.

---

3. 'ஹெல்த் ஸ்டார் ரேட்டிங்' என்பது கீழ்காணும் எந்த அமைப்பின் முன்முயற்சியாகும்?

அ) இந்திய உணவு கழகம்

ஆ) FSSAI ☑

இ) நபார்டு

ஈ) NITI ஆயோக்

✓ இந்திய உணவுப்பாதுகாப்பு&தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) வழிகாட்டுதலின்படி, பேக்கேஜ் செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கு 'சுகாதார நட்சத்திர மதிப்பீடு' வழங்கப்படும். நட்சத்திரங்களின் எண்ணிக்கை, பொருள் எவ்வளவு ஆரோக்கியமானது அல்லது ஆரோக்கியமற்றது என்பதைக்குறிக்கும். உணவுப்பொருளிலுள்ள கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இம் மதிப்பீடு செய்யப்படும்.

4. 'கூட்டுப்பொருள் உற்பத்திக்கான தேசிய உத்தி'யை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ) MSME அமைச்சகம்

இ) வர்த்தகம் & தொழில் அமைச்சகம்

ஈ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ மின்னணுவியல் & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது 'கூட்டுப்பொருள் உற்பத்திக்கான தேசிய உத்தி'ஐ வெளியிட்டது. இவ்வுத்தியின்படி, அடுத்த 3 ஆண்டுகட்குள் உலகளாவிய கூட்டுப்பொருள் உற்பத்தியில் பங்கை 5% ஆக அதிகரிப்பதை இந்தியா நோக்கமாகக்கொண்டுள்ளது.

✓ முப்பரிமாண (3D) அச்சிடுதல் அல்லது கூட்டுப்பொருள் உற்பத்தியானது பொருள்களின் முன்மாதிரிகள் அல்லது வேலைசெய்யும் மாதிரிகளை உருவாக்க கணினி உதவி வடிவமைப்பைப் பயன்படுத்துகிறது.

---

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற Intracortical Visual Prosthesis (ICVP) என்பதுடன் தொடர்புடையது எது?

அ) செயற்கை பார்வைத்திறன் ☑



ஆ) செயற்கை நுண்ணறிவு

இ) ஸ்பைவேர்

ஈ) வழிசெலுத்தல்

✓ ஆய்வின் முதல் பங்கேற்பாளருக்கு Intracortical Visual Prosthesis (ICVP) வெற்றிகரமாக அறுவை சிகிச்சைமூலம் பொருத்தப்பட்டது. இந்த அமைப்பு பார்வையிழந்தோர்க்கு ஓரளவு பார்வையை மீட்டெடுக்கும் திறன்கொண்டதாக கூறப்படுகிறது. ICVP என்பது விழித்திரை மற்றும் பார்வை நரம்புகளைத்தவிர்த்துவிட்டு மூளையின் பார்வைப்புற –ணியுடன் நேரடியாக இணைக்கும் ஓர் உள்வைப்பாகும்.

---

6. 2028 ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடம் எது?

அ) பாரிஸ்

ஆ) ரோம்

இ) லாஸ் ஏஞ்சல்ஸ் ☑

ஈ) மாஸ்கோ

✓ 2028 ஒலிம்பிக் போட்டிகள் அல்லது 2028 கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும். இது 'LA28' எனக் குறிப்பிடப்படுகிறது. 2024 ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் நடைபெறும். அண்மையில், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள 2028 – கோடைகால ஒலிம்பிக்கில் சர்பிங், ஸ்கேட்போர்டிங் மற்றும் ஸ்போர்ட் கிளைம்பிங் ஆகியவற்றைச் சேர்க்கும் திட்டத்திற்கு பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

---

7. சௌரி சௌரா கிராமம் இன்றைய எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

அ) பீகார் **ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) ஒடிஸா ஈ) மேற்கு வங்கம்



- ✓ காலனித்துவ நிர்வாகத்திற்கு எதிராக 'மகாத்மா' காந்தியின் 'ஒத்துழையாமை இயக்கம்' தொடங்கப்பட்ட போது, இன்றைய உத்தரபிரதேசத்தில் உள்ள சௌரி சௌரா கிராமத்தில் 23 காவலர்களைக் கொன்ற கும்பல் காவல் நிலையத்திற்கு தீவைத்தது.
- ✓ அன்னிய பொருட்களுக்கு எதிராகப் போராடிய குழுவைச் சேர்ந்த 3 பேர் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இது செய்யப்பட்டது. 'சௌரி சௌரா' சம்பவத்திற்குப் பிறகு, காந்தி, இயக்கத்தை கைவிட்டு அவ்வன்முறைசம்பவத்தைக் கண்டித்தார்.

---

8. தென் கோல் பனிப்பாறையானது எந்தச் சிகரத்தின் மிக உயரமான பனிப்பாறை ஆகும்?

அ) எவரெஸ்ட் சிகரம் ☑



ஆ) K2

இ) கஞ்சஞ்சங்கா

ஈ) கிளிமஞ்சாரோ

- ✓ ஓர் அண்மைய ஆய்வில், காலநிலை தொடர்பான பனி இழப்பின் அறிகுறிகளுக்காக, எவரெஸ்ட் சிகரத்தின் மிக உயரமான பனிப்பாறையான தென் கோல் பனிப்பாறை –யை கண்காணிக்க அறிவியலாளர்கள் குழு எவரெஸ்ட் சிகரத்தை அளந்தது.
- ✓ இது கடல்மட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 26000 அடி (8000 மீ) உயரத்தில் உள்ளது. பனிப்பாறையின் மேற்பரப்பில் பனி குவிவதற்கு எடுத்ததைவிட 80 மடங்கு வேகத்தில் அது தனது பனியை இழந்து வருகிறது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

---

9. ஆண்டுதோறும், 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள் – Zero Discrimination Day' அனுசரிக்கப்படும் தேதி எது?

அ) மார்ச் 01 ☑



ஆ) மார்ச் 02

இ) மார்ச் 03

ஈ) மார்ச் 04

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற –து. 2030ஆம் ஆண்டுக்குள் AIDS'ஐ ஒரு பொதுநல அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக்கொண்டு வருவதை நோக்கமெனக்கொண்ட ஐக்கிய நாடுகளின் அமைப்புதான் இந்த UNAIDS.

---

10. பன்னாட்டு துருவக்கரடிகள் நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?

அ) பிப்ரவரி 27 ☑



ஆ) பிப்ரவரி 28

இ) பிப்ரவரி 25

ஈ) பிப்ரவரி 26

- ✓ சர்வதேச துருவக்கரடிகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் பிப்.27 அன்று துருவக்கரடியின் பாதுகாப்பு நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது. பன்னாட்டு துருவக்கரடிகள் நிறுவனத்தால் இந்நாள் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- ✓ புவி வெப்பமடைதல் மற்றும் உருகிவரும் கடல்பனிக்கட்டி –கள் ஆகியவை துருவக்கரடிகளின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. செபி தலைவராக மாதவி புரி நியமனம்

இந்திய பங்கு பரிவர்த்தனை ஒழுங்காற்று வாரியத்தின் (SEBI) தலைவராக மாதவி புரி புச் (57) நியமிக்கப்பட்டு உள்ளார். செபி தலைவராக பெண் ஒருவர் பதவியேற்பது இதுவே முதல்முறையாகும்.

நிதி, வங்கித்துறையில் நீண்ட அனுபவமுள்ள மாதவி, தனியார் துறையில் பணியாற்றி செபி தலைமைப் பொறுப்பேற்கும் முதல் நபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர் இப் பொறுப்பிலிருப்பார் என நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்போது செபி தலைவராக உள்ள முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி அஜை தியாகியின் பதவிக்காலம் பிப்ரவரி.28 உடன் முடிவடைந்தது.

---

2. உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சிபெறும் நாடு என்ற நிலையை தக்கவைத்துள்ள இந்தியா

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021–22ஆம் நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 5.4 சதவீதமாக குறைந்துள்ளது. இருந்தபோதும், இதே காலகட்டத்தில் சீனாவின் 4 சதவீத ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியைக்காட்டிலும் இந்தியா கூடுதல் வளர்ச்சி பெற்றுள்ளதோடு, உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சிபெறும் மிகப்பெரிய நாடு என்ற நிலையை தொடர் –ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

நிகழ் நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 20.3 சதவீதமாகவும், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் 8.5 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) இரண்டாவது தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான முன்கூட்டிய மதிப்பீட்டை வெளியிட்டது.

அதன்படி, 2021–22ஆம் ஆண்டுக்கான நாட்டின் பொருளா –தார வளர்ச்சி 8.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஜனவரியில் வெளியிடப்பட்ட முதல் முன்கூட்டிய மதிப்பீட்டைக் காட்டிலும் வளர்ச்சி விகிதம் சற்று குறைவு ஆகும். அப்போது, பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது.

அதுபோல, முந்தைய 2020–21 ஆம் நிதியாண்டில், முதல் முன்கூட்டிய மதிப்பீட்டில் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக கணிக்கப்பட்டது. பின், கரோனா பாதிப்பின் தாக்கத்தை கருத்தில்கொண்டு NSO வெளியிட்ட திருத்திய மதிப்பீட்டில் வளர்ச்சி விகிதம் 6.6 சதவீதமாக சரிந்தது.

அந்த வகையில், 2020ஆம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 23.8 சதவீதமாகவும், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் 6.6 சதவீதமாகவும் பதிவானது என்று NSO தெரிவித்துள்ளது.

மேலும், நிலையான விலைகளில் GDP 2020–21 3ஆம் காலாண்டில் ₹36.26 இலட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில், 2021–22ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் ₹38.22 இலட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டது. இது 5.4 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது என்றும் என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.

---

3. உலக 'பாரா' வில்வித்தையில் இந்திய வீராங்கனை பூஜா வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---

4. தேசிய ஜூனியர் பேட்மின்ட்டன் தமிழ்நாட்டு அணி சாம்பியன்

திண்டுக்கல் PSNA பொறியியல் கல்லூரி மற்றும் தமிழ்நாடு பூப்பந்தாட்டக் கழகம் சார்பில் 66ஆவது தேசிய ஜூனியர் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றது. இதில் 17 மாநிலங்களில் இருந்து 800 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி 35 – 31, 35 – 28 என்ற புள்ளி கணக்கில் ஆந்திரா அணியை வீழ்த்தியது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி 35 – 24, 35 – 18 என்ற புள்ளி கணக்கில் ஆந்திரா அணியை வீழ்த்தியது.

சாம்பியன் பட்டம் வென்ற தமிழ்நாடு அணிகளுக்கு கிரிஸ்டல் சுழற்கோப்பை மற்றும் 3 லட்சம் ரூபாய் ரொக்கப் பரி வழங்கப்பட்டது.

---

5. உலக டென்னிஸ் தரவரிசையில் நம்பர் ஒன் இடத்தை பிடித்தார் மெட்விடேவ்

உலக டென்னிஸ் வீரர்களின் புதிய தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது இடம் வகித்த 26 வயது ரஷிய வீரர் டேனில் மெட்விடேவ் முதல்முறையாக 'நம்பர் ஒன்' அரியணையை அலங்கரித்து இருக்கிறார். கடந்த வாரம் நடந்த மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டியில் அரை இறுதிக்கு முன்னேறியதன்மூலம் மெட்விடேவ் (8,615 புள்ளிகள்), முதலிடத்தில் இருந்த செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை (8,465 புள்ளிகள்) 2ஆவது இடத்துக்கு தள்ளி முதலிடத்தை சொந்தமாக்கினார்.

ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (7,515 புள்ளிகள்) 3ஆவது இடத்தில் நீடிக்கிறார். மெக்சிகோ ஓபன் போட்டியில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபெல் நடால் (6,515 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 4ஆவது இடத்தையும், கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் (6,445 புள்ளிகள்) ஒரு இடம் சரிந்து 5ஆவது இடத்தையும், ரஷிய வீரர் ஆந்த்ரே ரூப்லெவ் (5,000 புள்ளிகள்) ஒரு இடம் முன்னேறி 6ஆவது இடத்தையும், இத்தாலி வீரர் பெரேட்டினி (4,928 புள்ளிகள்) ஒரு இடம் சறுக்கி 7ஆவது இடத்தையும் பிடித்தனர். நார்வேயின் கேஸ்பர் ரூட் (3,915 புள்ளிகள்) 8ஆவது இடத்திலும், கனடாவின் அலியாசிம் (3,883 புள்ளிகள்) 9ஆவது இடத்திலும் தொடருகின்றனர். போலந்தின் ஹூபர்ட் ஹூர்காஸ் (3,496 புள்ளிகள்) ஒரு இடம் உயர்ந்து 10ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

---

6. 'ஆதிச்சநல்லூர் அகழாய்வில் மூன்று காலகட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள்'

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் மூன்று காலகட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டு உள்ளதாக, மத்திய தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2020ஆம் ஆண்டு அறிவித்திருந்தார்.

---

7. 'நான் முதல்வன்': மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம் தொடக்கம்

மாணவர்கள், இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு திட்டத்தை தனது பிறந்தநாளையொட்டி சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்துள்ளார்.

'நான் முதல்வன்' என்ற தலைப்பிலான திட்டம்மூலம் மாணவர்கள், இளைஞர்களின் திறனை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இளைய சமுதாயத்தை முழுமையா –ன திறமையானவர்களாக மாற்ற 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் பயிற்சிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நான் முதல்வன்' என்ற திறன் மேம்பாட்டுத்திட்டத்தின் கருப்பொருள் 'உலகை வெல்லும் இளைய தமிழகம்' என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கல்வி, ஆராய்ச்சி, சிந்தனை, செயலில் திறமையானவர்க –ளாக மாணவகள், இளைஞர்களை மாற்றவே இந்தத் திட்டம் தமிழக அரசு சார்பில் தொடக்கங்கப்பட்டுள்ளது.

---

8. சேதி தெரியுமா?

பிப்.20: சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற குளிர் கால ஒலிம்பிக் போட்டிகள் நிறைவடைந்தன. 16 தங்கம், 8 வெள்ளி, 13 வெண்கலம் என 37 பதக்கங்களுடன் நார்வே பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

பிப்.21: இணையம் வழியாக நடைபெற்ற வரும் ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த 16 வயது வீரர் பிரக்ஞானந்தா உலகப் புகழ்பெற்ற செஸ் சாம்பியனான நார்வேயைச் சேர்ந்த மேக்னஸ் கார்ல்சனைத் தோற்கடித்து சாதனை படைத்தார்.

பிப்.22: தமிழகத்தில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் 21 மாநகராட்சிகளையும் திமுக கூட்டணி வென்றது.

பிப்.23: உக்ரைன் மீது போர் நடவடிக்கைகளைத் தொடங்கும்படி ராணுவத்துக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உத்தரவிட்டார்.

பிப்.25: உக்ரைன்மீது போர் தொடுத்த ரஷ்யாவுக்கு எதிராக ஐநா சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டு

வரப்பட்ட தீர்மானத்தை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா தோற்கடித்தது. இந்தத் தீர்மானத்தின் மீது இந்தியா வாக்களிக்கவில்லை.

பிப்.26: பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒடிஷாவின் முதல் முதல்வர் ஹேமானந்தா பிஸ்வால் (82) காலமானார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர், 1989 – 90, 1999 – 2000 காலகட்டத்தில் ஒடிஷா முதல்வராக இருந்தார்.

பிப்.26: நாட்டின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனமான எல்ஐசி'இன் பங்குகளை விற்கும் நோக்கில் தானியங்கி வழிமுறைமூலம் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

---

9. உக்ரைனிலிருந்து இந்தியர்களை மீட்க 'ஆபரேஷன் கங்கா' செயல்படுவது எப்படி? – ஒரு பார்வை

போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டில் இருந்து இந்தியர்களை மீட்கும் பணியை ஒருங்கிணைக்க 4 மத்திய அமைச்சர், உக்ரைன் அண்டை நாடுகளுக்கு செல்கின்றனர்.

போர் நடைபெறும் பகுதியில் சிக்கித்தவிக்கும் இவர்களை மீட்க, மத்திய அரசு தொடர்நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. இந்த மீட்புப்பணிக்கு 'ஆபரேஷன் கங்கா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. உக்ரைனில் இருக்கும் இந்தியர்கள் அதன் அண்டை நாடுகளுக்கு சாலை மார்க்கமாக அழைக்கப்பட்டு, பிறகு அங்கிருந்து விமானங்கள் மூலம் தாயகம் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்நிலையில், இந்திய மாணவர்களுக்கு உதவிடவும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றி அழைத்து வரும் பணியை ஒருங்கிணைக்கவும் மத்திய அமைச்சர்கள் ஹர்தீப் சிங் புரி, ஜோதிராதித்ய சிந்தியா, கிரண் ரஜிஜு, வி கே சிங் ஆகியோர் உக்ரைன் அண்டை நாடுகளுக்கு செல்கின்றனர்.

இதனிடையே 'ஆபரேஷன் கங்கா' திட்டத்துக்கு உதவிட 'OpGanga' என்ற பிரத்யேக டுவிட்டர் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது.

---

10. உக்ரைனுக்கு சொந்தமான உலகின் பெரிய சரக்கு விமானத்தை தாக்கி அழித்த ரஷ்யா

உக்ரைனுக்குச் சொந்தமான உலகின் மிகப்பெரிய விமானத்தை ரஷ்ய ராணுவம் தாக்கி அழித்து உள்ளது.

தொடர்ந்து 5ஆவது நாளாக நேற்றும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் அதிரடி தாக்குதல் தொடர்ந்துநடைபெற்று வருகிறது. எல்லையோர நகரங்கள் மீது ரஷ்ய ராணுவம் தொடர்ந்து குண்டு மழைபொழிந்து வருகிறது. நேற்று முன்தினம் நள்ளிரவில் தலைநகர் கீவில் பல பகுதிகளில் குண்டுகள் வெடித்ததாக தகவல் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், கீவ் அருகே உள்ள ஹோஸ்டோமல் விமான நிலையத்தில் ரஷ்ய படையினரின் குண்டு வீச்சால் உலகின் மிகப்பெரிய சரக்கு விமானம் அழிக்கப்பட்டதாக உக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்தார். இந்த விமானம்உக்ரைனுக்குச் சொந்தமானதாகும்.

ஏஎன்–225 'மிரியா' என்று பெயரிடப்பட்ட அந்த விமானம் ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக உக்ரைனின் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா ட்விட்டரில் கூறியதாவது:

உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான மிரியா, ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கப்பட்டது. நமது மிரியாவை ரஷ்யா அழித்திருக்கலாம். ஆனால் வலுவான சுதந்திரமான ஜனநாயக ஐரோப்பியநாடு என்ற நமது கனவை அவர்களால் ஒருபோதும் அழிக்க முடியாது. நாம் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான மிரியா விமானம் உக்ரைனின் அன்டோனோ நிறுவனத்தால் கடந்த 1985–ம் ஆண்டுதயாரிக்கப்பட்டது. 30 சக்கரங்கள், 6 இன்ஜின்கள், 290 அடி நீள இறக்கைகளைக் கொண்ட இதில் 4,500 கிலோமீட்டர் வரை தொடர்ந்து பறந்து செல்ல முடியும். கரோனாகால கட்டத்தில் உலகம் முழுவதும் உயிர்காக்கும் தடுப்பூசி மற்றும் மருந்துகளை மிரியா விமானம் எடுத்துச்சென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. முதன்முறையாக 'சோலார் புரோட்டான் நிகழ்வு'களை கண்டறிந்த ISRO'இன் விண்வெளிப்பயணம்/செயற்கைக் கோள் எது?

அ) சந்திரயான்–1



ஆ) சந்திரயான்–2 ☑

இ) செவ்வாய் சுற்றுக்கலன் திட்டம்

ஈ) மங்கள்யான்–2

✓ சந்திரயான்–2இன் சுற்றுக்கலனானது சூரிய புரோட்டான் நிகழ்வுகளை அதன் எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீட்டர் (CLASS) மூலம் கண்டறிந்தது. இந்தப் புரோட்டான் நிகழ்வுகள் விண்வெளிக்குச் செல்லும் மனிதர்களிடையே கதிர்வீச்சு தாக்கத்தை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

---

2. தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனமானது (NIUA) எந்நிறுவனத்துடனான, 'நிலையான நகரங்கள் இந்தியா' திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) NITI ஆயோக்

ஆ) உலகப் பொருளாதார மன்றம் ☑

இ) உலக வங்கி

ஈ) UNDP


✓ உலகப் பொருளாதார மன்றமும் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனமும் (NIUA) இணைந்து 'நிலையான நகரங்கள் இந்தியா' திட்டத்தில் ஒத்துழைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இது ஒரு கூட்டுத்திட்டம் ஆகும். இது ஆற்றல், போக்குவரத்து மற்றும் கட்டமைக்கப் –பட்ட சுற்றுச்சூழல் துறைகளில் டிகார்பனைசேஷன் தீர்வுகளை உருவாக்க நகரங்களுக்கு உதவும் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. எந்த நாட்டின் ஊர்தி, நிலவின் தொலைவில் இரண்டு கண்ணாடிக்கோளங்களைக் கண்டறிந்துள்ளது?

அ) இந்தியா

ஆ) சீனா ☑



இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) அமெரிக்கா

✓ சீனாவின் Yutu–2 ஊர்தியானது அண்மையில் நிலவின் தொலைவில் இரண்டு விசித்திரமான கண்ணாடிக் கோளங்களைக் கண்டறிந்தது. நிலவின் மேற்பரப்பில் முதன்முறையாக இது போன்ற கோளங்கள் காணப்படுகி –ன்றன. ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, அவை மிகச் சமீபத்தில் உருவானவை.

---

4. நடப்பு 2022இல், சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்படுகிற நகரம் எது?

அ) மும்பை



ஆ) கான்பூர் ☑

இ) சென்னை

ஈ) பனாஜி

✓ அகில இந்திய செஸ் கூட்டமைப்பு செயலாளர் பாரத் சிங் 58ஆவது சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப்–2022'ஐ கான்பூரில் நடத்தப்படும் என அறிவித்தார். இதில் 23 கிராண்ட்மாஸ்டர்கள் மற்றும் 30 சர்வதேச மாஸ்டர்கள் உட்பட 184 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

✓ செஸ் ஒலிம்பியாட் & ஆசிய விளையாட்டுப்போட்டிகளுக் –கான இந்திய அணிக்கான தேர்வு மேடையாக இது இருக்கும். 7ஆவது தேசிய பெண்கள் செஸ் சாம்பியன்ஷிப் – 2022 புவனேஸ்வரில் நடைபெறுகிறது.

---

5. 'தேவயாதனம் – இந்தியக் கோவில் கட்டடக்கலையின் பயணம்' என்ற மாநாடு நடைபெறும் இடம் எது?

அ) பூரி



ஆ) ஹம்பி ☑

இ) மைசூரு

ஈ) வாரணாசி

✓ இந்திய அரசின் மத்திய கலாசார அமைச்சகத்தின் இந்திய தொல்பொருள் ஆய்வுமையம் கர்நாடகாவின் ஹம்பியில் 'இந்தியக் கோவில் கட்டடக்கலையின் பயணம் – தேவயாதனம்' என்ற சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி மாநாட்டை தொடங்கிவைத்தார்.

✓ இது கோவிலின் தத்துவ, மத, சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, அறிவியல், கலை மற்றும் கட்டடக்கலை அம்சங்களை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கோவில் கட்டடக்கலையின் பல்வேறு பாணிகளின் பரிணாம வளர்ச்சியையும் இது எடுத்துக் கூறுகிறது.

---

6. சமீபத்தில் காலமான இப்ராகிம் சுதார் என்பவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்த 'பத்மஸ்ரீ' விருது பெற்றவரும் சமூக சேவகரும் ஆவார்?

அ) தமிழ்நாடு



ஆ) கர்நாடகா ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) கேரளா

✓ 'பத்மஸ்ரீ' விருது பெற்றவரும் சமூக சேவையாளருமான இப்ராகிம் சுதார் கர்நாடகாவில் தனது 82ஆவது வயதில் காலமானார். அவர் 'கன்னடத்தின் கபீர்' என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். சமூக மற்றும் மத நல்லிணக்கத்தை பரப்புவதற்கான அவரது அரும்பணிக்காக அறியப்பட்டவர். இவருக்கு கடந்த 2018ஆம் ஆண்டில் 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டது.

---

7. இந்தியாவின் முதலாவது கடற்பசுப் பாதுகாப்பகத்தை அமைக்கவுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) மகாராஷ்டிரா

- ✓ தமிழநாட்டின் தென்கிழக்குக் கடற்கரையில் உள்ள பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்–தை அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. கடற்பசு என்பது அழிந்துவரும் ஒரு கடற்பாலூட்டியினமாகும். இது வாழ்விட இழப்பு, கடல் மாசுபாடு மற்றும் கடற்பாசி இழப்பு காரணமாக அழிவை எதிர்கொள்கிறது.
- ✓ தமிழ்நாட்டின் தென்கிழக்கு முனைக்கும் இலங்கையின் மேற்குப்பகுதிக்கும் இடையே உள்ள ஆழமற்ற விரிகுடா பகுதியான மன்னார் வளைகுடாவிலும், பாக் விரிகுடாவிலும் கடற்பசுக்கள் காணப்படுகின்றன.

---

8. தேசிய வான் விளையாட்டுக் கொள்கை வரைவை வெளியிட்ட அமைச்சகம் எது?

அ) விளையாட்டு அமைச்சகம்

ஆ) உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம் ☑

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

- ✓ உள்நாட்டு வான் போக்குவரவு அமைச்சகமானது நாட்டில் வான் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்காக தேசிய வான் விளையாட்டுக் கொள்கை வரைவை (NASP – 2022) தயாரித்துள்ளது. ஏரோபாட்டிக்ஸ், ஏரோ–மாடலிங், அமெச்சூர், டிரோன்கள், கிளைடிங், ஹேங்–கிளைடிங் மற்றும் பாராகிளைடிங் மைக்ரோ–லைட்டிங் மற்றும் பாரா –மோட்டரிங் ஸ்கை–டைவிங் மற்றும் விண்டேஜ் வான் விளையாட்டுகள் உள்ளிட்ட பெரும்பாலான வான் விளையாட்டுகளை இந்தக் கொள்கை உள்ளடக்கும்.
- ✓ மேலும், வான் விளையாட்டுக்களுக்கான சாதனங்களின் உள்நாட்டு வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் தயாரிப்பு ஊக்குவிக்கப்படும்.

---

9. உலக வனவுயிரிகள் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?

அ) மார்ச் 01

ஆ) மார்ச் 02

இ) மார்ச் 03 ☑

ஈ) மார்ச் 04

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3 அன்று உலக வனவுயிரிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இது, புவியில் வாழும் விலங்கு மற்றும் தாவரங்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ✓ "Recovering key species for ecosystem restoration" என்பது நடப்பாண்டு (2022) வரும் உலக வனவுயிரிகள் நாளுக்கான கருப்பொருளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

10. உலக செவிப்புலன் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?

அ) மார்ச் 02

ஆ) மார்ச் 03 ☑

இ) மார்ச் 04

ஈ) மார்ச் 05

- ✓ காதுகேளாமை மற்றும் செவித்திறன்குறை ஆகியவற்றை எப்படி தடுப்பது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3 அன்று உலக செவிப்புலன் நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) ஜெனீவாவில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் ஆண்டுதோறும் உலக செவிப்புலன் நாள் கருத்தரங்கை ஏற்பாடு செய்கிறது. "To hear for life, listen with care!" என்பது இந்த ஆண்டில் (2022) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தின் 7 பேர் உள்பட 49 ஆசிரியர்களுக்கு தேசிய விருது: தில்லியில் மத்திய அமைச்சர் வழங்கினார்

தமிழகத்தைச் சேர்ந்த ஏழு ஆசிரியர்கள் உள்பட நாடு முழுவதும் 49 ஆசிரியர்களுக்கு தேசிய தகவல், தொலைத் தொடர்பு தொழில்நுட்ப விருதுகளை மத்திய கல்வித் துறை இணையமைச்சர் அன்னபூர்ணா தேவி வழங்கினார்.

2020ஆம் ஆண்டு தேசிய கல்விக்கொள்கை அடிப்படையில், கற்பித்தல், கற்றல் செயல்முறைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விரிவான பயன்பாடு, திட்டமிடலை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு இந்த விருதுகளை மத்திய கல்வித் துறை வழங்குகிறது. கல்வி கற்பிப்பதில் திக்ஷா, இ–பாடசாலை திட்டங்களின் கீழ் மின்னணு முறையில் பாடங்களைத் தயாரித்தல், காணொலிகள் போன்றவைமூலம் மாணவர்களுக்கான கற்றல் அணுகுதலுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

---

2. கோடீஸ்வரர்கள் பட்டியல்: இந்தியாவுக்கு 3ஆவது இடம்

அதிக எண்ணிக்கையிலான கோடீஸ்வரர்களைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியா 3ஆவது இடத்தில் உள்ளது.

உலக நாடுகளில் அதிக சொத்து வைத்துள்ளவர்களின் விவரங்களை தனியார் ஆய்வுநிறுவனம் வெளியிட்டு உள்ளது. அதன்படி, உலகில் கடந்த ஆண்டில் 30 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ₹226 கோடி) சொத்து வைத்திருந்த நபர்களின் எண்ணிக்கை 9.3 சதவீதம் அதிகரித்து 6,10,569ஆக இருந்தது. அவர்களில் 13,637 பேர் இந்தியர்கள் ஆவர். இந்தியாவில் அதிக சொத்து வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை கடந்த 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதிக கோடீஸ்வரர்ரைகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டில் 748 கோடீஸ்வரர்கள் உள்ளனர். 554 கோடீஸ்வரர்களு –டன் சீனா 2ஆவது இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் 145 கோடீஸ்வரர்களுடன் இந்தியா உள்ளது.

---

3. உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல்: சௌரவ் சௌதரிக்கு தங்கப்பதக்கம்

எகிப்தில் நடைபெற்று வரும் ISSF உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் சௌரவ் சௌதரி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

ஆடவருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் இறுதிச்சுற்றில் சௌரவ் 16-6 என்ற கணக்கில் ஜெர்மனியின் மைக்கேல் ஷ்வால்டை தோற்கடித்து முதலிடம் பிடித்தார்.

ஈஷாவுக்கு வெள்ளி

இப்போட்டியின் மகளிருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ஈஷா சிங் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---

4. பருவநிலை மாற்றத்தால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும்: ஐநா அறிக்கையில் எச்சரிக்கை

பருவநிலை மாற்றத்தால் இந்தியாவில் உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என எச்சரித்துள்ள ஐநா அறிக்கை, கடலோரப்பகுதிகளிலுள்ள மக்கள் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐநாவின் பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பருவநிலை மாற்றத்தால் கடல்நீர்மட்டம் உயர்ந்து, வெப்ப நிலை அதிகரிக்கும். உலகம் முழுவதும் பனிப்பாறைகள் முன்பில்லாத அளவில் வேகமாக உருகிவருகின்றன. வறட்சி, அதிக மழைப்பொழிவு, வெள்ளம், அனல்காற்று உள்ளிட்டவற்றின் காரணமாக நாட்டில் உணவு உற்பத்தி பாதிப்பைச் சந்திக்கும். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் உள்ளிட்டவற்றின் உற்பத்தி 2050ஆம் ஆண்டில் 9% வரை குறைய வாய்ப்புள்ளது.

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்து அதிகமாக இருந்தால், தென்னிந்தியாவில் சோள உற்பத்தி 17% வரை குறையும்.

கடல்மட்ட உயர்வால் நிலப்பயன்பாடு, கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவை பாதிக்கப்படும். கரியமில வாயு வெளியேற்ற அளவு தற்போதைய நிலையில் தொடர்ந்தால், நடப்பு நூற்றாண்டின் மத்தியில் சுமார் 3.5 கோடி பேர் கடல்மட்ட உயர்வு பிரச்னையால் பாதிக்கப்படுவர். அதுவே அந்த எண்ணிக்கை நூற்றாண்டின் இறுதியில் 5 கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. கரியமில வாயு வெளியேற்றம் குறைவாக இருந்தால், குறைந்த எண்ணிக்கையிலான நபர்களே பாதிக்கப்படுவர்.

இந்தியாவுக்கு அதிக பாதிப்பு:

கடல்மட்ட உயர்வு, திடீர் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பைச் சந்திக்கும் நாடாக இந்தியா விளங்கும். கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கவுள்ளதாக இந்தியா உறுதியளித்துள்ளது. அவ்வாறு குறைக்கும் பட்சத்தில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார இழப்பு சுமார் ₹1.68 இலட்சம் கோடியாக இருக்கும். இல்லையெனில் இழப்பு சுமார் ₹2.52 இலட்சம் கோடியாக அதிகரிக்கும்.

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்தால், மும்பை மட்டும் 2050ஆம் ஆண்டு வாக்கில் ஆண்டுக்கு சுமார் ₹11.44 இலட்சம் கோடி இழப்பைச் சந்திக்கும் அபாயம் உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முக்கிய தகவல்கள்:

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்து அதிகரித்தால், ஈரக்குமிழ் வெப்பநிலை (வெப்பம், ஈரப்பதத்தின் அளவீடு) 35 டிகிரி செல்சியஸைத் தாண்டும்.

லக்னௌ, பாட்னா நகரங்களில் அந்த வெப்பநிலை 35 டிகிரியை விட அதிகமாக இருக்கும்.

புவனேசுவரம், சென்னை, மும்பை, இந்தூர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் ஈரக்குமிழ் வெப்பநிலை 32 முதல் 34 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும்.

கடல்மட்ட உயர்வு, திடீர் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பைச் சந்திக்கும் நாடாக இந்தியா இருக்கும்.

பருவநிலை மாற்றத்தால் 2050ஆம் ஆண்டில் 40 சதவீத மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்வர். தற்போது 33 சதவீத மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

பருவநிலை மாற்றத்தால் உலகின் சராசரி வருமானம் 23 சதவீதம் வரை குறையும். இந்தியாவில் 2100ஆம் ஆண்டுக்குள் 92 சதவீதம் வரை குறையும்.

பருவநிலை மாற்றத்தால் ஒட்டுமொத்தமாக அஸ்ஸாம், மேகாலயம், திரிபுரா, மேற்கு வங்கம், பிகார், ஜார்க்கண்ட், ஒடிஸா, சத்தீஸ்கர், உத்தர பிரதேசம், ஹரியாணா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் அதிகமாக பாதிக்கப்படும்.

பருவநிலை மாற்றத்தால் உலகின் பல்வேறு நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிப்புகளை எதிர்கொள்ளும். நடப்பாண்டு இறுதியில் இந்தியாவின் பொருளாதாரம் 92 சதவீதம் வரை வீழ்ச்சியடையும்.

உலகில் பாதிபேர் பாதிக்கப்படும் அபாயம்

பருவநிலை மாற்றம் காரணமாக உலக அளவில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயம் இருப்பதாக ஐ.நா. அறிக்கை எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக அவ்வறிக்கையில், "தொழில்மயமாதலுக்கு முந்தைய காலகட்டத்தைவிட வெப்பநிலை 1.5 டிகிரி C அதிகரித்தால், 14% உயிரினங்கள் அழிவைச் சந்திக்கும் அபாயம் உள்ளது. கோடிக்கணக்கான மக்கள் டெங்கு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்படுவர்; மக்களின் உயிரிழப்பும் பெருமளவில் அதிகரிக்கும்.

கடல்மட்ட உயர்வால் அலைகளின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதன்காரணமாக கோடிக்கணக்கான மக்கள் பாதிப்பை எதிர்கொள்வர். தற்போதைய கடல் மட்டத்தில் இருந்து 10 மீட்டருக்குள் 90 கோடி மக்கள் வசித்து வருகின்றனர். கடல்மட்டம் 75 செமீ வரை உயர்ந்தால், தற்போது கணிக்கப்பட்டுள்ளதைவிட இரு மடங்கு எண்ணிக்கையிலான மக்கள் 2100ஆம் ஆண்டுக்குள் பாதிக்கப்படுவர்.

பருவநிலை மாற்றத்தின் காரணமாக வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போதைய நிலை

தொடர்ந்தால் அடுத்த 10 ஆண்டுகளிலேயே உலகின் வெப்பநிலை உயர்வு 1.5°C நிலையை எட்டிவிடும்.

அதற்கு அதிக வெப்பநிலை உயர்ந்தால், சுற்றுச்சூழலில் பெரும் தாக்கங்களும் பாதிப்புகளும் ஏற்படும்; பவளப் பாறைகள் பாதிக்கப்படும். பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் வேகமாக உயரும். பனிப்பாறைகள் உருகும்போது கரியமில வாயு வெளியேற்றம் மேலும் அதிகரிக்கும். பருவநிலை மாற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1. 'தர்மா கார்டியன்' பயிற்சி என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் இராணுவப் பயிற்சி ஆகும்?

அ) இலங்கை

ஆ) ஜப்பான் ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்



✓ இந்தியாவும் ஜப்பானும் ஆண்டுதோறும் நடத்தப்படும் தங்களது 'தர்மா கார்டியன்' பயிற்சியை கர்நாடகாவில் தொடங்கியுள்ளன. இந்தப் பயிற்சி பிப்.27 முதல் மார்ச்.10 வரை தொடங்கியது. 'மராத்தா லைட்' காலாட்படைப் பிரிவின் 15ஆவது பட்டாலியன் இந்தியாவின் சார்பாக பங்கேற்கிறது. இந்தப் பயிற்சியானது 2018ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

---

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'IVFRT திட்டம்' எந்தத் துறையுடன் தொடர்புடையது?

அ) குடியேற்றம் ☑

ஆ) நீர்ப்பாசனம்

இ) தகவல்

ஈ) தொழிற்துறை



✓ 2021 முதல் 2026 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு 'குடியேற்ற விசா வெளிநாட்டினர் பதிவு கண்காணிப்பு' திட்டத்தைத் தொடர மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ₹1,364.88 கோடி செலவில் அங்கீகரிக்கப்பட்டது.

✓ விசா வழங்குதற்கான காலம் IVFRT திட்டம் அமல்படுத்தும் முன் வரை, 15 முதல் 30 நாட்களாக இருந்தது. தற்போது அதிகபட்சமாக 72 மநேரத்துக்குள் விசா வழங்கப்படுகிறது.

---


3. 'எம்னாதி' புயலால் பாதிக்கப்பட்ட நாடு எது?

அ) இந்தோனேசியா

ஆ) மடகாஸ்கர் ☑

இ) பிலிப்பைன்ஸ்

ஈ) ஜப்பான்



✓ 'எம்னாட்டி' புயலின் வருகையை அடுத்து 5 வாரங்களில் நான்காவது சூறாவளியை மடகாஸ்கர் காண்கிறது.

✓ ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மடகாஸ்கர் பல சூறாவளிகளால் தாக்கப்படுகிறது. இந்த மாத தொடக்கத்தில் 120'க்கும் மேற்பட்டவர்களின் பலிக்கு காரணமான பட்சிராய் சூறாவளியின் தாக்கத்திலிருந்து அந்தத் தீவு நாடு இன்னும் மீளவில்லை.

---

4. 'மொழிச் சான்றிதழ் தன்படம்' பிரச்சாரத்தை தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?

அ) கல்வி அமைச்சகம் ☑

ஆ) கலாசார அமைச்சகம்

இ) சுற்றுலா அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்



✓ நாட்டின் கலாசார பன்முகத்தன்மை மற்றும் பன்மொழி பயன்பாட்டை ஊக்குவித்து, 'ஒன்றுபட்ட பாரதம்–வலிமையான பாரதம்' என்ற உணர்வை ஏற்படுத்தும் விதமாக, மத்திய கல்வித்துறை, மொழிச்சான்றிதழ் தன்பட இயக்கத்தை தொடங்கியுள்ளது.

✓ மத்திய கல்வித்துறை மற்றும் MyGov இந்தியா ஆகியவை இதற்கென 'பாஷா சங்கம்' என்ற செல்போன் செயலியை உருவாக்கியுள்ளன. இந்தச் செயலியைப் பயன்படுத்தி, அட்டவணையிடப்பட்ட 22 இந்திய மொழிகளில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 100+ வாக்கியங்களை கற்றுக் கொள்ளலாம். இந்தச்சான்றிதழுடன் மக்கள் செல்பி எடுத்து அதனை தங்களது சமூக ஊடக கணக்கு வாயிலாக 'மொழிச்சான்று தன்படம்' எனப் பதிவேற்றஞ்செய்யலாம்.

---

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற ஸ்மீன்யீ தீவு (பாம்புத் தீவு) அமைந்துள்ள கடல்/பெருங்கடல் எது?

அ) கருங்கடல் ☑

ஆ) பசிபிக் பெருங்கடல்

இ) மத்தியதரைக்கடல்

ஈ அட்லாண்டிக் பெருங்கடல்



✓ ஸ்மீன்யீ தீவு (பாம்புத் தீவு) என்பது உக்ரைனுக்குச் சொந்தமான சுமார் 16 ஹெக்டேர் பரப்பளவிலான பாறைத் தீவாகும். இது கருங்கடலில் கிரிமியாவிற்கு மேற்கே 300 கிமீ தொலைவில் உள்ளது.

✓ ரஷ்யப்படைகளிடம் இருந்து இத்தீவைக்காத்த பதிமூன்று வீரர்களுக்கு உக்ரைன் அரசு மரியாதை செலுத்தியுள்ளது. உக்ரேனிய அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, மரணித்த ஒவ்வொரு ராணுவ வீரருக்கும் "உக்ரைனின் நாயகன்" என்ற பட்டத்தை வழங்கினார்.

---

6. அன்டோனியோ கோஸ்டா, கீழ்காணும் எந்த நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ) இத்தாலி

ஆ) போர்ச்சுகல் ☑

இ) ஜெர்மனி

ஈ) இஸ்ரேல்



✓ கடந்த 2015ஆம் ஆண்டு முதல் போர்ச்சுகலின் பிரதமராக இருந்துவருகிறார் அன்டோனியோ கோஸ்டா. சமதர்மவாத கட்சியின் தலைவரான கோஸ்டா, சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் 2ஆவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

7. 'DESH–Stack' என்பது எத்துறையுடன் தொடர்புடைய இணையதளமாகும்?

அ) முதலீடு

ஆ) திறன் மேம்பாடு ☑

இ) ஜிஎஸ்டி

ஈ) ஊட்டச்சத்து



- ✓ மத்திய பட்ஜெட்டில் 'திறன் மற்றும் வாழ்வாதாரத்திற்கான டிஜிட்டல் சூழலமைப்பு' அல்லது 'DESH–Stack' இணைய தளம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ இணையவழி பயிற்சிமூலம் நாட்டின் குடிகளுக்கு திறன் அல்லது மேம்பாட்டை வளர்த்தெடுப்பதை இது தனது நோக்கமாகக்கொண்டுள்ளது. பொருத்தமான வேலைகள் மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகளை கண்டறிதற்கான நம்பகமான வாய்ப்புகளை இது வழங்கும்.

---

8. ஒரு பன்னாட்டுக் குழு நடத்திய ஒரு புதிய ஆய்வின்படி, இன்னமும் கண்டுபிடிக்கப்படாத மொத்த மரங்களின் எண்ணிக்கை என்ன?

அ) 92

ஆ) 920

இ) 9200 ☑

ஈ) 19200

- ✓ உலகம் முழுமைக்கும் உள்ள 100 அறிவியலாளர்கள் இணைந்து நடத்திய ஆய்வில், பூமியில் உள்ள மொத்த மர இனங்களின் எண்ணிக்கை 73,000 என்று கண்டறியப்பட்டது. 9,200 மர இனங்கள் மர்மமானவை மற்றும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளன என்பதையும் இந்த ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- ✓ பிறவிடங்களைவிட தென்னமெரிக்காவில் 40 சதவீதத்தி –ற்கும் அதிகமான கண்டுபிடிக்கப்படாத மர இனங்கள் உள்ளன. இம்மதிப்பீடுகளின்படி, பூமியின் அனைத்து மர வகைகளிலும் 43% தென்னமெரிக்காவில் உள்ளன. அதைத்தொடர்ந்து யூரேசியா (22 சதவீதம்), ஆப்பிரிக்கா (16 சதவீதம்) ஆகியன உள்ளன.

---

9. 'தேசிய புரத நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) மார்ச் 01

ஆ) மார்ச் 02

இ) பிப்ரவரி 27 ☑

ஈ) பிப்ரவரி 28

- ✓ தேசிய அளவிலான பொதுநல முன்னெடுப்பான 'Right to Protein' இந்தியாவின் முதல் 'புரத நாளை' 2020 பிப்.27 அன்று அறிமுகப்படுத்தியது. புரதத்தின் ஊட்டச்சத்து நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. "Food Futurism" என்பது நடப்பாண்டு (2022) வரும் இந்நாளின் கருப்பொருளாகும்.

---

10. இந்திய ரயில்வேயின் எந்த நெட்வொர்க் 100ஆவது ஜவுளி எக்ஸ்பிரஸை இயக்கி சாதனை படைத்துள்ளது?

அ) மேற்கு ரயில்வே ☑

ஆ) மத்திய ரயில்வே

இ) வடக்கு ரயில்வே

ஈ) வட மேற்கு ரயில்வே

- ✓ மேற்கு ரயில்வேயின் மும்பை மத்திய கோட்டம், சல்தாகன் பகுதியிலிருந்து (சூரத்) ஷாங்ரயிலுக்கு (காரக்பர் கோட்டம், தென்கிழக்கு ரயில்வே) ஜவுளிப்பொருட்கள் ஏற்றிய 100ஆவது ரயிலை இயக்கி சாதனை படைத்துள்ளது. முதலாவது ரயில் உத்னாவிலிருந்து 01.09.2021 அன்று இயக்கப்பட்டது.
- ✓ ஐந்து மாதங்களுக்குள் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது. இந்த ஜவுளி எக்ஸ்பிரஸ்மூலம் இதுவரை இரயில்வே துறைக்கு ₹10.2 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சீர்மிகு நகரம் திட்டத்தில் முறைகேடு: ஒரு நபர் ஆணையத்தை அமைத்தது தமிழக அரசு

'சீர்மிகு நகரம்' திட்டத்தில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக விசாரணை செய்ய ஒரு நபர் விசாரணை ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. ஓய்வு பெற்ற இ ஆ ப அதிகாரி தேவிதார் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரம் திட்ட முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை, கோவை, மதுரை, திருப்பூர் உள்பட 11 நகரங்களில் 'சீர்மிகு நகரம்' திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. 'சீர்மிகு நகரம்' திட்ட முறைகேடு குறித்து விசாரணை நடத்த விசாரணைக் குழு அமைக்கப்படும் என ஏற்கனவே முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்து இருந்த நிலையில், ஒருநபர் ஆணையத்தை தமிழக அரசு அமைத்துள்ளது.

---

2. முதலீட்டு கண்காட்சி: முதலமைச்சர் ஸ்டாலின் துபை பயணம்

சர்வதேச அளவில் பிரமாண்ட முறையில் நடைபெறும் தொழில் முதலீட்டு காட்சியில் பங்கேற்க முதலமைச்சர் மு க ஸ்டாலின், துபை செல்லவுள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

துபையில் நடைபெறும் தொழில் கண்காட்சி சர்வதேச அளவில் புகழ்பெற்றது. இந்தக் கண்காட்சியில் 180க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களது அரங்குகளை அமைக்கும். இந்த ஆண்டும் சர்வதேச கண்காட்சி நடைபெறவுள்ளது. தமிழகத்தின் சார்பில் கைத்தறி, வேளாண்மை உள்ளிட்ட காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளன.

---

3. அரசு குழந்தைகள் மையங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு தற்காப்பு பயற்சி அளிக்க மத்திய அரசு திட்டம்

பெண்களின் பாதுகாப்புக்காக அரசு நடத்தும் குழந்தைகள் மையங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

பெண்கள் நாள் மார்ச்.8 அன்று கொண்டாடப்படுகிறது. இதற்காக நாடு முழுவதும் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

பெண்கள் பாதுகாப்பின் முக்கிய அங்கமாக இளம் பெண்களுக்கு தற்காப்புப் பயிற்சி அளிக்க மத்திய அரசு

முடிவுசெய்துள்ளது. மத்திய அரசால் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் & கடினமான சூழ்நிலைகளில் சிக்கித்தவிக்கும் பெண்களுக்கான தங்குமிடங்களிலும் 704 மையங்களில் இளம்பெண்கள், பெண் பணியாளர்க –ளுக்கு தற்காப்பு பயிற்சியளிக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது.

அவசரகால உதவி எண்

தேசிய அவசரகால உதவி எண் 112 மற்றும் பெண்களுக்கான உதவி எண்ணான 181 ஆகியவை இணைக்கப்படும். இந்த இரண்டு எண்களில் எதை அழைத்தாலும் ஆபத்தில் உள்ள பெண்கள் உதவிகளை பெறமுடியும். ஆபத்தில் உள்ள பெண்கள் 112 எண்ணை அழைத்தால் அது 181'க்கு அனுப்பப்படும். இது ஆபத்துக் காலத்தில் பெண்களுக்கான உதவியை மேம்படுத்தும்.

1. 2022 – தேசிய அறிவியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Integrated Approach in Science and Technology for Sustainable Future ☑

ஆ) Science and Technology for Atmanirbhar Bharat

இ) Vigyan Sarvatra Pujyate

ஈ) Amrut Kaal Vigyan

✓ 'ராமன் விளைவு' கண்டுபிடிக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வோராண்டும் பிப்.28 அன்று இந்தியாவில் 'தேசிய அறிவியல் நாள்' அனுசரிக்கப்படுகிறது. அதே நாளில், சர் சி வி ராமன் 'ராமன் விளைவு' கண்டுபிடிப்பை அறிவித்தார். மேலும் அவருக்கு 1930இல் 'நோபல் பரிசு' வழங்கப்பட்டது. "Integrated Approach in Science and Technology for Sustainable Future" என்பது 2022–தேசிய அறிவியல் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

2. இந்தியாவில் விளையும் அனைத்து பசுமை உணவு வகைகளிலும் அதிகமாக ஏற்றுமதியான பொருள் எது?

அ) பசுந்திராட்சை ☑



ஆ) கொய்யா

இ) பசுமையான மாம்பழங்கள்

ஈ) வெற்றிலை & பாக்கு

✓ இந்தியாவின் பழங்கள் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளது. பழங்கள் பிரிவில் திராட்சை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 2020–21ஆம் ஆண்டில் திராட்சை ஏற்றுமதியின் மதிப்பு $314 மில்லியன் அமெரிக்க டாலர்.

✓ இதர பழங்களின் ஏற்றுமதி மதிப்பு $302 மில்லியன் அமெரிக்க டாலராகவும், மாம்பழங்களின் ஏற்றுமதி $36 மில்லியன் டாலராகவும், வெற்றிலை மற்றும் பாக்குகளின் ஏற்றுமதி $19 மில்லியன் டாலராகவும் உள்ளது. இந்தியாவின் மொத்த பழங்கள் ஏற்றுமதியில், திராட்சை மற்றும் இதர பழங்கள் 92 சதவீதம் உள்ளன.

---

3. 2022ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் இந்தியாவிலிருந்து பங்கேற்ற ஒரே போட்டியாளர் யார்?

அ) ஆரிப் கான் ☑



ஆ) நீரஜ் சோப்ரா

இ) சிவ கேசவன்

ஈ) ஜெகதீஷ் சிங்

✓ ஸ்லாலோம் மற்றும் ஜெயண்ட் ஸ்லாலோம் போட்டிகளில் பங்கேற்கும் ஆரிப் கான், 2022ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில், இந்தியாவிலிருந்து பங்கேற்கும் ஒரே போட்டியாளர் ஆவார். ஈராண்டுகளுக்கு முன்பு கால்வன் மோதலில் காயமடைந்த சீன இராணுவ வீரர் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தியதை அடுத்து, 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை அரசியல் ரீதியாக புறக்கணிப்ப–தாக இந்தியா அறிவித்தது.

---

4. CPEC என்பது சீனாவின் சிஞ்சியாங் பகுதியையும் எந்த நாட்டின் குவாடர் துறைமுகத்தையும் இணைக்கும் ஒரு பொருளாதார வழித்தடமாக உள்ளது?

அ) ஈரான்



ஆ) பாகிஸ்தான் ☑

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) கஜகஸ்தான்

✓ சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் (CPEC) என்பது சீனாவின் வடமேற்கு சிஞ்சியாங் உய்குர் பகுதி மற்றும் பாக்கின் மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் உள்ள குவாடர் துறைமுகத்தை இணைக்கும் உட்கட்ட–மைப்புத் திட்டங்களுக்கான 3,000–கிமீ நீளமுடைய பாதையாகும். $60 பில்லியன் டாலர் சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்குவதற்கு பாகிஸ்தான் சமீபத்தில் சீனாவுடன் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

---

5. 'பால சுவராஜ்' தளத்துடன் தொடர்புடையது எது?

அ) பிரதம் அறக்கட்டளை

ஆ) தேசிய சிறார் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ☑

இ) பன்னாட்டு மன்னிப்பு அவை

ஈ) தேசிய மனித உரிமைகள் ஆணையம்

✓ சிறார் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (NCPCR) ஆனது அரசு சாரா அமைப்புகள் மற்றும் ஐநா நிறுவனங்களுடன் இணைந்து வீதிகளில் வாழும் குழந்தைகளை அடையாளம் காணுதல், அவர்களை மீட்டல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் பற்றிய தேசிய அளவிலான கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

✓ NCPCR, 'பால ஸ்வராஜ் இணையதளம் – Children in Street Situations (CiSS)' ஒன்றைத் தொடங்கியுள்ளது. முன்னதாக, COVID–19 காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளைக் கண்காணிக்க NCPCR, 'பால ஸ்வராஜ் (கோவிட்–கேர்)' போர்ட்டலை உருவாக்கியது.

---

6. 'SWIFT' நிதிச்செய்தியிடல் சேவையில் 'S' என்பது எதைக் குறிக்கிறது?

அ) Secure

ஆ) Society ☑

இ) Simple

ஈ) Service

✓ SWIFT அமைப்பு என்பது Society for Worldwide Interbank Financial Telecommunication என்பதன் சுருக்கமாகும். இது பாதுகாப்பான நிதிச்செய்தியிடல் சேவைகளை வழங்கும் உலகின் முன்னணி வழங்குநராகும். அண்மையில், அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பல்வேறு ரஷ்ய வங்கிகளை SWIFT அமைப்பிலிருந்து நீக்க முடிவுசெய்தன.

✓ ரஷ்ய மத்திய வங்கியின் சொத்துக்கள் முடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ரஷ்யாவின் வெளிநாட்டு இருப்புக்களை அணுகும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

7. 'மில்லினியம் சேலஞ்ச் கார்ப்பரேஷன்' என்பது எந்த நாட்டின் முன்முயற்சியாகும்?

அ) அமெரிக்கா ☑

ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) ஜப்பான்

✓ கடந்த 2004இல் அமெரிக்கா உருவாக்கிய மில்லினியம் சேலஞ்ச் கார்ப்பரேஷனானது பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்க பெரும் மானியங்களை வழங்குகிறது. சமீபத்தில், நேபாளத்தில் நடந்த போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பையும் மீறி, அந்த நாட்டின் நாடாளுமன்றம், $500 மில்லியன் மானியத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக நேபாளம் அமெரிக்க அரசாங்கத்தின் MCC ஒப்பந்தத்தில் கடந்த 2017இல் கையெழுத்திட்டது. ஆனால் அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் காரணமாக அதற்கான ஒப்புதல் இன்னமும் பெறப்படவில்லை.

---

8. பன்னாட்டு அணுசக்தி முகமையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஜெனீவா

ஆ) வியன்னா ☑

இ) நியூயார்க்

ஈ) மாஸ்கோ

✓ பன்னாட்டு அணுசக்தி முகமை என்பது ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இது அணுவாற்றலின் அமைதியான பயன்பாட்டை ஊக்குவிக்கவும், அணுவாயுதங்களுக்கான அதன் பயன்பாட்டைத் தடுக்கவும் எண்ணுகிறது. இதன் தலைமையகம் வியன்னாவில் உள்ளது.

✓ IAEA'இன் 35 நாடுகளைக் கொண்ட ஆளுநர்கள் குழு உக்ரைன்குறித்த அவசரக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. வாரிய உறுப்பினர்களான கனடா மற்றும் போலந்து உக்ரைனின் வேண்டுகோளின் பேரில் இக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தன. இவ்விரு நாடுகளுமே அவ்வாரியத்தில் இடம்பெறாதவையாகும்.

---

9. InDEA 2.0 பற்றிய வரைவு அறிக்கையை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

இ) நிதி அமைச்சகம்

ஈ) கார்ப்பரேட் விவகார அமைச்சகம்

✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது இந்திய டிஜிட்டல் சூழல் கட்டமைப்பு 2.0 அல்லது InDEA 2.0 பற்றிய வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

✓ InDEA 2.0, ஒரு குடிமகன் வைத்திருக்க வேண்டிய டிஜிட்டல் அடையாளங்களின் எண்ணிக்கையை மேம்படுத்த முற்படும் 'Federated Digital Identities'இன் மாதிரியை முன்மொழிகிறது. இந்த வரைவு அறிக்கைக்கு முன்னாள் MeitY செயலாளர் J சத்யநாராயணா தலைவராகவும், தற்போதைய செயலாளர் அஜய் பி சாவ்னி இணைத் தலைவராகவும் உள்ளார்.

---

10. இந்தியாவில் எந்தத் தேதியில் தேசிய பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது?

அ) மார்ச் 4 ☑

ஆ) மார்ச் 3

இ) மார்ச் 1

ஈ) மார்ச் 2

✓ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.4ஆம் தேதியன்று இந்தியாவில் தேசிய பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் தேசிய பாதுகாப்பு நாளுக்கானக் கருப் பொருளாக, "Nurture young minds develop a Safety Culture" தேர்வுசெய்யப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு வாரம் மார்ச் 4 முதல் மார்ச் 10 வரை அனுசரிக்கப்படுகிறது.

✓ நடப்பு 2022ஆம் ஆண்டு 51ஆவது தேசிய பாதுகாப்பு நாள் / தேசிய பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 28 ஆண்டுக்கு பிறகு மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வு; வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் எஸ் பாலச்சந்திரன் தகவல்

வங்கக்கடலில் 28 ஆண்டுகளுக்கு பிறகு மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வுமண்டலம் உருவாகி இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் எஸ் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறு பருவம் தவறி மழை பெய்வது குறித்து இந்திய வானிலை ஆய்வுமையத்தின் தென்மண்டல தலைவர் எஸ் பாலச்சந்திரன் கூறும்போது,

"மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாவது அரிதானது தான். இதுவரை 1938, 1994 ஆகிய இரு ஆண்டுகளில் மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வுமண்டலங்கள் ஏற்பட்டுள்ளன. இவையிரண்டும் தமிழ்நாட்டின் கரையை நோக்கி நகர்ந்து கரையை வந்து அடைவதற்குள் வலுவிழந்துவிட்டன. 28 ஆண்டுகட்குப் பிறகு மீண்டும் மார்ச் மாதத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது". இவ்வாறு அவர் கூறினார்.

---

2. 16 ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சிகளில் இன்று மறைமுகத் தேர்தல்

தமிழ்நாட்டில் 16 ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சிகளில் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க மறைமுக தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த 2006இலும் இதுபோன்றே மறைமுகத் தேர்தல் நடந்தது.

---

3. துப்பாக்கி சுடுதல்: இந்திய மகளிரணிக்கு தங்கம்

எகிப்தில் நடைபெறும் ISSF உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு தங்கம் கிடைத்தது.

இறுதிச்சுற்றில் இந்தியாவின் ஸ்ரீநிவேதா, ஈஷா சிங், ருசிதா வினெர்கர் ஆகியோர் கூட்டணி 16–6 புள்ளிகள் கணக்கில் ஜெர்மனியின் ஆண்ட்ரியா கேத்ரினா எக்னர், சாண்ட்ரா ரீட்ஸ், கேரினா விம்மர் கூட்டணியை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.

வியாழக்கிழமை நிலவரப்படி, இப்போட்டியில் இந்தியா 2 தங்கம், 1 வெள்ளி என 3 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது.

---

3. இன்றுமுதல் மகளிர் உலகக்கோப்பை

ஐசிசியின் மகளிர் ஒன்டே கிரிக்கெட் உலகக்கோப்பை போட்டி நியூஸிலாந்தில் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து – மேற்கிந்தியத் தீவுகள் மோதுகின்றன. இந்தியா தனது முதல் ஆட்டத்தில் 6ஆம் தேதி பாகிஸ்தானைச் சந்திக்கிறது.

பின்னர் நியூஸிலாந்தை 10ஆம் தேதியும், மேற்கிந்தியத் தீவுகளை 12ஆம் தேதியும், இங்கிலாந்தை 16ஆம் தேதியும் எதிர்கொள்கிறது. அடுத்து ஆஸ்திரேலியாவுடன் 19ஆம் தேதியும், வங்கதேசத்துடன் 22ஆம் தேதியும், தென்னாப்பி –ரிக்காவுடன் 27ஆம் தேதியும் விளையாடுகிறது.

கரோனா சூழல்காரணமாக ஓராண்டு தாமதமாக நடக்கும் இப்போட்டியின் ஆட்டங்கள், நியூஸிலாந்தின் 6 நகரங்களி –ல் நடைபெறவுள்ளன. 8 அணிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அணியும், மற்றொரு அணி –யுடன் தலா ஒருமுறை மோதும். லீக் ஆட்டங்கள் முடிவில் இருபிரிவுகளிலும் முதலிரு இடங்களில் இருக்கும் அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதிபெறும்.

---

4. நீர்மின்திட்டங்கள் பற்றிய கூடுதல் விவரங்கள்: பாகிஸ்தானுக்கு அளிக்க இந்தியா ஒப்புதல்

சிந்து நதி மற்றும் அதன் கிளையாறுகளில் கட்டப்பட்டு வரும் நீர்மின்திட்டங்கள் பற்றிய கூடுதல் விவரங்களை பாகிஸ்தானுடன் பகிர்ந்துகொள்வதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

சிந்து, ஜீலம், சீனாப் ஆகிய நதிகளின் நீரை பாகிஸ்தானும், சட்லெஜ், பியாஸ், ரவி ஆகிய நதிகளின் நீரை இந்தியாவும் தடையின்றி பயன்படுத்திக்கொள்ள இருநாடுகளுக்கு இடையே 1960இல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தப்படி, சிந்து நதி நீர் நிரந்தர ஆணையத்தின் கூட்டம், ஆண்டுக்கு ஒரு முறை பாகிஸ்தானில் அல்லது இந்தியாவில் நடைபெற வேண்டும். கடந்த ஆண்டு இந்தியாவில் கூட்டம் நடைபெற்றதால், இந்த ஆண்டு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் மார்ச்.1ஆம் தேதி தொடங்கி 3 நாட்கள் நடைபெற்றது.

அதில், பாகிஸ்தான் தரப்பில் அந்நாட்டு சிந்து நதி நீர் ஆணையர் மெஹர் அலி ஷா தலைமையிலான குழுவும் இந்தியத் தரப்பில் சிந்து நதி நீர் ஆணையர் பிரதீப் குமார் சக்சேனா தலைமையிலான குழுவும் கலந்துகொண்டு விவாதித்தன.

கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து கூறியிருப்பதாவது:

"சிந்து நதி நீர் ஆணைய ஒப்பந்தப்படி, அந்த நதிகளில் இந்தியா நீர்மின் திட்டங்களைத் தொடங்கலாம். அந்தத் திட்டத்தால் தங்களுக்கு பாதிப்பு இருப்பதாகக் கருதினால் பாகிஸ்தான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

சிந்து மற்றும் அதன் கிளையாறுகளில் 10 நீர்மின் திட்டங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது. அவற்றில் 9 திட்டங்கள் 25 மெகாவாட் மற்றும் அதற்குக் குறைவான மின்னுற்பத்தித் திறன் கொண்டவை. இந்த நீர்மின் திட்டங்கள்பற்றிய விவரங்களை பாகிஸ்தான் கேட்டுக் கொண்டதன் பேரில், அந்நாட்டு குழுவிடம் இந்தியத் தரப்பு அளித்தது. ஆனால், அந்த விவரங்கள் தெளிவின்றி இருப்பதாக பாகிஸ்தான் தரப்பு கூறியுள்ளது.

அதற்கு, 'சிறிய நீர்மின் திட்டங்களின் வரைபடங்கள், தொழில்நுட்பங்கள்பற்றிய விவரங்கள் மாநில அரசுகளிடம் போதிய அளவில் இருக்காது. எனவே, சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்புகொண்டு கூடுதல் விவரங்களைப் பெற்றுத்தரப்படும்' என இந்தியா தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. மேலும், பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்படும் ஆட்சேபங்களை திறந்த மனதுடன் பரிசீலிக்கவும் இந்திய தரப்பு ஒப்புக்கொண்டது என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது" எனக்கூறப்பட்டுள்ளது.

---

5. தேசிய செஸ்: அர்ஜுன் சாம்பியன்

உத்தர பிரதேசத்தில் நடைபெற்ற 58ஆவது சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப்பில் தெலங்கானாவின் அர்ஜுன் எரிகாய்சி வாகை சூடினார்.

11 சுற்றுகளின் முடிவில் அர்ஜுன், தமிழகத்தைச் சேர்ந்த டி குகேஷ், பி இனியன் ஆகிய மூவருமே 8.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட 'டை–பிரேக்கரில்' வெற்றி பெற்று அர்ஜுன் சாம்பியன் ஆனார். அவருக்கு ₹6 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

குகேஷ் 2ஆம் இடமும், இனியன் மூன்றாமிடமும் பிடிக்க, நடப்பு சாம்பியனாக இருந்த மற்றொரு தமிழரான அரவிந்த் சிதம்பரம் 8 புள்ளிகளுடன் 4ஆம் இடம் பிடித்தார்.

திவ்யா முதலிடம்: முன்னதாக, இப்போட்டியன் மகளிர் பிரிவில் மகாராஷ்டிரத்தின் திவ்யா தேஷ்முக் சாம்பியன் ஆக, சாக்ஷி சித்லாங்கே 2ஆம் இடமும், ஆந்திரத்தின் பிரியங்கா நுடாகி 3ஆம் இடமும் பிடித்தனர்.

---

6. இன்று தேசிய பாதுகாப்பு தினம்

"இளம்தலைமுறையினருக்கு பாதுகாப்பு கலாசாரத்தினை மேம்படுத்த புகட்டுவோம்" என்ற கருவுடன் இன்று 51ஆவது தேசிய பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது. தேசிய பாதுகாப்பு குழுமம் தொடங்கப்பட்ட மார்ச்.4ஆம் தேதி ஒவ்வோர் ஆண்டும் தேசிய பாதுகாப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

---

1. எந்த ஒழுங்குமுறை அமைப்பின் முதல் பெண் தலைவராக மாதபி புரி புச் நியமிக்கப்பட்டுள்ளார்?



அ) SEBI ☑

ஆ) NABARD

இ) PFRDA

ஈ) IRDAI

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) புதிய தலைவராக மாதபி புரி புச் அவர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. இவர் செபியின் முதல் பெண் தலைவர் ஆவார். அஜய் தியாகியை அடுத்து ICICI செக்யூரிட்டிஸின் முன்னாள் தலைவரான திருமதி மாதபி புரி புச் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

---

2. தேசிய வருமானத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2021–22இல் இந்தியாவின் மெய்யான GDP வளர்ச்சி என்ன?



அ) 5.6 சதவீதம்

ஆ) 7.1 சதவீதம்

இ) 8.9 சதவீதம் ☑

ஈ) 10.5 சதவீதம்

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், 2021–22 தேசிய வருமானத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகள் மற்றும் 2021–22 ஆம் ஆண்டின் அக்டோபர்–டிசம்பர் காலாண்டிற்கான GDPஇன் காலாண்டு மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.

✓ 2020–21இல் 6.6 சதவீதமாக இருந்த மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 2021–22இல் GDP உற்பத்தியின் வளர்ச்சி 8.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

---

3. பூமியின் மிகப்பெரிய பள்ளமான 'யிலான்' பள்ளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாடு எது?



அ) ரஷ்யா

ஆ) சீனா ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஜப்பான்

✓ வடகிழக்கு சீனாவில், 'யிலான்' எனப் பெயரிடப்பட்ட பிறை வடிவ பள்ளமானது கடந்த நூறாயிரம் ஆண்டுகளில் உருவான பூமியின் மிகப்பெரிய மொத்தல் நிலக்குழி என்ற சாதனையைப் படைத்துள்ளது.

✓ NASA புவி கண்காணிப்பு அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டுக்கு முன்பு வரை, சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு மொத்தல் நிலக்குழியாக லியோனிங்கில் கண்டறியப்பட்ட சியான் பள்ளம் இருந்தது. யிலான் பள்ளம், சுமார் 1.85 கிமீ விட்டத்துடன் உள்ளது. ரேடியோகார்பன் டேட்டிங் அடிப்படையில் சுமார் 46,000 முதல் 53,000 ஆண்டுகளுக்கு முன்பு இது உருவாகியிருக்கலாம்.

---

4. இந்திய கடற்படையானது பின்வரும் எந்த நகரத்தில் 'செய்முறை விளக்கத்தை' நடத்தியது?



அ) புனே

ஆ) கொச்சி

இ) விசாகப்பட்டினம் ☑

ஈ) எர்ணாகுளம்

✓ கடற்படையின் மிலன்–22 கூட்டுப்பயிற்சியை முன்னிட்டு, விசாகாப்பட்டின கடற்கரையில், 'செய்முறை விளக்க நிகழ்வுகளும் பன்னாட்டுக்கடற்படையினரின் அணிவகுப்–பும் நடத்தப்பட்டன.

✓ இந்திய கடற்படை கமாண்டோக்கள் வானில் இருந்து குதித்து சாகச நிகழ்ச்சிகள் நடத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு ஆந்திர பிரதேச முதலமைச்சர் YS ஜெகன் மோகன் ரெட்டி தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

---

5. 'தேசிய அளவிலான விழிப்புணர்வுத் திட்டம் – சம்பவ்' என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?

अ) कल्वी अमैச்சு

सूक्ष्म, लघु और मध्यम उद्यम मंत्रालय
MINISTRY OF
MICRO, SMALL & MEDIUM
ENTERPRISES

ஆ) MSME அமைச்சகம் ☑

இ) திறன் மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகம்

ஈ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

✓ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகம் (MSME) 28.02.2022 முதல் 06.03.2022 வரை 'அமுதப் பெருவிழாவின்'கீழ் அதன், 'தனித்துவம்மிக்க வாரத்தை' கொண்டாடுகிறது. MSME அமைச்சகம் அதன், 'தேசிய அளவிலான விழிப்புணர்வுத் திட்டம் – சம்பவ்'இன் 2ஆம் கட்டத்தைத் தொடங்கவுள்ளது.

✓ இதன்மூலம் நாடு முழுவதும் உள்ள 1300 கல்லூரிகளில் இருந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தொழில்முனைவோர் முயற்சியில் ஈடுபட ஊக்கப்படுத்தப்–படுவார்கள். இந்தத் திட்டத்தின் முதற்கட்டம் 2021'இல் தொடங்கப்பட்டது.

---

6. கீழ்காணும் எந்த இடத்தில், இந்திய இரயில்வேக்கான சூரிய ஒளிமின்னழுத்த மின்னுற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது?



அ) மும்பை

ஆ) கொல்கத்தா

இ) ஜான்சி

ஈ) பினா ☑

✓ மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள பினாவில் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிட் (BHEL)மூலம் 1.7 மெகாவாட் சோலார் ஒளிமின்னழுத்த மின்னுற்பத்தி ஆலை இந்திய இரயில்வேக்காக தொடங்கப்பட்டது. இந்திய ரயில்வேயின் இழுவை அமைப்புகளுக்கான மின்சாரம் இந்த ஆலை மூலம் நேரடியாக வழங்கப்படும்.

✓ இதன் வகையில் ரயில்வே நெட்வொர்க்கில் இயக்கப்பட்ட முதல் சூரிய மின்னுற்பத்தி நிலையம் இதுவாகும்.

---

7. செர்னோபில் பேரழிவு நடந்த ஆண்டு எது?

அ) 1972



ஆ) 1986 ☑

இ) 1997

ஈ) 2000

✓ 1986 ஏப்ரலில் செர்னோபில் அணுமின் நிலையத்தில் உலகின் மிகக்கொடிய அணு விபத்து ஏற்பட்டது. அதன் பின்னர், ஓர் அணு உலை வெடித்து ஐரோப்பா முழுவதும் அதன் கதிரியக்கக் கதிர்வீச்சு பரவியது.

✓ இந்த ஆலை கியேவிலிருந்து 130 தொலைவில் உள்ள பிரிபியாட்டில் அமைந்துள்ளது. கதிர்வீச்சுக் கசிவைத் தடுப்பதற்காக இவ்வணுவுலை இப்போது ஒரு பாதுகாப்பு சாதனத்தால் மூடப்பட்டுள்ளது. இந்த ஆலை முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. அறிவியலாளர்களின் கூற்றுப்படி, அடுத்த 24 ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்த இடத்தில் எந்த மனிதனும் வாழவியலாது. இது அணுக்கழிவுகளை சேமிக்கும் மையமாக செயல்பட்டுவருகிறது.

---

8. 2022 மெக்சிகன் ஓபன் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?

அ) நோவக் ஜோகோவிச்



ஆ) ரபேல் நடால் ☑

இ) ரோஜர் பெடரர்

ஈ) டேனியல் மெட்வெடேவ்

✓ டென்னிஸில், ரபேல் நடால் (ஸ்பெயின்) பிரித்தானிய வீரர் கேமரூன் நோரியை 6–4 6–4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி நடப்பு 2022ஆம் ஆண்டின் மெக்சிகன் ஓபன் (அகாபுல்கோ பட்டம் எனவும் அழைக்கப்படுகிறது) ஒற்றையர் பட்டத்தை வென்றார். இது டென்னிஸ் வாழ்வில் அவரது 91ஆவது ATP பட்டமாகும். கடந்த 2005, 2013 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் ரபேல் நடால் மெக்சிகன் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார்.

---

9. உலக உடல்பருமன் நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?

அ) மார்ச் 02



ஆ) மார்ச் 03

இ) மார்ச் 04 ☑

ஈ) மார்ச் 05

✓ உலக உடல் பருமன் நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.04 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது உடல்பருமன் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும் அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் அனுசரிக்கப்படுகிறது.

✓ "Everybody Needs to Act" என்பது 2022'இல் வரும் உலக உடல் பருமன் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

10. ஹேமானந்தா பிஸ்வால் என்பவர் எந்த மாநிலத்தின் முதல் பழங்குடியின முதலமைச்சராக இருந்தார்?

அ) ஹரியானா ஆ) ஜார்கண்ட்

இ) மத்திய பிரதேசம் **ஈ) ஒடிஸா ☑**



✓ ஒடிஸா மாநிலத்தின் முதல் பழங்குடியின முதல்வரும், மாநிலத்தின் கடைசி காங்கிரஸ் முதல்வருமான ஹேமானந்த பிஸ்வால் (82) அண்மையில் காலமானார்.

✓ ஜார்சுகுடா மாவட்டத்தைச்சேர்ந்த புயான் பழங்குடியினத் –தைச்சார்ந்தவரான ஹேமானந்த பிஸ்வால், 1989–1990 வரையிலும், 1999 – 2000 வரையிலும் என இரண்டு முறை முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் 2024ஆம் ஆண்டுக்குள் குடிநீர் குழாய் இணைப்பு வசதி: மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்

தமிழ்நாடு, கர்நாடகா கேரளா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2024ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுவிடும் என மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஜல் ஜீவன் திட்டம் தொடங்கப்பட்டபோது, மொத்தம் இருந்த 1 கோடியே 26 லட்சத்து 89 ஆயிரம் கிராமப்புற வீடுகளில், 21.76 லட்சம் (17%) வீடுகளில் மட்டுமே குடிநீர் குழாய் இணைப்புகள் இருந்ததாகவும், 30.21 லட்சம் (20.4%) வீடுகளுக்கு திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு, தற்போது 51.97 லட்சம் (41%) வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

---

2. 2030க்குள் புதைபடிவ எரிமம் அற்ற 500 ஜிகாவாட் எரிசக்தி பிரதமர் மோடி உறுதி

2030ஆம் ஆண்டுக்குள் நிலக்கரிபோன்ற புதைபடிவ எரிமம் அற்ற 50% எரிசக்தி நிறுவும் திறனை இந்தியா அடையும்; இதன்மூலம், 500 ஜிகாவாட் புதைபடிவ எரிமம் அற்ற எரிசக்தித் திறன் இலக்கை அடைய முடியும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உஜாலா திட்டத்தின் கீழ் 37 கோடி LED விளக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 48,000 மில்லியன் கிலோ வாட் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வருடாந்திர கரியமில மாசு 4 கோடி டன் அளவுக்கு குறைந்துள்ளது என்றார் பிரதமர் மோடி.

---

3. இரயில்கள் மோதி ஏற்படும் விபத்து.. தடுக்கும் 'கவச்' கருவி! இந்திய இரயில்வே சோதனை வெற்றி!

இரயில்கள் நேருக்கு நேர் மோதி ஏற்படும் விபத்துகளை தடுக்கும் கருவியை இந்திய இரயில்வே வெற்றிகரமாக சோதித்துள்ளது.

லேசர் அடிப்படையிலான 'கவச்' என்ற கருவி, ஒரே தண்டவாளத்தில் 2 ரயில்கள் எதிரெதிரே வர நேர்ந்தால் இன்ஜின் இயக்கத்தை நிறுத்தி விபத்தைத் தடுக்கிறது.

தெலுங்கானாவில் செகந்திராபாத் அருகே இந்தக் கருவி சோதிக்கப்பட்டது.

'கவச்' கருவியின் அம்சங்கள்: 'கவச்' கருவி பொருத்தப்பட்ட இரயில் நிலையங்களில் நுழையும்போது ஒரு பாதையில் இருந்து மற்ற பாதைக்கு மாறும் முன்பு தானாக வேகத்தை 30 கிமீ அளவிற்கு குறைத்து மெதுவாகப் பயணிக்கும்.

இரயில்வே லெவல் கிராஸிங் கேட்டுகளை 'கவச்' கருவி பொருத்திய ரயில் நெருங்கும்போது தானாக ஒலி எழுப்பி சாலை பயன்பாட்டாளர்களை எச்சரிக்கும். விபத்தில்லாத ரயில் பயணமாக 'கவச்' கருவி முழு ரயிலையும் கவசமாக பாதுகாக்கும். சிவப்பு விளக்கைக் கண்டால் இரயிலை உடனே நிறுத்தும். ரயில்கள் நேருக்குநேர் வந்தாலும் இரு ரயில்களும் தானாக நின்றுவிடும். அதோடு பாரத கவசம் – அவசர நேரத்தில் ரயில் இன்ஜின் டிரைவர் பிரேக் பிடிக்க தாமதமாகும் போது 'கவச்' தானியங்கி கருவி ரயிலை நிறுத்தும். 2 ரயில்கள் நேருக்குநேர் மோதுவதை தடுக்கும்.

---

4. உலக ரேஸ் வாக்கிங்: இந்திய மகளிர் சாதனை

உலக தடகள ரேஸ் வாக்கிங் சாம்பியன்ஷிப்பில் 20 கிமீ பந்தயத்தில் இந்திய மகளிரணி வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டியின் 61 ஆண்டுகால வரலாற்றில் இந்திய மகளிர் பதக்கம் வென்றிருப்பது இதுவே முதன்முறை ஆகும். இப்போட்டியில் இந்திய ஆடவர் அணி கடந்த 2012இல் வெண்கலம் வென்றது நினைவுகூரத்தக்கது.

---

5. சுழல் சூறாவளி மறைவு!

சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த ஸ்பின்னராக இருந்தவரும், ஆஸ்திரேலிய வீரருமான ஷேன் வார்னே காலமானார். அவருக்கு வயது 52.

'பால் ஆப் தி செஞ்சுரி'...

ஆஸ்திரேலிய அணிக்காக 1992 முதல் 2007 வரை 15 ஆண்டுகள் விளையாடியிருக்கிறார் வார்னே. அந்தக்கால கட்டத்தில் மிகச்சிறந்த ஸ்பின்னராக அறியப்படும் வார்னேவின் 'பால் ஆப் தி செஞ்சுரி' என்று பாராட்டப்படும் ஒரு பந்துவீச்சு மிகப்பிரபலமானதாகும். 1993இல் ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில் முதலில் இங்கிலாந்து பேட் செய்தது. 2–ஆவது நாளில் மைக் கேட்டிங்கிற்கு வார்னே வீசிய ஒரு லெக் பிரேக் பந்து அவர் சற்றும் கணிக்க முடியாத வகையில் திசைதிரும்பி ஸ்டம்ப் பெய்ல்ஸை தட்டியது. அத்தகைய ஓர் எதிர்பாராத பௌலிங்கை கண்டு கேட்டிங் மட்டுமல்லாது சர்வதேச கிரிக்கெட் சமூகமே ஆச்சரியமடைந்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் வரிசையில், இலங்கையின் முத்தையா முரளீதரனை (800) அடுத்து வார்னே 708 விக்கெட்டுகள் உடன் 2ஆம் இடத்தில் உள்ளார். அவர்கள் இருவரையும் கௌரவிக்கும் வகையில் கடந்த 2007இல் ஆஸ்திரேலிய – இலங்கை மோதிய டெஸ்டுக்கு 'வார்னே–முரளிதரன் கோப்பை' டெஸ்ட் என்று பெயரிடப்பட்டது.

---

6. தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மார்ச் 30, 31இல் மகாகவி பாரதியார் நினைவுநூற்றாண்டு பன்னாட்டு ஆய்வரங்கம்

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டு பன்னாட்டு ஆய்வரங்கம் மார்ச் 30, 31ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து துணைவேந்தர் வி திருவள்ளுவன் தெரிவித்திருப்பது:

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நூற்றாண்டையொட்டி, தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை, இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை, வானவில் பண்பாட்டு மையம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து 'மகாகவி பாரதியாரின் உரைநடை ஆக்கங்கள்' என்ற பன்னாட்டு ஆய்வரங்கத்தை மார்ச் 30, 31ஆம் தேதிகளில் நடத்தவுள்ளன.

---

7. பிரம்மோஸ் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட நிலத்தாக்குதல் இலக்கை துல்லியமாகத் தாக்கி இந்திய கடற்படை வெற்றிகர சோதனை

இந்திய கடற்படை பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட நிலத்தாக்குதல் இலக்கை துல்லியமாகத் தாக்கி வெற்றிகரமான சோதனையை மேற்கொண்டது. நாசகார கப்பலான INS சென்னையில் இருந்து இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனையில் ஏவுகணை மிகத்துல்லியமாக இலக்கை தாக்கியது.

பிரம்மோஸ் ஏவுகணையும், அதனை ஏவிய ஐஎன்எஸ் சென்னை கப்பலும் உள்நாட்டிலேயே நவீன ஆற்றலுடன் தயாரிக்கப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பாகும். தற்சார்பு இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் ஆகிய இந்தியாவின் முன்முயற்சிகளில் இந்திய கடற்படையின் பங்களிப்பாக இது அமைந்துள்ளது.

இச்சோதனைமூலம், இந்திய கடற்படை, கடலிலிருந்து வெகு தொலைவில் உள்ள நிலப்பரப்பை தேவைப்படும் இடத்திலும் நேரத்திலும் குறிவைத்து துல்லியமாகத் தாக்–கும் திறனைப்பெற்றிப்பது சாதனையாக கருதப்படுகிறது.

---

8. டிஜிட்டல் பல்கலைக்கழகம் – இந்திய கல்வித் துறையில் புரட்சி: இந்தியாவில் முதன்முதலாக கேரள மாநிலத்தில் உருவாக்கம்

இந்தியாவில் டிஜிட்டல் பல்கலைக் கழகம் தொடங்கப்படும் என்று கடந்த பட்ஜெட்டில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். டிஜிட்டல் பல்கலைக்கழகம் என்றால் என்ன, அது எப்படி செயல்படும்? என்று கல்வியாளர்களும் மாணவர் சமுதாயமும் குழம்பிவந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, கடந்த மாதம் நடத்திய இணைய கருத்தரங்கு மூலம் இதற்கான அடுத்தகட்ட நகர்வு ஏற்பட்டுள்ளது.

டிஜிட்டல் பல்கலைக்கழகம் குறித்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும்படி கல்வித்துறை அறிஞர்களையும், உயர் அதிகாரிகளையும் பிரதமர் கேட்டுக் கொண்டார். அதுமட்டுமின்றி, 'அனைத்து பல்கலைக்கழகங்களும்

சேர்ந்து உருவாக்குவதுதான் டிஜிட்டல் பல்கலைக்கழகம். இது செயல்பாட்டுக்கு வந்தால் கல்லூரி மற்றும் பல்கலைகளில் இடம் கிடைக்கவில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. மாணவர் சேர்க்கைக்கு எந்த வரம்பும் இல்லை' என்று குறிப்பிட்டு டிஜிட்டல் பல்கலைக்கழகத்தின் வடிவத்தை கோடிட்டுக் காட்டினார்.

பிரதமர் எடுத்த முயற்சியின் தொடர்ச்சியாக உயர்கல்வித் துறை செயலர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் உயர்கல்வித் துறையை நிர்வகிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் கூடி, டிஜிட்டல் பல்கலைக்கழக திட்டத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது குறித்து விவாதித்தனர். அதில் சான்றிதழ், டிப்ளமோ, பட்டப்படிப்புகளை டிஜிட்டல் பல்கலைக்கழகம் மூலம் வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.

பிளஸ் 2 தேர்ச்சிபெற்ற யார் வேண்டுமானாலும் டிஜிட்டல் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பட்டம் பெற முடியும். மாணவர் சேர்க்கை இடங்களுக்கு எந்த வரையறையும் இல்லை. எத்தனை மாணவர்கள் சேர்ந்தாலும் அனைவருக்கும் டிஜிட்டல் பல்கலைக்கழகம் மூலம் பட்டம் வழங்க முடியும். தற்போதுள்ள நடைமுறையில் மாணவர்களை கழித்து வெளியேற்றும் சேர்க்கை முறையே பின்பற்றப்படுகிறது. இதில் பல மாணவர்கள் உயர்கல்வி மையங்களில் இடம் கிடைக்காமல் வெளியேறும் நிலை ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு டிஜிட்டல் பல்கலைக்கழகம் தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'ஹப்-ஸ்போக் மாடல்'

புதிய டிஜிட்டல் பல்கலைக்கழகம், இணையத் தொடர்புடன் கூடிய 'ஹப்-ஸ்போக் மாடல்' மூலம் இயங்கும். அதாவது, இந்தியாவில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் டிஜிட்டல் பல்கலைக்கழகத்தின் அங்கமாக இருக்கும். அவை அனைத்திடம் இருந்தும் பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் குறித்த வீடியோ விவரங்களைப் பெற்று அவற்றை மாணவர்களுக்கு வழங்கும் மையமாக டிஜிட்டல் பல்கலைக்கழகம் செயல்படும்.

இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் மையமாக டிஜிட்டல் பல்கலைக்கழகம் செயல்பட்டு ஒரே இடத்தில் மாணவர்கள் சேரும் வகையில் உருவாகும். இந்த புரட்சிகரமான முயற்சிக்கு நிலையான இணையத்தொடர்பு, அவசியமான மின்னணு சாதனங்கள், மாணவர்கள் பாடங்களை கவனிக்கும் காலவரையறை, ஆன்லைன் மூலம் பாடங்களை மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கும் முறை ஆகியவை சவால்களாக இருக்கும் என்று கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், சவால்களைக் கடந்து 6 மாதம் முதல் ஓராண்டுக்குள் செயல்பாட்டுக்குள் அடியெடுத்து வைக்க வேண்டும் என்று மத்திய அரசு கால நிர்ணயம் வகுத்துள்ளது.

இந்த முயற்சியில் பைஜூஸ் போன்ற கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் அமைப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் உள்ள தொழில்நுட்ப உதவிகளை டிஜிட்டல் பல்கலைக்கழகத்துக்குப் பயன்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்காக சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கொண்டு வந்து கல்விப்பணியில் தனியாருக்கும் முக்கியப் பங்களிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான விதிகளை 2 மாதங்களுக்குள் உருவாக்கி வெளியிடும் பொறுப்பு யுஜிசி-யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 8-ம் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 15 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 84 லட்சத்து 65 ஆயிரம் பேர் மட்டுமே கல்லூரிகளில் சேருகின்றனர். இன்னும் 15 ஆண்டுகளில் 18 முதல் 23 வயதுடைய இளைஞர்களில் 50 சதவீதம் பேரை உயர்கல்விக்குக் கொண்டு வர வேண்டும் என்ற இலக்கோடு டிஜிட்டல் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகிறது.

மத்திய அரசின் இந்த முயற்சிக்கு உறுதுணையாக, படித்தவர்கள் நிறைந்த மாநிலமாகக் கருதப்படும் கேரளாவில் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாகச் செயல்பட்டு வரும் கேரள நிர்வாகவியல் ஐஐஐடி-யை தரம் உயர்த்தி அம்மாநில அரசு டிஜிட்டல் பல்கலைக்கழகமாக மாற்றியுள்ளது. இது மத்திய அரசின் டிஜிட்டல் பல்கலைக்கழக முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

9. இருசக்கர வாகன விபத்தில் இறப்பு 107 சதவீதம் அதிகரிப்பு – 2021-ல் நடந்த சாலை விபத்துகளில் 14,912 பேர் உயிரிழப்பு

தமிழகத்தில் 2021-ல் நடந்த 55,713 வாகனவிபத்துகளில் 14,912 பேர் இறந்துள்ளனர். இது முந்தைய ஆண்டை விட 6,852 பேர்அதிகமாகும். இருசக்கர வாகன விபத்து உயிரிழப்பு 107 சதவீதம் அதிகரித்து உள்ளது,

தமிழகத்தில் சாலை விபத்துகள், இறப்புகளைக் குறைக்க போக்குவரத்து, காவல்துறை, சுகாதாரத் துறை உட்பட பல்வேறு துறைகளோடு இணைந்து தமிழக அரசு பணியாற்றி வருகிறது. இதனால், கடந்த 5ஆண்டுகளாக உயிரிழப்புகள் படிப்படியாக குறைந்து வந்தன.

குறிப்பாக, கடந்த 2016-ம் ஆண்டில் 17 ஆயிரத்து 218 ஆக இருந்த உயிரிழப்பு எண்ணிக்கை 2020-ல் 8 ஆயிரத்து 60 ஆககுறைந்தது. அதாவது, இலக்கு நிர்ணயித்த 50 சதவீதத்தை விட 54 சதவீதமாக குறைந்தது, தமிழக அரசின் சாதனையாக இருந்தது. இந்த நிலை தற்போது மாறியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் மீண்டும் சாலை விபத்தில் உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

2021-ல் 14,912 பேர் உயிரிழப்பு

இதுதொடர்பாக தமிழக அரசின் புள்ளிவிவரத்தில், "தமிழகத்தில் கடந்த ஆண்டில்நடந்த 55 ஆயிரத்து 713 சாலை விபத்துகளில்மொத்தம் 14 ஆயிரத்து 912 பேர் இறந்துள்ளனர். இதற்கு முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் இது 85 சதவீதம் அதிகமாகும்.

இருசக்கர வாகன விபத்துகளில் மட்டும் 6,223 பேர் இறந்துள்ளனர். லாரிகளால் ஏற்பட்ட விபத்துகளில் 2,467 பேரும், கார்கள், டாக்சி விபத்துகளால் 2,467 பேரும், வேன் மற்றம் சிறிய வகை சரக்கு வாகனங்களால் 1,140 பேரும் இறந்துள்ளனர். அதுபோல், தேசிய நெடுஞ்சாலை விபத்துகளில் 4,129 பேரும், மாநில நெடுஞ்சாலை விபத்துகளில் 4,929 பேரும் இறந்துள்ளனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. தேசிய சிறார்கள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தி –ன் (NCPCR) புதிய குறிக்கோள் வாசகம் என்ன?

அ) Support to Children

ஆ) Bhavishyo Rakshati Rakshit ☑

இ) All–round Protections of Child Rights

ஈ) Dharmo Rakshati Rakshit

✓ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR) புதிய குறிக்கோள் வாசகமான, "பவிஷ்யோ ரக்ஷதி ரக்ஷித் – எதிர்காலத்தை பாதுகாப்போம்" என்பதை அதன் 17ஆவது நிறுவன நாளில் புதுதில்லியில் உள்ள செங்கோட்டையில் வெளியிட்டார்.

✓ உயிர்த்தியாகஞ்செய்த BSF வீரர்களின் குழந்தைகளுக்கு உளவியல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆலோசனை வழங்க 'ஷகாரா' என்ற பெயரில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு தேசிய ஆணையத்துடன் இணைந்து எல்லை பாதுகாப்பு படை ஏற்பாடு செய்திருந்த சிறப்பு நடவடிக்கையையும் மத்திய அமைச்சர் பாராட்டினார்.

---

2. திட்டம் 15B'இன்கீழ் தயாரிக்கப்படும் இந்தியாவின் 4 மறைந்திருந்து தாக்கும் வழிசெலுத்துதல் இயக்கப்பட்ட ஏவுகணை அழிகலனுள்முதல் அழிகலனின் பெயரென்ன?

அ) ஐஎன்எஸ் கொச்சி

ஆ) ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் ☑

இ) ஐஎன்எஸ் வீரா

ஈ) ஐஎன்எஸ் கட்டபொம்மன்

✓ 'INS விசாகப்பட்டினம்' என்னும் நாசகார கப்பலை ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

✓ திட்டம் 15B'இன்கீழ் இந்தியாவிற்காக தயாரிக்கப்படும் 4 மறைந்திருந்து தாக்கும் வழிசெலுத்துதல் இயக்கப்பட்ட ஏவுகணை அழிகலனுள் இது முதல் அழிகலனாகும். இது இந்திய கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்குந –ரகத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டதாகும்.

✓ இது 75% உள்நாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. மும்பையின் மசகான் கப்பல்கட்டும் நிறுவனத்தின்மூலம் இந்தக் கப்பல் கட்டப்பட்டது.

---

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பேரன்ட்ஸ் கடல், எந்த 2 நாடுகளின் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது?

அ) ரஷ்யா–உக்ரைன்

ஆ) ரஷ்யா–நார்வே ☑

இ) ரஷ்யா–போலந்து

ஈ) ரஷ்யா–பெலாரஸ்



✓ 'பேரன்ட்ஸ் கடல்' என்பது ஆர்க்டிக் பெருங்கடலின் விளிம்பில் உள்ள ஒரு கடல் ஆகும். இது நார்வே மற்றும் ரஷ்யாவின் வடக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இது ரஷ்யாவில் 'மர்மன் கடல்' என்றும் அழைக்கப்படுகிறது.

✓ ரஷ்யாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் பேரன்ட்ஸ் கடலில் பயிற்சி மேற்கொள்வதற்காக புறப்பட்டுச் சென்றன. சைபீரியாவிலுள்ள பனிக்காடுகளுக்கிடையில் கையில் எடுத்துச்செல்லக்கூடிய எறிகணை ஏவிகள் காணப்பட்ட –தை அடுத்து, ரஷ்யா அதிபர் விளாடிமிர் புடின் உக்ரைன் படையெடுப்பு பதட்டங்கள்பற்றி தமது நாட்டின் அணுசக்தி படைகளை அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு உத்தரவிட்டார்.

---

4. குறைந்த கரிமத் தொழில்நுட்பங்கள் பற்றிய தேசிய புத்தாக்க மாநாட்டை ஏற்பாடு செய்த நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) எரிசக்தி திறன் பணியகம் ☑

இ) ASSOCHAM

ஈ) IIT மெட்ராஸ்

✓ எரிசக்தி திறன் பணியகமானது (BEE) 'குறைந்த கரிமத் தொழில்நுட்பங்கள்குறித்த தேசிய புத்தாக்க மாநாட்டை" நடத்தி அதன் 20ஆம் நிறுவன நாளை நினைவுகூர்ந்தது.

✓ Facility for Low Carbon Technology Deployment (FLCTD) என்பது உலகளாவிய சுற்றுச்சூழல் வசதியால் நிதியுதவி அளிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இது ஐநா தொழிற்துறை மேம்பாட்டு அமைப்பு (UNIDO)மூலம் எரிசக்தி செயல்திறன் பணியகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

---

5. உக்ரைன், எத்தனை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது?

அ) ஒன்று

ஆ) இரண்டு

இ) மூன்று

ஈ) நான்கு ☑



✓ உக்ரைன் 4 ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளான ஹங்கேரி, போலந்து, ஸ்லோவாக்கியா (மேற்கு) மற்றும் ருமேனியா (தெற்கு) ஆகியவற்றுடன் தனது எல்லையை பகிர்ந்துகொள்கிறது. இது கிழக்கு மற்றும் வடகிழக்கில் ரஷ்யாவுடன் தனது எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது.

✓ உக்ரைன் வடக்கே பெலாரஸுடனும் தெற்கில் மால்டோ –வாவுடனும் தனது எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. உக்ரைன் அதிபர் உரையாற்றி கைதட்டல்களைப்பெற்ற விவாதத்திற்குப்பிறகு, உக்ரைனை ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமைக்கான அதிகாரப்பூர்வ வேட்பாளராக மாற்ற ஐரோப்பிய நாடாளுமன்றம் பரிந்துரைத்தது.

---

6. 'உலகளாவிய நெகிழி ஒப்பந்த' வரைவுக்கான ஆணையை அங்கீகரித்துள்ள சர்வதேச நிறுவனம் எது?

அ) UNFCCC

ஆ) ஐநா சுற்றுச்சூழல் அவை ☑

இ) IPCC

ஈ) WWF

✓ நெகிழி மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக 175 உறுப்பு நாடுகளுடன் ஐநா சுற்றுச்சூழல் பேரவை,

நாடுகள் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படும் ஓர் ஆணையில் கையெழுத்திட்டது. அடுத்த 2 ஆண்டுகளில் உலகளாவிய நெகிழி ஒப்பந்தம் வரைவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும். நெகிழி உற்பத்தியைக் கையாள்வதற்கும் நெகிழியின் நச்சுச்சுமையை நிவர்த்திசெய்வதற்கும் இந்த ஆணை பரிந்துரைக்கிறது.

---

7. 'How Indians View Gender Roles in Families and Society' **என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

ஆ) UNICEF

இ) பிரதம் அறக்கட்டளை

ஈ) பியூ ஆராய்ச்சி மையம் ☑

✓ 29,999 வயதுவந்த இந்தியர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், வாஷிங்டன் DC'ஐச் சார்ந்த ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமான பியூ ஆராய்ச்சி மையம், 'How Indians View Gender Roles in Families and Society' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

✓ இவ்வறிக்கையின்படி, பெண்கள் அரசியல் தலைவர்கள் ஆகி நாட்டை ஆள்வதை இந்திய ஆண்கள் வரவேற்கின்–றனர். ஆண்களைப்போலவே பெண்களும் அரசியலில் திறமையாக செயல்பட முடியும் என்ற கருத்தை 55 சதவீத ஆண்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

✓ பத்தில் ஒன்பது இந்தியர்கள் மனைவி எப்போதும் தனது கணவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறார்கள். 34% பேர் குழந்தை பராமரிப்பு முதன்மையாக பெண்களால் கையாளப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர். 43% பேர் வருமானம் ஈட்டுவது ஆண்களின் கடமை என்று கூறியுள்ளனர்.

---

8. 'கொத்துக்குண்டுகள் மீதான தீர்மானம்' **கையெழுத்தா–ன ஆண்டு எது?**

அ) 1972

ஆ) 2008 ☑

இ) 2020

ஈ) 2021

✓ 2008 மேயில், 107 நாடுகள் கொத்துக்குண்டுகளைத் தடைசெய்யும் ஒரு பன்னாட்டு தீர்மானத்தைக் கொண்டு வந்தன. அதற்கு, 'கொத்துக்குண்டுகள் மீதான தீர்மானம்' என்று பெயரிடப்பட்டது. சமீபத்தில், ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரில் கொத்துக்குண்டுகள் மற்றும் வெற்றிட குண்டுகளை பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

✓ தீர்மானத்தின்படி, கொத்துக் குண்டுகள் ஒவ்வொன்றும் 20 கிகிராம்களுக்கு குறைவான எடையுள்ள வெடிக்கும் துணைக்குண்டுகளை வெளியிடுகின்றன.

---

9. பன்னாட்டு கழிவெடுப்பவர்கள் (Waste Pickers') **நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) மார்ச் 01 ☑ ஆ) மார்ச் 02

இ) மார்ச் 03 ஈ) மார்ச் 05



✓ 11 தொழிலாளர்களின் கொடூரமான இறப்புக்கு வழிவகுத்த கொலம்பிய படுகொலையைக் குறிக்கும் வகையில் மார்ச்.1ஆம் தேதி பன்னாட்டு கழிவு எடுப்பவர்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் உலகெங்கிலும் உள்ள கழிவெடுப்பவர்கள் அல்லது மறுசுழற்சி செய்பவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க முற்படுகிறது.

---

10. அரசின் அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் COVID–19 காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை என்ன?

அ) 0.74 இலட்சம்

ஆ) 1.54 இலட்சம் ☑

இ) 5.54 இலட்சம்

ஈ) 15.54 இலட்சம்



✓ அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் COVID–19 காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 1,53,827 ஆகும்.

✓ பெற்றோரை அல்லது பராமரிப்பாளர்களை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கையை மட்டும் இது கொண்டிருக்கவில்லை. லான்செட்டின் ஓர் அண்மைய ஆய்வில், இந்தியாவில் 19 லட்சம் குழந்தைகள் COVID–19 காரணமாக தங்களது பெற்றோர் அல்லது பராமரிப்பாளரை இழந்துள்ளனர் என்று கூறியிருந்ததற்கு பதிலளித்த பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், இந்த எண்ணிக்கைக்கும் கள நிலவரத்துக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று கூறியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பந்தல்குடியில் பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா

அருப்புக்கோட்டை அருகேயுள்ள பந்தல்குடியில் சுண்ணா–ம்புக்கல் சுரங்கத்தில் சுமார் 72 ஏக்கரில் ₹5.20 கோடியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பல்லுயிர் பெருக்க சுற்றுச் சூழல் பூங்காவை தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை – தூத்துக்குடி செல்லும் சாலையில் உள்ள பந்தல்குடியில், ராம்கோ நிறுவனத்துக்குச் சொந்தமான 800 ஏக்கர் பரப்பளவில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் உள்ளது. சுற்றுப்புறச்சூழலைக் கருத்தில்கொண்டு அச்சுரங்க பகுதியில் உள்ள செயல்படா 72 ஏக்கர் பரப்பளவில் ₹5.20 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு செய்து பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மழைநீரை முழுமையாக சுரங்கத்தில் சேகரிப்பது, அதனால் ஏற்படும் பயன்கள் குறித்து இளந்தலைமுறையினர்க்கு எடுத்துரைப்பதற்காக இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

---

2. குறைந்தபட்ச ஜிஎஸ்டி 5%–லிருந்து 8%–ஆக உயர்த்த பரிசீலனை

வரவிருக்கும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் குறைந்தபட்ச ஜிஎஸ்டி விகிதம் 5%–லிருந்து 8%–ஆக உயர்த்துவது

குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஜிஎஸ்டி 5%, 12%, 18%, 28% என நான்கு அடுக்குகளில் உள்ளன. இந்நிலையில் குறைந்தபட்ச விகிதத்தை 5%லிருந்து 8%ஆக உயர்த்துவது தொடர்பாக அமைச்சர்கள் குழு இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் நடக்கவிருக்கும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் அறிக்கை தாக்கல் செய்ய இருப்பதாகவும், அது தொடர்பான கலந்தாலோசனை அக்கூட்டத்தில் நடைபெற இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு குறைந்தபட்ச விகிதம் 8%ஆக உயர்த்தபடுவத –ன்மூலம் அரசுக்கு ₹1.50 லட்சம் கோடி கூடுதல் வரி வருவாய் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதுதவிர, ஜிஎஸ்டி 5%, 12%, 18%, 28% என்ற நான்கு அடுக்குகளிலிருந்து 8%, 18%, 28% என்ற மூன்று அடுக்குகளாக குறைப்பது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு ஜிஎஸ்டி மூன்று அடுக்குகளாக குறைக்கப்படும்பட்சத்தில் 12% அடுக்கில் வருபவை 18% அடுக்கின்கீழ் சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

3. தேசிய அளவிலான சிலம்பம்: தமிழ்நாடு அணி சாம்பியன்

கன்னியாகுமரியில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் தமிழ்நாடு அணி சாம்பியன் பட்டம் வென்றது.

அகில இந்திய சிலம்பம் சம்மேளனம் சார்பில், தேசிய அளவிலான 18ஆவது மினி சப் ஜூனியர், சப் ஜூனியர், ஜூனியர், சீனியர் பிரிவில் ஆண், பெண் பங்கேற்ற சிலம்பப்போட்டி கன்னியாகுமரியில் இருநாட்கள் நடந்தது.

இப்போட்டியில் தமிழகம், புதுச்சேரி, கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலுங்கானா, மகாராஷ்டிராம், தில்லி, மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், ஹரியானா, இராஜஸ்தான், நாகலாந்து, மிசோரம், ஜம்மு–காஷ்மீர், பீகார், ஒடிஸா, சத்திஸ்கர் உள்ளிட்ட 22 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றன. 1200'க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இதில், தமிழகம் அணி சாம்பியன் பட்டம் வென்றது. இரண்டாவது இடத்தை புதுச்சேரி அணியும், மூன்றாவது இடத்தை மகாராஷ்டிராம் அணியும் பிடித்தது.

---

4. நாட்டிலேயே முதலாவதாக தூத்துக்குடியில் ₹1,000 கோடியில் சர்வதேச அறைகலன் பூங்கா: முதல்வர் மு க ஸ்டாலின் இன்று அடிக்கல்

இந்தியாவிலேயே முதலாவதாக தூத்துக்குடியில் ₹1,000 கோடி மதிப்பீட்டில் 1,150 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள சர்வதேச அறைகலன் பூங்காவுக்கு முதல்வர் மு க ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

துறைமுக நகரமான தூத்துக்குடியில் தொழில் வளர்ச்சியை பெருக்கவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ₹1,000 கோடியில் 1,150 ஏக்கர்பரப்பளவில் 'சர்வதேச அறைகலன் (Furniture) பூங்கா' அமைக்கப்படும் என கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். அறைகலன் பூங்கா அமைக்க சிப்காட் நிறுவனம் சார்பில் தூத்துக்குடி சிப்காட் வளாகத்தில் 1,150 ஏக்கர் நிலம் சீரமைக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அறைகலன் தொழிலுக்கென தனியாக நாட்டிலேயே முதல் சிறப்பு பொருளாதார மண்டலமாக அமைக்கப்படும் இந்தப் பூங்காவில் மர அறுவை ஆலை, அறைகலன் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் உள்ளிட்ட சுமார் 100 நிறுவனங்கள் இடம் பெறுகின்றன. அறைகலன் தொழில்சார்ந்த உதிரி பாகங்களை தயார் செய்யும் சிறு, குறு தொழில் நிறுவனங்களும் இந்தப் பூங்காவில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

3.5 இலட்சம் பேருக்கு வேலை

அறைகலன் தொழில் தொடர்பாக ஆண்டுதோறும் சுமார் 5 ஆயிரம்பேருக்கு திறன் பயிற்சி அளிக்கும் வகையில் பயிற்சிக்கூடம், அறைகலன் பொருட்களின் தரத்தை பரிசோதிக்கும் ஆய்வுக்கூடம், கூட்ட அரங்கம், தங்கும் விடு –திகள், உணவகங்கள்போன்ற அனைத்து வசதிகளும் அங்கு இடம்பெறும்.

இந்தப் பூங்காமூலம் சுமார் ₹4,500 கோடிக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், நேரடியாகவும், மறைமுகமாகவு –ம் சுமார் 3.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக, தூத்துக்குடி ஸ்பிக் நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 22 மெகாவாட் திறன் கொண்ட நீரில் மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை முதல்வர் திறந்து வைக்கிறார்.

---

5. இலங்கை – இந்தியா கூட்டுகடற்படை பயிற்சி – ஸ்லைநெக்ஸ், 07–10 மார்ச் 2022

இந்தியா– இலங்கை இடையே 9ஆவது கூட்டு கடற்படை பயிற்சி இன்று தொடங்கி வரும் 10ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இரண்டு கட்டங்களாக இந்தப் பயிற்சி நடத்தப்பட உள்ளது. முதல்கட்டப் பயிற்சி விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. அதன்பின் இரண்டாம் கட்ட பயிற்சி வங்காள விரிகுடாவில் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

இலங்கை கடற்படையின், ரோந்துக்கப்பலான LLNS சூரலா, இந்திய கடற்படையின் INS கிர்ச் கப்பல் ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. முன்னதாக கடந்த 2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டு கடற்படை பயிற்சி திரிகோணமலையில் நடைபெற்றது.

இருநாட்டு கடற்படைகளுக்கு இடையே புரிந்துணர்வு, அனுபவ பகிர்வு, கடல்சார் நடவடிக்கைகள், ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் இக்கூட்டு கடற்படை பயிற்சி நடைபெறுகிறது.

---

1. ஐஐடி ரூர்க்கியானது எந்நிறுவனத்துடன் இணைந்து 'ரூர்க்கி நீர் மாநாட்டை' ஏற்பாடு செய்துள்ளது?

அ) NITI ஆயோக்

ஆ) தேசிய நீரியல் நிறுவனம் ☑

இ) இந்திய கடற்படை

ஈ) இந்திய கடலோர காவல்படை

✓ மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், ஐஐடி ரூர்க்கியில், 'ரூர்க்கி நீர் மாநாட்டின்' 2ஆம் பதிப்பை தொடங்கி வைத்தார். இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – ரூர்க்கியும் தேசிய நீரியல் நிறுவனமும் இணைந்து, "Water Security for Sustainable Development" என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தன. தேசிய நீரியல் நிறுவனம் என்பது ஜல்சக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

---

2. 'தெய்யம்' அல்லது 'காளியாட்டம்' என்பது பின்வரும் எந்த மாநிலத்தில் நடத்தப்படும் ஒரு சடங்கு நடனமாகும்?

அ) கர்நாடகா

ஆ) கேரளா ☑



இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மேற்கு வங்காளம்

✓ 'தெய்யம்' அல்லது 'காளியாட்டம்' என்பது கேரளத்தில் நடத்தப்படும் எண்ணூறு ஆண்டுகள் பழமையான ஒரு சடங்கு நடனமாகும். இது நாட்டுப்புற நடனங்கள் மற்றும் கலைகளை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. இது பண்டைய பழங்குடி கலாசாரங்களை வெளிப்படுத்துகிறது. இந்தத் திருவிழாவின்போது பலவகையான 'தெய்யங்கள்' நிகழ்த்தப்படுகின்றன.

✓ கேரளத்தின் கண்ணூரில் நடைபெறும் காளியாட்டம் திருவிழாவில், 'அக்னி கண்டகர்ணன்' என்ற ஒருவகை தெய்யம் என்ற சடங்கு நடனம் தொடங்கியது.

---

3. 'ஜன் ஔஷாதி பால மித்ரா' என்ற திட்டத்தின் நோக்கம் என்ன?

அ) PMBJP திட்டம் பற்றி குழந்தைகளுக்குக் கற்பித்தல் ☑

ஆ) சிறார்களுக்கு மானியவிலையில் மருந்துகள் வழங்கல்

இ) கருவுற்றிருக்கும் பெண்களுக்கு மானிய விலையில் மருந்துகள் வழங்குதல்



ஈ) PMBJP–க்கான முதலீட்டை ஊக்குவித்தல்

✓ 'ஜன் ஔஷாதி திவாஸ்' வாரவிழாவையொட்டி, நாடு முழுவதும் 75 இடங்களில் 'ஜன் ஔஷாதி பால மித்ரா' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பிரதமர் பாரதிய ஜன் ஔஷாதி பரியோஜனாவின் நன்மைகளைப்பற்றி சிறார்களுக்குக் கற்பிப்பதற்காக 'ஜன் ஔஷாதி திட்டத்துடன் சிறார்களை 'பால மித்ரா'க்களாக ஈடுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

4. 'சுதேச தர்ஷன் விருதுகளை' நிறுவியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) வெளியுறவு அமைச்சகம்

ஆ) சுற்றுலா அமைச்சகம் ☑

இ) கலாசார அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ நடுவண் சுற்றுலா அமைச்சகம் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் முன்னெடுப்புகளை அங்கீகரிப்பதற்காக 'சுதேச தர்ஷன் விருதுகளை' அமைத்துள்ளது. 'சுதேச தர்ஷன்' திட்டத்தின்கீழ், 500–க்கும் மேற்பட்ட சுற்றுலா தலங்களில் சுற்றுலா தொடர்பான உட்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் 31 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ₹5500 கோடிக்கு மேல் 76 திட்டங்களுக்கு அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

---

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'சாபோரிஜியா அணுமின் நிலையம்' அமைந்துள்ள நாடு எது?

அ) ரஷ்யா

ஆ) உக்ரைன் ☑



இ) ஆப்கானிஸ்தான்

ஈ) பெலாரஸ்

✓ சாபோரிஜியா அணுமின் நிலையமானது உக்ரைனின் ஒரு முக்கிய மின் விநியோகக் கட்டமைப்பு ஆகும். இந்த ஆலை 40–42 பில்லியன் kWh'ஐ உற்பத்தி செய்கிறது. இது உக்ரைனின் சராசரி ஆண்டு மின்சார உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. சமீபத்தில், ரஷ்ய இராணுவம் இதனைக் கைப்பற்றி ஷெல் தாக்குதலைத் தொடங்கியதாக உக்ரைன் கூறியது. இது ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமாகவும் உள்ளது.

---

6. ஒரு சமீப அறிக்கையின்படி, 2020இல் இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் யூடியூப் கிரியேட்டர் அமைப்பின் பங்களிப்பு என்ன?

அ) ₹1700 கோடி

ஆ) ₹3400 கோடி

இ) ₹6800 கோடி ☑



ஈ) ₹8500 கோடி

✓ தன்னாட்சிமிகு ஆலோசனை நிறுவனமான ஆக்ஸ்போர்டு எகனாமிக்ஸின் புதிய அறிக்கையின்படி, யூடியூப் உருவாக்கிய சுற்றுச்சூழல் அமைப்பு இந்திய GDP–க்கு ₹6,800 கோடி பங்களித்துள்ளது.

✓ 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் முழுநேர வேலைக்கு இணையான 683,900 பணிகளை யூடியூப் உருவாக்கி உள்ளது. இந்தியாவில் 100,000–க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைக்கொண்ட யூடியூப் சேனல்களின் எண்ணிக்கையானது 40,000 என்றும் அது கூறியுள்ளது.

---

7. 2022 – உலக பெண்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?



அ) Educate Organise and Agitate

ஆ) Gender Equality: March against Patriarchy

இ) Gender equality today for a sustainable tomorrow ☑

ஈ) Impact of COVID–19 on women

✓ பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மற்றும் அவர்களது சாதனைகளை முன்னிலைப்படுத்தும் நோக்கோடு பன்னாட்டு பெண்கள் நாள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.8 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. "Gender equality today for a sustainable tomorrow" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும்.

---

8. உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்க இந்தியா மேற்கொண்ட முயற்சியின் பெயர் என்ன?



அ) ஆபரேஷன் கங்கா ☑

ஆ) ஆபரேஷன் கியேவ்

இ) ஆபரேஷன் மாஸ்கோ

ஈ) ஆபரேஷன் பாரத்

✓ 'ஆபரேசன் கங்கா' என்பது உக்ரைனில் சிக்கித்தவிக்கும் இந்தியர்களை மீட்பதற்காக இந்திய அரசு மேற்கொண்ட ஒரு முயற்சியின் பெயராகும். இதுவரை, இந்தியா தனது நாட்டைச் சேர்ந்த 1,000–க்கும் மேற்பட்டவர்களை திரும்ப அழைத்து வந்துள்ளது. ஹங்கேரி, போலந்து, ருமேனியா மற்றும் ஸ்லோவாகிய குடியரசின் எல்லை வழியாக இந்தியர்களை வெளியேற்ற உதவுவதற்காக 24×7 கட்டுப்பாட்டு மையங்களையும் இந்தியா அமைத்துள்ளது.

---

9. குஜராத் பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நகரத்தில் (GIFT) அலுவலகத்தைத் திறக்கும் முதல் பலதரப்பு நிறுவனம் எது?

அ) WEF

ஆ) ILO

இ) புதிய வளர்ச்சி வங்கி ☑

ஈ) உலக வங்கி

✓ குஜராத் பன்னாட்டு நிதி தொழில்நுட்ப நகரத்தில் (GIFT) அலுவலகத்தைத் திறக்கும் முதல் பலதரப்பு நிறுவனமாக புதிய வளர்ச்சி வங்கி மாறவுள்ளது. புதிய வளர்ச்சி வங்கி ஆனது இந்தியாவில் உள்ள முக்கியமான உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு உதவுதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய நிதியுதவி உட்கட்டமைப்பு & மேம்பாட்டிற்கான நிறுவனத்துடன் கூட்டு சேரவும் அவ்வங்கி எண்ணுகிறது.

---

10. 2022–உலக மொபைல் மாநாடு நடந்த நகரம் எது?

அ) பாரிஸ்

ஆ) பார்சிலோனா ☑

இ) பெய்ஜிங்

ஈ) டோக்கியோ

✓ உலக மொபைல் மாநாடானது அண்மையில் ஸ்பெயினின் பார்சிலோனா நகரத்தில் தொடங்கியது. இந்த மாநாட்டில், உலகளாவிய மொபைல் பொருளாதார அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, உலகளவில் 5G இணைப்புகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 1 பில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ கடந்த 2021ஆம் ஆண்டில், மொபைல் தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகள் மட்டும் 4.5 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை ஈட்டியுள்ளன. இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதமாகும். இது 2025இல் $5 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியா–இலங்கை கூட்டு கடற்படை பயிற்சி தொடக்கம்

இந்தியா–இலங்கை இடையிலான 9ஆவது கூட்டு கடற் படை பயிற்சி தொடங்கியது.

இந்தியா–இலங்கை இடையிலான கூட்டு கடற்படை பயிற்சி 2 கட்டங்களாக நடக்கவுள்ளது. விசாகப்பட்டினம் துறைமுகத்தில் இது தொடங்கியது.

அதனைத்தொடர்ந்து வங்கக்கடலில் மார்ச் 9, 10ஆம் தேதிகளில் இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெற உள்ளது. இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் கிர்ச் கப்பல், இலங்கை கடற்படையின் ரோந்து கப்பலான எல்எல்என்எஸ் சூரலா ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. இருநாட்டு கடற்படைகளுக்கு இடையே புரிந்துணர்வு, அனுபவ பகிர்வு, கடல்சார் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படு –த்தும் நோக்கில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

---

2. உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டி: இந்தியா முதலிடம்...!

உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடந்தது. இதில் நேற்று நடந்த 25 மீ ரேபிட் பயர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவின் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ரிதம் சங்வான்– அனிஷ் பன்வாலா ஜோடி 17–7 என்ற புள்ளி கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை தனதாக்கியது.

இந்த போட்டியில் இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களை கைப்பற்றி பதக்கப்பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. நார்வே (3 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலம்) 2ஆவது இடத்தை பெற்றது. பிரான்ஸ் (3 தங்கப்பதக்கம் உள்ளிட்ட 20 பதக்கங்களுடன்) மூன்றாம் இடத்தைப் பிடித்தது.

இப்போட்டியில் மொத்தம் 60 நாடுகளைச் சேர்ந்த 500–க்கும் மேற்பட்ட வீரர்–வீராங்கனைகள் பங்கேற்றனர்.

---

3. நான்கு நாள் இந்தோ–பசிபிக் இராணுவ சுகாதாரக் கருத்தரங்கு: பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்

நான்கு நாட்கள் நடைபெறும் இந்தோ–பசிபிக் இராணுவ சுகாதாரக் கருத்தரங்கைப் (IPMHE), பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.

இந்தக் கருத்தரங்கைப் பாதுகாப்புப் படைகள் மருத்து சேவைகள் பிரிவு மற்றும் அமெரிக்க இந்தோ பசிபிக் கட்டுப்பாட்டு மையம் ஆகியவை இணைந்து நடத்துகிறது.

"கொந்தளிப்பான, நிச்சமற்ற, சிக்கலான உலகில் ராணுவ மருத்துவ நலன்" என்பதுதான் இந்த மாநாட்டின் கருப் பொருள். மார்ச்.10ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கருத்தரங்கு, இராணுவ மருத்துவப்பிரிவுகள் இடையே –யான ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. போர்க்கள மருத்துவப் பராமரிப்பு, மருந்துகள், போர்க்கள அறுவை சிகிச்சை, மயக்க மருந்து, விமானம் மற்றும் கடல்சார் மருத்துவ அவசரநிலை உட்பட பல விஷயங்கள் குறித்து இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில், 38–க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 600–க்கும் மேற்பட்ட இந்திய மற்றும் வெளிநாட்டு பிரதிகள் கலந்துகொள்கின்றனர். இந்த 4 நாள் கருத்தரங் –கில் 110 தலைப்புகளில் நிபுணர்கள், உயர் அதிகாரிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

---

4. மைக்ரோசாப்ட் நிறுவனம் இந்தியாவின் மிகப்பெரிய தரவு மையத்தை ஹைதராபாத்தில் அமைக்கவுள்ளது

தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட் இந்தியாவில் நான்காவது தரவு மையத்தை தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஹைதராபாத் தரவு மையம் இந்தியாவின் மிகப்பெரிய தரவு மையங்களுள் ஒன்றாக இருக்கும் எனவும் 2025 ஆம் ஆண்டில் இது செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மைக்ரோசாப்ட் ஏற்கனவே புனே, மும்பை மற்றும் சென்னை ஆகிய 3 இந்தியப் பிராந்தியங்களில் தரவு மையத்தைக் கொண்டுள்ளது.

---

5. ஆசியாவின் பெரிய இந்திய யானை உயிரிழப்பு

ஆசியாவின் மிகப்பெரிய யானையாக கருதப்படும் 69 வயதான 'நதுங்கமுவே இராஜா' 07–03–2022 அன்று உயிரிழந்தது.

கண்டியில் உள்ள பிரசித்தி பெற்ற பௌத்த ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் விழாவில் புனித புத்தரின் பல் இந்த யானை மீது வைத்து கொண்டு செல்லப்படும். இதற்காக இராஜா தனது நதுங்கமுவே கிராமத்தில் இருந்து 90 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கண்டிக்கு நடந்தே செல்லும். இந்த யானையின் தந்தம் 10.5 அடி நீளமாகும்.

---

6. நாட்டின் முதல் & மிகப் பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை தூத்துக்குடியில் முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்

தூத்துக்குடி ஸ்பிக் (SPIC) நிறுவனத்தின் தொழிற்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மு.க.ஸ்டாலின் 07.03.2022 அன்று தூத்துக்குடியில், SPIC நிறுவனத்தின் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பெரிய நீர் தேக்கத்தில் ₹150 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 42 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதனை தங்களுடைய தொழிற்சாலைகளிலேயே உபயோகப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தை திறந்து வைத்தார்.

இப்புதிய 25.3 MW DC / 22 MW AC திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின் நிலையத்திட்டம், நவீனகால பசுமை, நிலையான தொழில்நுட்பம் மற்றும் தன்னிறைவு பெற்ற ஆற்றல் உற்பத்தியை செயல்படுத்த SPIC நிறுவனத்தின் ESG உத்தியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மிதக்கும் சோலார் திட்டங்கள் பாரம்பரிய நில அடிப்படையிலான சோலார் ஆலைகளை விட அதிக உற்பத்தியை வழங்குவதோடு, ஆற்றல் உற்பத்தியை மேம்படுத்தி, விலைமதிப்பற்ற தண்ணீரை ஆவியாகாமல் சேமிக்கிறது. இச்சூரிய மின்சக்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின்சாரமும் 'SPIC' மற்றும் 'Greenstar' உரங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும்.

இந்த மிதக்கும் சூரியமின் நிலையம், நீர் குளிர்ச்சி விளைவை எளிதாக்கி, அதிக மின் உற்பத்திக்கு உதவுகிறது. சுத்தமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதைத் தவிர, நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் ஆவி ஆகாமல் 60% கட்டுப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் நன்மைக்கும் இந்தத் திட்டம் உதவுகிறது. இந்தத் திட்டம் இந்திய சூரிய ஆற்றல் மேம்பாட்டுத் துறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

"SPIC நிறுவனத்தின் மிதக்கும் சூரியமின் நிலையத் திட்டம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்தில் உள்ள தொழில்களை மேம்படுத்துவதோடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்றும் இலக்கை அடைவதற்கான ஒரு மைல்கல்லாக அமையும்" என்று தமிழ்நாடு அரசு குறிப்பிட்டுள்ளது.

---

7. உலக மகளிர் நாளன்று 2020, 2021 ஆண்டுகளுக்கா –ன தலைசிறந்த 29 பேருக்கு கௌரவம் மிக்க 'நாரி சக்தி' விருதுகளை மாண்புமிகு குடியரசு தலைவர் வழங்கினார்.

மகளிருக்கு அதிகாரமளித்தலுக்காக குறிப்பாக நலிந்த மற்றும் விளிம்பு நிலை பெண்களுக்கு சிறப்புமிக்க சேவைகள் செய்தவர்களின் மெச்சதக்க பணிகளை அங்கீகரிக்கும் விதமாக 29 பேருக்கு 28 விருதுகள் (2020 மற்றும் 2021–க்கு தலா 14) வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் கைவினைக்கலைஞர் ஜெயா முத்து, தோடா கைப்பின்னல் கலைஞர் தேஜம்மா ஆகியோர் 2020ஆம் ஆண்டுக்கான விருதினைக் கூட்டாகப் பெறுகிறார்கள்.

2021ஆம் ஆண்டுக்கு தமிழ்நாட்டைச்சேர்ந்த மனநல மருத்துவர் மற்றும் ஆய்வாளரான தாரா ரங்கசாமி விருது பெறுகிறார்.

1. இந்தியாவின் உள்நாட்டு, 'தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பின்' பெயர் என்ன?

அ) சக்தி

ஆ) கவாச் ☑

இ) வீரா

ஈ) பிரம்மா

✓ 'கவாச்' என்பது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு 'தானியங்கி இரயில் பாதுகாப்பு அமைப்பு' ஆகும். இது அண்மையில் தெற்கு மத்திய இரயில்வேயில் சோதனை செய்யப்பட்டது. மத்திய பட்ஜெட்டின்படி, 2022–23–இல் 2000 கிலோமீட்டர் ரயில்பாதை 'கவாச்' பாதுகாப்பின்கீழ் கொண்டுவரப்படும். 2012 முதல் இந்தியாவின் சொந்த தானியங்கி பாதுகாப்பு அமைப்பாக திகழ்ந்து வரும் இது, 'இரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு' என்ற பெயரிலிருந்து 'கவாச்' என மறுபெயரிடப்பட்டது.

---

2. கன்னியாகுமரி வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?



அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மேற்கு வங்காளம்

✓ தமிழ்நாட்டின் கன்னியாகுமரி வனவுயிரி சரணாலயத்தில் '*Glycosmis albicarpa*' என்ற புதிய ஜின் பெர்ரி இனம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்திய தாவரவியல் ஆய்வு மைய அறிவியலாளர்கள் குழு ஒரு தனித்துவமான பெரிய வெண்ணிறமுடைய பழ இனத்தை கண்டுபிடித்து உள்ளனர். இந்த இனம் தென்மேற்குத் தொடர்ச்சி மலைக –ளில் மட்டுமே காணப்படுகிறது. இது ஆரஞ்சு குடும்பமான '*Rutaceae*'ஐச் சேர்ந்தது.

---

3. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 176 (1) ஆனது எதனை கையாளுகிறது?



அ) இந்திய தேர்தல் ஆணையம்

ஆ) நிதி ஆணையம்

இ) நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல்

ஈ) ஈரவைகளிலும் ஆளுநரின் உரை ☑

✓ அரசியலமைப்புச்சட்டத்தின் 176(1) பிரிவானது, 'ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பின்னும் முதல் கூட்டத்தொடர் தொடங்கும்போதும், ஒவ்வோர் ஆண்டின் முதல் அமர்வின் போதும் மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுநர் உரையாற்ற வேண்டும்" எனக் கூறுகிறது.

✓ வழக்கமான ஆளுநர் உரையின்றி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரை நடத்துவது குறித்து தெலுங்கானா அரசு தனது முடிவை அறிவித்துள்ளதால் இது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது.

---

4. டெலிகாம் தகராறுகள் தீர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



அ) நீதிபதி இரஞ்சன் கோகோய்

ஆ) நீதிபதி சதாசிவம்

இ) நீதிபதி D N படேல் ☑

ஈ) நீதிபதி கே சந்துரு

✓ இந்திய அரசு தில்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி D N படேலை டெலிகாம் தகராறுகள் தீர்வு மற்றும் மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்துள்ளது.

✓ டெலிகாம் தகராறுகள் தீர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயமானது தொலைத்தொடர்பு ஆபரேட்டர்கள் மற்றும் நுகர்வோர் இடையே உள்ள தகராறுகளை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டது. உச்சநீதிமன்ற நீதிபதியாகவோ அல்லது உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக –வோ இருக்கும் ஒருவரை இந்தத் தீர்ப்பாயம் தனது தலைவராகக் கொண்டுள்ளது.

---

5. 'மழைகுண்டுகள்' எனப்படும் அசாதாரண மழையால் பாதிக்கப்பட்ட நாடு எது?



அ) ரஷ்யா

ஆ) உக்ரைன்

இ) ஆஸ்திரேலியா ☑

ஈ) பெலாரஸ்

✓ ஆஸ்திரேலியாவை 'மழைகுண்டுகள்' தாக்கியதால், அந்நாட்டின் மூன்றாவது அதிக மக்கள்தொகைகொண்ட நகரமான பிரிஸ்பேன் மழையால் மிகவும் பாதிக்கப்பட்டது, இது கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் வரலாறு காணாத வெள்ளத்தைக் கொண்டுவந்து எட்டு பேரைக்கொன்றது.

✓ பிரிஸ்பேன் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட வெள்ளம் கடந்த 2011ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்படும் மிக மோசமான வெள்ளமாகக் கூறப்படுகிறது. பிரிஸ்பேன் மீது பொழிந்த இம்மழைப்பொழிவு அசாதாரணமானதாகும்; எனவே இது, 'மழைகுண்டு' என்று அழைக்கப்படுகிறது.

---

6. 22 செயற்கைக்கோள்களை விண்வெளியில் நிலை நிறுத்துவதற்காக ஏவுகலத்தை ஏவிய நாடு எது?



அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) அமெரிக்கா

இ) சீனா ☑

ஈ) ரஷ்யா

✓ 22 செயற்கைக்கோள்களை விண்வெளியில் நிலைநிறு –த்துவதற்காக சீனா சமீபத்தில் லாங்மார்ச்–8 ஏவுகலத்தை ஏவியது; ஒரே ராக்கெட்மூலம் ஏவப்பட்ட அதிக விண்கலம் என்ற உள்நாட்டு சாதனையை சீனா படைத்தது.

✓ இந்தச் செயற்கைக்கோள்கள் வணிக நோக்கிலான தொலையுணரி சேவைகள், கடற்சூழல் கண்காணிப்பு, காட்டுத் தீ தடுப்பு மற்றும் பேரிடர் தணிப்பு ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும்.

---

7. 2022 – ஜன் ஔஷாதி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Jan Aushadhi–Jan Upyogi ☑

ஆ) Atmanirbhar and Affordable Aushadhi

இ) Awareness of Jan Aushadhi Pariyojana

ஈ) Leaving No one Behind

✓ மருந்துத் துறையின்கீழ் இயங்கும் இந்திய மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் பணியகம் ஜன் ஔஷாதி திவாஸ் வாரத்தை மார்ச் 7ஆம் தேதி முக்கிய நிகழ்வாகக் கொண்டாடியது. நான்காவது ஜன் ஔஷாதி திவாஸின் கருப்பொருள், "ஜன் ஔஷதி–ஜன் உப்யோகி" ஆகும்.

✓ 'பிரதம மந்திரி பாரதிய ஜன் ஔஷாதி பரியோஜனா' ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மக்களுக்கு மலிவு விலையில் மருந்து எளிதில் சென்றடைவதை உறுதி செய்கிறது. 2025 மார்ச் இறுதிக்குள் பிரதம மந்திரி பாரதிய ஜன் ஔஷாதி மையங்களின் எண்ணிக்கையை 10,500 ஆக அதிகரிக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

8. Geostationary Operational Environmental Satellite (GOES–T) செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?

அ) ரஷ்யா

ஆ) சீனா

இ) அமெரிக்கா ☑



ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ அமெரிக்க தேசிய பெருங்கடல் & வளிமண்டல நிர்வாகம் (NOAA) Geostationary Operational Environmental Satellite (GOES–T) செயற்கைக்கோளை ஏவியது. இது யுனைடெட் லாஞ்ச் அலையன்ஸ் அட்லஸ் V ஏவுகலத்தில் ஏவப்பட்டது.

✓ GOES–T என்பது GOES–R வரிசையின் ஓர் அண்மைய விண்கலமாகும். புவியின் வானிலை & காலநிலையை ஆய்வுசெய்வதற்காக பயன்படுத்தப்படும்.

---

9. 'Remove Laws that Harm; Create Laws that Empower' என்பது மார்ச்.1 அன்று கொண்டாடப்படுகிற எந்த நாளின் கருப்பொருளாகும்?

அ) பாகுபாடுகள் ஒழிப்பு நாள் ☑



ஆ) உலக எய்ட்ஸ் நாள்

இ) உலக சமத்துவ நாள்

ஈ) உலக சமூக நீதி நாள்

✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.1 அன்று UNAIDSஆல் உலகம் முழுவதும் 'பாகுபாடுகள் ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற–து. 2030ஆம் ஆண்டுக்குள் AIDS'ஐ ஒரு பொதுநல அச்சுறுத்தலாக எண்ணி அதனை முடிவுக்குக்கொண்டு வருவதை நோக்கமெனக்கொண்ட ஐக்கிய நாடுகளின் அமைப்புதான் இந்த UNAIDS.

✓ "Remove Laws that Harm; Create Laws that Empower" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில்வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

10. 'தேசிய பாலினக்குறியீடு' மற்றும் 'மாநில ஆற்றல் மற்றும் காலநிலைக்குறியீடு' ஆகியவை கீழ்காணும் எந்த நிறுவனத்தின் வரவிருக்கும் முயற்சிகளாகும்?

அ) ஐநா வளர்ச்சித் திட்டம்

ஆ) NITI ஆயோக் ☑

இ) UNICEF

ஈ) பொருளாதார புலனாய்வு பிரிவு

✓ தேசிய பாலினக் குறியீட்டை உருவாக்கும் பணியில் NITI ஆயோக் ஈடுபட்டுள்ளது; இது பாலினம் தொடர்பான கொள்கை நடவடிக்கையை ஆதரிக்கும். மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கட்டமைப்பிற்கு ஏற்றவாறு இது சீரமைக்கப்படும். NITI ஆயோக், 'மாநில ஆற்றல் மற்றும் காலநிலை குறியீட்டெண்' வரைவை பல்வேறு அளவுருக்–களில் மாநிலங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக உருவாக்கியுள்ளது.

✓ மாநிலங்கள் தங்கள் ஆற்றல் வளங்களை திறம்பட நிர்வகிப்பதற்கும் மக்களுக்கு சிறந்த ஆற்றல் அணுகலை வழங்குவதற்கும் இந்தக் குறியீடு உதவும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இரண்டு இலட்சம் தடுப்பூசி செலுத்தி சென்னை செவிலியர் சாதனை

சென்னை பாடியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராக பணியாற்றுபவர் சிவசங்கரி. கொரோனா தடுப்புப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் இதுவரை 2 இலட்சத்து 306 கொரோனா தடுப்பூசிகள் செலுத்தியுள்ளார்.

இதேபோல் திருச்சி பீமன் நகர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியராக பணியாற்றி வரும் தாரணி என்பவர் 302,005 தடுப்பூசிகள் செலுத்தி இருக்கிறார்.

தேசிய அளவில் சாதனை படைத்த இந்த இரண்டு செவிலியர்களுக்கும் தில்லியில் சுகாதாரத்துறை சார்பில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

---

2. உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் நான்கு தங்கப்பதக்கங்களுடன் இந்தியா முதலிடம்

எகிப்தின் கெய்ரோ நகரில் உலக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்றது. இதில், இந்திய அணியினர் சிறப்பாக செயல்பட்டு பதக்கங்கள் வென்றனர். கடைசி நாளான இன்று 25 மீட்டர் ரேபிட் பயர் பிஸ்டல் கலப்பு அணிகளுக்கான போட்டியில் இந்தியாவின் ரிதம் சங்வான், அனிஷ் பன்வாலா ஜோடி தங்கம் வென்று அசத்தியது. தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் இவர்கள் இருவரும் 17–7 என தாய்லாந்து ஜோடியை வென்றனர்.

25 மீட்டர் ரேபிட் பயர் பிஸ்டர் ஆண்கள் அணிகள் பிரிவில் இந்திய அணி, ஜெர்மனியிடம் தோல்வியடைந்ததால் வெள்ளிப் பதக்கம் வென்றது.

இதன்மூலம் 4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் இந்தியா

முதலிடத்தை பிடித்தது. மூன்று தங்கம், ஒரு வெள்ளி, இரு வெண்கலப்பதக்கங்களுடன் நார்வே அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. பிரான்ஸ் அணி 3 தங்கம் உள்ளிட்ட 20 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தை பிடித்தது.

இப்போட்டியில் மொத்தம் 60 நாடுகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட வீரர்–வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 22 நாடுகள் பதக்கங்கள் வென்றுள்ளன.

---

3. சந்திரனில் முதன்முறையாக NASA சார்பில் 4ஜி நெட்வொர்க்: இந்தியரான நிஷாந்த் பத்ரா அமைக்கிறார்

NASA விண்வெளி அமைப்புக்காக சந்திரனில் முதல் முறையாக 4ஜி நெட்வொர்க்கை ஏற்படுத்தும் பணிக்கு தில்லியில் பிறந்த நிஷாந்த் பத்ரா தலைமை வகிக்கிறார்.

தில்லியில் 1978இல் பிறந்தவர் நிஷாந்த் பத்ரா. இந்தூரில் உள்ளதேவி அகில்யா பல்கலைக்கழகத்தில் கம்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் துறையில் பட்டம் பெற்ற இவர், பிறகு இன்சீட் பிசினஸ் பள்ளியில் எம்பிஏ முடித்தார்.

இதையடுத்து அமெரிக்காவில் உள்ள சதர்ன் மெதடிஸ்ட் பல்கலையில் தொலைத்தொடர்பு துறையிலும் கணினி அறிவியல் பாடத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றார்.

தற்போது பின்லாந்து நாட்டின் எஸ்பூ நகரில் வசிக்கும் நிஷாந்த் பத்ரா, நோக்கியா நிறுவனத்தில் உத்தி மற்றும் தொழில்நுட்ப பிரிவுக்கான சர்வதேச தலைவராக உள்ளார். மேலும் 9 நோபல் பரிசுகளையும் ஐந்து டூரிங் விருதுகளையும் பெற்றுள்ள 'பெல் லேப்ஸ்' நிறுவனத்தில் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சிக்கு தலைமை வகிக்கிறார்.

NASA விண்வெளி அமைப்புக்காக சந்திரனில் முதல் முறையாக 4ஜி நெட்வொர்க்கை ஏற்படுத்தும் பணிக்கு நிஷாந்த் பத்ரா தலைமை வகிக்கிறார்.

---

4. உலக மகளிர் நாளை முன்னிட்டு 29 பெண்களுக்கு குடியரசு தலைவர் விருது

சர்வதேச மகளிர் தினமான நேற்று, நாட்டின் தலைசிறந்த 29 பெண்களுக்கு பெண் சக்தி விருதுகளை (நாரி சக்தி புரஸ்கார்) குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்படும் பெண்களை கவுரவிக்கும் வகையில் மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆண்டுதோறும் பெண்சக்தி விருது வழங்கப்படுகிறது. தொழில்முனைவு, வேளாண்மை, சமூகப் பணி, கல்வி, இலக்கியம், மொழியியல், கலைகள், அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல், கணிதம், ஊனமுற்றோர் உரிமைகள், வனவிலங்குகள் பாதுகாப்பு எனப் பல்வேறு துறைகளை சேர்ந்த பெண்கள் இவ்விருதுக்கு தேர்வு செய்யப்படுகின்ற –னர்.

இந்நிலையில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான பெண் சக்தி விருது வழங்கும் விழா, சர்வதேச மகளிர் தினமான நேற்று குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்தது. இதில் நாட்டின் தலைசிறந்த 29 பெண்களுக்கு பெண் சக்தி விருதுகளை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

3 தமிழக பெண்களுக்கு விருது

தமிழகத்தைச் சேர்ந்த 3 பெண்களுக்கும் பெண் சக்தி விருது வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த தோடா எம்பிராய்டரி கைவினைஞர்களான ஜெயமுத்து, தேஜம்மா ஆகிய இருவருக்கும் 2020–ம் ஆண்டுக்கான பெண் சக்தி விருது வழங்கப்பட்டது. மனநல மருத்துவரும் ஆராய்ச்சியாளருமான தாரா ரங்கசாமிக்கு 2021–ம் ஆண்டுக்கான பெண் சக்தி விருது வழங்கப்பட்டது.

ஜெயமுத்து, தேஜம்மா ஆகிய இருவரும் பள்ளி நாட்களில் இருந்து தோடா எம்பிராய்டரி கொண்ட சால்வைகள் மற்றும் ஆடைகளை உருவாக்கி வருகின்றனர். டாக்டர் தாரா ரங்கசாமி, சென்னையில் உள்ள ஸ்கிசோப்ரினியா ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ஸ்கார்ப்) இணை நிறுவனர் மற்றும் துணைத் தலைவராக உள்ளார்.

---

5. திறன் மேம்பாட்டுக்கழகம் பிரிட்டிஷ் கவுன்சில் ஒப்பந்தம் – 'நான் முதல்வன்' திட்டத்துக்காக முதல்வர் தலைமையில் கையெழுத்தானது

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளையோர்க்கான புதிய முன்னெடுப்பாக, 'நான் முதல்வன்' என்ற திறன் மேம்பாட்டு வழிகாட்டுதல் திட்டத்தை மார்ச்.1ஆம் தேதி, முதல்வர் மு க ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக தமிழக இளைஞர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுவது மட்டுமின்றி, நேர்முகத் தேர்வுகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், அவர்களின் தனித்திறன்களை மெருகேற்றவும் பிரிட்டிஷ் கவுன்சிலுடன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள திட்டமிட்டது.

இதையடுத்து, தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் தலைமையில், பிரிட்டிஷ் உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லீஸ் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம் இளைஞர்களின் உயர்கல்வி, திறன் மேம்பாடு, கலை மற்றும் பண்பாடு ஆகியவை வலுப்படுத்தப்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

6. பெண்கள், குழந்தைகளுக்காக பணியாற்றிய கிரிஜா குமார்பாபுவுக்கு 2022ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருது: தங்கப்பதக்கம், ₹1 லட்சத்துக்கான காசோலையை மு க ஸ்டாலின் வழங்கினார்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காகப் பணியாற்றிய கிரிஜா குமார்பாபுவுக்கு இந்த ஆண்டுக்கான ஔவையார் விருதை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு, பெண்களுக்கான சேவையில் சிறந்துவிளங்கும் மகளிரை

கௌரவிக்கும் வகையில், சமூக நலத்துறைமூலம் ஔவையார் விருது வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் அதிகாரம், மதநல்லிணக்கம், மொழி, கலை, அறிவியல், ஊடகவியல், நிர்வாகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியதுடன், சேவை மனப்பான்மையோடு தொண்டாற்றியவர்களைப் பாராட்டி எட்டு கிராம் தங்கப் பதக்கம், ₹1 லட்சத்துக்கான காசோலை, பாராட்டுப்பத்திரம் அளிக்கப்படுகிறது.

அந்த வகையில் 2022ஆம் ஆண்டுக்கான ஔவையார் விருதை, தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கிரிஜா குமார்பாபுவுக்கு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார். பெண்கள், குழந்தைகளுக்கு இவர் ஆற்றிய சேவை களைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது

2020–21ஆம் ஆண்டுக்கான 'எம்ஜிஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர்' விருதுகளும் வழங்கப்பட்டன. அதன்படி கருப்பு கவுனி ரகம் சாகுபடியில் அதிக மகசூல் செய்து மாநில அளவில் முதலிடம் பெற்ற நாமக்கல்லைச் சேர்ந்த செ மூர்த்திக்கு விருதுடன் பரிசுத்தொகையாக ₹1 லட்சத்துக்கான காசோலையையும், வாசனை சீரக சம்பா சாகுபடியில் அதிக மகசூல் செய்து இரண்டாம் இடம் பெற்ற திருநெல்வேலியைச்சேர்ந்த கோ.பொன்னு புதியவனுக்கு விருதுடன் பரிசுத்தொகை ₹75,000–க்கான காசோலை –யையும், ஆத்தூர் கிச்சடி சம்பா சாகுபடியில் அதிக மகசூல் செய்து 3ஆம் இடம் பெற்ற திருநெல்வேலியைச் சேர்ந்த பி லட்சுமி தேவிக்கு விருதுடன் ₹50 ஆயிரத்துக்கான காசோலையையும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

---

7. அடிப்படை அம்சங்களைக் கொண்ட கைப்பேசிக்கும் UPI வசதி

அடிப்படை அம்சங்களைக்கொண்ட கைப்பேசி மூலமாகவு –ம் UPI பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான வசதியை இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தொடக்கிவைத்தார். மேலும் அவர் கூறியதாவது:

தற்போது வரை UPI பணப்பரிவர்த்தனை வசதியானது திறன்பேசி பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே கிடைத்து வருகிறது. அதன் காரணமாக கிராமப்பகுதிகளில் வசிக்கும் சமூகத்தின் விளிம்புநிலை மக்களை அந்த வசதி சென்றடைய முடியவில்லை. திறன்பேசிகளின் விலை தொடர்ந்து குறைந்தாலும், அவர்களுக்கு UPI வசதி சென்று அடையவில்லை.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'UPI 123பே' வசதி மூலமாக அடிப்படை அம்சங்களைக்கொண்ட கைப்பேசியைப் பயன்படுத்துவோரும் பணப் பரிவர்த்த –னையை மேற்கொள்ள முடியும். இது நிதி சேவைகளை அனைத்துத்தரப்பு மக்களுக்கும் கொண்டுசேர்க்க உதவும்.

நடப்பு 2021–22ஆம் நிதியாண்டில் இதுவரை ₹76 லட்சம் கோடிக்கு UPI பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட் –டுள்ளன. கடந்த நிதியாண்டில் ₹41 இலட்சம் கோடி அளவுக்கு மட்டுமே பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ள –ப்பட்டிருந்தன. விரைவில் இது ₹100 இலட்சம் கோடியை எட்டும் என அவர் கூறினார்.

1. 'SLINEX' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான இருதரப்பு கடல்சார் பயிற்சியாகும்?

அ) ஓமன்

ஆ) சிங்கப்பூர்

இ) இலங்கை ☑



ஈ) ஜப்பான்

✓ இந்தியா–இலங்கை இடையே 9ஆவது கூட்டு கடற்படை பயிற்சி 2 கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. முதற்கட்டப் பயிற்சி விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெற உள்ளது. அதன்பின் இரண்டாம்கட்ட பயிற்சி வங்காள விரிகுடாவில் நடைபெறவுள்ளது.

✓ இலங்கை கடற்படையின், ரோந்துக் கப்பலான LLNS சயூரலா, இந்திய கடற்படையின் INS கிர்ச் கப்பல் ஆகிய –வை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. இருநாட்டு கடற்ப –டைகளுக்கு இடையே புரிந்துணர்வு, அனுபவ பகிர்வு, கடல்சார் நடவடிக்கைகள், ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் இக்கூட்டு கடற்படை பயிற்சி நடைபெறுகிறது.

---

2. எந்த நகரத்தின் மெட்ரோ திட்டத்தை பிரதமர் சமீபத்தில் தொடங்கிவைத்தார்?

அ) மைசூரு

ஆ) புனே ☑

இ) கோயம்புத்தூர்

ஈ) திருவனந்தபுரம்

✓ புனே மெட்ரோ திட்டம் இந்திய அரசு மற்றும் மகாராஷ்டிரா அரசாங்கத்தின் SPV (சிறப்பு நோக்கத்திற்கான ஊர்தி) MAHA மெட்ரோவால் மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 32.2 கிமீட்டர் புனே மெட்ரோ இரயில் திட்டத்தில், 12 கிமீ தூரத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மொத்தச் செலவு ₹11,400 கோடி.

---

3. 2022இல் இந்தியா குளோபல் போரம் நிகழ்வு நடக்கும் இடம் எது?

அ) சென்னை

ஆ) பெங்களூரு ☑

இ) வாரணாசி

ஈ) காந்தி நகர்

✓ இந்தியா குளோபல் ஃபோரம் (IGF) நிகழ்ச்சி பெங்களூரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதோடு, 30 யூனிகார்ன் நிறுவனங்களின் நிறுவனர்கள் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் கலந்துரையாட உள்ளார். இந்நிகழ்வில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளியுறவு மற்றும் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி மற்றும் தொழிற்துறையைச் சேர்ந்த CEO–க்கள் மற்றும் தலைவர்கள் பங்கேற்பார்கள்.

---

4. உளவு செயற்கைக்கோள் அமைப்பை அண்மையில் பரிசோதித்த நாடு எது?

அ) வட கொரியா ☑



ஆ) உக்ரைன்

இ) ரஷ்யா

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ வட கொரியாவின் பிராந்திய இராணுவ அதிகாரிகள் எறி கணை ஏவப்பட்டதாக அறிவித்ததை அடுத்து, உளவு செயற்கைக்கோள் அமைப்புகளுக்கான பரிசோதனையை நடத்தியதாக வடகொரியா கூறியது. இது கடந்த ஒரு வார காலத்தில் செயற்கைக்கோள் கருவிகளை பரிசோதிப்பத –ற்காக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஏவுதலாகும். மேலும் இந்த ஆண்டில் இது ஒன்பதாவது ஏவுதலாகும். இதற்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளன.

---

5. 'பள்ளி சுகாதார கிளினிக்குகளை'த் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) ஒடிஸா



ஆ) குஜராத்

இ) புது தில்லி ☑

ஈ) இராஜஸ்தான்

✓ தில்லி அரசு சமீபத்தில் 20 அரசுப்பள்ளிகளில் தனிநபர் மருத்துவமனைகளைத் திறந்து வைத்துள்ளது. அவற்றை துணை முதலமைச்சரும், கல்வியமைச்சருமான மணீஷ் சிசோடியா திறந்து வைத்தார். இந்தக் கிளினிக்குகள் சிறார்களின் உடல் மற்றும் மனநலனை உறுதிசெய்வதற் –கான வழக்கமான சுகாதார பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கும்.

---

6. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'ஜரோக்கா' என்பது எந்தத் துறைசார்ந்த கொண்டாட்டமாகும்?

அ) கலை மற்றும் கலாசாரம் ☑



ஆ) இலக்கியம்

இ) ஆயுஷ்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

✓ மத்திய கலாசார அமைச்சகம் மற்றும் ஜவுளி அமைச்சகம் இணைந்து "ஜரோகா–இந்திய கைவினைப்பொருட்கள் / கைத்தறி, கலை மற்றும் கலாசாரத்தின் தொகுப்பு" ஆகியவற்றை ஏற்பாடு செய்கின்றன. 'ஜரோக்கா' என்பது பாரம்பரிய இந்திய கைவினைப்பொருட்கள், கைத்தறி & கலை மற்றும் கலாச்சாரத்தின் கொண்டாட்டமாகும்.

✓ நாடு முழுவதும் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 16 இடங்களில் நடைபெறவுள்ளது. இந்தக் கொண்டாட்டத்தின்கீழ் முதல் நிகழ்வு மத்திய பிரதேசத்தின் போபாலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

7. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'டிரெல்லிஸ் அமைப்பு' எந்தத் துறையுடன் தொடர்புடையது?

அ) ஆட்டோமொபைல்



ஆ) வேளாண்மை ☑

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) வங்கியியல்

✓ நிலையான வேளாண்மையின் ஒருபகுதியாக, 20 தசம நிலத்தில் நான்கு தூண்கள், மூங்கில் கம்புகள் மற்றும் கயிறுகளை பயன்படுத்தி குறுக்குநெடுக்காக அடிக்கப்பட்ட ஒரு தட்டி அமைப்பு தயாரிக்கப்படுகிறது.

✓ குறுக்குநெடுக்காக அடிக்கப்பட்ட தட்டி அமைப்பில் செடிகள் குறிப்பாக கொடிகள் செங்குத்தாக வளர்ந்ததால், தண்டுகள், பூக்கள் & பழங்கள் அழுகும் வாய்ப்புகள் மிகக் குறைவு. ஒடிஸாவின் பல பழங்குடி கிராமங்களில் இந்த அமைப்பு சிறப்பாக செயல்பட்டுள்ளது.

---

8. 'கரேவாஸ்' என்பது எந்த மாநிலத்தில் காணப்படும் வளமான வண்டல்மண் படிவுகளாம்?

அ) உத்தர பிரதேசம்



ஆ) மேற்கு வங்கம்

இ) ஜம்மு–காஷ்மீர் ☑

ஈ) பீகார்

✓ காஷ்மீர் பள்ளத்தாக்கின் மிகவும் வளமான வண்டல்மண் படிவுகள் 'கரேவாஸ்' என்று அழைக்கப்படுகின்றன.

✓ இந்தப்பீடபூமிகள் 13,000–18,000 மீட்டர் தடிமன்கொண்ட வண்டல்மண் மற்றும் மணற்கல் & மண்கல்போன்ற வண்டல் படிவுகளாகும். குங்குமப்பூ, பாதாம், ஆப்பிள் மற்றும் பல்வேறு பணப்பயிர்களை பயிரிடுவதற்கு ஏற்ற இடங்கள் இவை. வளர்ச்சி என்ற பெயரில் கரேவாக்கள் அழிக்கப்படுவதன் காரணமாக இது அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது.

---

9. MSME அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட 'SAMARTH' முன்னெடுப்பின் நோக்கம் என்ன?

அ) பெண்கள் தொழில்முனைவு ☑



ஆ) மதிப்புக்கூட்டல்

இ) சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவு

ஈ) GST–க்கான இணையதளம்

✓ மத்திய MSME அமைச்சகமானது சமீபத்தில் SAMARTH – பெண்களுக்கான சிறப்பு தொழில்முனைவு ஊக்குவிப்பு இயக்கத்தை அறிமுகப்படுத்தியது.

✓ SAMARTH'இன்கீழ், அமைச்சகத்தின் திறன்மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் ஏற்பாடு செய்யப்படும் இலவச திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் 20% இடங்கள், ஆர்வமுள்ள பெண் தொழில்முனைவோருக்கு ஒதுக்கப்படும்.

---

10. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு எது?

அ) ரஷ்யா



ஆ) அமெரிக்கா ☑

இ) சௌதி அரேபியா

ஈ) ஈரான்

✓ அமெரிக்காவிற்கு அடுத்ததாக உலகில் கச்சா எண்ணெய் உற்பத்தியில் ரஷ்யா 2ஆவது பெரிய நாடாக உள்ளது. ரஷ்யா, நாளொன்றுக்கு 11 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை உற்பத்தி செய்கிறது.

✓ ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதி பாதி (ஒரு நாளைக்கு 2.5 மில்லியன் பீப்பாய்கள்) – ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இதில் மூன்றில் ஒரு பங்கு பெலாரஸ் வழியாக டுருஷ்பா பைப்லைன் வழியாக ஐரோப்பாவிற்கு வருகிறது. அண்மையில் G7 நாடுகள், ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதிக்கு வரம்புகளை விதிக்க வேண்டும் என UK முன்மொழிந்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முதலமைச்சர் மு கஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறையினர் மாநாடு இன்று தொடக்கம்

முதலமைச்சர் மு கஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாடு இன்று தொடங்குகிறது.

மாநிலம் முழுவதும் அரசின் திட்டங்களை தொய்வின்றி செயல்படுத்துவது குறித்தும், மாநிலத்தில்சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்காகவும், ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகளுக்கான மாநாடு நடத்தப்படும். கடந்த சில ஆண்டுகளாக இந்த மாநாடு நடத்தப்படாத நிலையில், இந்த ஆண்டு மாநாட்டை நடத்த தமிழக அரசு முடிவெடுத்தது.

அரசின் அறிவிப்புகள், திட்டங்கள்

கடந்த பத்து மாதங்களாக தமிழ்நாடு அரசு பல்வேறு புதிய அறிவிப்புகளையும், திட்டங்களையும் வெளியிட்டு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் ஆளுநர் உரை, முதல்வரின் அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, அமைச்சர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் என மொத்தம் 1,704 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 80 சதவீதத்துக்கும் மேலானவற்றுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் தோறும் இந்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அறிந்து கொள்ளவும், அடுத்தக்கட்ட செயல்பாடுகள் குறித்தும் மாநாட்டில் ஆலோசிக்கப்படும். இம்மாநாட்டில் முதல்முறையாக வனத்துறை அதிகாரிகளும் பங்கேற்க உள்ள நிலையில், வனத்துறை தொடர்பான திட்டங்களையும் முதலமைச்சர் ஆய்வுசெய்யவுள்ளார்.

---

2. சுகாதாரத் திட்டங்கள்: ஐந்து ஆட்சியர்களுக்கு விருது!

தமிழ்நாடு சுகாதாரத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய மாவட்ட ஆட்சியர்களுக்கான விருதை சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

அதன்படி, 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான விருதுகளைப் பெறும் மாவட்ட ஆட்சியர்களி –ன் பெயர்களை தமிழ்நாடு அரசின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

2016–17ஆம் ஆண்டிற்கான விருதை விருதுநகர் மாவட்ட ஆட்சியராக இருந்த சிவஞானத்திற்கும்,

2017–18ஆம் ஆண்டிற்கான விருதை திருவாரூரில் ஆட்சியராக இருந்த நிர்மல் ராஜுக்கும்,

2018–2019ஆம் ஆண்டிற்கான விருதை சிவகங்கை மாவட்ட ஆட்சியராக இருந்த ஜெயகாந்தனுக்கும்,

2019–20ஆம் ஆண்டுக்கான விருதை விருதுநகர் ஆட்சியர் சிவஞானத்துக்கும்,

2020–21ஆம் ஆண்டிற்கான விருதை திருவண்ணாம –லை மாவட்ட ஆட்சியராக இருந்த கந்தசாமிக்கும் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. திருப்பெரும்புதூரில் ₹500 கோடியில் புதிய தொழில் பிரிவுகள்: முதலமைச்சர் மு கஸ்டாலின் தொடக்கி வைத்தார்

சென்னையை அடுத்த திருப்பெரும்புதூரில் 200 பேருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் ₹500 கோடி மதிப்பிலான புதிய தொழில் பிரிவுகளை முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

சென்னையை அடுத்த திருப்பெரும்புதூரில் செயின்ட் – கோபைன் என்ற புகழ்பெற்ற கண்ணாடி உற்பத்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்துக்கு கடந்த 1998–ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் அடிக்கல்நாட்டப்பட்டது. கடந்த 2000ஆம் ஆண்டில் கண்ணாடி உற்பத்தி தொடங்கப்பட்டது. 177 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள செயின்ட்–கோபைன் நிறுவனம் ₹3,750 கோடியை முதலீடு செய்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இந்நிறுவனமானது, சுமார் ₹4,700 கோடி முதலீட்டைச் செய்து நேரடியாக 2,000 பேருக்கும், மறைமுகமாக 2,500 பேருக்கும் வேலைவாய்ப்புகளை அளித்து வருகிறது.

₹500 கோடி முதலீடு: திருப்பெரும்புதூரில் உள்ள செயின்ட்–கோபைன் வளாகத்தில் கண்ணாடி, முகம் பார்க்கும் கண்ணாடி, சூரிய ஆற்றல் கண்ணாடி, வெடி குண்டு தாக்குதலை சமாளிக்கும் வகையிலான பல்வேறு வகை கண்ணாடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மதிப்புகூட்டப்பட்ட 90% கண்ணாடிகள் இந்த வளாகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

4. உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக, முற்றிலும் மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனமாக தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டது.

இந்தக் கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொடக்க பங்கு மூலதனமாக ₹5,000 கோடியும், பெறப்படும் தொகையில் இருந்து ₹150 கோடி பங்குமூலதனத்தையும் கொண்டதாக இருக்கும். மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற அரசு அமைப்புகளுக்குச் சொந்தமான உபரிநிலம் மற்றும் கட்டட சொத்துக்களை பணமாக்கும் பணியை இந்தக் கழகம் மேற்கொள்ளும்.

2021–22 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பயன்படுத்தப்படாத மற்றும் குறைவான பயன்பாடு கொண்ட முக்கியமற்ற சொத்துக்களை பணமாக்குவதன் மூலம் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும்.

மத்திய நிதியமைச்சகத்தின் பொது நிறுவனங்கள் துறை இந்தக் கழகத்தை உருவாக்கி, அதன் நிர்வாகம் அமைச்சகமாகவும், செயல்படும்.

---

5. சென்னை ஐஐடி–வால்மார்ட் நிறுவனம் இடையே புரிந்துணர்வு

தொழில்நுட்பத்தின் புதிய பகுதிகளில் ஆராய்ச்சியை விரைவுபடுத்தவும், வால்மார்ட் பணியாளர்களுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்கவும், இந்தியாவில் உள்ள அந்த நிறுவனத்தின் சமூகப்பொறுப்புணர்வு திட்டங்களில் ஒத்துழைக்கவும், சென்னை ஐஐடி – வால்மார்ட் குளோபல் டெக் நிறுவனம் இடையே புரிந்துணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி சென்னை ஐஐடி மாணவர்களும், வால்மார்ட் குளோபல் டெக் பணியாளர்களும் ஆராய்ச்சித் திட்டங்களில் இணைந்து செயலாற்றுவர்.

---

1. இந்திய ரிசர்வ் வங்கியால் சமீபத்தில் தொடங்கப்பட்ட 'UPI123Pay' வசதியின் இலக்குப் பயனாளிகள் யார்?

அ) பார்வைக் குறைபாடுடையோர்

ஆ) கைபேசி பயனர்கள் ☑

இ) குழந்தைகள்

ஈ) மூத்த குடிமக்கள்

✓ RBI ஆளுநர் சக்திகாந்த தாஸ் 'UPI123Pay' எனப்படும் சாதாரண கைபேசிகளுக்கான UPI வசதியை அறிமுகம் செய்தார். 'டிஜிசாதி' என்ற டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்–காக 24×7 ஹெல்ப்லைனையும் அவர் தொடங்கினார்.

✓ 'UPI123Pay' ஆனது ஸ்கேன் செய்து பணஞ்செலுத்தும் சேவையைத்தவிர அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் சாதாரண கைபேசியைப் பயன்படுத்த வாடிக்கையாளர்க–ளை அனுமதிக்கும். இந்த வசதியைப் பயன்படுத்த வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக்கணக்கை சாதாரண கைபேசியுடன் இணைத்திருக்க வேண்டும்.

---

2. 'BBIN' மோட்டார் வாகன ஒப்பந்தத்தை செயல்படுத்துவ–தற்காக பின்வரும் எந்த நாடுகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?

அ) பூட்டான்–நேபாளம்

ஆ) வங்காளதேசம்–நேபாளம் ☑

இ) பூட்டான்–கம்போடியா–நேபாளம்

ஈ) வங்காளதேசம்–மியான்மர்–நேபாளம்

✓ இந்தியா, வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகியவை வங்க தேசம்–பூடான்–இந்தியா–நேபாளம் (BBIN) மோட்டார் வாகன ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துண–ர்வு ஒப்பந்தத்தை இறுதிசெய்துள்ளன. இந்தக்கூட்டத்தில் பூடான் பார்வையாளராக பங்கேற்றது.

✓ BBIN ஆனது பிராந்திய வர்த்தகம் மற்றும் இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "பரம் கங்கா" என்றால் என்ன?

அ) COVID தடுப்பு மருந்து

ஆ) கங்கை புத்துயிரளிப்புத் திட்டம்

இ) மீத்திறன் கணினி ☑

ஈ) கிரிப்டோ–நாணயம்

✓ தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷன் 1.66 பெடா பிளாப்ஸ் திறன்கொண்ட "PARAM Ganga" என்ற மீத்திறன் கணினியை நிறுவியுள்ளது.

✓ இது மின்னணுவியல் & தகவல்தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் அறிவியல் & தொழில்நுட்பத்துறை ஆகியவற்றால் கூட்டாக இயக்கப்படுகிறது. நவீன கணினி மேம்பாட்டு மையம் (C–DAC) மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூர் ஆகியவற்றால் இது செயல்படுத்தப்படுகிறது.

---

4. 'பால்–தாத்வாவ் படுகொலை' இன்றைய எந்த இந்திய மாநிலத்தில் நடைபெற்றது?

அ) குஜராத் ☑

ஆ) மேற்கு வங்கம்

இ) அஸ்ஸாம்

ஈ) உத்தரகாண்ட்

✓ குஜராத் மாநில அரசு 'பால்–தாத்வாவ்' படுகொலையின் 100ஆம் ஆண்டு நிறைவைக்குறிப்பிட்டு, இது "ஜாலியன் வாலாபாக்கை விடவும் மிகப்பெரிய படுகொலை" என்று கூறியது. அம்மாநிலத்தின் குடியரசு நாள் அலங்கார ஊர்தியிலும் இந்தப்படுகொலைகள் இடம்பெற்றிருந்தன.

✓ குஜராத் மாநிலத்தின் 'பால்–சிதாரியா' மற்றும் 'தத்வாவ்' கிராமங்களில் 1922 மார்ச்.7ஆம் தேதி இப்படுகொலை நடந்தது. மோதிலால் தேஜாவத் தலைமையிலான, 'ஏகி இயக்கத்தின்' ஒருபகுதியாக கிராமமக்கள் ஒன்றுகூடிய போது, ஆங்கிலேயர்களால் சுமார் ஆயிரம் பேர் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அதீத நிலவருவாய் வரிக்கு எதிராக போராட்டம் நடத்துவதே அவர்களின் நோக்கமாகும்.

---

5. 'கௌசல்யா மாத்ரித்வா யோஜனா' தொடங்கப்பட்ட இந்திய மாநிலம் எது?

அ) ஒடிஸா

ஆ) குஜராத்

இ) சத்தீஸ்கர் ☑

ஈ) இராஜஸ்தான்

✓ சத்தீஸ்கர் மாநில முதல்வர் பூபேஷ் பாகேல், 'கௌசல்யா மாத்ரித்வா யோஜனா' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டாவது பெண் குழந்தை பிறக்கும் பெண்களுக்கு 5000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். அவர், 'கன்யா விவாக யோஜனா' குறிப்பு ஏடு & சகி தொலைபேசி விவரக்கொத்தை வெளியிட்டார்.

---

6. "sun–to–liquid" எரிபொருளைப் பயன்படுத்தும் உலகின் முதல் வானூர்தி நிறுவனம் எது?

அ) ஜப்பான் ஏர்லைன்ஸ்

ஆ) கேத்தே பசிபிக் ஏர்வேஸ்

இ) சுவிஸ் ஏர்லைன்ஸ் ☑

ஈ) குவாண்டாஸ் ஏர்வேஸ்

✓ சுவிஸ் மற்றும் அதன் தாய் நிறுவனமான லுப்தான்சா குழுமம், அதன் சூரிய ஆற்றல் எரிபொருளைப்பயன்படுத்த செயற்கை எரிபொருள் குழுவான சின்ஹெலியன் உடன் கூட்டுசேர்ந்துள்ளது.

✓ இதன்மூலம், "sun–to–liquid" எரிபொருளை பயன்படுத்தும் உலகின் முதல் வானூர்தி நிறுவனமாக சுவிஸ் மாறும். சுவிட்சர்லாந்தைச்சார்ந்த சின்ஹெலியன், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து வானூர்திக்கான நிலையான எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்–தை உருவாக்கியுள்ளது.

---

7. 'குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள்' என்ற தேசிய மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?

அ) பீகார்



ஆ) சத்தீஸ்கர் ☑

இ) ஒடிஸா

ஈ) குஜராத்

✓ தூய்மை இந்தியா இயக்கம் – நகர்ப்புறம் 2.0, வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகத்தின்கீழ், 'குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள்: கழிவு மேலாண்–மையில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்' என்ற தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது. இராய்பூரில் சத்தீஸ்கர் மாநில அரசுடன் இணைந்து இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

---

8. 'இந்திய அரசின் சுற்றுச்சூழல் அறிக்கை – 2022'ஐ வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் ☑

இ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்றம் அமைச்சகம்

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ், அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான மையத்தின் 'டௌன் டூ எர்த்' என்ற இந்திய சுற்றுச்சூழல் அறிக்கை – 2022'ஐ வெளியிட்டார்.

✓ தில்லியைச் சார்ந்த இலாப நோக்கற்ற அறிவியல் மையம் ஏற்பாடு செய்த அனில் அகர்வால் பேச்சுவார்த்தையில் இது வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, உத்தரபிரதேசம் மற்றும் பீகார் ஆகியவை முறையே 11 மற்றும் 14ஆம் SDG–களில் தேசிய சராசரியைவிடக்குறைவாக உள்ளன. SDG–இல் கேரளா, தமிழ்நாடு மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சிறப்பாக செயல்பட்டன.

---

9. 2022–ISSF உலகக்கோப்பை நடைபெறும் இடம் எது?

அ) கெய்ரோ ☑



ஆ) பாரிஸ்

இ) புடாபெஸ்ட்

ஈ) மாஸ்கோ

✓ நடப்பாண்டுக்கான (2022) முதல் ISSF உலகக்கோப்பை எகிப்தின் கெய்ரோ நகரில் நடைபெற்று வருகிறது.

✓ ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீரர் சௌரப் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீராங்கனையான இஷா சிங், பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றதன்மூலம் நாட்டிற்கு 2ஆவது பதக்கத்தை வென்று தந்தார்.

---

10. 'ஸ்த்ரீ மனோரக்ஷா திட்டத்தை'த் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑

ஆ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

ஈ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இந்தியாவில் பெண்களின் மனநலத்தை மேம்படுத்த 'ஸ்த்ரீ மனோரக்ஷா திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.

✓ பெங்களூரில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் இணைந்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வன்முறை மற்றும் துன்பத்திற்கு ஆளான பெண்ணை எவ்வாறு கையாள்வது என்ற திறனை வளர்ப்பதில் இத்திட்டம் கவனஞ்செலுத்துகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஸ்டான்லி மருத்துவமனையில் ₹2.44 கோடியில் வாழ்வூட்டும் மருத்துவ ஆராய்ச்சி மையம்

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ₹2.44 கோடி செலவில் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

---

2. சாகித்திய அகாதெமி விருது...

"சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை" என்ற சிறுகதைத் தொகுப்புக்காக எழுத்தாளர் அம்பைக்கு சாகித்திய அகாதெமி விருதும் "அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை" என்ற படைப்புக்காக எழுத்தாளர் மு முருகேசுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருதும் வழங்கப்பட்டன.

---

3. சேதி தெரியுமா?

பிப்.28: 'SEBI' என்றழைக்கப்படும் இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் முதல் பெண் தலைவராக மாதவி புரி நியமிக்கப்பட்டார்.

மார்ச்.1: உக்ரைன் – ரஷ்யா இடையே போர் நடைபெறும் நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கான விண்ணப்பத்தில் உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஸெலென்ஸ்கி கையெழுத்திட்டார்.

மார்ச்.2: அரசுப்பணி நியமனங்களில் 3ஆம் பாலினத்தவரு –க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மார்ச்.3: போர் நடைபெறும் உக்ரைனில் சிக்கியுள்ள தமிழ்நாட்டு மாணவர்களை மீட்க வசதியாக எம்பி–க்கள் திருச்சி சிவா, கலாநிதி வீராசாமி, MM அப்துல்லா, எம் எல் ஏ டி ஆர் பி இராஜா ஆகியோர் அடங்கிய குழுவைத் தமிழக அரசு நியமித்தது.

மார்ச்.4: தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் மேயர், துணை மேயர், தலைவர்,

துணைத்தலைவர் ஆகியோரைத் தேர்வுசெய்வதற்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பாலான பதவிகளை திமுக கூட்டணி வென்றது.

மார்ச்.4: ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வார்ன் (52) தாய்லாந்தில் தங்கியிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டுக் காலமானார்.

மார்ச்.5: மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் அமன் லேகி தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து, அதற்கான கடிதத்தை மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரின் ரிஜிஜுவுக்கு அனுப்பினார்.

மார்ச்.5: மணிப்பூரில் 60 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இருகட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் 86.01 சதவீத வாக்குகள் பதிவாயின.

---

3. புதிய வாடிக்கையாளர்களை சேர்க்க பேடிஎம் நிறுவனத்துக்கு தடை: ரிசர்வ் வங்கி நடவடிக்கை

புதிய வாடிக்கையாளர்களை சேர்க்க பேடிஎம் நிறுவனத்துக்கு ஆர்பிஐ தடை விதித்துள்ளது. ஆன்லைன் நிதி பரிவர்த்தனை நிறுவனமான பேடிஎம், புதிய வாடிக்கையாளர்களை சேர்க்க இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தடை விதித்துள்ளது. 1949ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறை சட்டம் விதி 35-ஏ பிரிவின்கீழ் இந்தநடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இந்த தடை உடனடியாக அமலுக்கு வருவதாகவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. பேடிஎம் நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பான ஐயப்பாடு காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக ஆர்பிஐ கூறியுள்ளது.

நிறுவனத்தின் ஐடி செயல்பாடுகளை தணிக்கை செய்ய தகவல் தொழில்நுட்ப (ஐடி) தணிக்கைக் குழுவை அமைக்குமாறு பேடிஎம் நிறுவனத்தை ஆர்பிஐ வலியுறுத்தியுள்ளது. ஐடி தணிக்கை நிறுவனம் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் புதிய வாடிக்கையாளர்களை அனுமதிப்பதற்கு சிறப்பு அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என ஆர்பிஐ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் சிறிய நிதி வங்கி தொடங்குவது தொடர்பாக ரிசர்வ் வங்கியை இரு தினங்களுக்கு முன் பேடிஎம் விண்ணப்பித்திருந்தது. இந்நிலையில் நிறுவன செயல்பாடு குறித்த புகார் எழுந்ததன் அடிப்படையில் இந்த நடவடிக்கையை ஆர்பிஐ எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

---

4. இந்தியாவில் உருவாக்கப்பட்ட விமானிகள் பயிற்சி விமானம்: ஹன்சா-என்ஜி-இன் கடல்மட்ட சோதனை வெற்றி

விமானிகள் பயிற்சி பெறுவதற்காக இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள ஹன்சா-என்ஜி நவீன பயிற்சி விமானத்தின் கடல்மட்ட சோதனைகள் வெற்றிபெற்றன.

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் (சிஎஸ்ஐஆர்) ஆய்வுக்கூடங்களில் ஒன்று பெங்களூருவிலுள்ள தேசிய விமானவியல் ஆய்வகம் (என்ஏஎல்). இந்த ஆய்வகம், விமானி பயிற்சிக்காக ஹன்சா என்ற இரு நபர் விமானத்தை 1993-ல் உருவாக்கியது.

மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டபுதிய தலைமுறை ஹன்சா – என்ஜி (New Generation) என்ற அடையாளத்தோடு செப்.2021-ல் முதன்முதலாக பறக்க விடப்பட்டது. ஆராய்ச்சி நிலையிலிருந்து உற்பத்தி நிலைக்குச் செல்ல பல விதமான விமான சோதனைகள் செய்யப்படும். சமீபத்தில் நடந்த கடல் மட்ட சோதனைகளில் ஹன்சா-என்ஜி வெற்றி பெற்றுள் ளது. இதுகுறித்து அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஹன்சா-என்ஜி விமானத்தின் கடல்மட்ட சோதனைகள் புதுச்சேரியில் நடைபெற்றன. மணிக்கு 155 கிமீ வேகத்தில் பறந்த விமானம் பெங்களூருவிலிருந்து புதுச்சேரி வரை உள்ள 140 கடல் மைல் தூரத்தை ஒன்றரை மணி நேரத்தில் அடைந்தது.

இதுவரை 37 முறை சோதனை

பிப்.19 முதல் மார்ச் 5 வரை கடல் மட்ட சோதனைகளில் இந்த விமானம் 18 மணி நேரம்ஈடுபடுத்தப்பட்டது. விமானத்தின் பல்வேறுசெயல்பாடுகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டன. இந்த சோதனைகளுடன் இதுவரை விமானம் 37 முறை பறக்க விடப்பட்டு 50 மணி நேரம் சோதிக்கப்பட்டது. இன்னும் சில சோதனைகளுக்கு பிறகு சிவில் விமான போக்குவரத்து பொது இயக்குநரகத்தின் அனுமதி பெறப்படும். விமானம் உற்பத்தி நிலைக்குச் செல்ல கடல்மட்ட சோதனையின் வெற்றி ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

ஹன்சா-என்ஜி விமானத்தில் பல புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு தயாரிப்பாகவும் எரிபொருள் சிக்கனமும் உள்ளதால் விமான பயிற்சி பள்ளிகளுக்கு ஏற்ற விமானமாக இது இருக்கும். இந்த விமானத்தை வாங்குவதற்கு இதுவரை 80 விமான பயிற்சி பள்ளிகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

1. எந்த அமைச்சகத்தின் நிர்வாக அதிகார வரம்பின்கீழ் தேசிய நிலப்பணமாக்கல் கழகம் செயல்படுகிறது?

அ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஆ) நிதியமைச்சகம் ☑

இ) MSME அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ பிரதமர் தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக, முற்றிலும் மத்திய அரசுக்கு சொந்தமான நிறுவனமாக தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தக் கழகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட தொடக்க பங்கு மூலதனமாக ₹5,000 கோடியும், பெறப்படும் தொகையிலிருந்து ₹150 கோடி பங்கு மூலதனத்தையும் கொண்டதாக இருக்கும்.

✓ மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற அரசு அமைப்புகளுக்குச் சொந்தமான உபரிநிலம் மற்றும் கட்டட சொத்துக்களை பணமாக்கும் பணியை இந்தக் கழகம் மேற்கொள்ளும். மத்திய நிதியமைச்சகத்தின் பொது நிறுவனங்கள் துறை இந்தக் கழகத்தை உருவாக்கி, அதன் நிர்வாகம் அமைச்சகமாகவும் செயல்படும்.

---

2. அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு – CERN, அண்மையில் எந்த நாட்டின் கூர்நோக்காளர் தகுதியை இடைநிறுத்தம் செய்துவைத்துள்ளது?

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா ☑

இ) உக்ரைன்

ஈ) பெலாரஸ்

✓ 'CERN' எனப்படும் அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பு அண்மையில் ரஷ்யாவின் 'கூர்நோக்காளர்' தகுதி நிலையை இடைநிறுத்தம் செய்துவைத்துள்ளது. இது அணுக்களை உடைக்கும் உலகின் மிகப்பெரிய கருவியைக் கொண்ட சர்வதேச அறிவியல் ஆய்வகமாகும்.

✓ உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அதன் 23 உறுப்புநாடுகளும் கண்டிப்பதாக CERN அறிவித்துள்ளது. உக்ரைன், ஏழு இணை உறுப்புநாடுகளுள் ஒன்றாகும். மேலும் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை CERNஇல் கூர்நோக்காளர் தகுதி நிலையைப் பெற்றுள்ளன.

---

3. இந்தியாவில் 'WHO உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையம்' நிறுவப்பட்டுள்ள இடம் எது?

அ) எர்ணாகுளம்

ஆ) ஜாம்நகர் ☑

இ) சிம்லா

ஈ) கொல்கத்தா

✓ குஜராத்தின் ஜாம்நகரில், பாரம்பரிய மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் (WHO) சர்வதேச மையத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ AYUSH அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் ஜாம்நகரில் அமைக்கப்படவுள்ள இந்த மையத்திற்காக, மத்திய அரசு WHO உடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும். இந்த மையம் பாரம்பரிய மருத்துவத்திற்காக, அதன் தலைமை இடத்திற்கு வெளியே அமைக்கப்படும் முதலாவது மற்றும் சர்வதேச மையமாக திகழும்.

---

4. 2022 – தேசிய இளைஞர் நாடாளுமன்ற விழாவின் கருப்பொருள் என்ன?

அ) Be the voice of New India and find solutions and contribute to Policy ☑

ஆ) Voice of Youth matters

இ) e-Governance and Use of ICT

ஈ) Participation of Women in Parliament

✓ 2022 – தேசிய இளைஞர் நாடாளுமன்றத் திருவிழாவின் 3ஆம் பதிப்பின் தேசிய சுற்று தொடக்க அமர்வில் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் உரையாற்றினார்.

✓ இந்த ஆண்டு (2022) தேசிய இளைஞர் நாடாளுமன்றத் திருவிழாவின் கருப்பொருள், "புதிய இந்தியாவின் குரலாக இருங்கள் மற்றும் தீர்வுகளைக் கண்டறிந்து கொள்கைக்குப் பங்களிப்பு செய்யுங்கள்" என்பதாகும். எதிர்வரும் ஆண்டுகளில் பல்வேறு தொழிற்துறைகளில் இணையவுள்ள இளைஞர்களின் குரலைக் கேட்க இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

5. சமீபத்தில் வெளியான, 'UDISE+ அறிக்கை' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ) சுகாதாரம்

ஆ) கல்வி ☑

இ) வணிகம்

ஈ) பெண்கள் அதிகாரமளித்தல்

✓ இந்தியாவின் பள்ளிக்கல்வி குறித்த 'ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு பிளஸ் (UDISE+)' அறிக்கை 2020–21 சமீபத்தில் வெளியிடப்பட்டது.

✓ இவ்வறிக்கையின்படி, 2020–21 அமர்வில் தொடக்கநிலை முதல் மேல்நிலை வரை பள்ளிக்கல்வியில் சேரும் மாண–வர்களின் எண்ணிக்கை 25.38 கோடியாக உயர்ந்துள்–ளது. மொத்தப் பதிவு விகிதம், 2020–21இல் அனைத்து நிலைகளிலும் மேம்பட்டுள்ளது.

✓ அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகளில் பயிலும் 39.7 லட்சம் மாணவர்கள் அரசுப்பள்ளிகளுக்கு மாறியுள்ளனர் என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

---

6. 1996–க்குப் பிறகு மிகநீண்ட மின்வெட்டை விதித்த ஆசிய நாடு எது?

அ) வங்காளதேசம்

ஆ) இந்தோனேசியா

இ) இலங்கை ☑

ஈ) ஆப்கானிஸ்தான்

- ✓ இலங்கை நாடளாவிய ரீதியில் நாள்தோறும் 7½ மணி நேர மின்வெட்டை அறிவித்துள்ளது. கடந்த 1996ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கையில் அறிவிக்கப்படும் மிக நீண்ட மின்வெட்டு இதுவாகும்.
- ✓ அதிகாரபூர்வ தகவல்களின்படி, மின் பற்றாக்குறையை நாடு எதிர்கொள்ளவில்லை; மாறாக அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. அந்த நாட்டில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குக்கூட போதுமான நிதி இருப்பு இல்லை எனக் கூறப்படுகிறது.

---

7. எந்த மாநிலம்/UTஇல், கிராம இராணுவக் குழுக்களை அமைக்க மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஒப்புதல் அளித்துள்ளது?

அ) ஜம்மு–காஷ்மீர் ☑

ஆ) பீகார்

இ) ஜார்கண்ட்

ஈ) பஞ்சாப்

- ✓ ஜம்மு–காஷ்மீரில் கிராம ராணுவக் குழுக்களை அமைக்க உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. கிராம இராணுவக்குழுக்களின் உறுப்பினர்கள் கிராம பாதுகாப்பு காவலர்களாக நியமிக்கப்படுவார்கள். 1990–களில், ஜம்மு காஷ்மீரில் 4,125 கிராம இராணுவக் குழுக்கள் இருந்தன.
- ✓ இந்தப் புதிய முயற்சி இக்குழுக்களுக்கு புத்துயிரளிக்கும் செயலாக பார்க்கப்படுகிறது. அவை பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ராணுவப்படைகளுக்கு உதவுவதோடு அமைதியை நிலைநாட்டவும் உதவுகின்றன.

---

8. மானிலிருந்து மனிதனுக்கு COVID–19 பரவுவதற்கான சாத்தியக்கூறுகளைப் பதிவுசெய்துள்ள நாடு எது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) ரஷ்யா

இ) பிரேசில்



ஈ) கனடா ☑

- ✓ ஒரு புதிய ஆய்வின்படி, மான்மூலம் மனிதனுக்குப் பரவிய COVID–19இன் முதல் பாதிப்பு கனடாவில் பதிவாகியுள்ளது. வெண்ணிற வாலுடைய மானினங்களில் SARS–CoV–2 மரபணுக்களின் மிகப்பிறழ்ந்த கொத்துக்களை ஆராய்ச்சி –யாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- ✓ ஆய்வுக்காக, தென்மேற்கு மற்றும் கீழை ஒன்டாரியோவில் உள்ள வெண்ணிற வால் மானின் 300 மாதிரிகளை ஆய்வாளர்கள் ஆய்வுசெய்தனர். தென்மேற்கு ஒன்டாரி –யோவில் பதினேழு மான்களுக்கு SARS–CoV–2 பாதிப்பு இருந்ததையும் அவர்கள் கண்டறிந்தனர்.

---

9. ஐநா (UN) சுற்றுச்சூழல் திட்டத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஜெனீவா

ஆ) நைரோபி ☑

இ) பாரிஸ்

ஈ) நியூயார்க்

- ✓ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) என்பது, ஐநா அவையின் சூழல் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பு, மனிதச்சூழல்தொடர்பாக ஸ்டாக்ஹோமில் நடந்த ஐநா மாநாட்டைத் தொடர்ந்து 1972 ஜூனில் நிறுவப்பட்டது.
- ✓ UNEP–இன் தலைமையகம் கென்யாவின் நைரோபியில் உள்ளது. UNEP ஆனது ஐநா சுற்றுச்சூழல் பேரவையின் சிறப்பு இரண்டு நாள் அமர்வில் அதன் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ளது.

---


10. WHO–இன் 2022ஆம் ஆண்டு உலக செவித்திறன் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) To hear for life, listen with care! ☑

ஆ) Hearing to all and by all

இ) Hear the needs of vulnerable

ஈ) To hear is to listen



- ✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.3ஆம் தேதி உலக நலவாழ்வு அமைப்பால் (WHO) உலக செவித்திறன் (Hearing) நாளாக கொண்டாடப்படுகிறது. "To hear for life, listen with care!" என்பது 2022ஆம் ஆண்டில் வரும் உலக செவித்திறன் நாளுக்கானக் கருப்பொருளாகும்.
- ✓ இந்த ஆண்டு (2022), வாழ்க்கைப் பாதையில் நல்ல செவித்திறனைப் பேணுவதற்கான வழிமுறையாகப் பாதுகாப்பாகக் கேட்பதன் முக்கியத்துவத்தில் WHO தனது கவனத்தைச் செலுத்தும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 8.1%–ஆக குறைப்பு

நடப்பு 2021–22ஆம் நிதியாண்டில் தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதிக்கான வட்டி விகிதத்தை 8.1 சதவீதமாக குறைக்க தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு (EPFO) முடிவெடுத்துள்ளது. இது 44 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்தபட்ச வட்டி விகிதமாகும்.

---

2. மிதாலி ராஜ் புதிய சாதனை:

ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை போட்டிகளில் அதிக ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்தவர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார் இந்தியாவின் மிதாலி ராஜ். ஆஸி. கேப்டன் மெலின்டா கிளார்க் 23 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்தது சாதனையாக இருந்தது.

ஆனால் மிதாலி 24 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்து சாதனையை முறியடித்துள்ளார்.

ஜுலன் கோஸ்வாமி புதிய சாதனை:

1 நாள் உலகக்கோப்பை போட்டியில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர் என்ற புதிய சாதனையையும் நிகழ்த்தி உள்ளார் ஜுலன் கோஸ்வாமி. ஆஸி. வீராங்கனை லின் புல்ஸ்டன் 39 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் விக்கெட்டை

வீழ்த்தியதின்மூலம் நாற்பது விக்கெட்டுகளுடன் புதிய சாதனையை படைத்துள்ளார் ஜூலன் கோஸ்வாமி.

---

3. உக்ரைன் இந்திய தூதரகம் போலந்துக்கு மாற்றம்

உக்ரைன் தலைநகர் கீவில் செயல்பட்ட இந்திய தூதரகம் போலந்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேட்டோவில் இணைய முடிவு செய்த உக்ரைன் மீது கடந்த 24-ம் தேதி ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது ரஷ்ய ராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. கீவில் செயல்பட்ட இந்திய தூதரகம், உக்ரைனில் சிக்கித் தவித்த இந்திய மாணவ, மாணவியரை மீட்கும் சவாலான பணியை திறம்பட மேற்கொண்டது. தூதரகத்தின் நடவடிக்கைகளால் சுமார் 20,000-க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் உக்ரைனில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்டு தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழலில் தலைநகரம் கீவை கைப்பற்ற ரஷ்ய ஐராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. கீவ் நகரைச் சுற்றி வளைத்துள்ள ரஷ்ய பீரங்கி படைகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. வான்வழி தாக்குதலும் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து கீவில் செயல்பட்ட இந்திய தூதரகம் அண்டை நாடான போலந்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில், "உக்ரைனில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில்கொண்டு உக்ரைனுக்கான இந்திய தூதரகம் தற்காலிகமாக போலந்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளது. உக்ரைன் பாதுகாப்பு நிலைமை மேம்பட்ட பிறகு தூதரகத்தை கீவுக்கு மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. ஆசிய ஜூனியர் குத்துச்சண்டையில் இந்தியாவுக்கு 6 தங்கப்பதக்கம் கிடைத்துள்ளன.

ஜோர்டானில், ஆசிய ஜூனியர் மற்றும் யூத் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் நடக்கிறது. ஜூனியர் பெண்களுக்கான 50 கிலோகிராம் எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் வினி 5-0 என, கஜகஸ்தானின் கரினா டோகுபேவை வீழ்த்தி தங்கம் வென்றார்.

ஜூனியர் பெண்களுக்கான 52 கிலோகிராம் எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் யாக்சிகா 4-1 என, உஸ்பெகிஸ்தானின் ரஹிமா பெக்னியாசோவாவை தோற்கடித்து தங்கத்தை தட்டிச் சென்றார். இந்திய வீராங்கனை விதி (ஜூனியர் 57 கிலோகிராம்) 5-0 என, ஜோர்டானின் அயா சுவின்தேவை வீழ்த்தி தங்கம் வென்றார்.

மற்ற எடைப்பிரிவு பைனலில் இந்தியாவின் நிகிதா சந்த் (60 கிலோகிராம்), ஷ்ருஷ்டி (63 கிலோகிராம்), ருத்ரிகா (75 கிலோகிராம்) வெற்றி பெற்று தங்கம் கைப்பற்றினர். மஹி (46 கிலோகிராம்), பாலக் (48 கிலோகிராம்), சுப்ரியா (54 கிலோகிராம்), குஷி (81 கிலோகிராம்) பைனலில் தோல்வியடைந்து வெள்ளி வென்றனர்.

---

5. வரும் ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்படும்: அமைச்சர் MRK பன்னீர்செல்வம் பேட்டி

வருகிற ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்படும் என்று வேளாண்துறை அமைச்சர் MRK பன்னீர்செல்வம் தெரிவித்தார். நெல் சாகுபடிக்கு இணையாக சிறுதானிய உற்பத்தியை முனைப்பாகக்கொண்டுசெல்லும் வகையில் இத்திட்டம் அறிவிக்கப்பட இருக்கிறது.

---

6. இலங்கையில் உள்ள சம்பூரில் இந்தியா உதவியுடன் 100 MW சூரிய சக்தி மின் நிலையம் அமைக்க ஒப்பந்தம்

இலங்கையில் 100 மவ் இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக இந்தியாவின் தேசிய அனல் மின்கழகம் & இலங்கை மின்சபை ஒப்பந்தம் செய்துள்ளன.

இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடந்த போரில், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்நாட்டு ராணுவம் கைப்பற்றிய முதல் இடம் சம்பூர். 2006-ம் ஆண்டு சம்பூர் பகுதியை கைப்பற்றிய பிறகு அந்த இடம் ராணுவத்தால் உயர் பாதுகாப்பு வளையமாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் அதிகரித்து வரும் மின் தேவையை சமாளிக்கும் வகை யில், திரிகோணமலை மாவட்டம், சம்பூர்பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா – இலங்கை அரசுகளிடையே கடந்த 2011-ல் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என திரிகோணமலை மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், அந்த ஒப்பந்தம் தற்போது சூரிய மின் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் மாற்றி அமைக்க இரு நாட்டு அரசுகளும் ஒப்புக்கொண்டன.

இதற்கான நிகழ்ச்சி கொழும்பில் நேற்று முன்தினம் நடந்தது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியாவின் தேசிய அனல் மின் கழகம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டனர்.

---

7. உடான் திட்டத்தின் கீழ் 405 விமான வழித்தடங்கள்

சிறிய நகரங்களுக்கும் விமான சேவையை விரிவுபடுத்தும் பிராந்திய இணைப்புத் திட்டமான உடான் திட்டத்தின் கீழ், 405 வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுவதாக மத்திய வான்போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் ஜெனரல் வி கே சிங் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், மொத்தம் 948 வழித்தடங்களில் விமானங்களை இயக்க, இந்தியா விமான நிலையங்கள் ஆணையம் அனுமதி அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

இதில், மார்ச்.9ஆம் தேதி நிலவரப்படி, எட்டு ஹெலிகாப்டர் தளங்கள் உட்பட 65 விமான நிலையங்கள் மற்றும் 2 நீர்நிலை விமான நிலையங்களை (Water Aerodromes) உள்ளடக்கி மொத்தம் 405 வழித்தடங்களில் விமான சேவை நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்திய இணைப்புத் திட்டத்தின்கீழ், 14 நீர்நிலை விமான தளங்கள், 36 ஹெலிபேட் உட்பட 154 விமான

நிலையங்கள், உடான் திட்டத்தின் கீழ் விமான சேவைகளை தொடங்க தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும், ஜெனரல் வி கே சிங் தெரிவித்துள்ளார்.

---

8. வெள்ள முன்னறிவிப்பு அமைப்பு: தமிழ்நாட்டில் உள்ள நிலையங்களின் எண்ணிக்கை

மாநிலங்களவையில் எழுத்துபூர்வமாக பதிலளித்த ஜல் சக்தி இணை அமைச்சர் பிஷ்வேஸ்வர் துடு கீழ்காணும் தகவல்களை வழங்கினார்.

2016ஆம் ஆண்டு பருவமழையைத் தொடர்ந்து நாட்டில் வெள்ளம் ஏற்படக்கூடிய 20 முக்கிய ஆற்றுப்படுகைகளுக்–கான ஐந்து நாள் வெள்ள முன்னறிவிப்பு முறையை மத்திய நீர் ஆணையம் உருவாக்கி வருகிறது.

உள்நாட்டிலேயே உருவாக்கப்படும் இந்த அமைப்புகள் GPM (குளோபல் பெரசிப்பிடேஷன் மேனேஜ்மெண்ட்) GSMAP (குளோபல் சேட்டிலைட் மேப்பிங் ஆப் பெரசிபிடே–ஷன் – ஜப்பான் ஏரோஸ்பேஸ் எக்ஸ்ப்ளோரேஷன் ஏஜென்சியின் தயாரிப்பு) மற்றும் ஐஎம்டி (இந்திய வானிலை ஆய்வுத்துறை) ஆகியவற்றின் சர்வதேச மழைப்பொழிவு மாதிரியைப் பயன்படுத்துகின்றன.

இவற்றின் அடிப்படையில் வெள்ள முன்னறிவிப்பு அமைப்புகளை உருவாக்குவதற்காக, 20 முக்கிய நதிப் படுகைகளுக்கு 1–டி கணித வெள்ள முன்னறிவிப்பு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய அளவில் 2016 வரை 199ஆக இருந்த வெள்ள முன்னறிவிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, தற்போது 331 ஆக இருக்கிறது. தமிழ்நாட்டில் 2016 வரை ஐந்தாக இருந்த வெள்ள முன்னறிவிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, தற்போது 15ஆக இருக்கிறது.

வெள்ள முன்னறிவிப்பு நடவடிக்கைகளுக்காக தமிழ்நாட்டிற்கு 2018–19இல் ₹26.75 லட்சமும், 2019–20 இல் ₹38.66 லட்சமும், 2020–21இல் ₹269.04 லட்சமும், 2021–22இல் ₹215.68 லட்சமும் என மொத்தம் ₹550.13 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சியாமாபெய் என்ற தொல்லியல் தளம் அமைந்துள்ள நாடு எது?

அ) ஜப்பான்



ஆ) வியட்நாம்

இ) சீனா ☑

ஈ) சுமத்ரா

✓ சீனாவைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பெய்ஜிங்கிலிருந்து நூறு மைல்களுக்கு குறைவான தொலைவில் உள்ள சியாமாபெய் என்ற இடத்தில் பழங் கற்கால பண்பாட்டின் எச்சங்களை கண்டுபிடித்துள்ளனர்.

✓ அங்கு, பண்டைய ஹோமினின்கள் ஓச்சர் எனப்படும் செந்நிற நிறமியைப் பயன்படுத்தியது மற்றும் கல்லில் இருந்து சிறிய கத்தி போன்ற கருவிகளை வடிவமைத்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எச்சங்கள் 40,000 ஆண்டுகளுக்கும் முந்தையவை என்று நம்பப்படுகிறது.

---

2. 'Role of Labour in India's Development' என்ற நூலை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

श्रम एवं रोजगार मंत्रालय
GOVERNMENT OF INDIA
MINISTRY OF LABOUR & EMPLOYMENT

ஆ) NITI ஆயோக்

இ) பணியாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑

ஈ) ASSOCHAM

✓ 'இந்தியாவின் வளர்ச்சியில் தொழிலாளர்களின் பங்கு' என்ற நூலினை தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு அமைச்சர் பூபேந்திர யாதவ் வெளியிட்டார். இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தொழிலாளர்களின் பங்களிப்பு குறித்து பிரபல கல்வியாளர்கள் & களப்பணியாளர்கள் எழுதிய 12 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

✓ வி வி கிரி தேசிய தொழிலாளர் கல்விக் கழகம் இந்த நூலினை வெளியிட்டுள்ளது.

---

3. MSME அடைவகம், வடிவமைப்பு & IPR திட்டங்களின் ஒருங்கிணைப்பாக தொடங்கப்பட்ட ஒரு புதிய திட்டத்தின் பெயர் என்ன?

அ) MSME சாம்பியன்ஸ் திட்டம்

ஆ) MSME புத்தாக்க திட்டம் ☑



இ) MSME பிளஸ் திட்டம்

ஈ) MSME புரோ திட்டம்

✓ சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான புதுமைகள் (வழிகாட்டுதல், வடிவமைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமை) திட்டத்தையும் MSME ஐடியா ஹேக்கத்தானையும் மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் நாராயண் ராணே தொடங்கி வைத்தார்.

✓ சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் படைப்புத்திறனை ஊக்குவித்து ஆதரிக்க MSME புதுமைகள் திட்டம் உதவும்.

---

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Xenotransplantation' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ) கிரிப்டோ–நாணயம்



ஆ) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ☑

இ) குறைகடத்தி உற்பத்தி

ஈ) பருவநிலை மாற்றம்

✓ அயல்பதியஞ்செய்தல் (*Xenotransplantation*) என்பது அ) மனிதரல்லாத விலங்குமூலத்திலிருந்து உயிரணுக்கள், திசுக்கள் அல்லது உறுப்புகள், அல்லது (ஆ) ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட மனித உடல் திரவங்கள், செல்கள், திசுக்கள் அல்லது உறுப்புகளை மனிதனுக்கு மாற்றுவது என வரையறுக்கப்படுகிறது.

✓ இதயம் செயலிழந்த நிலையில், மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயம் மாற்றப்பட்ட நோயாளி அண்மையில் காலமானார். இது இந்த அறுவை சிகிச்சைக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு நடந்துள்ளது.

---

5. உலகளாவிய வர்த்தகத்தில் ரஷ்யாவின் மிகப்பெரிய பங்களிப்பு எது?

அ) பாதுகாப்பு உபகரணங்கள்



ஆ) கச்சா பெட்ரோலியம் ☑

இ) சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியம்

ஈ) எஃகு

✓ உலகளாவிய வர்த்தகத்தில் ரஷ்யாவின் மிகப்பெரிய பங்களிப்பு எரிசக்தி குறிப்பாக கச்சா பெட்ரோலியம் (USD 123 பில்லியன்). அதைத் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியமும் எரிவாயுவும் உள்ளது.

✓ சமீபத்தில், உக்ரைன் மீதான போர்த்தொடுப்பாள் பொருளாதாரத்தடைகளால் பாதிக்கப்பட்ட ரஷ்யா 200–க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு ஏற்றுமதி தடையை அறிவித்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு எரிசக்தி விநியோகம் செய்யும் முதன்மையாளராக ரஷ்யா உள்ளது.

---

6. எந்த மத்திய அமைச்சகத்தால், டிரோன் மற்றும் டிரோன் கூறுகளுக்கான PLI திட்டம் அறிவிக்கப்பட்டது?

அ) பாதுகாப்பு அமைச்சகம்

नागर विमानन मंत्रालय
MINISTRY OF CIVIL AVIATION

ஆ) சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் ☑

இ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்

✓ உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை பெறுவதற்கு டிரோன் தொழில் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்–கள் வரவேற்கப்படுவதாக சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

✓ உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம் கடந்த 2021 செப்.30 அன்று அறிவிக்கப்பட்டது. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வீதமானது மதிப்புக்கூடுதல் தொகையில் 20% ஆகும்.

---

7. 'யூரோபா கிளிப்பர் விண்கலம்' என்பது பின்வரும் எந்த விண்வெளி நிறுவனத்தின் முதன்மைத் திட்டமாகும்?

அ) நாசா ☑



ஆ) ஈஎஸ்ஏ

இ) ஜாக்ஸா

ஈ) ரோஸ்கோஸ்மாஸ்


✓ 2024ஆம் ஆண்டில் வியாழனின் நிலவான யூரோபாவிற்கு ஏவப்படுவதற்கு முன், 'யூரோபா கிளிப்பர் விண்கலத்தின்' இறுதிக்கட்டப் பணிகளை நாசா மேற்கொண்டு வருகிறது.

✓ இந்த விண்கலத்தின் முதன்மை அமைப்பு ஜான்ஸ் ஹாப்கின்ஸ் அப்ளைடு பிசிக்ஸ் ஆய்வகக்கத்தால் வடிவமைத்து கட்டப்பட்ட பத்து அடி உயரமுள்ள ஒரு மாபெரும் உந்துவிசை தொகுதி ஆகும்.

---

8. 'Lunar Reconnaissance' சுற்றுக்கலனை ஏவிய நாடு எது?

அ) ரஷ்யா



ஆ) அமெரிக்கா ☑

இ) ஜப்பான்

ஈ) இந்தியா

✓ லூனார் ரீகனைசென்ஸ் ஆர்பிட்டர் (LRO) என்பது NASA இன் ரோபோ விண்கலமாகும்.

✓ இது நிலவின் மையத்தில் இருந்து விலகி துருவ சுற்றுப் பாதையில் அதனைச் சுற்றி வருகிறது. நாசாவின் லூனார் ரீகனைசென்ஸ் ஆர்பிட்டர் திங்களின் மேற்பரப்பை ஆய்வதற்காக உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

---

9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஹோலோங்கி நகரம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) மேகாலயா



ஆ) அருணாச்சல பிரதேசம் ☑

இ) இராஜஸ்தான்

ஈ) ஒடிஸா

✓ அருணாச்சல பிரதேசத்தில் உள்ள ஹோலோங்கியில் கிரீன்பீல்ட் விமான நிலையத்தை அமைக்கும் பணியை இந்திய வானூர்தி நிலைய ஆணையம் மேற்கொண்டு உள்ளது. இது மாநிலத்தின் தலைநகரான இட்டாநகரில் இருந்து 15 கிமீ தொலைவில் உள்ளது. கிரீன்பீல்ட் விமான நிலையம் ₹645 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு ஆக.15, 2022 முதல் செயல்படத்தொடங்கும்.

---

10. எந்த மாநிலத்தின் சுற்றுலாத் துறையால், "பிராஜ் ஹோலி மகோத்சவம்" நடத்தப்படுகிறது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) மத்திய பிரதேசம்

இ) ஹரியானா

ஈ) இராஜஸ்தான் ☑

✓ இராஜஸ்தான் மாநில சுற்றுலாத்துறை, மார்ச்.12–14 வரை மூன்று நாள் ஹோலி பண்டிகையான, "பிராஜ் ஹோலி மகோத்சவத்தை" நடத்தவுள்ளது.

✓ அக்கொண்டாட்ட நிகழ்வுகள் பாரத்பூர், டீக் மற்றும் கமான் நகரங்களில் நடைபெறும். உள்ளூர் விளையாட்டுகள், பாரம்பரிய நடனம் மற்றும் இசையுடன் அனைத்து வயது சுற்றுலாப் பயணிகளையும் மகிழ்விப்பதற்காக இந்தக் கொண்டாட்டம் நடத்தப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. '₹5,000 கோடி முதலீடு, 70,000+ வேலைவாய்ப்பு' – சென்னையில் மிகப்பெரிய ஐடி வளாகத்துக்கு முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல்

சென்னை தரமணியில், "ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்"–ன் மிகப்பெரிய உலகளாவிய வளாகத்திற்கு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸின் மிகப்பெரிய உலகளாவிய வளாகத்திற்கு, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

டிட்கோவின் 50 கோடி ரூபாய் முதலீட்டு பங்குடன் மேற்கொள்ளும் இந்தக் கூட்டுமுயற்சி செயல்திட்டத்தில், இந்த ஐடி மற்றும் ஐடிஇஎஸ் பூங்காவானது 6.8 மில்லியன் சதுர அடி பரப்பில், 27 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. 5,000 கோடி ரூபாய் முதலீட்டைக் கொண்டிருக்கும் இந்த செயல்திட்டத்தில், DLF நிறுவனம் இத்தொகையை படிப் படியாக தேவைப்படும் காலகட்டங்களில் முதலீடு செய்யும்.

இதுபோன்ற பெரிய அளவிலான வர்த்தக அலுவலக செயல்திட்டங்கள், ஒரு டிரில்லியன் SGDP (மாநில அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி) என்ற இலக்கை 2030ஆம் ஆண்டுக்குள் எட்டுவதற்கு தமிழ்நாட்டிற்கு வாய்ப்புகளை வழங்கும்.

---

2. நீர்நிலை ஆக்கிரமிப்பு: தமிழ்நாடு முதலிடம்

இராஜ்யசபாவில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த மத்திய ஜல்சக்தி துறை இணையமைச்சர் பிஸ்வேஸ்வர் தூடு கூறியதாவது: நாடு முழுதும், 9.45 இலட்சம் நீர்நிலைகள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. இதில், 18 ஆயிரத்து 691 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஆந்திராவில் 3,920; தெலுங்கானாவில், 3,032 நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

---

3. ஏர் இந்தியாவின் புதிய தலைவராக டாடா சன்ஸ் சந்திரசேகரன் நியமனம்

ஏர் இந்தியாவின் புதிய தலைவராக சந்திரசேகரனை நியமித்து டாடா குழுமம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரி, நிர்வாக இயக்குநராக இல்கர் ஐசி நியமனம் செய்யப்படுவதாக டாடா அறிவித்தது. துருக்கி ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவராக பணியாற்றியவர் இல்கர் ஐசி. ஏப்ரல்.1ஆம் தேதி இல்கர் ஐசி பொறுப்பேற்க இருந்தார். அவரது நியமனத்துக்கு பல்வேறு தரப்பில் எதிர்ப்புகள் கிளப்பின.

துருக்கி அதிபருக்கு நெருக்கமானவர் என்பதால் அவரது பணிநியமனத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கக் கூடாது என இந்தியாவில் கோரிக்கை எழுந்தது.

இதனையடுத்து அவர் பதவியேற்க மறுத்து விட்டார். இந்தநிலையில் ஏர் இந்தியாவின் புதிய தலைவராக சந்திரசேகரன் இருப்பார் என்று டாடா குழுமம் அறிவித்து உள்ளது. இதற்கான ஒப்புதலை டாடா குழுமம் வழங்கியது.

சந்திரசேகரன், டாடா குழுமத்திற்கு தலைமைதாங்கும் முதல் பார்சி அல்லாத தொழில்முறை நிர்வாகி ஆவார்.

---

4. திருக்குறள் – 'புளியமரத்தின் கதை' – தெலுங்கு நூல்களை முதல்வர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்

உலகப்பொதுமறையாம் திருக்குறள், எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை' ஆகியவற்றின் தெலுங்கு நூல்களை முதல்வர் முக ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

அரசுப் பள்ளிகளில் தொழில்நுட்பக் கட்டமைப்பை வலிமைப்படுத்தவும், எளிமையாக தொழில்நுட்ப கற்றல் வளங்களை பள்ளிகளில் உருவாக்கிடவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில்நுட்ப மற்றும் கணினிமயமான பள்ளிகளின் செயல்முறைக்கு ஏற்றவகையில் ஆசிரியர்களின் தொழில் நுட்பத்திறனை மேம்படுத்த தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறையும், காக்னிசன்ட் தகவல் தொழில்நுட்ப (CTS) நிறுவனமும் இணைந்து பள்ளிகளில் தொழில்நுட்ப தர மேம்பாட்டுக்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டன.

இந்த ஒப்பந்தம் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம்மூலமாக, கணினி மயக்கற்றல் மேம்பாட்டுத் திட்டத்துக்கு காக்னிசன்ட் நிறுவனம் அறிவுசார் பங்குதாரராக அரசுடன் இணைந்து செயலாற்றும்.

நூல்கள் வெளியீடு: 'உலகப்பொதுமறை' எனப் போற்றப்படும் திருக்குறள் நூலானது, பேராசிரியர் ஜெயப் பிரகாஷ்மூலமாக தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதேபோன்று, புகழ்பெற்ற எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' நூலானது, கௌரி கிருபானந்தனால் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்யப் –பட்டுள்ளது. இந்த 2 நூல்களை முதல்வர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

---

5. சேதி தெரியுமா?

மார்ச் 6: மகளிர் 50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் ஆறாவது முறையாகப் பங்கேற்கும் முதல் வீராங்கனை என்கிற சிறப்பை இந்தியாவின் மிதாலி ராஜ் பெற்றார்.

மார்ச் 7: சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மத்திய அரசு வழங்கிய 2020–ஆம் ஆண்டுக்கான 'மகளிர் சக்தி' விருது நீலகிரியைச் சேர்ந்த கைவினைக்கலைஞர்கள் ஜெயமுத்து, தேஜம்மாளுக்கும் 2021–ஆம் ஆண்டுக்கான விருது மன நல மருத்துவ நிபுணர் தாரா ரங்கசாமிக்கும் வழங்கப்பட்டன.

மார்ச் 8: தமிழக நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள், இனி குடும்பத் தலைவிகளின் பெயரிலேயே வழங்கப்படும் என மு க ஸ்டாலின் அறிவித்தார்.

மார்ச் 9: குஜராத் ஜாம்நகரில் பாரம்பரிய மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் சர்வதேச மையத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

மார்ச் 9: முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் 31 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

மார்ச் 10: 5 மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் உத்தர பிரதேசம், உத்தராகண்ட், மணிப்பூர், கோவா ஆகிய நான்கு மாநிலங்களில் பாஜக ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டது. பஞ்சாபில் முதன்முறையாக ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

மார்ச் 10: இந்தியாவில் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' நடத்தத் தேர்தல் ஆணையம் தயாராக இருப்பதாகத் தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா தெரிவித்தார்.

மார்ச் 11: இந்தியாவில் முதன்முறையாக முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் தொழிற்பூங்கா ஐதராபாத்தில் தொடங்கப்பட்டது.

---

6. மார்ச்.15 – உலக நுகர்வோர் நாள்

கருப்பொருள்: Fair Digital Finance

---

1. 'விஸ்வகர்மா ராஷ்ட்ரிய புரஸ்கர்' விருதை வழங்குகிற மத்திய அமைச்சகம் எது?

அ) கல்வி அமைச்சகம்

ஆ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑

இ) MSME அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது கடந்த 1965ஆம் ஆண்டு முதல் 'விஸ்வகர்மா ராஷ்ட்ரிய புரஸ்கர் (VRP)' மற்றும் 'தேசிய பாதுகாப்பு விருதுகளையும் (NSA)', கடந்த 1983ஆம் ஆண்டு முதல் தேசிய பாதுகாப்பு விருதுகளையும் (சுரங்கங்கள்) வழங்கி வருகிறது.

✓ பணிச்சூழலில் முன்னேற்றம் விளைவிக்கும் ஒரு பணியாள் அல்லது பணியாளர்கள் குழு வழங்கிய பரிந்து –ரைகளை அங்கீகரிப்பதற்காக VRP வழங்கப்படுகிறது. தொழிற்துறை நிறுவனங்களின் பாதுகாப்பு செயல் திறனை அங்கீகரிப்பதற்காக NSA வழங்கப்படுகிறது.

---

2. கல்லாலான மிகப்பெரிய புத்தர் சிலை கண்டறியப்பட்டு உள்ள நாடு எது?

அ) இந்தியா



ஆ) சீனா ☑

இ) நேபாளம்

ஈ) இலங்கை

✓ 233 அடி உயரமுள்ள கல்லால் ஆன சீனாவின் லேஷான் புத்தர் சிலை, உலகின் மிகப்பெரியதும் உயரமானதுமான புத்தர் சிலை ஆகும். 1996ஆம் ஆண்டு முதல் UNESCO உலக பாரம்பரிய தளமாக பட்டியலிடப்பட்டுள்ள இச்சிலை, எமி மலையை எதிர்நோக்கி உள்ளது.

✓ புத்த கயாவில் பௌத்தர் பன்னாட்டு பொதுநல இயக்கம் மூலம் இந்தியாவின் மிகப்பெரிய சாய்ந்தநிலை புத்தர் சிலை கட்டப்படுகிறது. 100 அடி நீளமும், 30 அடி உயரமும் கொண்ட இந்தச் சிலை கண்ணாடியிழையால் செய்யப்பட உள்ளது.

---

3. முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் இந்தியாவி –ன் முதல், 'தொழிற்பூங்கா' அமைந்துள்ள நகரம் எது?

அ) மும்பை



ஆ) சென்னை

இ) ஐதராபாத் ☑

ஈ) புது தில்லி

✓ முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் இந்தியாவின் முதல், 'தொழிற்பூங்கா' ஐதராபாத்தில் இருபத்தைந்து பசுமைத் திட்டங்களுடன் செயல்படத் தொடங்கியுள்ளது.

✓ தெலுங்கானா மாநில அரசாங்கத்துடன் இணைந்து FICCI பெண்கள் கூட்டமைப்புமூலம் 'FLO தொழிற்பூங்கா' ஊக்கு –விக்கப்படுகிறது. இத்தொழிற்பூங்காவிற்கு ₹250 கோடி முதலீட்டையும் FLO தந்துள்ளது.

---

4. உர உற்பத்தியாளர் 'SPIC', சமீபத்தில் எம்மாநிலத்தில் மிதவி சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்தது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) இராஜஸ்தான்

இ) குஜராத்

ஈ) பஞ்சாப்

✓ முன்னணி உர உற்பத்தி நிறுவனமான சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (SPIC) தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் மிதவை சூரிய மின்னுற்பத்தி திட்டத்தை நிறுவியுள்ளது. இந்த ஆலை, ஆண்டுக்கு 42 மில்லியன் அலகு தூய ஆற்றலை உற்பத்தி செய்யும் மற்றும் அந்த நீர்த்தேக்கத்தில் நீர் ஆவியாதல் குறைப்பைக் கட்டுப்படுத்த உதவும். ₹150 கோடி மதிப்பீட்டில் இந்த ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

---

5. "மருந்துத்தொழிற்துறையை வலுப்படுத்துதல்" திட்டத் –தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) சுகாதாரம் & குடும்ப நல அமைச்சகம்



ஆ) வேதிகள் & உரங்கள் அமைச்சகம் ☑

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) கனரக தொழிற்துறை அமைச்சகம்

✓ வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின்கீழியங்கும் மருந்துத்துறை, "மருந்துத்தொழிற்துறை வலுப்படுத்துதல்" திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

✓ 2021–22 நிதியாண்டு முதல் 2025–26 நிதியாண்டு வரையிலான காலகட்டத்தில் ₹500 கோடி மொத்த நிதிச் செலவீனத்துடன், "மருந்துத் தொழிலை வலுப்படுத்துதல்" திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை அத்துறை வெளியிட் –டுள்ளது. மருந்துத்துறையில் தற்போதுள்ள உட்கட்டமை –ப்பு வசதிகளை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற பாண்ட்ரேதன் கோவில் அமைந்துள்ள மாநிலம் / UT எது?

அ) மேற்கு வங்காளம்



ஆ) ஜம்மு–காஷ்மீர் ☑

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) குஜராத்

✓ பாண்ட்ரேதன் கோவில் ஸ்ரீநகர் (ஜம்மு மற்றும் காஷ்மீர்) பதாமிபாக் பகுதியில் அமைந்துள்ள 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பாரம்பரிய தளமாகும். இந்திய ராணுவத்தின் சினார் கார்ப்ஸ் சமீபத்தில் இதனை புதுப்பித்துள்ளது. இது சம்பந்தமாக, இவ்வலகு, கலாசார அமைச்சகத்தின் தேசிய நினைவுச்சின்னங்கள் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றது. இந்தத் தளத்தில் இரண்டு பெரிய ஒற்றைக்கல் பாறை சிவலிங்கங்கள், ஏழு காந்தார பாணி சிற்பங்கள் போன்ற வடிவங்களில் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்வேறு சிலைகள் உள்ளன.

---

7. எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட எரிசக்தி மற்றும் அதுதொடர்பான துறைகளுக்கான, 'கொள்கை வாதிடும் பிரிவின்' பெயர் என்ன?

அ) எரிசக்தி அறக்கட்டளை ☑

ஆ) ஆற்றல் அறக்கட்டளை

இ) பசுமை எரிசக்தி அறக்கட்டளை

ஈ) மத்திய எரிசக்தி சங்கம்

✓ NTPC, பவர் கிரிட், REC, PFC, NHPC, THDC, NEEPCO மற்றும் SJVN உள்ளிட்ட மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் ஒரு சமூகமாக 'பவர் ஃபவுண்டேஷனை' பதிவுசெய்தன. இது எரிசக்தி மற்றும் அதுதொடர்புடைய துறைகளுக்கான முதன்மைக் கொள்கை வாதிடும் பிரிவாக செயல்படும்.

✓ இது மாநிலங்கள் & தொழிற்துறைகளுக்கு ஆராய்ச்சியில் உதவுவதையும் இந்தியாவின் ஆற்றல் மாற்றத்திற்கான தீர்வுகளை உருவாக்குவதையும் நோக்கமாகக்கொண்டு உள்ளது. எரிசக்தி மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சரான R K சிங், இந்தச் சங்கத்தின் தலைவராக உள்ளார்.

---

8. தேசிய நிதி அறிக்கையிடல் ஆணையத்தின் (NFRA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) அஜய் பூஷன் பாண்டே ☑



ஆ) நந்தன் நிலேகனி

இ) அஸிம் பிரேம்ஜி

ஈ) கிரிஸ் கோபாலகிருஷ்ணன்

✓ தேசிய நிதி அறிக்கையிடல் ஆணையத்தின் தலைவராக முன்னாள் நிதிச்செயலாளர் அஜய் பூஷன் பாண்டேவை அரசாங்கம் நியமித்துள்ளது. அமைச்சரவையின் நியமனக் குழு மூன்றாண்டு காலத்திற்கு அவரை நியமித்துள்ளது. இவர் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம், வருவாய்த்துறை செயலாளராக இருந்து ஓய்வுபெற்றார்.

---

9. 2022 மார்ச் மாத நிலவரப்படி, சந்தை மூலதனத்தின் அடிப்படையில் உலகளாவிய பட்டியலில் இந்தியா பிடித்து உள்ள இடம் என்ன?

அ) மூன்றாவது

ஆ) ஐந்தாவது ☑



இ) ஆறாவது

ஈ) ஏழாவது

✓ சந்தை மூலதனத்தின் அடிப்படையில் இந்திய பங்குச் சந்தை முதன்முறையாக உலகளவில் பட்டியலின் முதல் 5 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளது. நாட்டின் மொத்த சந்தை மதிப்பு $3.21 டிரில்லியன் டாலர்களாக உள்ளது. முதல் 4 இடங்களை அமெரிக்கா ($47.32 டிரில்லியன்), சீனா ($11.52 டிரில்லியன்), ஜப்பான் ($6 டிரில்லியன்) மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

✓ இந்தியாவுக்கு அடுத்தபடியாக UK, சௌதி அரபியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் உள்ளன.

---

10. 'Smart Event Tracking System (SETS)' என்பது எந்த அமைச்சகம்/முகமையின் சொந்த மென்பொருளாகும்?

அ) இரயில்வே அமைச்சகம் ☑

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) MSME அமைச்சகம்

ஈ) AIIMS

✓ 'Smart Event Tracking System (SETS)' என்பது இரயில்வே அமைச்சகத்தின் சொந்த மென்பொருளாகும். இது கூகுள் மேப்ஸ் அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வில் ஒரு புதிய கருவியாகும்; இது கால்நடைகள் ரயில்களில் சிக்குவதைக் கையாள பயன்படுத்தப்பட்டது.

✓ ஆக்ரா பிரிவில் செயல்பட்டு வரும் இம்மென்பொருள் எதிர்காலத்தில் மற்ற பிரிவுகளிலும் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச்சமுதாய உயர்வுக்கும், தொண்டாற்றி பெருமைசேர்த்த தமிழறிஞர்கள், தமிழமைப்புக்கு விருதுகள் வழங்கப்பட்டது

யார்– யாருக்கு விருது?

முதல்வர் கணினித் தமிழ் விருது (2020) – முனைவர் வ தனலட்சுமி

திருவள்ளுவர் விருது (2022) – மறைந்த மு மீனாட்சி சுந்தரம்.

2021–ஆம் ஆண்டுக்கான விருதுகள்:

அண்ணா விருது – சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத்

அம்பேத்கர் விருது – ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு

பெரியார் விருது – எழுத்தாளர் க. திருநாவுக்கரசு

காமராசர் விருது – காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன்

பாரதிதாசன் விருது – புலவர் செந்தலை கௌதமன்

பாரதியார் விருது – ஆவணப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ண குமார்

தேவநேயப்பாவாணர் விருது – முனைவர் கு அரசேந்திரன்

கி ஆ பெ விசுவநாதம் விருது – முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம இராசேந்திரன்

கம்பர் விருது – பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர்

சொல்லின் செல்வர் விருது – சூர்யா சேவியர்

ஜி யு போப் விருது – இதழாளர் அ சு பன்னீர்செல்வன்

உமறுப்புலவர் விருது– மதுரை நா மம்மது

இளங்கோவடிகள் விருது – சொற்பொழிவாளர் நெல்லை கண்ணன்

சிங்காரவேலர் விருது – கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம்

மறைமலையடிகள் விருது – சொற்பொழிவாளர் சுகி சிவம்

வள்ளலார் விருது – முனைவர் இரா சஞ்சீவிராயர்

அயோத்திதாசப் பண்டிதர் விருது – ஞான அலாய்சியஸ்

சி பா ஆதித்தனார் திங்களிதழ் விருது – உயிர்மை திங்களிதழ்

தமிழ்த்தாய் விருது – மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

விருதுத்தொகை எவ்வளவு?

விருதுபெறும் விருதாளர்களுக்கு தலா ₹2 லட்சத்துக்கான காசோலை, தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்பட்டன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையால் வழங்கப்படும் பெரியார்விருது பெறுபவருக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் அம்பேத்கர் விருதினைப் பெறுபவருக்கும் விருதுத்தொகையாக தலா ₹5 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கி பொன்னாடை ஆகியவை வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

சி பா ஆதித்தனார் திங்களிதழ் விருது பெற்ற உயிர்மை திங்களிதழுக்கு விருதுத்தொகையான ₹2 லட்சத்துக்கான காசோலை, தகுதியுரை, கேடயம், பொன்னாடை வழங்கப்பட்டது. 2021–ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருதுபெற்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கு ₹5 லட்சத்துக்கான காசோலை, தகுதியுரை, கேடயம், பொன்னாடை ஆகியவை வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

---

2. 'தி காஷ்மீர் ஃபைல்ஸ்' திரைப்படத்துக்குப் பிரதமர் பாராட்டு

'தி காஷ்மீர் ஃபைல்ஸ்ர் திரைப்படத்துக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

வரி விலக்கு: 'தி காஷ்மீர் ஃபைல்ஸ்' திரைப்படத்துக்கு மத்திய பிரதேசம், குஜராத், கர்நாடகம், ஹரியானா, உத்தர பிரதேச மாநில அரசுகள் கேளிக்கை வரியில் விலக்கு அளித்துள்ளன.

---

3. ஆசிய இளையோர், ஜூனியர் குத்துச்சண்டையில் சென்னை வீரருக்கு தங்கம்: 39 பதக்கங்களை அள்ளியது இந்தியா

ஆசிய இளையோர் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் இந்தியா 39 பதக்கங்களை வென்றது. கடைசி நாளில் சென்னையைச் சேர்ந்த விஷ்வநாத் சுரேஷ் தங்கப்பதக்கம் வென்றார்.

ஜோர்டானின் அம்மான் நகரில் ஆசிய இளையோர் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் நடைபெற்றது. இதன் கடைசி நாளான நேற்றுமுன்தினம் இளையோருக்கான 48 கிலோ எடைப்பிரிவு இறுதிப் போட்டியில் சென்னையைச் சேர்ந்த விஷ்வநாத் சுரேஷ் 5–0 என்ற கணக்கில் கிர்கிஸ்தானின் எர்கெஷோவ்பெக்ஸாட்டை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். அதேவேளையில் 63.5கிலோ எடைப் பிரிவில் சோனிப்பட்டைச் சேர்ந்த வன்ஷாஜ் 4–1 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானில் ஜாவோகிர் உம்மாத லீவ்வை தோற்கடித்து தங்கம் வென்றார்.

92 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அமன் சிங் பிஷ்த் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இறுதிசுற்றில் அவர், 1–4 என்றகணக்கில்ஜோர்டானின் சைஃப்அல்–ரவாஷ்தேவிடம் தோல்வியடைந்தார். மகளிர் பிரிவில் நிவேதிதா கார்கி (48 கிலோ), தமன்னா (50 கிலோ), ஷாஹீன் கில் (60 கிலோ), ரவீனா (63 கிலோ), முஸ்கான் (75 கிலோ) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

51 கிலோ எடைப் பிரிவில் ராமன், 54 கிலோ எடைப் பிரிவில்ஆனந்த் யாதவ், 75 கிலோ எடைப்பிரிவில் தீபக் ஆகியோர் வெண்கலப் பதக்கம் பெற்றனர். இளையோர் பிரிவில் மட்டும் இந்தியா 7 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலம் என மொத்தம் 18 பதக்கங்கள் பெற்று பதக்க பட்டியலில் 3–வது இடம் பிடித்தது. உஸ்பெகிஸ்தான் 23 பதக்கங்களுடன் முதலிடமும், கஜகஸ்தான் 22 பதக்கங்களுடன் 2–வது இடமும் பிடித்தன.

ஜூனியர் பிரிவில் வினி (50 கிலோ), யாஷிகா (52 கிலோ), நிகிதா சந்த் (60 கிலோ), வைதி (57 கிலோ), ஷிருஷ்டி சாத்தே (63 கிலோ), ருத்ரிகா (75 கிலோ), கிரிஷ் பால் (46 கிலோ), யஷ்வர்தன் சிங் (60 கிலோ) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர். ஜூனியர் பிரிவில் இந்தியா 8 தங்கம், 7 வெள்ளி,6 வெண்கலம் என 21 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 2–வது இடம்பிடித்தது. ஒட்டுமொத்தமாக இந்தியா இந்தத் தொடரில் 15 தங்கம், 10 வெள்ளி, 14 வெண்கலம் என 39 பதக்கங்கள் வென்று குவித்தது.

---

4. ஸ்ரீபெரும்புதூரில் ₹1,588 கோடியில் சாம்சங் கம்ப்ரசர் ஆலை

திருப்பெரும்புதூரில் ₹1,588 கோடியில் சாம்சங் நிறுவனத்தின் கம்ப்ரசர் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

---

5. காவிரி, யமுனை, பிரம்மபுத்திரா உள்ளிட்ட 13 நதிக் கரைகளில் ₹19,000 கோடியில் காடு வளர்ப்புத் திட்டம்: மத்திய அரசு தொடங்கியது

காவிரி, யமுனை, பிரம்மபுத்திரா உள்ளிட்ட 13 ஆற்றங் கரைகளில் ₹19 ஆயிரம் கோடி செலவில் ஆற்றோர காடு வளர்ப்புத் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

இத்திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் துறையும், ஜல் சக்தி துறையும் இணைந்து செயல்படுத்தவுள்ளன. ₹19,000 கோடி செலவில் 13 பெரிய ஆறுகளையொட்டி காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் சுமார் 7,417.36 சதுர கிலோ மீட்டர் அளவுக்கு நாட்டில் காடுகளின் பரப்பளவு அதிகரிக்கப்படும்.

காடு வளர்க்கும் திட்டம்மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்கும். மேலும் வண்டல் மண் பிரதேசங்கள் குறைக்கப்படும். அது மட்டுமல்லாமல் ₹449.01 கோடி மதிப்பிலான மரமல்லாத, வனப்பொருட்கள் கிடைக்கும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை தெரிவித்துள்ளது. மேலும் 34.4 கோடி மனித

நாட்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் சுற்றுச் சூழல் துறை தெரிவித்துள்ளது.

காவிரி, ஜீலம், சீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ், யமுனை, பிரம்மபுத்ரா, லுனி, நர்மதா, கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா ஆகிய 13 ஆறுகளையொட்டி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். திட்டத்துக்கான நிதியை தேசிய காடு வளர்ப்பு & சூழல் மேம்பாட்டு வாரியம் வழங்கவுள்ளது.

18,90,110 சதுர கிலோ மீட்டருக்கு...

இந்த 13 நதிகளும் 18,90,110 ச கிலோ மீட்டர் அளவுக்கான பாசன வசதியைக் கொண்டுள்ளன அல்லது புவியியல் பகுதியில் சுமார் 57.45% சதவீதத்தைக் கொண்டுள்ளன. அவற்றின் நீளம் 42,830 கிலோ மீட்டர் ஆகும்.

இந்த ஆறுகளையொட்டி பல்வேறு மரவகைகள், மருத்துவ குணம் நிறைந்த செடிகள், புற்கள், புதர்கள், பழமரங்கள் ஆகியவை நடப்படவுள்ளன. இந்தத் திட்டத்தில் 667 மருத்துவச் செடிகள் மற்றும் தோட்ட மரங்களை நடலாம் என முன்மொழியப்பட்டுள்ளது.

அவற்றில் 283 மருத்துவச் செடிகள் இயற்கை நிலப் பரப்புகளுக்கும், 97 மருத்துவச் செடிகள் விவசாய நிலப் பரப்புகளுக்கும் மற்றும் 116 மரங்கள் நகர்ப்புற நிலப் பரப்புகளுக்கும் முன்மொழியப்பட்டுள்ளன.

இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால் 2030ஆம் ஆண்டுக்குள் 2.6 கோடி ஹெக்டேர் பாழ்நிலங்கள் மீட்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு பிரிட்டனின் கிளாஸ்கோ நகரில் நடந்த கூட்டத்தில், இந்தியா தனது திட்டமிடப்பட்ட கார்பன் உமிழ்வை 2030-க்குள் 100 கோடி டன்கள் குறைப்பதாக உறுதியளித்திருந்தது. மேலும் 2030-க்குள் புதுப்பிக்கத்த -க்க ஆற்றல்மூலம் நாட்டின் 50 சதவீதம் மின்னாற்றல் தேவைகளைப்பூர்த்தி செய்துகொள்வோம் என்றும் இந்தியா உறுதியளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

---

1. கர்நாடக மாநிலத்தின் எத்தனை பல்கலைக்கழகங்கள் அண்மையில், "உயர்புகழ்கொண்ட பல்கலைக்கழகம்" என்னும் அங்கீகாரத்தைப் பெற்றன?

அ) 2

ஆ) 4



இ) 6 ☑

ஈ) 8

✓ கர்நாடகா மாநில அரசால் நடத்தப்படும் ஆறு கல்லூரிகள் "உயர்புகழ்கொண்ட (eminence) பல்கலைக்கழகம்" என்னும் அங்கீகாரத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரிகள் புதுப்பிக்கப்பட்டு, தரத்தை மேலும் மேம்படுத்து –வதற்காக ஊக்குவிக்கப்படும்.

---

2. 'நூர்-2' என்னும் இராணுவ செயற்கைக்கோளை அதன் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்திய நாடு எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்



ஆ) ஈரான் ☑

இ) இஸ்ரேல்

ஈ) ஓமான்

✓ ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படை தனது இரண்டாவது ராணுவ செயற்கைக்கோளான 'நூர்-2'ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. இது 500 கிமீ உயரத்தில் புவியைச்சுற்றி வருகிறது. முதல் ராணுவ செயற்கைக்கோளான நூர் (பாரசீக மொழியில் 'ஒளி'), கடந்த 2020 ஏப்ரலில் ஏவப்பட்டது.

---

3. கேரளா, ஹரியானா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் கீழ்காணும் எந்தத் தேதியில் உருவாக்கப்பட்டன?

அ) மார்ச் 25

ஆ) ஏப்ரல் 01



இ) மே 05

ஈ) நவம்பர் 01 ☑

✓ நவ.1 அன்று தமிழ்நாடு, கேரளா, ஹரியானா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகா போன்ற பல்வேறு இந்திய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. இந்த நாள் மாநில நாளாக அல்லது மாநில உருவாக்க நாளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

✓ தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் கேரளா ஆகியவை 1956இல் உருவாக்கப்பட்டன. பஞ்சாப் மற்றும் ஹரியானா 1966இல் உருவாக்கப்பட்டன.

---

4. ரேணுகாஜி அணை பல்நோக்கு திட்டத்திற்கான ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக உள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம் ☑



ஆ) ஆந்திர பிரதேசம்

இ) குஜராத்

ஈ) பஞ்சாப்

✓ ரேணுகாஜி அணை பல்நோக்கு திட்டத்திற்கான ஒப்பந்தம் உத்தர பிரதேசம், ஹரியானா, இமாச்சல பிரதேசம், இராஜஸ்தான், உத்தரகண்ட் மற்றும் தில்லி ஆகிய ஆறு மாநிலங்களுக்கு இடையே கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி யமுனை ஆறு மற்றும் அதன் இரண்டு கிளையாறுகளில் 3 திட்டங்கள் கட்ட முன்மொழியப்பட்டது.

---

5. 'சாகித்யோத்சவ்' இலக்கிய விழாவை நடத்தும் நகரம் எது?

அ) ஜெய்ப்பூர்

ஆ) புது தில்லி ☑

இ) புனே

ஈ) கொல்கத்தா

✓ சாகித்திய அகாதெமியின் இலக்கிய விழாவான 'சாகித்யோத்சவ்' சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது. இந்தியாவின் 75ஆம் விடுதலை ஆண்டை நினைவுகூரும் வகையில், '2022 அஞ்சல்களின் திருவிழா' கொண்டாடப் –படுகிறது.

---

6. 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்' என்று அறிவிக்கப்பட்ட குண்ட்லா போச்சம்பள்ளி ரயில் நிலையம், அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) தெலுங்கானா ☑

இ) கர்நாடகா

ஈ) ஒடிஸா

✓ தெலுங்கானாவில் செகந்திராபாத்-மேட்சல் பிரிவிலுள்ள புறநகர் நிலையங்களுள் ஒன்றான குண்ட்லா போச்சம் பள்ளி இரயில் நிலையம், 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

✓ இரயில் இயக்கிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், பயணச் சீட்டு, பாதுகாப்பு மற்றும் தெற்கு மத்திய ரயில்வேயின் பிற தொடர்புடைய பணிகள் உட்பட அன்றாட நடவடிக்கைக –ளைக் கையாள அங்கு மகளிரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ராஷ்ட்ரிய இந்திய இராணுவக்கல்லூரி அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?

அ) கேரளா



ஆ) உத்தரகாண்ட் ☑

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ இந்தியாவின் மிகப்பழமையான இராணுவப் பள்ளியான ராஷ்ட்ரிய இந்திய ராணுவக் கல்லூரி (RIMC) சமீபத்தில் தனது நூறாண்டை நிறைவுசெய்தது. இது உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள டேராடூனில் அமைந்துள்ளது.

✓ இந்த இராணுவப் பயிற்சி நிறுவனம் 1922ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய வேல்ஸ் இளவரசரால் திறந்து வைக்கப்பட்டது. RIMC என்பது எழிமலையில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாதெமி மற்றும் கடற்படை அகாதெமி ஆகியவற்றிற்கான முதன்மை நிறுவனம் ஆகும்.

8. 'கேல் மகாகும்பம்' என்பது எம்மாநிலத்தில் நடைபெறும் ஒரு விளையாட்டு நிகழ்வாகும்?

அ) குஜராத் ☑

ஆ) உத்தர பிரதேசம்

இ) இராஜஸ்தான்

ஈ) மத்திய பிரதேசம்

✓ குஜராத்தின் ஆமதாபாத்தில் 11ஆவது கேல் மகாகும்பத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வு 2010 இல் பதினாறு விளையாட்டுகள் மற்றும் பதிமூன்று லட்சம் பங்கேற்பாளர்களுடன் தொடங்கியது; பின்னர் 2019ஆம் ஆண்டில் 36 பொது விளையாட்டுகளாகவும் 26 பாரா விளையாட்டுகளாகவும் உயர்த்தப்பட்டது.

✓ COVID-19 காரணமாக, 2020இல் 'கேல் மகாகும்பம்' ஏற்பாடு செய்யப்படவில்லை.

---

9. 'தேசிய மருத்துவ சாதனங்கள் கொள்கை – 2022' வரைவை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?



அ) சுகாதாரம் & குடும்ப நல அமைச்சகம்

ஆ) வேதிகள் & உரங்கள் அமைச்சகம் ☑

இ) வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துகள் துறை, 'தேசிய மருத்துவ சாதனங்கள் கொள்கை-2022' என்ற வரைவை வெளியிட்டது. தற்போது, நாட்டில் பயன்படுத்தப்படும் மருத்துவ சாதனங்களில் கிட்டத்தட்ட 80% இறக்குமதி செய்யப்படுகின்றன.

✓ மருத்துவ சாதனங்களுக்கான மதிப்பு மற்றும் தொழில்நுட் -பத்தின் அடிப்படையில், ஐந்து உலகளாவிய உற்பத்தி மையங்களில் ஒன்றாக இந்தியாவை வைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'எதிர்கால அருங்காட்சியகம்' அமைந்துள்ள நாடு எது?



அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑

ஆ) சௌதி அரேபியா

இ) குவைத்

ஈ) ஓமன்

✓ துபையில் உள்ள 'எதிர்கால அருங்காட்சியகம் – Museum of the Future' பொதுமக்களின் பார்வைக்காக சமீபத்தில் திறக்கப்பட்டது. இதை ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபர் மற்றும் பிரதமர் திறந்து வைத்தனர்.

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி, பார்வையாளர்களை 2071ஆம் ஆண்டுக்கு அழைத்துச் செல்வதாக இந்த அருங்காட்சியகம் கூறுகிறது. இது 30 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட ஏழு மாடிகள் கொண்ட தூண்கள் இல்லாத அமைப்பாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2,900 மெகாவாட் மின்சாரம் கொள்முதல்: முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்

தமிழ்நாட்டில் 2,900 MW மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனமானது 800 MW மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மூன்று அலகுகள் ஒடிஸா மாநிலம் தலபிரா என்ற இடத்தில் அமைக்கப்பட உள்ளது. அதில், 1,500 MW மின்சாரம் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 2026-27ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது. இதற்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ₹3.06 ஆகும்.

1,000 மெகாவாட்: 1000 MW மின்சாரத்தை கொள்முதல் செய்ய சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான மின்சார யூனிட் ஒன்றின் விலை ₹2.61 ஆகும்.

2022-2023ஆம் நிதியாண்டின் இறுதியிலிருந்து மின்சாரம் கிடைத்திடும். இதேபோன்று, பவர் டிரேடிங் கார்ப்பரேசன் நிறுவனத்துடன் 400 MW மின்சாரத்துக்கான கொள்முதல் செய்யப்பட்டது. இதனுடைய யூனிட் ஒன்றின் விலை ₹3.26 ஆகும்.

மின்சார கொள்முதலுக்கான நான்கு நடுத்தர கால ஒப்பந்தங்கள் முதல்வ மு க ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமானது.

---

2. சிறு-குறு நிறுவனங்களுக்கு கடன்பெற தனி இணைய தளம்: தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்

சிறு, குறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனி இணையதளம் அமைக்கப்படுகிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் உற்பத்தி அலகுகளுக்காக தமிழ்நாடு கடன் உத்தரவாதத்திட்டம் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. ₹40 லட்சத்துக்கு குறைவான வங்கி கடன்களு -க்கு 90 சதவீத உத்தரவாதமும், அதற்கு மேல் ₹2 கோடி வரையிலான கடன்களுக்கு 80 சதவீத உத்தரவாதமும் மத்திய அரசின் கடன் உத்தரவாத நிதியத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு வழங்கும்.

இந்தக் கடன் உத்தரவாத திட்டத்துடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு விரிவான மதிப்பீட்டு திட்டமும் ஒருங்கிணைந்து வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசு ₹100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆறுமாதங்களில் தொடங்கப்படும் வகையில் முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்ட இணையதளம் தயாரிக்கப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை மற்றும் கடன் உத்தரவாத நிதியம் ஆகியவற்றுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டது.

புதிய வசதிகள் தொடக்கம்: புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வினைத் தொடர்ந்து, புதிய வசதிகளை முதல்வர் தொடக்கி வைத்தார். தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் செங்கிப்பட்டி கிராமத்தில் தென்னைநார் உற்பத்திக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதை காணொலிக் காட்சி வழியாக முதல்வர் தொடக்கி வைத்தார்.

---

3. இல்லம் தேடி வரும் தமிழரசு இதழ்: இ–சேவை மையத்தில் பதிவு செய்யலாம்

அரசு இணைய சேவை மையங்களில் பதிவுசெய்தால் தமிழ்நாடு அரசின் மாதாந்திர இதழான 'தமிழரசு', இல்லம் தேடி வரும். இதற்கான அறிவிப்பை மாநில அரசு சமீபத்தில் வெளியிட்டது.

அந்த அறிவிப்பு விவரம்: 'தமிழரசு' இதழானது தமிழ், ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இதன் ஒரு மாத இதழ் விலை ₹20. ஆண்டுச் சந்தா ₹240–ஆக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கான ஆயுள் சந்தா ₹2 ஆயிரமாக உள்ளது.

---

4. முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் R திருநாவுக்கரசு, இகாப., அவர்களின் மகள் தி ஹேமா மீனாட்சி எழுதிய, "The Secret of Smile" நூலை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

---

5. 12–14 வயது சிறார்களுக்கு தடுப்பூசி போடும் பணி தொடக்கம்; கரோனா தடுப்பூசி பணியில் முக்கியமான நாள்: மோடி பெருமிதம்

நாட்டில் 12 முதல் 14 வயதுடைய சிறார்களுக்கு கரோனா தடுப்பூசி செலுத்தும் பணி 2022 மார்ச்.16 தொடங்கியது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பதிவில், "நாட்டின் குடிகளுக்கு தடுப்பூசி போடுவதற்கான இந்தியாவின் முயற்சிகளில் இது முக்கிய நாள்" என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பரில் சீனாவில் தோன்றி உலகம் முழுவதும் பரவிய கரோனா வைரஸ் தொற்றுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நம் நாட்டில் கடந்த ஆண்டு ஜன.16ஆம் தேதி தொடங்கியது. தொடக்கத்தில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. பிறகு வயது அடிப்படையில் படிப்படியாக தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியது.

இந்நிலையில் 12 முதல் 14 வயது சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று தொடங்கியது. கோர்பிவேக்ஸ் என்ற இந்தத் தடுப்பூசியை ஹைதராபாத்தைச் சேர்ந்த 'பயலாஜிகல்–இ' நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தத் தடுப்பூசியை 28 நாள் இடைவெளியில் இரு டோஸ்கள் செலுத்திக்கொள்ளவேண்டும்.

தொடக்கத்தில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு தடுப்பூசி முகாம்களில் மட்டும் இத்தடுப்பூசி செலுத்தப்படுகி –றது. தனியார் மருத்துவமனைகளுக்கான விலை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. விலை நிர்ணயிக்கப் –பட்ட பிறகு தனியார் மருத்துவமனைகளிலும் இதனை செலுத்திக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. ₹100 கோடி செலவில் மாமல்லபுரத்தில் உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ₹100 கோடி செலவில் உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ளது.

சர்வதேச செஸ் கூட்டமைப்பின் 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டி ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் வரும் ஜூலை இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ரஷ்யா, உக்ரைன் போர் சூழ்நிலை காரணமாக செஸ் ஒலிம்பியாட் போட்டி மாஸ்கோவில் நடைபெறாது எனச் சர்வதேச செஸ் கூட்டமைப்பு சமீபத்தில் அறிவித்தது.

இதைத்தொடர்ந்து போட்டியை நடத்தும் உரிமையை பெறுவதற்கான நடவடிக்கைகளில் அகில இந்திய செஸ் கூட்டமைப்பு, தமிழக அரசுடன் இணைந்து செயல்பட்டது. இதற்கான ஏலத்தில் போட்டியை நடத்துவதற்கான இடமாக சென்னை நகரை சர்வதேச செஸ் கூட்டமைப்பு தேர்வு செய்தது. இதன்படி மாமல்லபுரத்தில் வரும் ஜூலை இறுதியில் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

1. 'ஹலாரி' என்பது எந்த இந்திய மாநிலத்தைச் சார்ந்த கழுதை இனமாகும்?



அ) குஜராத் ☑

ஆ) மகாராஷ்டிரா

இ) பஞ்சாப்

ஈ) பீகார்

✓ 'ஹலாரி' என்பது குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியைச் சார்ந்த ஒரு கழுதை இனமாகும். நாட்டில் இவ்வினத்தின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது.

✓ 'ஹலாரி' கழுதைகளைப் பாதுகாப்பதற்கான மால்தாரிகளி –ன் (அல்லது பாரம்பரிய கால்நடை மேய்ப்பர்கள்) சந்திப்புக் கூட்டத்திற்கு நடுவண் அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா தலைமை தாங்கினார்.

---

2. MSME அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, 'MSME கூட்டம் – 2022' நடைபெறும் மாநிலம் எது?

அ) குஜராத்

ஆ) மகாராஷ்டிரா ☑

இ) பஞ்சாப்

ஈ) பீகார்

Ministry of MSME, Govt. of India

✓ சிந்துதுர்க்கில், 'MSME கூட்டத்தை' மத்திய குறு, சிறு & நடுத்தர தொழில்கள் (MSME) அமைச்சர் நாராயண் ராணே தொடங்கிவைத்தார். ₹200 கோடி செலவில் சிந்துதுர்க்கில், MSME–தொழில்நுட்ப மையம் நிறுவப்படும் என்றும் அவர் அறிவித்தார். தேசிய SC/ST மையத்திற்கான MSME கூட்டம், இக்கூட்டத்தின் ஒருபகுதியாக தொடக்கப்பட்டது.

---

3. இந்திய இரயில்வேயின் முதலாவது கதி சக்தி சரக்கு முனையத்தை பின்வரும் எந்தப் பிரிவு இயக்கியது?

அ) சென்னை

ஆ) அசன்சால் ☑

இ) ஹூப்பள்ளி

ஈ) நாக்பூர்



✓ ரயில்வே அமைச்சகம், 'விரைவு சக்தி பன்னோக்கு சரக்கு முனைய'த்தை அசன்சால் பிரிவில் வெற்றிகரமாக உரு –வாக்கியுள்ளது. தாபர்நகர் எனுமிடத்தில் மைதான் பவர் லிட் என்னும் தனியார் நிறுவனம் இம்முனையத்தை இயக்கும். விரைவு சக்தியின் சரக்கு முனையமாக இது அமைந்துள்ளது.

✓ மின்திட்டங்களுக்கு தேவைப்படும் நிலக்கரி இதுவரை சாலை வழியாகவே கொண்டு செல்லப்பட்டு வந்தது. இச் சரக்கு முனையத்தின்மூலம் இரயில்வேயின் வருமானம் மாதத்திற்கு சுமார் ₹11 கோடி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

4. 'சர்வதேச பெண் நீதிபதிகள் நாளானது' முதன்முதலில் எந்த ஆண்டில் கொண்டாடப்பட்டது?

அ) 1992 ஆ) 2002

இ) 2012 **ஈ) 2022 ☑**

2022

✓ 2021 ஏப்ரலில், ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.10 அன்று 'சர்வதேச பெண் நீதிபதிகளின் நாள்' கொண்டாடப்படும் என்று ஐநா பொதுச்சபை தீர்மானித்தது. ஐநா பொதுச் சபையில் கத்தாரால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

✓ இந்திய உச்சநீதிமன்றம், தலைமை நீதிபதி NV இரமணா மற்றும் நான்கு பெண் உச்சநீதிமன்ற நீதிபதிகளுடன் தனது முதல் 'சர்வதேச பெண் நீதிபதிகள் நாளைக்' கொண்டாடியது.

---

5. ஆண்டுதோறும் எந்த மாதத்தில், 'புகைத்தலற்ற நாள்' அனுசரிக்கப்படுகிறது?

அ) ஜனவரி

ஆ) பிப்ரவரி

இ) மார்ச் ☑

ஈ) ஏப்ரல்



✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது புதன் கிழமையன்று, உலகம் முழுவதும் புகைத்தலற்ற நாள் அனுசரிக்கப்படுகிறது. இது இந்த ஆண்டு (2022) மார்ச்.9 ஆம் தேதி வருகிறது. புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகள் மற்றும் விளைவுகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், புகைப்பிடிப்பவர்கள் புகைப்பிடிப்பதை நிறுத்த உதவுவதும் இந்த நாளின் நோக்கமாகும். "Quitting smoking doesn't have to be stressful" என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்.

---

6. ஒவ்வோர் ஆண்டும், எந்தத் தேதியில், உலக NGO நாள் அனுசரிக்கப்படுகிறது?

அ) பிப்ரவரி.27 ☑

ஆ) மார்ச்.01

இ) மார்ச்.15

ஈ) ஆகஸ்ட்.05



✓ உலக NGO நாள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி.27 அன்று உலகம் முழுவதும் பல நாடுகளில் கொண்டாடப்படுகிறது.

✓ அரசு சாரா நிறுவனங்கள் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றன. அரசு மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களை அங்கீகரிப்பது, கொண்டாடுவது மற்றும் கௌரவிப்பது இந்த நாளின் நோக்கமாகும்.

---

7. 2022–மத்திய கலால் வரி நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?

அ) பிப்ரவரி 24 ☑

ஆ) பிப்ரவரி 25

இ) பிப்ரவரி 26

ஈ) பிப்ரவரி 27



✓ இந்தியாவின் மத்திய கலால் நாள் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி.24 அன்று கொண்டாடப்படுகிறது. மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தின் சேவையைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

8. வருடாந்திர மாநில பட்ஜெட்டின் ஒருபகுதியாக, 'சிறார்கள் பட்ஜெட்டை' தாக்கல்செய்த மாநிலம் எது?

அ) குஜராத்

ஆ) உத்தர பிரதேசம்

இ) இராஜஸ்தான்



ஈ) மத்திய பிரதேசம் ☑

✓ மத்திய பிரதேசம் மாநிலம் 2022–23ஆம் ஆண்டுக்கான ₹2.79 இலட்சம் கோடி மதிப்பிலான பட்ஜெட்டை சட்டப் பேரவையில் தாக்கல் செய்தது. முதன்முறையாக, ஆண்டு நிதித்திட்டத்தின் ஒருபகுதியாக, அம்மாநில அரசு 'சிறார்கள் பட்ஜெட்டை'த் தாக்கல் செய்தது.

✓ 18 வயதுக்குட்பட்டோரை இலக்காகக்கொண்டு கல்வி உட்பட 17 துறைகளின்கீழ் 220 திட்டங்களுக்கு இந்தப் பட்ஜெட்டில் ₹57,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ULPIN' என்பது எந்தத் துறையுடன் தொடர்புடைய தனிப்பட்ட அடையாள எண்?

அ) வரிவிதிப்பு



ஆ) நில வளங்கள் ☑

இ) MSME

ஈ) டிரோன் பதிவு

✓ சமீபத்தில் அஸ்ஸாம் மாநிலத்துக்கென ஒரு தனித்த நிலத் தொடுகுப்பு அடையாள எண் (Unique Land Parcel Identification Number – ULPIN) அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ இது நிலவளத்துறையின் டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவேடுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் கருத்தாக்கப்பட்டது. இம்முன்முயற்சியின்கீழ், 14 இலக்க எழுத்தெண்கொண்ட புவி–இடஞ்சார்ந்த தனித்துவம்மிக்க அடையாள எண் வழங்கப்படுகிறது.

---

10. காலநிலை மாற்றத்தின் சவால்களைக் கையாள, 'காலநிலை செயல்திட்டத்தை' வெளியிட்டு முப்பதாண்டு கால செயல்திட்டத்தை வகுத்த இந்திய நகரம் எது?

அ) சென்னை

ஆ) மும்பை ☑

இ) புது தில்லி

ஈ) கொல்கத்தா

✓ அண்மையில் வெளியிடப்பட்ட மும்பை காலநிலை செயல் திட்டம் பருவநிலை மாற்றத்தின் சவால்களைச் சமாளிக்க அந்நகரத்திற்கான முப்பதாண்டு கால செயல்திட்டத்தை வகுத்துள்ளது. பிரகன்மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன் (BMC) ஆனது உலக வளங்கள் நிறுவனம், இந்தியா மற்றும் C40 நகரங்கள் வலையமைப்பின் தொழில்நுட்ப ஆதரவுடன் இத்திட்டத்தைத் தயாரித்தது.

✓ பைங்குடில் வாயுக்களின் சுழிய உமிழ்வு அல்லது 2050 –க்குள் நிகர சுழிய இலக்கை அடைவது உள்ளிட்ட குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால காலநிலை இலக்குகளை இச்செயல்திட்டம் நிர்ணயித்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இலங்கைக்கு இந்தியா மேலும் ₹7,500 கோடி கடனுதவி

நிதி நெருக்கடியில் தவிக்கும் இலங்கைக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் கொள்முதல் செய்வதற்காக, பாரத ஸ்டேட் வங்கிமூலமாக இந்திய அரசு ₹7,500 கோடி (100 கோடி டாலர்) கடனுதவி வழங்குகிறது. இதற்கான ஒப்பந்தம் தில்லியில் இந்தியாவின் பாரத ஸ்டேட் வங்கிக்கும், இலங்கை அரசுக்கும் இடையே கையொப்பமானது.

முன்னதாக, எரிபொருள்கள் வாங்குவதற்காக, இலங்கை அரசுக்கு இந்தியாவின் எக்ஸிம் வங்கி கடந்த மாதம் ₹3,700 கோடி (50 கோடி டாலர்) கடனுதவி வழங்கியது.

---

2. சென்னை சூப்பர் கிங்ஸ் சார்பில் சென்னை, சேலத்தில் கிரிக்கெட் பயிற்சி அகாடமிகள்

சென்னை சூப்பர் கிங்ஸ் சார்பில் சென்னை, சேலத்தில் 2 கிரிக்கெட் பயிற்சி அகாடமிகள் தொடங்கப்படவுள்ளன.

இதுகுறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பு:

வரும் ஏப்ரல் மாதத்தில் இந்த அகாடமிகள் தொடங்கப்படும். இங்கு இருபாலருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும். முதலில் சென்னை, சேலத்தில் அகாடமிகள் தொடங்கப்படும். பின்னர் தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்கள், வெளி நாடுகளிலும் அகாடமி தொடங்கும் திட்டம் உள்ளது.

சென்னையில் துரைப்பாக்கத்திலும், சேலத்தில் சேலம் கிரிக்கெட் அறக்கட்டளையிலும் அகாடமி செயல்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. "ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டத்தில் 77 கோடி பயனாளிகள்: மத்திய அரசு தகவல்

"ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டத்தில் 77 கோடி பேர் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய உணவு, பொது விநியோகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதில் சந்திக்கும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, "ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகம் செய்தார். இந்தத் திட்டம் தற்போது 35 மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு 77 கோடி மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

---

4. தில்லி–காஜியாபாத் இடையே செல்லும் பிராந்திய விரைவுப் போக்குவரத்து புதிய ரயில் மாதிரி அறிமுகம் செய்யப்பட்டது. மணிக்கு 100 முதல் 160 கிமீ வேகத்தில் செல்லக்கூடிய இந்தப் புதிய இரயில் நாட்டின் முதல் அதிவேக மெட்ரோ இரயிலாகும்.

---

5. இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவை 8 சதவீதம் அதிகரிக்கும்

இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவை நடப்பாண்டில் 8 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பின் (OPEC) ஓர் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கரோனா பேரிடரால் ஏற்பட்ட பெரும் சீர்குலைவிலிருந்து இந்தியப் பொருளாதாரம் வேகமாக மீண்டு வருவதன் காரணமாக நடப்பு 2022ஆம் ஆண்டில் அதன் கச்சா எண்ணெயின் தேவை 8% அதிகரித்து நாளொன்றுக்கு 51.5 இலட்சம் பீப்பாய்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டு உள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெயின் தேவை நாளொன்றுக்கு 45.1 இலட்சம் பீப்பாய்களாக இருந்தநிலையில் 2021இல் 47.60 இலட்சம் பீப்பாய்களாக அதிகரித்தது. இது, 5.61% வளர்ச்சியாகும் என OPEC தெரிவித்துள்ளது.

---

6. 'உலக அழகி'ப் பட்டத்தை வென்றார் போலந்து இளம் பெண் கரோலினா

2021-ஆம் ஆண்டுக்கான 'உலக அழகி'ப் பட்டத்தை போலந்தைச் சேர்ந்த கரோலினா பைலாவ்ஸ்கா தட்டிச் சென்றுள்ளார்.

70-ஆவது உலக அழகிப் போட்டி, கரீபியன் தீவுகளில் ஒன்றான போர்டோரிகாவில் உள்ள சான் ஜுவான் நகரில் நடத்தப்பட்டது. அதில், 2020-இல் மிஸ் இந்தியா பட்டம் வென்ற மானசா வாராணசி உள்பட 97 பேர் கலந்து கொண்டனர்.

இறுதியில், போலந்தின் கரோலினா பைலாவ்ஸ்கா உலக அழகிப் பட்டத்தை வென்றார். அவருக்கு 2020-இல் உலக அழகிப் பட்டம் வென்ற ஜமைக்கா அழகி டோனி ஆன் சிங் கிரீடம் அணிவித்து கௌரவித்தார்.

இந்திய அமெரிக்க அழகியான ஸ்ரீ சாயினி இரண்டாவது இடத்தையும், ஐவரி கோஸ்ட்டைச்சேர்ந்த ஒலிவியா யேஸ் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

---

7. உலகின் மகிழ்ச்சிகரமான நாடு இதுதாங்க...

உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து ஐந்தாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஐநா வெளியிட்ட குறியீட்டு பட்டியலில் குறைவான மதிப்பெண்களை பெற்று மகிழ்ச்சியற்ற நாடாக ஆப்கானிஸ்தான் விளங்குகிறது. மகிழ்ச்சியற்ற நாடுகளின் பட்டியலில் இரண்டாவது நாடாக லெபனான் உள்ளது.

செர்பியா, பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகள் நல்வாழ்வு குறியீட்டு மதிப்பெண்களில் நல்ல ஏற்றத்தை கண்டுள்ளது. பட்டியலில், லெபனான், வெனிசுலா மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் மிகப்பெரிய சரிவைச் சந்தித்து உள்ளன.

பொருளாதார சரிவை சந்தித்துவரும் லெபனான், பட்டியலில் கடைசிக்கு முந்தைய இடத்தைப் பிடித்துள்ளது. 146 நாடுகள்கொண்ட பட்டியலில் ஜிம்பாப்வேக்கு அடுத்த இடத்தில் லெபனான் உள்ளது.

போரால் மிகப்பெரிய தாக்கத்தைச் சந்தித்துவரும் ஆப்கானிஸ்தானை கடந்த ஆகஸ்ட் மாதம் தலிபான்கள் கைப்பற்றினர். தற்போது பட்டியலில், இந்த நாடு கடைசி இடத்தில் உள்ளது. தகுந்த உதவி கிடைக்காவிட்டால் இந்த குளிர்காலத்தில், ஐந்து வயதுக்கு குறைவாக உள்ள 10 லட்சம் குழந்தைகள் பசியால் உயிரிழக்கலாம் என்றும் UNICEF எச்சரித்துள்ளது.

பொருளாதார மற்றும் சமூக ரீதியான மக்கள் மகிழ்ச்சியாக உள்ளார்களா என்பது ஆராயப்பட்டு கடந்த 10 ஆண்டுகளாக உலக மகிழ்ச்சிகர குறியீடு வெளியிடப்பட்டு வருகிறது. மூன்றாண்டு காலத்தில், அதன் சராசரி கணக்கிடப்பட்டு சுழியத்திலிருந்து 10 மதிப்பெண்கள் வரை அளிக்கப்படுகிறது. உக்ரைன் மீதான ரஷிய போர் தொடங்குவதற்கு முன்பே இறுதிப்பட்டியல் தயாரிக்கப்பட்டு -விட்டது.

மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளே பட்டியலில் ஆதிக்கம் செலுத்திவருகிறது. முதலிடத்தில் பின்லாந்தும் 2ஆவது இடத்தில் டென்மார்க்கும் 3ஆவது இடத்தில் ஐஸ்லாந்தும் உள்ளது. சுவிச்சர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடத்தில் உள்ளன.

3 இடங்கள் முன்னேறி அமெரிக்கா 16ஆவது இடத்தில் உள்ளது. 17ஆவது இடத்தில் பிரிட்டனும் 20ஆவது இடத்தில் பிரான்ஸ் நாடும் இடம்பெற்றுள்ளது.

---

8. ராணுவ ஆராய்ச்சிக்காக 45 நாட்களில் 7 மாடி கட்டிடம் கட்டி டிஆர்டிஓ சாதனை: பெங்களூருவில் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்

ராணுவ ஆராய்ச்சி & மேம்பாட்டு கழக (DRDO) அதிகாரிகள் கூறியதாவது: DRDO உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஐபிரிட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெங்களூருவில் 7 மாடி கட்டிடத்தை 45 நாட்களில் கட்டி முடித்துள்ளது. இக் கட்டிடம் 5ஜி மேம்பட்ட உள்நாட்டு போர் விமானங்களின் தயாரிப்புக்காக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ஜெனீவா ஒப்பந்தங்கள்' என்பதுடன் தொடர்புடையது எது?

அ) டிஜிட்டல் நாணயம்

ஆ) போரின்போது போர் நடத்தைக்கான விதிகள் ☑



இ) பருவநிலை மாற்றம்

ஈ) ஏற்றுமதி–இறக்குமதி கொள்கை

✓ 'ஜெனீவா ஒப்பந்தங்கள்' என்பது போர் நடத்தைக்கான விதிமுறைகளை முன்னிலைப்படுத்தும் கொள்கைகளின் தொகுப்பாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆயுதம் ஏந்திய படையெடுப்பின்போது, குடிமக்களின் பல்வேறு உட்கட்டமைப்புகளும் இராணுவத்தைச் சாராத பலரும் பாதிக்கப்பட்டனர். மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

---

2. 'நுண்ணிதி கடன்களுக்கான ஒழுங்குமுறை கட்டமை–ப்பின்' வழிமுறைகளை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NABARD

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ) நிதி அமைச்சகம்

ஈ) கூட்டுறவு அமைச்சகம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி RBI (நுண்நிதி கடன்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு) விதிகள், 2022–ஐ வெளியிட்–டுள்ளது, இது 2022 ஏப்.1 முதல் நடைமுறைக்கு வரும்.

✓ வழிகாட்டுதலின்கீழ், கடன்கள் பிணையமாக இருப்பதை உறுதிசெய்யுமாறு, சிறு நிதிப் பிரிவுக்கு கடன் வழங்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களை இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

---

3. 'பயிர் பல்வகைப்படுத்தல் குறியீட்டை'ப் பயன்படுத்திய முதல் மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) தெலுங்கானா ☑



இ) ஆந்திர பிரதேசம்

ஈ) பஞ்சாப்

✓ நாட்டிலேயே முதன்முறையாக, தெலுங்கானா மாநிலம் 'பயிர் பல்வகைப்படுத்தல் முறை'களை குறியீட்டு வடிவில் பதிவுசெய்யத்தொடங்கியுள்ளது. பயிர் பல்வகைப்படுத்தல் குறியீட்டின்படி, அம்மாநிலம் 77 வகைகளை பயிரிடுகிறது. எதிர்காலத்தில், மாநிலத்தில் பயிர் பல்வகைப்படுத்தலுக்கு இந்தக் குறியீடு ஓர் அடிப்படையாக இருக்கும்.

---

4. பன்னாட்டளவில் ஆயுதப்பரிமாற்றங்களின் போக்குகள் குறித்த SIPRI'இன் 2021 அறிக்கையின்படி, உலகளவில் ஆயுதங்களை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) இந்தியா ☑



இ) சீனா

ஈ) இஸ்ரேல்

✓ ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) பன்னாட்டு ஆயுதப் பரிமாற்றங்களின் போக்குகள், 2021 அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக அளவில் ஆயுதங்களை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா உள்ளது.

✓ இந்தியாவின் பெரும்பாலான பாதுகாப்புப் பொருட்கள் ரஷ்யாவிலிருந்து வருகிறது. பாதுகாப்பு உபகரணங்களில் உள்நாட்டு வளர்ச்சிக்கு இந்தியா அழுத்தம் தந்துவருகிறது. மேலும் 2022–23ஆம் ஆண்டிற்கான மூலதன வரவு செலவுத்திட்டத்தில் 68 சதவீதத்தை உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கு இந்தியா ஒதுக்கியுள்ளது.

---

5. 'இஸ்லாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினம்' என ஐநா அறிவித்துள்ள நாள் எது?

அ) மார்ச்.12



ஆ) மார்ச்.14

இ) மார்ச்.15 ☑

ஈ) மார்ச்.18

✓ ஐநா பொதுச்சபை மார்ச்.15–ஐ இஸ்லாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினமாக நிறுவும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தது. தீர்மானம் ஐநா'ஆல் ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ இது மத விடுதலைக்கான உரிமையை வலியுறுத்துகிறது. மேலும், கடந்த 1981ஆம் ஆண்டின் தீர்மானத்தையும் இது நினைவுபடுத்துகிறது.

---

6. "யுவ விஞ்ஞானி கார்யக்ரம்" (YUVIKA) திட்டத்தை நடத்துகிற அமைப்பு எது?

அ) ஆர்பிஐ



ஆ) இஸ்ரோ ☑

இ) டிஆர்டிஓ

ஈ) பார்க்

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) பள்ளி மாணவர்களுக்காக "யுவ விஞ்ஞானி கார்யக்ரம்" (YUVIKA) என்ற சிறப்புத் திட்டத்தை ஏற்பாடு செய்து வருகிறது. இது "இளம் விஞ்ஞானி திட்டம்" என்றும் அழைக்கப்படுகிறது.

✓ இது விண்வெளி தொழில்நுட்பம், விண்வெளி அறிவியல் மற்றும் விண்வெளிப் பயன்பாடுகள்பற்றிய அடிப்படை அறிவை இளம் மாணவர்களுக்கு, குறிப்பாக கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதை நோக்கமா–கக் கொண்டுள்ளது.

---

7. 'PM KUSUM' திட்டத்தின் நோக்கம் என்ன?

அ) உழவர்களுக்கு நிதி மானியம்



ஆ) உழவர்களின் ஆற்றல் பாதுகாப்பு ☑

இ) உழவர்களுக்கு பயிர்க்காப்பீடு

ஈ) உழவர்களுக்கு உர மானியம்

✓ உழவர்களின் ஆற்றல் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக பிரதமர் கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகாபியன் (PM KUSUM) திட்டம் 2019–இல் தொடங்கப்பட்டது.

- ✓ கூறு–A ஆனது மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதை உள்ளடக்கியது. 'B' விவசாய பம்புகள் / நீர்ப் பாசன அமைப்புகளை நிறுவுதலையும் 'C' பம்புகளை சூரியமயமாக்கலையும் உள்ளடக்கியுள்ளது.
- ✓ அண்மையில், கர்நாடக அமைச்சரவை PM KUSUM–B திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

---

8. மகளிர் உலகக்கோப்பை வரலாற்றில் சமீபத்தில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீராங்கனை யார்?

அ) மிதாலி ராஜ்



ஆ) ஜூலன் கோஸ்வாமி ☑

இ) ஹர்மன்ப்ரீத் கவுர்

ஈ) ஸ்மிருதி மந்தனா

- ✓ பெண்கள் உலகக்கோப்பை வரலாற்றில் அதிக விக்கெட் வீழ்த்திய வீராங்கனை என்ற சாதனையை இந்திய அணியின் மூத்த வேகப்பந்து வீச்சாளர் ஜூலன் கோஸ்வாமி படைத்துள்ளார்.
- ✓ 2022 ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக்கோப்பையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியின்போது அவர் இச்சாதனையை நிகழ்த்தினார்.இதன்மூலம் மகளிர் உலகக்கோப்பையில் 31 போட்டிகளில் 40 விக்கெட்டுக –ளை வீழ்த்திய ஆஸ்திரேலியாவின் லின் புல்ஸ்டனின் (39) சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

---

9. உலக வனவுயிரிகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) மார்ச்.03 ☑



ஆ) மார்ச்.02

இ) மார்ச்.01

ஈ) மார்ச்.05

- ✓ ஆண்டுதோறும் மார்ச்.3ஆம் தேதி ஐநா சபையால் உலக வனவுயிரிகள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் இந்த ஆண்டு (2022), "*Recovering key species for ecosystem restoration*" என்ற கருப்பொருளின் கீழ் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- ✓ இது அழிவின் விளிம்பிலிருக்கும் வனவுயிரிகளைப் பாதுகாப்பதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

10. உலக சிட்டுக்குருவிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) மார்ச்.20 ☑



ஆ) மார்ச்.21

இ) மார்ச்.22

ஈ) மார்ச்.23

- ✓ உலக சிட்டுக்குருவிகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.20 அன்று கொண்டாடப்படுகிறது.
- ✓ ஊர்க்குருவிகள் உட்பட பல்வேறு வகையான சிட்டுக் குருவி இனங்களுக்கு மனிதனால் ஏற்படும் அச்சுறுத்தல் –கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இது நேச்சர் ஃபாரெவர் சொசைட்டி ஆஃப் இந்தியா மற்றும் பிரான்சின் Eco–Sys Action Foundation ஆகியவற்றால் கொண்டாடப்படுகிறது. 'LOVE Sparrows' என்பது நடப்பு (2022) ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2022–23: முக்கிய அம்சங்கள்...!

தமிழக அரசின் 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

* புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்கள் உள்ளிட்ட 19 மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவமனைகள் ₹1,019 கோடி செலவில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

* உயர்தர மனநலச் சேவைகளை வழங்குவதற்காக, கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநல மருத்துவமனையை 'தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனம்' என்ற உயர்நிலை அமைப்பாக மேம்படுத்திட அரசு திட்டமிட்டு உள்ளது. இதற்கு முதற்கட்டமாக ₹40 கோடி வழங்கப்படும்.

* காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் 750 படுக்கை வசதிகளுடைய, தன்னாட்சி அதிகாரம் பெற்ற உயர்தர மருத்துவமனையாக மேலும் தரமுயர்த்தப்படும். இதற்காக ₹100 கோடி மதிப்பீட்டில், உலக வங்கி மற்றும் தேசிய சுகாதார இயக்க நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

* தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்திற்கு ₹1,906 கோடி ஒதுக்கீடு.

* அவசர ஊர்தி சேவைகளுக்கு ₹304 கோடி ஒதுக்கீடு.

* டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு ₹817 கோடி ஒதுக்கீடு.

* மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ₹17,901.73 கோடி ஒதுக்கீடு.

* அரசுத்துறைகளில் அசையும் மற்றும் அசையா சொத்து விவரங்களை சேகரித்து கண்காணிக்க சொத்து மேலாண்மை மென்பொருள் உருவாக்கப்படும்.

* மின்சாரத்தில் இயங்கும் 500 பேருந்துகளும், டீசலில் இயங்கும் 2213 பேருந்துகளும் வாங்கப்படும்.

* தமிழகத்தில் திறன்மிக்க மனித வளத்தை மேலும் மேம்படுத்தி அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவது அரசின் தொலைநோக்கு திட்டமாகும்.

* உலகளாவிய பங்களிப்புடன் ஒரு அறிவுசார் நகரம் உருவாக்கப்படும். இது உலகில் புகழ்பெற்ற பல்கலைக்கழங்களின் கிளைகளைக் கொண்டிருக்கும்.

* ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள, திறன் பயிற்சி மையங்கள், அறிவுசார் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பிரிவுகளை இந்த அறிவுசார் நகரம் கொண்டிருக்கும்.

* தமிழத்தில் டிட்கோ, சிப்காட், டான்ஜெட்கோ போன்ற அரசு பொது நிறுவனங்களுடன் இணைந்து மாநில பல்கலைக்கழங்கள் தங்கள் வளாகங்களில் ஆராய்ச்சி பூங்காக்கள் அமைக்க ஊக்குவிக்கப்படும்.

* தமிழகத்தில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் உயர்ந்து வருகிறது. அரசு கல்லூரி, பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் கட்டமைப்பு மேம்படுத்துவது அவசியம்.

* அடுத்த 5 ஆண்டில் ₹1000 கோடியில் சிறப்பு திட்டம் உருவாக்கி புதிய வகுப்பறை, விடுதி, ஆய்வகம், திறன்மிகு வகுப்பறை உருவாக்கப்படும். இதற்காக இந்த ஆண்டில் ₹250 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* முன்னுரிமை அடிப்படையில் 7.5 சதவீதம் ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் பல்வேறு கட்டணத்துக்காக ₹201 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* தமிழகத்தில் ஏற்றுமதியை மேம்படுத்த ₹100 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு.

* இல்லம் தேடி கல்வித் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். இதற்காக ₹200 கோடி நிதி ஒதுக்கீடு.

* சென்னை நந்தம்பாக்கத்தில் ₹75 கோடியில் புத்தொழில் உருவாக்க மையம் அமைக்கப்படும்.

* கேவையில் கைத்தொழில் மேம்பாட்டு குழுவம் அமைக்க ₹5 கோடி நிதி ஒதுக்கீடு.

* கோவை, வேலூர், பெரம்பலூரில் புதிய தொழில் பூங்காக்கக்கள் அமைக்கப்படும்.

* சிதிலமடைந்த 1000 ஆண்டுகள் பழமையான கோயில்களை புணரமைக்க ₹100 கோடி ஒதுக்கீடு.

* இந்து சமய அறநிலைத்துறைக்கு ₹387 கோடி ஒதுக்கீடு.

* தமிழகத்தில் அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட கீழைக் கடற்கரைச் சாலை ஆறு வழிச் சாலையாக மாற்றப்படும்

* மாநகர பேருந்துகளில் மகளிர் இலவச பேருந்து பயணம் செய்யும் திட்டத்திற்கு ₹1520 கோடி மானியம்.

* துறைமுகம் – மதுரவாயல் உயர்மட்ட சாலை திட்டத்திற்கு ₹5770 கோடி ஒதுக்கீடு.

* நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை தேவைகளா நிறைவு செய்ய ₹1,000 கோடி நிதி ஒதுக்கீடு.

* நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு ₹8737 கோடி ஒதுக்கீடு.

* பிரதமரின் வீடு வசதித்திட்டத்திற்கு ₹7,300 கோடி ஒதுக்கீடு.

* ஏழை மக்களுக்கு அம்ருத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ₹2030 கோடி ஒதுக்கீடு.

* 100 நாள்கள் வேலைவாய்ப்பு திட்டத்திற்கு ₹2800 கோடி ஒதுக்கீடு.

* சென்னையை மேம்படுத்தும் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்திற்கு ₹500 கோடி ஒதுக்கீடு.

* 149 சமத்துவபுரங்களை சீரமைக்க ₹190 கோடி ஒதுக்கீடு.

* ஒருங்கிணைந்த குழந்த வளர்ப்பு திட்டத்திற்கு ₹2,542 கோடி ஒதுக்கீடு.

* அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் ₹1000 உதவித்தொகை வழங்கப்படும். பெண்கள் உயர்க்கல்வி இடைநிற்றலை தடுக்க கல்லூரியில் சேர்ந்து அவர்கள் படிப்பு முடியும் வரை மாதம் ₹1000 வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். அம்மாணவிகள் பிற திட்டங்களில் உதவித்தொகை பெற்றிருந்தாலும் வழங்கப்படும்.

* சட்டப்பேரவையின் கேள்வி நேரத்தை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* அரசு சாரா தனியார் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படும். இதற்காக ₹15 கோடி நிதி ஒதுக்கீடு.

* புதிதாக 18 ஆயிரம் வகுப்பறைகள் கட்ட ₹13,000 கோடி நிதி ஒதுக்கீடு.

* அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்தும் வகையில், அன்பழகன் பெயரில் திட்டம்.

*அரசுக் கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்த ₹250 கோடி ஒதுக்கீடு.

* தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறைக்கு ₹36,895.89 கோடி ஒதுக்கீடு.

* சுய உதவிக்குழுக்களுக்கான கடன், உழவர்களுக்கான பயிர்கடன் வழங்க ₹4,130 கோடி ஒதுக்கீடு

* சமூக ஊடகங்களில் தவறான பிரசாரத்தை தடுக்க சமூக ஊடக சிறப்பு மையம் அமைக்கப்படும்.

* முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்கு ₹4,816 கோடி நிதி ஒதுக்கீடு.

* விழுப்புரம், இராமநாதபுரத்தில் ₹10 கோடியில் தொல் பொருள்களை வைக்க அருங்காட்சியகம் அமைக்கப்படும்

* சென்னை அருகே தாவரவயில் பூங்கா ₹300 கோடியில் அமைக்கப்படும்.

* கிண்டி சிறுவர் பூங்கா மேம்படுத்தப்படும்.

* தந்தை பெரியாரின் எழுத்துகளை எட்டுத்திக்கும் எடுத்து செல்ல பெரியாரின் சிந்தனை அடங்கிய தொகுப்பு 21 இந்திய உலக மொழிகளில் அச்சு மற்றும் டிஜிட்டல் வழியில் வெளியிடப்படும். இதற்காக 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* தமிழ்மொழிக்கும் பிற சர்வதேச மொழிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை ஆராய குழு அமைக்கப்படும். அகர முதலி உருவாக்கும் திட்டத்திற்கு ₹2 கோடி ஒதுக்கீடு.

* தமிழ் மொழியின் தொன்மை, செம்மையை நிலைநாட்டிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

* தமிழ் வளர்ச்சித் துறைக்கு பட்ஜெட்டில் ₹82.86 கோடி நிதி ஒதுக்கீடு

* நீர்நிலை பாதுகாப்பு மற்றும் அரசு நிலங்களை மீட்கும் பணிகளுக்காக ₹50 கோடி ஒதுக்கீடு.

* வருவாய் பற்றாக்குறை கடந்த ஓராண்டில் ₹7ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

* வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக முதற்கட்டமாக ₹500 கோடி ஒதுக்கீடு.

* தமிழகத்திலுள்ள 64 அணைகளை புனரமைக்க ₹1,064 கோடி ஒதுக்கீடு.

* தமிழக அரசின் நீர்வளத்துறைக்கு ₹7,338.36 கோடி ஒதுக்கீடு.

* வட்டியில்லா பயிர்க்கடன் திட்டத்திற்கு ₹200 கோடி நிதி ஒதுக்கீடு.

* வரும் நிதியாண்டில் மாநில மொத்த உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை 4.61%லிருந்து 3.80 ஆக குறையும்.

* வருவாய் பற்றாக்குறை வரும் ஆண்டில் 7 ஆயிரம் கோடிக்கு மேல் குறைய வாய்ப்புள்ளது.

* கொற்கையில் ₹5 கோடியில் ஆழ்கடல் ஆய்வு மேற்கொள்ளப்படும்

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக ₹496 கோடி ஒதுக்கீடு.

* வானிலை முன்னறிவிப்பு கட்டமைப்பை உருவாக்க ₹10 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

* இரண்டு ரேடார்கள், 100 தானியங்கி வானிலை மையங்கள், 400 தானியங்கி மழை மானிகள் அமைக்கப்படும்.

* ₹20 கோடியில் வள்ளலார் கால்நடை பாதுகாப்பகங்கள் அமைக்கப்படும்.

* ஆதரவில்லாத, கைவிடப்பட்ட விலங்குகளை பராமரிக்க வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் ₹20கோடி.

* தமிழக அரசின் சுற்றுச்சூழல் துறைக்கு ₹849 கோடி நிதி ஒதுக்கீடு.

* ஆண்டுதோறும் 4 இலக்கிய திருவிழாக்கள் நடத்த ₹5.6 கோடி ஒதுக்கீடு.

* மாணவர்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்திறிகு ₹1062 கோடி ஒதுக்கீடு.

* எம்ஜிஆர் சத்துணவு திட்டத்திற்கு ₹1949 கோடி ஒதுக்கீடு.

* சமூக நலத்துறைக்கு ₹5922.40 கோடி ஒதுக்கீடு.

* முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்திற்கு ₹1540 கோடி ஒதுக்கீடு.

* வரையாடு பாதுகாப்பு திட்டத்திற்கு ₹10 கோடி ஒதுக்கீடு.

* தமிழக அரசின் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் தேடல் திட்டத்திற்கு ₹25 கோடி ஒதுக்கீடு.

* சென்னையில் சதுரங்க ஒலிம்பியாட் நடைபெறுகிறது. இதில், 150 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

* விளையாட்டுத்துறைக்கு ₹293 கோடி ஒதுக்கீடு.

---

2. இராமாமிர்தம் நினைவு நிதி

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அரசுப்பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயிலும் மாணவிகள் கல்லூரியில் சேர்ந்தவுடன் மாதந்தோறும் தலா ஆயிரம் ரூபாய் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித் தொகைகளை பெற்று வந்தாலும் இந்தத் திட்டத்தில் கூடுதலாக உதவியைப் பெறலாம் எனவும், இத்திட்டத்தின் மூலம் சுமார் 6 இலட்சம் மாணவிகள் ஒவ்வோர் ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளதாகவும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

3. சென்னை அருகே ₹300 கோடியில் தாவரவியல் பூங்கா – பட்ஜெட்டில் அறிவிப்பு

தாவரவியல் பூங்காக்கள், பல்லுயிரினங்களின் இருப்பிடங் –களாகவும், பொதுமக்களுக்கான பொழுதுபோக்கு மையங்களாகவும் திகழ்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, லண்டன் க்யூபூங்கா அமைப்புடன் இணைந்து சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை இவ்வாண்டு தயாரிக்கப்படும்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் இடர் தணிக்கும் திட்டங்கள் மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்கு போதிய நிதியினை அளித்திடவும், "தமிழ்நாடு பசுமைக் காலநிலை மாற்ற நிதியத்தை" அரசு உருவாக்கும்.

தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடுகளைப் பாதுகாத்தல், அவற்றின் வாழ்விடத்தை விரிவுபடுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் "வரையாடு பாதுகாப்புத் திட்டத்தை" அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்கு, முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளம்வயதிலிருந்தே வனம் மற்றும் வனவிலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வை குழந்தைகளுக்கு ஏற்படுத்த, கிண்டி குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடங்கிய இயற்கைப் பூங்காவாக 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை இந்த ஆண்டில் தயாரிக்கப்படும்.

சேத்துமடை (கோயம்புத்தூர் மாவட்டம்), மணவணூர் மற்றும் தடியன் குடிசை (திண்டுக்கல் மாவட்டம்), ஏலகிரி (திருப்பத்தூர் மாவட்டம்) ஆகிய பகுதிகள் சூழல் சுற்றுலாத் தலங்களாக தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தப்படும்.

இம்மதிப்பீடுகளில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறைக்கு 849.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

4. இயற்கை வேளாண்மை முதல் டிஜிட்டல் விவசாயம் வரை: தமிழக வேளாண் பட்ஜெட் 2022-23 சிறப்பு அம்சங்கள்

2022-23-ஆம் ஆண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடகா, ஆந்திராவுக்குப் பின் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் வேளாண் துறைக்கென தனியாக பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

இந்த வேளாண் பட்ஜெட்டில் மொத்த நிதி ஒதுக்கீடு – ₹33,007.68 கோடி. இந்த பட்ஜெட்டின் சிறப்பு அம்சங்கள்:

* கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை 3,204 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்துவதற்கு ₹300 கோடி நிதி ஒதுக்கீடு. அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து. (1997 கிராம பஞ்சாயத்துகள் 2021-22)

* முதல்வரின் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தில் 3,000 மானாவாரி நிலத் தொகுப்புகளில் 7.5 லட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் பயன்பெறுவதற்கு ₹132 கோடி.

* இயற்கை வேளாண்மை, இடுபொருட்கள் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ₹71 கோடி மதிப்பில் மாநில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகம்.

* பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட ₹2,546 கோடி நிதி ஒதுக்கீடு.

* சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகள் இயக்கம்

* இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்,

* திருவண்ணாமலை, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு முதல் மண்டலம்,

* தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டு இரண்டாவது மண்டலம்,

* துவரைப் பயிருக்கென சிறப்பு மண்டலம் (கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களைக் கொண்டது)

* சிறுதானியங்களின் ஊட்டச்சத்து பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த சிறுதானிய திருவிழாக்கள்,

* சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கு விதை முதல் விற்பனைக்கு ₹152 கோடியில் உதவி.

சூரியகாந்தி மற்றும் சோயாபீன்ஸ் ஆகியவற்றிற்கு சிறப்பு கவனம் செலுத்தி எண்ணெய் வித்துக்களை ₹29.7 கோடிக்கு ஊக்குவித்தல்.

* ₹8 கோடியில் டிஜிட்டல் விவசாயம் அறிமுகம்

* அனைத்து கிராம நிலங்களுக்கும் புவியிடக்குறியீடு, புதிய பயிர்த் திட்டத்திற்கான பரிந்துரை,

* பூச்சி மற்றும் நோய்களுக்கான செயற்கை நுண்ணறிவு, ட்ரோன்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி,

* நீர்ப்பாசனத்தில் தானியங்குமயமாக்கலுக்கு நவீன இணையதள தொழில்நுட்பம் (Internet of Things)

* மண் வள அட்டைகளுக்கான 'தமிழ் மண் வளம்' இணையமுகப்பு

* பயிர் சாகுபடிப் பரப்பினை கணிக்க தொலை உணர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்,

* இடுபொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகளை ஆன்லைனில் பதிவு செய்து விநியோகம்,

* வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை.

* மயிலாடுதுறையில் புதிய மண் பரிசோதனை கூடம்

* உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில், ஆதி திராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்க ₹5 கோடி

* பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கான சிறப்பு நிதியாக ₹5 கோடி

* கரும்பு விவசாயிகளுக்கு உதவி

* மெட்ரிக் டன்னுக்கு ₹195/- சிறப்பு ஊக்கத்தொகை – கரும்பு விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ₹2,950/-

* கரும்பு சாகுபடிக்கு உதவி – ₹10 கோடி

* சர்க்கரை ஆலைகளில் ஆய்வகத்தின் நவீனமயமாக்கல் & தானியங்கி எடைகள் – ₹4.5 கோடி

* மின் இணைப்பு வழங்கப்பட்ட தாட்கோ பயனாளிகளுக்கு நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு நிதி உதவி ₹20 கோடி ஒதுக்கீடு

* தோட்டக்கலை பயிர்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க – ₹30 கோடி

* தென்னை, மா, கொய்யா மற்றும் வாழை தோட்டங்களில் ஊடுபயிருக்காக ₹27.51 கோடி.

* பசுமைக்குடில், நிழல்வலைக்கூடம், நிலப்போர்வை, ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்து தோட்டம் (Vertical Garden) போன்ற உயர் தொழில்நுட்பங்களுக்கு ₹25.9 கோடி

* தேனீ வளர்ப்பு தொகுப்புகளுக்கு ₹10.25 கோடி

* உழவர் சந்தைகளின் காய்கனிகளின் வரத்தை அதிகரிக்க சிறப்புத் திட்டத்திற்கு ₹5 கோடி

* காய்கறிகளில் பாரம்பரிய ரகங்களை மீட்டெடுக்க ₹2 கோடி

* பருவம் இல்லாத தக்காளி சாகுபடியை ஊக்குவிக்க ₹4 கோடி

* பனை மேம்பாட்டிற்காக ₹2.65 கோடி

* பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க ₹150 கோடி

* முதலமைச்சரின் சூரியசக்தி பம்பு செட் திட்டத்திற்காக 3,000 பம்பு செட்டுகள் – ₹65.34 கோடி மற்றும் 145 சூரியசக்தி உலர்த்திகள் ₹3 கோடி

* 50 உழவர் சந்தைகளை சீரமைக்க ₹15 கோடி மற்றும் 10 உழவர் சந்தைகளை அமைக்க ₹10 கோடி

* ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உழவர் சந்தையில் மாலையில் சிறுதானியங்கள், பயறுவகைகளை விற்பனை செய்ய அனுமதி.

* 2022–23 தமிழக வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்யும் முன் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்ற வேளாண்மை மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

* மதிப்பு கூட்டல் மற்றும் உணவு பதப்படுத்துதலுக்கு முன்னுரிமை.

* திண்டிவனம், தேனி மற்றும் மணப்பாறையில் ₹381 கோடியில் மூன்று மிகப்பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள்,

* கிராம அளவிலான மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் மையங்கள் 38 கிராமங்களில் அமைக்க ₹95 கோடி

* 3 கோடியில் 5 தொழில் கற்கும் சிறுமையங்கள்.

* 295 மதிப்பு கூட்டும் மையங்கள் அமைப்பதற்கு ₹5 கோடி.

* சென்னை மற்றும் திருச்சியில் எஞ்சிய நச்சு பகுப்பாய்வு ஆய்வகங்கள் அமைக்க ₹15 கோடி

* பொது, தனியார் பங்கேற்பு முறையில் தேனி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் " மொத்த காய்கறி விற்பனை வளாகங்கள் அமைத்து, அருகாமையில் உள்ள மாநில வியாபாரிகள் தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வசதி.

* மாநில அளவிலான "உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மேலாண்மை மையம்" அமைத்து வணிக நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல்

* ஆறு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கட்டமைப்பு வசதிகளுக்கு ₹36 கோடி.

* பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் இரண்டாம் கட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு பணிகளுக்கு ₹125.44 கோடி

* 60 ட்ரோன்களை வாங்குவதற்கும் பயிற்சி மற்றும் செயல்விளக்கத்திற்கு ₹10.32 கோடி

வேளாண் சார்ந்த துறைகளின் செயல்பாடுகள்

* காவிரி டெல்டா மாவட்டங்களில் 4964 கிமீ நீளமுள்ள கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகளுக்கு ₹80 கோடி.

* அயிரை, செல் கெண்டை மற்றும் கல்பாசு போன்ற உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் பாதுகாப்புக்கு ₹5 கோடி.

* விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க TANGEDCO விற்கு ₹5,157.56 கோடி.

* ஊரக வளர்ச்சித் துறை மூலம் ₹1245.65 கோடியில் பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் தூர்வாரும் பணிகள்.

* விவசாயிகள் இடுபொருட்களை எடுத்துச்செல்லவும், விளைபொருட்களை சந்தைக்கு எடுத்த செல்லவும் கிராம பஞ்சாயத்துகளில் ₹604.73 கோடி செலவில் 2,750 கிமீ நீளத்தில் சாலைகள்,.

* தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய ஊரக பொருளாதார மாற்றத் திட்டத்தின் மூலம் மூன்று இலட்சம் வேளாண் சார்ந்த வாழ்வாதாரப் பணிகளுக்கு ₹42.07 கோடி,

* வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் குழுக்கள், உற்பத்தியாளர்கள் குழுக்கள் மற்றும் சமுதாய பண்ணை பள்ளிகளை உருவாக்க ₹30.56 கோடி ஒதுக்கீடு,

* சிறு, குறு, நடுத்தர தொழில்கள் (MSME) மூலம் சிறிய விவசாயம் சார்ந்த தொழில்களை தொடங்க ₹1.5 கோடி வரை மூலதன மானியம்.

* திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (டான்சிட்கோ) மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு ஏற்ற விலையைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் விவசாயப் பொருட்களுக்கான தொழிற்பேட்டை,

* வேளாண் புத்தொழில் நிறுவனங்களின் வேளாண் வணிக ரீதியான முயற்சிகளுக்கு 10 லட்சம் ரூபாய் வரை நிதியுதவி

* வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராம வங்கிகள் மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ₹1,83,425 கோடி வேளாண் கடன் வழங்கப்படுவதைக் கண்காணித்தல்.

---

5. சென்னை ஐஐடியில் புதிய முயற்சி! மனித மூளை செல்களை வரைபடமாக்கும் மையம் தொடக்கம்

மனித மூளைகளை, 'செல்'களின் நிலையில் வரைபடமா –க்கும் வகையில் 'சுதா கோபாலகிருஷ்ணன் பிரெய்ன் சென்டர்' என்ற பெயரிலான ஆராய்ச்சி மையம் சென்னை ஐஐடியில் தொடங்கப்பட்டுள்ளது.

---

6. மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி உருவாக்கப்படும்

மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, குற்றாலம், ஏற்காடு, ஜவ்வாது மலைகளில் உள்ள அரசு தோட்டப்பண்ணைகளில் உருவாக்கப்படும்.

வேளாண் நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது:

உழவர்கள், உழவர் ஆர்வலர் குழு, உழவர் உற்பத்தியா –ளர் குழு ஆகியோராலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படும் செடிகள், விதைகள், இடுபொருள்கள், வாசனைப் பொருள்களான ஏலக்காய், மிளகு, பட்டை, கிராம்பு போன்றவையும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான ஜாம், ஜெல்லி, ஊறுகாய், உலர்பழங்கள், யூகலிப்டஸ் தைலம், போன்றவையும் இணையம் வாயிலாக விற்க ஏற்பாடு செய்யப்படும்.

பொருள்களைத் தரம் பிரித்து, சிப்பம் கட்டி விநியோகம் செய்ய மூன்று சேமிப்பு கிடங்குகள் சென்னை, மதுரை, கோவையில் ₹1.50 கோடி நிதியில் ஏற்படுத்தப்படும். இணையவழி விநியோக நிறுவனங்கள்மூலம் வாடிக் –கையாளர்களுக்குப் பொருள்கள் விநியோகம் செய்யப்ப –டும். இத்திட்டம் ₹2 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

மரபணு வங்கி: விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ற ரகங்களை உற்பத்தி செய்து வழங்கும் வகையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுவைகூட்டும் பயிர்களின் வகைகளும் ரகங்களும் சேகரிக்கப்பட்டு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் நடவு செய்து பராமரிக்கப்படும். முதல்கட்டமாக இந்த ஆண்டு மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றிற்கான மரபணு வங்கி, நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, குற்றாலம், ஏற்காடு, ஜவ்வாது மலைகளில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தொடக்கப்பட்டு, உள்ளூர் வகைகள் அறிமுகப்படுத்தப்படும்.

இதற்கான உழவு, நடவு, இடுபொருட்கள், அறுவடை போன்ற பணிகளுக்காக ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மூலிகை தோட்டங்கள்: 2022-23ஆம் ஆண்டில் ₹1 கோடி நிதி ஒதுக்கீட்டில் மூலிகை தோட்டங்கள் நான்கு ஆயிரம் வீடுகளில் அமைக்கப்படும். இதற்கு தேவையான மூலிகைச்செடிகள், அரசு தோட்டக்கலை பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும். ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் முருங்கை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு முருங்கை சாகுபடி ஊக்குவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

---

7. தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள்

தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும்.

நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது:

தேனி, திண்டிவனம் (விழுப்புரம்), மணப்பாறை (திருச்சி) ஆகிய வட்டங்களில் 451 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

மாநில அரசு எடுத்த முயற்சியினால் தற்போது இந்த மூன்று உணவுப் பூங்காக்களும் தரம் உயர்த்தப்பட்ட பெரிய அளவிலான உணவுப்பூங்காக்கள் என மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்த மூன்று உணவுப் பூங்காக்களுக்கு அருகில் அமைந்துள்ள பிற மாவட்ட விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இந்த உணவுப் பூங்காக்களுக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ₹381.38 கோடி மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தினால் நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் உருவாக்கப்படும்.

---

8. இந்தியா-ஜப்பான் இடையே 6 ஒப்பந்தங்கள் கையொப்பம்

வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சியை உறுதிசெய்வது, பசுமை திட்டங்களில் ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக 6 ஒப்பந்தங்கள் இந்தியா-ஜப்பான் இடையே கையொப்பமாகின.

இந்தியா-ஜப்பான் இடையே நடைபெற்ற 14ஆவது மாநாட்டில் பிரதமர் மோடி, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோர் கலந்துகொண்டனர். மாநாட்டின்போது இருநாடுகளுக்கும் இடையே 6 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்க ஒத்துழைப்புடன் செயல்படுவது தொடர்பான ஒப்பந்தமும் கையொப்பமானது. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான ஒப்பந்தங்களும் மாநாட்டின்போது கையொப்பமாகின.

---

9. உலகின் மகிழ்ச்சியான நாடு ஃபின்லாந்து

உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைத் தொடர்ந்து 5-ஆவது ஆண்டாக பின்லாந்து பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியா 3 இடங்கள் முன்னேறி 136-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச மகிழ்ச்சி நாள் ஆண்டுதோறும் மார்ச் 20-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அதையொட்டி உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை ஐநா நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் அமைப்பு வெளியிட்டது. தொடர்ந்து 10ஆம் ஆண்டாக இப்பட்டியல் வெளியிடப்பட்டது.

மக்களிடம் கணக்கெடுப்பு நடத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. கணக்கெடுப்பின்போது மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஆயுட்காலம், வாழ்வில் முடிவெடுப்பதற்கான சுதந்திரம், சமூக ஆதரவு, மக்களின் பெருந்தன்மை, ஊழல் உள்ளிட்டவை தொடர்பாக ஆராயப்பட்டது.

மொத்தம் 146 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்லாந்து தொடர்ந்து 5-ஆவது முறையாக உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, ஸ்விட்சர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியா 136ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டுக்கான அறிக்கையில் 139ஆவது இடத்தில் இருந்த இந்தியா தற்போது மூவிடங்கள் முன்னேறியுள்ளது.

---

1. Continental Europe Synchronous Area (CESA) **உடன் இணைக்கப்பட்டுள்ள நாடு எது?**

அ) சீனா



ஆ) உக்ரைன் ☑

இ) கஜகஸ்தான்

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ உக்ரைன் அண்மையில், 'கான்டினென்டல் ஐரோப்பா சிங்க்ரோனஸ் ஏரியா' உடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பா கண்டத்தின் பெரும்பகுதியில் பரவியிருக்கும் மின்சார விநியோகக் கட்டமைப்பாகும். இந்த நடவடிக்கை உக்ரைனை ரஷ்யாவிலிருந்து வெளியேற அனுமதிக்கும்.

---

2. இந்தியாவின் முதலாவது எரிபொருள் மின்கல மின்சார வாகனத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ) ஓலா



ஆ) டொயோட்டா ☑

இ) ஹோண்டா

ஈ) டாடா

✓ உலகின் அதிநவீன தொழினுட்பத்துடன் உருவாக்கப்பட்ட பசுமை கைட்ரஜன் எரிபொருள் மின்கல மின்வாகனமான டொயோட்டா மிராய்–ஐ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தொடங்கி வைத்தார்.


✓ இந்த வாகனம் கைட்ரஜனால் இயங்கக்கூடியது மட்டுமல்லாமல் இந்திய சாலைகள் & பருவநிலைக்கு ஏற்றதாகும். இந்தியாவில் இவ்வகையில் இது முதலாவது முன்னோடி திட்டமாகும். பசுமை கைட்ரஜன் அடிப்படையி–லான சுற்றுச்சூழலை நாட்டில் உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. மகாத்மா காந்தியின் பெயரால் அழைக்கப்படும், 'பசுமை முக்கோணம்' திறக்கப்பட்டுள்ள நாடு எது?

அ) இலங்கை

ஆ) நேபாளம்



இ) மடகாஸ்கர் ☑

ஈ) மியான்மர்

✓ இந்தியாவின் 75ஆவது ஆண்டு விடுதலையை நினைவு கூரும் வகையில், மடகாஸ்கரின் தலைநகரமான அண்டனானரிவோவில் 'மகாத்மா' காந்தியின் பெயரில் அமைந்த, 'பசுமை முக்கோணம்' திறக்கப்பட்டது.

---

4. 'திஷாங்க்' **என்பது எந்த இந்திய மாநிலத்தின் நில டிஜிட்டல் மயமாக்கல் செயலியாகும்?**

அ) கர்நாடகா ☑

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) குஜராத்

✓ அனைத்து நிலப் பதிவுகளையும் (பூமி திட்டத்தின்கீழ்) டிஜிட்டல் மயமாக்குவதற்காக 'திஷாங்க்' செயலி கர்நாடக அரசால் செயல்படுத்தப்படுகிறது. கர்நாடக மாநில தொலை உணர்வு பயன்பாட்டு மையத்தின் (KSRSAC) கர்நாடக புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின்கீழ் இந்தச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இது வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவருவதோடு நிலம் தொடர்பான சர்ச்சைகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

5. பகலொளி சேமிப்பு நேரத்தை (DST) நிரந்தரமாக்கும், 'சன்ஷைன் பாதுகாப்புச் சட்டத்தை' சமீபத்தில் நிறைவேற்–றிய நாடு எது?

அ) ரஷ்யா

Daylight

ஆ) அமெரிக்கா ☑

இ) பிரேசில்

ஈ) கனடா

✓ பகலொளி சேமிப்பு நேரத்தை நிரந்தரமாக்கும் சட்டத்தை அமெரிக்க செனட் ஒருமனதாக நிறைவேற்றியது. குளிர் காலத்தின் வருகை மற்றும் புறப்பாடுடன் ஒத்துப்போகும் வகையில், நேரத்தை 1 ம நே முன்னும் பின்னும் மாற்றி வைக்கும் நடைமுறையை இது இரத்து செய்துள்ளது.

✓ இது ஒரு சட்டமாக கையொப்பமிடப்பட்ட பிறகு, ஒவ்வொரு நவம்பரிலும் நேரத்தை 1 மணி நேரம் முன்னே மாற்றும் நடைமுறை நிறுத்தப்படும்.

---

6. 'பாகினி' **என்பது பின்வரும் எந்த இந்திய மாநிலத்தால் அறிவிக்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும்?**

அ) குஜராத்



ஆ) சிக்கிம் ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) கர்நாடகா

✓ சிக்கிம் மாநில அரசு தனது ஆண்டு பட்ஜெட்டில், 'பாகினி' திட்டத்தை அறிவிக்கவுள்ளது. அதன் அனைத்து 210 மேல் நிலை மற்றும் உயர்நிலை அரசுப் பள்ளிகளிலும் இலவச சானிட்டரி நாப்கின்களை வழங்குவதற்காக, விற்பனை எந்திரங்களை நிறுவுவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது. பள்ளிகளிலிருந்து மாணவிகள் இடைவிலகுவ–தைத்தடுப்பதும், சிறார்களிடையே மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

---

7. V–Dem **ஜனநாயக அறிக்கை–2022 'இன், 'தாராளவாத ஜனநாயகக்குறியீட்டில்' இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 75

V-Dem
VARIETIES OF DEMOCRACY

ஆ) 83

இ) 93 ☑

ஈ) 99

✓ சுவீடனைச் சார்ந்த வி–டெம் நிறுவனம் (ஜனநாயகத்தின் வகைகள் ஆராய்ச்சித் திட்டம்) "ஜனநாயக அறிக்கை

2022: தன்னியக்கமயமாக்கல் இயல்பை மாற்றுகிறதா?" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.

✓ தாராளவாத ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா 93ஆவது இடத்தையும், தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் 100ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. எல் சால்வடார், துருக்கி மற்றும் ஹங்கேரி ஆகியவற்றுடன் உலகின் முதல் 10 தன்னாட்சி நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளது.

---

8. 2022 – ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ) 01

ஆ) 25

இ) 56

ஈ) 83 ☑

✓ 2022 – ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீட்டில் இந்தியாவின் கடவுச்சீட்டு 83ஆவது இடத்தில் உள்ளது. 2021இல் 90ஆவது இடத்திலிருந்த இது ஏழு இடங்கள் முன்னேறி உள்ளது. இந்தக் குறியீடு உலகின் அனைத்து கடவுச் சீட்டுகளையும் நுழைவு இசைவில்லாமல் அணுகக்கூடிய இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரவரி –சைப்படுத்துகிறது.

✓ இது பன்னாட்டு வான்போக்குவரத்து சங்கத்தின் (IATA) பிரத்தியேக தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. 2022 தரவரிசையின்படி, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை உலகின் மிகவும் ஆற்றல்மிகு கடவுச்சீட்டுக –ளைக்கொண்டுள்ளன.

---

9. உலக ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, ஊக்கமருந்து எதிர்ப்பு விதி மீறல்களில், இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது

ஆ) இரண்டாவது

இ) மூன்றாவது ☑

ஈ) நான்காவது

✓ உலக ஊக்கமருந்து எதிர்ப்பு முகமை வெளியிட்டுள்ள ஓர் அண்மைய அறிக்கையின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் இந்தியாவில் 152 ஊக்கமருந்து எதிர்ப்பு விதி மீறல்கள் நிகழ்ந்துள்ளன. மேலும் இப்பட்டியலின் மூன்றாமிடத்தில் (152 மீறல்கள்) இந்தியா உள்ளது. இது உலகில் நிகழ்ந்த விதிமீறல்களில் 17%–க்கொண்டுள்ளது.

✓ ரஷ்யா–167, இத்தாலி–157, பிரேசில்–78, ஈரான்–70 ஆகிய இடங்களில் உள்ளன.

---

10. 'உலக நீர் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) மார்ச்.20

ஆ) மார்ச்.21

இ) மார்ச்.22 ☑

ஈ) மார்ச்.23

✓ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.22 உலக தண்ணீர் நாளாகக் கொண்டாடப்படுகிறது. நன்னீர் வளங்களின் நிலையான மேலாண்மைக்கு ஆதரவாக இது கொண்டாடப்படுகிறது.

✓ ஐநா அமைப்புகளால் ஒவ்வோராண்டும் இதுகுறித்து ஒரு கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்படுகிறது. "Groundwater: Making the Invisible Visible" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கொல்லிமலையில் இருபது வகை அரிய மருத்துவத் தாவரங்கள்: மாநிலங்களவையில் அமைச்சர் தகவல்

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்மூலம் இருபது வகையான அரிய மருத்துவ தாவரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மூலிகை வளம் நிறைந்த கொல்லிமலையில் சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைப்பது தொடர்பாக மாநிலங்களவை திமுக உறுப்பினர் இராஜேஷ்குமார் எழுப்பிய கேள்விக்கு மாநிலங்களவையில் எழுத்து பூர்வமாக மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாட்டின் கொல்லிமலையில் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மருத்துவ தாவரங்கள் காணப்படுகின்றன. சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய தாவரவியல் ஆய்வு (BSI) தகவலின்படி, கொல்லிமலை மலையில் 100–க்கும் மேற்பட்ட மருத்துவ தாவர இனங்கள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரிய வகை மருத்துவத் தாவரங்கள்: மேலும், மேட்டூர் அணை, சித்த மருத்துவ தாவர தோட்டமும், மத்திய சித்த ஆராய்ச்சிக்கான கவுன்சிலின் தமிழகப் பிரிவும் இணைந்து கொல்லிமலைக் குன்றில் உள்ள மருத்துவத தாவரங்களை ஆய்வு செய்தது. இந்த ஆய்வில் கொல்லி மலைக் குன்றில் இருபது அரிய வகை மருத்துவத் தாவரங்கள் கண்டெடுக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன. அதே சமயம், கொல்லிமலை குன்றுகளில் புதிதாக சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்து ஆயுஷ் அமைச்சகத்தின் பரிசீலனையில் இல்லை.

சித்த ஆராய்ச்சி நிறுவனங்கள்: தமிழகத்தில் ஏற்கெனவே சித்த ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சிலின் மூன்று புற நிறுவனங்கள் செயல்படுகின்றன. சென்னையிலுள்ள மத்திய சித்த ஆராய்ச்சி நிறுவனம், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மேட்டூர் அணைப்பகுதியில் உள்ள சித்த மருத்துவ தாவரங்கள் தோட்டம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தேசிய சித்தா நிறுவனமும் சென்னையில் உள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

2. 'ஆசனி' புயல்: அந்தமானில் பலத்த மழை

'ஆசனி' புயல் காரணமாக அந்தமான் நிகோபார் தீவுகளில் பலத்தமழை பெய்து வருகிறது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட பதிவு:

நிகோபார் தீவுகளில் உள்ள கார் நிகோபாரின் வடக்கு – வட மேற்கே சுமார் 110 கிமீ தொலைவில் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய தெற்கு அந்தமான் கடற்பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலை கொண்டிருக்கிறது. இது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், புயலாகவும் மாறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புயலுக்கு 'ஆசனி' எனத் தீவு நாடான இலங்கை பெயர் சூட்டியுள்ளது.

---

3. 2020–ல் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி, இந்தியாவில் ஆண்டு தோறும் ஏற்படும் புற்றுநோய்களில் 27% புகையிலைப் பழக்கத்தால் ஏற்படும் புற்று வகையாகவே இருக்கிறது. இதனை ஏற்படுத்துவது 'பியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' (*Fusobacterium nucleatum*) என்ற பாக்டீரியா.

---

4. நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடு

புகழ்பெற்ற நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடுக்கான அங்கீகார சான்று கிடைத்துள்ளது.

தென்னிந்தியாவின் கலாச்சார தலைநகரமாக திகழும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 17ஆம் நூற்றாண்டு முதல், நாதஸ்வரம் என்ற இசைக்கருவி பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1955ஆம் ஆண்டுக்கு முன்பு "பிரதி மத்தியமம் ஸ்வரம்" கொண்டுதான் நாதஸ்வரத்தில் தாய் ராகங்கள் வாசிக்கப்பட்டன. பின்னர், 1955ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் நரசிங்கம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த இரங்க நாத ஆச்சாரி என்ற கைவினைக் கலைஞர் என்பவரால், நாதஸ்வரத்தில் 'சுத்த மத்தியமம் ஸ்வர'த்தை கண்டுபிடி –த்து அதை நாதஸ்வர கருவியில் உருவாக்கினர். இந்த இசைக்கருவி எளிதாக இசைக்க முடிந்தது. இதனால் தான் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரம் எனப் பெயர் வந்தது.

நாதஸ்வர இசை வளர்ச்சிக்கு இந்த கருவி பெரிதும் உதவியது. தற்போது இந்த நாதஸ்வரம் கருவி 158 நாடுகளில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்த இசைக்கருவியை கொண்டு வாசித்த ராஜரத்தினம் பிள்ளை, காருக்குறிச்சி அருணாச்சலம் உள்பட புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்களும் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்தை வாசித்து பெரும் புகழ் பெற்றனர். எனவே இந்த நாதஸ்வரத்தை திராவிடர்களின் இசைக்கருவி என அழைக்கப்படுகிறது.

நரசிங்கம்பேட்டையில் ஆச்சா மரங்களை கொண்டு நாதஸ்வரத்தை சுமார் 15 குடும்பத்தினர் தற்போது வடிவமைத்து வருகின்றனர். இந்த நாதஸ்வரம் 2 ½ அடி நீளத்தில் வெட்டி அதனை கடைந்து, உள்துவாரம் இட்டு, 12 துளைகளை மிகவும் கவனமாகயிட்டு உருவாக்கப்படு –கிறது.

இதையடுத்து தமிழ்நாட்டில் இதுவரை 46 பொருட்கள் புவிசார் குறியீடு பெறப்பட்டதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்தை சேர்த்து 10 பொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

5. ஆட்டிசம் விழிப்புணர்வு ஏற்படுத்த பாக் ஜலசந்தி கடலை 13.05 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்த சிறுமி

ஆட்டிசம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இலங்கை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 13.05 மணி நேரத்தில் ஆட்டிசம் பாதித்த மும்பை சிறுமி ஜியாராய் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

மும்பையைச் சேர்ந்த கடற்படை வீரர் மதன்ராய் என்பவரின் மகள் ஜியாராய் (13). ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட இச்சிறுமி நீச்சல் பயிற்சியில் கைதேர்ந்தவர். ஏற்கெனவே பல சாதனைகளை படைத்துள்ளார்.

இந்நிலையில், ஆட்டிசம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை பாக் ஜலசந்தி கடலை நீந்தி சாதனை புரிவதற்காக ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து விசைப்படகு மற்றும் பைபர் படகில் ஜியாராய், அவரது தந்தை மதன்ராய், பயிற்சியாளர் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட 10 பேர் தலைமன்னாருக்கு நேற்று முன்தினம் சென்றனர். நேற்று அதிகாலை 4.15 மணிக்கு நீந்தத் தொடங்கிய ஜியாராய் நேற்று மாலை 5.20 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியை வந்தடைந்தார்.

இவர் தலைமன்னார் – தனுஷ்கோடி இடையிலான 29 கி.மீ. தூரத்தை 13 மணி 5 நிமிடத்தில் நீந்தி கடந்துள்ளார். அரிச்சல் முனையில் தமிழக டிஜிபி சைலேந்திர பாபு, சிறுமி ஜியா ராய்க்கு சால்வை அணிவித்தும், பூங்கொத்து கொடுத்தும் வாழ்த்து தெரிவித்தார்.

---

1. ஆக்சிஸ் வங்கியின் உதவியுடன், 'டிஜிட்டல் பள்ளி நலவாழ்வு தளம்' தொடங்கப்பட்ட மாநிலம் / UT எது?

அ) புது தில்லி

ஆ) பீகார்

இ) புதுச்சேரி ☑

ஈ) கோவா

✓ சுமார் 2. 4 லட்சம் மாணவர்களின் உடல்நலம் குறித்த தகவல்களை டிஜிட்டல்மயமாக்குவதற்காக புதுச்சேரி அரசு அண்மையில், 'டிஜிட்டல் பள்ளி நலவாழ்வு தளத்தை' அறிமுகப்படுத்தியது. ஆக்சிஸ் வங்கியின் உதவியுடன் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

✓ இதன்கீழ், மாணவர்களின் ஊட்டச்சத்து மதிப்பீட்டைக் கொண்டு அவர்கட்கு இரத்தசோகை உண்டா இல்லையா என்பதைக் கண்டறியவியலும். மேலும் அதற்கேற்ப சிகிச்–சைகளையும் மேற்கொள்ள முடியும்.

---

2. நாட்டின் முதல் மருத்துவ நகரமான, 'இந்திரயாணி மெடிசிட்டி'யை நிறுவவுள்ள இந்திய மாநிலம் எது?

அ) உத்தரகாண்ட்

ஆ) மகாராஷ்டிரா ☑

இ) ராஜஸ்தான்

ஈ) ஹிமாச்சல பிரதேசம்



✓ நாட்டின் முதல் மருத்துவ நகரம் புனேவில் அமைக்கப்படும் என மகாராஷ்டிர மாநில அரசு பட்ஜெட் தாக்கலின்போது அறிவித்தது. 'இந்திரயாணி மருத்துவ நகரம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள இது, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகள் மற்றும் அனைத்து வகை சிறப்பு சிகிச்சைகளை –யும் ஒரே கூரையின்கீழ் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. 'சர்வதேச துணிச்சல்மிக்க பெண்மணி விருது – 2022' வென்ற பூமிகா ஸ்ரேஸ்தா சார்ந்த நாடு எது?

அ) இலங்கை

ஆ) நேபாளம் ☑

இ) இந்தியா

ஈ) மியான்மர்



✓ நேபாளத்தின் திருநங்கைகள் உரிமை ஆர்வலர் பூமிகா ஸ்ரேஸ்தா, ஐக்கிய அமெரிக்க மாகாணங்கள் துறையின் மதிப்புமிக்க சர்வதேச துணிச்சல்மிக்க பெண்மணி விருது, 2022–க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

✓ LGBTQI+ சமூகத்தின் வாழ்வை மேம்படுத்துவதற்கான அவரது அர்ப்பணிப்புக்காக இந்த விருது அறிவிக்கப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டில், முஸ்கன் காதுன் என்னும் மற்றொரு நேபாள ஆர்வலர், அமிலத்தாக்குதல்களுக்கு எதிரான தனது பணிக்காக இவ்விருதை வென்றார்.

---

4. 'UPI லைட்' கட்டணப் பரிவர்த்தனையின் உச்சவரம்பு எவ்வளவு?

அ) ₹100

ஆ) ₹200 ☑

இ) ₹500

ஈ) ₹1000

✓ இந்திய தேசிய கொடுப்பனவு கழகமானது (NPCI) 'UPI லைட்'டை அறிமுகப்படுத்தவுள்ளது. இது இணையமற்ற பயன்முறையில் சிறிய மதிப்பிலான பரிவர்த்தனைகளை செயல்படுத்தும்.

✓ 'UPI லைட்' கட்டணப்பரிவர்த்தனையின் அதிகபட்ச வரம்பு ₹200ஆக இருக்கும். சாதனத்தில் உள்ள 'UPI Lite' பணப் பையின் மொத்த வரம்பு ₹2,000ஆக இருக்கும்.

---

5. காலமுறை தொழிலாளர் படை கணக்கெடுப்பை (PLFS) வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) தேசிய புள்ளியியல் அலுவலகம் ☑

இ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

✓ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட சமீபத்திய காலமுறை தொழிலாளர்படை கணக்கெடுப்பின் படி, இந்தியாவின் நகர்ப்புற வேலையின்மை விகிதம் 2021 ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 12.6%ஆக உயர்ந்து உள்ளது. இந்த விகிதம் ஜனவரி–மார்ச் காலாண்டில் 9.3 சதவீதமாக இருந்தது.

---

6. 2022 – இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?

அ) டோக்கியோ

ஆ) புது தில்லி ☑

இ) சென்னை

ஈ) ஒசாகா



✓ இந்தியா–ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு 2022–இன் போது புதுதில்லியில் பிரதமர் மோடியும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, ஜப்பான் இந்தியாவில் 5 டிரில்லியன் யென் அல்லது ₹3.2 இலட்சம் கோடி முதலீடு செய்ய உள்ளதாக இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

✓ ஜப்பானிய அரசாங்கத்தின் தலைவராக ஜப்பான் பிரதமர் இந்தியா வருவது இது முதல் முறையாகும்.

---

7. விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்களை அழிக்கக்கூடிய, 'Relativistic Klystron Amplifier (RKA)'யை உருவாக்கியுள்ள நாடு எது?

அ) இந்தியா ஆ) ரஷ்யா

இ) சீனா ☑ ஈ) இஸ்ரேல்



- ✓ சீனா அண்மையில் "Relativistic Klystron Amplifier (RKA)" என்ற ஒரு நுண்ணலை எந்திரத்தை உருவாக்கியுள்ளது. இது விண்வெளியில் உள்ள செயற்கைக்கோள்களை அழிக்கும் திறன்கொண்டதாகும். இந்தச் சாதனத்தால் Ka–கற்றையில் 5–மெகாவாட் அளவிலான அலை வெடிப்பை உருவாக்க முடியும்.
- ✓ இது உள்நாட்டு மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் மின்காந்த நிறமாலையின் ஒருபகுதி ஆகும். இயக்கப்பட்ட ஆற்றல் ஆயுதங்கள் (Directed Energy Weapons) எதிரியின் உபகரணங்களை அழிப்பதற்கு செறி –வூட்டப்பட்ட மின்காந்த ஆற்றலைப் பயன்படுத்துகின்றன.

---

8. உயிரியல் மற்றும் நச்சு ஆயுதங்கள் தீர்மானம் குறித்து எந்தச் சர்வதேச அமைப்பில் இந்தியா வாதிட்டது?

அ) அகதிகளுக்கான ஐநா உயராணையகம்

ஆ) ஐநா பாதுகாப்பு அவை ☑



இ) ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

ஈ) பன்னாட்டு நீதிமன்றம்

- ✓ ஐநா பாதுகாப்பு அவையில் (UNSC) உயிரியல் மற்றும் நச்சு ஆயுதங்கள் குறித்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. பேரழிவு தரும் இந்த வகை ஆயுதங்களின் அனைத்து வடிவங்களையும் தடைசெய்யும் BTWC தீர்மானத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக இந்தியா அறிவித்தது.

---

9. 'MV இராம் பிரசாத் பிஸ்மில்' என்பது அண்மையில் எந்த ஆற்றில் பயணித்த மிக நீளமான கப்பலாகும்?

அ) கங்கை

ஆ) பிரம்மபுத்திரா ☑



இ) நர்மதை

ஈ) கிருஷ்ணா

- ✓ 'MV இராம்பிரசாத் பிஸ்மில்' என்ற கலம் பிரம்மபுத்திராவில் பயணஞ்செய்ததை அடுத்து மிகநீளமான கப்பலை பயணிக்க வைத்த ஒரு மைல்கல்லை சாதனையை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் எட்டியது. 90 மீட்டர் நீளமுள்ள இந்தக் கப்பல் 26 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது.

---

10. உலக வாய்நல நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) மார்ச்.20 ☑

World Oral Health Day
20 March

ஆ) மார்ச்.21

இ) மார்ச்.22

ஈ) மார்ச்.23

- ✓ வாய்நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.20ஆம் தேதி உலக வாய்நல நாள் கொண்டாடப்படுகிறது. "*Be Proud of Your Mouth*" என்பது நடப்பாண்டில் (2022) வரும் உலக வாய்நல நாளுக்கானக் கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன்: இறுதிப்போட்டியில் லக்ஷயா சென் தோல்வி

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டி பர்மிங்காம் நகரில் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 11ஆவது இடம் வகிக்கும் இந்தியாவின் லக்ஷயா சென், 'நம்பர் ஒன்' வீரரும், ஒலிம்பிக் சாம்பியனுமான விக்டர் ஆக்சல்சென்னிடம் (டென்மார்க்) 21–10, 21–15 என்ற நேர் செட்டில் வீழ்ந்து வீழ்த்தி வெள்ளிப்பதக்கத்தை வசப்படுத்தினார்.

---

2. ஆஸ்திரேலியாவில் இருந்து மீட்கப்பட்ட 29 பழங்கால பொருட்களை பார்வையிட்டார் பிரதமர் மோடி

ஆஸ்திரேலியாவில் இருந்து மீட்கப்பட்ட 29 பழங்கால அரிய கலைப்பொருட்களை பிரதமர் பார்வையிட்டார்.

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட சிலைகள் உட்பட 29 பழங்காலப் பொருட்களை ஆஸ்திரேலியாவிலிருந்து மத்திய அரசு மீட்டுள்ளது. இந்தப் பழங்காலப் பொருட்கள் இராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களை சேர்ந்தவை.

ஆஸ்திரேலியாவிலிருந்து மீட்டு இந்தியா கொண்டுவரப்ப –ட்ட 29 பொருட்களும் சிவன், சக்தி, விஷ்ணு, ஜெயின் பாரம்பரியம், உருவப்படங்கள் மற்றும் அலங்கார பொருட்கள் என ஆறு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த பழங்கால பொருட்களும் மணற்கல், பளிங்கு, வெண்கலம், பித்தளை, காகிதம் போன்ற பொருட்களால் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பொருட்களை தில்லியில் பிரதமர் மோடி பார்வையிட்டார்.

இதனிடையே, இந்தியா–ஆஸ்திரேலியா இடையிலான உச்சிமாநாடு காணொலிக்காட்சிமூலம் நடைபெற்றது. ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசனுடன் பிரதமர் மோடி காணொலிக்காட்சிமூலம் பேசினார். அப்போது, இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட பழங்காலப் பொருட்களை திருப்பி அனுப்பியதற்காக ஸ்காட் மோரிசனுக்கு இந்தியர்கள் அனைவரின் சார்பிலும் பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். இந்தியா–ஆஸ்திரேலியா இடையிலான ஒத்துழைப்பு வேகமாக வளர்ந்து வருவதாகவும் மோடி கூறினார். மேலும், இந்தோ – பசிபிக் பகுதியின் வளர்ச்சியில் இருநாடுகளும் இணைந்து தொடர்ந்து கவனம் செலுத்துவது, ஐரோப்பாவில் நிலவும் பதற்றமான சூழல் ஆகியவை குறித்து இருநாட்டு தலைவர்களும் விவாதித்தனர்.

---

3. உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு: ஐநா ஆலோசனைக் குழுவில் இந்திய பொருளாதார அறிஞர்

குறைந்தபட்சம் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஆக்கபூர்வ ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஐநாஇன் புதிய உயர்நிலை ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்திய பொருளாதார அறிஞர் ஜயதி கோஷ் (66) நியமிக்கப்பட்டுள்ளார்.

4. உலக தண்ணீர் நாள்

ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.22 அன்று உலக தண்ணீர் நாள் கொண்டாடப்படுகிறது. நீர்வளங்களின் நிலைத் தன்மைமிக்க மேலாண்மையை வலியுறுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

"நிலத்தடிநீர் – காணாததை காண வைத்தல்" என்னும் கருப்பொருளில் இந்த ஆண்டு (2022) உலக தண்ணீர் நாள் கொண்டாடப்படுகிறது.

---

5. மேகேதாட்டு அணைக்கு நிதி ஒதுக்கிய கர்நாடக அரசை கண்டித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்

மேகேதாட்டுவில் புதிய அணை கட்ட நிதி ஒதுக்கியுள்ள கர்நாடக அரசைக் கண்டித்து, தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது:

காவிரி நடுவர் மன்றம் 2007ஆம் ஆண்டு பிப்.5ஆம் தேதி அளித்த இறுதித்தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றம் 2018 பிப் 16ஆம் தேதி அளித்த தீர்ப்பை மதிக்காமலும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலை பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியை பெறாமலும் தன்னிச்சையாக காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட நிதி ஒதுக்குவதை எவ்வகையிலும் ஏற்க முடியாது. எனவே, கர்நாடக அரசின் செயலுக்கு பேரவை கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

கர்நாடகாவின் மேகேதாட்டு அணை திட்டத்துக்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எந்த அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படுகிற –து. காவிரி நதிநீர்ப் பிரச்சினை ஒரு நீண்டகால பிரச்சினையாகும். இதற்கு தீர்வாக கடந்த 2018 பிப்.16ஆம் தேதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினை இரு மாநிலங்களின் உணர்வு பூர்வமான பிரச்சினையாகும்.

எனவே, கர்நாடக அரசு மேகேதாட்டுவிலோ, வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எந்தவித புதிய நீர்த்தேக்க திட்டத்தையும் மற்ற படுகை மாநிலங்கள், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசை அறிவுறுத்தும்படி மத்திய அரசை பேரவை கேட்டுக் கொள்கிறது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்த காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்படாத நிலையில், மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதற்கு அனுமதியளிக்கவோ கூடாதென ஆணையத்தை பேரவை கேட்டுக் கொள்கிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

---

1. 'G20 People's Climate Vote 2021' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) UNDP ☑

ஆ) UNESCO

இ) உலக வங்கி

ஈ) WHO

✓ அண்மையில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தால் (UNDP) வெளியிடப்பட்ட, 'G20 People's Climate Vote 2021' அறிக்கையின்படி, இந்தியாவிலுள்ள 67% இளைஞர்கள் காலநிலை நெருக்கடியை உலகளாவிய அவசரநிலை என்று கருதுகின்றனர்.

✓ அவசரக் கொள்கை உருவாக்கம் மற்றும் மாற்றத்தின் அவசியம் குறித்தும் இளைஞர்கள் குரல் கொடுக்கின்றனர். அதேசமயம், பருவநிலை மாற்றத்தை உலகளாவிய அவசரநிலையாகக் கருதும் வயதுவந்தோருள் இந்திய தேசத்தில் 58% பேர் மட்டுமே உள்ளனர்.

---

2. இந்திய கடற்படை நாள் கொண்டாடப்படுகிற தேதி து?

அ) மார்ச் 10

ஆ) டிசம்பர் 04 ☑



இ) பிப்ரவரி 10

ஈ) ஆகஸ்ட் 04

✓ 1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரின்போது, 'ஆபரேஷன் டிரைடென்ட்' நடவடிக்கையில் இந்திய கடற் படையின் எதிர்த்தாக்குதலுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஆண்டுதோறும் டிச.4 அன்று இந்திய கடற்படை நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு (2021), "*ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்*" என்ற கருப்பொருளின்கீழ் கடற்படை இந்த நிகழ்வைக்கொண்டாடியது.

---

3. 2022 – உலக நுகர்வோர் உரிமைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Consumer Rights First

ஆ) Leaving No one Behind

இ) Fair Digital Finance ☑

ஈ) Sustainable Consumerism

✓ உலகளாவிய நுகர்வோர் உரிமைகள் நாளானது மார்ச் 15 அன்று நுகர்வோரின் உரிமைகளை அங்கீகரிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.

✓ ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதும் இந்த நாளைக் கொண்டாட ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் பின்பற்றப்படுகி –றது. நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான உலக நுகர்வோர் உரிமைகள் நாளின் கருப்பொருள், "*Fair Digital Finance*".

---

4. தேசிய சுற்றுலா நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஜன.25 ☑ ஆ) பிப்.25

இ) மார்ச்.25 ஈ) ஏப்.25

✓ சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் பொருளாதாரத்தில் அதன் தாக்கம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.25 அன்று நாடு முழுவதும் தேசிய சுற்றுலா நாள் கொண்டாடப்படுகிறது.

✓ இந்த ஆண்டு, சுற்றுலா அமைச்சகம் 'அமுதப்பெருவிழா' என்ற பெயரில் தேசிய சுற்றுலா நாளை அனுசரிக்கிறது. "*Rural and Community Centric Tourism*" என்பது இந்த ஆண்டு தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

5. எந்த இந்திய வங்கிக்கு, IFR ஆசியாவின், 'ஆசிய வங்கிக்கான விருது' வழங்கப்பட்டுள்ளது?

அ) ஐசிஐசிஐ வங்கி

ஆ) பாரத ஸ்டேட் வங்கி

இ) ஆக்சிஸ் வங்கி ☑

ஈ) HDFC வங்கி

✓ இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி, ஈக்விட்டி மற்றும் கடன் வழங்குவதில் அதன் செயல்திறனுக்காக, IFR ஆசியாவின் ஆசிய வங்கிக்கான விருதைப்பெற்றுள்ளது. இந்த ஆண்டு, பைனான்ஸ் ஆசியாவின் விருதுகளில், 'இந்தியாவின் சிறந்த DCM ஹௌஸ்' விருதையும் அது வென்றுள்ளது.

✓ 2021 டிச.31 நிலவரப்படி, அவ்வங்கிக்கு நாடு முழுவதும் 4,700 உள்நாட்டு கிளைகள் மற்றும் 11,060 ATM–கள் உள்ளன.

---

6. சமீபத்தில் முதன்முறையாக மெட்டாவெர்ஸில் நுழைந்த வங்கி எது?

அ) உலக வங்கி

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

இ) JP மோர்கன் ☑

ஈ) சிட்டி யூனியன் வங்கி

✓ JP மோர்கன் மெட்டாவெர்ஸில் ஓர் அங்காடியை அமைத்த உலகின் முதல் வங்கியாக மாறியுள்ளது. அமெரிக்காவின் மிகப்பெரிய வங்கியான இவ்வங்கி, பிளாக்செயின் அடிப்ப –டையில் இயங்கும் ஓர் உலகான டீசென்ட்ராலாந்தில் இதனைத் திறந்துள்ளது.

---

7. ஏர் இந்தியாவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ) N சந்திரசேகரன் ☑



ஆ) நந்தன் நிலேகனி

இ) சஞ்சீவ் மேத்தா

ஈ) தீபக் பரேக்

✓ டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் N சந்திரசேகரன், இந்திய அரசாங்கத்திடமிருந்து அண்மையில் டாடா குழுமத்தால் கையகப்படுத்தப்பட்ட ஏர் இந்தியா என்ற விமான நிறுவனத்தின் தலைவராக அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ ஜெனரல் இன்சூரன்சு கழகத்தின் முன்னாள் CMD ஆலிசு ஜீ வர்கீசு வைத்யன் மற்றும் ஹிந்துஸ்தான் யூனிலீவரின்

தலைவர் சஞ்சீவ் மேத்தா ஆகியோர் இந்தக் குழுவில் தன்னாட்சிமிக்க இயக்குநர்களாக சேர்க்கப்பட்டனர்.

---

8. 2022 – ஜெர்மன் ஓபன் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்?

அ) P V சிந்து

ஆ) கிடாம்பி ஸ்ரீகாந்த்



இ) லக்ஷ்யா சென் ☑

ஈ) சாய்நா நேவால்

✓ 2022 – ஜெர்மன் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்திய பாட்மிண்டன் வீராங்கனை லக்ஷ்யா சென், தாய்லாந்தின் மூத்த வீரரும், உலகின் இருபாதாம் நிலை வீரருமான குன்லௌட் விடிட்சார்னைச் சந்தித்தார். இதில் லக்ஷ்யா சென், விடிட்சார்னுக்கு எதிராக அபாரமாக போராடி வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

---

9. 2022 – பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கின் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா



இ) நார்வே ☑

ஈ) ஜப்பான்

✓ 2022 – பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் பதினாறு தங்கப்பதக்கங்களுடன் நார்வே தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலிடம் பிடித்தது.

✓ அதைத்தொடர்ந்து ஜெர்மனி 12 தங்கங்களையும், சீனா 9 தங்கங்களையும் பெற்றன.

---

10. 2022 – ISSF உலகக்கோப்பை பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?

அ) இந்தியா ☑



ஆ) சீனா

இ) பிரான்ஸ்

ஈ) ரஷ்யா

✓ எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்ற 2022 – ISSF உலகக் கோப்பையில் இந்தியா நான்கு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் 1 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது. நார்வே ஆறு பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

✓ இந்தியாவின் சார்பாக தங்கம் வென்றவர்கள்: பெண்கள் 25 மீ பிஸ்டல் அணி – (ரகி சர்னோபத், ஈஷா சிங் மற்றும் ரிதம் சங்வான்); ஆடவர்களுக்கான 10 மீ ஏர் பிஸ்டல் – சௌரப் சௌத்ரி; மகளிருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் அணி – (ஈஷா சிங், நிவேதா பரமானந்தம், ருசிரா வினர்கர்) மற்றும் 25 மீ ரேபிட் பையர் பிஸ்டல் கலப்பணி – (ரிதம் சங்வான் மற்றும் அனிஷ் பன்வாலா).

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வீடுகளின் விலை அதிகரிப்பு: உலக பட்டியலில் இந்தியாவுக்கு 51–ஆவது இடம்

உலக அளவில் வீடுகளின் விலை அதிகரிப்பு பட்டியலில் இந்தியா 2.1 சதவீதத்துடன் 51ஆவது இடத்தில் இருப்பதாக சொத்து ஆலோசனை நிறுவனமான நைட் ப்ராக் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது:

உலக அளவில் மிக முக்கிய நகரங்களில் வீடுகளின் விலை ஆண்டுக்கு ஆண்டு வேகமாக அதிகரித்து வருகிறது. இந்தப் பட்டியலில் கடந்தாண்டு அக்–டிசம்பர் காலாண்டு நிலவரப்படி 59.6% விலை அதிகரிப்புடன் துருக்கி முதலிடத்தில் உள்ளது.

அதற்கடுத்தபடியாக, நியூஸிலாந்து (22.6%), செக் குடியரசு (22.1%), ஸ்லோவேக்கியா (22.1%), ஆஸ்திரேலியா (21.8%) ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியா 2.1 சதவீத உயர்வுடன் இப்பட்டியலில் 51–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த 2021–இல், மலேசியா, மால்டா, மொரக்கோ நாடுகளின் சந்தைகளில் வீடுகளின் விலை முறையே 0.7%, 3.1% மற்றும் 6.3% குறைந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

2. இந்தியாவின் வளர்ச்சி மதிப்பீட்டை 8.5%–ஆக குறைத்தது பிட்ச்

அடுத்த நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 8.5 சதவீதமாக குறைத்துள்ளதாக தரமதிப்பீட்டு நிறுவனமான பிட்ச் தெரிவித்தது.

இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது:

ரஷியா மற்றும் உக்கரைன் இடையேயான போர் சர்வதேச அளவில் பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது. ரஷியா மீது அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகள் தொடர்ச்சியாக வர்த்தக தடை அறிவிப்புகளை வெளியிட்டு வருவது சர்வதேச நிலைத்தன்மையை கேள்விக்குறியாக்–கியுள்ளது. இதனால் வரும் நாள்களில் எரிபொருள்களின் உயரும் என்பதுடன் பணவீக்கமும் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற பல்வேறு பின்னடைவு சூழல்களைக் கருத்தில்கொண்டு அடுத்த நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை 10.3 சதவீதத்தி–லிருந்து 8.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீடு 0.6 சதவீதம் உயர்த்தப்பட்டு 8.7 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2023–24–இல் இந்த வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கும் என பிட்ச் தெரிவித்துள்ளது.

---

3. மார்ச்.24 – உலக காசநோய் நாள்

கருப்பொருள்: *Invest to End TB. Save Lives*

---

4. மார்ச்.23 – தியாகிகள் நாள்

---

5. 'H2Ooooh!' முன்னெடுப்பின் கீழ் இந்திய நதிகளின் பாதுகாப்பு குறித்த 3 அனிமேஷன் படங்கள் வெளியீடு

உலக தண்ணீர் நாளையொட்டி, தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம், UNESCO மற்றும் பிற பங்குதாரர்கள் இணைந்து "H2Ooooh! – இந்தியாவின் குழந்தைகளுக்–கான நீர் திட்டம்" முன்முயற்சியின்கீழ் 3 அனிமேஷன் படங்களை வெளியிட்டனர்.

இந்திய ஆறுகளின் பாதுகாப்பை மையமாகக்கொண்டு பள்ளி மாணவர்கள் சமர்ப்பித்த கதைகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்கள் இவை ஆகும். தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கம் மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து 2021 ஜூலை மாதம் UNESCOஆல் இந்த முயற்சி தொடங்கப்பட்டது.

இது தொடங்கப்பட்டதில் இருந்து, 18 மாநிலங்களில் உள்ள 53 பள்ளிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 31000 மாணவர்கள் மற்றும் 400–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் வலுவான ஆதரவைப் பெற்றது.

---

6. மூன்று நாள் சர்வதேச புவியியல் மாநாடு தில்லியில் நிறைவடைந்தது

"அடுத்த தசாப்தத்திற்கான புவி அறிவியல்: சவால்கள் மற்றும் சமூகம்" என்ற கருப்பொருளில் மூன்று நாள் சர்வதேச புவி அறிவியல் நிகழ்வான 36ஆவது சர்வதேச புவியியல் மாநாடு நேற்று நிறைவுபெற்றது.

புவியியல் செயல்முறைகள், ஓபியோலைட் அடைப்பு, இமயமலையில் மேலோடு தடித்தல் மற்றும் உருமாற்றம், புவியியல் கரியமில சேமிப்பு உள்ளிட்டவை குறித்து மாநாட்டின் மூன்றாவது நாளில் விவாதிக்கப்பட்டது.

---

7. தமிழ்நாட்டில் உள்ள தேசிய விரைவுச் சாலைகளின் நீளம்

பாரத்மாலா திட்டத்தின் முதல் கட்டத்திற்கு முன்னும், பாரத்மாலா முதல் கட்டத்தின் போதும், 2014ஆம் ஆண்டு முதல் கட்டமைக்கப்பட்ட தேசிய விரைவுச் சாலைகளின் நீளம் (இந்த அமைச்சகத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது) தமிழ்நாட்டில் மட்டும் 106 கிலோமீட்டர் ஆகும்.

---

8. வளரிளம் பெண்களுக்கான திட்டம்

நாடு முழுவதும் 11 வயது முதல் 14 வயது உள்ள பள்ளிக்குச்செல்லாத வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதில் இத்திட்டம் கவனஞ்செலுத்துகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வளரிளம் பெண்களுக்கு 600 கலோரி துணை ஊட்டச்சத்துக்கள், 18 முதல் 20 கிராம் புரதச்சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆண்டுக்கு 300 நாட்கள் வழங்கப்படுகிறது.

சமீபத்தில், வளரிளம் பெண்களுக்கான திட்டம், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டது.

11 முதல் 14 வயதுடைய பெண்கள், கல்வி உரிமைச் சட்டம் 2009இன்கீழ் கொண்டுவரப்பட்டனர். இந்த மாற்றியமைக்–கப்பட்ட திட்டத்தின் பயனாளிகளாக முன்னேற விரும்பும் மாவட்டங்கள் மற்றும் வடகிழக்கு மாவட்டங்கள் உள்ள 14 வயது முதல் 18 வயதுள்ள பெண்களும் அடங்குவர்.

தமிழ்நாட்டில் 299 பயனாளிகள் உள்ளனர். இவர்களுக்–கான கடந்த 2020–21ஆம் ஆண்டில் ₹1.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

---

9. ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ₹250 கோடி ஒதுக்கீடு

நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, ஊட்டச்சத்து திட்டம் கடந்த 2018 மார்ச்.8ஆம் தேதி தொடங்கப்பட்டது. 6 வயது வரை உள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பினிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு ₹250 கோடியே 60 இலட்சத்து 44 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ₹218 கோடியே 79 இலட்சத்து 36 ஆயிரத்தை தமிழ்நாடு பயன்படுத்தியுள்ளது.

---

10. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஊக்கம்மிக்க மூன்று பெண்கள் NITI ஆயோக்–இன், "இந்தியாவின் மாற்றத்திற்கான பெண்கள்" விருதுகளைப் பெற்றுள்ளனர்.

"வலிமையும், திறமையும் மிக்க இந்தியா" என மாற்றத்தை ஏற்படுத்துவதில் பெண்கள் தொடர்ந்து முக்கியப்பங்களிப்பு செய்து வருகின்றனர். பல்வேறு துறைகளில் இத்தகைய பெண்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், NITI ஆயோக் இந்தியாவின் மாற்றத்திற்கான பெண்கள் விருதுகளை நிறுவியுள்ளது.

இந்த ஆண்டு இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டுப் பெருவிழாவின் பகுதியாக 75 பெண் சாதனையாளர்களு–க்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இவற்றுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று பெண்கள் அவ்விருதைப் பெற்றுள்ளனர். அவர்கள்.,

1. வித்யா சுப்பிரமணியன், சென்னை, வித்யா சுப்பிரமணியன் கல்வி நிறுவனம்.

2. டாக்டர் இரம்யா S மூர்த்தி, சென்னை, நிர்மயா இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிட்.

3. தேவிபாலா உமாமகேஸ்வரன், சென்னை, பிக்பிக்ஸ் கேட்ஜெட் கேர் எல்எல்பி.

---

1. 2022–FIFA உலகக்கோப்பையை நடத்தும் நாடு எது?

அ) நியூசிலாந்து

ஆ) UK

இ) கத்தார் ☑

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ '2022 – FIFA உலகக்கோப்பை' போட்டிகள் கத்தாரில் நடைபெறவுள்ளது. 32 நாடுகள் பங்கேற்கும் இப்போட்டி 2022 நவம்பர் மாதம் முதல் அல் பேட் மைதானத்தில் தொடங்கும். தென் கொரியா மற்றும் ஜப்பான் இணைந்து நடத்திய 2022ஆம் ஆண்டு உலகக்கோப்பை போட்டிக்குப் பிறகு தற்போது இரண்டாவது முறையாக ஆசியாவில் இப்போட்டி நடைபெறுகிறது.

---

2. பயனுள்ள பன்முகத்தன்மைக்கான ஐக்கிய நாடுகளின் ஆலோசனைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ) இரகுராம் இராஜன்



ஆ) ஜயதி கோஷ் ☑

இ) அபிஜித் பானர்ஜி

ஈ) அமர்த்தியா சென்

✓ ஜயதி கோஷ் ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸால் பயனுள்ள பன்முகத்தன்மைக்கான ஐநா ஆலோசனைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் லைபீரிய அதிபரும் நோபல் பரிசு பெற்றவருமான எலன் ஜான்சன் சர்லீப் மற்றும் முன்னாள் சுவீட பிரதம மந்திரி ஸ்டீபன் லோப்வென் ஆகியோர் இணைந்து இப்புதிய குழுவை நிறுவியதாக குடெரெஸ் அறிவித்தார்.

---

3. 2008ஆம் ஆண்டுக்கான 'Limited Liability Partnership' –க்கான திருத்தங்கள் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரவுள்ளது?

அ) மார்ச்.1



ஆ) ஏப்ரல்.1 ☑

இ) மே.1

ஈ) ஜூன்.1

✓ 'Limited Liability Partnership' – 2008–க்கான திருத்தங்கள் ஏப்ரல்.1 முதல் அமலுக்கு வரவுள்ளது. இத்திருத்தம், 'Small Limited Liability Partnership' என்ற கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. LLP–கள் என்பது ₹40 இலட்சம் வரையிலான விற்றுமுதலையோ அல்லது ₹50 கோடிக்கு மிகாத நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் கொண்டிருப்ப –தையோ குறிக்கின்றது.

✓ சில LLP–களை 'ஸ்டார்ட்–அப் LLP'–களாக நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

---

4. ரஷ்யாவைச் சார்ந்திருத்தலைக் குறைத்துக்கொள்வத –ற்காக, ஜெர்மனி, பின்வரும் எந்த வடகிழக்கு நாட்டுடன் எரிசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

அ) குவைத்



ஆ) கத்தார் ☑

இ) ஓமான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ ஜெர்மனி கத்தாருடன் நீண்டகால ஆற்றல் கூட்டாண்மை –யாக ஓர் எரிசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஜெர்மனிக்கு எரிவாயு விநியோகிக்கும் மிகப்பெரிய நாடாக ரஷ்யா இருந்துவருகிறது.

✓ ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமிக்கத் தொடங்கிய பிறகு, ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரமான ஜெர்மனி, ரஷ்ய எரிசக்தி ஆதாரங்களைச் சார்ந்திருக்க விரும்பவில் –லை. கத்தார் அமீரும் ஜெர்மனியின் அமைச்சரும் எரிசக் –தி துறையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற் –கான வழிகள் குறித்தும் விவாதித்தனர்.

---

5. இந்தியாவின் எந்த மத்திய அமைச்சகம், "இந்தியா & ஆர்க்டிக்: நிலையான வளர்ச்சிக்கான கூட்டாண்மையை உருவாக்கல்" என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியது?

அ) புவி அறிவியல் அமைச்சகம் ☑

ஆ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

இ) பாதுகாப்பு அமைச்சகம்



ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ "இந்தியா மற்றும் ஆர்க்டிக்: நிலையான வளர்ச்சிக்கான கூட்டாண்மையை உருவாக்குதல்" என்ற கொள்கையை மத்திய புவி அறிவியல் அமைச்சர் ஜிதேந்திர சிங் வெளியிட்டார். இந்தக் கொள்கை, வளங்கள் நிறைந்த ஆர்க்டிக் பிராந்தியத்துடன் நாட்டின் கூட்டாண்மையை ஆழப்படுத்த எண்ணுகிறது.

✓ ஆர்க்டிக் கவுன்சிலில் பார்வையாளர் அந்தஸ்தில் உள்ள 13 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. துருவப்பகுதிகளுக்கும் இமயமலைக்கும் இடையேயுள்ள தொடர்பை ஆராயவும் இந்தக் கொள்கை எண்ணுகிறது.

---

6. அழிந்துவரும், 'பொன்னிற மந்தி' இனத்தின் பூர்வீக நாடுகள் எவை?

அ) இந்தியா மற்றும் பூடான் ☑



ஆ) இந்தியா மற்றும் இலங்கை

இ) இந்தியா மற்றும் வங்காளதேசம்

ஈ) லாவோஸ் மற்றும் கம்போடியா

✓ பொன்னிற மந்தி (*Trachypithecus geei*) என்பது பூடான் மற்றும் இந்தியாவின் எல்லையில் பரவியிருக்கும் ஓர் அழிந்துவரும் உயர்விலங்கினமாகும்.

✓ சமீபத்திய ஆய்வின்படி, பொன்னிற மந்தியின் வாழ்விடங் –கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வருகின்றன. இவ்வுயிரினங்களின் வாழ்விடங்களில் அதிகரிக்கும் மனித நடமாட்டங்கள் காரணமாக மனித–பொன்னிற மந்தி மோதலின் தீவிரம் அதிகரித்து வருகிறது.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'MH17 கிராஷ்' நிகழ்ந்த நாடு எது?

அ) ஆஸ்திரேலியா



ஆ) மலேசியா

இ) உக்ரைன் ☑

ஈ) சீனா

✓ 2014ஆம் ஆண்டில் கீழை உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியில், கிரிமியாவை உருஷியப்படைகள் இணைத்த போது, மலேசிய ஏர்லைன்ஸ் வானூர்தியான, 'MH17' வீழ்த்தப்பட்டதில் ரஷ்யாவின் பங்கு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. சமீபத்தில், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்கு மத்தியில், ஆஸி., மற்றும் நெதர்லாந்து ஆகியவை, 'MH17' விபத்து வழக்கு தொடர்பாக ரஷ்யாவிற்–கு எதிராக ஒரு புதிய சட்ட வழக்கைத்தொடங்கவுள்ளன.

---

8. உலகிலேயே முதன்முறையாக கார்பன் கட்டண வீதத்தை முன்மொழிந்த உலகளாவிய சங்கம் எது?

அ) ஐரோப்பிய ஒன்றியம் ☑



ஆ) NATO

இ) G20

ஈ) G7

✓ ஐரோப்பிய தொழிற்துறையைப் பாதுகாக்கும் நோக்கில், எஃகு, சிமென்ட், உரங்கள், அலுமினியம் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் இறக்குமதிக்கு கார்பன் கட்டண வீதத்தை உலகிலேயே முதன்முறையாக ஐரோப்பிய ஒன்றியம் முன்மொழிந்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சமீபத்தில் மாசுபடுத்தும் பொருட்களின் இறக்குமதிமீது உலகின் முதல் கரியமில வாயு உமிழ்வு கட்டணத்தை விதிக்கும் சங்கத்தின் திட்டத்தை ஆதரித்தன.

---

9. 'நகரத்தில் உள்ள அனைத்து மெட்ரோ நிலையங்களு–க்கும் அதிவேகமாக பயணம் செய்ததற்கான' கின்னஸ் உலகசாதனையை படைத்த மெட்ரோ நெட்வொர்க் எது?

அ) சென்னை மெட்ரோ



ஆ) தில்லி மெட்ரோ ☑

இ) கொச்சி மெட்ரோ

ஈ) மும்பை மெட்ரோ

✓ தில்லி மெட்ரோ இரயில் கழக ஊழியர் பிரபுல் சிங், நகரில் உள்ள அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கும் வேகமாகப் பயணம் செய்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார். இதன்மூலம், நகரின் அனைத்து 254 நிலையங்களுக்கும் 348 கிமீ தூரத்தை வெறும் 16 மணி 2 நிமிடங்களில் பயணித்த உலகின் முதல் நபர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

---

10. SKOCH மாநில நிர்வாக தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம் ☑ ஈ) தெலுங்கானா



✓ SKOCH மாநிலத்தின் நிர்வாக தரவரிசையில், ஆந்திர பிரதேசம் தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. SKOCH மாநில நிர்வாக தரவரிசை – 2021 ஆவணத்தின்படி, ஆந்திர பிரதேச மாநிலம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக ஒரு நட்சத்திரம் (தரநிலை 1 முதல் 5 வரை) கொண்டுள்ளது மாநிலம் என்பதைக் கூறுகிறது. 2021–இல் தென்னிந்தியாவிலிருந்து 'ஸ்டார்' மதிப்பீடு பெற்ற ஒரே மாநிலம் இதுவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவில் மார்ச் 31இல் முடிவுக்கு வரும் கரோனா கட்டுப்பாடுகள்; முகக்கவசம் அணிதல், தனிமனித இடைவெளி மட்டும் அவசியம்

நாட்டில் நீடித்துவரும் கரோனா கட்டுப்பாடுகள் மார்ச்.31 ஆம் தேதியுடன் முடிவுக்கு வருகிறது என்றும், இருப்பினும் மக்கள் தொடர்ந்து முகக்கவசம் அணிந்து, தனிமனித இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச்.22ஆம் தேதி முதல் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது. கரோனாவின் முதல் அலையில் தொடர்ந்து எட்டு மாதங்கள் நீடித்த பொது முடக்கம் பின்பு படிப்படியாக விலக்கிக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து இரண்டாம் அலையின்போது பொது முடக்கம் அறிவிக்கப்பட்டு விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்தியாவில் மூன்றாவது அலை கரோனா பரவல் பிப்ரவரியில் முடிவடைந்து விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் படிப்படியாக பொது முடக்கம் தளர்த்தப்பட்டு பொதுப்போக்குவரத்து அனுமதிக்கப்பட்டாலும் சில கரோனா கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்து வந்தன. இந்த நிலையில், நாடு முழுவதும் கரோனா பாதிப்புகளின் எண்ணிக்கை குறைந்து வருவதைத் தொடர்ந்து, COVID –19 கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்காக அமல்படுத்தப்பட்ட பேரிடர் மேலாண்மை சட்டம் 2005–ன் விதிகளை ரத்து செய்ய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இருந்தபோதிலும் முகக்கவசம் அணிய, தனிமனித இடைவெளியைத் தொடர்ந்து கடைபிடிக்க மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

---

2. ஆஷ்லி பர்ட்டி ஓய்வு

உலகின் நம்பர் 1 டென்னிஸ் வீராங்கனையாக இருக்கும் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பர்ட்டி (25), விளையாட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

27 பட்டங்கள்...

கடந்த 2010–இல் தொழில்முறை டென்னிஸ் ஆடத் தொடங்கியது முதல் 'டீர்' நிலையிலான போட்டிகளில் இதுவரை ஒற்றையர் பிரிவில் 15, இரட்டையர் பிரிவில் 12 என 27 பட்டங்கள் வெற்றிருக்கிறார் பர்ட்டி.

3 கிராண்ட்ஸ்லாம்...

டென்னிஸ் விளையாட்டில் இருக்கும் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில், 3-இல் பட்டம் வென்றிருக்கிறார் பர்ட்டி. பிரெஞ்சு ஓபன் (2019), விம்பிள்டன் (2021), ஆஸ்திரேலிய ஓபன் (2022) ஆகியவற்றில் கோப்பை வென்றிருக்கும் அவர், அமெரிக்க ஓபனில் அதிகபட்சமாக 4-ஆவது சுற்று வரை (2018, 19) வந்திருக்கிறார்.

---

3. பாரா தடகளம்: தேசாய்க்கு தங்கம்

துபையில் நடைபெறும் பாரா தடகள கிராண்ட் ப்ரீ போட்டியில் ஓட்டப்பந்தய வீரர் பிரணவ் பிரசாந்த் தேசாய் தங்கப்பதக்கம் வென்றார். இப்போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் தங்கம் இதுவாகும்.

பதக்கப்பட்டியலில் தற்போதைய நிலையில் இந்தியா 1 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்களுடன் 15-ஆவது இடத்தில் உள்ளது.

---

1. எந்த மாநிலத்தின் முதலமைச்சராக பகவந்த் மான் பதவியேற்றார்?



அ) கோவா

ஆ) பஞ்சாப் ☑

இ) மணிப்பூர்

ஈ) இராஜஸ்தான்

✓ பஞ்சாப் மாநிலத்தின் 18ஆம் முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் பகவந்த் மான் சமீபத்தில் சண்டிகரில் உள்ள மாநில சிவில் செயலகத்தில் பதவியேற்றார். அவர் பஞ்சாபின் 18ஆவது முதலமைச்சராக, சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங்கின் பூர்வீக கிராமமான நவன்ஷஹரில் உள்ள கஹ்தர் கலனில் பதவியேற்றார்.

---

2. 2022இல் 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்தும் இந்திய நகரம் எது?



அ) ஹைதராபாத்

ஆ) சென்னை ☑

இ) புது தில்லி

ஈ) கொல்கத்தா

✓ 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் இந்த ஆண்டு இறுதியில் சென்னையில் நடக்கவுள்ளது. 190 நாடுகளைச் சேர்ந்த அணிகள் போட்டியிடும் ஈராண்டுக்கொருமுறை நடக்கும் ஒரு நிகழ்வாகும் இது. கடந்த 2013ஆம் ஆண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டிக்குப்பிறகு இந்தியாவில் நடக்கும் இரண்டாவது மிகப்பெரிய உலகளாவிய விளையாட்டுப் போட்டி இதுவாகும். இந்த நிகழ்வு, முன்னர் ரஷ்யாவில் நடத்த திட்டமிடப்பட்டது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரைத் தொடர்ந்து அது சென்னைக்கு மாற்றப்பட்டது.

---

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சக்ஷம்' என்பது எந்த ஆயுதப்படையின் கடற்புற ரோந்துக் கப்பலாகும்?

அ) இந்திய கடற்படை

ஆ) இந்திய இராணுவம்

இ) இந்திய கடலோரக் காவல்படை ☑

ஈ) இந்திய வான்படை

✓ இந்திய கடலோர காவல்படையானது 105 எம்–வகுப்பு கடற்புற ரோந்துக் கப்பல்களின் வரிசையில் ஐந்தாவது கடலோர காவல்படை கப்பலான ICGS 'சக்ஷம்'ஐ பணியில் இணைத்துக் கொண்டுள்ளது. ஐந்தாவது மற்றும் கடைசி கடற்புற ரோந்துக் கப்பலாக ICGS 'சக்ஷம்' கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தால் வடிவமைத்து உருவாக்கப்பட்டது.

---

4. எந்த மாநிலத்தின் முதலமைச்சராக N பைரன் சிங் பதவியேற்றார்?



அ) கோவா

ஆ) மணிப்பூர் ☑


இ) பஞ்சாப்

ஈ) சத்தீஸ்கர்

✓ N பைரன் சிங் தொடர்ந்து இரண்டாவது முறையாக மணிப்பூர் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார். மணிப்பூர் மாநில ஆளுநர் இல கணேசன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில், 60 உறுப்பினர்களில், பாரதிய ஜனதா கட்சி 32 இடங்களில் வெற்றிபெற்று அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றது.

---

5. 'உலக கவிதை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) மார்ச்.18

ஆ) மார்ச்.21 ☑

இ) மார்ச்.23

ஈ) மார்ச்.25

✓ உலக கவிதை நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று அனுசரிக்கப்படுகிறது. 1999ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற UNESCOஇன் (ஐநா கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) 30ஆவது மாநாட்டில் முதன்முதலாக இந்த நாள் கொண்டாடப்பட்டது.

✓ உலக கவிதை நாளானது மொழியியலை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கவிதை வெளிப்பாடுமூலம் பன்முகத்தன்மை மற்றும் அழிந்துவரும் மொழிகளைக் காக்க வாய்ப்பு அதிகரிக்கும்.

---

6. 'தேசிய AIDS மற்றும் STD கட்டுப்பாடுத் திட்டமானது' எவ்வகை திட்டத்தின்கீழ் வருகிறது?



அ) முதன்மை திட்டம்

ஆ) மத்திய துறை திட்டம் ☑

இ) மத்திய அரசு ஆதரவு திட்டம்

ஈ) முதன்மை திட்டத்தின் மையக்கரு

✓ ஏப்.1 முதல் மார்ச்.31, 2026 வரை தேசிய AIDS மற்றும் STD கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடருவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது இந்திய அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட மத்திய துறைத் திட்டமாகும். இத்திட்டத்தின் கட்டம் V, ₹15471.94 கோடி செலவில் நீட்டிக்கப்பட்டுள்ளது. தேசிய AIDS மீட்புக் குழு, 1992இல் இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.

---

7. 2030'க்குள் அனைவருக்கும் பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிசெய்வதற்கு எண்ணும் நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) எது?



அ) முதலாவது

ஆ) மூன்றாவது

இ) ஆறாவது ☑

ஈ) எட்டாவது


✓ நீரின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தண்ணீரைப் பாதுகாக்க மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவுமாக மார்ச்.22 அன்று உலக நீர் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிசெய்யும் ஐநாஇன் நிலையான வளர்ச்சி இலக்கு – 6ஐ அடைய உதவுவதே உலக நீர் நாளின் நோக்கமாகும்.

✓ "Groundwater, Making the Invisible Visible – நிலத்தடி நீர், தெரியாததை தெரிய வைத்தல்" என்பது இந்த ஆண்டு (2022) உலக நீர் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

8. 'ஜோதி சஞ்சீவினி' என்ற திட்டத்தைச் செயல்படுத்துகிற இந்திய மாநிலம் எது?

அ) கேரளா



ஆ) கர்நாடகா ☑

இ) தெலுங்கானா

ஈ) ஒடிஸா

✓ கர்நாடக மாநில அரசு 'ஜோதி சஞ்சீவினி' திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இது விலையில்லா திட்டமாகும்; இது தீவிர நோய்களுக்கான சேவைசெய்யும் அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

✓ கர்நாடக மாநில அரசு ஓய்வூதியர்களை, சோதி சஞ்சீவினி திட்டத்தின்கீழ் கொண்டு வர முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்யும் என்று முதல்வர் பசவராஜ் பொம்மை அண்மையில் சட்டப்பேரவையில் உறுதியளித்தார்.

---

9. 'உலக தூக்க நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) மார்ச்.12



ஆ) மார்ச்.14

இ) மார்ச்.16

ஈ) மார்ச்.18 ☑

✓ உடல் மற்றும் மனதுக்கு தரமான உறக்கத்தின் முக்கியத்–துவத்தை எடுத்துரைப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத சம இரவு பகல் நாளுக்கு முந்தைய வெள்ளிக் கிழமையில், 'உலக உறக்க நாள்' அனுசரிக்கப்படுகிறது.

✓ இந்த ஆண்டு (2022) உலக தூக்க நாள், மார்ச்.18 அன்று வருகிறது. "*Quality Sleep, Sound Mind, Happy World*" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கா–னக் கருப்பொருளாகும். இந்நாள் உலக உறக்க சங்கத்–தால் ஏற்பாடு செய்யப்பட்டு, முதன்முதலாக கடந்த 2008 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

---

10. 2022 – M3M ஹூரூன் உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலில், முதல் 10இல் இடம்பெற்ற ஒரே இந்தியர் யார்?

அ) கௌதம் அதானி



ஆ) முகேஷ் அம்பானி ☑

இ) சைரஸ் பூனவல்லா

ஈ) ரத்தன் டாடா

✓ புகழ்பெற்ற ஆராய்ச்சி மற்றும் செல்வந்த நிலை பதிப்பகக் குழுமமமான ஹூரூன் இந்தியா, 2022ஆம் ஆண்டுக்கான உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலை, M3M நிறுவனத்–துடன் இணைந்து வெளியிட்டது.

✓ ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி 'இந்தியா மற்றும் ஆசியாவின் செல்வந்தர்' பட்டத்தைப் பெற்றார். $103 பில்லியன் நிகர மதிப்புடன் 2022 – M3M ஹூரூன் உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலின் முதல் 10இல் இடம்பெற்ற ஒரே இந்தியராகவும் அவர் ஆனார். அவர், 'கோடீசுவர தொலைத்தொடர்பு தொழிலதிபர்' என்ற பட்டத்தையும் வென்றார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உடனடி கவனம் தேவை! | காற்றின் தரம் குறித்த தலையங்கம்

மனித இனம் உயிர் வாழ்வதற்குத் தேவையானவற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் காற்றின் தரம் தொடர்ந்து மாசடைந்து வருவதை ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஆய்வறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. 2021–ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆய்வறிக்கையில், காற்று மிகவும் மாசடைந்த 100 நாடுகளின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 63 நகரங்கள் இடம் பெற்றுள்ளது அதிர்ச்சியளிக்கிறது. உலக நாடுகளில் மிகவும் மாசுபட்ட தலைநகரங்களின் வரிசையில் புதுதில்லி தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதலிடத்திலேயே உள்ளது என்பதையும் அந்த ஆய்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த "ஐக்யூ ஏர்" என்ற அமைப்பு உலகளாவிய காற்றின் தரம் குறித்த இந்த ஆய்வறிக்கையை வெளியிட்டது. 117 நாடுகளில் உள்ள 61,475 நகரங்களில் காற்றின் தரம் குறித்து மிக விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

உலகம் முழுவதும் காற்றின் தரத்தை ஆய்வு செய்யும் அரசு அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், கல்விக்கூடங்கள், தனிநபர்கள் திரட்டிய தகவல்கள் மூலம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.

உலகில் மிகவும் மாசடைந்த நகரங்களின் பட்டியலில் ராஜஸ்தானின் பிவாடி முதலிடத்திலும், உத்தர பிரதேசத்தின் காஜியாபாத் இரண்டாவது இடத்திலும் உள்ளன. உத்தர பிரதேசத் தலைநகர் லக்னௌ, அந்த மாநிலத்தின் கான்பூர், மீரட், ஆக்ரா, வராணசி, நொய்டா உள்ளிட்ட 14 நகரங்கள் மிகவும் மாசடைந்த 100 நகரங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம், உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள நகரங்களில் காற்றின் தரம் எந்த அளவுக்கு மோசமாக உள்ளது என்பதையும், இதுவிஷயத்தில் மாநில அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தவில்லை என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

காற்றின் தரம் பிஎம் 2.5 என்ற அளவுக்குள் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்து உள்ளது. ஆனால், இந்த 14 நகரங்களில் நிர்ணய அளவைவிட 10–15 மடங்கு அதிகமாக காற்று மாசடைந்து உள்ளது. எனினும், உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்து உள்ள இந்த அளவீட்டுக்குள் உலகின் எவ்வொரு நகரமும் இல்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாம் ஓரளவு திருப்திபட்டுக் கொள்ளலாம்.

கடந்த 2020–ஆம் ஆண்டில் கரோனா தீநுண்மிப் பரவல் காரணமாக பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டதால், உலகின் பல நகரங்களில் காற்றின் தரம் சற்று மேம்பட்ட போதிலும் அது தொடர்ந்து நீடிக்கவில்லை. உலக அளவில்

தற்போது சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகத் திகழ்வது காற்று மாசுதான். காற்று மாசால் நுரையீரல் கோளாறுகள், காசநோய், புற்றுநோய் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டு, உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 70 லட்சம் பேர் மரணமடைகின்றனர்.

அவ்வப்போது எழுந்து அடங்கும் தீநுண்மிகளால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளைவிட, காற்று மாசால் இறப்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்பதை நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும். மேலும், காற்று மாசு, உலகின் ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில் ₹60,000 கோடி அளவுக்கு பொருளாதாரப் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், வாகனங்கள், மின்சார ஜெனரேட்டர்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, சமையலுக்காக விறகுகளை எரிப்பது, புதிய கட்டுமானப் பகுதிகளிலிருந்து கிளம்பும் தூசு, பயிர் கழிவுகளை எரித்தல் போன்றவற்றால் காற்று பெரிதும் மாசடைகிறது.

சுற்றுச்சூழலுக்கும் மக்களின் உடல்நலத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ள காற்று மாசைக் குறைக்க மத்திய – மாநில அரசுகள் உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, கட்டுமானத் தூசு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய திட்டங்களை வகுத்து, அவற்றை முறையாகச் செயல்படுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

அதோடு, பேட்டரியால் இயங்கும் மின் வாகனங்களை மக்கள் அதிகளவில் பயன்படுத்துவதற்கு அரசு ஊக்கமளிக்க வேண்டும். இத்தகைய வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க அரசு மானிய உதவியும் அளிக்கலாம். மிக முக்கியமாக, பொதுப் போக்குவரத்தை மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் விதத்தில் அதை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேபோல, அடர்ந்த வனப்பகுதிகளில் ஏற்படும் திடீர் தீயைக் கட்டுப்படுத்த நவீன உத்திகளைக் கண்டறிந்து, அவற்றை உலக நாடுகள் செயல்படுத்த முன்வர வேண்டும். வேளாண்மைக் கழிவுகள், குப்பைகள் எரிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தவும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

உலகம் முழுவதும் காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் ஆய்வு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். திடீரென தலைதூக்கும் பல்வேறு வகையான தீநுண்மிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் உலக நாடுகள் ஏற்கெனவே தத்தளித்து வருகின்றன.

ஆனால், கண்ணுக்குப் புலப்படாத இத்தகைய தீநுண்மிக –ளால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிட, காற்று மாசால் மனிதகுலம் பேராபத்தை எதிர்கொண்டு வருகிறது என்பதை உணர்ந்து அரசுகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.

காற்று மாசைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் ஆக்கபூர்வ நடவடிக்கைளை எடுத்தால் மட்டுமே, நமது வருங்கால சந்ததியினர் நோய்களின்றி நிம்மதியாக வாழ முடியும். இது விஷயத்தில் நமது மத்திய – மாநில அரசுகளும் உடனடியாக கவனஞ்செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுத்தால்தான் தூய காற்றை நம்மால் சுவாசிக்க முடியும்!

---

1. பார்முலா–1இன் அதிகாரப்பூர்வ ஒளிபரப்பாளராகவுள்ள இந்திய தொலைத்தொடர்பு நிறுவனம் எது?

அ) ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்

ஆ) TATA கம்யூனிகேஷன் ☑

இ) பார்தி ஏர்டெல்

ஈ) BSNL

✓ மும்பையைச் சார்ந்த டாடா கம்யூனிகேஷன்சும் பார்முலா –1உம் பல்லாண்டுகால உத்திசார் கூட்டாண்மையை அறிவித்துள்ளன. இதன்மூலம், டாடா கம்யூனிகேஷன்ஸ் பார்முலா–1இன் அதிகாரப்பூர்வ ஒளிபரப்பு இணைப்பு வழங்குநராகும்.

✓ இதன்மூலம் F1–ஐ உலக அளவில் 500 மில்லியனுக்கும் அதிகமான ரசிகர்களுக்கு ஒளிபரப்ப இயலும்.

---

2. எட்டிகோப்பகா பொம்மைகளுடன், "ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு" என்ற கருத்தைச் செயல்படுத்திய முதல் இரயில் நிலையம் எது?

அ) மைசூரு



ஆ) விசாகப்பட்டினம் ☑

இ) ஹைதராபாத்

ஈ) கொச்சின்

✓ கீழைக்கடற்கரை இரயில்வேயில், விசாகப்பட்டினம் ரயில் நிலையம், "ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு" என்ற கருத்தை செயல்படுத்தும் முதல் இரயில் நிலையம் ஆனது.

✓ இதற்கான கருத்தாக்கம் சமீபத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப் –பட்டிருந்தது. எட்டிகோப்பகா பொம்மைகள் மற்றும் கை வினைப் பொருட்கள் விசாகப்பட்டின ரயில் நிலையத்தில் 15 நாட்களுக்கு சோதனை அடிப்படையில் காட்சிப்படுத்தப் –பட்டு விற்பனை செய்யப்படும்.

---

3. 'டோல் உத்சவம்' கொண்டாடப்படுகிற மாநிலம் எது?

அ) மத்திய பிரதேசம்



ஆ) ஹரியானா

இ) மேற்கு வங்கம் ☑

ஈ) இராஜஸ்தான்

✓ மேற்கு வங்க மக்கள் வண்ணங்களின் திருவிழாவைக் 'டோல் உத்சவம்' என்ற பெயரில் கொண்டாடுகிறார்கள். இக்கலாசார திருவிழா வசந்தகாலத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில், வசந்த விழா 'டோல் உத்சவம்', 'டோல் யாத்ரா', 'டோல் பூர்ணிமா' மற்றும் 'வசந்தா உத்சவம்' என்று கொண்டாடப்படுகிறது.

---

4. 'ஆர்டெமிஸ்–1' என்பது எந்த விண்வெளி முகமையின் முதன்மைத் திட்டமாகும்?

அ) இஸ்ரோ

ஆ) NASA ☑

இ) ESA

ஈ) JAXA

✓ 'ஆர்டெமிஸ்' என்பது NASAஇன் முதன்மைத் திட்டமாகும். இது 2020–களின் இறுதிக்குள் நிலவில் நீண்ட கால, நிலையான மனித இருப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. NASA சமீபத்தில் தனது 'ஆர்ட்டெமிஸ்–1' நிலவுப் பயணத்தை கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து சோதித்தது.

---

5. 'Ex–DUSTLIK' என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் ஒரு கூட்டு பாதுகாப்புப் பயிற்சியாகும்?

அ) இலங்கை



ஆ) பிரான்ஸ்

இ) உஸ்பெகிஸ்தான் ☑

ஈ) ஓமன்

✓ 'Ex–DUSTLIK' எனப் பெயரிடப்பட்ட இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தானின் படைகளுக்கு இடையிலான கூட்டுப் பயிற்சியின் மூன்றாவது பதிப்பு உஸ்பெகிஸ்தானின் யாங்கியாரிக்கில் தொடங்கியது.

✓ இந்தியாவை அதன் கிரெனேடியர்ஸ் படையணிப்பிரிவும் உஸ்பெகிஸ்தானை அதன் வடமேற்கு இராணுவ துருப்புகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

✓ DUSTLIK–இன் இதற்கு முந்தைய பதிப்பு உத்தரகாண்டின் இராணிகேட்டில் நடைபெற்றது.

---

6. 2022 – 'பீகார் திவாஸி'ன் கருப்பொருள் என்ன?

அ) ஜல் ஜீவன் ஹரியாலி ☑



ஆ) ஸ்வச் பீகார்

இ) பீகார் பேட்டி பதாவோ

ஈ) ஜல் சக்தி

✓ பீகார் அதன் 110ஆவது உதய நாளை மார்ச்.22 அன்று கொண்டாடியது. கடந்த 1912ஆம் ஆண்டு இதே நாளில் வங்காள மாகாணத்திலிருந்து பீகார் பிரிக்கப்பட்டது. இந்த ஆண்டு பீகார் திவாஸின் கருப்பொருள், 'ஜல் ஜீவன் ஹரியாலி' என்பதாகும்.

---

7. பிப்லோபி பாரத் காட்சியகம் சமீபத்தில் எந்த நகரத்தில் திறக்கப்பட்டது?

அ) புவனேஷ்வர்



ஆ) கொல்கத்தா ☑

இ) கௌகாத்தி

ஈ) சிம்லா

✓ கொல்கத்தாவின் விக்டோரியா நினைவரங்கில் உள்ள பிப்லோபி பாரத் காட்சிக்கூடத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சிமூலம், 'ஷாஹீத் திவாஸ்' என்ற விழாவில் திறந்து வைத்தார்.

✓ விடுதலைப்போராட்டத்தில் புரட்சியாளர்களின் பங்களிப் –பையும் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு அவர்களின் எதிர்ப்பையும் இந்தக் காட்சிக்கூடம் காட்சிப்படுத்துகிறது.

---

8. "Step-Up to End TB – உலக காசநோய் நாள் உச்சி மாநாடு – 2022" ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?

அ) புது தில்லி ☑



ஆ) மும்பை

இ) கொச்சி

ஈ) சென்னை

✓ மத்திய சுகாதார அமைச்சர் Dr மன்சுக் மாண்டவியா, புது தில்லியில் உலக காசநோய் நாளையொட்டி, "Step-Up to End TB – உலக காசநோய் நாள் உச்சிமாநாட்டை" தொடங்கி வைத்தார். கடந்த 2018ஆம் ஆண்டில், பிரதமர் மோடி தில்லி காசநோய் ஒழிப்பு உச்சிமாநாட்டிற்குத் தலைமை தாங்கினார் மற்றும் 2030ஆம் ஆண்டின் காசநோய் தொடர்பான SDG இலக்கிற்கு 5 ஆண்டுகட்கு முன்னதாக, 2025ஆம் ஆண்டளவில் இந்தியாவில் காச நோயை முடிவுக்குக் கொண்டுவர அவர் முன்மொழிந்தார்.

---

9. BRICS தடுப்பூசி R மற்றும் D மையம் மற்றும் தடுப்பூசி கூட்டாண்மை குறித்த பயிலரங்கைத் தொடங்கியுள்ள நாடு எது?

அ) இந்தியா ☑



ஆ) பிரேசில்

இ) சீனா

ஈ) ரஷ்யா

✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் Dr மன்சுக் மாண்டவியா, BRICS தடுப்பூசி R&D மையம் மற்றும் பிற BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) தலைவர்களுடன் இணைந்து தடுப்பூசி கூட்டாண்மை குறித்த பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். இந்த மையம், கடந்த 2018 ஜோகன்னஸ்பர்க் பேரறிவிப்பின் ஒருபகுதியாக அமைக்க திட்டமிடப்பட்டது.

---

10. 2022 – இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு நடைபெற்ற இடம் எது?

அ) டோக்கியோ

ஆ) புது தில்லி ☑



இ) சென்னை

ஈ) ஒசாகா

✓ இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாடு 2022-இன் போது புதுதில்லியில் பிரதமர் மோடியும் ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, ஜப்பான் இந்தியாவில் 5 டிரில்லியன் யென் அல்லது ₹3.2 இலட்சம் கோடி முதலீடு செய்ய உள்ளதாக இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

✓ ஜப்பானிய அரசாங்கத்தின் தலைவராக ஜப்பான் பிரதமர் இந்தியா வருவது இது முதல் முறையாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பிரதமரின் ஏழைகள் நலன் உணவுத் திட்டத்தை (PM-GKAY) மேலும் ஆறு மாதங்களுக்கு (ஏப்ரல்-செப்டம்பர், 2022) நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, பிரதமரின் கரிப் கல்யாண் அன்ன யோஜனா (PM-GKAY) திட்டத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது. செப்டம்பர் 2022 (கட்டம் VI).

உலகின் மிகப்பெரிய உணவுப்பாதுகாப்புத் திட்டமாக பிரதமரின் ஏழைகள் நலன் உணவுத் (PM-GKAY) திட்டம் கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ₹3.40 லட்சம் கோடி செலவா -கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இந்தத் திட்டத்தின்கீழ் 80 கோடி பேர் பயன்பெறுவர். இதற்கான முழு நிதியையும் மத்திய அரசே வழங்கும்.

நீட்டிக்கப்பட்ட பிரதமரின் ஏழைகள் நலன் உணவுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பயனாளியும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு தானியங்களுடன் கூடுதலாக நபர் ஒருவருக்கு மாதம் 5 கிலோ இலவச உணவு தானியம் வழங்கப்படும்.

---

2. உலக பாரம்பரிய மருத்துவ மையம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு கையெழுத்து

குஜராத்தின் ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் உலக பாரம்பரிய மருத்துவ மையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் உலக சுகாதார அமைப்புடன் மையத்தின் தாயகமான இந்தியாவின் ஆயுஷ் அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. இதன் இடைக்கால அலுவலகம் குஜராத்தின் ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இயங்கும். மத்திய அரசின் 250 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் இந்த மையம் செயல்படும்.

உலக மக்களின் ஒட்டுமொத்த நலனை முன்னேற்றுவதற் -கான, உலகம் முழுவதும் உள்ள பாரம்பரிய மருத்துவ வளத்தை நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மூலமாக மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

---

3. தேசிய ஓட்டப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ரயில்வேயின் மகளிர் அணி தங்கம் வென்றது

நாகாலாந்து தலைநகர் கோகிமாவில் நடைபெற்ற 56ஆவது தேசிய ஓட்டப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் பிரிவில் இந்திய ரயில்வே அணி தங்கம் வென்றது. இரயில்வே விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த வர்ஷா தேவி, மஞ்சு யாதவ், பிரினு யாதவ், மன்னி தேவி ஆகியோரைக் கொண்ட குழு போட்டியில் இந்தப் பதக்கத்தை வென்றது,

ஆடவர் பிரிவில் இந்திய இரயில்வே அணியின் நரேந்திர பிரதாப், தினேஷ், வீரேந்திர குமார் பால், ஹர்ஷத் மாத்ரே ஆகியோரைக் கொண்ட குழு வெள்ளி வென்றது.

நாட்டில் மிகப்பெரிய விளையாட்டுப் பணியாளர்களை கொண்ட துறையாக இந்திய இரயில்வே உள்ளது. நாட்டின் விளையாட்டுப் பிரிவில் அளவில்லா பங்களிப்பை அது வழங்கியுள்ளது. டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா வென்ற 7 பதக்கங்களில் 4 பதக்கங்களை வென்றவர்கள் இந்திய இரயில்வேயைச் சேர்ந்தவர்கள்.

---

4. சென்ட்ரல் இரயில் நிலையத்தில் காஞ்சிபுரம் பட்டுப் புடவை அரங்கு

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் சார்பில், 'ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு திட்டத்தின்'கீழ், சென்ட்ரல் ரயில் நிலையத்தில் காஞ்சிபுரம் பட்டுப்புடவைகளின் விற்பனை அரங்கு திறக்கப்பட்டது.

---

5. இதயநோயால் 28% உயிரிழப்பு

நாட்டில் கடந்த 2016–இல் பதிவான மொத்த உயிரிழப்புக –ளில் 28 சதவீதம் இதயம் தொடர்புடைய நோய்களால் ஏற்பட்டவை என மக்களவையில் சுகாதாரத்துறை இணையமைச்சர் பாரதி பிரவீண் பவார் தெரிவித்தார்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வெளியிட்ட ஆய்வு முடிவின்படி, கடந்த 2016–இல் பதிவான உயிரிழப்புகளில் 28.1% இதயநோயால் பதிவானவை என்பது தெரியவந்து உள்ளது. இதுவே கடந்த 1990–இல் 15.2 சதவீதமாக இருந்தது. இதேபோல, நாட்டில் பதிவான உயிரிழப்புகளில் 63% தொற்றாநோய்களின் காரணமாக ஏற்பட்டவை என அதில் இணையமைச்சர் பாரதி பவார் தெரிவித்துள்ளார்.

---

6. NITI ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலைக்குறியீடு: குஜராத் 2ஆம் ஆண்டாக முதலிடம்; தமிழகம் 4ஆம் இடம்

NITI ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2021–இல் குஜராத் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநிலங்களின் ஏற்றுமதிக்கான திறன் மற்றும் செயல்பாடுகள் எந்த அளவுக்கு தயார்நிலையில் உள்ளது என்பதை சுட்டிக்காட்டுவதை அடிப்படையாகக் கொண்டு NITI ஆயோக் ஏற்றுமதி தயார்நிலைப்பட்டியல் வெளியிடப்படுகிறது.

2021–க்கான இப்பட்டியலில் குஜராத் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம், ஹரியானா, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பஞ்சாப், ஆந்திரபிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

லட்சத்தீவு, அருணாசல பிரதேசம், மிசோரம், லடாக் மற்றும் மேகாலயா ஆகியவை ஏற்றுமதி தயார்நிலை பட்டியல்–2021–இல் கடைசி நிலைகளில் இடம்பெற்றுள்ளன. மொத்த ஏற்றுமதியில் 70% பங்களிப்பில் மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம், தமிழகம் மற்றும் தெலங்கானா ஆகிய 5 மாநிலங்கள் ஆதிக்கம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 2022 – பிரிட்ஸ்கர் பரிசை வென்றவர் யார்?

அ) டிபெடோ பிரான்சிஸ் கெரே ☑



ஆ) அன்னே லாகடன்

இ) ஜீன் பிலிப் வாசல்

ஈ) அரத இசோசாகி

✓ பிரிட்ஸ்கர் பரிசை வழங்கும் ஹயாத் அறக்கட்டளை, நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான பரிசின் வெற்றியாளராக டிபெடோ பிரான்சிஸ் கெரேவை அறிவித்துள்ளது.

✓ இது கட்டடக்கலைக்கான உலகின் மிக முக்கியமான விருதாக பார்க்கப்படுகிறது. புர்கினா பாசோவில் பிறந்த டிபெடோ பிரான்சிஸ் கெரே, 'பிரிட்ஸ்கர்' பரிசைப் பெற்ற முதல் ஆப்பிரிக்க கட்டடக் கலைஞராவார்.

---

2. 2022 – உலக மகிழ்ச்சி அறிக்கையில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 123

ஆ) 136 ☑



இ) 141

ஈ) 146

✓ 2022 – ஐநா உலக மகிழ்ச்சி அறிக்கையில், இந்தியா 136ஆவது இடத்தில் உள்ளது. இது பட்டியலின் இறுதியில் இருந்து பத்தாவது இடமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு மகிழ்ச்சி நாளை முன்னிட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 146 நாடுகள்கொண்ட இப்பட்டியலி –ல் பின்லாந்து தொடர்ந்து 5ஆம் ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

---

3. உலகளாவிய கோதுமை உற்பத்தியில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது

ஆ) இரண்டாவது ☑



இ) மூன்றாவது

ஈ) நான்காவது

✓ கோதுமை உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது. இந்த நிதியாண்டில் இந்தியா 7 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்து சாதிக்கவுள்ளது.

✓ மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின்படி, உலகளாவிய விலைகளி –ன் ஏற்றம் சந்தைப் பங்கைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. பிப்ரவரி மாத இறுதிவரை, இந்தியா 6.6 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்துள்ளது.

---

4. 'கின்சல் – Kinzhal' என்னும் மீவுயர் அதிர்வெண் கொண்ட எறிகணை சார்ந்த நாடு எது?

அ) உக்ரைன்

ஆ) ரஷ்யா ☑



இ) அமெரிக்கா

ஈ) வட கொரியா

✓ மேற்கு உக்ரைனில் உள்ள ஒரு பெரிய நிலத்தடி ஆயுதக் கிடங்கை ரஷ்ய ராணுவம் மீவுயர் அதிர்வெண்கொண்ட எறிகணையை ஏவி அழித்ததாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. 'கின்சல்' அல்லது 'டேகர்' என்றழைக்கப்படும் இந்த எறிகணை இப்போரில் முதல் முறையாக ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்டது.

---

5. கார்பன்–நடுநிலை வேளாண் முறைகளை அறிமுகம் செய்த முதல் இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑



இ) பஞ்சாப்

ஈ) இராஜஸ்தான்

✓ தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் கரிம–நடுநிலை உழவு முறைகளை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக கேரளா மாறவுள்ளது. இந்தத் திட்டத்திற்காக மாநில அரசு 2022–23 பட்ஜெட்டில் ₹6 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. முதற்கட்டமாக 13 பண்ணைகளில் இந்த கரிம–நடுநிலை வேளாண் முறை செயல்படுத்தப்படும்.

---

6. தேசிய இ–விதான் செயலியை (NeVA) செயல்படுத்திய நாட்டின் முதல் மாநில சட்டமன்றம் எது?

அ) தமிழ்நாடு

National eVidhan Application
Digital Legislatures
One Nation One Application

ஆ) நாகாலாந்து ☑

இ) மேற்கு வங்காளம்

ஈ) தெலுங்கானா

✓ தேசிய இ–விதான் செயலி திட்டத்தைச் செயல்படுத்தும் நாட்டின் முதல் மாநில சட்டமன்றம் நாகாலாந்து ஆகும்.

✓ 60 உறுப்பினர்கள் கொண்ட இந்தச் சட்டசபையில் உள்ள ஒவ்வொரு மேசையிலும் ஒரு டேப்லெட் அல்லது மின் நூல் இடம்பெற்றிருக்கும். மத்திய நாடாளுமன்ற விவகார அமைச்சகத்தின் மேற்பார்வையில், 'NeV' செயல்படுகிறது.

---

7. சொஜிலா கணவாயானது, பின்வரும் எந்த மாநிலம் / UT–ஐ நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கிறது?

அ) ஹிமாச்சல பிரதேசம்

ஆ) லடாக் ☑



இ) சிக்கிம்

ஈ) அஸ்ஸாம்

✓ சொஜிலா கணவாயானது ஸ்ரீநகர்–கார்கில்–லே சாலையி –ல் காஷ்மீர் பள்ளத்தாக்கிற்கும் லடாக்கிற்கும் இடையே இணைப்பை வழங்குகிறது. இது லடாக்கை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கிறது.

✓ எல்லைப்புற சாலைகள் அமைப்பால் (BRO) இக்கணவாய் திறக்கப்பட்டுள்ளது. இக்கணவாய் 11,650 அடி உயரத்தில் அமைந்துள்ளது. பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாத இறுதியில் மூடப்பட்டு அடுத்த ஆண்டு ஏப்ரல் நடுப் பகுதியில் இக்கணவாய் திறக்கப்படுகிறது.

---

8. 'சுஜலாம் 2.0' பரப்புரையின் முக்கிய நோக்கம் என்ன?

அ) நிலத்தடி நீர் பாதுகாப்பு



ஆ) கழிவுநீர் மேலாண்மை ☑

இ) மழைநீர் மேலாண்மை

ஈ) வெள்ளநீர் மேலாண்மை

✓ கழிவுநீர் மேலாண்மைக்கான 'சுஜலாம் 2.0' பரப்புரையை மத்திய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் தொடங்கிவைத்தார். இந்தாண்டு உலக நீர் நாளுக்கானக் கருப்பொருள், "நிலத்தடிநீர்: கண்ணுக்கு தெரியாததை காணச்செய்வது".

✓ மக்கள் பங்களிப்பின்மூலம் கழிவுநீர் மேலாண்மையை மேற்கொள்வதுதான் இப்பிரசாரத்தின் நோக்கம். இந்தப் பிரச்சாரம்மூலம் பொதுமக்கள், பஞ்சாயத்துக்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளை கழிவுநீர் மேலாண்மைக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

9. வானிலிருந்து வான் இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்த அமைப்பு எது?

அ) ISRO



ஆ) DRDO ☑

இ) HAL

ஈ) BHEL

✓ அந்தமான் & நிக்கோபார் தீவுகளில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வானில் இருந்து வான் இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. நீட்டிக்கப்பட்ட ஏவுகணை அதன் இலக்கை துல்லியமாகத் தாக்கியது.

---

10. 2022இல், 'BIMSTEC உச்சிமாநாட்டை' நடத்தும் நாடு எது?

அ) இந்தியா

ஆ) இலங்கை ☑

இ) பாகிஸ்தான்

ஈ) வங்காளதேசம்

✓ வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு (BIMSTEC) உச்சிமாநாடு நடப்பாண்டில் இலங்கையால் நடத்தப்படுகிறது. BIMSTEC சாசனம் & போக்குவரத்து இணைப்புக்கான BIMSTEC மாஸ்டர் திட்டம் ஆகியவை இலங்கை உச்சிமாநாட்டின் போது கையெழுத்திடப்படவுள்ளன.

✓ BIMSTEC அமைப்பு 1997–இல் நிறுவப்பட்டது. மேலும் இது வாங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு உறுப்பு நாடுகளை உள்ளடக்கியதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியா–ஐக்கிய அரபு அமீரகம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்: மே 1–இல் அமலாக வாய்ப்பு

இந்தியா–ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிகழாண்டு மே 1 முதல் அமலுக்கு வர வாய்ப்புள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் துபை எக்ஸ்போ கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கண்காட்சியில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கலந்துகொண்டு பேசியதாவது:

தற்போது இந்தியா–யுஏஇ இடையிலான வர்த்தகத்தின் மதிப்பு 60 பில்லியன் டாலர் (சுமார் ₹4.50 லட்சம் கோடி). இதனை அடுத்த 5 ஆண்டுகளில் 100 பில்லியன் டாலராக (சுமார் 7.60 லட்சம் கோடி) அதிகரிக்கும் நோக்கில், கடந்த பிப்ரவரி மாதம் இந்தியா, யுஏஇ இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையொப்பானது.

இந்த ஒப்பந்தம் தொடர்பான விரிவான தகவல்கள் பொது வெளியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் தொடர்பான ஆவணப் பணிகள், சுங்க அறிவிக்கைகளை விரைந்து முடிக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஒப்பந்தத்தை நிகழாண்டு மே 1 முதல் அமல்படுத்த முடியும் என்று நம்புகிறோம். இதன்மூலம் யுஏஇ சந்தைக்கு ஜவுளி, வேளாண்மை, ரத்தினம் மற்றும் ஆபரணங்கள் போன்ற துறைகளின் 6,090 சரக்குப் பொருள்களை வரிகளின்றி இந்திய வர்த்தகர் ஏற்றுமதி செய்யமுடியும்.

தற்போது இந்தியாவிலிருந்து 26 பில்லியன் டாலர் (சுமார் ₹2 லட்சம் கோடி) மதிப்பிலான சரக்குகள் யுஏஇக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில், சிஇபிஏ ஒப்பந்தம் அமலுக்கு வரும் நாளிலிருந்து யுஏஇக்கு ஏற்றுமதி செய்யப்படும் 90% சரக்குகளுக்கு முழுமையான வரிவிலக்குக் கிடைக்கும். எஞ்சிய 9.5% சரக்குகளுக்கு அடுத்த 5–10 ஆண்டுகளில் வரிவிலக்குக் கிடைக்கும்.

---

2. சுவிஸ் ஓபன் பாட்மின்டன்: சிந்து 'சாம்பியன்'

சுவிஸ் ஓபன் பாட்மின்டன் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்.

சுவிட்சர்லாந்தின் பசல் நகரில், சுவிஸ் ஓபன் 'சூப்பர் 300' பாட்மின்டன் தொடர் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் இந்தியாவின் சிந்து, தாய்லாந்தின் புசானன் மோதினர். முதல் செட்டை 21–16 எனக் கைப்பற்றிய சிந்து, இரண்டாவது செட்டை 21–8 என வென்றார்.

மொத்தம் 49 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய சிந்து 21–16, 21–8 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் முதன்முறையாக கோப்பை வென்றார்.

---

3. மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரண மாதிரிகளை தேர்வு செய்ய புதிய திட்டம்: நடப்பாண்டில் ₹9.50 கோடி நிதி ஒதுக்கீடு

மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களின் மாதிரிகளை தேர்வு செய்ய புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த நடப்பாண்டில் ₹9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. தமிழகம் முழுவதும் 13 லட்சத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் வசித்து வருகின்றனர். இவர்களில் உதவி உபகரணங்கள் தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண்டுதோறும் சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் உள்ளிட்ட 24 வகையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் உதவி உபகரணங்கள் குறிப்பிட்ட மாதிரிகளில் மட்டுமே வடிவமைக்கப்பட்டிருக்கு –ம். இதனால், மாற்றுத்திறனாளிகள் குறிப்பிட்ட மாதிரியை –த்தான் பெறவேண்டிய நிலை உள்ளது. இவற்றுக்கு மாற்றாக, மாற்றுத்திறனாளிகள் மாதிரிகளை தேர்வு செய்ய புதிய திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதனடிப்படையில், தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகள் தேர்வு செய்யும் உபகரணங்களின் மாதிரிகளுக்கும் மானியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் முதல்கட்டமாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் ஆகிய ஐந்து வகையான உபகரணங்களை மாற்றுத்திறனாளிகள் தேர்வு செய்ய அனுமதியளிக்கப்பட் –டுள்ளது. இதன்மூலம், தாங்கள் விரும்பிய உபகரணங்களை தேர்வு செய்வதற்கான வாய்ப்பு மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்த திட்டத்தை செயல்படுத்த ₹9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

4. சமூக வலைதளங்களை கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம்: தமிழக காவல் துறையின் சைபர் க்ரைம் பிரிவில் அறிமுகம்

தமிழக காவல் துறையின் சைபர் கிரைம் பிரிவில், சமூக வலைதளங்களைக் கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கொலை, கொள்ளை, கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைந்து வந்தாலும், வங்கி மோசடி, கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு மோசடிகள், போலி கணக்கு மூலம் மோசடி செய்தல், சமூக வலைதளங்களில் போலி செய்திகளைப் பரவவிடுதல், அவதூறு பரப்புதல், இணையதளம்மூலம் பெண்கள், குழந்தைகளை மன ரீதியில் துன்புறுத்துதல், ஆன்லைன் மோசடி, வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துகளைப் பதிவிடுதல் உள்ளிட்ட சைபர் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, 2020–ம் ஆண்டில்தமிழகத்தில் சைபர் குற்றங்கள்இரண்டு மடங்கு அதிகரித்திருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது. எனவே,சைபர் குற்றங்களைத் தடுக்கவும்,நடந்த குற்றங்களில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு கைது செய்யவும் காவல் துறையினர் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன் ஒருபகுதியாக, இணைய குற்ற வழக்குகளில் விரைவாக துப்புதுலக்கும் வகையில் தமிழகத்தில் முதல்முறையாக சென்னை வேப்பேரியில் அதிநவீன சைபர் தடய ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

அதேபோல, வாட்ஸ்–அப், முகநூல், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களைக் கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம் போலீஸாரின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக சென்னை காவளதுறக்கு இத்தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

---

1. 'முக்கியமந்திரி பார்க் சௌந்தர்யகரன்' திட்டத்தைச் செயல்படுத்துகிற இந்திய மாநிலம்/UT எது?



அ) உத்தர பிரதேசம்

ஆ) புது தில்லி ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) குஜராத்

✓ 'முக்கியமந்திரி பார்க் சௌந்தர்யகரன்' திட்டம் புது தில்லி அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாக, தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், தேசிய தலைநகரத்தில் சுமார் 3000 ஏக்கர் பரப்பளவில் உள்ள 17 நகர்ப்புறக் காடுகளை, 'உலகத்தரம்வாய்ந்த' காடுகளாக மாற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

---

2. 2022 – ஏபெல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?



அ) டென்னிஸ் பார்னெல் சல்லிவன் ☑

ஆ) கர்டிஸ் டி. மெக்முல்லன்

இ) வில்லியம் பிரவுடர்

ஈ) ஹால் அபெல்சன்

✓ நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான 'ஏபெல்' பரிசு பேராசிரியர் டென்னிஸ் பார்னெல் சல்லிவனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது சிறந்த கணிதவியலாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இந்த விருது 2002–இல் நார்வே அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.

✓ பேராசிரியர் சல்லிவனுக்கு, "இயற்கணிதம், வடிவியல் மற்றும் இயக்கவியல் அம்சங்களில் இடவியலில் அவர் செய்த பங்களிப்புகளுக்காக" அப்பரிசு வழங்கப்பட்டது.

---

3. 'AquaMAP' தண்ணீர் மேலாண்மை மற்றும் கொள்கை மையத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) ஐஐடி மெட்ராஸ் ☑

ஆ) IISc பெங்களூரு

இ) ஐஐடி காரக்பூர்

ஈ) ஐஐடி தில்லி

✓ மெட்ராஸ் – இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) 'AquaMAP' என்ற நீர் மேலாண்மை மற்றும் கொள்கை மையத்தைத் திறந்து வைத்து அதன் வலைதளத்தையும் தொடங்கியது. 'AquaMAP' என்பது ஒரு தேசிய நீர் மையமாகும். மேலும், இத்திட்டம் ரீதியாக IIT மெட்ராஸ் IIT தார்வாட் உடன் இணைந்துள்ளது.

✓ திறமையான தண்ணீர் மேலாண்மை நடைமுறைகளை வடிவமைத்து மேம்படுத்துவதன்மூலம் தண்ணீர் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதை இந்த மையம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

4. 'Lamitiye – 2022' என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?

அ) இலங்கை ஆ) மாலத்தீவுகள்

இ) செஷல்ஸ் ☑ ஈ) மடகாஸ்கர்



✓ 'Lamitiye – 2022' என்பது இந்திய இராணுவம் மற்றும் செஷல்ஸ் பாதுகாப்புப் படைகளுக்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியின் ஒன்பதாவது பதிப்பாகும். மார்ச் 22 முதல் 31 வரை செஷல்ஸ் பாதுகாப்பு அகாதமியில் நடத்தப்படும் இந்தப் பயிற்சிக்காக இந்திய இராணுவக்குழு செஷல்ஸ் சென்றடைந்தது.

---

5. இந்திய தூர்வாரல் கழகமானது எந்த நிறுவனத்துடன் இணைந்து முதலாவது உள்நாட்டு தூர்வாரும் கப்பலை உருவாக்கியுள்ளது?

அ) கொச்சி கப்பல்கட்டும் நிறுவனம் ☑

ஆ) மசகான் கப்பல்கட்டும் நிறுவனம்

இ) கோவா கப்பல்கட்டுந்தளம்

ஈ) கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள்

✓ இந்திய தூர்வாரல் கழகமும் கொச்சின் கப்பல்கட்டும் நிறுவனமும் முதலாவது உள்நாட்டு தூர்வாரும் கப்பலை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்தக் கப்பலின் விலை சுமார் ₹920 கோடியாகும்.

✓ இதுவே இந்தியாவில் கட்டப்படுகிற மிகப்பெரிய மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட தூர்வரும் கப்பல் ஆகும்.

---

6. கிவோலேடியோ தேசியப்பூங்கா அமைந்துள்ள இந்திய மாநிலம்/UT எது?



அ) இராஜஸ்தான் ☑

ஆ) பஞ்சாப்

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ கிவோலாடியோ தேசியப் பூங்கா இராஜஸ்தானின் பரத்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. சமீபத்தில், ஆபிரிக்காவின் 'போமா கேப்சரிங் டெக்னிக்' கொண்ட ஒரு பரிசோதனை இப்பூங்காவில் மேற்கொள்ளப்பட்டது.

✓ 450 கிமீ தொலைவில் அமைந்துள்ள முகுந்தரா ஹில்ஸ் புலிகள் காப்பகத்தில், இரையின் தளத்தை மேம்படுத்தவும் புள்ளிமான்களைப் பிடிக்கவும் இடமாற்றம் செய்யவும் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

---

7. சமீபத்தில் புவிசார் குறியீடு பெற்ற, 'நரசிங்கம்பேட்டை நாகஸ்வரம்' சார்ந்த மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கேரளம்

இ) கர்நாடகா

ஈ) மேற்கு வங்காளம்

✓ தமிழ்நாட்டின், 'நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம்' ஆனது 'பதினைந்தாம் வகுப்பு இசைக்கருவி' என்ற பிரிவின்கீழ் புவிசார் குறியீடு பெற்றுள்ளது. தஞ்சாவூரில் அமைந்துள்ள நரசிங்கம்பேட்டை கிராமத்தில் இந்தக் கருவி கையால் தயாரிக்கப்படுகிறது. ஒரு வகை கருங்காலி மரம் தேர்வு செய்யப்பட்டு இது உருவாக்கப்படுகிறது.

✓ நாணல் எனப்படும் ஒரு வகை தாவரத்தின் இலைகளில் இருந்து இதன் பன்னைமூடி தயாரிக்கப்படுகிறது.

8. 2022 – உலக காடுகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Forests & Sustainable Production and Consumption ☑

ஆ) World's Terrestrial Biodiversity

இ) Role of Forest in Achieving SDGs

ஈ) Trees – Pathway to Susutainability

✓ புவியில் உயிர்களை நிலைநிறுத்துவதில் காடுகளின் பங்கு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று உலக காடுகள் நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ "*Forests & Sustainable Production and Consumption*" என்பது 2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் ஆகும். ஐநா அவையின் கூற்றுப்படி, 80% பல்லுயிர் பெருக்கத்தில் 60,000-க்கும் மேற்பட்ட மர வகைகளுடன் உலகின் காடுகள் பங்களித்து வருகின்றன.

---

9. 'Hwasong-17' எனப் பெயரிடப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சமீபத்தில் பரிசோதனை செய்த நாடு எது?

அ) சீனா

ஆ) வட கொரியா ☑



இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இஸ்ரேல்

✓ கடந்த 2017ஆம் ஆண்டு முதல் கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை, 'Hwasong-17' என்ற பெயரில் பரிசோதனை செய்துள்ளதாக வடகொரியா உறுதிசெய்து உள்ளது. 'Hwasong-17' ஆனது அதிகபட்சமாக 6,248.5 கிமீ உயரத்தில் 1,090 கிமீட்டர் தூரம் பறந்து இலக்கைத் தாக்கியது. 'Hwasong-17' ஆனது உலகின் மிகப்பெரிய கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணை எனக் கூறப்படு-கிறது. கடந்த 2017 நவம்பரில் பரிசோதனை செய்யப்பட்ட 'Hwasong-15', சுமார் 4,475 கிமீட்டர் உயரத்தை எட்டியது மற்றும் 950 கிமீகளைக் கடந்தது.

---

10. 2022-இந்திய காசநோய் அறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டில் இந்தியாவில் காசநோய் பாதிப்பு % என்ன?

அ) 2%

ஆ) 5%

இ) 9%

ஈ) 19% ☑

✓ '2022 – இந்திய காசநோய் அறிக்கை' சமீபத்தில் மத்திய சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டது.

✓ இவ்வறிக்கையின்படி, கடந்தாண்டுகளை ஒப்பிடும்போது 2021ஆம் ஆண்டில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 19 சதவீதம் அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மொத்த காசநோயாளிகளின் எண்ணிக்கை 19 இலட்சமாகும்.

✓ 2020-இல் இந்த எண்ணிக்கை 16 இலட்சமாக இருந்தது. இந்தியாவில் 2019-2020-க்கு இடையில் காசநோயால் ஏற்படும் இறப்பு விகிதம் 11 சதவீதம் அதிகரித்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 2 புதிய வணிக வளாகங்கள்: அரசு – அரபு நிறுவனம் ₹3,500 கோடிக்கு ஒப்பந்தம்

அரபு நாடுகளில் மிகப்பெரிய வணிக வளாகங்களை நடத்தி வரும் லுலு நிறுவனம், தமிழகத்திலும் 2 புதிய வணிக வளாகங்களை கட்டமைக்கவுள்ளது. இதற்காக ₹3,500 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அபுதாபியில் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமானது.

---

2. 94-ஆவது ஆஸ்கர் விருதுப்பட்டியல்!

சிறந்த திரைப்படம் – கோடா

சிறந்த அந்நியமொழித் திரைப்படம் – டிரைவ் மை கார் (ஜப்பான்)

சிறந்த இயக்குநர் – ஜேன் கேம்பியன் (The Power of the Dog)

சிறந்த நடிகர் – வில் ஸ்மித் (கிங் ரிச்சர்டு)

சிறந்த நடிகை – ஜெசிகா சேஸ்டெயின் (தி ஐஸ் ஆப் டேம்மி பேயி)

சிறந்த குணச்சித்திர நடிகர் – ட்ரோய் கோட்சர் (கோடா)

சிறந்த குணச்சித்திர நடிகை – அரியானா டிபோஸ் (வெஸ்ட் சைடு ஸ்டோரி)

சிறந்த அனிமேஷன் திரைப்படம் – என்கேன்டோ (ஜரீத் புஷ், பைரன் ஹோவர்டு, கிளார்க் ஸ்பென்சர்)

சிறந்த அனிமேஷன் குறும்படம் – தி விண்ட்ஷீல்டு வைப்பர் (ஆல்பர்டோ மியால்கோ, லியோ சான்செஸ்)

சிறந்த ஆவணப்படம் – சம்மர் ஆப் சோல் (அமீர் தாம்ப்சன், ஜோசப் படேல்)

சிறந்த ஆவணக்குறும்படம் – தி குயின் ஆப் பேஸ்கட்பால் (பென் பிரவுட்புட்)

சிறந்த அசல் திரைக்கதை – பெல்பாஸ்ட் (கென்னத் பிரனாக்)

சிறந்த தழுவல் திரைக்கதை – கோடா (சியான் ஹெடர்)

சிறந்த பாடல் – "நோ டைம் டு டை" (பில்லி ஐலிஷ், பினியஸ் ஓ கானல்)

சிறந்த ஒளிப்பதிவு – டியூன் (கிரேக் பிரேசர்)

சிறந்த படத்தொகுப்பு – டியூன் (ஜோ வாக்கர்)

சிறந்த கலை வடிவமைப்பு – டியூன் (பாட்ரிஸ் வெர்மெட்)

சிறந்த விஷுவல் எபெக்ட் – டியூன்

சிறந்த ஒலித்தொகுப்பு – டியூன் (மேக் ரூத், மார்க் மங்கினி)

சிறந்த பின்னணி இசை – டியூன் (ஹான்ஸ் ஜிம்மர்)

சிறந்த ஆடை வடிவமைப்பு – குரூவெல்லா (ஜெனி பீவன்)

சிறந்த ஒப்பனை, கூந்தல் அலங்காரம் – தி ஐஸ் ஆப் டேம்மி பேயி (லிண்டா டோட்ஸ், ஸ்டீபனி இங்ரம், ஜஸ்டின் ராலே)

---

3. சேதி தெரியுமா?

மார்ச்.21: மணிப்பூர் முதல்வராக வீரேன்சிங் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் இல. கணேசன் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

மார்ச்.22: மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடகாவுக்கு எதிராக தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மார்ச்.23: சென்னை உயர்நீதிமன்றத்துக்கு வழக்கறிஞர்கள் N மாலா, S சௌந்தர் ஆகியோரைப் புதிய நீதிபதிகளாக நியமித்துக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவு பிறப்பித்தார்.

மார்ச்.23: உத்தரகண்ட் முதல்வராக புஷ்கர் சிங் தாமி இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் குர்மிட் சிங் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

மார்ச்.24: தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு க ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்ட பிறகு துபாயில் நடைபெறும் சர்வதேச தொழில் கண்காட்சியில் பங்கேற்க முதன் முறையாக வெளிநாடு சென்றார்.

மார்ச்.25: உத்தர பிரதேச முதல்வராக யோகி ஆதித்யநாத் இரண்டாவது முறையாக மீண்டும் பொறுப்பேற்றார். அவருக்கு ஆளுநர் ஆனந்திபென் பட்டேல் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

மார்ச்.25: மேகேதாட்டு அணை விவகாரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்–டதற்குப் போட்டியாக கர்நாடக சட்டப்பேரவையில் ஆதரவு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மார்ச்.27: நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் 50 ஓவர் மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் 3 வெற்றி, 4 தோல்விகளுடன் இந்திய அணி வெளியேறியது.

---

4. தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்புக்கு '181' இயங்குவது எப்படி? – ஒரு தெளிவுப்பார்வை

எதற்காக, எப்போது அறிமுகமானது? – '181' என்பது மகளிருக்கான உதவி எண். இது கட்டணமில்லா தொலை பேசி எண். இது முதன்முதலில் தலைநகர் தில்லியில்தான் தொடங்கப்பட்டது.

மத்திய அரசு 'நிர்பயா நிதி' என்ற நிதியை ஏற்படுத்தியது. இந்த நிதி ஒதுக்கீட்டின்கீழ்தான் மகளிருக்கான உதவி எண் '181' தொடங்கப்பட்டது. இந்தச்சேவை அந்தந்த மாநில போலீஸாரின் உதவியுடன் 'Safe City' திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் கடந்த 2018 டிசம்பர் 10 முதல் இச்சேவை செயல்படுகிறது.

இணையதளத்திலும் புகார்...

'181' என்ற எண்ணை அழைத்துப் புகார் சொல்ல இயலாத நேரத்தில் https://tn181whl.org/tamil/ என்ற இணையதளத் –திற்குச் சென்று அங்குள்ள அரட்டை சேவையைப் பயன்படுத்தியோ இ–பார்ம் பயன்படுத்தியோ புகார் அளிக்கலாம். 24 மணி நேரமும் இயங்கக் கூடிய டோல் பிரீ எண்ணைப் பற்றி அறிந்துகொள்வதோடு அனைவருடனும் பகிர்ந்து கொள்வோம்.

---

1. 'பாரத பாக்ய விதாதா' விழா நடைபெறும் இடம் எது?

அ) மும்பை



ஆ) புது தில்லி ☑

இ) லக்னௌ

ஈ) அகமதாபாத்

✓ 'பாரத பாக்ய விதாதா' என்ற தலைப்பில் 10 நாள் நடக்கும் 'செங்கோட்டை திருவிழா' புது தில்லியில் அமைந்துள்ள செங்கோட்டையில் அண்மையில் தொடங்கியது. மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி இவ்விழாவை தொடங்கிவைத்தார்.

✓ இந்தத் திருவிழா, 'அமுதப்பெருவிழாவின்' ஒருபகுதியாக கலாச்சார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செங்கோட்டை விழா இந்தியாவின் அனைத்துப் பகுதி கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் நினைவுப்படுத்தும் ஒரு விழாவாகும்.

---

2. 'ஆண்டின் ஆளுநர்' விருதை வென்ற மரியோ மார்செல், எந்த நாட்டு மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தார்?

அ) சிலி ☑



ஆ) ஆஸ்திரேலியா

இ) ஜெர்மனி

ஈ) வெனிசுலா

✓ மத்திய வங்கிக்குழுவும் அதன் தலையங்க ஆலோசனைக் குழுவும் அண்மையில் மத்திய வங்கி விருதுகளின் 9ஆம் பதிப்பை (2022) வெளியிட்டன. சிலி நாட்டின் மரியோ மார்செல், 'நடப்பாண்டுக்கான (2022) சிறந்த ஆளுநர்' விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். 'Banco Central de Chile' என்பது சிலியின் மத்திய வங்கியின் பெயர்.

---

3. ரிசர்வ் வங்கியின் புத்தாக்க மையத்தின் (RBIH) முதல் தலைவர் யார்?

அ) சேனாபதி கிரிஸ் கோபாலகிருஷ்ணன் ☑



ஆ) உர்ஜித் படேல்

இ) அபிஜீத் பானர்ஜி

ஈ) விரல் ஆச்சார்யா

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஆளுநர் சக்திகாந்த தாஸ் பெங்களூருவில் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) புத்தாக்க மையத்தை (RBIH) திறந்து வைத்தார். 100 கோடி ஆரம்ப மூலதனப்பங்களிப்புடன், நிதிசார் புத்தாக்கங்களை ஊக்கு–விக்கவும், வளர்த்தெடுக்கவும் இது அமைக்கப்பட்டுள்ளது.

✓ சேனாபதி கிரிஸ் கோபாலகிருஷ்ணன் இதன் முதலாவது தலைவர் ஆவார். மேலும் தொழிற்துறை மற்றும் கல்வித் துறையைச்சேர்ந்தோரும் இதில் உறுப்பென உள்ளனர்.

---

4. கனிஜ் பிதேஷ் இந்தியா லிட் (KABIL) என்பது எந்தப் பொருளின் விநியோகத்தை உறுதிசெய்வதற்காக உரு–வாக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும்?

அ) பெட்ரோலியம்

ஆ) கச்சா எண்ணெய்

இ) முதன்மை கனிமங்கள் ☑

ஈ) மருத்துவப்பொருள்

✓ கனிஜ் பிதேஷ் இந்தியா லிட் (KABIL) என்பது தேசிய அலுமினியம் நிறுவனம் (NALCO), ஹிந்துஸ்தான் காப்பர் நிறுவனம் (HCL) மற்றும் மினரல் எக்ஸ்ப்ளோரேஷன் கம்பெனி லிமிடெட் (MECL) ஆகிய மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகும்.

✓ சமீபத்தில், சுரங்கத்துறை ஒத்துழைப்புக்கான முதன்மை புரிந்துணர்வு ஒப்பந்தம், கனிஜ் பிதேஷ் இந்தியா லிமிடெட் (KABIL) மற்றும் ஆஸ்திரேலியாவின் முதன்மை கனிம வசதி அலுவலகம் இடையே கையெழுத்தானது.

---

5. '2022 – பஸ்ஸா சர்வதேச சாம்பியன்ஷிப் உலக பாரா தடகள கிராண்ட்பிரிக்ஸ்' நடைபெறும் இடம் எது?

அ) புது தில்லி



ஆ) துபாய் ☑

இ) சென்னை

ஈ) கொழும்பு

✓ 13ஆவது பாஸ்ஸா சர்வதேச சாம்பியன்ஷிப் உலக பாரா தடகள கிராண்ட் பிரிக்ஸ் – 2022 துபாயில் தொடங்கியது. பாராலிம்பியன் தரம்பிர் தலைமையிலான 29 பேர் கொண்ட இந்திய அணி, 43 நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 பாரா விளையாட்டு வீரர்களுடன் இந்தப் போட்டியில் பங்கேற்கிறது.

---

6. 2022 – ஆல் இங்கிலாந்து ஓப்பன் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் 2ஆமிடத்தை வென்ற இந்தியர் யார்?

அ) K ஸ்ரீகாந்த்



ஆ) P V சிந்து

இ) லக்ஷ்யா சென் ☑

ஈ) சாய்னா நேவால்

✓ ஆல் இங்கிலாந்து ஓப்பன் பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் – 2022இல் இந்திய டென்னிஸ் வீரர் லக்ஷ்யா சென் 2ஆம் இடத்தைப் பெற்றார். பர்மிங்காமில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில், உலகின் நம்பர்–1 விக்டர் ஆக்சல்சென் லக்ஷ்யா சென்னை வீழ்த்தினார்.

✓ மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜப்பானின் யமகுச்சி அகானே சாம்பியன் பட்டம் வென்றார். ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தோனேஷியா சாம்பியன் பட்டம் வென்றது. மகளிர் இரட்டையர் பட்டம் மற்றும் கலப்பு இரட்டையர் பட்டத்தை ஜப்பான் வென்றது.

---

7. மதிப்புமிக்க, 'ஸ்போர்ட்ஸ் ஐகான்' விருதை வென்ற இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

அ) சுரேஷ் ரெய்னா ☑



ஆ) M S தோனி

இ) சச்சின் டெண்டுல்கர்

ஈ) விராட் கோலி

✓ முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா, மாலத்தீவு விளையாட்டு விருதுகள் 2022இல் மதிப்புமிக்க 'ஸ்போர்ட்ஸ் ஐகான்' விருதைப் பெற்றார்.

---

8. 2022 – 'இந்தியாவை மாற்றும் பெண்கள்' விருதுகள், எத்தனை பெண் சாதனையாளர்களுக்கு வழங்கப்பட்டது?

அ) 10

ஆ) 50

இ) 75 ☑



ஈ) 100

✓ '*Women Transforming India (WTI)* – இந்தியாவை மாற்றும் பெண்கள்' விருதுகளின் ஐந்தாவது பதிப்பை NITI ஆயோக் நடத்தியது. நாட்டின் 75ஆவது ஆண்டு விடுதலையைக் கொண்டாடும் விடுதலையின் அமுதப்பெருவிழாவின் ஒரு பகுதியாக, 75 பெண் சாதனையாளர்களுக்கு இந்த ஆண்டுக்கான (2022) விருதுகள் வழங்கப்பட்டன.

---

9. 'WINGS INDIA–2022' மாநாட்டை நடத்தும் நகரம் எது?

அ) புது தில்லி

ஆ) மும்பை

இ) ஹைதராபாத் ☑



ஈ) புனே

✓ சிவில் வான் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு (FICCI) ஆகியவை இணைந்து 'WINGS INDIA – 2022' என்னும் ஆசியாவின் மிகப்பெரிய வான் போக்குவரத்து தொடர்பான நிகழ்ச்சியை ஹைதராபாத்தில் நடத்தின.

✓ புதிய வணிகங்களை கையகப்படுத்தல், முதலீடுகள், கொள்கை உருவாக்கம் மற்றும் பிராந்திய இணைப்பு ஆகியவற்றில் இது கவனஞ்செலுத்தியது.

✓ வான்போக்குவரத்து மையமாக ஐதராபாத் இருப்பதால் அங்கு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நாட்டின் 75ஆவது ஆண்டின் சுதந்திரத்தைக் கொண்டாடும் விடுதலையின் அமுதப் பெருவிழாவின் ஒருபகுதியாக, "இந்தியா@75: விமானத் தொழிலுக்கான புதிய தொடுவானம்" என்பது இந்த நிகழ்வின் கருப்பொருளாக இருந்தது.

---

10. உலகின் முதல் வனவுயிரி பாதுகாப்புப் பத்திரத்தை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உலக வங்கி ☑



ஆ) ஐநா சுற்றுச்சூழல் திட்டம்

இ) உலக பொருளாதார மன்றம்

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ வனவுயிரிகள் பாதுகாப்புப் பத்திரம் எனப் பெயரிடப்பட்ட உலகின் முதல் வனவுயிரிகள் பத்திரத்தை உலக வங்கி வெளியிட்டுள்ளது. இரண்டு தென்னாப்பிரிக்க காப்புப் பகுதிகளான அட்டோ யானைகள் தேசியப்பூங்கா மற்றும் கிரேட் ஃபிஷ் ரிவர் நேச்சர் ரிசர்வ் ஆகியவற்றிற்காக $150 மில்லியன் டாலர்கள் செலவிடப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 5ஆவது BIMSTEC உச்சிமாநாடு

BIMSTEC (Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation) அமைப்பின் 5ஆவது உச்சிமாநாடு அந்த அமைப்புக்கு தற்போது தலைமைப் பொறுப்புவகிக்கும் இலங்கை தலைமையில் நடந்தது.

பிரதமர் உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் தலைவர்கள் முன்னிலையில், மூன்று BIMSTEC ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. (i) குற்ற விவகாரங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான BIMSTEC உடன்படிக்கை: (ii) இராஜ்ஜிய பயிற்சித்துறையில் பரஸ்பர ஒத்துழைப்புக்கான புரிந்துண –ர்வு ஒப்பந்தம் மற்றும் (iii) BIMSTEC தொழில்நுட்ப மாற்ற வசதிக்கான அமைப்பு.

உறுப்பு நாடுகளின் தற்போதைய முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் விதமாக, "மறுமலர்ச்சி அடையக்கூடிய பிராந்தியம், வளமான பொருளாதாரம், ஆரோக்கியமான மக்கள்" என்பதே இந்த மாநாட்டின் மையக்கருத்தாகும்.

---

2. நீர் மேலாண்மை: தமிழ்நாட்டுக்கு 6 தேசிய விருதுகள்

மத்திய அரசின் நீர் மேலாண்மைத் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாட்டுக்கு 6 தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் தில்லியில் நடைபெற்ற விழாவில் இந்த விருதுகளை மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் வழங்கினார்.

நீர் மேலாண்மையில் மக்களையும் பல்வேறு தரப்பினரையும் முழுமையாக ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், தேசிய நீர் விருதுகளை மத்திய அரசு கடந்த 2018–ஆம் ஆண்டு அறிவித்தது. தண்ணீரின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயனுள்ள நீர் மேலாண்மை நடைமுறைக –ளைப் பின்பற்றுபவர்களை ஊக்குவிக்கவும் இந்த விருது வழங்கப்படுகிறது.

இதில் சிறந்த மாநிலம், மாவட்டம், ஊராட்சி, பள்ளிகள், தனியார் நிறுவனம், தொழிற்சாலைகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட 11 பிரிவுகளில் மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகம் சார்பில் ஆண்டுதோறும் 57 தேசிய நீர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

நீர்மேலாண்மையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களை ஜல் சக்தித் துறையின் சிறப்புக் குழு, மாநில வாரியாக நேரில் கள ஆய்வு செய்து விருதுகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு 3–ஆம் இடம்: நிகழாண்டு மூன்றாவது தேசிய நீர் விருதுகள் வழங்கும் விழா தில்லி விஞ்ஞான் பவனில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய மாநிலங்களின் பட்டியலில் உத்தர பிரதேச மாநிலம் முதலிடம் பிடித்தது.

இரண்டாம் இடத்தை இராஜஸ்தான் மாநிலம் பெற்றது. மூன்றாமிடத்தை தமிழ்நாடு பிடித்தது. 2020–ஆம் ஆண்டு

வழங்கப்பட்ட இரண்டாவது தேசிய நீர் விருதில், தமிழகம் முதலாவது இடத்தைப் பிடித்திருந்தது.

காவேரிப்பட்டினம் பள்ளிக்கு முதல் பரிசு:

நீர் மேலாண்மையில் சிறந்த பள்ளிகள் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. புதுச்சேரி மணப்பட்டு அரசுப் பள்ளி மூன்றாமிடம் பெற்றது.

செங்கல்பட்டு, மதுரைக்கு பரிசு: சிறந்த ஊராட்சி பிரிவில் (தென்மண்டல அளவில்) செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளப் புதூர் ஊராட்சி இரண்டாம் பரிசு பெற்றது. சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பிரிவில் மதுரை மாநகராட்சிக்கு 3–ஆவது பரிசு கிடைத்தது.

சிறந்த தொழில் பிரிவில் ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்துக்கு இரண்டாவது பரிசும், சிறந்த தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரிவில் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரத்துக்கு 2–ஆவது இடத்துக்கான பரிசும் வழங்கப்பட்டது.

---

3. 3 மின் திட்டப் பணிகளில் இந்தியாவுடன் இலங்கை அரசு ஒப்பந்தம்: சீன நிறுவனத்துக்கு வழங்கிய பணிகள் ரத்து

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள 3 தீவுகளில் மரபுசாரா மின்னுற்பத்தி திட்டங்கள் மேற்கொள்ள சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்ட நிலையில் அதனை ரத்து செய்த இலங்கை அரசு, அப்பணிகளை இந்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ள நைனா தீவு, நெடுந்தீவு மற்றும் அனலைத் தீவு உள்ளிட்ட பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நிறைவேற்ற சீனாவைச் சேர்ந்த சினோசோர்–எடெக்வின் என்ற நிறுவனத்துக்கு இலங்கை அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.

இது ஆசிய வளர்ச்சி வங்கி ஆதரவுடன் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் நடக்கும் மிகப்பெரிய மின்னுற்பத்தி திட்டமாகும்.

---

4. போதைப் பொருள் விற்பனையை முற்றிலும் தடுக்கும் 'ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0'

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை முற்றிலும் தடுக்க 'ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0' என்ற சிறப்பு நடவடிக்கை ஒரு மாதத்துக்கு தொடங்கப்பட்டுள்ளது.

மார்ச் 28 முதல் ஏப்.27 வரை

கடந்த 2021 டிசம்பர் முதல் கடந்த ஜனவரி வரை நடத்தப்பட்ட கஞ்சா வேட்டையின் தொடர்ச்சியாக, இந்த மாதம் 28ஆம் தேதி முதல் ஏப்ரல்.27 வரை ஒரு மாதம் 'ஆபரேஷன் கஞ்சா வேட்டை 2.0' நடத்தப்படவுள்ளது. இதன்மூலம் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகே கஞ்சா, குட்காபோன்ற போதைப்பொருட்கள் விற்கப்படுவ–தைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

---

5. ₹400 கோடியில் உருவாக்கப்பட்டுள்ள 'சென்ட்ரல் ஸ்கொயர்'

சென்னை மத்திய ரயில் நிலையம் எதிரே போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ₹400 கோடி செலவில் 'சென்ட்ரல் ஸ்கொயர்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை சென்ட்ரல், மெட்ரோ இரயில் நிலையம், ரிப்பன் பில்டிங், இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, பூங்கா நகர் இரயில் நிலையம் ஆகியவற்றை இணைத்து ஒரே சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

---

1. காசநோயை ஒழிப்பதற்கு தரவு சார்ந்த ஆராய்ச்சியான, 'Dare2eraD TB'ஐத் தொடங்கியுள்ள நாடு எது?

அ) வங்காளதேசம்



ஆ) இந்தியா ☑

இ) நேபாளம்

ஈ) சீனா

✓ மத்திய அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங், உலக காசநோய் நாளன்று, உயிரி தொழில்நுட்பத் துறையின், *'Dare2eraD TB'* என்னும் காசநோயை ஒழிப்பதற்கான தரவு அடிப்படையிலான ஆராய்ச்சியைத் தொடங்கினார். *'Dare2eraD TB'* என்பது, இந்திய காச நோய் மரபணு கண்காணிப்பு கூட்டமைப்பு, இந்திய காச நோய் அறிவுசார் மையம் போன்ற முன்முயற்சிகளை உள்ளடக்கிய ஒரு திட்டமாகும்.

---

2. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எத்தேதியை, 'தேசிய டால்பின் நாள்' என அறிவித்துள்ளது?

அ) ஏப்ரல்.5



ஆ) மே.5

இ) ஜூலை.5

ஈ) அக்டோபர்.5 ☑

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது அக்டோபர்.5ஆம் தேதியை தேசிய டால்பின் நாள் என அறிவித்துள்ளது. இந்த ஆண்டு (2022) முதல் ஆண்டுதோறும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படும். தேசிய டால்பின் நாளை அறிவிப்பதற்–கான முடிவு தேசிய வனவுயிரிகள் வாரியத்தின் நிலைக் குழுவால் எடுக்கப்பட்டது.

---

3. சமீபத்தில் கடற்படையின் எந்தக்கப்பலுக்கு மதிப்புமிக்க 'குடியரசுத்தலைவரின் வண்ண விருது' வழங்கப்பட்டது?

அ) INS வல்சுரா ☑



ஆ) INS கோமதி

இ) INS பிரம்மபுத்திரா

ஈ) INS பெட்வா

✓ இந்தியக்குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், 'INS வல்சுரா' கப்பலுக்கு மதிப்புமிக்க 'குடியரசுத்தலைவரின் வண்ண விருதை' வழங்கினார். இரண்டாம் உலகப் போரின்போது ராயல் இந்திய கடற்படைக்காக 1942இல் இக்கப்பல் உருவாக்கப்பட்டது. இந்தியா குடியரசாக ஆன பிறகு, 1950 ஜூலை 01–இல், இக்கப்பலுக்கு 'INS வல்சுரா' எனப் பெயர் சூட்டப்பட்டது.

---

4. 'தனியுரிமை மற்றும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு குறித்த பேரறிவிப்பை' வெளியிட்ட சங்கம் எது?

அ) G–20



ஆ) ஐரோப்பிய ஒன்றியம் ☑

இ) G–7

ஈ) NATO

✓ ஐரோப்பிய ஒன்றியம் (EU), ஆஸ்திரேலியா, கொமொரோஸ், இந்தியா, ஜப்பான், மொரிஷியஸ், நியூசிலாந்து, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகியவற்றின் கூட்டுப் பிரகடனத்தை ஐரோப்பிய வெளியக நடவடிக்கை சேவை அறிவித்தது.

✓ 'தனியுரிமைபற்றிய பிரகடனம் மற்றும் தனிப்பட்ட தரவுக –ளின் பாதுகாப்பு' – டிஜிட்டல் சூழலில் நம்பிக்கையை வலுப்படுத்துவதோடு உயர்நிலை தரவு பாதுகாப்பு மற்றும் தனியுரிமையின் தரங்களை மேம்படுத்துவதில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இது தனது நோக்கம் எனக் கொண்டுள்ளது.

---

5. மத்திய பட்ஜெட்டின்படி, அனல்மின் நிலையங்களில் எத்தனை % பயோமாஸ் துகள்கள் பயன்படுத்தப்படும்?

அ) 2–3%



ஆ) 3–5%

இ) 5–7% ☑

ஈ) 7–9%

✓ 2022–23 மத்திய பட்ஜெட்டில் கூறியபடி, அனல்மின் நிலையங்களில் 5–7% பயோமாஸ் துகள்கள் பயன்படுத்த –ப்படும். இதன் விளைவாக ஆண்டுதோறும் 38 MMT CO_2 வெளியேற்றம் மீதப்படும்.

✓ "நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தி நிலையங்க –ளில் இணை உலையூட்டிமூலம் மின்னுற்பத்திக்கான உயிரிப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கான திருத்தப்ப –ட்ட கொள்கையின்" கீழ், நிலக்கரியுடன் வேளாண் எச்சங்களால் செய்யப்பட்ட உயிரித் துகள்களை கலப்பதை எரிசக்தி அமைச்சகம் கட்டாயமாக்கியுள்ளது. இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஈராண்டுகளுக்குப்பிறகு இது முழு சதவீதமான 7%–த்தை எட்டியிருக்கும்.

---

6. உலக காற்று தர அறிக்கை – 2022இன்படி, தொடர்ந்து 4ஆம் ஆண்டாக உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரம் என உள்ள நகரம் எது?

அ) டோக்கியோ



ஆ) புது தில்லி ☑

இ) பெய்ஜிங்

ஈ) நியூயார்க்

✓ சுவிஸ் நிறுவனமான 'IQAir' தயாரித்த உலக காற்று தர அறிக்கையின்படி, புது தில்லி தொடர்ந்து நான்காவது ஆண்டாக உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகராக உள்ளது. இவ்வறிக்கையின்படி, எந்த நாட்டாலும் 2021–இல் WHOஆல் நிர்ணயிக்கப்பட்ட காற்றின் தரத்தை பெற இயலவில்லை. 2021ஆம் ஆண்டிற்கான மிகமோசமான காற்று தரத்துடன் 35 இந்திய நகரங்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. அதில், பிவாடி (ராஜஸ்தான்) பட்டியலில் முதலிடத்திலும், அதைத்தொடர்ந்த இடத்தில் காஜியாபாத் (உத்தர பிரதேசம்) நகரம் 2ஆம் இடத்திலும் உள்ளது.

---

7. அண்மையில், 53.2°C வெப்பநிலையுடன் புவியின் மிக வெப்பமான இடமாக மாறிய நாடு எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்



ஆ) குவைத் ☑

இ) ஓமன்

ஈ) மாலத்தீவுகள்

✓ சமீபத்தில் 53.2°C (127.7°F) வெப்பநிலையுடன் பூமியின் மிகவெப்பமான இடமாக குவைத் மாறியது. சமீபத்திய ஆய்வின்படி, அதன் தலைநகரத்தில் நிகழ்ந்த வெப்பம் தொடர்பான இறப்புகளில் 67% காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டதாகும். உலக வளக் கழகத்தின் கூற்றுப்படி, அந்த நாடு மின்சாரத்திற்காக தொடர்ந்து எண்ணெயை எரித்து வருகிறது. மேலும் தனிநபர் CO_2 உமிழ்வு பட்டியலிலும் முதலிடத்தில் உள்ளது.

---

8. சமீபத்தில் தனது டென்னிஸ் வாழ்விலிருந்து ஓய்வுற்ற ஆஷ்லி பார்டி சார்ந்த நாடு எது?

அ) ஆஸ்திரேலியா ☑



ஆ) அமெரிக்கா

இ) இத்தாலி

ஈ) சுவிச்சர்லாந்து

✓ உலகின் நெம்பர்.1 டென்னிஸ் வீராங்கனையான ஆஷ்லி பார்டி தனது 25ஆம் வயதில் தொழிற்முறை டென்னிஸில் இருந்து ஓய்வுறுவதாக அறிவித்தார். ஆஷ்லி பார்டி இந்த ஆண்டு ஜனவரியில் நடந்த ஆஸ்திரேலிய ஓப்பன் உட்பட 3 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் போட்டிகளில் வென்றார்.

---

9. "The Little Book of Joy" என்ற நூலின் ஆசிரியர்கள் யார்?

அ) தலாய் லாமா & டெஸ்மண்ட் டுட்டு ☑



ஆ) சச்சின் டெண்டுல்கர் & பிரையன் லாரா

இ) பராக் ஒபாமா & மிச்செல் ஒபாமா

ஈ) சுதா மூர்த்தி & நாராயண மூர்த்தி

✓ 2016ஆம் ஆண்டில், பேராயர் டெஸ்மண்ட் டுட்டு மற்றும் தலாய் லாமா ஆகியோர் இணைந்து, "The Book of Joy: Lasting Happiness in a Changing World" என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினர். இந்த நூல் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்றுள்ளதோடு 40-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

10. 'இராஜீவ் காந்தி பூமிஹீன் கிரிஷி மஸ்தூர் நியாய் யோஜனா' சார்ந்த மாநிலம் எது?

அ) பஞ்சாப்



ஆ) இராஜஸ்தான்

இ) சத்தீஸ்கர் ☑

ஈ) மணிப்பூர்

✓ சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகேல், 2022-23ஆம் ஆண்டிற்கான ₹1,04,000 கோடி மதிப்பிலான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இது, முந்தைய ஆண்டை விட 7% அதிகமாகும்.

✓ மாநில அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீட்டெடுப்பதாகவும், சமஉ-க்களுக்கு வழங்கப்படும் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியை இரட்டிப்பாக்குவதாகவும் அவர் அறிவித்தார். இராஜீவ் காந்தி கிசான் நியாய் திட்டத்திற்கு ₹6,000 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் இராஜீவ்காந்தி பூமிகீன் கிரிஷி மஸ்தூர் நியாய் யோஜனா திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ₹6,000 முதல் ₹7,000 வரை ஊதியம் உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நிகழாண்டில் ஏழு செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்படும்: மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்

நிகழாண்டில் இஸ்ரோ ஏழு செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டிருப்பதாக மத்திய அறிவியல் & தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இதுகுறித்து மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில், "PSLV C-52 ஏவுகலம்மூலம் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் EOS-4 கடந்த பிப்.14-இல் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

விண்வெளியின் சுற்று வட்டப்பாதையில் செயல்படுவதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 2ஆம் தலைமுறை நானோ செயற்கைக்கோள்களில் முதலாவதான INS-2டிடி-உம் இதனுடன் அனுப்பப்பட்டது. இதேபோல, நிகழாண்டில் இஸ்ரோ ஏழு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளது.

---

2. மூத்த எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு சாகித்திய அகாதெமியின் உயரிய அங்கீகாரம்

மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் உயரிய பெல்லோஷிப் அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மூத்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரும் தமிழ்ப் பேராசிரியருமான இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் மதிப்புக்குரிய 21 உறுப்பினர்களில் ஒருவராக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தோ'ந்தெடுக்க-ப்பட்டார். 91 வயதான இவர் சாகித்திய அகாதெமி விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இலக்கியத்துக்கு நீண்டகாலமாகத் தொண்டாற்றிய எழுத்-தாளர்களுக்கு வழங்கப்படும் சாகித்திய பெல்லோஷிப் அங்கீகாரம் தமிழ்நாட்டைச் சேர்ந்த இராஜாஜி, தெ பொ மீனாட்சி சுந்தரனார், கே ஆர் சீனிவாசன், ஜெயகாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
